வேத விளக்கம்.

வேத விளக்கம்.

இஃது

மிகுந்த கீர்த்திப் பெயர்பெற்ற
மெய்ம்மறைப் போதக

வீரமாமுனிவர்

என்னுஞ் சேசுசபைக் குருவாகிய இராஜரிஷி
தைரியநாத சுவாமியார் அவர்களால்
அருளிச்செய்யப்பட்டது.

4-ம் பதிப்பு.

1936.

புதுவை, மாதாக்கோயில் அச்சுக்கூடம்.

IMPRIMATUR :

† A. S. COLAS,

Archiepiscopus,

Pudicherii, 30 April, 1936.

PONDICHÉRY,

Imprimerie de la Mission Catholique.

அநாதிநம:

இப்பிரபந்தத்தைப் பிரசித்தப்படுத்தியவரால் முகவுரை.

இவ்வுத்தம பிரபந்தத்தை முக்கியப்படுத்துதற்கு நெடும் புகழ் கூறவேண்டுவதில்லை. பழுதிலாக் கல்வி நலமும், வழுவிலாத் தவ நிலையும், புகரிலாச் சுகிர்த வரங்களும், நிகரிலாப் புலமைத் திறமும் இவைமுதலிய நல்வரமும் நிறைந்த சொல்லரும் மாட்சிமைத் தத்துவங்களால் அலங்கரிக்கப்பட்டவராய், இந்நாட்டில் தேவ கிருபையால் அனுப்பப்பட்டுச் சத்திய மறையின் மங்கா ஒளி வீசும் பல கிரந்தங்களை உண்டாக்கி அஸ்தமியாத சூரியனாய் விளங்கிய வீரமாமுனிவர்தாமே இதனைச் செய்தாரென்பதே எல்லாப் புகழினும் மேன்மையாமன்றோ.

எவருக்கும் இன்பமும் ஈடேற்றமும் உண்டாகும் பொருட்டு அவர் தமது அதிசயப் புலமைத் திறத்தினால் சத்திய மறையின் அற்புதங்களையும், பரம உணர்ச்சிகளையும், தேவ ஸ்துதிகளையுந் தேனினும் இனிய தீஞ்சுவைப் பொருந்துஞ் செந்தமிழ்ச் செய்யுட்களில் கற்பனை அலங்காரத்துடன் புனைந்து பாடிப் பெருங் காப்பியமென்னுந் தேம்பாவணி முதலிய இலக்கிய நூல்களும், மற்ற இலக்கண நூல்களுஞ் செய்துகொண்டு வருகையில் தாம், நல்ல ஆயனாய் அன்புடன் காத்து நடத்துகின்ற மந்தை ஆடுகளைச் சிதறடித்து விழுங்கும் பொருட்டு, வேதத்தில் ஓநாய்கள் என்னப்பட்ட பதிதர் மாறினவேஷத்தோடு தோன்றிப் பல தந்திரங்களைச் செய்து, தேவ வாக்கியங்களைப் புரட்டி, வேத விசுவாசத்தைக் கெடுக்க வருகிறார்களென்று அறிந்து, இனிய கவிப்புனைதலை விட்டு வேத வாக்கியங்களையும், சத்தியத்தின் பலத்த நியாயங்களையும் ஆயுதமாக

ஏந்தி வந்த சத்துருக்களை வெல்லுவதற்கு வேத விளக்கத்தைச் செய்துதந்தார்.

சர்ப்பம் பசும்புல்லில் ஒளிந்து, பல வழிச் சுற்றி நுழைந்து இரகசியமாய்த் தன் விஷத்தால் உயிரைக் கொல்லுவதுபோலப் பதிதரும் பலர் தந்திரமாய்த் தங்கள் விஷமுள்ள போதனைகளை மறைத்து, உபாயத்தினால் அவைகளை நுழைப்பித்து வருதலால், அவர்கள் உபாய தந்திரமெல்லாம் வீரமாமுனிவர் வெளிப்படுத்தி, அவர்கள் போதகத்தில் ஒளிந்த விஷமுள்ள அபத்தங்களைப் பிரசித்தமாய்க் காண்பிக்கின்றார். அவர் உச்சிப் பகலினுந் தெளிந்த நியாயங்களால் அவர்கள் பொய்களை மறுத்து, அவைகளைச் சொல்லித் திரிகின்றவர்களும் நாணும்படிச் செய்கிறார்.

அவர் கையில் வேத வாக்கியங்களும், சத்தியத்தின் நியாயங்களும், சத்துருக்களை ஊடுருவி வெல்லுங் கூர்ந்த அம்பு வாளாகவும், உண்மை விரும்புகின்றவர்களுக்கு ஞானச் சுடர் விளக்காகவும், தவறினவர்களுக்கு வழிகாட்டியாகவும், நல்லோரைச் சுகிர்த சத்தியநிலையில் நிறுத்தும் உறுதியாகவும், யாவருக்கும் ஆத்தும சஞ்சீவியாகவும் இருக்கின்றன. உதித்த சூரியன் முகத்துமுன் இருள் நிற்கமாட்டாது நீங்கி ஒழிவதுபோலப் பதிதர் அபத்தங்களும், வீரமாமுனிவர் செய்தருளிய இப்பிரபந்த முகத்துமுன் நிற்கமாட்டாது அழிகின்றமையால்,சத்தியத்தை அறியவேண்டி இதை வாசிப்பவர் எல்லாருந் தெளிந்து சத்திய நெறியில் தேறி ஞான மகிழ்ச்சியை அடைவார்கள் என்பதற்கு ஐயமில்லை.

பொய்க்கு அஞ்சாமையும், தாம் உணர்ந்த சத்தியத்தைப் பகைத்து எதிர்த்தலும் பதிதருக்கு இயல்பாகையால், இவர்கள் வீரமாமுனிவர் சத்தியப் பொருளாய்த் தந்த ஞானக் கதிர் வீசும் வேத விளக்கத்திலுள்ள பலத்த நியாயங்களுக்கு அடங்காது, லுசித்தான் பாஷையில் பிரசித்தப்பட்ட பொய் நிறைந்த ஓர் சிறு சுவடியைக் கீழ்மொழிக் கொடுந் தமிழாகத் திருப்பித் திருச்சபைப் பேதகமென்னும்

பெயர் தந்து துணிவுடன் வெளிப்படுத்தினார்கள். அதில் அடங்கிய அபத்தங்களெல்லாம் யாவருக்கும் விளங்கும் பொருட்டு வீரமாமுனிவரானவர் அவர்கள் எழுதிய அந்தந் தப் பேதகத்தை எடுத்துக் காட்டி, தனித்தனியே நியாயத் தைக்கொண்டு மறுத்துப் பதின்மூன்று ஏடுள்ள அவர்க ளுடைய அச்சிறு சுவடியில் எழுபத்தெட்டுப் பொய்களைத் தெளிவுறக் காட்டும் பேதக மறுத்தலையுஞ் செய்து தந்தார். அதற்கு வீரமாமுனிவர் பொருள் அட்டவணை எழுதாமை யால் அதில் அடங்கிய பொருளை யாவரும் வேண்டும் பொழுதில் தடவாமல் எடுத்துக்கொள்ளும்படிக்கு, அப்பிர பந்தத்துள் வகுத்த இருபத்து நான்கு பேதக மறுத்த லில் ஒவ்வொன்றற்குள்ள பொருளைக் காட்டும் அட்டவணை அதன் முடிவிலே தந்திருக்கின்றோம்.

மீளவும் வீரமாமுனிவருக்குப் பிரியனான குளுந் தமிழ்ச் சாத்தான், ஒருவற்குக் கீழ்த்திசையினின்று ஒருவன் வந்து மேற்கதி தருந் தமிழ்ப்பயன் இதென்று பொன்பொறிச் சிறப்போடு கட்டிய பதிதர் புத்தகம் ஒன்றைத் தந்தான். சொன்ன செந்தமிழ்ப் புலவன் அதிற் கீழிழிந்து இடறிய கொடுமொழித் தமிழ் வசனங்களைப் பார்த்து வெகுண்டு, அதை எறிந்து அப்படிக்கொத்த புத்தகத்தை உண்டாக்கின லுத்தேரானிகள் யாவரென்று அறிய வீரமாமுனிவருக்கு ஓலை எழுதி விண்ணப்பஞ்செய்துகொண்டான். அதற்கு வீரமாமுனிவர் மறுவுத்தரமாக: அர்ச். அருளப்பர் தாங் கண்டெழுதிய அரியகாட்சியில், வான்மேல் நின்று விழுந்து நரகக் குழிவாய் திறக்குங் கோலை வாங்கின ஒளி மீனாக லுத் தேர் குறிக்கப்பட்டதாகவும், ஆண்முகம், பெண்கூந்தல், தேட்கொடுக்கு, சிங்கப்பல்லு முதலிய விகார உருவோடு நரகப் புகையில் நின்று மொய்த்த விட்டிற் பறவைகளாக லுத்தேரானிகள் குறிக்கப்பட்டதாகவும், மிகுந்த சாமர்த்தி யத்துடனே காட்டும் லுத்தேரினத்தியல்பையுஞ் செய்து தந்தார்.

பதிதர் சமயங்களால் பரவின இருளை நீக்கிச் சத்திய வேத ஒளியை விளங்கச் செய்யும் இவ்வுத்தம பிரபந்தங்

கள், இதுவரைக்கும் அச்சிற் பதிக்கப்படாமையாலே நாள் வட்டத்தில் பலமுறை பிரதிகளைப் பெயர்த்து எழுதினவர்களின் அறியாமையினால் அவைகளில் எழுத்துப்பிழை, சொற்பிழை, வசன விகற்பம், பொருள் மாற்றமுதலிய குற்றங்கள் மிகுந்து ஒன்றற்கொன்று ஒவ்வாதிருந்ததைப்பற்றி அக்கறையெலாந் துடைத்து இப்பிரபந்தங்களின்முன் சிறப்பான வடிவு விளங்கச் செலவுக்கும், பிரயாசத்துக்கும் அஞ்சாது, நாலு திசையினின்று ஓலையினும், கடுதாசியினும் எழுதப்பட்ட பழம் பிரதிகளை அழைப்பித்து அவைகளை எல்லாம் மிகுந்த கவனத்துடன் ஆராய்ச்சிசெய்து, சுத்தப் பிரதியாக்கித் தகுந்த இலக்ஷணத்துடன் அச்சிற் பதிப்பித்துத் தருகின்றோம். தேவ கிருபாகடாட்சத்தினால் இம்முயற்சி தொடங்கி நிறைவேறப்பட்டதன்மை சத்தியத்தை விரும்புகின்ற யாவருக்கும் அகமகிழ்ச்சியும், ஞானப் பிரயோசனமுமாய இருக்குமென்று நம்பிக்கைகொண்டிருக்கிறோம்.

பாயிரம்.

பராபர வஸ்து தயைபுரிந்து அருளிச்செய்த வாக்கியம் நற்கதி அடையும் வழி என்னும் வேதமாமே. அவர் அளவிறந்த ஞானம் உடையாராகையில் அறியாமல் தப்பி விபரீதங்களைச் சொல்லவுமாட்டார். அவர் அளவிறந்த நீதியுடையாராகையில் அறிந்து பொய்யைச் சொல்லவுமாட்டார். ஆகையால் பராபர வஸ்துவாகிய சர்வேசுரன் அருளிச்செய்த மெய்யான வேதம் வேறுபடாமலும், விபரீதப்படாமலும், எக்காலத்தும் எவ்விடத்தும் ஒன்றுய்நிற்கும் வேதமென்பது சத்தியந்தானே. இந்நாள்வரைக்கும் ஒன்றுய் நின்று நிகரில்லாத சர்வேசுரன் வேதம் வேறுபடாமல் ஒன்றுய் இந்நாட்டிலேயும் வழங்கினபின்பு, பசாசு தந்திரத்தால் அதனை வேறுபடுத்த மற்றொரு பொய்ச் சமயத்தானுஞ் சர்வேசுரன் வேதமென்று வேஷமும், பெயரும் எடுத்துக்கொண்டு எல்லாருக்குங் கேடாக இங்கே நுழையத் துவக்கினதாம்.

வச்சிரமணியும், வளையலோடும் ஒன்றிற்கொன்றை எதிர்பட வைத்துப்பார்த்த அளவில், சொல்வாருமின்றி வேற்றுமை தோன்றுமென்றுலும், பிரித்துத் தனியே பார்க்குமிடத்துச் சிலர் மயங்குவாரென்று அஞ்சி மெய்யான வேதக் குணமும் முறையும் விளங்கச் சிறிது நியாயங்களை இங்கே சொல்லிக் காட்டுவோம் என்றமையால், இதற்கு 'வேத விளக்கம்' என்னும் பெயர் வழங்கினது முறையே.

வானில் விளங்கின சூரியன் தன் ஒளி முகத்தைக் காட்டாமல் சுற்றி வந்தாற்போல, நம்முடைய திவ்விய கர்த்தாகிய சேசுநாதசுவாமி பன்னிரு சீஷருள் ஒருவராகிய அர்ச். தோமையாருமன்றி, அற்புதங்களைப் பரப்பி விளங்கின அர்ச். சவேரியாரும் இந்நாட்டிற் புகாமல் சுற்றிவந்து சத்தியவேதத்தைப் போதித்துத் திரிந்ததனுல் இந்நாட்டு

இருள் விடியாமல் நெடுங்காலம் இருந்ததல்லோ. கடைசியில் உதய நேரத்துச் சூரியன் முகத்துப் புறப்பட வீசின கதிர்கள், எங்கும் மொய்த்த இராவின் இருளைத் துடைத்து நீக்கி விளக்குவதுபோல, அக்கியானம் மூடியிருந்த இந் நாட்டின்மேல் ஆண்டவர் தன் திருக் கண்களைத் திருப்பித் தயைபுரிந்து உயிர்களை விளக்க நூற்றிருபத்திரண்டு வருஷத்துக்குமுந்தி இங்கே வேதநெறியில் பிறமொழிக் குருக்களை அனுப்பத் திருவுளமானார்.

மாறாத தவமும், பொய்யாத நூலும், குறையாத அறங்களும் வடிவாகக்கொண்டு தோன்றித் தத்துவபோதக சுவாமி யாவருக்குமுன்னே ஆண்டவரால் அனுப்பப் பட்டு, விடியற்காலத்து ஒளிபோல் இங்கே நெடுநாள் விளங்கி, வேத நூலாகக் கதிரால் எழுதப்பட்டதன்மையால் அவரோ எழுதிவைத்த காண்ட முதற் பலவும் மங்கா ஒளியோடு இன்னம் அஸ்தமியாத சூரியனை வழங்குந் தன்மையல்லோ.

தொடர்பு விடாத மலையாக அந்நாள் முதற்கொண்டு இந்நாள்மட்டும் எண்ணப்படாத காரணக் குருக்கள் தம் முட் பின்தொடர்ந்து, ஓயாமல் வந்து, பிறந்த நாடும், காட்டின உருவும், கொண்ட குணமும், தம்முள் வேறு வேறாகியும், தாம் எல்லாரும் போதித்த வேதநெறி ஒன்றாகித் திவ்விய திருவிளக்காகச் சத்திய வேதத்தைக் கையில் ஏந்தித் திரிந்தார்கள் என்றதனால், எண்ணப்படாத சனங்களுந் தெளிந்து ஒரு திருச்சபையாக நன்னெறி வழுவாமல் நடந்துவருவதைக் கண்டோம்.

புண்ணிய நெறியில் ஒழுகினவரைப் பறித்துக் கொல்லுங் கள்ளராக ஓரோர் இடத்துப் பசாசுகள் கிறீஸ்துவர்களைக் கெடுக்கப் பலவிதத்தில் பிரயாசைப்பட்டுக் கடலைக் கலக்கின பெருங் காற்றுப்போலப் பல கலகங்களையுங் கிளப்பிக் குருக்களும், சீஷரும் நிந்தைப்பட, அடிபட, சிறைப்படப் பொருளும் இழந்து, இரத்தமுஞ் சிந்தி,

ஓரோர் இடத்து உயிருந் தந்து வேதசாட்சியாகப் பாடுபட்டது உள்ளதுதானே.

ஆகிலும், உலையில் போட்ட செம்பொன் நெருப்பு சுடச்சுடச் சுடரும்போது, பொன்னோடு கலந்திருந்த கன் மஷங்களே வெந்து அழியும் என்றதுபோல, சொன்ன பல கலகங்களிலே விசுவாசமில்லாதவன் கெட்டாலொழிய மற்றத் திருச்சபை வளர்ந்து விளங்கினதல்லோ. சர்வேசுரனைக் கைவிடச் சொல்லி இந்நாள்வரைக்கும் பகையைச் செய்த பசாசுகள், அதைக்கொண்டு செயங்கொள்வது அரிதென்று எண்ணி, இப்போது வேஷ மாறித் தாமுஞ் சர்வேசுரன் பேரைச் சொல்லிப் பெரும் பகை நினைத்து நாடெல்லாங் கெடுக்க நுழையும் வழி பார்த்துக்கொண்டு திரிவதாமே.

உருவின வாளை ஏந்தித் தன்மேல் எதிர்த்தவன் பகையை விலகிக் காத்தல் எளிதே. உறவினைக் காட்டித் தழுவின தன்மையால் குத்த வந்தவன் பகையோவென்றால் அறியவும் விலகவும் அரிதாம். ஆகையால், புருஷன் சத்தமாறிக் கற்புடையாளைக் கெடுக்க வந்தவனைப்போல, கீழ்த்திசையினின்று சர்வேசுரனுடைய திருநாமத்தைச் சொல்லிச் சர்வேசுரனைப் பகைத்துச் சனங்களைக் கெடுக்கச் சிலரோ வருவதைக் கண்டு, நல்லவர் கேடுபடாதபடிக்குச் சில விசேஷங்களை அறிவிக்கத் துணிந்தோம்.

"ஆட்டுக் குட்டிகளைக் கொன்று விழுங்க ஓநாயும் ஆட்டுத் தோலைப் போர்த்துக்கொண்டு வரும்" என்று நம்முடைய கர்த்தராகிய சேசுநாதர் திருவுளம்பற்றி அதற்கு உபாயமாக, மேற்போர்க்கத் தோலைப் பாராமல் உள்ளே மூடியிருந்த உருவத்தை நோக்கி, ஆட்டு ரூபமாக வந்த ஓநாயை அறிந்து துரத்தினதுபோல, சொன்ன வார்த்தையும், காட்டின வேஷமும் பாராமல் உள்நடக்கையைப் பார்க்கக் கட்டளையிட்டருளினார். அவ்வண்ணமே இப்போது சர்வேசுரன் அருளிச்செய்த வேதமே வேஷமாகக் கொண்டுவருஞ் சத்துருக்கள் அண்டவொட்டாமல்

துரத்தும்படிக்கு, அவர்கள் மேற்போட்ட வேஷத்தை நாமே பிடுங்கி எறிந்து, அவர்கள் ஆண்டவருடைய மந்தை ஆடுகளோ, ஆடுகளை விழுங்க வந்த ஓநாய்களோ வென்று வெளியாக்க உள்ளே மூடியிருக்கிறதைக் காட்டித் தருவோம்.

அதன்பின்பு வேத முறைமைக்கு அடுத்த சில சந்தேகங்களைத் தீர்த்து, மெய்யான வேதம் இன்னதென்று விளங்கச் சில நியாயங்களை வெளிப்படுத்துவோம். மீளவும் வேண்டும்பொழுதில் இதிலே வைத்த பொருளைத் தடவாமல் எடுத்துக்கொள்ளும்படிக்குப் பதினெட்டு அதிகாரமாக முடித்த நூலை நூற்று நாற்பது பிரிவாக வகுத்து இலக்கமிட்டு அவ்விலக்கப் பிரிவுகளைப்பற்றிப் பொருள் அட்டவணை முடிவில் எழுதித் தருவோம்.

பாயிரம் முற்றிற்று.

வேத விளக்கம்.

வெண்பா.

பதிதரும் பொய்மதமும் பட்டொளிப்பவான்மேற்
பதிதரு மாறிலங்கப் பண்பாப் — பதிதரும்
வேதவிளக்கம் விரித்தசுடர் மங்கா
நீதவிளக்கா நிலத்து.
நல்லோர்க்கொளிசுடர்நா ளுன்கிரண்டா மூவறுவேற்
புல்லோர்க்கா மூவாருப் பூட்டியறு லெல்லோர்க்குஞ்
சீதவான் வீட்டைத் திறக்குங்கோற்றந்தாரோ
வேதவிளக்கந் தந்தார்.

முதல் அதிகாரம்.

புறச்சமயம் நுழைந்த வகை.

1. — ஆடுகள் அடைத்த மந்தையைச்சுற்றி நுழையும் வழியைத் தேடித் திரியும் ஓநாய்களைப்போலக் கீழ்த்திசை மதத்தார் நெடுநாள் இந்த நாட்டில் நுழையத் தேடின வழியைக் காணுமல், இந்நாளில் மாறினமுகத்தோடே நுழைந்து, தளர்ந்த நடையோடே வந்து, நடுங்கின மொழிகளோடே பிதற்றிச் சர்வேசுரனுடைய வேதத்தைப் போதிக்கிறோமென்று சொல்லுமளவில், எப்படிப்பட்ட வேதம் அதென்று நீங்கள் எண்ணிக்கொண்டிருக்கிறீர்கள். மனிதனுய்ப் பிறந்து, தரித்திரனுய் வளர்ந்து, எளியனுய்த் திரிந்து, நம்முடைய கர்த்தராகிய சேசுநாதர் திருவுளம்பற்றின வேதமோ? அல்ல. அவர்தான் தெரிந்துகொண்ட சீஷராகிய அப்போஸ்தலர்மார் உலகம் எங்கும் பரப்பின வேதமோ? அல்ல.

சேசுநாதர் தமது ஸ்தானத்தில் அர்ச். இராயப்பரை வைத்துப் பசாசுக்களால் அசைக்கப்படாத செங்கோன்மையைக் கொடுத்த முறையோடு இராயப்பர் துவக்கி இந்நாள்வரைக்கும் வழுவாமல் உரோமாபுரியில் திருச்சபைக்குத் தலைவராக நின்ற அர்ச். பாப்புகள் வெளிப்படுத்தின வேதமோ? அல்ல. 1728-ம் வருஷமட்டுங் குறையாமலும், மிகாமலும், வேறுபடாமலும் ஒருமுகமாய்ப் பூவுலகெங்கும் பரம்பின வேதமோ? அல்ல. எக்காலத்தும், எவ்விடத்துஞ் சந்தேகமுமின்றி, எண்ணிக்கையுமின்றி வழங்கின புதுமைகளால் ஒப்பிக்கப்பட்ட வேதமோ? அல்ல. எல்லா விடத்தும், எல்லாக் காலத்தும், எல்லா வயதிலும், எல்லாக் குலத்திலும், ஆணும் பெண்ணுங் கோடாகோடி சனங்கள் மகிழ்ந்த மனதோடும், மலர்ந்த முகத்தோடும் எண்ணப்படாத கொடிய முறைகளால் வருத்தப்பட்டு வலியப் பிராணனைத் தந்து சாட்சி சொன்ன வேதமோ? அந்த வேதமும் அல்ல. நாம் இப்போது சொன்ன வேதம் சமூதீதப் பிரயோசனமாக நிற்குங் கத்தோலிக்கு உரோமான் வேதம் என்னத்தகுமொழிய, அதனை விட்டு மனிதரால் பிரிக்கப்பட்ட சமயங்கள் அல்ல.

2. — இந்நாளிலே சர்வேசுரனுடைய வேதமென்னும் வேஷத்தைப் போர்த்துக்கொண்ட கீழ்த்திசையார் சொல்லுஞ் சமயம் யாதெனில்: இருநூறு வருஷத்துக்குமுன்னே ஆண்டவருக்கு மனம்பொருந்திக் கொடுத்த மூன்று வார்த்தைப்பாடுகளை மிதித்து நிந்தித்த ஆங்காரத்தினாலேயும், சாராயம் நிறையக் குடித்த மயக்கத்தினாலேயும், கன்னியாஸ்திரிகளைக் கட்டாயமாகக் கற்பழித்த காம வெறியினாலேயும், பழிவாங்க நினைத்த கோபத்தினாலேயும், மதிகெட்டவன் ஒருவன் பிதற்றின ஒன்றுமொவ்வாத தப்பறைகளாக்கும். அந்த மதத்தார் சர்வேசுரனுடைய வேதமென்று வெட்கமில்லாமல் சொல்லுகிறார்களென்று அறியக்கடவீர்கள். செத்த நாய் புழுத்து நாறி முளைத்த புழுவே, உலகம் யாவையும் விளக்கத்தகுஞ் சூரியனென்று நினைக்கினுஞ்

சகல பாவங்களிலே பிறந்து முளைத்த தப்பறை ஈடேற்றத்துக்குரிய வேதமென்று கருதவுந் தகுமோ.

3. — ஆகையால், ஜெர்மானிய தேசத்தில் பிறந்த லுத்தேரென்பவன் சத்தியவேதத்தைப் பாலோடு உண்டு வளர்ந்து, பூவுலகுள்ள பொய்யான வாழ்வுகளை வெறுத்து, வால சந்நியாசம் பண்ணி, அர்ச். அகுஸ்தீனுடைய சபையுட்பட்டு, மனம் பொருந்தி ஆசையோடு ஆண்டவர் பாதத்தில் எல்லாருமு அறிய மூன்று வார்த்தைப்பாடுகளைத் தந்து, மண்ணாசை, பொன்னாசை, பெண்ணாசை வெறுத்து, மரணபரியந்தம் விரத்தனாகவும், தரித்திரனாகவும், சிரேஷ்டர் சொற்படிக் கேட்பவனாகவுந் துணிந்தான். துணிந்தபடியே நெடுநாளும் நடந்து, குருப்பட்டமும் வாங்கி, எவருக்கும் புண்ணிய நெறியைக் காட்டிக்கொண்டு திரிந்தான். அப்போது கத்தோலிக்கு உரோமான் திருச்சபைக்கு அப்பாலே கரையேற்றம் இல்லையென்றும், உரோமாபுரியில் ஆளும் அர்ச். பாப்பு சேசுநாதருடைய ஸ்தானத்தில் இருப்பவனென்றும், அவர் கட்டளையிட்ட முறைகள் ஆண்டவர் கட்டளையிட்டானென்றும், ஒருசந்தி, செபம், திருநாட்கள், மற்றத் திருச்சபை ஆசாரமெல்லாம் நல்லதென்றும், பரிசுத்த தேவமாதாவையும், மற்ற அர்ச்சியசிஷ்டவர்களையும் வணங்குவது நல்லதென்றுந் தானே நிச்சயித்து நடந்ததொழிய, மற்றவருக்குஞ் சொல்லி மோக்ஷக் கரை ஏறும்வழி இதென்று காட்டிக்கொண்டு திரிந்தான்.

4. — அதன்பின்பு இதற்கு இருநூற்றுப் பதினேரு வருஷத்திற்குமுன்னே கர்த்தர் திரு அவதாரத்தின் ஆயிரத்தைந்நூற்றுப் பதினேழாமாண்டில் அர்ச். பாப்பானவர் இட்ட ஓர் கட்டளை லுத்தேர் என்பவனுக்குப் பொருந்தாமையால் இருந்தாற்போல கண் கெட்டு, மதியுங் கெட்டு, கல்லிலே மோதி, முள்ளிலே விழுந்து, சேற்றிலே புரண்டு திரிகிறவனைப்போல தான் சகல பாவத்தின் பாதாளத்தில் விழுந்து கெட்ட வகையைச் சொல்லிக் காட்டுவோம். அதெப்படியென்றால், கர்த்தர் நமக்காகச் சிந்தின திவ்விய

இரத்தத்தின் பலனே பொக்கிஷமாகத் திருச்சபையிலிருக்க, அதில் அவசரங்களைப்பற்றி எடுத்து நீதி முறையோடு அர்ச். பாப்புமார்கள் எவருக்கும் நன்மையாகச் செலவழித்துப் பூரண பலன்களை ஸ்தாபிப்பது திருச்சபையிலுள்ள பழைய முறைமை என்னத்தகுமே.

இப்படி ஸ்தாபிக்கப்பட்ட பூரண பலன்களைச் சனங்களுக்கு அறிவிப்பது அந்நாள் வரைக்கும் அர்ச். அகுஸ்தீனு சபையில் உட்பட்ட சந்நியாசிகளுக்கு உத்தியோகமாய் நடந்ததாம். மேற்சொன்ன வருஷத்திலோவெனில் அர்ச். பாப்பு பத்தாம் சிங்கராயர் என்பவர் யாதோர் காரணமாக அகுஸ்தீனு சபையாரை விட்டுப் பலன்களைச் சீர்மையில் அறிவிக்க, அர்ச். தொமினீக்குச் சபை சந்நியாசிகளைக் குறித்தார். அது தன் சபைக்கு நிந்தையாக எண்ணி அடிபட்ட நச்சுப்பாம்பு சீறினாற்போல, லுத்தேர் என்பவன் சினந்து முறைப்பட்டதற்கு அர்ச். பாப்பு கேளாததனால், ஒருநாள் லுத்தேர் நிறையச் சாராயங் குடித்த வெறியிலே கால் தளர்ந்தாடின தன்மையாய் மதியுந் தளர்ந்து மயங்கிப் பூரண பலன் ஏதென்றும், அர்ச். பாப்பு ஆரென்றுஞ் சொல்லி, அந்நாள் வரைக்கும் மற்ற உலகத்தாரோடெல்லாந் தானும் சேசுநாதர் ஸ்தானத்தில் இருப்பவராக அர்ச். பாப்புவை வணங்கின லுத்தேர், அன்றுதான் அவரைப் பசாசு ஸ்தானத்திலிருக்கிற பெருங் கள்ளனென்று சொல்லத் துடங்கினான்.

தன் சபையார் முன்னறிவித்தபோது சேசுநாதர் இரத்தத்தினால் எவருக்கும் நன்மை தரும் பூரண பலன்கள், தன் சபையாரல்லாதே புறச் சபை குறிக்கப்பட்டபின்பு மனிதரை ஏய்க்கும் உபாயங்களென்றும், வீண் சடங்குகளென்றும் அதுகளைச் சொல்லத் துணிந்தான். கள்ளுண்ட வெறியில் மயங்கிப் பிதற்றின அபத்தங்களை மீளவும் பிறகு பின்வாங்காமற் சலஞ்சாதித்துச் சொன்னதனால், அர்ச். அகுஸ்தீனு சபையில் உட்பட்ட மகாத்துமாக்களாகிய மற்றச் சந்நியாசிகள் லுத்தேர் என்பவனை மிகவுந் தண்டித்துக்

கோபித்தார்கள். ஆயினும் தூக்கணாங்குருவி குரங்குக்குப் புத்தி சொன்னதுபோல லுத்தேர் என்பவனும் கேட்டநல் உணர்ச்சிகளால் அதிகமாய் மயங்கிப் பசாசினால் ஏவப்பட்டுச் சந்நியாசமாவது ஏதென்றும், பிரோஷ்டமாவது ஏதென்றும், இதெல்லாம் அபத்தமென்றுஞ் சொல்ல, அவனைச் சிறைச்சாலையில் அடைக்கவேண்டுமென்றிருக்கையில் தான் அதை அறிந்து தப்பி ஓடிப்போனான்.

5.— ஓடினபின்பு கொண்ட மயக்கம் எவ்வளவாகிலும் மாறி ஒருநாள் உயர்ந்த இடத்தினின்று விழுந்தவன் இழந்த விடத்தை மேற் பார்த்தாற்போல, லுத்தேர் செய்த அபத்தங்களைக் கண்டு கூசி வெட்கப்பட்டு மனதில் நொந்தான். அப்பொழுது அவனுக்குப் பசாசு தோன்றி அவன் மனந்திரும்பினால் உடனே சந்நியாசிகள் அவனைச் சிறைச்சாலையில் போட்டு மிகவும் உபாதிப்பார்கள் என்று மனதில் அஞ்சும்படிக்குப் பயங்கரமாக நெடுநேரம் பசாசு சொன்னதற்கு, லுத்தேர் என்பவன் "நான் சொன்னதுஞ் செய்ததும் அபத்தமாகையால் உலகத்தார் என்னை நிந்தித்துச் சபையில் சேர்க்காமல் தள்ளுவார்களே" என்றான்.

அதற்கு மிகவுங் கூர்ந்த அறிவுள்ள பசாசு சொன்ன மறுமொழி ஏதெனில்: "நீ நிந்தைப்படாமல் எங்கும் புகழப்படும்படிக்கு, நான் காட்டின வழியால் நீ செய்ததெல்லாஞ் செய்யத்தகும் வேதமுறையென்று ஒப்பிக்கக்கடவாய். சந்நியாசம் அபத்தம் என்பாய்; விரத்தனாய் இருப்பது பாவம் என்பாய்; தவம் ஒருசந்தி உபவாசங்கள் ஆண்டவருக்கு ஏற்காத முறைமைகள் என்பாய். கற்பைக் காத்தவள் மதிகெட்டப் பேதை என்பாய். பாவமே மனிதருக்கு இயற்கை என்பாய். கரை ஏறுவேன் என்று தளராத விசுவாசமாத்திரம் உண்டானால் எவ்வகைத் துரோகங்களைச் செய்தாலுந் தவமின்றிக் கரை ஏற்றம் உண்டாகும் என்பாய்."

இத்தகைப்பட்ட பலவற்றையுஞ் சொல்லி, ஒப்பிக்கும்படிக்குச் சுகிர்த வேத வாக்கியங்களை எடுத்து அதிலே சிலது குறைக்கவும், சிலது மாற்றவும், சிலது விரோத முக

மாய்த் திருப்பி அர்த்தத்தைச் சொல்லவும், பாவத்திற் சாய்ந்த குணமுள்ள ஏழைச் சனங்களெல்லாம் மயங்கிச் சொன்ன யாவையும் ஒத்துக்கொண்டு பின்றுடர்ந்து உன்னை மிகவும் புகழ்வார்கள் என்று பசாசு சொன்ன தற்கு லுத்தேர் தடையொன்றின்றிக் காமச் சேற்றிற் புரளவும், பேறெடுத்து எங்கும் விளங்கவும் ஆசையால் மயங்கி மகிழ்ந்து உடன்பட்டான்.

6.— இதெல்லாம் விரோதத்தாற் சொன்னதென்று தோன்றாதபடிக்கு லுத்தேர் என்பவன்தானே பூசைமுறைமைக்கு எழுதின புஸ்தகத்தில் சொன்னதாவது: "நான் ஒருவன் அறிந்தவனோ? மற்ற அனைவோரும் மதிகெட்டவர்களோ, இந்நாள் வரைக்குந் திருச்சபை எல்லாம் மயங்கினதோ? நானும் வழி தப்பி மற்றவரும் வழியில் தவறச் செய்தால் வரும் ஆக்கினை சொல்லத்தகுமோ என்று நெடுநாள் அஞ்சிக் கூசி நடுங்கினேன்" என்றான். பிறகு தான் தேறித் துணிந்த வகையைச் சொல்லிப் பசாசு தன்னோடு ஒரு சிநேகிதனைப்போல அநுதினமும் வந்து பழகக்கூட ஒரு காலத்தில் உண்டு சொன்ன உறுதிகளால் சந்தேகமெல்லாம் போய்த் தெளிந்து, தன் மதத்தைத் தான் உண்டாக்கினேன் என்றான். "பூசையை ஒழிக்கலாமோ இல்லையோவென்று பசாசோடு நெடிதாய்த் தர்க்கம் பண்ணினேன்; கடைசியில் பசாசு சொன்னபடி கேட்டேன்." அதேனென்றால், ஒரு க்ஷணத்துக் கண்ணிமைக்கு முன்னே பசாசு ஆக்குரோஷ முறையோடு என் மனமெல்லாம் அச்சத்தாலும் இருளினாலும் நிரப்பி மயக்குவித்தது என்றான். லுத்தேர்தானே இதுவெல்லாம் எழுதி வைத்து அச்சிலேயும் பதித்தபின்பு அவன் வழியாக வந்த சமயம் மனிதர் ஈடேற்றத்துக்குரிய வேதமென்போமோ, பசாசோடு நரகத்தில் என்றென்றைக்கும் வேகக் கொண்டுபோய்விடும் வழி என்போமோ என்பதை நல்லறிவுடையார் யாவரும் எளிதாய்க் கண்டு தெளிவார்கல்லவா.

7.— இவ்வண்ணமே லுத்தேர் என்பவனுக்குப்

பசாசுதான் குருவானதினால், ஒருநாள் சொன்னதை மறு நாள் மறுத்து லூத்தேர்தான் தன்னோடு ஒவ்வாமல் விபரீத மொழிகளைப் பிதற்றி ஒன்றோடொன்று ஒவ்வாத முப்பத்தாறு வசனங்களைத் திவ்வியநற்கருணைக் காரியத்திலே மாத்திரம் எழுதிவைத்தான். லூத்தேர்தானே சேசுநாதர் நம்மை இரட்சிக்க வந்த மெய்யான சர்வேசுரனும் மெய்யான மனுஷனுமென்றும், பின்பு தன் குருவாகிய பசாசினால் ஏவப்பட்டு அர்ச். சின்னப்பர் கலாசிய தேசத்தாருக்கு எழுதின நிருபத்தில் லூத்தேர் வியாக்கியானம் பண்ணினதிலேயும், ஞானஸ்நானத்துக்கடுத்த முதல் பிரசங்கத்திலேயும் அவன் எழுதி வைத்ததாவது:

சேசுநாதரைச் சகல பாவிகளிலும் பாவி என்றும், அவரைப்போலப் பாவி இல்லை என்றும், அவரைக் கள்ளன் என்றும், கர்த்தர் துரோகி என்றும், தேவதூஷணன் என்றும், வேதத்தைக் கெடுத்தவன் என்றும், அவரைப் பசாசு என்றும் நரக வாயனாகிய லூத்தேர் என்னும் பெருந்துரோகி உலகெல்லாம் அஞ்சிக் கூசும்படிக்குக் கக்கின பின்பு, இவனே சேசுநாதரால் உலகத்தை இரட்சிக்க அனுப்பப்பட்டவன்; இவனே வழுவின வேத நெறியை ஒப்புரவாக்கினவன்; இவனே மற்றத திருச்சபை எல்லாங் கெட்டு மயங்கி நிற்கத் தளராத ஞானத்தை அறிந்துபோதித்தவன் என்று பிதற்றினான். இவையெல்லாஞ் சகல பாவத்துக்கு வாசலைத் திறக்கும் வழியை விரும்பிக் கண் மூடி மதி கெட்டவன் அநுசரிப்பானொழியக் களை ஏற ஆசையுள்ள ஒருவனாகிலுஞ் சொல்லவுங் கருதவுமாட்டான்.

8.— மலையினின்று உருண்டு விழும் பெருங் கல் போகப்போக விசையும் அதிகமாகித் தகர்ந்து உடைந்து பாதாளமட்டும் விழுவது போல, லூத்தேருஞ் சொன்னபடி பசாசினால் தள்ளுண்டு, திருச்சபையாகிய மலையில் நின்று உருண்டு விழுந்து, முன்னிருந்த எண்ணப்படாத பதிதர் எல்லாருஞ் சொல்லி மறுத்திருந்த அபத்தங்கள் யாவையும் ஒருப்படக் கூட்டித் தான் ஒருவன் சொல்லவுஞ் செய்

யவுந் துவக்கினான். விரத்தனாக வார்த்தைப்பாடு கொடுத்திருந்த லுத்தேர், காமவெறியில் சிக்கி கத்தரீன் போரே என்கிற ஒரு கன்னியாஸ்திரியைக் கட்டாயமாகப் பற்றி இழுத்து, துராகரமாக அவளைக் கற்பழித்துக் கலியாணப் பெயரைச் சாட்டி மெய்யான வைப்பாட்டியாக வைத்துக் கொண்டான்.

ஆகிலும், லுத்தேரும் அவனுடைய சீஷரும் இந்தக் கலியாண முகாந்தரமாக வெட்கிப்போய் நிந்தைப்பட்டு மிகவும் வருந்தினார்கள். ஆகையால், 1525-ம் ஆண்டில் 45 வயதுள்ள லுத்தேர் தன் சிநேகிதருக்கு ஒன்றுஞ் சொல்லாமல் வேறே மூன்று பேர்களைமாத்திரம் விருந்துக்கென்று அழைத்துத் தானே அந்தப் போரே என்பவளைக் கட்டிக் கொண்டான். இந்தச் செய்தியைப்பற்றி லுத்தேர் பிரிய சீஷனாகிய மேலங்தோன் கமெறாரி என்பவனுக்குக் கிறேக் பாஷையில் எழுதினதாவது: "இதில் லுத்தேர் நீசகுணத்தைக் காட்டித் தன் பெயர் இகழப்பட்டு எவராலும் நகைக்கப்படக் கலியாணஞ் செய்தானே; உட் சுடுங் காமக் கொடுமையைப் பொறுக்கமாட்டாமையால் அவன் இதற்குத் துணிந்தான் என்று அறிவோம். ஆகிலும், இப்பொழுது லுத்தேர்தானே இந்தக் கலியாணத்தினால் வெட்கி வருந்திக் கிடக்கிறான். நானோவெனில் என்னாலானமட்டும் அவனைத் தேற்றிக்கொண்டு வருகிறேன்" என்று சொல்லி மேலங்தோன் எழுதினான்.

9.— தான் நடந்தபடி மற்ற எவருக்குஞ் சொல்லிக் கன்னிமையுஞ் சந்நியாசமும் மிகவும் ஆண்டவருக்குப் பொருந்தாத பாவமென்று லுத்தேர் 1522-ம் ஆண்டில் சொன்ன பிரசங்கத்தில் சொன்னான். மீளவும் மறுவருஷத்தில் கர்த்தர் பாடுபட்டத் திருநாளன்று லுத்தேர் சீஷர்கள் போய் நிமிசெனமென்னும் ஊரிலே கன்னியாஸ்திரி மடத்திற் புகுந்து, ஏழு கன்னியாஸ்திரிகளைப் பலாத்காரமாய் இழுத்துக்கொண்டுபோய்க் கற்பழித்தார்கள். அதை அறிந்து லுத்தேர் பொதுப் பிரசங்கத்தில் அவர்களைக்

கொண்டாடி, நம்முடைய கர்த்தரான சேசுநாதர் பிதாக்கள் இருந்த ஸ்தலத்திற்குப் போய் அவர்களை மீட்டிரட்சித்தப் பாவனையாக அந்தச் சண்டாளரும் அன்று புண்ணியத்தைக் கட்டிக்கொண்டார்கள் என்று சொன்னான்.

10.— ஆயினும் லுத்தேர் ஒருவன் செய்த தப்பிதங்களையும், சொன்ன அபத்தங்களையும் ஒழுங்குடன் கூட்டி இங்கே எழுதிக் காட்டுவது நமக்குக் கருத்தல்ல. பெருங் கடல் வெள்ளஞ் சிறிதோர் கலத்தில் அடங்கினும் லுத்தேர் தப்பறைகள் பெரிதோர் புஸ்தகத்திலும் அடங்குந் தன்மையல்ல. தன் குருவாகிய பசாசினால் ஏவப்பட்டமையால் எல்லாப் பாவமும் நுழையும் பெருவாசலைத் திறக்கும்படிக்கு மனிதரை ஏய்க்கச் சில புண்ணியங்களைப் படிப்பித்தாற்போல சொன்னபின்பு, மனிதருக்குப் புண்ணியமுமில்லை பாவமுமில்லை என்றான். ஆண்டவரைத் துதிப்பதும் அவரை நிந்திப்பதும் ஒன்றென்றான். அவனவன் தன் தகப்பனை வணங்குவதும் மிதித்து உதைப்பதும் ஒன்றென்றான். ஆளும் அரசருக்கு இறையைக் கொடுப்பதுந் துரோகஞ் செய்வதும் ஒன்றென்றான். அதுவும் புண்ணியமல்ல, இதுவும் பாவமல்ல. பாவங்களென்றாலும் அதுகளால் மனிதருக்கு ஓர் அற்ப ஆக்கினையாகிலும் வரவறியாது.

விசுவாசமில்லாத ஒருவன் நரகத்திற்குப் போவானொழிய, மற்றவர் என்ன பாவஞ் செய்தாலும் விசுவாசத்துடனே சற்றும் அஞ்சாமல், ஆண்டவர் பொறுத்தார் என்று நம்பினமாத்திரத்தில் தவமொன்றுமில்லாமற்பாவமெல்லாம் அமிழ்ந்து ஒழியுமென்று சந்நியாசவிரதங் கெடுக்க லுத்தேர் உண்டாக்கின புஸ்தகத்தில் எழுதி வைத்தான். மீளவும் இராயப்பர் மேலே செய்த வேறொரு பிரசங்கத்தில் தான் எழுதி வைத்ததாவது: “எவ்வளவு பெரும் பாவியாயிருக்கிறாயோ அவ்வளவு சீக்கிரமாய் ஆண்டவர் தம் இஷ்டப்பிரசாதத்தை நிறையத் தருவார்” என்றான். ஆகையால் ஆண்டவருக்குப் பிரியனாகவும், அவர் இஷ்டப்பிரசா

தத்தை அடையவும் பாவமே வழியென்பதாயிற்றே. ஆகையால் புண்ணியங்களை, தவங்களைச் செய்யாமல் மிகவும் பாவங்களைச் செய்வது நல்லதென்றாயிற்றே.

மதி கெட்டவனாயினும் கருதவுமாட்டாத அபத்தங்களை மனுக்குலம் நிந்தைப்படவும், பாவமெல்லாம் வளரவும் முளைத்த பெரும் பாவியாகிய லுத்தேர் வெட்கமில்லாமல் வேதமாகச் சொல்லக் கூசாதே போனான். இது பாவங்களைத் தீர்த்துப் புண்ணிய வழியைக் காட்ட வந்த சேசுநாதர் அருளிச்செய்த வேதமோ? இதின்மேல் அக்கியானத்திலும் பாவத்துக்கும் நரகத்துக்கும் பெரும் பாதை திறந்ததுண்டோ? நாம் இங்கே சுலபமாய்ச் சொன்னதெல்லாம் லுத்தேர் சீஷராகிய கீழ்த்திசையார் மறுத்துப் பகையால் சொன்ன பொய் என்பார்களாக்கும்; ஆகிலும் அறியாத சனங்களுக்கு நடந்தசெய்தி பொய் என்பார்களொழியத் தங்கள் புஸ்தகங்களைக்கொண்டு இதெல்லாம் அவர்களுக்கு ஒப்பிக்க நாம் வல்லவனாயிருக்கக்கொள்ளச் சொன்னதிலே ஒன்றாகிலும் எம் முன்பாகப் பொய்யென்று சொல்லமாட்டார்கள். சொன்னாலும் வெட்கி நாணும்படிக்குச் செய்வது எளிதாகும்.

2-ம் அதிகாரம்.

புறச்சமய விபரீதம்.

11. — அரசர் நீதி கோணவும், நன்னெறி ஒழுக்கம் வழுவவும், துயரப்பட்டு மெலியவும், அருந் தவம் ஒடுங்கி ஒழியவும், நல்வினை எல்லாம் மடிந்து குறையவும், சத்திய வேதம் வேறுபட்டு ஒளி மங்கவும், பெண் கற்புக்குரிய காவலற்று அழியவும், பகை, சினம், காமம், களவு, கொலை, உலோபம் முதலிய பாவங்கள் கரையொன்றின்றிப் பெருகி வெள்ளமாகப் பெருகவும், முளைத்த லுத்தேர் என்னும்

பெரும் பாவி திறந்த பாவ வழியைக் கொடிய நெஞ்சின ருங் காமத்தழிந்த உணர்வினருங் கள்ளுண்ட வெறியில் மதி கெட்டவரும் அநுசரித்தார்களொழிய, நல்லோர் எல்லாரும் அவ்வழிப் பகைத்து, லுத்தேர்மேல் இரங்கி, அவனை நன்னெறியில் நிறுத்த உபாயங்களைத் தேடி, மறுக் கப்படாத நியாயங்களை ஒப்பித்துத் துங்கினவனை எழுப்பப் பிரயாசைப்பட்டார்கள்.

அதற்கு லுத்தேர் அசையாமல் திருச்சபை கூடினால் சொன்னபடிக் கேட்பேன் என்றான். அப்படியே அர்ச். பாப்பு உலகெங்குமிருந்த மேற்றிராணிமாரும், வேதபார கரும், இராசாக்கள் ஸ்தானபதிகளுங் கூடச் சொல்லி அழைத்துத் திறிதேந்தென்னு மாநகரில் 255 பேருங் கூடி, நம்பிக்கை ஓலைகளை அனுப்பி, லுத்தேர் என்பவனைப் பலமுறை அழைப்பித்தார்கள். லுத்தேரோவெனில், உண் மையை அறிய ஆசையில்லாமையாலும், தான் சொன்ன தெல்லாம் அபத்தமென்று தான் நன்றாய் அறிந்ததினாலும், ஒளியைத் தாங்கமாட்டாத வெளவாலைப்போல ஒளிந்தி ருந்தான். ஒளிந்த லுத்தேர் ஆங்காரத்தை ஒளியாமல் வந்த நம்பிக்கை ஓலைக்கு எழுதின மறுவுத்தரமாவது:" இரு பதினாயிரங் காலாளும், ஐயாயிரங் குதிரையும்' என்னைச் சூழ்ந்து வரக் கூடினபின்பு நான் அந்தக் கூட்டத்துக்கு வருவேன். அப்போது நான் சொன்னதை விசுவசிக்கச் செய்வேன்" என்று எழுதினான்.

ஆகையால், ஏழைச் சனங்களை ஏய்த்தாற்போல அங்கே கூடின சாஸ்திரிகளை ஏய்க்க முடியாமல், தான் சொன்ன அபத்தங்களைச் செலுத்த ஒரு பெரும் படை வேண்டியதொழிய அதுகளை ஒப்பிக்கத் தனக்கு ஒரு நியாயமில்லை என்று தானே கண்டு கொண்டானல்லோ. அப்படி அவன் வரமாட்டாமையால் அங்கே கூடின நல் லோர், லுத்தேர் உண்டுபண்ணின தப்பறை எல்லாம் நெடுநாளாய் ஆராய்ந்து, வேதத்திற்கும் நியாயத்திற்கும் ஒவ்வாதென்று ஒன்றொன்றாய்ச் சொல்லிச் சபித்தபின்பு,

சேசுநாதர் அர்ச். மத்தேயு எழுதின சுவிசேஷத்து 18-ம் அதிகாரம் 17-ம் வசனத்திற் சொன்னபடி, "கூடின திருச்சபை வார்த்தையைக் கேளாதவன் உனக்கு அக்கியானிகளில் ஒருவனுகக்கடவான்" என்றமையால், அழிந்த உறுப்புனை மற்ற உடல் கெடாதபடிக்கு அறுத்தெறிந்தாற்போல லுத்தேர் என்பவனையும், அவனைச் சேர்ந்த யாவரையும் பெருஞ் சாபமாக இடித்துத் திருச்சபைக்கு அப்புறத் தொழிய விலக்கினார்கள்.

12.—இட்ட சாபத்தை நகைத்த லுத்தேர் கொஞ்சநாட்போனபின் இராத்திரி நன்றாய்ச் சாப்பிட்டுப் படுத்துக்கொண்ட இடத்துத் தன் பாவத்தின் பாரத்தைத் தானே பொறுக்கமாட்டாமல் தன் கையால் தன் கழுத்தை நெருக்கிச் சகல பாவங்களைப் போதித்த நாக்குப் புறப்படச் செத்துப் பசாசுகள் மிகக் களிகூரப் பாழ் நரகத்தில் வீழ்ந்தான். இது நாம் அறிந்த வகையேதெனில், அவன் துர்ப்புத்தியைக் கேட்டு மயங்கி அவனுக்கு ஊழியஞ் செய்திருந்த ஒருவன் கூடநின்று தன் குரு செத்த அவலமான சாவைக் கண்டு அஞ்சி, ஓநாயினிடமிருந்து தப்பிப் பிழைத்த ஆட்டுக்குட்டியைப்போல அவனுந் தப்பிவந்து சகல பாவத்துக்கும் ஏதுவாகிய நீச லுத்தேர் சமயத்தை வெறுத்து, திருச்சபை மடியில் வீழ்ந்து, நடந்த யாவையுஞ் சொல்லி, முன் தான் செய்த பாவங்களைக் கழுவ மிகவும் அழுது, நன்னெறி வழுவாமல் நடந்தான்.

13— இதுவெல்லாம் நடந்துகொண்டு வருகையில் காலியஇராச்சியத்தில் பிறந்த கல்வீன் என்பவன் தன் ஊர்ப் பாவிகளுக்குள்ளே பெரும் பாவியாக விளங்கி, செய்த துரோகங்களால் தள்ளுண்டு ஓடிப்போய் லுத்தேரோடு கூடி, அவனை ஆண்டவரால் அனுப்பப்பட்ட அப்போஸ்தலன் என்று புகழ்ந்து சிலநாள் பின்றுடர்ந்த பின்பு, தனக்கும் பேராகும்படிக்கு அவனை விட்டுப் பிரிந்து, விரோதமாய்ச் சிலதுகளை உணர்த்தி, லுத்தேர் என்றவனை அக்கியானி என்றும், மதி கெட்டவன் என்றும் இகழ்ந்து,

கூடின நாய்கள் தம்மைக் கடித்தனபோல இருவருங் கூடியும் பிரிந்தும் ஒரு கருத்தோடு வேதத்தைக கெடுக்க வருந்தினார்கள். அப்படியே கல்வீனுக்கும் லுத்தேருக்கும் விரோதமும் பகையு மட்டின்றி வளர்ந்து வருகையில் லுத்தேர் பிரிய சீஷனாகிய மேலந்தோனுக்குக் கல்வீன் எழுதினதாவது :

"நமக்குள்ளே வந்த விரோதங்கள் இனி வருங்காலத்தில் எவருக்குஞ் சந்தேகத்தோடாயினும் பரமபாதபடிச செய்வது மிகவும வேண்டிய எச்சரிக்கைத்தானே. அதேதனென்றால், ஒழுங்குடன் உலகமெல்லாம் அநுசரித்து உட்கொண்ட விசுவாசத்தை நாமே கைவிட்டு எல்லாரையும் பகைத்தபின்பு, வழுவில்லாத திருச்சபையை நெறியில் நிறுத்த வநதோமென்று நாம் துணிந்த துவக்கததில் தானே நமக்குள்ளே ஒவ்வாமல் விரோதித்து இருந்தோமென்று அறிந்தால், இதைப்பற்றி அனைவரும் நகைத்து இகழத்தகுந்தது ஒன்றுமில்லை" என்றான். இதோ ஆண்டவர் பரம நீதியால் பதிதரோ தஙகள் வாயால் தங்களுக்குக் கேடாகத் தீர்வையிட்ட முறை. மீளவுங் கல்வீன் லுத்தேர் என்ற இருவர் தம்முட் சிலதுகளில் பகைத்ததன்றி, ஒவ்வொருவன தன்னோடு ஒவ்வாமல் இன்று சொன்னதையே நாளை மறுத்து விரோதமாய் உணர்ததிக்கொண்டு, ஒரு நிலைகொள்ளாமல் சொன்ன ஒவ்வாத தப்பறை எல்லாம ஆண்டவர் அருளிச்செய்த வேதமென்று பிதற்றித் திரிந்தார்கள்.

14.— இவ்விருவர் செய்தபடிக்கு இவர்களைப் பின் சென்ற சீஷருங குரு வழி விட்டுக் கொஞச வருஷத்தில் லுத்தேர் சமயம் 78 பிரிவுகளாகவும், கல்வீன் சமயமும் விபரீத பலப் பாகங்களாகவுங் கண்டோம். நீசர் நினைவும், மெய்வழி தப்பி வழுவின தப்பறையும், ஆடுகள் சாயுங் காட்டுவழியைப்போல ஆயிர முகத்தளவாகப் பிரிந்து, பூவுலகெஙகும் நிந்தையாக மெலிந்து கிடந்தமையால் அது பொய் வழி என்று தோன்றுமல்லோ. அதெப்படியென்

ருல், ஆண்டவர் அருளிச்செய்த வேதம் மெய்யாகையால் தீயின் முகத்து அழியாத தங்கத்தைப்போலவும், காற்றின் முகத்து அசையாத வயிரமலையைப்போலவும், மேக முகத்து அழுக்கடையாத சூரியனைப்போலவும் எக்காலத்தும் ஒருமுகமாய் நின்று வந்து பகையின் முகத்து ஒளி பெற்று வளர்வதொழியக் குறைபவுங் கெடவுமாட்டாது.

அப்படியே சேசுநாதர் மனுஷனாகப் பிறந்து 1936-ம் வருஷமுமாகி அவர் அருளிச்செய்த வேதத்தைப் பகைத்து, தம்முள் ஒன்றொடொன்று ஒவ்வாமல் முந்நூறு வெவ்வேறு புறச்சமயங்களாகப் பிரிந்து தோன்றினவாம். ஆட்டுக்குட்டிகளைச் சூழ்ந்த ஓநாய் கூட்டம்போல எப்போதும் எங்கும் ஆயிரம் வகைப் பதிதர் சத்தியவேதத்தை விழுங்கச் சூழ்ந்து பகைத்தாலும், அது சத்தியவேதமாகக் கொள்ள இந்நாள்வரைக்குஞ் சற்றுங் கெடாமல் உலகமெங்கும் ஒருகண்டசீராய் விளங்கினதொழிய வேறுபடாமல் நிலைகொண்டதாகக் கண்டோம்.

இந்நாள் வரைக்கும் அர்ச். பாப்பு, மற்ற வேதபாரகருஞ் சொன்ன தேவ இரகசியங்களை ஒன்றும் அறியாத கிழவியும் மாறுமற் சொல்வாள். புறச்சமயத்தாரோவெனில், காற்றின் முகத்து விரித்த கொடிகளைப்போல ஆடின உணர்வினோடு நாடோறும் வழியை மாறி, வேர்க்கொள்ளாத பாசியைப்போல அலைந்து, நீர்மேற் குமிழியைப்போல அழிந்து மறைந்துபோனார்கள். அப்போஸ்தலர்மார் நாள் துவக்கி ஓயாமற் பிறந்த பல புறச்சமயங்கள் லுத்தேர் முளைத்த நாளில் ஐரோப்பாக் கண்டத்தில் எல்லாம் மடிந்து புதைக்கப்பட்டிருந்ததொழிய, ஒன்றுகிலும் அப்போது விளங்கி நின்றதில்லை, அதற்கு ஒரு கோயிலும், ஒரு கூட்டமும், ஒரு ஸ்தலமும் நின்றதுமில்லை. லுத்தேர் முதற்கொண்டு தோன்றின புறச்சமயங்களோவெனில், இன்னம் நின்றாலும் ஒரு வழியாய் நில்லாமல் ஆயிரம் பிரிவாக வேறுபட்டு, ஒரு முகமும் ஒரு நிலையுமில்லாமற் சிறிது மூலையிலே அலைவதைக் கண்டோம்.

15.— புறச்சமயமெல்லாம் பொய் வழியாகையால், இந்த. விபரீதமாவதற்கு அது ஓர் காரணமன்றி இதற்கு வேறொரு காரணமுண்டாம். அதேதெனில், வேதத்துக் கெல்லாம் ஆண்டவர் திருவுளம்பற்றின வாக்கியங்களே மாதிரியாகும். இம்மாதிரியாகத் தாமும் புறச்சமயத்தார் எல்லாரும் நிற்பதென்பார்களாயினும், ஆண்டவர் திருவுளம்பற்றின வாக்கியங்களின் மெய்யை அறிய ஆசையோடுந் தெளிந்த உணர்வினோடும் ஆராய்ந்து பாராதே போனால், மெய்யான உள் அர்த்தத்தைக் கண்டு அறிவதரிதே. அப்படியே அர்ச். இராயப்பர் எழுதின 2-ம் நிருபத்து 3-ம் அதிகாரம் 16-ம் வசனத்தில் தாமே எழுதினதாவது: "சின்னப்பர் எழுதிவைத்ததில் கண்டுபிடிப்பதற்கரிய சிறிதுகளை வைத்தார். அதுகளை மற்றத் தேவ வாக்கியங்களைப்போலத் தெளியாமல், தளர்ந்த உணர்வினோர் தங்களுக்குக் கேடாக அர்த்தத்தைச் சொல்லிக் கெடுக்கிறார்கள் என்றார்."

இதுவெல்லாம் இப்படியிருக்கையில், புறச்சமயத்தார் எல்லாருந் தேவ வாக்கியங்களுக்கு அர்த்தத்தைச் சொல்ல வேறொருவன் வார்த்தையைக் கேளாமல், அவனவன் தனக்குத்தோன்றினபடி அர்த்தத்தைக்கொள்ளச் சொன்னார்கள். ஆகையால் வேதபாரகர் கூடிக் கல்வியின் துறையெல்லாங் கடந்து, நெடுநாளாய் ஆராய்ந்து நிச்சயித்துச் சொன்ன அர்த்தத்தை விட்டுச் சக்கிலியன் செருப்புகளைத் தைத்தபோதும், வண்ணான் சீலையைத் தப்பினபோதும், குயவன் சக்கரத்தைச் சுழற்றினபோதும், சண்டாளன் நிறையக் கள்ளுண்டபோதும் இவர்களெல்லாரும் நினைத்த அர்த்தமே நல்லதென்று மெய்யாக அநுசரிக்கக் கட்டளையிட்டார்கள். இப்படியாகையில் புறச்சமயங்கள் நாடோறும் வேறுபட்டு ஆயிரமுகமாய் நிற்பது அதிசயமோ?

16. உரோமன் கத்தோலிக்குச் சத்தியவேதத்தாரோவெனில் பிறந்த நாடும், பேசின சொல்லும், கற்ற நூலும், நடந்த முறையும் வேறுவேறாகித் தாமுந் தம்முள் மற்றக்

காரியங்களில் வேறுனூலும், வேத முறைமையிற் சற்றும் வேறுபடாமல் ஒருமுகமாய் ஒரு நிலையாய் நிற்பதேதெ னில், நம்முடைய கர்த்தராகிய சேசுநாதர் திருச்சபைக் கெல்லாம் அர்ச். இராயப்பரைத்தொட்டு அர்ச். பாப்புக் களைத் தலைவராகக் கட்டளையிட்டக் காலத்துவரை முன் விசுவாசந் தளராமலும் மயங்காமலும் நிற்கும் என்றுர். என்றமாத்திரத்தில், அர்ச். இராயப்பர் துவக்கி, விடாத தொடர்போடு வந்த அர்ச். பாப்புக்கள் ஒவ்வொருவர் வேதத் திலேயும், தேவ வாக்கியங்களிலேயும் பிறந்த சந்தேகங்க ளைத் தப்பிதமின்றித் தீர்ப்பதற்கு உறுதியாகச் சேசுநாதர் தாமே துணையாய் நின்றுர்.

இதனை மனதில் நிச்சயமாக எண்ணின நல்ல கிறீஸ்து வர்கள் எல்லாரும் வேத முறையிற் சந்தேகம் வந்தவிடத்து அர்ச். பாப்புதாமே ஸ்தாபித்தமையாலும் தாம் கூட்டின மேற்றிராணிமாரும் வேதபாரகரும் நெடிது ஆலோசனை செய்து ஸ்தாபித்தமையாலுஞ் சலஞ்சாதியாமல் மற்ற எவரும் ஒத்துக்கொண்டமையால் இந்நாள்வரைக்கும் ஒரு மெய்யான வேதத்தை அநுசரித்து வேறுபடாமல் நின்றுர் கள்.

17.— இதில் நன்றுய் யோசிக்கக்கடவது ஒன்றுண் டாம். அதாவது, ஆண்டவர் ஒன்றினைப்பற்றி வேண்டும், வேண்டாம் என்னவுமாட்டார். ஆம், அல்ல என்னவுமாட் டார். ஆகையால், இருநூறு வருஷத்தில் இருநூறு விப ரீத முகமாய்த் திரிந்து நிற்கும் புறச்சமயங்கள் எல்லாம், ஆண்டவரால் வராமல் பொய் விளைவிக்குங் காரணமாகிய பசாசினுல் வந்ததென்று நிச்சயமாகும். உரோமன் திருச் சபையாரிடத்து இந்நாள்வரைக்கும் அற்ப விபரீதமாகி லும் இல்லாதபோது, அவர்கள் அநுசரிக்கிற வேதம் ஆண் டவரால் அருளிச்செய்யப்பட்ட வேதம் என்பதற்கு நியாய மாமே. புணர்வின்றி எல்லா நன்மையில் ஓர் உத்தம நன் மையாகி, சர்வேசுரன் அருளிச்செய்த வேதமும் ஒன்றுகி, விரிவாய்ப் பிரிந்து எழுபத்திரண்டு புஸ்தகங்களாக

எழுதினதாயினும், பலரைக்கொண்டு எழுதுவித்ததாயினும், அதில் தம்முள் விபரீதமுள்ள இரு மொழிகளைக் காண்பாரில்லை.

அவ்வண்ணமே உரோமன் கத்தோலிக்குத் திருச்சபை சர்வேசுரன் கட்டளையிட்ட முறைமையில் வழுவாமையினால் சூரியன் கதிர் படாத இடம் உண்டெனினும், திருச்சபை வழங்காத இடமே உலகமெங்கும் இல்லாதாயினும், எக்காலத்தும், எவ்விடத்தும், எக்குலத்தும் ஒரு முகமாய் ஒரு நிலையாய் ஒரு நூலாய் விபரீதமின்றி மயக்கமின்றி எல்லாப் பாஷைக்கும் ஒரு பொருளாய், எல்லா வாய்க்கும் ஒரு மொழியாய், எல்லா நெஞ்சத்தும் ஒரு சுடராய், எல்லா உயிருக்கும் ஒரு பலனாய் இந்நாள் வரைக்கும் நின்றதொழிய, உலகமுடியுமளவும் வேறுபடாமல், அழிவு படாமல், நிலைகொண்டு எங்கும் வழங்குமாமே.

18. — ஆகையால், தன் பத்தாவைப் பார்த்த கண்ணாற் பிறரைப் பார்க்கமாட்டாத கற்புடையாளைப்போல உரோமன் திருச்சபை சேசுகிறீஸ்துவுக்கு ஒரே நெறியில் நிற்குங் கற்புடையாளாக வேதத்தில் புகழப்பட்டதாமே. பதிதர் சமயங்களோவெனில், நாளுக்குநாள் வேறாகி அவனவன் ஆசைக்களவாக விபரீதங்களைக் காட்டினதனாற் பொருளைப் பற்றி அன்பினை மாறி வந்த யாவருக்கும் பிரியங் காட்டி, எவரையும் வஞ்சகமாகக் கெடுத்து, ஒரு காவலும், ஒரு நெறியும், ஒரு நட்பும், வெட்கமுமில்லாமல் இகழப்படும் விலைமாதராக அச்சமயங்கள் எல்லாம் வேதத்தில் நிந்திக்கப்பட்டனவென்று நிச்சயமாய் அறிவோம்.

ஆகையால், நல்ல அறிவுடையோர் அனைவரும் புறச்சமயங்களில் வேறே அபத்தங் காணாதாயினும்,இந்த விபரீதம் ஒன்றினைப்பற்றி அதுகளைத் தப்பிதமென்றும், பசாசினால் வந்த மதங்களென்றுந் தாமே நிச்சயித்து, உயிரைக் கொல்லுங் கொடிய வஞ்சகப் பரத்தையரை நீக்கி உயிரைப் பேணுங் கற்பில் அசையாத குலஸ்திரீயை அணுகுவாரைப் போலப் புறச்சமயங்கள் எல்லாவற்றையும் வெறுத்து நிற்

தித்தொழித்துக் கரை ஏற்றத்துக்குரிய ஒரே வழியா கிய உரோமன் கத்தோலிக்குத் திருச்சபையின் வேத மொன்றினை அநுசரிப்பதற்கு இதுவே நியாயமென்று சொல்லிக்கொண்டு வருகிறார்கள்.

3-ம் அதிகாரம்.

மோக்ஷவாசிகளின் வணக்க விளக்கம்.

19.— கிளைத்த கொம்புகளை ஒன்றொன்றாய் வெட்டி எறிவது நெடுநாள் வேலை என்று, வேரைத் தோண்டிப் பறிப்பாரைப்போல, நாமும் புறச்சமயங்களில் கிளைத்த அபத்தங்களை வெவ்வேறே மறுத்துத் தள்ளாமல் அந்தச் சமயங்கள் முளைத்த வகையைக் காட்டி ஒருப்படப் பிடுங் கப் பிரயாசப்பட்டோம். இற்றைவரைக்கும் நான் சொல் லிக் காட்டினதைக்கொண்டு புறச்சமயங்களும், அதுகளில் விபரீதங்களாய்ச் சொன்ன அபத்தங்களும் பொய்யென்று தோன்றவும், நல்ல அறிவுடையோர் எல்லாரும் அதுகளை ஒன்றொன்றாய் வெறுத்து மறுக்கவும் நியாயமுண்டாம். ஆகிலுங் கீழ்த்திசைப் பதிதர் தேவமாதாவையும், மற்ற மோக்ஷவாசிகளையும் நாம் வணங்குகிறதினால் நம்மை அக்கி யானிகளென்று வெட்கமில்லாமற் சொல்வதைப்பற்றிய விஷயத்திற்கு விரிவாக உத்தரஞ் சொல்லத் துணிந்தோம்.

மதிகெட்டவர்கள் பிதற்றிச சொல்லும் அபத்தம் லுத்தேர் நாளில் புதிதாய் முளைத்ததல்ல. லுத்தேருக்கு முன்னே 1,100 வருஷமாகக் கர்த்தர் திரு அவதாரம் பண் ணின 402-ம் ஆண்டில் துவக்கின தப்பிதமாகும். நாம் எல்லாரும் போர்க்களமாகிய இப்பூவுலகில் பசாசோடு யுத்தஞ் செய்துகொண்டுவருகையில், மேற்படை யென்னும் மோக்ஷவாசிகள் நமக்கு உதவியாக நின்றால் எளிதாய்

செயங்கொண்டு கரை ஏறுவோமென்று பசாசு அறிந்து, அந்த உதவி நமக்கு இல்லாதபடிக்குத் தேவமாதாவின் ஆராத்னையும், மற்ற அர்ச்சியசிஷ்டவர்களுடைய வணக்கமும் ஒழிப்பதற்குப் பிரயாசப்பட்டதாம். ஆகிலும் சூரியனைப் பகைத்த வௌவாலைப்போலவும், சிங்கத்தை எதிர்த்த நரிக்கூட்டத்தைப்போலவுந் தேவமாதாவையும் மற்ற மோக்ஷவாசிகளையும் பசாசினால் ஏவப்பட்டுப் பகைத்த பாவிகள் உண்டுபண்ணின அபத்தம் முளைத்த நாளில் தானே ஒழிந்து, பழையபடிக்குச் சுகிர்த வேத முறைமை வழுவாத வணக்கம் விளங்கினதாமே.

20.— ஆயிரம் வருஷத்துக்குப்பிறகு லுத்தேரும் கல்வீனும் இவர்களோடு சேர்ந்து பிரிந்த மற்றப் பதிதர் எல்லாருஞ் செத்து நாறிக்கிடந்த நாயிடத்து முளைத்தப் புழு மாணிக்கமாகத் தோற்றுவிக்க நினைத்தாற்போல, முன் புதைக்கப்பட்டிருந்த இந்தத் தப்பறையை வேதமாக வெளிப்பட எடுத்து வெட்கமில்லாமல் சொல்லத் துவக்கினார்கள். இதில் தெளிவாய் நடக்கும்படிக்கு இரு விசேஷங்களைப் பிரிக்கக்கடவோம். அதின் முதலாவது: தேவமாதாவையும் மற்ற மோக்ஷவாசிகளையுந் திருச்சபை வணங்கின முறை நல்லதோ இல்லையோவென்று யோசிக்கவும்.

2-வது. வணங்கப்பட்ட மாதாவுக்கும், அர்ச்சியசிஷ்டவர்களுக்கும், சேசுநாதருக்கும் சுரூபங்களை வைத்து வணங்கின முறை நல்லதோ இல்லையோ வென்று யோசிக்கவும். இவ்விரு முறைகளையும் ஆராயாதத்தன்மையால் அந்தப் பதிதர் எல்லாரும் அக்கியானம் என்றார்கள். நாம் இங்கே முதல் முறைக்கடுத்த நியாயங்களை மூன்று அதிகாரங்களில் வெளிப்படுத்தினபின்பு, சுரூபங்களுக்கு நாம் செய்யும் வணக்கத்தின் உத்தம முறையைச் சொல்லிக் காட்டித்தருவோம்.

21.— ஆகையால், இரு கண் கெட்ட குருடனே! உச்சி மத்தியானம் இன்னம் விடியவில்லை என்று சாதித்தாற்போலச் சந்தேகம் ஒன்றின்றித் திருச்சபையில்

வழங்கின வழுவாமுறையின் விளக்கத்தைப் பதிதர் காண மாட்டாமல் மோக்ஷவாசிகளை வணங்கினவனா அக்கியானிகள் என்ருர்கள். என்றபின்பு பதிதர் முழுத் தேங்காயைக் கடித்தவனைப்போல உட்சுவையாகிய நியாயத்தைக் கண்டு பிடிக்கமாட்டாமல் சில வேத உதாரணங்களைக்கொண்டு மோக்ஷவாசிகள் ஆராதனை ஆகாதென்று ஒப்பிக்கப் பிரயாசப்படுகிருர்கள்.

22 — ஆகிலும், இங்கே அவர்கள் சொல்லுவதை ஆராய்ந்து மறுக்குமுன்னமே, நாம் மோக்ஷவாசிகளை வணங்கும் வகை ஏதென்று சொல்லக்கடவோம். அதேதெனில், அர்ச்சியசிஷ்டவர்கள் ஆண்டவருக்கு உகந்தவர்களாகக்கொள்ள அவர்களைப் புகழ்ந்து, அவர்கள் நமக்காக ஆண்டவரை வேண்டிக்கொள்ள மன்ருடுவது நாமே மோக்ஷவாசிகளுக்குச் செய்யும் ஆராதனை யொழிய, வேறு ஆராதனை செய்கிறதில்லையென்பது நிச்சயமாமே. இது இப்படியிருக்கையில் நாமும் அவர்களும் ஒருப்பட ஒத்துக்கொண்ட ஒரு சத்திய விசேஷம் அறியக்கடவீர்கள். அதாவது:

நாம் இப்பூவுலகில் உயிர் பிழைத்திருக்கிறவர்களை நமக்காக ஆண்டவரை வேண்டிக்கொள்ள மன்ருடலாமென்று பதிதரும் ஒத்துக்கொள்ளுகிருர்கள். இதுவும் நியாயந்தானே. அர்ச். சின்னப்பர் கொலேசியருக்கு எழுதின நிருபத்து 4-ம் அதிகாரம் 2-ம் வசனத்தில் திருவுளம்பற்றினதாவது : ''செபத்தை விடாமல் கிறீஸ்துவின் பரம இரகசியத்து உபதேச வாசலை நமக்கு ஆண்டவர் திறக்கும்படிக்கு அவரை வேண்டிக்கொள்ளுங்கள்'' என்ருர். மீளவும் அவர்தானே தெசலோனியருக்கு எழுதின முதல் நிருபத்து 5-ம் அதிகாரம் 25-ம் வசனத்தில் ''தம்பிமாரே, நமக்காக மன்ருடுங்கள்'' என்ருர். அவர்களுக்கு எழுதின 2-ம் நிருபத்து 3-ம் அதிகாரம் முதல் வசனத்தில் ''தேவ உபதேசம் வழங்கும்படிக்கு நமக்காக வேண்டிக்கொள்ளுங்கள்'' என்ருர்.

அர்ச். யாகப்பரோவெனில் எழுதின நிருபத்தின் 5-ம் அதிகாரத்து 16-ம் வசனத்தில் மோக்ஷக் கரை ஏறும்படிக்கு ஒருவன் ஒருவனுக்காக வேண்டிக்கொள்ளுங்கள் என்றார். இதெல்லாமாகையில் நாம் உயிரோடிருக்கும் மற்றவர்களை நமக்காக வேண்டிக்கொள்ள மன்றாடுவது வேதத்தில் வழங்கின முறைமையாமே. உயிரோடிருக்கிற வர்கள் ஆண்டவருக்கு உகந்தவர்களோ இல்லையோ வென்று அறியாமலிருக்கவும், உகந்தவராகிலும் முற்ற முடிபோக நடப்பவரோ, வழுவி நரகத்திற்குப் போகத் தக்க வரோவென்று அறியாமலிருக்கவும், நமக்காக ஆண்டவனை வேண்டிக்கொள்ள வேத முறையின்படியே மன்றாடலா மென்று இருக்கையில், ஆண்டவர் தரிசனத்தை யடைந்து, அவருக்குச் சனுக்களாகி, வழுவ மாட்டாத மகாத்துமாக் களாகிய மோக்ஷவாசிகளை நமக்காக மன்றாடும்படிக்கு நாம் வேண்டக்கூடாதென்பதென்ன? வேண்டினால் அக்கியான வணக்கம் என்பதென்ன?

23.— இதற்குப் பதிதர் சொல்லும் முதல் நியாயமாவது: மோயீசன் 5-ம் புஸ்தகத்து 6-ம் அதிகாரம் 13-ம் வசனத்தில் எழுதினதாவது: உன் கர்த்தாவாகிய சர்வேசுரனை வணங்கி, அவர் ஒருவருக்கே ஊழியஞ் செய்வாயாக வென்றார். ஆகையால் அவர் ஒருவனை வேண்டுவது நியாயமாகையால் அவனை விட்டு மோக்ஷவாசிகளை வேண்டு வது ஆண்டவருக்குச் சங்கைக்கேடாகும் என்பார்கள். ஆயினும் ஆண்டவனை விட்டு உயிரோடிருக்கிற மகாத்துமாக்களை நமக்காக வேண்டும்படிக்கு மன்றாடுவது ஆண்டவருக்குச் சங்கைக் கேடாகாமல் முன் சொன்னபடி வேதத்தில் வழங்கின முறையாவானேன். இவ்வண்ணமே ஆண்டவருக்குக் குறைசெய்யாமல் இப்பூவுலகிலுள்ள நல்லோரையும், வானுலகில் வாழும் மோக்ஷவாசிகளையுஞ் சங்கித்து வேண்டிக்கொள்ளலாம். அதேதெனில் முன் சொன்ன தேவ வாக்கியத்தில் சர்வேசுரனே தேவதொழிய

மற்றவரைத் தேவராக வணங்கவும், சேவிக்கவும் வேண்டா மென்பதாம்.

அப்படியே மோயீசன் 2-ம் புஸ்தகத்து 20-ம் அதிகாரத்து 3-ம் வசனத்தில் விவரமாய் ஆண்டவர் கட்டளையிட்டார். நாமோவெனில் தேவமாதாவையும், மோக்ஷவாசிகளையும் வணங்கி மன்றாடும்போது அவர்களைத் தேவர்களாக எண்ணவுமில்லை, மன்றாடவுமில்லை. நமக்காக அரசனை மன்றாடச் சொல்லி மந்திரிகளை வேண்டினால் அவர்களை அரசர்களாக வணங்கினேமென்றும், அரசனுக்கு இதனால் குறை உண்டென்றும் மதி கெட்டவனுஞ் சொல்லமாட்டான்.

24. — மீளவும் பதிதர் சொல்லும் இரண்டாம் நியாயமாவது: மனிதனாகப் பிறந்த சேசுகிறீஸ்து ஒருவரோ ஆண்டவருக்கும், மனிதருக்கும் நடுவே நிற்பவரொன்று, அர்ச். சின்னப்பர் திமோத்தேயுவென்பவருக்கு எழுதின முதல் நிருபத்தில் 2 ம் அதிகாரத்து 5-ம் வசனத்தில் எழுதிவைத்தார். ஆகையால் சேசுநாதர் ஒருவரோ மனிதருக்கு உதவியாக நடு நின்று ஆண்டவருடைய உறவும், வரங்களும் நமக்கு வரும்படி செய்கிறவராகையால் அவரை அல்லாமல் மற்ற மோக்ஷவாசிகளை வேண்டுவது அவர் உதவி போதாது என்றாற்போலச் சேசுநாதருக்குக் குறையாகுமென்று பதிதர் சொல்லிக்கொண்டு திரிகிறார்கள்.

ஆயினும் உயிரோடிருக்கும் நல்லவரை வேண்டுவது சேசுநாதருக்குக் குறையல்லவென்று பதிதர் தாமே சொன்ன பின்பு, மோக்ஷவாசிகளை மாத்திரம் வேண்டுவது குறையா மென்பது என்ன? அர்ச். சின்னப்பர் முன் சொன்ன இடத்தில் எழுதிவைத்ததெல்லாஞ் சொன்னால் சந்தேகப்பட இடமில்லை. ஆகையால் ஆண்டவருக்கும், மனிதருக்கும் சேசுநாதர் ஒருவரோ நடு நிற்பவர் என்றவுடனே அதற்கு நியாயத்தைக் காட்டி, அவரோ சகலபேர் ஈடேற்றத்திற்காகத் தம்மை ஒப்புக்கொடுத்தாரென்றார். ஆகையால் ஒழுங்குபடத் தெளிவாக சின்னப்பர் திருவுளம்

பற்றினதைத் திருப்பிச்சொல்லும்படிக்கு, மனிதர் யாவரையும் இரட்சிக்கிறதற்குச் சேசுகிறீஸ்து ஒருவரோ தாம் தம்மைப் பலியாகத் தந்ததினால் அவர் ஒருவரோ ஆண்டவரோடு மனிதர் உறவாகும்படிக்கு நடுவில் நிற்பவரென்றார், அர்ச். சின்னப்பரென்க.

அப்படித் தாம் பாடுபட்டுச் சிலுவையில் அறையுண்டு, மரணத்தை அடைந்து, நம்மை இரட்சித்த சேசுநாதரொழிய, மற்ற மோக்ஷவாசிகளை நம்மை இரட்சித்தவர்களென்று சொல்லவும், கருதவுங்கூடாது. ஆகிலும் சேசுநாதர் பாடுபட்ட பலனைக்கொண்டு மோக்ஷவாசிகளும், பூவுலகில் வாழும் மகாத்துமாக்களும் நமக்காக வேண்டிக்கொள்ளச் சொன்னால் சேசுநாதருக்குப் புகழ்ச்சியாகுமொழியக் குறையும், நிந்தையும் ஆகுமென்று நல்லறிவுடையோர் நினைக்கவுமாட்டார்கள்.

25.— மூன்றாவது, பதிதர் சொல்லுவது ஏதெனில்: ஆண்டவர் அளவிறந்த தயையுள்ளவரும், நம்மை இரட்சிக்க மிகவும் ஆசையுள்ளவருமாகையில் பல மோக்ஷவாசிகளைச் சிபாரிசு செய்யத்தேடி, ஆண்டவரை நமக்காக வேண்டிமன்றாடச் சொல்லும்போது, ஆண்டவர்மேல் அவநம்பிக்கையைக் காட்டினாற்போலேயாகும். அர்ச் சின்னப்பரோவெனில் எபிறேயருக்கு எழுதின நிருபத்தில், 4-ம் அதிகாரத்து 16-ம் வசனத்தில் நாம் வேண்டிக்கொள்ளும்போது ஆண்டவர் சந்நிதியிலே முழு நம்பிக்கையோடே சேரக்கடவோமென்றார். ஆகையால் ஆண்டவரையன்றி மோக்ஷ வாசிகளை வேண்டுவது அவநம்பிக்கையாகி, ஆகாத வணக்கமாகுமென்று பதிதர் சொல்லுகிறார்கள்.

ஆகிலும் அந்த அர்ச். சின்னப்பர்தாமே முன் சொன்னபடி தமக்காகச் சனங்களை வேண்டிக்கொள்ளச் சொல்லி எழுதின இடத்தில் ஆண்டவர் பேரில் அவநம்பிக்கை காட்டினாரோ, இல்லையென்பார்கள் பதிதர்தாமே. ஆகையால் மோட்சத்தில் வாழும் அர்ச்சியசிஷ்டவர்களையும் அவநம்பிக்கை காட்டாமல் வேண்டிக்கொள்ளலாமென்றுசொல்

லுவது நியாயமாமே. மீளவும் வேதத்தில் எழுதப்பட்டதைப் பார்க்கில் இதுவெளியாகும். ஆகையால் யோபு ஆகமத்தில் 42-ம் அதிகாரத்து 8-ம் வசனத்தில் ஆண்டவர் தாமே யோபென்பவன் சிநேகிதருக்குத் திருவுளம் பற்றினதாவது: உங்களுக்காக வேண்டி யோபென்பவன் பூசை செய்யவும், நம்மைவேண்டிக்கொள்ளவும்,அவன் முகத்தைப் பார்த்து, நீங்கள் மதி கேடாகச் செய்த குற்றங்களைப் பொறுப்போமென்றார்.

மீளவும் மோயீசன் முதல் புஸ்தகத்தில் 20—ம் அதிகாரத்து 7—ம் வசனத்தில் ஆண்டவர் செறார் நாட்டு அரசனாகிய அபிமெலேக்கென்பவன் அபிரகாம் பெண்சாதியைப் பறித்ததற்குத் திருவுளம் பற்றினதாவது: புருடனுக்குத் தன் ஸ்திரீயை உடனே ஒப்புக்கொடுக்க, அவனுந் தீர்க்கதரிசியாகையால் உனக்காக வேண்டிக்கொள்ளுவான். நாமும் பொறுத்து, நீ பிழைப்பாயென்றார். மீளவும் மக்கபெயர் இரண்டாம் புஸ்தகத்தில், 3—ம் அதிகாரத்து 23—ம் வசனந்துவக்கி, 34—ம் வசனமட்டும் எழுதப்பட்ட வர்த்தமானமாவது: எருசலேமாநகரில சர்வேசுரனுக்குக் கட்டியிருந்த கோயிலில் உள்ள திரவியங்களைக் கொள்ளையிட்டுக்கொண்டு வரும்படிக்கு அரசனால் அனுப்பப்பட்ட எலியோதுரான் போய்க் கட்டளையிட்டபடி செய்யத் துணிந்தவளவில், ஆகாயத்தில் தோன்றின ஒரு சம்மனசு ஏறின குதிரை எலியோதுரானை மார்பில் உதைத்தவுடனே, சூழ நின்ற சேவகர் எல்லோரும் ஓடிப்போக எலியோதுரான் கீழே விழுந்தான். விழுந்த பின்பு வேறு இரு சம்மனசுகள் தோன்றி, இருபக்கத்தும் நின்று குதிரைச் சம்மட்டிகளால் அவனை மிகவும் அடித்தமையால், அவன் மூச்சின்றிச் சாகக் கிடந்தான்.

அப்போதுபிரதான குருவாகிய ஒனியஸென்பவர் அவன் செத்தால் இது நாம் செய்த வஞ்சனையென்று இராசா நினைப்பானேவென்று மனதிரங்கி, அவனுக்காக வேண்டிச் சர்வேசுரனை மன்றாடிப் பூசை செய்தார். எலி

யோதுரனை முன் அடித்த இரு சம்மனசுகள் மீளவும் அவனுக்குத். தோன்றி ஒனியஸென்னுங் குருவானவரைத் தோத்திரஞ் செய்யக்கடவாய், அவரைக்குறித்து ஆண்டவர் உனக்கு உயிர் தந்தார் என்றார்கள்.

இதுவுமன்றி இத்தகைப்பட்ட வாக்கியங்களும், வர்த்தமானங்களும் வேத புஸ்தகங்களில் எங்கும் மட்டின்றிக் காணப்படுமே. ஆகையால் பிறரை நமக்காக வேண்டிக் கொள்ளச் சொல்லுவது பதிதர் சொன்னபடி அளவிறந்த தயையுள்ள நாதர்மேல் அவநம்பிக்கையைக் காட்டினதாகில், ஆண்டவர்தாமே பிறருக்காகச் சில மகாத்துமாக்களை வேண்டிக்கொள்ளச் சொல்லுவானேன்? அவர்கள் பிறருக்காகச் செய்த வேண்டுதலைத் தாமே கேட்பானேன்? தான் தானே தன் கண்ணைப் பிடுங்கினாலொழிய உச்சிப் பகலினும் விளங்கின இந்த நியாயங்களைக் காணாதிருப்பவர் ஒருவர் உண்டோ?

26.—ஆகிலுங் கண்ணால் கண்ட நியாயமும், கையால் தொட்ட சத்தியமும் மறுத்துச் சலஞ்சாதிப்பது பதிதர் இயல்பாகையால், சொன்னதற்கு மறுவுத்தரமில்லாமலும், ஒத்துக்கொள்ளாமல் நம்மை நகைத்துச்சொல்லும் நாலாங் குருட்டு நியாயமாவது: நாம் சொன்னபடி மோக்ஷவாசிகளை வேண்டுவது குறையில்லாதாயினும், அதனாலாகிய பலன் என்ன? மோக்ஷவாசிகள் நமக்கு வந்த இடையூறுகளை அறியவுமில்லை, நாம் அவர்களுக்குச்செய்யும் வேண்டுதலைக் கேட்கவும் இல்லை. செவிடருக்கு வாசித்த வீணையைப்போலவும், குருடருக்குக் காட்டின கண்ணாடியைப் போலவும் ஆகுமென்பார்கள். அரசர் 3-ம் ஆகமத்து 8-ம் அதிகாரம் 39-ம் வசனத்தில் சகல மனிதர் உணர்வினை ஆண்டவர் ஒருவரோ அறிந்தாரென்ற தாகையால் மோக்ஷவாசிகளும் அறிவார்களென்றால் வேதத்திற்கு ஒவ்வாத அக்கியானம் என்பார்கள்.

ஆகிலும் மனிதர் உணர்வினை இயற்கையால் அறிந்தவர் சர்வேசுரன் ஒருவர்தாமே. அவர் தாம் தந்த காட்சி

யாற் செயற்கை அறிவினோடே மோக்ஷவாசிகளும் எம் முணர்வினை அறிந்தார்களென்றால் குறையென்ன? அப்ப டித்தானல்லோ தீர்க்கதரிசிகளெல்லாரும் வருவதையும், அகன்றதையும், மனதில் ஒளித்ததையும் அறிந்து வெளி யாகச் சொன்னார்கள். அப்படியல்லோ சாமுவேல் அரசர் முதல் ஆகமத்து 9-ம் அதிகாரம் 19-ம் வசனத்தில் சவுல் மனதில் நினைத்த யாவையும் அறிந்து, அவனுக்குச் சொன்னார். அப்படியல்லோ அரசர் 4-ம் ஆகமத்து 5-ம் அதிகாரம் 25-ம் வசனத்தில் எலிசேயுவென்பவர் தூர நின்ற தன் சீஷன் செய்ததை அறிந்து சொன்னார். அங் கேதானே 6-ம் அதிகாரத்து 8-ம் வசனத்தில் அந்த எலிசேயுஸ்தானே சீரிய இராசா நினைத்த யாவையும் அறிந்து இசருயேல் இராசாவுக்கு வெளிப்படுத்திக் கொண்டிருந்தார். இத்தகைப்பட்ட பலவும் வேதத்தில் எழுதியிருக்கையில் இப்பூவுலகில் ஆண்டவர் தம்முடைய சிநேகிதருக்கு இவ்வகைக் காட்சியைத் தந்தது நிச்சயமா கக் கொள்ள மோக்ஷத்தில் உத்தமவிதமாய்த் தம்மோடு ஒன்றுபட வாழுஞ் சிநேகிதருக்குக் கொடுக்கமாட்டாரோ?

27.—ஆகிலும் இது எவருக்குந் தெளிவாகும்படிக்கு இங்கே அறியவேண்டியதாவது: மோக்ஷத்தில் பேரின்ப தரிசனத்தை அடைந்த யாவருஞ் சர்வேசுரனை முகமுக மாய்க் கண்டு வாழ்வார்கள். தெளிந்த கண்ணாடியைப்பார்த் தவன் அதிலே தன் முகத்தைக் காண்பதன்றி அக்கண்ணா டியை அடுத்த யாவையுங் காண்பான். அவ்வண்ணமே அள விறந்த தெளிவுள்ள ஞானக் கண்ணாடியாகிய தேவசுபா வத்தை மறைவின்றிப் பிரத்தியக்ஷமாய் மோக்ஷவாசிகள் எல்லோருங் கண்டபடி, ஆண்டவர் சுபாவமாய் அறிந்த யாவையும் அவர்களும் அதிலே காண்பார்களென்று சொல் லத்தகுஞ் சத்தியமாமே.

குன்றாத இந்த நியாயத்தை வேத உதாரணங்களால் ஒப்பிக்கும்படிக்குத் தோபியன் ஆகமத்து 12-ம் அதிகா ரம் 12-ம் வசனத்தில் இரபயேலென்னுஞ் சம்மனசு தோபி

யனைப் பார்த்து, நீ கண்ணீரை விட்டு அழுது வேண்டின அளவில், நானே ஆண்டவருக்கு உன் வேண்டுதல்களை ஒப்புக்கொடுத்தேனென்றார். அர்ச். அருளப்பர் கண்ட காட்சியின் 5-ம் அதிகாரம் 8-ம் வசனத்திலும், 8-ம் அதிகாரத்து 3-ம் வசனத்திலும், 24 கிழவராகிய அக்காலதததுள்ள மோக்ஷவாசிகளும், மற்றச்சம்மனசுகளும் ஆண்டவர் சமுகத்தில் விழுந்து பொற் பாத்திரத்தில் தூம்புகை காட்டின பாவனையாகப் பூவுலகிலிருந்த நல்லோர் செய்த வேண்டுதலைக் காட்டி மன்றாடினதாக எழுதி வைத்தார்.

மக்கபெயர் இரண்டாம் ஆகமத்து 15-ம் அதிகாரம் 12-ம் வசனந் துவக்கி யூதஸென்பவன் கண்ட காட்சியாவது: பிரதான குருவாயிருந்த ஓனியஸென்பவர் யூதர்களுக்காக வேண்டிக் கையெடுத்து ஆண்டவரை மன்றாடக் கண்டபின்னர், அவர் அண்டையிலே வயதிலும், பெருமையிலும் உயர்ந்த மற்றொருவர் தோன்றவே யூதஸென்பவனை நோக்கி ஓனியஸென்பவர் சொன்னதாவது: இவரோ நம்முடைய சனங்களுக்காகவும், எருசலேமென்னுந் திரு நகருக்காகவும் மிகவும் வேண்டிக்கொண்டிருப்பவர். இவரோ ஆண்டவர், தீர்க்கதரிசியாயிருந்த எரேமியஸென்பவரென்றார். உடனே எரேமியஸென்பவர் கையை நீட்டிப் பொன்னாற் பூண்ட வாளை யூதஸென்பவனுக்குத் தந்து, சர்வேசுரன் உனக்கு அனுப்பின திருவாளை வாங்கிக்கொண்டு இசராயேல் சனங்களுக்குள்ள பகைவரை வெட்டிச் சங்கரிப்பாயாகவென்றார்.

இதுகளையும், வேதத்திலுள்ள பலவற்றையுஞ் சலஞ்சாதியாமற் பார்த்தால் சம்மனசுகளும், மற்ற மோக்ஷவாசிகளும் ஆண்டவரைப் பிரத்தியக்ஷமாகக் கண்ட இடத்தில் அவர்கள் தேவ சுபாவத்தில் நம்முடைய துன்பங்களையும், வேண்டுதலையும் அறிவார்களென்றும், அறிந்து நமக்காக மன்றாடுவார்களென்றுஞ் சந்தேகமறத் தெரியப்படுமே. மீளவும் ஓனியஸென்பவரும், எரேமியஸென்பவரும் இசராயேல் சனங்களுக்கு வேண்டிய உதவிகள்

செய்தபோது அவர்கள் இருவரும் மோக்ஷ தரிசனத்தை அடைந்தவர்களல்ல. பிதாக்கள் ஸ்தலத்தில் இருந்தவராகிலும் அவர்களுக்காக வேண்டவும், உதவவுஞ் செய்தார்களென்றால் சேசுநாதர் மோக்ஷ இராச்சியம் சென்ற பின்னர் அந்த இருவரும், மற்ற மோக்ஷவாசிகளும் அடைந்த பிரத்தியக்ஷ தரிசனத்தால், நாம் செய்யும் வேண்டுதலை அறியவும், மனம்பொருந்தி உதவியாக நமக்காக வேண்டி மன்றாடவுஞ் செய்வார்களென்று கண்ணுடைய யாவருங் கண்டுச் சொல்வார்கள் அல்லோ.

சொன்ன யாவையும் மெய்யென்று அறிவதற்கு ஆசையோடு எவ்வளவாகிலும் ஆராய்ந்து பார்க்கில், நியாயத்தைக் காணுதபடி தனக்குத்தானே கண்ணைப்பிடுங்கினாலொழிய மோக்ஷவாசிகளைக் குறித்துத் திருச்சபையில் வழங்கும் வணக்கம், வேதத்திற்கு ஒத்திருக்கிற நியாயமென்று காணப்படுமே. ஆகையால் அந்த வணக்கத்தைப் பதிதர் அக்கியானமென்றபோது அவர்களைப்பார்க்க மதிகெட்டவரும் இல்லை, அக்கியானிகளும் இல்லை என்பது நிச்சயந்தானே.

4-ம் அதிகாரம்.

தேவமாதா ஆராதனை விளக்கம்.

28.— சகல மோக்ஷவாசிகளைப் பற்றிப் பொதுவாய்ச் சொன்னதெல்லாம் விசேஷமாய்த் தேவமாதாவைப் பற்றிச் செல்லும் அல்லோ. ஆகிலும் மற்ற வான் மீன்களைத் தீண்டாத கரியதோர் பாம்பு, முழுதும் ஒளி விளங்குகிற பூரண மதியை விழுங்க வருமென்று இந்நாட்டில் வழங்கும் கதை மெய்யானாற் போலப் பதிதர் அனைவரும், மற்ற மோக்ஷவாசிகளைப் பகைத்தாலும் எவ்வுலகனைத்தும் விளங்

கிய குளிர்ந்த கதிரை வீசுந் தயையுள்ள பரம தேவதாயை விசேஷமாய்ப் பகைத்து முழுதும் அவளை விழுங்க ஊத்தையும், அழுலும் ஒழுகி நாறுந்தமது நரக வாயைத் திறந்து தூஷணங்களைக் கக்கிக்கொண்டுத் திரிகிறார்கள்.

ஆகிலும் பாவம் விளைவிக்கப் பிறந்த சமயங்களாகையில் சகல பாவங்களைத் தீர்க்கும் அமிர்தமுமாகிப், பாவத்திற்கு முதற்காரணமாகிய பசாசின் தலையை மிதித்தவளுமாகி, வானோருக்கு அரசியாகிய அர்ச். மரியாயென்பவளை அச்சமயத்தார் எல்லாரும் பகைப்பது அதிசயமல்ல. தேவமாதாவுக்கு இதனால் ஒரு குறையும் இல்லை. பாவத்தை விட்டுத் திரும்புவதற்கு ஆசையுள்ள பாவிகளுக்கெல்லாம் அடைக்கலமும், ஆதரவும் ஆதலால் பரம நாயகியுடைய தயையின் பெருமையாவதுபோல மெய்வழி விட்டுப், புண்ணிய நெறியைப் பகைத்த பாவிகள் வாயால் இகழப் படுவதே அவளுக்கு உயர்ந்த புகழ்ச்சியாகும். ஆகிலும் இதிலே தெளிவாய் நடக்கும் படிக்குத் திருச்சபை தேவமாதாவுக்குச் செய்யும ஆராதனை ஏதென்று முந்தி விளக்கக் கடவோம்.

29.—ஆகையால் பாவத்தில் அமிழ்ந்திக் கெட்ட மனிதனை இரட்சிக்கும்படிக்குச் சர்வேசுரன்தாமே மனிதனைப் பிறக்கக் கன்னி முத்திரை கெடாமல் தமக்குத் தாயாக அர்ச். மரியாயென்பவளைத் தெரிந்து கொண்டாரென்றும், அறிந்து, திருச்சபை சர்வேசுரனுக்குப் பின்பு சகல மோக்ஷவாசிகளுக்கும், சம்மனசுகளுக்கும மேலாக அவளை எண்ணித், தேவ ஆராதனை நீங்கி, உத்தம ஆராதனையாகப் பரிசுத்தக் கன்னியும், தேவமாதாவுமாய் நிகரொன்றின்றி விளங்கும் பரம நாயகியாகிய அர்ச். மரியாயென்பவளை வணங்கவும், அவளை இருண்ட அக்கியானத்திற்கு ஒளியும், பகைத்த பசாசின்பேரில் வெற்றியும், அடைந்த துன்பத்தில் ஆதரவும், வந்த நோய்க்கு ஆரோக்கியமும், அழுவாருக்கு ஆறுதலும், மெலிந்தாருக்கு உறுதியும், கல்லாருக்கு உணர்ச்சியும், எவருக்குங் கிருபை

தயாபமுள்ள தாயுமாக எண்ணி மன்றுடவும், தேவமாதா ஆராதனையின் முறையாமே.

நோயுள்ள கண் ஒளிமிகுதியைப் பொறுக்கமாட்டாத துபோல, இவ்வுத்தம வகை ஆராதனையை மதிகெட்ட பதிதர் பொறுமல், தன் தலையை மிதித்தவளாகிய அவள்மேல் தீராப் பழியை வைத்த பசாசினுல் ஏவப்பட்டு வணக்கம் ஆகாதென்றும், அக்கியானமென்றும் வெட்கமின்றி உலகெங்கும் திரிந்து நாற்றம் வீச தூஷணங் கக்கிக்கொண்டு திரிகிறார்கள்.

30.- ஆகையால் பதிதர் சொன்னதை ஆராய்ந்து வெளியாக்கக் கடவோம். அர்ச். லூக்காஸ் எழுதின சுவிசேஷத்து 11-ம் அதிகாரம் 27-ம் வசனந் துவக்கி, நம்முடைய கர்த்தரான சேசுநாதர் விரிவாய் அருளிச்செய்த உத்தம உணர்ச்சிகளை மகிழ்ந்து கேட்ட ஒருத்தி, மனதில் பூரித்த இன்பம் உள்ளடக்க மாட்டாமல் பேரொலியாகக் கூப்பிட்டுச் சுவாமியை நோக்கி: உம்மைச்சுமந்த உதரமும், நீர் அமுதுண்ட கொங்கைகளும் பாக்கியம் பெற்றதுகளாமே என்றாள். அதற்குச் சேசுநாதர்: இதிலேயுஞ் சர்வேசுரன் திருவசனங்களைக் கேட்டு, ஒத்து நடப்பவர் பாக்கியம் பெற்றவரென்றார். ஆகையால் தம்மைப் பெற்ற தாயைப் புகழ்ந்த வார்த்தையை மறுத்துச் சேசுநாதர் தேவமாதாவின் ஆராதனை ஆகாதென்று பதிதர் சொல்லுகிறார்கள்.

ஆகிலும் அதிலேயும் இது தாவிலை என்றபோது, முன் சொன்னதை மறுத்த வகையோ? அல்ல. அதை ஒத்துக்கொண்டு, இரண்டிலும் பின் சொன்னது அதிகமென்பது அர்த்தமாகும். அப்படித்தானே சந்திரன் ஒளியினும், சூரியன் ஒளி பெரிதென்றால் இதனால் சந்திரனுக்கு ஒளியில்லை என்பதாமோ இல்லையே. ஆகையால் நம்மைச் சுமந்த உதரமும், நாம் பால் உண்ட கொங்கையும் புகழப்படுவது நியாயந்தானே. ஆகிலுந் தேவ வாக்கியங்களைக்

கேட்டு வழுவாமல் நடப்பவனை, அதிலேயும் புகழ்வது நல்லதென்று சேசுநாதர் திருவுளம் பற்றினார்.

31.- மீளவும் இந்த வார்த்தையைக் கொண்டு சேசுநாதர் தம்மை ஈன்ற தாயைப் பார்க்கத் தேவ வசனங்களைக் கேட்டு, நன்னெறி வழுவாத மற்ற அறிவுடையோர்களை உயர்த்தினாரென்று நினைக்கவும் வேண்டாம் இது வெளியாகும்படிக்கு ஓர் உவமை சொல்லிக் காட்டுவோம். ஆயுதமின்றி நின்ற ஒருவன் பகைவர் தன்னைவெட்ட வருவதைக் கண்ட அளவில் அருகே நிறை கோட்டையில் நுழைய ஓடிப்போகாமல், ஐயோ தம் பகைவர் கையில் அகப்படாமல், பறவைகள் ஆகாயத்தில் பறக்கும் விசையைப்பார், அதுகளே பாக்கிய முள்ளதுகள் என்றான். அதனைக்கேட்டு, மதிவல்லோன் ஒருவன்: விசையோடு ஆகாயத்தில் பறக்கும பறவையிலும் நீ ஓடிக் கோட்டையில் நுழைந்து உன் உயிரைக் காத்தல் நீயே பாக்கியமுள்ளவன் என்றான். என்றாலும் பறவை பறக்கும் விசையிலும் இவன் ஓடும் ஓட்டத்தை உயர்த்தினனென்று எண்ணலாமோ இல்லையே.

அவன் சொன்னதற்கு அர்த்தம் ஏதெனில், பறவை பறக்கும் விசை அதிகந்தானே, ஆகிலும் அதனால் உனக்கு ஆவதென்ன? நீ பறக்கக் கூடாமையால் அதிலேயும் உனக்கு உன் கால் ஓட்டமே நல்லதென்பதாமே. அவ்வண்ணமே சேசுநாதர் முன் சொன்னதற்கு அர்த்தம் ஏதெனில், நம்மைப் பெற்ற தாய் அடைந்த பாக்கியம் நிகரொன்றில்லாத உத்தமம் அதுதானே. ஆகிலும் வான் மேல் வாழுஞ் சம்மனசுகளுக்கு முதலாய் எட்டாத பாக்கிய மாகையில், நீ அதைப் புகழ்ந்து, ஆசைப்படுவது என்ன? தேவ திரு வாக்கியங்களைக் கேட்கவும், அதின்படியே நடக்கவும், பசாசு செய்யும் பகையில் அகப்படாதபடிக்கு வேண்டியிருக்கையில், முன் சொன்னதிலேயும், இதுவே உனக்கு வேண்டிய பாக்கியம் என்பதே சேசுநாதர் முன் திருவுளம் பற்றினதற்கு அர்த்தமாகும்.

32.- இதுவுமன்றி அத்திரு வசனத்தைக் கொண்டு, சேசுநாதர் எவருக்குஞ் சொன்ன உணர்ச்சியாவது: ஆண்டவர் கட்டளையிட்ட நியாயத்தைக் கேளாமலும், அவர் காட்டிய நெறியில் நடவாமலும், தம்மைப் பெற்ற பரிசுத்தக் கன்னியாகிய தேவமாதாவை வணங்கினாலும், அதனால் பலன் ஒன்றுமில்லையென்று காட்டினார். இது வெளியாகும்படிக்கு அர்ச். லூக்காஸ் எழுதின சுவிசேஷத்திற்றானே 23—ம் அதிகாரம், 28—ம் வசனத்தில் எழுதப்பட்டதைச் சொல்லிக் காட்டுவோம். நம்முடைய கர்த்தராகிய சேசுநாதர் சிலுவையைச் சுமந்து கபாலமலைமேல் ஏறுகிற போது பத்தியுள்ள சில ஸ்திரீகள் அவர் மேல் இரங்கி, விம்மி மிகவும் அழுது கொண்டிருந்தார்கள். அவர்களை நோக்கிச் சேசுநாதர் திருவுளம் பற்றினதாவது: எனக்காக இரங்கி அழவேண்டாம்; உங்களையும், உங்கள் மக்களையும் பார்த்து நொந்து அழக் கடவீர்களென்றார்.

ஆகையால் சேசுநாதர் நம்மை இரட்சிக்கும்படி அளவிறந்த தயைபொருந்திப் பாடுபட்ட அகோர கஸ்திநோவுகளைத் தியானித்து, மனமிரங்கிக் கண்ணீர்விட்டு அழுவது ஆகாதோ. மதிகெட்டவனாயினும் ஆகாதென்று சொல்ல மாட்டான். ஆகையால் அதற்கு அர்த்தம் ஏதெனில், ஒருவன் தன் பாவங்களை நினைத்து மனஸ்தாபப்படாமலும், அதுகளை வெறுத்து நொந்து அழாமலும் பாவத்திற்காகப் பாடுபட்ட கர்த்தர்மேல் இரங்கி அழுதால் பலனில்லாத இரக்கமென்று அர்த்தமாகும். அவ்வண்ணமே முன் சொன்ன உதாரணத்திலும் ஆண்டவர் சொன்ன புத்திகளைக் கேளாதவனும், கேட்டு நடவாதவனும், நம்முடைய தாயைப் பாக்கியமுள்ளவளென்று புகழ்ந்ததினால் பலன் ஒன்றுமில்லையென்பது அர்த்தமாகும்.

33.— இங்கே நாம் சுலபமாய்ச் சொன்னதை யோசித்துப் பார்க்கில், அந்த ஸ்திரீயானவள் தேவமாதாவை வணங்கிச் சொன்ன புகழ்ச்சியைச் சேசுநாதரும் ஒத்துக்கொண்டு, நல்லதென்றுமொழிய, அதனை மறுத்துத்

தேவமாதாவை வணங்கவும், புகழவும் வேண்டாமென்று சொன்ற மதிகெட்டவனுக்குத் தோன்றுமல்லாமல், நல்ல அறிவுடையோர் சொல்லவும், கருதவுமாட்டார்கள். ஆகையால் பகைவராகிய பதிதர் தேவமாதாவின்மேல் எய்த அம்புகளைத் திருப்பி முறிந்துபோன அவர்கள் மனம் புண்ணாகி வருந்தும்படிக்கு நாமே பரம தேவதாயை ஸ்துதித்து, ஞான உணர்வில் தெளிந்த அந்த ஸ்திரீயோடு ஒரு மிக்கத் திருப்புகழாகச் சொல்லக்கடவோம்.

மனிதனாகிய கடவுளைச் சுமந்த உதரமே வாழ்க. கன்னிமலர் கெடாக் கனியைத் தந்த உதரமே வாழ்க. உயிர்க்கெல்லாம் உணர்வினைத் தந்தவருக்கு அமுது ஊட்டிய கொங்கைகளே வாழ்க. எம் கண் மகிழ அரூபியானவரை உருவாக்கினவளே வாழ்க. நம்மை இரட்சிக்கச் சிந்தின குருதியைத் தந்தவளே வாழ்க. வானோருக்கு அரசியே வாழ்க. ஈனோருக்கு உறுதியே வாழ்க. வானுலகின் அழகே வாழ்க. பூவுலகின் உயிரே வாழ்க. தீயுலகின் அதிர்வே வாழ்க. வேதம் விளக்கும் சுடரே வாழ்க உயிரைப் புரக்கும் அருட்கடலே வாழ்க. நோய் தீர் அமிழ்தே, மருள் தீர் ஒளியே, துயர் தீர் மகிழ்வே, கதிக்கரையே, புவித் துணையே, கருணாகரியே, உயிரே, அமுதே, அருளே வாழ்க. எங்கும் புகழத்தகுந் தாயே வாழ்க. எல்லோராலும் புகழப்படுந் தாயே வாழ்க. பரமதேவதாயே வாழ்க. பதிதர் அஞ்சுந் திறத்தியே வாழ்க. பதிதர் பகைக்குஞ் செல்வியே வாழ்க. பதிதரை நல்வழி திருப்பும் அரசியே வாழ்க, வாழ்க.

34.— இவ்வண்ணமே பதிதர் முதற்படை வெட்கி முறிந்துபோன பின்பு, மறு படையாகச் சிலரும் வந்து, அர்ச். அருளப்பர் எழுதின சுவிசேஷம் 2-ம் அதிகாரத் துவக்கத்திலுள்ள வர்த்தமானத்தை ஆயுதமாக ஏந்திக் கொண்டு தேவமாதாவைப் பகைத்து எதிர்ப்பார்கள். ஆகிலுந் தேவமாதா துணையைக்கொண்டு நாமே அவர்கள் எறிந்த அம்பை அவர்கள்மேல் திருப்பித் தேவமாதா ஆரா

தனை ஒழிப்பதற்கு அவர்கள் சொன்னதைக்கொண்டு, அந்த ஆராதனையின் முறையை ஒப்பித்து அதனை விளக்கிக் காட்டுவோம்.

ஆகையால் அர்ச். அருளப்பர் எழுதின வர்த்தமானம் ஏதெனில், கானுவென்னும் ஊரில் ஒரு கலியாணத்திற்குச் சேசுநாதரும், அவருடைய திவ்விய மாதாவும், சீஷர்களும் வந்திருந்தார்கள். நடு விருந்திலே முந்திரிகைப்பழத்து இரசம் இல்லாததை அறிந்த தயாபரியாகிய தேவமாதா, தன் திருக்குமாரனை நோக்கி: இரசம் இல்லையென்றாள். அதற்குச் சேசுநாதர் ஸ்திரீயே உமக்கும் நமக்கும் காரியமென்ன, நம்முடைய காலம் இன்னம் வந்ததில்லையென்றார். என்றாலும் அவர் மனதை அறிந்த மாதா, ஏவற் செய்வோரைப் பார்த்து, இவர் சொன்னபடி செய்யுங்களென்றாள். சேசுநாதரும் அங்கே இருந்த ஆறு சாடிகளில் நிறையத் தண்ணீரை ஊற்றச் சொன்னபடி ஊற்றின பின்பு, அதில் எடுத்து வார்த்துக் குடித்த இடத்தில், உத்தம இரசமாகக் கண்டு அதிசயப்பட்டார்களென்று அர்ச். அருளப்பர் எழுதிவைத்தார்.

ஆகையால் சேசுநாதர் உமக்கும் நமக்கும் காரியமில்லையென்று மாதாவுக்குச் சொன்னபோது, மாதாவை நினையாமல் அவள் நமக்காக மன்றாட, நாம் வேண்டிக்கொள்ளத் தேவையில்லை யென்றாற்போல் ஆயிற்றென்று பதிதர் சொல்லுவார்கள். நாமோவெனில் சேசுநாதர் தாம் புதுமை செய்யும் நேரம் இன்னம் வராதிருந்தாலும், தேவமாதாவின் வார்த்தையை மறுக்கமாட்டாமல் உடனே அப்புதுமை செய்கையால் எல்லோருந் தேவமாதாவை வணங்கவும், தமக்கு வேண்டிய வரங்களைத் தப்பாதடையும்படிக்கு எல்லோரும் அவளை மன்றாடவும் படிப்பித்தாரென்போம். என்றாலும், இது நியாயத்திற்கு ஒத்திருக்குமென்று ஒப்பிப்பது எளிதே. அதெப்படியெனில்:

நம்மை இரட்சிக்க அவதரித்து இங்கே பிறந்த சேசுநாதர் பாடுபட்டு இரட்சித்ததும், எவருக்கும் வழுவா

ஒழுக்க நெறியைக் காட்டிப் போதித்ததும் அதல்லாமல் தம்மைக் கடவுளென்றும், தாம் போதித்த வழி மெய்யான வேதமென்றும் ஒப்பிக்க மட்டில்லாத புதுமைகளைச் செய்தார். ஆகிலும் தாம் புதுமை செய்யுமுன்னே தேவ மாதாவைக் கொண்டு செய்வித்தார். அதுவுமன்றி தாம் செய்த முதல் புதுமை மாதாவைக் குறித்துச் செய்யத் திருவுளமானார். அதெப்படியென்றால்:

அர்ச். லூக்காஸ் எழுதின சுவிசேஷம் முதல் அதிகாரத்தில் 39—ம் வசனந் துவக்கி: ஆண்டவர் தேவமாதா திருவயிற்றில் அவதரித்தவுடனே தேவமாதா எலிசபேத்தம்மாளண்டை போய் அவள் கருப்பத்திலிருந்த ஸ்நாபக அருளப்பர் புதுமையாகச் சென்மப் பாவந் தீர்ந்த உணர்வும் அடைந்து, தாய் வயிற்றில் குதித்துக் கூடினவகையாய் ஆண்டவரையுந் தேவமாதாவையும் வணங்கித் துதித்தார். அப்பொழுது எலிசபேத்தம்மாள் தேவமாதாவைப் புகழ்ந்து ஸ்திரீகளுக்குள்ளே ஆசீர்வதிக்கப்பட்டவள் நீரோ என்ற பின்பு, நீர் என்னை மினவின சத்தம் என் காதில் விழுந்தவுடனே என் வயிற்றிலுள்ள பிள்ளை மகிழ்ச்சி மிகுதியால் குதிக்கதெனறாள். ஆகையால் சேசுநாதர் தாம் புதுமை செய்யுமுன்னமே தமது மாதா புதுமை செய்யத் திருவுளமானார். பின்பு சொன்ன கலியாணத்தில் தாம் முதல் புதுமை செய்யும்போது தேவமாதாவை உத்தேசித்துச் செய்தாரல்லோ.

35.— மீளவும் இது அதிகமாய் வெளியாகும்படிக்கு யோசிக்கவேண்டியதாவது: புதுமையானது சுபாவமுறையைக் கடந்த செய்கையாகையால் அதனை முடிக்க அளவிறந்த பலம் வேண்டியதொழிய அதனைச் செய்யத் துணிவதற்கு மிகுந்த தயையும் வேண்டியிருக்கிறது. ஆகையால் சொன்ன கலியாணத்தில் சம்பவித்த புதுமை செய்யச் சேசுநாதருக்கு அளவிறந்த பல மிருந்தாலும் இன்னந் தமது காலம் வரவில்லை என்றதினால் அதனைச் செய்யத்

துணிவதற்குக் குறித்த தம் தயையின் நேரம் இல்லாதிருந்ததாம். இல்லாதாயினுந் தேவமாதாவின் தயை முந்தினதினால் அவள் தயையைக்கொண்டு துணிந்து தம் பலத்தோடு புதுமையைச் செய்தார்.

ஆகையால் அருளப்பரிடத்திலான புதுமையைத் தன் திருக்குமாரன் பலத்தைக்கொண்டு தேவமாதா செய்தாள்; கலியாணத்திலான புதுமையைத் தேவமாதாவின் தயையைக்கொண்டு திருக்குமாரன் செய்தார். இது எல்லாமாகையில் சேசுநாதர் நடத்தின முறையினால் நமக்குப் படிப்பித்ததாவது: உயிர் உடல் இரண்டும் பிழைக்க வேண்டிய யாவையுந் தப்பாதடைவதற்கு ஆசையுடையவர்களாகில் நம்மைக் கன்னிமை கெடாமல் ஈன்ற தாயை அண்டி, அவளை வேண்டிக்கொள்ளக்கடவீர்களாக. அவளும் உங்கள் வேண்டுதலைக் கேட்டு இரங்குவாளாகில் அவள் இரக்கத்தை மறுக்கமாட்டாமல், நாமும் புதுமை வேண்டினும் புதுமையே செய்து உங்களை இரட்சிப்போம் என்றாற்போல ஆச்சுதென்று சலஞ்சாதியாமல் சொன்னதை ஆராய்ந்த யாவருக்குந் தோன்றும் என்பதற்கு ஐயமில்லை.

36. இதுவே உச்சிப் பகலினும் விளக்கமாகும்படிக்கு ஒரு உவமையால் இதனை வெளிப்படுத்துவோம். அதாவது: இராசாவானவன் ஒருவன்மேல் மிகவும் நட்பு வைத்தமையால் அவனை எவராலும் எங்கும் வணங்கப்பட்டு விளங்கச் செய்வதற்கு உபாயம் என்னவென்று நெடுநாளாட் ஆராய்ந்த பின்பு, கொலுவில் வந்த நேரமெல்லாம் இராசா அவனை அழைத்துக் காதில் சில செய்திகளைச் சொல்லவும். அவனைக்கொண்டு சிலருக்கு வரிசை செய்யவும் அவன் கேட்ட மன்றாட்டை மறுக்கமாட்டாமல் அருளவுந் துவக்கினான். இதனைக் கண்ட யாவரும் இராசா அவன்மேல் வைத்த நட்பை அறிந்து, அவனை வணங்கவும் தமக்காக வேண்டி அவனே இராசாவை மன்றாடச் சொல்லவுஞ் செய்தார்கள்.

அவ்வண்ணமே சேசுநாதர் தாம் புதுமை செய்யு முன்னே தேவமாதாவைக்கொண்டு செய்வித்ததும், தாமே செய்த முதல் புதுமை தேவமாதாவின் வார்த்தையை மறுக்கமாட்டாமல் செய்ததுங் கண்டமையால், சேசுநாதர் நோக்கத்தை அறிந்து திருச்சபை தேவமாதாவை வணங்கவும், நமக்காக அவள் ஆண்டவனை வேண்டும்படிக்கு மன்றாடவுங் கற்பித்த முறையே வேதத்திற்கு ஒத்த முறை எனத்தகும். இது இப்படியாகையில் தேவமாதா இரசம் இல்லை என்றதற்கு உமக்கும் நமக்கும் காரியம் என்னவென்று சேசுநாதர் சொன்னதற்கு அர்த்தமேதெனில், பிறர் செய்யுங் கலியாணத்தில் இரசம் இல்லாதிருந்தால் அது நமக்கும் காரியமில்லை, உமக்கும் காரியமில்லையென்று காண்பித்தார். காண்பித்தாலும் அவர்களைப்பற்றி நமக்கு அதிலே காரியமில்லாதாயினும் நீர் மன்றாடினதினால் புதுமை செய்வோம் என்றாற்போல செய்தார்.

37.— இதிலே பதிதர் சுவிசேஷத்தைத் தமிழாகத் திருப்பினவிடத்தில் உனக்கு என்னுடனே காரியம் என்னவென்று எழுதிவைத்தார்கள். ஆகிலும் இது தப்பிதந் தானே. இலத்தீன் பாஷையில்(mihi et tibi) மீகி யெத்தீபி இருக்க இரண்டுங் கு வென்னும் நான்காம் வேற்றுமையாகையால் நமக்கும் உமக்கும் என்று அர்த்தமாகும். ஆகிலும் உனக்கு என்னுடனே என்று பதிதர் தமது அக்கியானத்தை ஊன்றத் தப்பிதமாய் வைத்த வசனத்தை ஒத்துக்கொண்டாலும் ஸ்திரீயே நம்மோடு ஒத்ததாய் உமக்கு அதிலே காரியமில்லை. ஆகிலும் நீர் மன்றாடினதை மறுக்கமாட்டோம் என்றாற்போல வாயிற்றென்க.

மீளவும் அத்தருணத்திலே சேசுநாதர் தாயே என்னாமல், ஸ்திரீயே நமக்கும் உமக்குங் காரியம் என்னவென்றதிலே வேறொரு திவ்விய சூழ்ச்சி உண்டென்று அறியக்கடவீர்கள். அதேதெனில், கண்ணுக்குத் தோன்றின மனுஷத்தத்துவமன்றித் தமக்குத் தேவதத்துவம் உண்டென்று எல்லோரும் அநுசரிக்க வேண்டியிருக்கையில் புதிதாய்த்

கூட்டின சீஷர்களுக்கு அதனை ஒப்பிக்கச் சேசுநாதர் நீர் நமக்குத் தாயாகித் தந்த மனுஷ சுபாவத்தைக்கொண்டு இப்புதுமையைச் செய்யக் கூடாமையால் நீர் அதிலே நமக்குத் தாயல்லவென்றாற்போல் தாயே என்னாமல் ஸ்திரீயே என்றார். பின்பு மனுஷ சுபாவத்தைத் தமக்குத் தந்த தாய் பேரில் தாம் வைத்த பட்சத்தைக் காட்ட அவள் வார்த்தையை மறுக்கமாட்டாமல் சொன்னபடி தேவ சுபாவத்தைக்கொண்டு அப்புதுமையைச் செய்தார்.

ஆகையால் இந்த வர்த்தமானத்தை நன்றாய்ப் பார்க்கில் சேசுநாதர், பதிதர் சொன்னபடி தேவமாதாவின் வார்த்தையைத் தள்ளவுமில்லை, அவளுக்கு ஆராதனை விலக்கவுமில்லை. அவள் வேண்டுதலை உடனே கேட்டுச் செய்த புதுமையால் அவளை அண்டி நாம் எல்லோரும் மன்றாடி வணங்க வேண்டுமென்று படிப்பித்தார் என்பதற்குச் சந்தேகமில்லை.

5-ம் அதிகாரம்.

சொன்ன வணக்கப் பழமை.

38.— இன்றையவரைக்குஞ் சொன்ன யாவையும் ஆராய்ந்து பார்க்கில், நாம் தேவமாதாவுக்கும் மற்ற மோக்ஷவாசிகளுக்குஞ் செய்யும் ஆராதனை வேதத்தில் கற்பிக்கப்படாததாயினும் வேதத்திற்கு ஒத்ததாய் எவருக்குந் தோன்றப்படுமே. அதற்குப் பதிதர் நியாயத்தைக் காணாத படிக்குக் கண்ணை மூடிக் கையால் தடவினாற்போல, சொன்னதற்குச் சரியான மறுமொழி சொல்ல அறியாமல் அப்பாலே தாண்டி அப்போஸ்தலர்மார் நாளிலேயும், திருச்சபையின் முதற்காலத்திலேயுமில்லாமல், கர்த்தர் பிறந்த 500 வருஷத்திற்குப் பிறகு புதிதாய் முளைத்த வணக்கம்

இதாகையால், ஆகாதென்று சாதிக்கிறார்கள். ஆகிலுங் கர்த்தர் பிறந்த 1517 வருஷத்திற்குப் பிறகு லுத்தேர் மதம் முளைத்ததானாலும் அதனைத்தாம் மெய்யென்று அநுசரிப்பானேன் ?

39— ஆகிலும் இதிலே தெளிவாகும்படிக்குப் பதிதர் சொன்னதை அறியக்கடவீர்கள். லுத்தேர் சீஷர்களுங் கல்வீன் சீஷர்களும் பிதற்றின அபத்தமேதெனில், கர்த்தர் திரு அவதாரஞ் செய்து பிறந்த 500 வருஷமட்டுந் திருச்சபை வழுவா முறையோடே விளங்கின பின்பு, முழுதுங் கெட்டு அழிந்து, ஆயிரம் வருஷமும் அழிவாகக் கிடந்து, கர்த்தர் பிறந்த 1517-ம் வருஷம் லுத்தேர் சகல பாவத்தோடு எழுப்பின துர்ச்சமயத்தைக்கொண்டு திருச்சபை மீளவும் விளங்கத் துவக்கினது என்பார்கள்.

ஆகையால் அந்த முதல் 500 வருஷத்திலே திருச்சபையிலே வழங்கினது மாத்திரமே மெய்யென்றும், ஆண்டவர் அருளிச் செய்த வேதத்திற்கு ஒத்ததென்றுஞ் சொல்லவேண்டுமொழியப் பின்பு புதிதாய் வழங்கின முறை எல்லாம் அபத்தமென்றும், அக்கியானமென்றும், இக்காலத்துப் பதிதர் எல்லோருஞ்சொல்லுகிறார்கள். விலைமாதர் முகத்தோடு இகழ்ச்சிக்கு அஞ்சாமல் பிதற்றி வெட்கமில்லாமல் பதிதர் சொல்லும் இந்தத் தப்பறை இனிமேல் மறுத்து நெருப்பில் போட்ட வெள்ளைப் பொன் அழிவது போல, நாம் சொல்லத்தகும் நியாயத்தால் அவர்கள் தப்பறை எல்லாம் அழிந்து, சத்திய வேத முறைமையை செம்பொன்னாக விளங்கச் செய்வோம்.

இங்கேயோவெனில், பதிதர் சொன்னதைக் கொண்டு பதிதனைக் குத்தி எளிதாய் வெல்வதற்கு அவர்கள் பிதற்றின தப்பறையை மெய்யாக ஒத்துக்கொண்டதுபோலப் பேசி, முதல் 500 வருஷத்திலே தானே திருச்சபையில் வழங்கின முறைமைமாத்திரம் வேதத்திற்கு ஒத்த முறைமை என்றாலும், அக்காலத்திலேதானே தேவமாதா ஆராதனையும்,மோக்ஷவாசிகள் வணக்கமும் வழங்கினதென்று

நாமே ஒப்பித்தால் அதனைப் பதிதரும் ஒத்துக்கொண்டு புதிதாய் முளைத்த முறை என்னுமல் பழைய வேத முறைமை என்று ஒப்பித்தாற்போல் ஆகுமல்லோ.

40. —ஆகையால் சேசுநாதர் பிறந்த 500 வருஷத்திற்குள்ளாக விளங்கின வேதபாரகர் இந்த விஷயத்திலே எழுதி வைத்ததைச் சொல்லிக் காட்டுவோம். நெஸ்தோரியுஸ் என்பவன் சொன்ன பல அபத்தங்களுக்குள்ளே சேசுநாதரை ஈன்ற பரம தாயைச் சர்வேசுரனுடைய மாதாவென்று சொல்லக்கூடாது என்றான். அதை மறுக்கவேண்டுமென்றமையால் அர்ச். பாப்பு செலெஸ்தீன் என்பவர் உத்தாரத்தின்படியே எபெசு என்னும் நகரிடத்து 431-ம் ஆண்டில் ஆனி ௴ 22-ம் தேதியில் பல வேதபாரகரோடே இருநூறு மேற்றிராணியார்களுங் கூடி, நெஸ்தோரியுஸ் என்பவன் சொன்ன அபத்தங்களை வேதத்திற்கு ஏற்காததென்று சபித்துச், சேசுநாதர் தாயைச் சர்வேசுரனுடைய தாய் என்றும், தேவமாதா என்றுஞ் சொல்லக் கட்டளையிட்டார்கள்.

மீளவும் நெஸ்தோரியுஸ் என்பவன் சொன்ன தூஷணத்திற்கு எதிராகத், தேவதாயை உலகமெல்லாம் விசேஷமாய் எப்போதுந் துதிக்கும்படிக்குத், திரு அவதார நாளில் சம்மனசு வாயினால் துவக்கின பிரியதத்த மந்திரம் ஜெபிக்கக் கட்டளையிட்டார்கள். அதிலே பிரியதத்தத்தினாலே பூரண மரியாயே வாழ்க * கர்த்தர் உம்முடனே பெண்சாதிகளுக்குள்ளே ஆசீர்வதிக்கப்பட்டவள் நீரோ என்கிற மட்டுங் கபிரியேல் என்னுஞ் சம்மனசு சொன்ன மங்களம். மீளவும் பெண்சாதிகளுக்குள்ளே ஆசீர்வதிக்கப் பட்டவளும் நீரோ, உம்முடைய திரு வயிற்றின் கனியாகிய சேசு ஆசீர்வதிக்கப்பட்டவருமாமே என்கிற மட்டும் எலிசபேத்தம்மாள் சொன்ன மங்களம். அர்ச். மரியாயே,

* இது வேத வாக்கியத்தின் அர்த்தத்திற்குச் சரியென்கிறதற்குப் பச்சிமகாண்டம் 7-ம் இலம்பகம் அத்தாட்சி.

சர்வேசுரனுடைய மாதாவே, பாவிகளாய் இருக்கிற எங்களுக்காக. இப்பொழுதும் எங்கள் மரண நேரத்திலும் வேண்டிக்கொள்ளும் என்று முன் சொன்ன திருச்சபை அன்று கட்டளையிட்ட மங்களமாக மந்திரம் முடிந்ததாமே.

ஆகையால் தேவமாதாவுக்குத் தோத்திரமாகிய இந்த மந்திரத்தைத் தேவமாதாவைப் பகைத்த இந்நாட் பதிதரும் மறுத்தாலும், 431-ம் ஆண்டில் அவர்கள் சொன்னபடி வழுவாதிருந்த திருச்சபை கட்டளையிட்டதென்றும், அப்போது தானே தேவமாதாவை வணங்கின முறையும், அவளை நமக்காக வேண்டிக்கொள்ளச் சொல்லி மன்றாடின முறையும் வழங்கினதென்றுஞ் சொல்லி, அதனால் தேவமாதா வணக்கம் வழுவாத திருச்சபை முறைமை என்று பதிதருஞ் சொல்லக்கடவார்கள்.

41.— மீளவுங் கர்த்தர் பிறந்த 430-ம் வருஷத்தில் மரணத்தை அடைந்த அர்ச். அகுஸ்தீன் உண்டாக்கின தியானப் புஸ்தகத்து 24-ம் அதிகாரத்தில் எழுதினதாவது: சகல அர்ச்சியசிஷ்டவர்களே, நீங்கள் பாக்கியமுடையவர்கள். அழிவுள்ள இவ்வுலகென்னும் பெருங்கடல் கடந்து நிலையும், சுகமும், அன்பும், வழங்கின மோக்ஷக் கரையில் சேரப் பேறு பெற்று அடைந்தீர்களே, நீங்களே அச்சமின்றி, அலைவின்றி, எக்காலத்துங் களிக்கவும், மகிழவுஞ் செய்வீர்கள். ஆகையால் நான் இங்கே உங்கள் எல்லோரையும் மன்றாடி, உங்களுக்கு அச்சமில்லாமையால் அஞ்சின எங்களைப் பாதுகாக்கவும், அழியாத பேரின்ப பாக்கியம் உங்களுக்குக் குறையமாட்டாமையால் நாங்கள் அடைந்த பல துன்ப நிர்ப்பாக்கியங்களுக்கு இரங்கி, எங்களைக் காக்கவும் உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்.

உங்களைத் தெரிந்தவருமாய், உங்களை மோக்ஷவாசிகளாகச் சேர்த்தவருமாய்த், தம் அழகிய பேரின்பத்தால் நிரப்பினவருமாய்த், தம் நிலையினால் நன்மையில் நிறுத்தினவருமாய்த், தன் தரிசனத்தினால் வாழ்வித்தவருமாய் இருக்கிற நாதர் திரு முகத்தைப் பார்த்து நீங்கள் எங்க

ளுக்கு இரங்க மன்றுடுவேன். பூவுலகாகிய கடலின் துன்ப வலையினுள் அலையும் எங்களை நினைக்கவும், எங்களுக்கு உதவியாகவுஞ் செய்வீர்கள். இடைவிடாமலும், முடிவில் லாமலுந் துயரில் அமிழ்ந்தின பாவிகளாய் இருக்கிற எங் களுக்காக ஆண்டவரை வேண்டவும் மன்றுடவுங் கடவீர் கள் என்றூர்.

மீளவும் அதிலேதானே 40-ம் அதிகாரத்தில் எழுதி னதாவது: மாசில்லாக் கன்னியுமாய், அர்ச். தேவமாதா வுமாய், என் ஆண்டவராகிய சேசுகிறீஸ்துவை ஈன்ற தாயு மாயிருக்கிற அர்ச். மரியாய் என்பவளே, ஆண்டவருக்குத் தேவாலயமாக நின்றவளாகி, அவரை எங்களுக்காகவேண்டி மன்றுடத் தயை புரிந்தருளவும், அர்ச். மிக்கயேலே, கபிரி யேலே, இரபயேலே, மற்ற சம்மனசு சபைகளே, பிதாக் களே, தீர்க்கதரிசிகளே, அப்போஸ்தலரோ, சுவிசேஷகரோ வேதசாட்சிகளே, துதிக்கிறவர்களே, குருக்களே, சந்நியா சிகளே, கன்னிகளே, சகல மோக்ஷவாசிகளே, உங்களைத் தெரிந்து மோக்ஷத்திலே பேரின்ப தரிசனத்தால் உங்களை வாழ்விக்கும் நாதர் திரு முகத்தைப் பார்த்து, என்மேல் இரங்கி ஆண்டவரை நோக்கி எனக்காக வேண்டிக்கொள்ள வேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறேன் என்று அர்ச். அகுஸ்தீனு எழுதி வைத்தார்.

42.—இவருக்கு முன்னே 420-ம் ஆண்டில் இறந்த அர்ச். எரோனிமுஸ் என்கிறவர் கன்னி எவுஸ்தோக்கி என்பவளுக்கு எழுதின 27-ம் நிருபத்து 14-ம் அதிகாரத் தில் முன் இறந்த பாவுல் என்பவளை நோக்கிச் சொன்ன தாவது: பாவுல் என்பவளே, வாழ்க. உன்னை வணங்கின அடியோர்க்குள்ள தளர்ந்த மூப்பினை உன் வேண்டுதலி னுல் காப்பாயாக. நீ தளராமல் தெளிந்து பிடித்த விசுவா சமும், வழுவாமல் நடந்து செய்த தருமங்களும் உன்னைச் சேசுகிறீஸ்துவோடே சேர்த்ததாகையால் அங்கே ஆண்ட வரை முகமுகமாய்க் கண்டு நீ கேட்ட மன்றுட்டை எளி தாய் அடைவாய் என்றூர்.

மீளவும் இவருக்குமுன்னே 407-ம் வருஷத்தில் இறந்த அர்ச். யுவான் கிறிசோஸ்தொமுஸ் என்பவர் அர்ச். சின்னப்பர் கொரிந்தியருக்கு எழுதின 2-ம் நிருபத்திற்கு வியாக்கியானம் பண்ணின புஸ்தகத்தில் 26-ம் பிரசங்கத்து முடிவில் எழுதினதாவது: சிலுவையில் அறையுண்டவருக்கு அடிமைகளாகிய அர்ச். இராயப்பர் சின்னப்பர் இவர்கள் திருமேனி வைத்த கல்லறையை சேவிக்கவருங் கூட்டத்தினால் அது அரசர் வாழும் அரண்மனையினும் விளங்கினதல்லோ ? பூஷணம் அணிந்து, முடியைச் சூடினவர்களும், நெடுவழி நடந்து சென்று, கீழே விழுந்து, இந்த அர்ச்சியசிஷ்டவர்களைத் தமக்குவேண்டி ஆண்டவரை மன்றாடச் சொல்லிப் பிரார்த்தித்துக்கொள்ளுகிறார்கள். தொழிற் செய்து உயிர் பிழைத்திருந்த அர்ச் சின்னப்பரும், இராயப்பரும் இறந்தபின்பு, தமக்கு உதவியாகும்படிக்குக் கிரீடஞ் சூடி, ஆள்பவர்கள் முதலாய் மன்றாடுகிறார்கள் என்றார்.

43.—மீளவும் அதற்கு முன்னே 397-ம் வருஷத்தில் இறந்த அர்ச். அம்புரோசி என்பவர் கைம்பெண் முறைமை என்னும் புஸ்தகத்தில் எழுதினதாவது: ஆண்டவர் நமக்கு உதவியாகக் கட்டளையிட்ட சம்மனசுகளை நமக்காக வேண்டும்படிக்கு நாமே வேண்டிக்கொள்ளக்கடவோம். நமக்கு உதவுவார்கள் என்ற அடையாளமாக இங்கே தம் திருமேனியை வைத்த சாட்சிகளையும் மன்றாடக்கடவோம். தாம் குறை ஏதாகிலுஞ் செய்திருந்தாலும் அதுகளைத் தாங்கள் சிந்தின இரத்தத்தினால் கழுவினவர்களாகையால் அவர்களே நம்முடைய பாவங்களைத் தீர்ப்பதற்கு ஆண்டவரை மன்றாட வல்லவர்களாய் இருக்கிறார்கள். தம் இரத்தத்தைச் சிந்தித் சர்வேசுரன் வேதத்திற்குச் சாட்சியாக இருந்தவர் இவர்கள்தாமே. நமக்குத் தலைவராக நின்றவர்கள் இவர்கள் தாமே. நாம் நடக்கும் முறைகளை நோக்கி அறிந்தவர்கள் இவர்கள் தாமே. ஆகையால் நமக்குள்ள குறைபாடுகளைத் தீர்க்க மன்றாடினவர்களாக அவர்களை

எண்ணி, எக்காலமும் பிரார்த்தித்துக்கொள்ளக் கூசவுந் தேவையில்லை என்றார்.

44.— மீளவும் அதற்குமுன்னே 393-ம் ஆண்டில் இறந்த அர்ச். கிறகோரியு நிசெனுஸ், வேதசாட்சியாகிய அர்ச். தேயோதோரனுக்குத் தோத்திரமாகச் செய்த பிரசங்கத்தில் அவரைப் பார்த்து எழுதினதாவது: இந்நாள் வரைக்குங் குறையுங் கேடுமின்றி நாங்கள் வாழ்ந்திருப்பது உன் வேண்டுதலினால் எங்களுக்கு வந்த சகாயமென்று தோத்திரம் பண்ணுகிறோம். இனி வருங்காலத்து அழிவின்றி எங்களைக் காப்பாயாக என்று மிகவும் மன்றாடுகிறோம் என்றார். 390—ம் வருஷத்தில் மரித்த அர்ச். கிறகோரியு நசியஞ்செனேனெனில் அர்ச். சிப்பிரியானுக்குத் தோத்திரப் பிரசங்க முடிவில் எழுதினதாவது: உயரத்தினின்று நீயே எங்களைப் பட்சமாய் நோக்கி எங்கள் வார்த்தையுஞ் செய்கையும் வழுவாதபடிக்கு நடத்துவாயாக என்றார்.

மீளவும் 378-ம் ஆண்டில் இறந்த அர்ச். எப்பிரோம் என்பவர் வேதசாட்சிகளைப் புகழ்ந்து சொன்ன பிரசங்கத்தில் எழுதினதாவது: இரட்சித்த நாதருக்கு வேண்டி மனம்பொருந்தி கொடிய உபாதைகளை அநுபவித்துப் பிராணனைத் தந்த தேவபத்தியளவாக ஆண்டவரோடு ஒருமித்துக் கூடி வாழும் வேதசாட்சிகளே, தேவ பத்தியாகிய திருக் கதிர் வீசுங் கிறீஸ்துவின் இஷ்டப் பிரசாதம் எங்கள் இருதயத்துட் புகுந்து விளங்கும்படிக்குத் தூயரும், ஈனமும், நிறைந்த பாவிகளாகிய எங்களுக்காக வேண்டி, நீங்களே ஆண்டவரை மன்றாடுவதற்கு இரங்கவேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறோம் என்றார். அதற்கு முன்னே 293-ம் ஆண்டில் இறந்த நெகித்தாரி என்பவர் அர்ச். தேயோதோர் என்பவரைப் புகழ்ந்து சொன்னதாவது:

வேதசாட்சிகளினுள் விளங்கும் பெருஞ் சுடரே, மற்ற மோக்ஷவாசிகளினுள் மாட்சியால் உயர்ந்த திரு ஒளி

யே, ஆண்டவருடைய பிரசாதமே, திருச்சபைக்கு உறுதிக் காவலே, எங்கள் குறைபாடுகளையும், தளர்ந்த இழிவுகளையும், மறவாதவராய் இடைவிடாமல் எங்களுக்காக வேண்டி, ஆண்டவரை மன்றாடச் சலிக்கவேண்டாம் என்றார். மீளவும் 254-ம் வருஷத்தில் இறந்த ஓரிசென் என்பவர் புலம்பல் என்னும் புஸ்தகத்தில் எழுதினதாவது: நானே கீழே தெண்டனாக விழுந்து, நான் செய்த பாவத்தின் மிகுதியால் சர்வேசுரனை மன்றாட அஞ்சியிருக்க எனக்கு உதவியாகச் சகல மோக்ஷவாசிகளை வேண்டிக் கொள்ளத் தொடங்குவேன். அர்ச்சியசிஷ்டவர்களே துன்பத்தில் அழுந்தின அடியேனுக்கு ஆண்டவர் தயை செய்யும்படிக்கு நீங்களே வேண்டிக்கொள்ள வேண்டுமென்று மிகவும் மனம் வருந்திக் கண்ணீர்விட்டு அழுது உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன் என்றார்.

45.— குறித்த அளவு விரிந்து பெருகுமென்றும், கேட்டவர் சலித்து வருந்துவார் என்றும் அஞ்சேனையின் இத்தகைப்பட்ட உதாரணங்களை நூறு நூறாகக் குவித்துக் காட்டுவது எளிதாம். ஆகிலுஞ் சொன்னது சாலுமென்று இதிலே ஆலோசிக்கக்கடவதாவது : நாம் இற்றைவரைக்குஞ் சொன்னதெல்லாந் திரு அவதாரமாகி முதல் 500 வருஷத்திற்குள்ளே வேதபாரகர் எழுதினதாம். அவர்கள் எல்லோரும் மோக்ஷவாசிகள் வணக்கம் வழங்கினதாக எழுதினார்கள். ஆகையால் மோக்ஷவாசிகளைத் துதித்து நமக்காக ஆண்டவரை மன்றாடும்படிக்கு அவர்களை வேண்டிக் கொண்டு, செய்யப்படும் வணக்கம் முதல் 500 வருஷத்துத் திருச்சபையில் வழங்கினதாம்.

ஆகிலும் முதல் 500 வருஷத்துத் திருச்சபையில் வழங்கின முறை எல்லாம் நல்லதென்றும், வேதத்திற்கு ஒத்ததென்றும் பதிதருஞ் சொல்லுகிறார்கள். ஆகையால் அக்காலத்தில் வழங்கின மோக்ஷவாசிகள் வணக்கம் நல்லதென்றும், வேதத்திற்கு ஒத்ததென்றும் பதிதருஞ் சொல்லக்கடவார்கள். சொல்லமாட்டார்களாயின் அவர்களை மதி

கெட்டவர்கள் என்றும், அக்கிரமக் கசடர் என்றும், சலஞ் சாதித்தவர் என்றும், தப்பறைக்கு அஞ்சாதவர்கள் என்றும், நியாயத்தை உதைத்தவர்கள் என்றும், தமக்குத் தாம் கண்ணைப் பிடுங்கின குருடர் என்றும், அக்கியானிகள் என்றும், வஞ்சகர் என்றும், சகல பாவத்திலும் அமிழ்ந்தினவர்கள் என்றும் உலகமெல்லாஞ் சொல்லக்கடவதாமல்லோ.

6-ம் அதிகாரம்.

சுரூப வணக்க விளக்கம்.

46.— வானோருக்கரசியும் மனிதருக்கு உறுதியும் பரிசுத்தக் கன்னியும் தேவமாதாவுமாயிருக்கிற அர்ச். மரியாய் என்பவளையும், மற்ற மோக்ஷவாசிகளையுந் திருப்புகழாகத் துதித்து நமக்காக ஆண்டவரை அவர்கள் வேண்டிக்கொள்ள மன்றாடி, அவர்களுக்கு நாம் செய்யப்படும் வணக்கமே உத்தமமென்றும், வேதத்திற்கு ஒத்ததென்றும், திருச்சபையில் எப்போதும் வழங்கினதென்றும் ஒப்பித்தாயிற்றல்லோ. இம்முகத்து இழிபடத் தோற்ற பதிதர் அப்பாலே தாண்டித் தேவமாதாவையும் மற்ற மோக்ஷவாசிகளையுஞ் சொன்னபடி வணங்குவது நல்லதாயினும், அவர்கள் உருவங்களையும், சேசுநாதர் உருவத்தையும், சிலுவை முதலானதுகளையும் உண்டாக்கி வணங்குவது அக்கியானம் என்பார்கள். அதற்கு மோயீசன் 2-ம் புஸ்தகத்து 20-ம் அதிகாரம், 3-ம் வசனத்தில் ஆண்டவர் திருவுளம் பற்றினதாவது: நம்மையல்லாதே புறத் தேவர்கள் உனக்கு இல்லாமல் போவதாக. விக்கிரகங்களையும் உருவங்களையும் உனக்குச் செய்யாதிருப்பாயாக என்றார். ஆகையால் விக்கிரகங்களையும் உருவங்களையும் உண்டாக்கி

அதுகளை வணங்குவது வேதத்தில் ஆண்டவரால் விலக்கப்பட்ட அக்கியானமாமே என்று பதிதர் சொல்லுகிறுர்கள்.

ஆயினும் அப்படியே ஆண்டவர் முழுதும் உருவங்களை விலக்கினர் என்று நாமும் ஒத்துக்கொண்டாலும் இதனுலாவதென்ன? பழைய வேதத்தில் இது விலக்கின தொழியச் சேசுநாதர் ஸ்தாபித்த திருச்சபையிலும் விலக்கினதென்று சொல்லவேண்டுமோ? இல்லையே. பழைய வேதத்தில் மூன்றுங் கற்பனையாகச் சனிக்கிழமைத் திருநாள் என்று வேலைசெய்ய ஆண்டவர் விலக்கியிருக்கச் சேசுநாதர் திருச்சபையில் இது விலக்கினதில்லை என்று நாமும் பதிதருங் கூடச் சனிக்கிழமையில் திருநாளை ஆசரியாமல் ஞாயிற்றுக்கிழமையில் கொண்டாடுகிறோமல்லோ? பழைய வேதத்தில் சனிக்கிழமை வேலை செய்வது பாவமாகி இப்பொழுது அது பாவமல்ல.

அப்படியே பழைய வேதத்தில் சுரூப வணக்கம் பாவமாகி இப்பொழுது அதுவும் பாவமல்ல. முன் சொன்னதை பதிதரும் ஒத்துக்கொண்டதின்மேல் பின் சொன்னதை ஒத்துக்கொள்ளாமலென்ன? அதற்கு அவர்கள் ஆண்டவர் பழைய வேதத்தில் விலக்கின சுரூப வணக்கம் இப்பொழுதும் விலக்கினதல்லவென்று வேதத்தில் எழுதினது எங்கே என்று கேட்கிறுர்கள். ஆகிலும் ஆண்டவர் பழைய வேதத்தில் விலக்கின சனிக்கிழமை வேலை இப்பொழுதும் விலக்கினதல்லவென்று வேதத்தில் எழுதினது எங்கே என்று பதிதர்தாமே சொல்லக்கடவார்கள். எங்கும் எழுதியிருக்கவில்லை என்று நிச்சயமாகையில் சனிக்கிழமை விட்டு ஞாயிற்றுக்கிழமையை திருநாளாக நம்மோடு கூடப் பதிதருங் கொண்டாடுகிறபோது வேதத்தில் எழுதியிராமலே மற்றத் திருச்சபையோடு அவர்களுஞ் சுரூபங்களை வணங்காமலென்ன?

இதற்குப் பதிதர் சொல்லுந் தன்மையாவது: பழைய வேதத்தில் ஆண்டவர் உலகம் உண்டாக்கின சகாயத்தை நினைக்கும்படிக்கு ஞாயிறு துவக்கி ஆறு நாளாய் வெள்ளி

மட்டும் வானம் முதல் எல்லாவற்றையும் உண்டாக்கின பின்பு, சனிக்கிழமை அவர் இளைப்பாறினதுபோல மனிதரும் இளைப்பாறி அன்று திருநாளாகக் கொண்டாட நியாயம் என்றும், பழைய வேதத்தில் கற்பித்திருந்ததாம். இப்பொழுது சேசுநாதர் நம்மை இரட்சித்த சகாயத்தை நினைக்கும்படிக்கு அவர் நமக்காகப் பாடுபட்டுச் சிலுவையில் அறையுண்டு மரித்தடக்கப்பட்ட மூன்றாம் நாள் ஞாயிற்றுக்கிழமையில் கல்லறையைவிட்டெழுந்தருளினார் என்றும், இஸ்பிரீத்துசாந்துவாகிய சர்வேசுரன் ஞாயிற்றுக்கிழமையில் திருச்சபையிலெழுந்தருளினார் என்பதையும் பற்றி, முன் கற்பித்திருந்த சனிக்கிழமையை விட்டு, ஞாயிற்றுக்கிழமையை திருநாளாகக் கொண்டாட நியாயத்தின்படியே திருச்சபைக் கட்டளையிட்ட முறைமை என்று பதிகர் சொல்ல வருகிறார்கள். அவர்கள் சொன்னதை நாமுஞ் சொல்லுவது நியாயந்தானே.

ஆகிலும் அப்படியே பழைய வேத நாளிலே அரூபியாய் நின்ற சர்வேசுரனுஞ் சம்மனசுகளுமல்லாமல் உருவமுள்ளவர் ஒருவராயினும் அப்போது மோக்ஷத்தில் இல்லாமையால், அந்நாளிலே சுரூப வணக்கமாகாதென்று வேதத்தில் விலக்கப்பட்டதாமே. சேசுநாதர் திரு அவதாரஞ் செய்து, நம்மை இரட்சித்த பின்பு, அரூபியாய் நின்ற சர்வேசுரன் உருவமாகிச், சர்வேசுரனும் மனுஷனும் ஒன்றாகிய சேசுநாதரும், அவரை ஈன்ற தேவமாதாவும், மட்டில்லாத அர்ச்சியசிஷ்டவர்களுங் கண்டிப்புள்ளவர்களாகி மோக்ஷத்திலே வாழ்ந்திருக்க அவர்களை நாம் நினைக்கவும், வணங்கவும், வேண்டிக்கொள்ளவும் அவர்களைக் காட்டின உருவங்களைச் செய்து, முறையோடு வணங்க நியாயத்தின்படியே திருச்சபை கட்டளையிட்ட முறைமை என்று சொல்லத்தகுமே.

இந்நாளிலே ஞாயிற்றுக்கிழமை ஓய்வு நாளாகவும், உருவங்களை வணங்கவும் வேதத்தில் எழுதியிராமலும் சேசுநாதர் ஸ்தாபித்த திருச்சபை கட்டளையிட்டதினால்,

சேசுநாதர் திருச்சபைக்குப் படிப்பித்த முறை என்று எல்லோரும் விசுவசித்து அநுசரிக்கக்கடவோம். இதிலே பதிதர் நம்மோடு ஒன்றை ஒத்துக்கொண்ட பின்பு, மற்றொன்றை ஒத்துக்கொள்ள மாட்டாமல் சலஞ்சாதிப்பது ஆங்காரமல்லவோ? அப்படியே லுத்தேர் முதலாய்ச் சந்தேகமில்லாமற் சொன்னான். தன்னை அல்லாத சில பேர்கள் நாம் வணங்குஞ் சேசுநாதர் சுரூபங்களையும், தேவமாதா மோக்ஷவாசிகள் உருவங்களையும் இடித்து உடைத்து அனலிற் சுட்டார்களென்று அறிந்து மிகவும் அவர்களைக் கோபித்து, 1525-ம் ஆண்டில் அவர்களைப் பரலோகத் தீர்க்கதரிசிகள் என்று நகைப்பாகச் சொல்லி, அவர்களுக்கு விரோதமாக ஒரு புஸ்தகத்தை உண்டாக்கினான்.

அதை இரு வகுப்பாகப் பிரித்து முதல் வகுப்பிலே அரூபியான சர்வேசுரன் உருவமுடையதென்று, அவருக்கு வைத்த சுரூபங்களை மாத்திரம் பழைய வேதத்திலே விலக்கினதொழியக், கிறீஸ்துவின் சுரூபங்களும், சிலுவை உருவமும், தேவமாதா மற்ற மோக்ஷவாசிகள் வடிவுகளும் விலக்கினதல்லவென்றும், அதுகளை விலக்கினவர் யூதராக வேண்டுமொழியக் கிறீஸ்துவர்களல்லவென்றுஞ்சொல்லக்கடவோம் என்று விரிவாகச் சொல்லி ஒப்பித்தான். இதோ லுத்தேர் சாட்சியாக முதலாய் அந்த வேத கற்பனையால் பழைய வேதத்திலொழிய இப்போது நாம் வணங்குஞ் சுரூபங்கள் விலக்கப்பட்டதல்ல.

47.— ஆயினும் முன் சொன்ன வேத கற்பனையிலே ஆண்டவர் முழுதுஞ் சுரூபங்களை விலக்கினவருமல்ல என்று நாம் இங்கே ஒப்பிப்போம். அதெப்படியென்றால், இந்நாட்டில் என்னை அரசனல்லாதே வேறே அரசனை வணங்கவேண்டாம் என்று இராசா கற்பித்தமையால், தன்னை ஈன்ற பிதாவையும், படிப்பித்த உபாத்தியாயனையும் அறநெறி நிறுத்திய குருவையும், மற்றப் பெரியோரையும் வணங்க விலக்கினான் என்றால் மதிகெட்ட ஒருவன் சொல்லுந் தன்மையாகுமல்லவோ? ஆகையால் சொன்ன

வேத உதாரணத்தால் சர்வேசுரன் விலக்கினதாவது: நம்மையன்றிப் பல தேவரை வணங்கவும் வேண்டாம், பல விக்கிரகங்களையும் உருவங்களையுந் தேவர்களாக வைத்து வணங்கவும் வேண்டாம் என்று விலக்கினதொழிய முழுதும் உருவங்களை விலக்கினவரல்ல. இல்லாவிட்டால் அந்தப் புஸ்தகத்திலேதானே 25-ம் அதிகாரத்தில் எழுதப்பட்டபடி ஆண்டவர் தாமே உருவில்லாத சம்மனசுகளைக் காட்டின இரு உருவங்களைத் தூய தங்கத்தால் உண்டாக்கச் சொல்லி, கோயிலிலே பூசை பண்ணுமிடத்து வேதம் எழுதின இரு கல்லை வைத்த பேழையின்மேலே வைக்கச் சொல்லிக் கட்டளையிடுவானேன்?

உருவம் எல்லாம் அக்கியானமாகில், அந்த அக்கியானத்தைத் தாமே தமக்குப் பூசை வழங்கின விடத்து வைக்கச் சொல்லுவாரோ? இல்லையே. ஆகையால், தம்மையல்லாத தேவராக வணங்கத்தகும் உருவங்களை விலக்கினதொழியக் கோயிலிலே முதலாய்ப் புறத் தேவராக வணங்காமல் வைத்த உருவங்களை விலக்கினவரல்ல. அப்படித்தானல்லோ அர்ச். சின்னப்பர் திமோத்தேயுஸ் என்பவருக்கு எழுதின முதல் நிருபத்து முதல் அதிகாரம் 17-ம் வசனத்தில் சர்வேசுரன் ஒருவருக்கே சங்கையும், புகழுந் தகும் என்றார். என்றாலும், மற்றவர்க்கு எவ்வகைச் சங்கையாயினும் தகாது என்னலாமோ? தகாதெனில், பிதாவையும், மாதாவையுஞ் சங்கித்திருப்பாயாக என்று நாலாங் கற்பனையில் சொல்வதென்ன?

எல்லோரையுஞ் சங்கைசெய்யுங்கள் என்று அர்ச். இராயப்பர் முதல் நிருபத்து 2-ம் அதிகாரத்தில் 13-ம் வசனத்தில் எழுதினதென்ன? ஆகையால், அர்ச். சின்னப்பர் சொன்னதற்கு அர்த்தமேதெனில், தேவ சங்கையும் தேவ புகழுஞ் சர்வேசுரனுக்கொழிய மற்ற ஒருவருக்குந் தகாதென்பது ஆகுமல்லாமல், வேறே எவ்வகைச் சங்கையாயினும் பிறருக்குச் செய்யலாகாதென்று அவர் சொன்னதாகச் சொல்லவும், கருதவுங் கூடாது. அப்படியே தேவராக

உருவங்களை ஆக்கவும், வணங்கவும், வேண்டாம் என்று சர்வேசுரன் விலக்கினுரென்று சொல்ல வேண்டுமொழிய, மற்ற எவ்வகை உருவங்களையுஞ் செய்ய வேண்டாமென்றும், அதுகளுக்கு எவ்வகை வணக்கமும் இடவேண்டாமென்றும் விலக்கினதாக எண்ணத் தேவையில்லையே.

48.-இதெல்லாம் இப்படியாகையில் திருச்சபை உருவங்களைச் செய்து வணங்கும் வகையை ஆண்டவர் விலக்கினவரல்லவென்று ஒப்பிப்போம். அதெப்படியெனில் உருவங்களுக்குச் செய்த வணக்கம் அதுகளை விட்டு அப்பாலே நிற்கும் பொருளைச் சேராமல் அவ்வுருவங்களைச் சேர்ந்ததாகில் அக்கியானந்தானே. அவ்வுருவங்களை அடையாளமாக வைத்துச் செய்த வணக்கம் அப்பாலே தாண்டிச் சேரும் பொருள் அவ்வணக்கத்துக்குரியதல்லவெனில் அதற்குச் செய்யும் வணக்கமும் அக்கியானந்தானே. ஆகையால் தேவன் அல்லாதவனைத் தேவனுக எண்ணி, அவன் உருவத்தை வணங்கினுல் அக்கியானம் என்னத்தகுமே.

நாமோவெனில் சேசுநாதர் உருவை நோக்கிச் செய்யும் வணக்கம் அதிலே நில்லாமல், அவ்வுரு அடையாள மாத்திரமாகக் காட்டின நாதரைச் சேருதலினுலுஞ் சிலுவைக்குச் செய்த வணக்கமுஞ் சிலுவையில் நில்லாமல் நமக்காக வேண்டிச் சிலுவையில் அறையுண்டு இறந்த நாதரைச் சேருதலினுலும் முதல் வகை அக்கியானமில்லை. மீளவுஞ் சேசுநாதர் மெய்யான தேவனுகையால் அவ்வுருவங்களுக்கு நாம் செய்யுந் தேவ வணக்கம் அவருக்குரியதாகக்கொள்ள இரண்டாம் வகை அக்கியானமுமில்லை. அப்படியே தேவ மாதாவையும், மற்ற மோக்ஷவாசிகளையுங் குறித்து வைத்த உருவங்களை வணங்கினபோதும், அதுகளை அடையாளமாக மாத்திரம் எண்ணுவதொழிய, தேவ வணக்கஞ் செய்யாமல், போன அதிகாரத்தில் சொன்னபடியே தேவ மாதாவுககுரிய உத்தம ஆராதனையும், மற்ற மோக்ஷவாசி

களுக்குரிய வணக்கமுமாத்திரஞ் செய்தமையால் இரு வகை அக்கியானமும் இல்லை.

இது இன்னம் வெளியாகும்படிக்கு நாம் நற்கருணையை வணங்கும் முறையைப் பார்க்கக் கடவோம். அதெப்படியென்றால், திவ்விய நற்கருணையை நாம் வணங்கும் போது, அதுவே சேசுநாதரென்று வணங்குகிறோம் அல்லோ? அப்படியே சேசுநாதர் சுரூபங்களையும், அவர்தாமென்று வணங்கினோமாகில் அக்கியானந்தானே. நாமோவெனில், நற்கருணை சேசுநாதருக்கு அடையாளமாத்திரம் ஆகாமல் அவர்தாம் அங்கே இருப்பவரென்று நிச்சயமாகச் சொல்லுவதொழியச் சேசுநாதர் சுரூபங்கள் அவரல்லாது அவரைக்காட்டும் அடையாளமாத்திரமென்று ஸ்திரமாய் எண்ணி, வைத்த சுரூபங்களால் சேசுநாதரை நினைத்து, அந்தச் சுரூபங்களில் நில்லாமல் அவரை வணங்குகிறோம் அல்லோ?

இத்தன்மையால் உரியமுறையோடு மற்றச் சுரூபங்களை வணங்கினதினால் திருச்சபை கட்டளையிட்ட முறையில் நாம் வைத்த சுரூபங்களைக் குறித்துச் செய்யும் வணக்கம் ஆண்டவரால் விலக்கப்பட்ட விக்கிரக வணக்கம் அல்ல. மீளவும் அடையாளமாக வைத்த உருவங்களை நாம் வணங்கும்போது, மனிதர் கையால் செய்யப்பட்ட பொருளை வணங்குவோமென்றும்; பொன், வெள்ளி, செம்பு, மரமென்று அதுகளை வணங்குவோமென்றும், சொல்லவும் கருதவுங் கூடாது.

49.- உருவங்களைச் செய்து வணங்கும்படிக்குத் திருச்சபையில் வழங்கின முறையின் நியாயமோவெனில், செய்த உருவங்களைக் கண்டு அனைவரும் அவ்வுருவங்கள் அடையாளமாகக் காட்டுகிற சேசுநாதரும், தேவமாதாவும், மற்ற மோக்ஷவாசிகளும் நன்னெறி வழுவாமல் செய்த தருமங்களை நினைத்து, நாமும் ஒத்த நெறியில் போகத் துணிவதற்கு உபாயமாக வழங்கின முறைமையாகும். உருவங்களோ எழுத்து வாசனை அறியாதவரும் வாசிக்கத்

தகும் ஒரு புஸ்தகமாமே. ஒரு பார்வையினால் முழுதும் வாசிக்கத் தகும் தேவ நூலாமே.

மீளவும் அதிலே ஒரு பார்வையினால் சகலத்தையும் ஒருபட அறிவதொழிய, காதால் கேட்டு உணர்தலினும், கண்ணால் கண்டு அறிவது உறுதியாமே. அப்படியல்லோ கண்ணால் கண்டதின் முன்னே, காதால் கேட்டது நில்லா தென்பார். அப்படியல்லோ அவனவன் வாய்மொழியால் காதிற்கு உணர்த்தின தொழிலைத் தாம் அதைச் செய்து, கண்ணுக்குக் காட்டுவார். அப்படியல்லோ பாடுபட்ட கர்த்தர் சுரூபத்தைக் கண்டவளவிற் பரலோகத்தையும் பூலோகத்தையும் உறவாக்கின சுவாமி எம்மேல் இரங்கி, மனிதனாய்ப் பிறந்து, எளிதாய்த் திரிந்து, நம்மால் ஆற்றாத கொடிய பாவ வினைகளைத் தீர்க்க அதுகளைத் தம்மேற் போட்டுக்கொண்டு, நம்மை இரட்சித்துப் பரமகதி மோக்ஷவாசலைத் திறந்து, நாம் அங்கே என்றென்றைக்கும் வாழும்பொருட்டுத், தாம் அடிபட்டு, நிந்தைப்பட்டு, முண்முடி சூட்டித், தாமே சுமந்த நெடுஞ் சிலுவையின மேலே பெரும் இருப்பாணிகளினால் அறையுண்டு, இரத்தபுஞ் சிந்தி, உயிருந்தந்து, கொடிய மரணத்தை மனம் பொருந்தி அடைந்தாரென்று ஒரு பார்வையாகக் கண்டறிந்து, நாம் மன நொந்து உருகவும், அவர்மேல் இரங்கி வருந்தவும், பாவங்களை ஒழித்து வெறுப்பதும், திறந்த மோக்ஷ இராச்சியத்தில் செல்லத் துணியவும் உறுதியாகும் அல்லவோ.

அவ்வண்ணமே தேவமாதாவையும், மற்ற மோக்ஷவாசிகளையுங் குறித்து, அடையாளமாக வைத்த பல சுரூபங்களைக் கண்டவளவில் கண் வழி உறுதி, உணர்ச்சியாகித் தெளிநினைவு எழும்பி அவர்கள் கொண்ட பொறுமையால் நமது கோபம் மாறவும், அவர்கள் காட்டின தாழ்ச்சியால் நமது ஆங்காரந் தணியவும், அவர்கள் முடித்த தவத்தால் நமது காமம் ஒழியவும், அவர்கள் நடந்த அறத்தின் ஒழுக்கத்தால் நமது பாவந் தவிர்ந்து போகவும் உதவுமல்லோ. அப்படியே, அர்ச். யுவான் குவால்பேர்த்தென்பவர் தன்

தம்பியைக் கொன்ற பகையாளியைத் தனியே கண்டு, அவனைக் கொல்லக் கையை ஓங்கின வளவில் அவன் விரித்த கையால் காட்டின சிலுவையின் அடையாளங் கண்டு, தம் பாவத்தைப் பொறுக்கச் சேசுநாதர் சிலுவையில் அறையுண்டு இறந்ததை நினைந்துத், தாமும் பகையை விட்டுப், பகைவனைத் தம்பியாகக் கட்டிக்கொண்டார். அதன்பின்பு, கோயிலினுட் புகுந்து, பாடுபட்ட கர்த்தர் சுரூபத்தைத் தெண்டனாக வணங்கும்போது, நீ நமக்குப் பிரியமாக நன்றாய்ச் செய்தாயென்றாற்போலச் சேசுநாதர் சுரூபந் தலை குனிந்து, தம்மை இன்பமாக நோக்கக் கண்டார். கண்ட மாத்திரத்தில் உள்ள முருகி, வெருகி, உலக செல்வங்களை வெறுத்துச், சந்நியாசம் பண்ணி அர்ச்சியசிஷ்டவரானார்.

அப்படியே வேறொருவன் நெடுநாள் ஆசை வைத்த ஸ்திரீ உடன்பட்டு, நடுச்சாமத்தில் அவள் அண்டைக்குப் போய்ப், பலநாள் உட்பற்றி எரிந்த ஆசையால், பாவத்திற்கு அமையும்போது, அவள் மார்பில் அணிந்திருந்த பாடுபட்ட கர்த்தர் சுரூபத்தைக் கண்டு அஞ்சி, என் ஆண்டவர் பாவங்களை ஒழிக்கச், சிலுவையில் அறையுண்டிருக்க, நான் நீசச் சுகத்தை விரும்பிப், பாவம் இன்பமென்று முடிப்பதோவென்று தேறி, அவளைத் தீண்டாமற் போய் நெடுநாள் அருந்தவஞ் செய்தான். இத்தகைப்பட்ட வர்த்தமானங்கள் ஆயிரம் உண்டாயினும் அதுகளை விட்டு அக்கியானியாய்ப் பாவத்திலமிழ்ந்தின உணர்வினளாய், உயிரும், நாணமும், உடலும் விற்றுக்கொள்ளும் பாவத்தால் பிழைத்தவளான, வேசி ஒருத்தி தன் தொழிலை முடிக்கப் போகையில், பெரிதோர் படத்தில் எழுதப்பட்ட ஒரு ஞானியாகிய போலேமோனென்பவன் தன்னைச் சினந்து பார்த்த பாவனையாகக் கண்டவுடனே பொருள் ஆசையும், காமத்தாசையும் மாறி, மனது கூசி வெட்கி, நினைத்த தின்மையை முடிக்காதேபோனாள்.

இதெல்லாம் இப்படியாகையில் சேசுநாதரையும், அவர் திருமாதாவையும், மற்ற அர்ச்சியசிஷ்டவர்களையுங்

காட்டின அடையாளச் சுரூபங்களை வடிவோடு உண்டாக்கி, எவரும் வாசிக்கத்தகுந் தேவ நூலாக வைத்த முறையின் உத்தம நியாயமாமே. இதனால் எவருக்குந் தோன்றுமென்பதற்குச் சந்தேகமில்லை இதனால் உரோமான் திருச்சபையைத் தோத்திரஞ் செய்து, லுத்தேர் முதலாய்த் தனிப் பூசை விலக்க எழுதின புஸ்தகத்தில், 1534 ம் ஆண்டிற் றானே உரோமான் திருச்சபையினின்று பிரிந்த பதினேழு வருஷமான பின்சொன்னதாவது: உரோமான் திருச்சபை மெய்யான திருச்சபை என்றும், சத்தியத்தைத் தாங்கின தூண் அதுவே என்றுஞ் சொன்ன பின்பு, சர்வேசுரன் அற்புதமாக உரோமான் திருச்சபையில் சில வேத முறைகள் வழுவாதபடிக்குக் காத்துக்கொண்டிருந்தாரென்று அதுகளை எண்ணி, ஞானஸ்நான முதற் பலவுஞ் சொன்னதின்மேல் சாகிறவர்களுக்கு ஆறுதலும், உறுதியுமாகச் சிலுவையில் அறையுண்ட கர்த்தர் சுரூபமும், அதனோடு அவர் பாடுபட்டு அடைந்த மரணத்தின் நினைவும், உத்தம முறையாக உரோமான் திருச்சபையில் ஆண்டவர்தாமே காத்து நிறுத்தினானென்று எழுதினான்.

இதனைப்பற்றி லுத்தேர் செத்து மூன்று வருஷமாகி, 1549-ம் ஆண்டில் அவன் வீற்றிருந்த இராசதானியாகிய வித்தெம்பேர்க் நகரில் அவன் சீஷர்களே லுத்தேர் எழுதினதெல்லாஞ் சேர்த்து அச்சிட்டு தலைப்பில் லுத்தேரும், அவனை ஆதரித்த சக்சோனிய துரையும், ஒரு பெருஞ் சிலுவையில் பாடுபட்ட கர்த்தர் சுரூபத்தின் முன்னே கைகூப்பி முழங்காலிலிருக்க எழுதி வைத்தார்கள். இச் சுரூபத்தை நெடுநாளைக்குப் பிறகு லுத்தேரானிகளில் ஒருவனுக்குக் காட்டினபோது, லுத்தேரானிகள் செய்வித்ததென்று கண்டு, மிகவும் அதிசயப்பட்டபின்பு, லுத்தேர் முதலாய்ச் சுரூபங்களை வணங்கின பாவனை எழுதித் தந்து, பிறகு சுரூபங்களை வணங்குவது அக்கியானமென்று, லுத்தேரானிகள் மனிதரை ஏய்க்கப் படிப்பிக்கிறார்களோ. இதிலே நம்மை ஏய்த்தபடி மற்ற

முறைகளிலேயும் நம்மை ஏய்த்தவனென்று அஞ்சுவது நியாயமல்லோவென்று, லுத்தேர் மதத்தை வெறுத்து, உரோமன் திருச்சபையில் உட்பட்டுத் தருமவானாக நடந்தான்.

50.— பின்னையும் பதிதர் தாமே தம்முடைய இராசா உருவையும், இறந்துவிட்ட பெரியோர் உருவங்களையும் உருவாக்கி அதற்குரிய வணக்கத்தோடு ஏற்றுக்கொண்டு வருகிறார்களே. இப்படிச் செய்துகொண்டுவருகையில் சர்வேசுரன் மொத்தமாய், பொதுவாய், முழுதாய்ச் சுரூபங்களையும், உருவங்களையும விலக்கினவர் அல்லவென்று தாமுஞ் சொல்ல வேண்டியிருக்குமே. ஆகையால் பாவிகளாய் நடந்து, நரகில் என்றென்றைக்கும் வேகா நிற்கும் சிலரைக் காட்டின உருவங்களை முதலாய்ப் பதிதர் தாமே செய்வித்துப் பூச்சியத்துடனே வைத்திருக்க நாம் சேசுநாதனையும், தேவமாதாவையும், மோக்ஷத்தில் வாழும் மகாத்துமாக்களையுங் குறித்துச் சுரூபங்களை உண்டாக்குதலே மாத்திரம் ஆண்டவரால் விலக்கப்பட்ட அக்கியானமென்று வெட்கமில்லாமல் சொல்லுவதென்ன ?

பதிதர் தாம் தம்முடைய கண்ணைப் பிடுங்கினதினால் மற்றவருக்கு ஒளி தெரியாதோ என்ன? உச்சிப் பகலினும் விளங்கின நியாயத்தை மற்றவருக்குந் தாமே மறைப்பார்களோ என்ன ? நாம் செய்யுஞ் சுரூபவணக்க முறையில் அக்கியானம் உண்டென்று மதி கெட்டவனுஞ் சொல்ல மாட்டாமல் சலஞ்சாதிக்க, வெட்கமில்லாமல் நியாயமெல்லாம் மிதித்து, உதைத்த பாவிகளாகிய பதிதர் மாத்திரங் கூசாமல் சொல்லுவார்கள். சொன்னாலும் அவர்களுக்குள்ள அறிவீனமும், பகை அகோரமும், ஆங்காரமும் மிகுதியுந் தோன்றுமொழியத் திருச்சபையில் வழங்கின உத்தம வேதமுறைக்கு ஒரு குறையும் வாராதென்பது நிச்சயந்தானே.

7-ம் அதிகாரம்.

சுரூப வணக்கப் பழமை.

51.— சொல்லிக்காட்டின தன்மையோடு திருச்சபையில் வழங்கின உத்தம முறைமை வழுவாமல் வணங்கப்பட்ட சுரூபங்களால் நமக்கு வரும் நன்மைகளை நாம் இங்கே ஒழுங்குடன் கூட்டி, விரிவாய் உரைப்பது நமக்குக் கருத்தல்ல, இயலுங் கருமமும் அல்ல. சேசுநாதர், தேவமாதா, மற்ற மோக்ஷவாசிகள் இவர்களைக் காட்டின சுரூபங்களைப் பத்தியோடு பார்த்தோமானால் அதுகளே இருண்ட இடத்தில் எரிந்த பல பெருந் தீபங்களைப் போலப், பாவ இருள் சூழ்ந்து பூவுலகில் ஒளியாய் விளங்கினதாகவும், அதுகளே தளர்ந்த வயதில் ஊன்று கோல் போலப், பலம் இல்லாத நமக்கு உறுதியாய் அறத்திலே தளர்ந்த நடையைத் தாங்கினதாகவும், அதுகளே கண் மறைந்தவருக்குக் கைதருங் கண் காட்டிபோல, நல்லறிவு இல்லாத நம்மை உணர்த்தினதாகவும், அதுகளே நீந்துபவருக்கு வருந் தவிப்பு ஆற்றும் தெப்பம்போல நடுவழியில் நாம் தவித்து நிற்காதபடிக்கு உதவியாய்த் தேற்றினதாகவும், அதுகளே நீர்ப்பெருக்கு ஆற்றின் துறையைக் காட்டின அடையாளக் கோல்போல வான்கதி சேருஞ் செவ்வழி மாறாமல் காட்டினதாகவும், திருச்சபையில் வழங்கின சுரூபங்கள் மனிதர் எளிதாய் மோக்ஷக்கரை ஏறுதற்கு உதவிய எத்தனங்களும், வழித்துணைகளும் ஆகுமென்று அவனவன் தன்னிடத்திலேயுங் கண்டுகொள்வான் அல்லோ.

எத்தனை முறை அவனவன் வணங்குஞ் சுரூபங்களைக் கண்டமாத்திரத்தில் தான் பாவியாயிருந்தாலும் பத்தி, நம்பிக்கை, விசுவாசம், பொறுமை, தாழ்ச்சி, தயை, கொடை, ஊக்கம், துணிவு, மனஸ்தாபம், மற்றும் உண்டாகிய சுகிர்த புண்ணியங்களை விளைவிக்கும் நினைவும் மனதிற் கிளம்பக்

கண்டு, நினைத்த பாவங்களை விட்டுவிட்டு நன்னெறியில் உறுதியானான். இதுவுமன்றிச் சுரூப வணக்கத்தினால் ஆண்டவர் செய்த புதுமைகளை எழுதவேண்டுமாகில், எவ்வளவினாலும் அடங்காமல், எக்கலை வல்லவராலும் முடிக்கக் கூடாமல், எவருக்கும் எட்டாத கருமமாமே.

குருடருக்குக் கண்ணும், ஊமைகட்குப் பேச்சும், முடவருக்குக் காலுங் கையும், நோவாளிகட்கு ஆரோக்கியமும், செத்தவருக்கு உயிருந் தந்து, பிடித்த பசாசுகளை ஓட்டி, வந்த குறைகளை நீக்கி, கேட்ட மன்றாட்டுகளை அருளி, வணங்கப்பட்ட சுரூபங்களைக் குறித்து உலகெங்கும் ஆண்டவர் ஓயாமல் செய்துகொண்டுவருகிற புதுமைகளை நீங்களே அறிவீர்களொழிய நாமே விபரித்துச் சொல்லத்தக்கதல்ல. மாற்றப்படாத தம் முத்திரையாகிய புதுமைகளால் ஆண்டவர் சுரூப வணக்கந் தாமே கட்டளையிட்ட முறையென்று ஒப்பித்த பின்பு, இன்னும் இதிலே சந்தேகப்பட ஞாயம் உண்டோ? ஆகிலும் பதிதருக்கு வாயை முழுதும் அடைக்க வேண்டுமென்று சுரூபவணக்கப் பழமையை இங்கே ஒப்பிக்கக்கடவோம்.

கர்த்தர் பிறந்த 300 வருஷமட்டும் இருந்த இராயர் சத்திய வேதத்தைப் பகைத்த கொடுமையால் கலகக் காலமாகி, அதன் பின்பு ஆண்ட தைரிய இராயர் கொண்ட குஷ்ட வியாதி தீரப் பற்பல குழந்தைகளைக் கொன்று, அவர்கள் குருதியில் குளிக்க வேண்டுமென்றிருக்கையில், அர்ச். இராயப்பருஞ் சின்னப்பரும் இராயருக்குத் தோன்றி, ஒளிந்திருந்த அர்ச். சில்வெஸ்திரி பாப்பென்பவரை அழைப்பித்து, அவர் கையால் ஞானதீட்சை பெற்றால் வியாதியும், பாவமுந் தீரும் என்றதனால், அவரை அழைப்பித்துக் கண்ட காட்சியைச் சொன்ன அளவில், அர்ச். பாப்பு தம்மிடத்திலிருந்த அர்ச். இராயப்பர் சின்னப்பர் சுரூபங்களைக் காட்டினமாத்திரத்தில் இவர்களே வந்து தோன்றினார்களென்று இராயர் மகிழ்ந்து சொல்லி, அதுகளை வணங்கிப் பெற்ற ஞானதீட்சையால் ஆரோக்கியம்

அடைந்து, தாமே உரோமாபுரியிலே சேசுநாதர் சிலு வைக்கு ஒரு கோயிலையும், அர்ச். ஸ்நாபக அருளப்பருக் கும், அர்ச். இராயப்பருக்கும், சின்னப்பருக்கும் வேறே மூன்று கோயில்களையுங் கட்டுவித்து, அவர்களுடைய சுரூ பங்களை அங்கே பிரதிஷ்டை செய்து வைத்தாரென்று பூர்வ காலத்திருந்தவர்கள் எழுதிவைத்தபடி இந்நாளிலே யும் அங்கே கண்டிருக்கிறோம்.

ஆகையால் பதிதர் தாமே சொன்னபடி முதல் 500 வருஷந் திருச்சபை வழுவாமல் நடந்த காலத்துஞ் சுரூபங் களை வைக்கவும், வணங்கவும் வழங்கின முறையாமே. மீள வும் அர்ச். ஸ்நாபக அருளப்பருக்குத் தைரிய இராயர் கட்டுவித்த கோயிலை, அர்ச. பாப்பு மந்திரிக்கும்போது சகலருங் காண அக்கோயில் சுவரின்மேலே சேசுநாதர் சுரூபம் புதுமையாகத் தோன்றி, இந்நாள் மட்டும் அங்கே காணவும், வணங்கவும்படுகிறது. சுரூப வணக்கம் அக்கி யானமாகில் ஆண்டவர் தாமே அக்கியானம் வளரும்படிக் குப் புதுமையாகச் சுரூபங்களைத் தோன்றும்படி செய்வா னேன் ?

52.— ஆகிலும் அக்காலத்தில் மாத்திரஞ் சுரூபவணக் கம் வழங்கினது அல்ல. அப்போஸ்தலர்மார் நாளிலே துவக்கினதாக்கும். இந்த இராச்சியத்தில் முந்திச் சத்திய வேதத்தைப் போதிக்க வந்த அர்ச். தோமையார் கல்லிலே கொத்துவேலையாகக் கிளம்பச் செய்த சிலுவையை வணங் கிக் கொண்டிருந்தாரென்றும், அச்சிலுவைதானே இன் னுங் காஞ்சிபுரத்திற்குக் கிழக்கிலிருக்கும் பெரிய மலையின் உச்சிமேல் பெரும் விளக்காகத் தோன்றிக் காணப்படுகிற தல்லோ ? அச்சிலுவைதானே எத்தனை முறை எல்லாரும் அறியப் புதுமையாய்த் தண்ணீர் வேர்வையாகவும், இரத்த வேர்வையாகவும் வேர்த்ததும் அறிவோம். மீளவும் நான்கு சுவிசேஷங்களில் ஒன்றை எழுதின அர்ச். லூக்காவென் பவர் தம் கையால் தேவமாதா சுரூபங்களைப் படமாக எழு தினதும், உருவமாகச் செய்ததும் நாமே கண்டிருக்கிறதல்

லாதே புதுமைகள் மிகுதியால் எங்குஞ் சந்தேகமின்றி வழங்கின செய்தி அல்லோ.

மீளவும் அர்ச். பெரிய யாகப்பர், இஸ்பாஞ்ஞிய இராச்சியத்தில் உபதேசஞ் சொல்லிக்கொண்டு சரகோசாவென்னும் மாநகரிடத்து வருகையில் உயிரோடிருந்த தேவமாதா எருசலேம் பட்டணத்தினின்று சம்மனசுகள் கையால் ஏந்தப்பட்டு, கெடுநாட் பிரயாணத்தை பத்து நாழிகையில் முடித்து, இராச்சியானத்திலிருந்த அர்ச். யாகப்பருக்குச் சூரியன் ஒளியினுங் கதிர் பரப்பித் தோன்றி, இங்கே எனக்கு ஒரு கோயிலை நீ கட்டுவிக்க ஆண்டவருக்குச் சித்தமாயிற்றென்று சொன்ன பின்பு, உலகில் வழங்காத மணியால் சம்மனசுகள் செய்து அலங்கரித்த ஒரு சின்ன தூணும், அதன் மேல் தன் சுரூபத்தையுஞ் சம்மனசுகளால் ஸ்தாபிக்கச் செய்து தந்தாளென்று பூர்வீக சாஸ்திரிகள் எழுதுகிறார்கள். அப்படியே, அர்ச். யாகப்பர் அங்கே கட்டின கோயிலும், தேவமாதா தந்த தம் சுரூபமும் இந்நாள்வரைக்கும் வணங்கப்பட்டு, மட்டில்லாத புதுமைகளால் விளங்கிவருகிறது. பதிதர் இதெல்லாம் பொய்யென்பார்களோ? நிந்தைக்கு அஞ்சாமல் பொய்யென்றாலும் பூர்வ காலத்திலிருந்த சாஸ்திரிகள் எழுதின செய்தியாகையால் இதெல்லாம் பொய்யாகிய காலத்தில் உலகில் மெய் ஒன்றுமில்லை.

53.— ஆகினுஞ் சேசுநாதர் பிறக்குமுன்னே முதலாய்த் தேவமாதா சுரூபம் ஆண்டவருக்குப் பிரியமாக வணங்கப்பட்டதென்று ஒப்பித்தால் பதிதர் என்ன சொல்லுவார்கள். ஆனால் அக்காலத்தில் எழுதினவர்கள் சொன்னதைப் பார்க்கில், எகித்தார் பல இடத்தில் தேவமாதாவை திவ்விய குழந்தையோடு ஸ்தாபித்து வணங்கினதை விட்டுக், காலிய இராச்சியத்தில் சேசுநாதர் பிறக்குமுன்னே நூறு வருஷமாகச் சியாராத்திர சென்னும் பட்டணத்தில் கோயிலைக் கட்டிக் கன்னி கெடாமற் பெறுவா

ளென்றும் பெயர் இட்டு ஒரு வடிவுள்ள உருவத்தை அதில் வைத்து வணங்கினார்கள்.

அவர்கள் அக்கியானிகளாயினுந் தேவமாதா சுரூபத்திற்குச் செய்த வணக்கம் ஆண்டவர் தமக்குப் பிரியமென்று காட்ட, அச்சுரூபத்தைக் குறித்து மன்றுடினதுரையாகிய மெலங்கரியாக்கனுடைய செத்த மகனை எழுப்பித் தந்தார். இதையும் பல புதுமைகளையும் அறிந்து, அவர்கள் இராசாவாகிய பிறிஸ்குவென்பவன் தன் முடியையும், செங்கோலையும் அச்சுரூபத்தின் பாதத்தில் வைத்துத் தேவமாதாவை அந்நாட்டிற்கு அரசியாகக் கொண்டான். இத்தன்மையில் ஆண்டவருக்குத் தோத்திரமாகவும், மனிதர் ஈடேற்றத்திற்கு உதவியாகவும் எக்காலத்திலும் வழங்கின சுரூப வணக்கத்தால் நமக்கு வரும் நன்மை விலக்கமாட்டாத பசாசு சுரூபவணக்கம் விலக்கப் பிரயாசப்பட்டதென்று அறியக்கடவீர்கள்.

54. — ஆகிலும் இந்நாட் பதிதர் இந்த அக்கிரமம் முடிக்கப் பசாசினால் தெரிந்துகொண்ட முதல் எத்தனங்களென்று தாம் தம்மைப் புகழத் தேவையில்லை. சொன்ன முறையில் சுரூப வணக்கம் எப்பொழுதுந் திருச்சபையில் வழங்கினதினால் அதன்மேல் பசாசு வைத்த பகையும், லுத்தேர் காலத்தில் எண்ணூறு வருஷத்திற்கு முன்னே துவக்கினதாம்.

அதெப்படியென்றால் கர்த்தர் பிறந்த 300 வருஷத்திற்குப் பின்பு தைரிய இராயர் இந்தச் சத்திய வேதத்தில் உட்பட்டதினால் கிறீஸ்துவர்கள் மறைவின்றித் திரிந்து, பசாசுக்கு வைத்திருந்த பொய்யான தேவர்கள் விக்கிரகங்களைத் தகர்த்து எறிந்ததினால் பசாசின் பகை அளவின்றி வளர்ந்து கிறீஸ்துவர்கள் வணங்கின சுரூபங்களைத் தானுந் தகர்த்துப் பழியை வாங்க எடுத்த உபாயம் ஏதெனில், கிறீஸ்துவர்கள் எங்கும் பெருங் கோயில்களைக் கட்டிப், பல சுரூபங்களுக்குள்ளே பாடுபட்ட கர்த்தர் சுரூபத்தை விசேஷமாய் எங்கும் ஸ்தாபித்து வணங்கிக்கொண்டு வரு

கையில் எவ்விடத்துஞ் சிதறி நின்ற யூதர்கள் தாமும் சிலுவையில் அறைந்தவரைப் பரம நாதராக வணங்கக் கண்டதினால், மனதில், பகை கொண்டதொழிய அச்சுரூபத்தைக் கண்ட யாவரும் யூதர்கள் செய்த அக்கிரமம் இதுவோ வென்று நிந்தித்ததினால் அவர்கள் மிகவும் வெட்கி நொந்திருக்கையில், பசாசினால் ஏவப்பட்டு முன் எடுத்த மனுஷ சுபாவத்திலே சேசுநாதரைப் பகைத்துக்கொன்ற யூதர்கள் அவரைச் சுரூபத்திலேயும் நிந்தையாகப் பகைத்துச், சுரூபங்களை வைத்து வணங்குவது அக்கியானமென்று சொல்லத்துவக்கினார்கள்.

நெடுநாள் அவர்கள் பகையால் பிதற்றின வார்த்தையை ஒருவரும் எண்ணாமல் மறுத்துக்கொண்டு வந்த பின்பு, கர்த்தர் பிறந்த 719-ம் ஆண்டிலே கொன்ஸ்தாண்டிநோப்பொலியின் இராயனை ஆளாநின்று கிறீஸ்துவனாயினும் நீதி முறையில் வழுவிக் கொடுங்கோலனாகிப் பாவம் விளைவிப்பதற்குரியவனுமாயிருந்த மூன்றாம் இலேயோன் என்பவனிடம் யூதர்கள் போய் அவனுக்குச் சொன்ன அபத்தங்களினாலும், தந்த திரவியங்களினாலும் அவனை உடன்படச் செய்து மயக்குவித்தார்கள்.

55.— அப்படியே அவன் சுரூபங்களை வணங்க வேண்டாமென்று விலக்கி, வணங்கினவரைக் கொடிதாய் வருத்திக் கொல்லத் துவக்கினான். துவக்கின அக்கிரமத்தை முடித்துக்கொண்டு வருகையில், மோக்ஷவாசிகளையும், சேசுநாதரையுஞ் சுரூபங்களில் வணங்க வேண்டாமென்று பகைத்த இராயன் மிகவும் அஞ்சி, நொந்து, மெலியும்படிக்குத் தான் ஆண்டிருந்த கொன்ஸ்தாண்டிநோப்பொலி என்னும் நகரெல்லாம் வெகுவாய் நடுநடுங்கி அதிலே மூன்று பங்கு தகர்ந்து விழுந்து பொடியாகக் கண்டான். கண்ட ஆக்கினையினாலும், தான் மனநொந்து வருந்தினதொழிய உயிர் பிழைக்கும்படி திரும்பாமலும். ஆக்கினைக்கு அஞ்சினதொழியப் பாவத்திற்கு அஞ்சாமலும், அச்சத்தால்

வெருண்டு, மயங்கி மதிகெட்டவனைப்போல் சில மாதங்கள் திரிந்த பின்னர் அவலமாய்ச் செத்தான்.

அவன் பிறகு தொடர்ந்த முறையோடு வந்த ஐந்து இராயரும் அவனைப் பின் சென்று, சுரூபவணக்கத்தை முழுதும் ஒழிக்க மிகவும் பிரயாசப்பட்டு, அந்த வணக்கத்தை விடாத எல்லோரையும் நிஷ்டூரமாய் உபாதித்து, மட்டில்லாத பேர்களைக் கொன்றாலுந் திருச்சபை அசையாத பாறையாக நின்று, சுரூபங்களை வணங்கின முறைமை ஆண்டவரால் வந்ததென்று எல்லோரும் அறிய அவரவர் மகிழ்ந்து சிந்தின குருதியால் எழுதிப் பொருந்தி, வலியப் பிராணனைத் தந்து சாட்சி சொன்னார்களொழிய, 120 வருஷங்களாக ஆறு இராயர் வல்லமையைக்கொண்டு முதிர்ந்த பகையால் சுரூப வணக்கம் மறைந்ததில்லை.

அதற்குள்ளாக 787-ம் ஆண்டில் நிசெ நகரில் 350 மேற்றிராணிமார்கள் பல சாஸ்திரிகளோடு கூடி நெடுநாள் யோசித்து ஒருங்குடன் அனைவரும் ஒரு மொழியாய்க் கட்டளை இட்டதாவது: இராச பாதையில் நடந்து முன் இருந்த வேதபாரகர் எல்லோரும் எழுதி வைத்த சாஸ்திரத்திற்கு இணங்க, இஸ்பிரீத்துசாந்து விளக்குந் திருச்சபையில் எப்போதுந் தவறாமல் வழங்கின முறையைக் காத்துக் கொண்டு, குருசோடேயும், பூச்சியத்தோடேயுந் திருச்சுரூபங்களை உரிய முறையோடு வணங்கக் கட்டளை இட்டோம். மீளவும் அதுகளைக் கண்டவர்கள் அதுகளால் காட்டப்பட்டவரை நினைக்கவும், அவர்களை உரிய முறையோடு வணங்கவும், அச்சுரூபங்களைக் கோயில்களிலே பிரதிஷ்டை செய்யவுங் கட்டளையிட்டோம். அதேனெனில் சுரூபங்களுக்குச் செய்யும் வணக்கம் அதுகளில் நில்லாமல் அதுகளால் காட்டப்பட்ட மகாத்துமாக்களைச் சேரும் என்றார்கள்.

என்றவுடனே கூடியிருந்த அனைவரும் ஒரு மொழியாய் முழங்கிச் சொன்னதாவது : இப்படியே எல்லோரும் விசுவசிக்கிறோம், இதையே எல்லோரும் அநுசரிக்கிறோம்,

இதையே எல்லோரும் ஒப்பமிட்டுப் பொருந்தி ஒத்துக் கொள்ளுகிறோம். இதுவே அப்போஸ்தலர்மார் விசுவாசம், இதுவே முன்னிருந்த வேதபாரகர் விசுவாசம், இதுவே மெய்யான திருச்சபை விசுவாசம், இதுவே உலகமெல்லாங் காத்த விசுவாசம். ஆகையால் மூன்று ஆளாகிய ஒரே சர்வேசுரனை அதியோக்கிய பத்தியாக விசுவசித்துச் சுரூப வணக்கம் நல்லதென்று ஒத்துக்கொள்ளுகிறோம். இதனை ஒத்துக்கொள்ளாதவர்கள் சபிக்கப்பட்டுத், திருச் சபைக்குப் புறம்பானவர்களாகக்கடவார்கள். ஆகையால் வேதாகமங்களில் அக்கியானிகள் விக்கிரகங்களை விலக்கி எழுதப்பட்டதைத் திருச்சபை வணங்குஞ் சுரூபங்களை விலக்கச் சொன்னவர்களுக்குச் சாபம். திருச்சபைச் சுரூ பங்களை அக்கியானிகளுடைய விக்கிரகங்கள் என்றவர் களுக்குச் சாபம். தேவராக மோக்ஷவாசிகள் சுரூபங்களைக் கிறீஸ்துவர்கள் வணங்குகிறார்கள் என்றவர்களுக்குச் சாபம். திருச்சபைச் சுரூபங்களை வணங்காதவர்களுக்குச் சாபம் என்றார்கள்.

56.— அப்படியே வேற்றுமை ஒன்றுமின்றி 869-ம் ஆண்டில் மீளவுங் கொன்ஸ்தாண்டிநொப்பொலியிற் கூடின 383 மேற்றிராணிமார்களும் ஏகோபித்துக் கட்டளை இட்டார்கள். ஆகையால் நீதிமுறை ஒன்றும் பாராமல், ஆராய்ந்த நியாயம் ஒன்றுங் கேளாமல், உருவின வாளைக் கொண்டு அநுசரியாதவர்களைக் கொடிதாய் வருத்திக் கொன்று, பொதுவற ஆளா நின்ற ஆறு இராயர் வல்லமை யால் ஊன்றிப் பரம்பின சுரூபப் பகை 120 வருஷத்திற் குள்ளாக நீர்மேற் குமிழிபோலவும், ஒளிமுன் இரவிருள் போலவும், மெய்யின் முன் பொய்மொழிபோலவும் மெலிந்தொழிந்து, முழுதும் மறைந்து, சுரூபங்களை வணங் கலாகாதென்பவர் ஒருவராயினும் இல்லாதிருந்தனர்.

சுரூப வணக்கமோவெனில் துன்ப முகத்தும், சாவின் முகத்துங் குறையாமல் சுட்ட பொன் சுடரும்போல நாளுக்குநாள் அதிகமானதொழிய ஒரு நாளாகிலும் இல்

லாததில்லை. ஆகையால் நிலையின்மை பொய்யின் குண மாகிய நிலைபெறுதல் குன்றாத மெய்யின் குணமாகக்கொள்ளச் சுரூபங்களைப் பகைத்த முறைமை நில்லாமையால் பசாசினால் வழங்கின பொய்யென்று தோன்றி எதனாலும் அசைக்கப்படாது நின்ற சுரூபவணக்கம் ஆண்டவரால் வழங்கின மெய் வேத முறையென்று சொல்லத்தகுஞ் சத்தியந்தானே.

57.— இப்படியே சேசுநாதர் ஸ்தாபித்த திருச்சபை துவக்கின காலத்திலுண்டான சுரூப வணக்கம் இடைவிடாமலும், குறைபடாமலும் இந்நாள் வரைக்கும் வழங்கி, நடுவில் வந்த விக்கினத்தில் அசையாமல், அநேக இடத்தில் ஆண்டவர் செய்த புதுமைகளால் எக்காலத்திலும் ஒப்பிக்கப்பட்டதுமாய், மட்டில்லாத பேர்கள் எங்கும் மகிழ்ந்து பிராணனை வலியத் தந்து குருதியோடு எழுதின சாட்சியால் விளங்கப்பட்டதுமாய்க், கல்விகளிலுந் தேர்ந்து, புண்ணிய நெறியிலுந் தளராத 733 மேற்றிராணிமார்களும் இரு முறை கூடி, நெடுநாள் யோசித்துத் தேர்ந்து தேறி, நிச்சயமாக ஸ்தாபிக்கப்பட்டதுமாயிருக்கிற முறைமையாகியும்; 1520-ம் வருஷத்திற்குப் பிறகு முளைத்த பொய்ப் புறச்சமயத்தார் தம் குருவாகிய பசாசினால் ஏவப்பட்டு, அவ்வணக்கம் அக்கியானமென்றும், அப்புதுமைகள் மாயமென்றும், அச்சாட்சி பொய்யென்றும், அவ்வேத பாரகர் எல்லாருந் தப்பறைக்காரரென்றும், எல்லாருங் குருடராகித் தாங்கள் மாத்திரங் கண்ணுடையவரென்றும், வெட்கமில்லாமல் பிதற்றிச் சொல்லக் கூசாது போனார்கள்.

அவர்கள் பகையால் பிதற்றினதைத் தாங்களே மனதில் உட்கொள்ளாமல், தப்பிதமென்று அறிந்து சொல்லிக்கொண்டு வருகையில், அவர்களோடு ஒத்த பகையும், ஆங்காரமும், மதிகேடும் உள்ளோர்கள் அநுசரிப்பார்களொழியப் புத்திமான் ஒருவனாயினும் உடன்படமாட்டான். மதிகெட்ட பதிதரே! நீங்களோ கையால் சூரியனை

மறைப்பவர்கள்? நீங்களோ ஊத்தை ஒழுகி நாறின உங்கள் வாயாவியால் அமிர்தக் கடலைக் கலக்கி வற்றுவிப்பவர்? நீங்களே கண் கெட்டவர்களாகையால் உச்சிப் பகலை இருண்டதென்று எவருக்கும் ஒப்பிப்பவர்கள். நீங்களே உங்கள் இருகண்களைப் பிடுங்கிச் சூரியன் ஒளியைக் காணீர்களாகில், மற்ற உலகமெல்லாம் அதனைக் காணுதிருக்குமோ? உங்களோடொத்த அக்கிரமிகள் மற்ற எவருந் தம் கண்களை பிடுங்க வேண்டுமென்று ஆசை இருக்குமோ? நாலு மனிதர் குருடராகிய மாத்திரத்தில் அதனால் சூரியன் ஒளி சற்றுங் குன்றாததுபோல, நீங்கள் சலஞ்சாதித்துச் சுரூப வணக்கம் அக்கியானமென்றாலும், அதனால் அவ்வணக்கஞ் சர்வேசுரனால் வந்த உத்தம வேத முறையென்று குறையொன்றின்றி உலகம் முடியுந்தனையும் விளங்கி வழங்குமென்று சொல்லத்தகுஞ் சத்தியந்தானே.

8-ம் அதிகாரம்.

திருச்சபைக் கற்பனை விளக்கம்.

58.— பெருஞ் சங்கிலியால் ஒரு மூலையில் கட்டப்பட்ட வேங்கை சூழக் குதித்துச் சங்கிலியைக் கடித்துப் போக்கிடமின்றிக் கர்ஜித்ததுபோலப், பதிதரும் நாம் சொன்ன நியாயங்களினுல் கட்டப்பட்டுச், சொல்லும் மறுமொழி இல்லாமல், அங்கங்கே தாண்டி ஏழைச் சனங்களை மயக்குவிக்கும்படிக்கு இன்னும் உளறிக் கூப்பிடுஞ் சத்தங் கேட்கக் கடவோம். நாம் என்ன சொன்னுலுஞ் சுரூபங்களை வணங்குவதே அக்கியானமென்றும், அபத்தமென்றும் பதிதர் சொல்லி வருகிறார்கள். அதேதெனில் மோயீசன் எழுதின 5-ம் ஆகமம் 12-ம் அதிகாரம் 32-ம் வசனமாவது: நான் கட்டளையிட்டதை மாத்திரம்

ஆண்டவருக்குச் செய்வாயாக; அதற்கு ஏதாகிலுங் குறைக்கவும், ஏற்றவும் வேண்டாமென்றார். ஆகையால் சுரூபங்களை வணங்க வேதத்தில் கட்டளை இல்லாதபோது நான் வணங்கினால் ஆண்டவர் கட்டளை இட்டதின்மேல் செய்தமையால், அவர் விலக்கின காரியஞ் செய்தாற்போல ஆச்சுதல்லோவென்று பதிதர் சொல்ல வருகிறார்கள்.

இதைக் கொண்டு அவர்கள் திருச்சபைக் கற்பனைகளை எல்லாந் தள்ளி, அதுகளுக்குக் கீழ்ப்படிந்து நடக்கிற நாம், சர்வேசுரன் வழி விட்டு, மனிதர் காட்டின வழியில் நடந்து தப்பிப்போகிறோமென்று, நியாயத்தைச் சற்றும் பாராத பித்தனைப்போல் பதிதர் பிதற்றிக்கொண்டு வருகிறார்கள். ஆகிலும் முந்திப் பதிதர் சொல்லிக்காட்டின வேத உதாரணங் கொண்டிருக்கிற அர்த்தத்தைக் காட்டக் கடவோம். நாம் இங்கே முதல் அதிகாரத்தில் சொன்னபடி லுத்தேர் சமயம் எளிதாய்ப் பரம்ப, அவன் குருவாகிய பசாசு லுத்தேருக்குச் சொன்ன உபாயமாவது: வேத வசனங்களை முழுதும் வையாமல் குறைத்து வைத்தல், முன்னும் பின்னும் எழுதினதை விட்டுப் பார்க்கில் அதுகளுக்கு அர்த்தம் வேறாகி, நீ உண்டு பண்ணின அபத்தங்களை எளிதாய் வேத உதாரணங்களால் ஒப்பித்துக்கொள்ளச் செய்வாய் என்றதாம் பசாசு. அப்படியே லுத்தேரும் அவன் சீஷர்களுஞ் செய்துகொண்டு வந்தார்கள்.

இப்போதும் அவர்கள் எடுத்துக்காட்டின உதாரணத்திலேயும் செய்தமையால், நாம் அதைக் குறையாமல் வைத்தோமாகில் பதிதருக்கு அது சற்றும் உதவாமல், மலையைப்போல தோன்றின நியாயம், புகைபாய்க் கரையக் காண்போம். ஆகையால், மோயீசன் வாயினால் ஆண்டவர் அக்காலத்தில் தமக்குப் பலி இடும் முறையும், இடமுங் கற்பித்த பின்பு சொன்னதாவது: ஆண்டவர் அக்கியானிகளைக் கெடுத்துப், பெயர்த்து, அகற்றி அவர்கள் நாட்டில் நீ இருக்கும்போது அவர்கள் பாவனையாக அக்கியானி முறைகளை எடுக்கவும் வேண்டாம், அவர்கள் தம் தேவர்

களை வணங்கினபடி நானுஞ் சர்வேசுரனை வணங்குவேன் என்னவும் வேண்டாம். ஆண்டவருக்கு அருவருப்புள்ள தெல்லாம் அவர்கள் தம் தேவர்களுக்குச் செய்து, தம் மக்களை முதலாய்த் தேவ பலிகளாகக் கொன்று, நெருப்பிற் சுட்டார்கள். நீ அப்படிச் செய்யாமல் நான் கட்டளையிட்டதை மாத்திரம் ஆண்டவருக்குச் செய்வாயாக. அதற்கு ஏதாகிலும் குறைக்கவும், ஏற்றவும் வேண்டாமென்றார்.

ஆகையால் அக்கியானிகள் முறைகளும், அவர்கள் பூசை முறைகளும் விலக்கப்பட்ட காலத்தில் ஆண்டவர் தமக்குப் பலியாகக் கற்பித்த வேத முறைமை மாத்திரம் ஒன்றுங் குறையாமலும், கூட்டாமலும் இருக்கச்சொல்லிக் கற்பித்தாரென்பது அர்த்தமாகும் அல்லோ? இதனால் மனிதர் கற்பனைகளைக் கேட்கவேண்டாமென்று விலக்கினதாகக் கொள்ளலாமோ? விலக்கினதாகக் கொண்டால் பதிதர் தாமே தம் இராசாவின் கற்பனை மீறாமல் நடப்பதென்ன? தம் குருவாகிய லூத்தேர் விரத்தனாய் இருப்பது பாவம் என்பது என்ன? கலியாணம் எவருக்கும் வேதத்தில் கட்டளையிட்டது எங்கே? அர்ச. சின்னப்பர் கொரிந்தியாருக்கு எழுதின முதல் நிருபம் 7-ம் அதிகாரம் 38-ம் வசனத்தில் கலியாணம் நல்லதாயினும் அதிலேயும் விரத்தத்துவந் தாவினையென்றார் அல்லோ.

59.— மனிதர் கற்பித்ததைக் கேட்டு நடப்பது அக்கியானமாகில், அந்த அக்கியானத்தை ஆண்டவர் நல்லதென்று புகழ்வாரோ? அப்படியாயினும் எரேமியாஸ் 35-ம் அதிகாரத்தில் யோனதபென்பவன் தன் கோத்திரத்தில் கட்டளையிட்டபடி, அவர்கள் தலைமுறை தலைமுறையாய் முந்திரிகைப்பழத்து இரசத்தைக் குடியாமல், அவன் இட்ட கற்பனையின்படியே நடந்ததினால், ஆண்டவர் அவர்களைப் புகழ்ந்தாரல்லோ. மீளவும் அப்போஸ்தலர்மார் தாமே இரத்தத்தையும், இரத்தஞ் சிந்தாமல் கொன்றதையும் உண்ண வேண்டாமென்று அவர்கள் முயற்சி ஆகமம் 15-ம் அதிகாரம் 29-ம் வசனத்தில் கற்பித்ததென்ன?

அதிலேதானே 15-ம் அதிகாரம் 41-ம் வசனத்தில் அப்போஸ்தலரும், மற்றப் பெரியோர்களும் இட்ட கற்பனைகளை அநுசரிக்கவேண்டுமென்று கற்பித்துத் திருச்சபைக்கு உறுதி சொல்லிச் சீரிய, சீலிசியவென்ற இரு நாடுகளில் அர்ச். சின்னப்பர் திரிந்தாரென்று எழுதினதென்ன?

அர்ச். சின்னப்பர் தாமே கொரிந்தியருக்கு எழுதின முதல் நிருபம் 7-ம் அதிகாரம் 12-ம் வசனததில் தன் கற்பனை வேறே, சேசுநாதர் கற்பனை வேறாய்ப் பிரித்துச் சொல்வதென்ன? மனிதர் கற்பனை கேட்பது அக்கியானமாகில், வேதத்தில் அப்போஸ்தலர்மார் தாமே அந்த அக்கியானத்தைப் படிப்பித்ததென்ன? கற்பித்ததென்ன? ஆகையால் பெரியோர்கள் கட்டளைகளையும், திருச்சபைத் தலைவர்கள் கற்பனைகளையுங் கேட்டுத் தலைமேல் வைத்து, மீறாமல் நடப்பது வேதத்தில் விலக்கப்படாமல் பிரத்தியக்ஷமாய்ப் படிப்பித்த முறைமையாகும் அல்லோ.

மீளவும் மோயீசன் 2-ம் புஸ்தகம் 20-ம் அதிகாரம் 8-ம் வசனததில் மூன்றாங் கற்பனையாகத் திருநாளென்று சனிக்கிழமை ஆசரிக்க நினைப்பாயாகவென்று எழுதியிருக்கப் பதிதர் தாமே சனிக்கிழமையைத் திருநாளாக ஆசரியாமல் ஞாயிற்றுக்கிழமையை ஆசரிப்பானேன்? அவர்களே தரங்கம்பாடியில் அச்சிற் பதித்த உபதேசத்தின் குறிப்பிடமென்னும் புஸ்தகத்தில் இந்த மூன்றாங் கற்பனையை மாற்றித் திருநாளை ஆசரிக்கத் தக்கதாக நினைப்பாயாக வென்று வைப்பானேன்? இந்த மாற்றம் நியாயத்தின்படியே திருச்சபைக் கற்பனையால் வந்ததொழிய வேதத்தில் ஞாயிற்றுக்கிழமையைக் கொண்டாடக் கட்டளை இட்டதில்லையே.

அப்படியே ஞாயிற்றுக்கிழமையுமன்றிப் பதிதர் தாமே சில திருநாட்களைக் கடனைக் கொண்டாடுவானேன்? அந்தப் பல திருநாட்களுந் திருச்சபைக் கற்பித்ததொழிய வேதத்தில் ஆண்டவர் கற்பித்ததில்லையே. ஆகையால் திருச்சபைக் கற்பனையின்படியே பதிதரும் நடக்கிறார்கள்.

நடந்தாலுந் தங்களுக்கு ஆகாத மற்றத் திருச்சபை உத்தம கற்பனைகளைத் தள்ளும்படிக்குத் திருச்சபைக் கற்பனையை மீறாமல் நடப்பது, மனிதர் வழியை அநுசரித்துச் சர்வேசுரன் வழியில் தப்பிப்போகும் முறைமையென்று வெட்கமில்லாமல் சொல்வானேன்?

60.— இப்படியே திருச்சபைக் கற்பனை மனிதர் கற்பனையென்று ஒத்துக்கொண்டாலும், இன்றையவரைக்கும் நாம் சொன்னதைப் பார்க்கில், அந்தக் கற்பனையை மீறாமல் நடப்பது, வேதத்தில் கற்பித்த முறைமையாம் என்னத்தகுமே. ஆகிலுந் திருச்சபை கற்பனைகளை மனிதர் கற்பனை ஆக்காமல், சர்வேசுரன் கற்பனையாகக்கொள்ளவேண்டுமென்று ஒப்பிக்கக்கடவோம். அதெப்படியென்றால், அர்ச். லூக்காஸ் எழுதின சுவிசேஷம் 10-ம் அதிகாரம் 16-ம் வசனத்தில் அப்போஸ்தலர்மார்களுக்குச் சேசுநாதர் திருவுளம் பற்றினதாவது: உங்கள் வார்த்தையைக் கேட்பவன் என் வார்த்தையைக் கேட்பவன்றானே என்றார். அதனுடனல்லோ அர்ச். மத்தேயுஸ் எழுதின சுவிசேஷம் 18-ம் அதிகாரம் 17-ம் வசனத்தில் சேசுநாதர் தாமே திருச்சபை வார்த்தையைக் கேளாதவன் உனக்கு அஞ்ஞானிகளில் ஒருவனாகக்கடவனென்றார். ஆகையால் திருச்சபை கற்பித்ததெல்லாம் ஆண்டவர் கற்பித்ததாக உட்கொள்ளச் சேசுநாதர் கட்டளையிட்டார்.

61.— இதெல்லாம் இப்படி இருக்கையில் நாம் திருச்சபை கற்பித்தபடி கேட்கும்போது, மனிதர் வழியை அநுசரியாமல், சர்வேசுரன் கற்பனையின்படியே நடக்கிறோமென்று சொல்லத்தகுமே. ஆகிலுந் தேவ கற்பனைக்கும், திருச்சபைக் கற்பனைக்கும் மூன்று வேற்றுமை உண்டென்று அறியக்கடவீர்கள். முதல் வேற்றுமையாவது: ஆண்டவர் தாமே கற்பித்தது தேவ கற்பனையாகி, ஆண்டவர் ஏவலால் அவர் ஸ்தானத்திலிருக்கிற அர்ச். பாப்பு கற்பித்தது திருச்சபைக் கற்பனை என்னத்தகும். அப்படியே இராசா தாமே சில கட்டளை இடுவதல்லாமல், தன்

மந்திரி இராசா சொற்படி சிலதுகளைக் கற்பிப்பார். கற்பித்தாலும் இதுவும் இராசாவின் கட்டளையாக எண்ணிக்கேட்க வேண்டியதனால், இதனையும் மீறினவனைத் தண்டிப்பாரொழிய, நாம் இட்ட கற்பனை அல்லாமல் மந்திரி கற்பனையைக் கேட்கவேண்டாமென்று இராசா சொல்லப்போகிறதில்லையென்பது நிச்சயந்தானே.

ஆதலால் இரண்டாம் வேற்றுமையாக தேவ கற்பனையை மீறி நடக்க அர்ச். பாப்பு முதலாய் எக்காலத்தும் உத்தாரங் கொடுக்கக் கூடாமல், திருச்சபைக் கற்பனைதாம் இட்ட கற்பனையாகையால், ஓரோரிடத்தில் இதுகளை விட்டு நடக்க அவர் உத்தாரங் கொடுக்கலாம் என்னத்தகும். அப்படியே இராசா கற்பனை மீற உத்தாரங் கொடுக்க மாட்டாத மந்திரி, தாம்இராசா பெயரைச் சொல்லி இட்ட கற்பனை சிலமுறை தாமும் அழிக்கவும், அல்லது பிறருக்கு உத்தாரங் கொடுக்கவும் வல்லவன் அவன் அல்லோ?

மூன்றும் வேற்றுமையோவெனில், உயிரைத் தந்தாலுந் தரவேண்டுமொழிய வேத கற்பனையை மீற எவருக்கும் உத்தாரமில்லை. திருச்சபைக் கற்பனையானால் ஒருவருக்குக் கனமான அவசரம் வந்த உடனே, அக்கற்பனையின்படியே நடக்கக் கடனில்லை. அப்படியே இறந்தாலும் பொய்யைச் சொல்லக் கூடாமல், வியாதி வந்த அளவில், ஒருசந்தியாயிருக்கக் கடனில்லை. சொன்ன வேறுபாடுகளன்றித் திருச்சபைக் கற்பனைகளையும் மிகுந்த அவசரமில்லாமல் மீறாமல் நடக்கும்படிக்கு எவருக்குங் கடன் உண்டென்பது சத்தியந்தானே. பதிதரோவெனில் பாவ வழியிலே தடை ஒன்றின்றி வழுவி ஓடும்படிக்கு, விக்கினமாகவிருக்குந் திருச்சபைக் கற்பனையை உதறிப் பாகனை இழந்த மத யானைபோலவும், கடிவாளம் அறுந்த குதிரைபோலவும், சுக்கான் கழன்ற மரக்கலம் போலவும் ஒழுங்கொன்றின்றித் தவறிக் குதித்து, அலந்து, மோதித் தாம் தம்மோடு ஒவ்வாமற் பிதற்றி, மதி கெட்ட பித்தரைப்போல் பேசவும், நடக்கவுஞ் செய்வார்களென்று கண்டிருக்கிறோம்.

9-ம் அதிகாரம்.

திருச்சபை வழுவாமை.

62.— கதிர்களைத் தெளித்துத் திருந்தின நூற்படி வடிவோடு எழுதப்பட்ட சித்திரம் பிழையென்று, அதனைத் தீர்த்து ஒப்புரவாக்க இரு கண் குருடன் துணிந்தாற்போல, லுத்தேரும், கல்வீனும், அவர்கள் சீஷர்களுந் திருச்சபை வழுவிக்கொண்ட வழுக்களைத் துடைத்துச் செப்பனிடவந் தோமென்று வெட்கமில்லாமல் சொல்லி, வழுவாத திருச்சபைக் கற்பனைகளைக் கேட்பது நல்லதாயினும், திருச்சபை வழுவின பின்னர் இட்ட கட்டளை கேட்பது பாவம் என்பார்கள். அது எப்படியென்றால், கர்த்தர் திரு அவதாரம் பண்ணின 500 வருஷமட்டுந் திருச்சபை வழுவாமல் நடந்தபின்பு, முழுதுங் கெட்டு அழிந்து 1000 வருஷங் கிடந்ததன்மேல், லுத்தேர் வந்து விழுந்த திருச்சபையைப் பழைய நிலையில் நிறுத்தி விளங்கச் செய்தேனென்றும், சொன்ன 500 வருஷத்திற்குப் பிறகு உரோமாபுரிச் சபையுங் கெட்டு, அர்ச். பாப்புங் கள்ளனாக நின்று வழுவினதினால், இட்ட கற்பனை கேட்பது ஆகாதென்றும், கன்னியாஸ்திரீகளைக் கற்பழித்தவனாய், ஆண்டவருக்குத் தந்த வார்த்தைப்பாடுகளை மிதித்தவனாய், பசாசைக் குருவாகக் கொண்டவனாய்ச் சகல பாவங்களை ஊன்றின உணர்வினனாய், மதிகெட்ட லுத்தேரும், இவனோடொத்த அக்கிரமித்தழிந்த கல்வீனுஞ் சற்றுங் கூசாமல் பிதற்றிச் சொல்லத் துணிந்தார்களென்று நாம் முன் சொன்னதல்லோ. இந்த அக்கிரமமான தப்பறை, இங்கே உலையில் போட்டு ஊதிப் பொன்னாகக் கீழ்த்திசைப் பதிதர் காட்டினதைக் கெட்ட செம்பாக நாமே காட்டி, அதனை மிதித்தெறிந்து திருச்சபை வழுவாமை ஒப்பிக்கத் துணிந்தோம்.

63.—ஆகையால் பதிதர் சொன்னது மெய்யென்றால், 1,000 வருஷந் திருச்சபை இல்லாமல் உலகம் இருந்த

தென்று சொல்லக்கடவோம். இப்படிச் சொன்னோமாகில் திருச்சபைக்குள்ளே அல்லாத ஈடேற்றம் இல்லாமையால், 1,000 வருஷம் உலகெங்கும் ஒருவரும் மோக்ஷக்கரை ஏறவில்லையென்று சொல்லவுங் கடவோம். ஆகிலும் இந்த அக்கிரமத்தை மதி கெட்டவனாயினும் அநுசரிக்கமாட்டான். அதனாலே திருச்சபை வழுவிக்கெட்டு அழிந்து இல்லாதே போயிற்றென்றும் சொல்லவுமாட்டான். மீளவும் அர்ச். மத்தேயுஸ் எழுதின சுவிசேஷம் 16-ம் அதிகாரம் 18-ம் வசனத்தில் சேசுநாதர் திருவுளம் பற்றினதாவது: என் திருச்சபையைக் கல்லின்மேலே ஸ்தாபித்து உண்டாக்குவேன்; அதனை நரகங் கெடுத்துச் செயங்கொள்ளமாட்டாதென்றார்.

ஆகையால் ஒரு காலத்தில் திருச்சபை கெட்டுப்போய் இல்லாதாயின், அதனை நரகங் கெடுத்துச் செயங்கொண்டதாகச் சொல்லவேண்டியிருக்கும். ஆராகிலும் இதனைச் சொல்லிச் சேசுநாதர் திருவுளம் பற்றின வார்த்தை தப்பறையாயிற்றென்று சொல்வாரோ? இதற்குப் பதிதர் சொன்னபடி வழுவாத திருச்சபை இருக்கும்போது, 400-ம் வருஷத்திருந்த அர்ச். அகுஸ்தீன், உபதேசங் கேட்பவருக்கு விசுவாச மந்திரத்தை விரித்த முதற் புஸ்தகம் 6-ம் அதிகாரத்தில் எழுதினதாவது: திருச்சபை மெய்ச்சபை, பொதுச்சபை இதுவே. இது எல்லாப் பதிதரோடு யுத்தஞ் செய்துகொண்டுவரும், யுத்தஞ் செய்தாலுந் தோற்கமாட்டாது. முந்திரிகைக் கொடியில் பலன் இல்லாததுகள் வெட்டுண்டு பிரிந்தாற்போல பதிதர் எல்லாரும் இதிலே நின்று பிரிந்தார்கள். திருச்சபையோவெனில் தன் வேரிலே நின்று நிலைகொண்டது, அதனை நரகஞ் செயங் கொள்ளாதென்றார். ஆகையால் 500 வருஷத்திற்குப் பிறகு, திருச்சபை தன் வேரிலே நின்று பிரிந்து கெட்டதென்று பதிதர் பேசித் துணிவோடு எப்படிப் பிதற்றத் துணிந்தார்கள்.

64.— மீளவும் அர்ச். மத்தேயுஸ் எழுதின சுவிசேஷத்தின் 28-ம் அதிகாரம் 19-ம் வசனத்தில் சீஷர்களை

நோக்கிச் சேசுநாதர் திருவுளம்பற்றினதாவது: உலகில் எங்கும் போய் எல்லோருக்கும் போதிப்பீர்களாக என்ற பின்பு, நாம் எந்நாளும் உலகம் முடியுந்தனையும் உங்களோடு இருப்போமென்றார். இதற்கு அர்த்தம் ஏதெனில், சத்திய வேதத்தைப் போதிக்க உலகெங்கும் உங்களை அனுப்பினோம். எங்கும் வணங்கப்பட்ட பசாசு கொடிதாய் உங்களைப் பகைத்துக், கைகெங்களைக் கிளப்பிக் கெடுக்கப் பிரயாசப்படுமாயினும், நீங்கள் பயப்படாமல் உறுதியாக இருங்கள். நாமே உங்களுக்கும், உங்களைப் பின் சென்றவர்களுக்கும் உதவியாக இடைவிடாமல் உலகம் முடியுமட்டுங் கூட நிற்போம் என்றதாயிற்றல்லோ. ஆயினும் 1,000 வருஷமாக உலகில் எங்குந் திருச்சபை இல்லாதாயின், இந்தத் தேவ வாக்கியந் தப்பறையாகாமல் நிற்கும் வகை என்ன? எந்நாளும் இடைவிடாமல், திருச்சபை கெடாதபடிக்குக் கூடநிற்போமென்ற சேசுநாதர் ஆயிரத்தெழுநூறு வருஷத்திலே ஆயிரம் வருஷமாகத் திருச்சபை கெடும்படி அதனைக் கைவிட்டதென்ன?

65.— அதற்கு முன் சொன்ன அர்ச். அகுஸ்தின் தாவீது இராசன் பாடின 101-ம் சங்கீதத்தின்மேல் 2-ம் பிரசங்கத்தில், தோனத்திஸ்தரென்னும் பதிதர் சொன்ன அபத்தங்களை மறுத்துக்கொண்டு வருகையில், அலங்கார வகையால் திருச்சபை சேசுநாதரோடு பேசினாற்போல தாம் எழுதினதாவது: என்னை விட்டுப் பிரிந்தவர்கள் என்மேல் தூறினதென்ன? கெட்டவர்கள் நானே கெட்டேனென்று சலஞ் சாதித்துச் சொல்வதென்ன? நான் முன்னிருந்ததொழிய இப்போது இல்லாமற் போனேன் என்பார்களோ? நான் வாழும் நாள் எத்தனையென்று எனக்கு அறிவிப்பீராக. திருச்சபை முன்னிருந்தது இப்போது இல்லையென்றும், திருச்சபை கெட்டு அழிந்ததென்றுஞ் சொல்லும் சிலருக்கு வேண்டி, எந்நாள்மட்டும் நான் இப்பூவுலகில் வழங்கி இருப்பேனென்று காட்டுவீராகவென்று திருச்சபை கேட்டதற்குச் சேசுநாதர் அறிவித்ததாவது:

எந்நாளும், உலகம் முடியுந்தனையும் நாமே உங்களோடு கூட நிற்போமென்றாரென்று, இதெல்லாம் அர்ச். அகுஸ்தீன் எழுதிவைத்தார்.

66.— இப்படியல்லோ அர்ச். அகுஸ்தீன் காலத்துத் தோனத்திஸ்தரைப்போல இக்காலத்து ஞானிகளும், கல்வினியானிகளுந் தாம் கெட்டழிந்தவர்களாகி, மாறாத சேசுநாதர் துணையும், உதவியுங்கொண்டு எந்நாளுங் கெடப்படாத திருச்சபை கெட்டழிந்ததென்று வெட்கமில்லாமற் சொல்லுகிறார்கள். சொன்னாலும் பூரண சந்திரனைப் பகைத்து நோக்கி, நாய்கள் குலைத்தாலும் அதற்குச் சந்திரன் அஞ்சாமலும் ஒளி குறையாமலும் இருளில் விளங்கி நடப்பதுபோல, ஆயிரம் பதிதர்கள் கூடித் திருச்சபைக் கெட்டதென்று குலைத்தாலும், திருச்சபை அதனால் ஒருக்காலும் முன் கெட்டதும், வழுவினதுமில்லை; இனிமேல் கெடவும், மயங்கவும் செய்யாமல் நாடோறும், உலகம் முடியுந்தனையும் மென்மேலும் விளங்கி வளர்ந்து நிற்குமென்பது நிச்சயந்தானே.

10-ம் அதிகாரம்.

உரோமான் திருச்சபை விளக்கம்.

67.— இதுவரைக்குஞ் சொன்ன நியாயங்களைக் கொண்டு ஒப்பித்தபடி, ஒருநாளாகிலும் வழுவாது நின்ற திருச்சபை உரோமான் திருச்சபையென்று நாம் இங்கே காட்டக்கடவோம். உரோமான் திருச்சபையென்னும் போது உரோமாபுரியில் மாத்திரம் இருக்குந் திருச்சபை என்போமோ? அல்ல. உரோமாபுரியில் சேசுநாதர் ஸ்தானத்திலிருந்து திருச்சபைத் தலைவராக அர்ச். இராயப்பர் துவக்கி இந்நாள்மட்டுந் தொடர்ந்து வந்த அர்ச். பாப்புகளுக்குக் கீழ்ப்படிந்து, பூவுலகெங்கும் பரம்பி நிற்குந் திருச்

சபைதானே உரோமான் திருச்சபையென்று கொள்ளக் கடவோம்.

இப்படிப்பட்ட உரோமான் திருச்சபை மெய்யான திருச்சபையென்றும், பொதுவாய் நிற்குந் திருச்சபையென்றும் ஒப்பிப்போம். அதெப்படியென்றால், இதுவரைக்குஞ் சொன்னபடி மெய்யான பொதுத் திருச்சபை, உலகம் முடியுமட்டும் ஒருக்காலும் வழுவாமல் நிற்குந் திருச்சபை அல்லோ. எப்போதும் எங்கும் வழுவாமல் நின்ற சபை உரோமான் திருச்சபையொழிய, வேறொரு சபையுமில்லை. ஆகையால் உரோமான் திருச்சபை மாத்திரம் மெய்யான திருச்சபையென்றும், பொதுவாய் நிற்குந் திருச்சபையென்றுஞ் சொல்லக்கடவோம். உரோமான் திருச்சபையன்றி வேறொரு சபை வழுவாமல் நின்றதென்றால், அப்படிப்பட்ட சபையைப் பதிதர் தாமே காட்டக் கடவார்கள். தம் சபை வழுவாமல் எப்போதும் நின்றதென்பார்களோ? ஆகிலுந் தம் சபை தாங்கள் சொல்லுகிறபடியே, இருநூறு வருஷத்திற்கு முன்னே மாத்திரம் லுத்தேர் தலைவனாகத் துவக்கின சபையாகையால், எப்போதும் வழுவாது நின்ற சபையென்று சொல்லமாட்டார்கள்.

உரோமான் திருச்சபையோவெனில், வழுவாது நின்றது எப்படியென்று கேட்பீர்களாகில், சேசுநாதர் உண்டு பண்ணின திருச்சபைக்கெல்லாம் அர்ச். இராயப்பரைத் தலைவராக ஸ்தாபித்தார். அவர் தமது இராசாங்கம் உரோமாபுரியில் வைத்துத் தாமே அதிலே வேதசாட்சியாகப் பாடுபட்டார். அவருக்குப் பிறகு, விடாத தொடர்போடு இந்நாள்வரைக்கும் அர்ச். பாப்புகள் ஒருவர்க்கு ஒருவர் பின் சென்று, திருச்சபைக்கெல்லாந் தலைவராக நின்றார்கள். அவர்களுக்குள்ளே வழுவினவர் ஆரென்றும், எக்காலத்தில் வழுவினரென்றும் எந்தத் தப்பறைத் திருச்சபைக்குப் படிப்பித்து வழுவி, அதனைக் கெடுத்ததென்றும் பதிதர்தாமே காட்டக்கடவார்கள். காட்டமாட்டாமற்போனால்,

அர்ச். பாப்புகளோடு திருச்சபையும் விசுவாசத்தில் வழு விக்கெட்டதென்பானேன் ?

68 — இதற்குப் பதிதர் சொல்லும் மறுமொழியாவது: அர்ச். பாப்புகளும், அவர்களோடு திருச்சபையும் ஒருவரும் அறியாமல் நாள்வட்டத்திலே வழுவிக்கெட்டதாகி, அந்தக் கேடு ஆயிரம் வருஷமாக ஒருவருங் கண்டுபிடியாமல், கடைசியிலே லுத்தேர் அதனைக் கண்டுபிடித்து, எல்லாருக்கும் அறிவித்து, வழுவின திருச்சபையைப் பழைய நிலையில் நிறுத்தினுன் என்றுர்கள். ஆகிலும் ஆயிரம் வருஷமாக உலகமெங்குங் கண்ணுடையவன் ஒருவனும் இல்லாமல், காணுத கேடு லுத்தேர் மாத்திரம் அர்ச். பாப்புமேல் வைத்த பகையாகிய விளக்கெறிக்க கண்டு தீர்த்தானல்லோ, நல்லதுதானே. அந்தக் குறையெல்லாந் துடைத்து நிறுத்தின திருச்சபைக்குத் தலைவராக ஆரை லுத்தேர் வைத்தான. அர்ச். இராயப்பர் ஸ்தானத்தில் ஒருவர் வேண்டி இருக்கையில் அவர் எங்கே ? நாம் கீழ்ப்படிந்து வணங்கும் அர்ச். பாப்புவன்றி வேறொரு சபையிலாயினும் பொதுத் தலைவன் ஒருவன் உண்டென்று காட்டமாட்டார்கள்.

69.— இதற்குப் பதிதர், இராச நீதிக்கு அஞ்சிக் கிணற்றில் குதித்துவிடும் பெருங்கள்ளனைப்போலவும், சூரியன ஒளிக்குப் பயந்து மெலிந்தோடிப் பொந்துகளில் ஒளிந்துக் கூவப் பயப்படுங் கோட்டான்போலவுஞ், சொன்னதற்கு அஞ்சி மறுமொழி இல்லாமையால், அதிலேயும் பெரிதோர் அபத்தத்தைச் சொல்லிப் பிதற்றுவதாவது: சேசுநாதரொழியத் திருச்சபைக்குத் தலைவர் ஒருவரும் இல்லை. ஒருவருந் தேவையில்லை என்பார்களாயினும், சேசுநாதர் இங்கே சீவித்தகாலத்தில் இது மெய்யாயினும், தாம் மோக்ஷத்தில் எறின பின்பு, காணப்பட்ட திருச்சபையினுல் காணப்படாத தலைவராக அகன்றதனுல், அவரை அல்லாதே காணப்படுந் தலைவர் தேவையில்லையென்பவன் மதிகெட்டவன்றுனே. நாலுபேருள்ள வீடும், நாலுவீடுள்ள

ஊரும், நாலு ஊருள்ள நாடும் ஒருதலையின்றி ஒழுங்கோடு நடக்கவும், முறையோடு நிற்கவுமாட்டாமையால், உலகமெங்கும் பரம்பின திருச்சபைக்கு மாத்திரங் காணப்பட்ட ஒரு தலை தேவையில்லையோ?

சேசுநாதர் தாமே தம் திருச்சபைக்குத் தம்மிடமாகக் காணப்பட்ட தலை வேண்டுமென்று, இராயப்பரை நோக்கி: என் ஆடுகளை மேய்ப்பாயாகவென்று, அவரைத் தம் மந்தை ஆடுகளுக்கு முந்தின இடையனாகவும், தம் திருச்சபைக்கு முந்தின தலைவராகவுங் கட்டளை இட்டாரல்லோ? இராயப்பர் இறந்துபோன பின்பு திருச்சபைக்குக் காணப்பட்ட மறுதலைவேண்டாம் என்பார்களோ? ஆகிலும் நாளுக்கு நாள் திருச்சபை வளர்ந்தமையால், நாளுக்கு நாள் அதிகமாய்க் காணப்பட்ட தலைவர் வேண்டியதென்று எல்லாருஞ் சொல்லக்கடவோம். அப்படிப் பதிதர்தாமே முதல் 500 வருஷமாகத் திருச்சபை அவர்கள் சொன்னபடி வழுவாது நின்றபோது, இடைவிடாமல் இராயப்பரைத் தொடர்ந்து வந்து, அவர் இராசாங்கத்திருந்து ஆண்ட அர்ச். பாப்புகள் அவர் உத்தியோகத்தையும் உடையவராகிக், காணப்பட்ட திருச்சபைக்குக் காணப்படுந் தலைவராக நின்றார்களென்று சொல்லவேண்டி இருக்கும்.

70.— அப்படியே 431-ம் ஆண்டில் எபெசியென்னும் நகரிடத்துக் கூடின திருச்சபைக்கு, அர்ச். பாப்புவினாலே தம்மிடமாக அனுப்பப்பட்டவர்களுக்குள்ளே ஒருவர் பிலிப்பென்பவர் எல்லாரும் அறியச் சொன்னதாவது: அப்போஸ்தலர்மாருக்கு முதல்வனும், பொதுத் திருச்சபைக்கு அஸ்திவாரமும், தலையுமாகிய அர்ச். இராயப்பர் தம்மைத் தொடர்ந்து வந்த அர்ச். பாப்புகளிடத்தில் இன்னம் ஆளவும், இங்கே சந்தேகங்களைத் தீர்க்கவும், இனியும் எப்போதும் ஆளத்தக்கதாகவும், ஒருவருக்குஞ் சந்தேகமற, எல்லாருக்கும் எக்காலத்திலும் நிற்பது நிச்சயந்தானே. அப்படியே, அர்ச். இராயப்பரைத் தொடர்ந்து இப்பொழுதிருக்கும் அர்ச். பாப்பு செலெஸ்தீனென்பவர், எங்களை இந்

தத் திருச்சபைக் கூட்டத்திற்கு அனுப்பினாரென்றார். அதற்குக் கூடியிருந்த திருச்சபை எல்லாம் ஒருமொழியாகச், செலெஸ்தீனாகிய அர்ச். பாப்புவை மிகவும் புகழ்ந்து தோத்திரஞ் செய்தார்கள்.

இதிலே இறந்த அர்ச். இராயப்பர் இன்னம் அர்ச். பாப்புகளிடத்தில் ஆண்டு நிற்பார் என்பதற்கு அர்த்த மேதெனில், சேசுநாதர் அவருக்கு முன் தந்த தலைமையும், உத்தியோகமும், வல்லமையும் மாறாமல் மற்ற அர்ச். பாப்புகளிடத்தில் இப்பொழுது உண்டென்றும், இனி எப்போதும் இருக்குமென்றும் அதற்கு அர்த்தமாமே. ஆகையால் அர்ச். இராயப்பர் திருச்சபைத் தலைவராக நின்றாரென்றும், அவரைத் தொடர்ந்து வந்த மற்ற அர்ச். பாப்புகள் அவரைப்போல ஆண்டு, தலைவர்களாக நின்றார்களென்றும், எப்போதும் நிற்பார்களென்றும், பதிதர் சொன்னபடி திருச்சபை வழுவாத நாளில் எல்லாருக்கும் நிச்சயமாயிருந்ததே. ஆகையால் முதல் தலையாகிய சேசுநாதரன்றித் திருச்சபையில் 500 வருஷமட்டுங் காணப்பட்ட தலையும் பூவுலகில் இருந்ததென்று பதிதர்தாமே சொல்லவேண்டியிருக்கையில், அதன் பிறகு இப்படிப்பட்ட காணப்படுந் தலை திருச்சபைக்குத் தேவையில்லை என்பதென்ன ?

71.— இதிலே பதிதர் சொல்லுந் தன்மையாவது: அர்ச். சின்னப்பர் உரோமாபுரிக்கு எழுதின நிருபம் 12-ம் அதிகாரம் 5-ம் வசனத்தில் எழுதினதாவது: நாம் ஒருங்குடன் கூடிக் கிறீஸ்துவினிடத்தில் ஓர் உடலாகி, நமக்குள்ளே பல உறுப்புகளுமாக நிற்கிறோமென்றார். ஆகையால் சேசுநாதர் திருச்சபையென்னும் உடலுக்குத் தலையொழிய மற்றவர்கள் அர்ச். இராயப்பரும், பாப்புகளும் முதலாய் வேற்றுமையின்றித் தலையாயிராமல் உறுப்புகளாக நிற்பார்களென்பது நிச்சயமாமே என்று பதிதர் சொல்லுகிறார்கள். ஆகிலும் அந்த வசனத்தைச் சொன்னவுடனே, அர்ச். சின்னப்பர் எழுதினதாவது: இதிலே நாம் அடையும் வரப்பிரசாதங்களால் வேற்றுமை உண்டாமென்று

தீர்க்கதரிசன மாதிக்கந் தயை பத்தி மற்ற வரப்பிரசாதங்களைச் சொல்லிக்கொண்டு வருகிறார்.

ஆகையால் அதிலே அர்ச். சின்னப்பர் திருச்சபையில் வருந் தேவ வரப்பிரசாதங்கள் எல்லாஞ் சேசுநாதராகிய தலையினின்று வருவதொழிய வேறொருவராலும் வர அறியாமல், இந்த வகையால் சேசுநாதர் மாத்திரந் திருச்சபைத் தலையென்றும், மற்றவர்கள் அர்ச். இராயப்பரும், அர்ச். பாப்புகளும் முதலாய்ச் சேசுநாதரால் வரப்பிரசாதங்களை அடையும் உறுப்புகளென்றுஞ் சொல்லிக் காட்டினார். இது நாமுஞ் சொல்லுந் தன்மையல்லோ? தேவ வரப்பிரசாதங்கள் நமக்கு அர்ச். இராயப்பராலேயாகிலும், மற்ற அர்ச். பாப்புகளாலேயாகிலும் வராதென்றும், இந்த வகையால் அர்ச். இராயப்பரும், மற்ற அர்ச். பாப்புகளுந் திருச்சபைத் தலைவர் அல்லவென்றும், எல்லாரும் வேற்றுமையின்றிச் சேசுநாதர் தரும் வரங்களால் இரட்சிக்கப்படும் உறுப்புக்களென்றும், வலிய நாமுஞ் சொல்லுகிறோமே. இந்தத் தலைமை சேசுநாதருக்கு மாத்திரமாகி அவர் ஸ்தானத்திருந்து காணப்பட்ட முறையோடு நம்மைப் படிப்பித்தலும், நடத்தலும் அர்ச். இராயப்பருக்கும், மற்ற அர்ச். பாப்புகளுக்கும் சேசுநாதர் தந்த தலைமையென்று சொல்லத்தகும்.

72.— ஆகிலும் இது மிகவும் தெளியும்படிக்கு நாம் அறியவேண்டியதாவது: திருச்சபைத் தலைவர் செய்யத்தகும் இரு தொழில் உண்டாம் முதலாவது, ஞானத் திருச்சபையாகையால் அதிலே உட்பட்ட யாவருக்கும் விசுவாசம் முதலான ஞான வரப்பிரசாதங்களைக் கொடுப்பவராகவேண்டும். இந்த முதல் தொழிலைச் சேசுநாதர் எப்போதும் இப்போதுந் தாம் ஒருவர் செய்து, தாம் ஒருவரே திருச்சபைத் தலைவர் என்னப்படுவார். இரண்டாவது, காணப்பட்ட திருச்சபையாகையால் அதிலே உட்பட்ட யாவருக்கும் விசுவசிக்கத்தகுஞ் சத்தியங்களையும், செய்யத்தகும் முறைகளையும், மறுக்கத்தகுந் தப்பிதங்களையும், கண்ணுக்குக் காட்டலும், காதிற்குச் சொல்லலுந் திருச்சபைத்

தலைவருக்கு இரண்டாந் தொழிலாகும். இந்தத் தொழிலைச் சேசுநாதர் உயிரோடு உலகிலிருக்கும்போது தாம் ஒருவர் செய்தார். மோக்ஷத்தில் அவர் போய் நம் கண்ணுக்கு அகன்றபின்பு, தாம் ஒருவர் செய்யாமல் அர்ச். இராயப்பரையும், இவரைத் தொடர்ந்து வந்த மற்ற அர்ச். பாப்புகளையுங் கொண்டு செய்ய, காணப்பட்ட திருச்சபைக்குக் காணப்படுந் தலைவராக அவர்களை வைத்து நடத்திக்கொண்டு வருகிறார்.

அப்படியே இராசா தன் நாட்டை விட்டு, நெடுநாள் அகன்றிருந்தால், தன்னிடத்தில் இராசாவாக ஆளும்படிக்கு ஒருவனை வைப்பானல்லோ? ஆகிலும் இதனால் அந்நாட்டில் இரண்டு இராசாக்கள் ஆளுவார்களென்று சொல்லத் தகுமோ? இல்லையே. இராசா ஒருவன் தான் இருக்கும்போது தானே ஆளுவானென்றும், தான் அகன்றபோது தான் தன்னிடத்தில்வைத்த மனிதனைக்கொண்டு ஆளுவானென்றுஞ் சொல்லத்தகுமல்லோ. அவ்வண்ணமே சேசுநாதர் தாம் இங்கிருக்கும்போது திருச்சபைத் தலைவராகத் தாமே ஆண்டாரென்றும், இப்பொழுது அகன்றபின்பு தம்மிடமாக வைத்த திருச்சபைத் தலைவராகிய அர்ச். பாப்புவைக் கொண்டு தாமே ஆண்டுகொண்டிருப்பவரென்றுஞ் சொல்லவேண்டிய முறைமைதானே. இதெல்லாம் இப்படி இருக்கையில் உரோமான் திருச்சபை மாத்திரம் இந்நாள் வரைக்கும் வழுவாமல் நின்றதனாலும், அதிலே மாத்திரம் வழுவாத முறையோடு திருச்சபைத் தலைவர் இடைவிடாமல் தொடர்ந்துவந்ததனாலும், உரோமான் திருச்சபை மாத்திரம் மெய்யான சேசுநாதர் திருச்சபையென்று சொல்லத்தகுஞ் சத்தியந்தானே.

73.— ஆகையால் உரோமான் திருச்சபை கத்தோலிக்கு என்னப்படும். அதெப்படியென்றால் கிரேக் பாஷை மொழியாகிய கத்தோலிக்கு என்பதும், பொதுவாய் நிற்குமென்பதும ஒக்கும். பொதுவாய் நிற்குந் திருச்சபை என்பதற்கு அர்த்தமேதெனில் எக்குலத்தாரும், எவ்விடத்தா

ரும், எங்கும் எப்போதும் மோக்ஷக்கரை ஏறுதற்குரிய வழி இதுவென்றும், அதற்கு வேண்டிய வழி இதுவென்றும், இந்தத் திருச்சபையில் ஈடேற்றம் உண்டல்லாதே, அதன் புறத்தில் ஈடேற்றம் இல்லையென்றும் அர்த்தமாகும். உரோமான் திருச்சபை இவ்வகைக் குணத்தை உடையதென்று ஒப்பிக்கும் வழியோவெனில், பதிதர் தாமே மெய்யான திருச்சபைக்கு அப்பாலே கரையேற்றம் இல்லையென்பார்கள். உரோமான் திருச்சபை மாத்திரம் மெய்யான திருச்சபையென்று இப்போது ஒப்பித்தோமே.

ஆகையால் உரோமான் திருச்சபைக்கு அப்பாலே கரையேற்றம் இல்லை. ஆகையால் உரோமான் திருச்சபை மாத்திரஞ் சொன்ன குணத்தையுடையதாகிப், பொதுவாய் நிற்குந் திருச்சபை என்னத்தகும். பதிதர் தாம் தம் மோடோவ்வாமல் பல விபரீதங்களைச் சொல்லி இதிலே பிதற்றினதாவது: எந்தச் சமயத்திலேயானாலும் ஞானஸ்நானம் பெற்று விசுவாசத்தோடிருந்தால் கரை ஏறலாம் என்றார்கள். ஆகிலும் எல்லாவற்றையும் அளவிறந்த ஞானத்துடனே தெளிவாய் அறிந்த சர்வேசுரனிடத்தில், கள்ளக் காசு செல்லும் என்றாற்போல், அவரிடத்தில் பொய்யான விசுவாசஞ் செல்லுமென்று நினைப்பார்களோ? மெய்யான விசுவாசமோவெனில், ஒன்றாயிருக்கும் மெய்யான திருச்சபையிலொழிய அதன் புறத்திருக்கமாட்டாதல்லோ? அதேதெனில் விபரீதமாய் நிற்கும் புறச்சமையங்களில் ஒன்றினைப்பற்றி இவர்கள் ஆமென்க அவர்கள் அல்லவென்றதனால், ஆண்டவர் ஆமும் அல்லவும் ஒன்றினைப்பற்றிச் சொல்லமாட்டாமையால், இரண்டில் ஒன்று அவர் திருவுளம் பற்றினது அல்ல.

ஆகையால் அவர் சொல்லாததைச் சொன்னாரென்று நாம் விசுவசித்தால் பொய்யான விசுவாசமல்லோ. இப்படி இருக்கையில் மெய்யான திருச்சபை இல்லாமல் மெய்யான விசுவாசம் இல்லை. விபரீதஞ் சொல்லமாட்டாதது ஆண்டவர் உண்டாக்கின மெய்யான திருச்சபை ஒன்று மாத்தி

ரமே. ஆகையால், மெய்யான திருச்சபை ஒன்றிலே மாத்திரம், மெய்யான விசுவாசம் உண்டென்று சொல்லக்கடவோம். பதிதரோவெனில் மெய்யான விசுவாசமின்றிக் கரை ஏற்றம் இல்லையென்று ஒத்துக்கொள்ளுகிறார்கள். ஆகையால், மெய்யான திருச்சபை ஒன்றிலே மாத்திரங் கரை ஏற்றம் உண்டென்று சொல்லவுங் கடவார்கள்.

மீளவும் அவனவன் தன் பாவங்களை ஆண்டவர் பொறுத்தாரென்றும், தான் கரை ஏறுவானென்றும், தத்தளியாமல் விசுவசித்தால் கரை ஏறுவானென்று சொன்ன பதிதர் தாமே இப்படி விசுவசிக்க மாட்டார்களென்றும், அதனால் கரை ஏறமாட்டார்களென்றும் எளிதாய் ஒப்பிப்போம். அதெப்படியென்றால் வேதத்தில் எழுதினதையொழிய வேறொன்றும் விசுவசிக்கலாகாதென்று பதிதர் தாமே சொல்லுகிறார்கள். இவருக்கு அவருக்கு ஆண்டவர் பாவங்களைப் பொறுத்தாரென்று வேதத்தில் எழுதப்பட்டதல்லவே. ஆகையால் தன் பாவம் பொறுக்கப்பட்டதென்றும், அதனால்தான் கரை ஏறுவானென்றும் விசுவசித்தல் ஆகாதென்னவுங் கடவார்கள். இதனைத் தாங்கள் விசுவசிக்க மாட்டாமையால் கரை ஏறவுமாட்டார்கள்.

74.— ஆகிலும் அவர்கள் விசுவாசமென்னும்போது, சர்வேசுரன் அருளிச் செய்ததை உட்கொண்டு அநுசரிக்கும் விசுவாசம் அல்ல, கரை ஏறுவேனென்று அஞ்சாத நம்பிக்கையென்று நினைக்கிறார்கள். அப்படி ஒருவன் எத்தனை பாவியாய் நடந்தாலுஞ் சேசுநாதர் பலத்தினால் கரை ஏறுவேனென்று அவன் தளராமல் நம்பின மாத்திரத்தில், தப்பாது கரை ஏறுவானென்பார்கள். ஆகிலும் மதிகெட்டவன் நம்பிக்கை இதுதானல்லவோ? இது ஒரு உவமையால் வெளியாகும்படிக்கு வடக்கிலிருக்கும் நாட்டு இராசாங்கத்தின் முடியைச் சூட வரச்சொல்லி அழைக்கப்பட்ட ஒருவன், கீழ்த்திசை நோக்கிப் போகையில், இது வழி அல்ல என்றார்க்கு, இது வழி அல்லாதாயினும் அந்நாட்டில் சேருவேனென்றும், முடியைச் சூடுவேனென்றுஞ் சற்றுந் தள

ராமல் நம்பியிருக்கிறேன். இந்த நம்பிக்கையால் வடதிசைப் போகாமலும், வடநாட்டிரில் சென்று இராசாங்கம் அடைவேனென்றால் அவனை எல்லாரும் மதி கெட்டவனென்று நகைப்பார்களொழிய அவன் சொன்னதை ஒருவனாயினும் ஒத்துக்கொள்ளமாட்டான்.

அப்படியே மோக்ஷ இராச்சியத்தில் சேர்ந்து முடியைச் சூடும்படிக்கு தேவகற்பனை வழியாகையால், அவ்வழி விட்டுப், பாவமாகிய பெரும் பாதையில் போகிறவன் சேருவேனென்றும், கரை ஏறுவேனென்றுஞ் சற்றும் அஞ்சாமல் நம்பினாலும், கரை ஏறுவானோ? இல்லையே. இப்படியுங் கரை ஏறுவானென்று மதிகெட்டவனொழிய அநுசரிப்பார் ஆருமில்லை. அர்ச். மத்தேயு எழுதின சுவிசேஷம் 19-ம் அதிகாரம் 16-ம் வசனத்தில் ஒருவன் சேசுநாதரை அண்டி சுவாமீ, என்னத்தைச் செய்து நித்திய சீவனை அடைவேனென்றான். அதற்குச் சேசுநாதர், நித்திய சீவனை அடையவேண்டுமாகில், அதனை அடைவாயென்று சந்தேகப்படாமல் நம்புவாயாக வென்றாரோ? இல்லையே. அடையவேண்டுமானால் தேவகற்பனை மீறாமல் நடப்பாயாக என்றார் அல்லோ?

அப்படியே அர்ச். யாகப்பர் எழுதின நிருபம் 2-ம் அதிகாரம் 14-ம் வசனத்தில் சொன்னதாவது: தம்பிமாரே! விசுவாசத்தைக் கொண்டிருக்கிறேனென்று ஒருவன் நல்லொழுக்கம் இல்லாதிருந்தால் பலன் என்ன? அவனை விசுவாசம் ஈடேற்றுமோவென்றார். மீளவும் அவர் தாம் அங்கே தானே 20-ம் வசனத்தில் நல்லொழுக்கமில்லாத விசுவாசம், உயிரில்லாத பிணம் என்றார். ஆகையால் விசுவாசம் உள்ளவன், கரை ஏறுவானென்று பல இடத்தில் வேதத்தில் எழுதப்பட்டது மெய்தானாயினும் அதற்கு அர்த்தமேதெனில், விசுவாசஞ் சகல புண்ணியங்களுக்கும், மோக்ஷ இராச்சியத்துக்கும் வாசலாகி, ஆண்டவர் திருவுளம் பற்றினதை விசுவசியாதவன் கரை ஏறமாட்டான். ஆகிலும் விசுவாசித்தாலும், நம்பினாலுந் தேவகற்பனையின்படியே

நடவாதவனும், கரை ஏறமாட்டானென்பதற்குச் சந்தேக மில்லை.

அப்படியே காமாதுரர், கள்ளர், உலோபிகள், விசுவாச மில்லாமல் பசாசு ஆராதனை செய்தவர்களோடே மோக்ஷ விராச்சியத்தை அடையார்களென்று அர்ச். சின்னப்பர் சொன்னதும் அல்லாமல், இத்தகைப்பட்ட வசனங்கள் வேதத்தில் எங்கும் எழுதப்பட்டதனால் புண்ணிய நடக்கை யில்லாத விசுவாசமும், நம்பிக்கையும் ஈடேற்றத்துக்குப் போதுமென்று சொல்லவும், கருதவுங் கூடாது. ஆகை யால், சேசுநாதர் உண்டாக்கின மெய்யான திருச்சபை ஒன்றிலே மாத்திரம், சேசுநாதர் பாடுபட்ட பலன்கள் உண் டாகி, அதிலே மாத்திரம் மெய்யான விசுவாசமும், மெய் யான புண்ணியமும், மெய்யான கரை ஏற்றமும் உண்டாம். ஆகையால், முன் ஒப்பித்தபடி உரோமான் திருச்சபை மாத் திரமே, சேசுநாதரால் உண்டாக்கப்பட்ட மெய்யான திருச் சபையாகையால், அதிலே மாத்திரம் அப்படிப்பட்ட விசு வாசமும், புண்ணியமும, ஈடேற்றமும் உண்டாகி அதனுட் படாமல் ஒருவரும் மோக்ஷக் கரை ஏறமாட்டார்கள். எவ ருக்கும் பொதுவாய் நிற்குந் திருச்சபை உரோமான் திருச் சபைதானே.

75.— ஆகையால், ஞானஸ்நானம் பெற்றாலும், உரோ மான் திருச்சபைக்கு அப்பாலே நின்ற யாவரும், பொதுச் சபை உணர்ச்சிகளை விட்டு, விசேஷ அபத்த விதிகளை அநு சரித்தவராகையால், வடமொழியால் பதிதரென்றும், தமிழ் மொழியால் புறச்சமயத்தாரென்றும், தங்கள் சமயத்தை உண்டுபண்ணினவனைப்பற்றி லுத்தேரானிகளென்றும், கல் வினியானிகளென்றுஞ் சொல்லக்கடவார்கள். தரங்கம் பாடிப் பதிதரோவெனில், தங்களைச் சுவிசேஷிகளென்பார் களாம். ஆகிலும், பூர்வகாலத்தில் உரோமாபுரிப் படைத் தலைவர் சங்கரித்த நாட்டின் பெயர் தங்களுக்கு எடுத்துக் கொண்டு, ஆப்பிரிக்கா நாட்டைக் கெடுத்தவன் ஆபிரிக்க னென்றும், ஜெர்மானிய இராச்சியத்தைக் கெடுத்தவன்

ஜெர்மானியனென்றும், ஆசியா சீர்மையைக கெடுத்தவன் ஆசியாடிக்கென்றும் பெயராகக் கொண்டார்கள்.

இத்தன்மையால் அந்தப் பதிதருஞ் சுவிசேஷத்தைக் கெடுத்தார்களௌன்ற அடையாளமாகச் சுவிசேஷிகளென்னும் பெயர் வேண்டுமாகில் செல்லுமொழிய லுத்தேர் சொன்ன அபத்தங்களை அநுசரித்தவராகையால் லுத்தேராணிகளென்றும், லுத்தேர் மதக்காரரென்றுஞ் சொல்லப்படுவார்கள். இல்லாவிட்டால், லுத்தேர் தப்பறைக்காரனென்றும், லுத்தேர் மதம் ஈடேற்றம் இல்லாததென்றும், தாங்களும் மறுத்து வெறுக்கக்கடவார்கள்.

11-ம் அதிகாரம்.

உத்தரிக்கிற ஸ்தல விளக்கம்.

76.— கத்தோலிக்கு உரோமான் திருச்சபை வழுவினதென்று ஒப்பிக்க, அதிலே வழங்கி வரும் பல இரகசியங்களும், நடந்து வரும் பல முறைகளும் அபத்தமென்று பதிதர் நிந்தையாகச் சொல்லிக்காட்டப் பிரயாசப்படுகிறார்கள். அவைகளில் சொன்ன பவைமொழிய முதலாவது உத்தரிக்கிற ஸ்தலந்தானே. இது வேதப் புஸ்தகங்களில் அறிவிக்கப்படாமல் மனிதரை ஏய்க்க உண்டுபண்ணின வீண் கதையென்று கல்வீனிபாணிகளும், லுத்தோராணிகளுஞ் சொல்லிக்கொண்டு வருகிறார்கள். ஆகிலும், இதிலே நாம் தெளிவோமே நடக்குமபடிக்குக் கத்தோலிக்கு உரோமன் திருச்சபை படிப்பிக்குந் தன்மையால், உத்தரிக்கிற ஸ்தலம் ஏதென்று முந்திக் காட்டக்கடவோம்.

ஆகையால், இதிலே வேதபாரகர் பொதுப்படச் சொல்லுந் தன்மையாவது: பூமியின் கீழே நாலு பாதாளங்கள் உண்டாம்; எல்லாத்துக்குங் கீழே முடியாத நரகம்; இதன்மேல் உத்தரிக்கிற ஸ்தலம்; இதன்மேல் ஞானஸ்நா

னம் பெறுமல் செத்த அறிவில்லாத குழந்தைகள் இருக்கும் ஸ்தலம்; இதன்மேல் அபிரகாம் மடியென்னும் பிதாக்கள் ஸ்தலமென்னும் நம்முடைய கர்த்தராகிய சேசுநாதர் நமக்காக வேண்டிப் பாடுபட்டு, மோக்ஷ வாசலைத் திறக்கு மட்டும் மோக்ஷத்தை அடைய பேறுபெற்ற மகாத்துமாக்கள் கஸ்தி ஒன்றின்றி, மோக்ஷ தரிசனமுமின்றி, இரட்சிக்குங் கர்த்தர் வருவாரென்று நம்பிக் காத்துக்கொண்டிருந்த ஸ்தலம்.

இதிலே சேசுநாதர் மரணத்தை அடைந்தவுடனே, இறங்கி அந்தப் பிதாக்களுக்குப் பேரின்ப தரிசனத்தைத் தந்து, அவர்களை மோக்ஷ இராச்சியத்துக்குக் கூட்டிக்கொண்டு போனதினுல் இப்போது அங்கே ஒருவருமில்லை அதன் கீழ் இருக்குங் குழந்தைகளோவெனில், வேறொரு வருத்தமின்றி தேவ தரிசனம் இல்லாமையால் என்றென்றைக்கும் மனதில் வருந்திக் கரை ஏற்றமின்றிக் கிடப்பார்கள். நரகத்தில் புதைக்கப்பட்ட பாவிகளோவெனில், எக்காலமும் மோக்ஷ தரிசனம் அடையாமல், வேறே நன்மையும் ஆறுதலும் இல்லாமல், அக்கினி முதல் துன்பங்களெல்லாம் ஒருங்குடன் கலந்து, மிகுந்து கூடிப் பசாசுஞ் சூழ்ந்து, அங்கே விழுந்த நாள் துவக்கின உபாதை எந்நாளும் முடியாமலும், ஓயாமலும், குறையாமலுஞ் சினத்தோடு அவ்வுயிர்களை வருத்த அவர்களும் வேகாமல் வெந்து, சாகாமல் செத்து, முடியாத காலம் உபாதிக்கப்படுவார்களென்பது சத்தியந்தானே.

77.— உத்தரிக்கிற ஸ்தலத்திலேயோ வெனில், பேரின்ப தேவ தரிசனம் இல்லாமையால் வரும் வருத்தமல்லாமல் அக்கினி முதல் பல உபாதைகள் உண்டாம். இதில் உபாதிக்கப்படுவது ஆரெனில்: மெய்யான கடவுளை வணங்காத அக்கியானிகளும் அல்ல, சேசுநாதர் ஸ்தாபித்த மெய்யான திருச்சபையினின்று பிரிந்த பதிதரும் அல்ல. சாவான பாவத்தோடு செத்த கிறீஸ்துவர்களும் அல்ல, இவர்கள் எல்லாருந் தேவ இஷ்டப்பிரசாதமின்றி ஆண்ட

வருக்கு துரோகிகளாய்ச் செத்ததினால் பசாசுகளோடு என்றென்றைக்கும் நரகத்தில் உபாதிக்கப் படுவார்களென்று நம்மோடு இந்நாட் பதிதருஞ் சொல்லுகிறார்கள். ஆகையால், இந்த விஷயத்திலே முந்தி அறியவேண்டியதாவது: இஷ்டப்பிரசாதத்தோடு செத்தவர்களுக்குள்ளே நரகத்திற் போவார் இல்லை. சாவான பாவத்தாலொழிய அற்ப குற்றங்களால் இஷ்டப்பிரசாதம் போக்கடிப்பாருமில்லை. ஆகையால், சாவான பாவங்களின்றி அற்ப குற்றங்களோடு செத்த கிறீஸ்துவர்களுக்குள்ளே நரகத்தில் போவாரில்லை. ஆயினும் அற்ப குற்றத்தோடு முதலாய் மோக்ஷத்தில் சேரப்படாதென்று அர்ச். அருளப்பர் கண்ட காட்சியில் 21-ம் அதிகாரம் 27-ம் வசனத்தில் எழுதிவைத்தார்.

ஆகையால், சாவான பாவமின்றி அற்ப குற்றங்களோடு செத்தவர்கள் மோக்ஷத்திற்குச் சேருமுன்னே அந்த அற்ப குற்றங்களுக்கு உத்தரித்துச் சுத்தராகக் கடவார்கள். இதுவே நாம் சொல்லும் உத்தரிக்கிற ஸ்தலம். மீளவும் நாம் மனம் பொருந்திச் செய்த சாவான பாவத்தால் நமக்கு இரண்டு கேடு உண்டாம். பாவதோஷமும், அபராதக் கடனும்; பாவதோஷத்தால் இஷ்டப்பிரசாதத்தைப் போக்கடித்து சுவாமிக்கு துரோகிகளாவோம். அபராதக் கடனாலோவெனில் அந்த தோஷந் தீராதேபோனால் நரகத்தில் என்றென்றைக்கும்வேக நம்மேல் கடனுண்டாம். ஆண்டவர் நம்முடைய பாவத்தைப் பொறுத்து இஷ்டப்பிரசாதத்தைத் தந்து, சொன்ன தோஷம் போனாலும் நித்திய அபராதக் கடனே அநித்தியமாகி, நாமே வருந்தி அதனை உத்தரிக்கக்கடவோம். ஆகையால், ஞானஸ்நானத்துக்குப் பிறகு செய்த பாவத்தால் மனநொந்து, கர்த்தர் கட்டளையிட்ட பச்சாத்தாபத்தோடு திரும்பினவனுக்கு ஆண்டவர் தமது இஷ்டப்பிரசாதத்தைத் தந்து, சொன்ன தோஷமும், நித்திய அபராதக் கடனுந் தீருமென்பது நிச்சயந்தானே.

ஆகிலும், ஞானஸ்நானத்திலே பாவ தோஷமும்,

அபராதக் கடனும் எல்லாம் முழுதும் பொறுக்கப்படுவதல்லாமல் அதற்குப் பிறகு செய்த பாவத்தினின்று திரும்பின எல்லாருக்கும் எப்போதும் நித்திய அபராதக் கடன் இல்லாதபடிக்கு முழுதும் அதை ஓரோரிடத்திலன்றி ஆண்டவர் பொறுக்கவும் இல்லை. அப்படியே அரசர் இரண்டாம் ஆகமம் 12-ம் அதிகாரம் 13 ம் வசனத்தில் பாதாரத்தைத் தீண்டி தாவீதரசன் செய்த பாவத்தினால் ஆண்டவருக்கு ஏற்க மனநொந்து அழுது திரும்பின அளவில், நாத்தானென்னுந் தீர்க்கதரிசி சொன்னதாவது: சர்வேசுரனும் உன் பாவத்தைப் பொறுத்தார். ஆயினும் அக்கியானிகள் தேவ நாமத்தைத் தூஷணிக்கக் காரணமானாய் என்றதனால் அந்தப் பாவத்தால் உனக்குப் பிறந்த பிள்ளை சாகுமென்றார். இதோ பாவதோஷத்தை ஆண்டவர் பொறுத்த பின்பும் வந்த ஆக்கினை.

அப்படியே மோயீசன் எழுதின 4-ம் ஆகமம் 12-ம் அதிகாரத்தில் அவர் கூடப் பிறந்த மரியாவென்பவள் ஆண்டவர் மேலே முறைப்பட்டதனால் எங்கும் வெண்குஷ்ட வியாதியைக் கொண்டு மூடிக்கொள்ள மோயீசன் வேண்டுதலினால் ஆண்டவர் இரங்கி, அவள் பாவத்தைப் பொறுத்தாலும் அதன் பிறகு ஏழுநாள் அபராதமாய் வியாதி தீராமல் கிடந்தாளல்லோ? அப்படியே பாவம் பொறுக்கப்பட்டிருந்தாலும், இன்னம் அபராதம் உத்தரிக்கக் கடன் நிற்கும் என்றதனால் அர்ச். மத்தேயுஸ் சுவிசேஷம் 3-ம் அதிகாரம் 8-ம் வசனத்திலும், அர்ச். லூக்காஸ் சுவிசேஷம் 3-ம் அதிகாரம் 8-ம் வசனத்திலும் நாம் செய்யுந் தவமானது நல்ல கனிகளைப் பழுத்துத் தரவேண்டுமென்று எழுதினதல்லோ? இதற்கு அர்த்தமேதெனில், பச்சாத்தாபமென்னுந் தவத்தால் பாவதோஷந் தீர்ந்தாலும், அந்தப் பச்சாத்தாபத்தின் பலனாக மரண பரியந்தந் தவத்தைவிடாமல் பாவத்தின் அபராதக்கடனை உத்தரிப்பதற்கேற்ற தருமங்களைச் செய்யக் கடவோமென்று கர்த்தர் அதிலே நமக்குப் படிப்பித்தார்.

அப்படியே இவ்வுலகரசர் முதலாய்க் கடுமையான

துரோகத்தைச் செய்தவனுக்கு ஓரோரிடத்தைப் பொறுத்துத் தலை யாக்கினைப் பொறுத்தாலும், வேறுக்கினை அபராதமாய் இடுவாரல்லோ? அப்படியே, அரசர் 2-ம் ஆகமம் 3-ம் அதிகாரம் 13-ம் வசனத்தில் அப்னரென்பவனோடு தாவீதரசன் சிநேகத்தைச் செய்தாலும், மீக்கோலென்பவளைக் கூட்டிக்கொண்டு வந்தாலொழிய என் முகத்தில் விழிக்கவேண்டாமென்றார். மீளவும் அதிலேதானே 14-ம் அதிகாரம் 24-ம் வசனத்தில் அப்சலோனென்னுந் தன் மகன் செய்த குற்றத்தை தாவீதிராசன் பொறுத்ததற்கு அடையாளமாக அவன் தன் வீட்டில் வந்திருக்க உத்தாரஞ் செய்தாலும், அபராதமாய் தன் முகத்தைக் காணவேண்டாமென்றார். இத்தகைப்பட்ட பலவும் வேதத்தில் எழுதப்பட்டமையால் ஆண்டவர் பாவ தோஷத்தைத் தீர்த்துத் தமது இஷ்டப்பிரசாதத்தைத் தந்தாலும், பொது முறையால் அவித்திய அபராதக் கடன் முழுதுந் தீராமல் பாவிகள் மேலே கிடக்குமென்பது நிச்சயந்தானே.

78.— ஆகிலும், இன்னும் நாமும் பாவங்களுக்காக உத்தரிக்கவேண்டியதோர் கடன் நமக்கு உண்டானால், சேசுநாதர் பூரணமாய் உத்தரித்துப் பாடுபட்டு அடைந்த அளவில்லாத பலன்களுக்கு ஈனமாகுமென்று பதிதர் ஞானிகளைப்போல் சொல்லி, வேசிகளைப்போல் வெட்கமில்லாமல் உரோமான் திருச்சபையார்மேலே இல்லாத பொய்யெல்லாம் இந்த விஷயத்திலே கக்கிக்கொண்டு வருகிறார்கள். அப்படியே தரங்கம்பாடியில் 1726-ம் வருஷத்திலே லுசித்தான் பாஷையில் அச்சுப் பதித்துத் தந்த நமக்கும் அவர்களுக்கு முள்ள வித்தியாசமென்னும் புஸ்தகத்தின் எட்டாம் வித்தியாசத்தில் அவர்கள் சொன்ன பொய்களாவது: சேசுநாதர் சென்மப் பாவத்துக்காக மாத்திரம் மரித்தாரென்றும், அவர் அடைந்த மரணத்தினால் நம் பாவதோஷத்துக்கு உத்தரித்ததொழியப் பாவத்தினால் வரும் அபராதக் கடனுக்கு உத்தரியாததினால், அதற்கு நாம் உத்தரிக்கக்கடவோமென்று நாம் சொன்னதாக எழுதி வைத்தார்கள்.

ஆகிலும் இந்த இரண்டு அபத்தங்களும் உரோமான் திருச்சபையாருக்குள்ளே ஒருவராலாகிலும், எக்காலத்திலாகிலுஞ் சொல்லப்பட்டதில்லை. இதிலே உரோமான் திருச்சபை எப்போதும் இப்போதும் படிப்பித்த சத்தியத்தை இங்கே சொல்லிக் காட்டுவோம். அதேதெனில், சேசுநாதர் ஒருவரே மனிதர் அனைவருஞ் செய்த எல்லாப் பாவங்களுக்காக உத்தரிக்க வல்லவரென்றும், அப்படியே சிலுவையில் அறையுண்டு அடைந்த மரணத்தினால், சென்மப் பாவத்துக்காகவும், சகல கர்மப் பாவங்களுக்காகவும், பாவதோஷமும் அபராதக் கடனுந் தீரவேண்டின முறையின்மேலும் அளவில்லாத உத்தம பேறையால் உத்தரித்தாரென்றும், உரோமான் திருச்சபை விசுவசிக்குஞ் சத்தியந் தானே. ஆகிலும், நாம் அடைந்த பலனை நமக்குத் தரத் திருவுளமாகி, அதற்கு அளவும், வகையும் அவர் தம் சித்தத்தின்படியே ஸ்தாபிக்க வல்லவரல்லவோ?

ஆகையால், ஒன்றில் தாம் அடைந்த பலன்கள் பூரண தனி தயை முறையால் நமக்குத் தவச் சித்தமாகிப் பாவதோஷமும், அபராதக் கடனும் முழுதும் பொறுக்க வல்லவர்தாமே. ஒன்றில் தயையோடு கூடின நீதி முறையால் பாவதோஷந் தீர்ந்து, நித்திய அபராதக்கடன் முழுதும் தீராமல் மாற்றிய நித்திய அபராதக் கடனைப் பொறுக்க வல்லவர்தாமே. முதல்வகை அளவில்லாத தயைக்குரியதாகையால் ஞானஸ்நானத்தில் அந்த உத்தம வகையால் மனிதர் பாவங்களைப் பொறுக்கிறார். ஆதலால், ஞானஸ்நானத்திற்கு முந்திச் செய்த பாவங்களுக்காக உத்தரிக்கும்படிக்கு அற்பக் கடனாகிலும் நமக்கு நிற்கிறதில்லையென்றோம்.

ஆகிலும், இந்த சகாய நன்றி அறியமாட்டாமல் ஞானஸ்நானம் பெற்ற பின்பு செய்த பாவம் பச்சாத்தாபத்தால் பொறுக்கும்போது, தயையோடு கூடின நீதிமுறையால் பாவதோஷமும், நித்திய அபராதக் கடனும் பொறுப்பதொழிய நாளுஞ் சிலநாள் சில தவங்களைச் செய்து, சில துன்பங்களை அநுபவித்து உத்தரிக்கத்தகும் அநித்திய அபராதக் கடன் நிற்குமென்றோம். இதுவுஞ் சேசுநாதர்

பாடுபட்டு அடைந்த பலன்களுக்கு ஈனமல்ல. சென்மப் பாவத்திற்காக முழுதும் பூரணமாய் சேசுநாதர் உத்தரித்தாரல்லோ? அப்படியாகிலும் சென்மப் பாவத்தால் வந்த மரணக் கடன் தீர்ந்ததோ? இல்லையே. அந்தக் கடன் தீராமையால் அதற்காக உத்தரித்து ஆண்டவர் அடைந்த பலன்களுக்கு ஈனமோ என்ன ?

ஆகையால் சேசுநாதர் செய்த உத்தரிப்புப் போதாததனால் அந்தக் கடன் நிற்குமென்றால், அவருக்கு ஈனந்தானே. இது நாம் சொல்லுந் தன்மையல்ல. தாம் அடைந்த பலனை அவ்வளவுமாத்திரம் நமக்குக் கொடுக்கச் சித்தமாகிக் கட்டளையிட்டதனால் நிற்குங் கடன் அதென்று சொல்லுகிறோம். இதுவும் நியாயத்தின்படியே கட்டளையிட்டதுதானே. தயையோடுகூடத் தமது நீதி விளங்கவும், பாவத்தின் அகோரந் தோன்றவும், ஆக்கினைக்கு அஞ்சி நாம் பாவங்களை அதிகமாய் வெறுக்கவும், அர்ச். சின்னப்பர் 8-ம் அதிகாரம் 17 ம் வசனத்தில் உரோமாபுரியாருக்கு எழுதினாற்போல கிறீஸ்துவோடு மோக்ஷத்தில் வாழ அவரோடு இங்கே கஸ்திப்பட்டுப் பொறுமை காட்டவும் முழுதும் அபராதக் கடனைப் பொறாமல் நித்திய அபராதம் அநித்தியமாகத் திருவுளமானார்.

மீளவும் பிறகு நிற்குங் கடனை உத்தரிக்க நாம் செய்யுந் தருமமெல்லாம், அவர் பாடுபட்டு அடைந்த பலனால் உதவுமொழிய அது இல்லாமல் உத்தரிக்க நமக்கு ஒரு வல்லமையும் இல்லையென்று விசுவசிக்கக் கடவோம். இத்தன்மையால் நிற்கும் அபராதக் கடன் ஒன்றில் இவ்வுலகில் சாகுமுன்னே தவத்தாலும், தருமங்களினாலுந் தீரவேண்டியது. ஒன்றில் இங்கே முழுதுந் தீராமல் செத்தால், உத்தரிக்கிற ஸ்தலத்தில் தீரவேண்டியதென்று சொல்லக்கடவோம். இந்தக் கடன் ஒவ்வொருத்தனுக்கும் வெவ்வேறாகையால், ஒவ்வொருத்தன் உத்தரிக்கிற ஸ்தலத்தில் அனுபவிக்கும் வேதனை அகோரமும், நாளளவும் வெவ்வேறாகுமென்று சொல்லுவோம்.

79.— பின்னையுஞ் சலொமோன் எழுதின 2-ம் ஆகமம் 9-ம் அதிகாரம் 5-ம் வசனத்தில் செத்தவர்கள் நவமாய் ஒரு பலனும் அடையார்களென்றார். அப்படியே வேதத்திலே பல இடத்தில் சொன்னபடி இந்தக் காலம் மாத்திரம் பலனை அடையுங் காலமாகையால், உத்தரிக்கிற ஸ்தலத்தில் கிடக்கும் ஆத்துமங்களெல்லாம் இஷ்டப்பிரசாதம் முதலான வரங்களாலும், விசுவாசம் பத்தி முதலான புண்ணியங்களாலும், ஆண்டவருக்கு உகந்தவைகளாயினும், தமக்கு வேதனை குறைக்கவும், பலனை அதிகமாய் அடையவும் வல்லமையில்லை. அங்கே கிடக்குமளவும் பலனை விளைவிக்கும் புண்ணியமும், ஆக்கினை விளைவிக்கும் பாவமும் வர அறியாது. நாமோவென்றால், பூசை செப தான முதலிய தருமங்களால், அந்த ஆத்துமங்களுக்குள்ள வேதனை குறையும்படிக்குச் செய்ய வல்லமையும், கடனும் நமக்கு உண்டாம்.

அர்ச். அகுஸ்தீனென்பவர், அர்ச். சின்னப்பர் எழுதினதின்மேல் வியாக்கியானஞ் செய்த 312-ம் பிரசங்கத்திலே சொன்னதாவது: திருச்சபை வேண்டுதலினாலேயும், திவ்விய பூசையினாலேயும், தந்த பிச்சையினாலேயுஞ் செத்தவர்களுக்கு உதவியாமென்பதற்குச் சந்தேகம் இல்லையென்றார். அப்படியே அப்போஸ்தலர் நாளிலே இருந்த அர்ச். சாந்தப்பர் கற்பனை ஸ்தாபித்த 8-ம் புஸ்தகம் 47-ம் அதிகாரத்தில் செத்தவர்களுக்கு வேண்டி அந்நாளிலே பொதுவாய் வழங்கிச் சொல்லப்பட்டிருந்த நெடிதோர் மந்திரத்தை எழுதி வைத்தார். அப்போஸ்தலர் நாளிலிருந்த அர்ச். தியோனிசியுஸென்பவர் எக்கிளேசியாஸ்திக்க வியேரற்கியவென்னும் புஸ்தகம் 7-ம் அதிகாரம் 3-ம் பிரிவிலே செத்தவன் செய்திருந்த பாவங்களை ஆண்டவர் பொறுத்து மோக்ஷ தரிசனத்தை அவனுக்குக் கொடுக்கும்படி அவனுக்காக மேற்றிராணியார் வேண்டிக்கொள்ளும் வகையை சொல்லிக்கொண்டு வருகிறார்.

அப்படியே கர்த்தர் திரு அவதாரத்தின் பின்பு,

110-ம் ஆண்டிலிருந்த தெற்துலியானென்பவர் சேவித்த வர் முடியென்னும் புஸ்தகத்தில் செத்தவர்களுக்காக வேண்டுவது அப்போஸ்தலர்மார் சொல்லிவந்த முறையென்று எழுதிவைத்தார். அப்படியே அப்போஸ்தலர் நாள் முதற்கொண்டு இந்நாள் வரைக்கும், திருச்சபையிலிருந்த வேதபாரகர் எல்லாருஞ் சொல்லிக்கொண்டு வந்தார்கள். ஆகையால் திருச்சபையினின்று செத்தவர்களுக்கு இரங்கி அவர்கள் உபாதனை குறைய திவச முதலான தருமங்களை நடத்திக்கொண்டு வருவது நமக்கு நியாயமுங் கடனுமாமே. ஆகிலும் தரங்கம்பாடியிலிருக்கும் லுத்தேரானிகள் மோக்ஷம், நரகமென்று இரண்டொழிய, உத்தரிக்கிற ஸ்தலம் இல்லையென்று சொல்லிக்கொண்டு வருகையில், நடுநாட்டிலே மனிதரை விட்டுத் தம் மதத்திலே செத்தவர்களுக்கு மோக்ஷ விளக்கு எடுப்பானேன்? மோக்ஷவாசிகளுக்கு உதவி வேண்டுமோ? நரகவாசிகளுக்கு உதவியாகுமோ? இதற்கு அவர்கள் இலௌகிகத்தைப்பற்றிச் செய்வோம் என்றார்களாம். ஆகிலும், பதிதரன்றி இலௌகிகத்தைப் பற்றித் தாம் அநுசரிக்கும் வேத சத்தியங்களை மறுத்து நடப்பவர்கள் உண்டோ?

80.— இன்றைவரைக்குங் கத்தோலிக்கு உரோமான் திருச்சபை படிப்பித்த தன்மையால், உத்தரிக்கிற ஸ்தலமும் அதற்கு அடுத்த பலதையும் வெளிப்படுத்தினோம். இப்பொழுது இங்கே இப்படிப்பட்ட ஸ்தலம் உண்டென்று ஒப்பிக்கக்கடவோம். இதிலே முன் சொன்ன நியாயங்களினால் உத்தரிக்கிற ஸ்தலம் உண்டென்று தெளிவாய்க் கண்ணுடைய பாவருங் காண்பாராயினும், விசுவசிக்கத் தகுஞ் சத்தியம் இதுவென்று காட்டாதவனுக்கு வேத உதாரணங்களினால் ஒப்பிப்போம். மக்கபெயர் இரண்டாம் ஆகமம் 12-ம் அதிகாரத்தில் யூதஸ் என்பவர் தம் படையிலே செத்தவர்களுக்கு வேண்டிய் பூசை செய்ய எருசலேம் பட்டணத்திலிருந்த கோயிலுக்கு வெகு பணங்களை அனுப்பினார் என்று சொன்ன பின்பு, 46-ம் வசனத்தில் எழுதினதா

வது: ஆகையால் செத்தவர்களுடைய பாவக் கடன் தீர அவர்களுக்காக வேண்டிக்கொள்வதே உத்தம நினைவு தானே, பலனுள்ள நினைவுதானே என்று எழுதியிருக்க வாசிக்கிறோம்.

ஆகையால் செத்தவர்களுக்குந் தீரத்தகும் பாவக் கடன் உண்டென்றும், அதனைத் தீர்க்க நம்மால் உதவியாகும் என்றும், அதனால் முன் சொன்னபடி உத்தரிக்கிற ஸ்தலம் உண்டென்றும், வேத உதாரணத்தாற் சொல்லக் கடவோம். பின்னையும் அர்ச். மத்தேயுஸ் எழுதின சுவிசேஷம் 12-ம் அதிகாரம் 32-ம் வசனத்திலே சேசுநாதர் திருவுளம்பற்றினதாவது: இஸ்பிரீத்துசாந்துவைத் தூஷணித்த பாவம், இந்நாளிலேயும், செத்த பின்பு வரும் நாளிலேயும், பொறுக்கப்படாத பாவம் என்றார். ஆகையால் இந்தப் பாவஞ் செத்த பிற்பாடும் பொறுக்கப்படாது என்றால், செத்த பிற்பாடும் பொறுக்கத்தகும் பாவம் வேறு உண்டென்பதாகுமல்லோ ?

அப்படியே ஒருவன் வைத்திருந்த மணியின் மேலே தனக்கிருக்கும் பிரியத்தைக் காட்ட, இதை என் பிதாவுக்குங் கொடேன் என்றால், என் பிதா கேட்ட யாவையுங் கொடுக்க இருக்கிற நான் இந்த மணியை அவருக்குங் கொடேன் என்றபோது, அதன்மேல் எனக்கிருக்கும் பிரியத்தை அறியக்கடவீர்கள் என்றாற்போல் ஆயிற்றல்லோ? அத்தன்மையால் சேசுநாதரும் இஸ்பிரீத்துசாந்துவைத் தூஷித்த பாவத்தின் அகோரத்தைக் காட்ட இந்நாளிலேயும், செத்த பின்பும், பொறுக்கப்படும் பாவங்கள் இருந்தாலும், இதுமாத்திரம் எப்போதும் பொறுக்கப்படாது என்றார். ஆகையால் வேத நியாயங்களினால் செத்தவர்களுக்குச் சில பாவங்கள் பொறுக்கப்படும் இடம் உண்டாமே. உண்டானால் அதுவே நாம் சொல்லும் உத்தரிக்கிற ஸ்தலந் தானே.

81.— மீளவும் அர்ச். சின்னப்பர் கொரிந்தியருக்கு எழுதின முதல் நிருபம் 3-ம் அதிகாரம் 10-ம் வசனந்

துவக்கி எழுதினதாவது: சர்வேசுரன் எனக்குத் தந்த வரப்பிரசாதங்களினால் அறிந்த சிற்பாசாரியன் அடி அஸ்திவாரமிட்டேனல்லோ? நானிட்ட அஸ்திவாரஞ் சேசுகிறீஸ்துதானே. இந்த அஸ்திவாரமொழிய, எவராலும் வேறே இடவும்படாது. ஆகையால் மற்றவர் இந்த அஸ்திவாரத்தின்மேலே வேலை நடத்திக்கொண்டு வருவது சரிதானே. ஆகிலுந் தான் நடத்தின வேலை ஏதென்று அவனவன் பார்க்கக்கடவான். இந்த அஸ்திவாரத்தின்மேலே பொன், வெள்ளி, நவமணிகளைக்கொண்டு வேலை செய்தாலும்; மரம், வைக்கோல், செத்தைகளைக்கொண்டு வேலை செய்தாலும் தானே இனி வெளியாகும்.

அதேதென்றால் இது எல்லாவற்றையும் அக்கினியால் விளங்கும் ஆண்டவருடைய நாள் வெளிபாக்குமே. அன்று தானே அவனவன் செய்த வினை எப்படிக்கொத்ததென்று அக்கினிதானே சோதித்துக் காட்டுமே. அன்று யாதாம் ஒருத்தன் வேலை அழியாதிருந்தால் அவனே பலன் அடைவான். வேறே யாதாம் ஒருத்தன் வேலை வெந்து அழிந்தால் சேதப்படுவானாயினும், அந்த வேலை செய்தவன் நெருப்பிலே நடந்தவனாகக் கரை ஏறுவான் என்று அர்ச். சின்னப்பர் இவை எல்லாந் திருவுளம்பற்றினார். அர்ச். சின்னப்பர் எழுதினதிலே சிலவைகள் எவருக்குங் கண்டுபிடிப்பதற்கு அரிதாமென்று அர்ச். இராயப்பர் எழுதினாரல்லோ? அவைகளுள் இப்போது சொன்ன வசனம் மிகவும் அரியதென்று அர்ச். அகுஸ்தீன் எழுதி வைத்தார். ஆகிலும் வேதபாரகர் எல்லாரும் இதிலே சொன்னதை ஆராய்ந்து அந்த வசனத்துக்குரிய அர்த்தத்தைக் காட்டப் பிரயாசப்படுவோம்.

ஆகையால் கொரிந்தியருக்கு உறுதிப்படும்படிக்கு உணர்சிகளைச் சொல்ல அர்ச். சின்னப்பர் காட்டின உவமையாவது: முன் போட்டிருந்த நல்ல அஸ்திவாரத்தின் மேல் ஒருவன் நவமணிகளைப் பொன்னாலும், வெள்ளியாலும், இசைபடச் சேர்த்து சூழச் சுவர்களைக் கட்டி மேலே

அவைகளால் வடிவாக மூடி, தான் உள்ளே வாழ்ந்திருக்க, வேறொருவன் அப்படிப்பட்ட நல் அஸ்திவாரத்தின்மேலே மரங்களால் சுவர்களை செய்து, வைக்கோலால் மூடி, தான் உள்ளே இருக்கச் செய்த இருவகை வீட்டில் ஒருவன் நெருப்பை வைத்தால், முன் சொல்லப்பட்டவன் வீடு அழியாமலும், தான் வருந்தாமலும் வீற்றிருப்பானல்லோ? மரத்தால் செய்யப்பட்ட வீடோவெனில், வெந்து அழிந்து முழுதுஞ் சேதமாய்ப் போகிறதுந் தவிர, அதிலே இருந்தவன் சாகாதபடிக்குச் சூழப்பற்றின நெருப்பிலே பாய்ந்து, நெருப்பினை மிதித்தோடி அங்கங்கே வெந்துபோய் வருந்தின பின்பு பிழைப்பானொழிய, மற்றப்படி அல்லவென்று அர்ச். சின்னப்பர் உவமையாக மனிதருக்குச் சம்பவிக்குந் தன்மையைக் காட்டினார்.

ஆகிலும் இதில் அவர் சொன்னபடி அஸ்திவாரஞ் சேசுநாதர் தாமே. அவர் திருவுளம்பற்றின வேதந்தானே. அஸ்திவாரமிட்டவரோவெனில், அப்போஸ்தலர்களும் அவர்கள் வழியாகச் சத்தியவேதத்தைப் போதிக்குங் குருக்களும். இப்படி இவர்கள் சொன்ன உபதேசத்தினால் விசுவாசத்தோடு சத்தியத்தை கைக்கொண்டு, ஞானஸ்நானம் பெற்ற யாவரும் தங்களிடத்துச் சகல புண்ணியங்களுக்கு அஸ்திவாரமாக சேசுகிறீஸ்து நிற்பது நிச்சயந்தானே. அதன் பிறகு அந்த அஸ்திவாரத்தின்மேல் வீட்டைக் கட்டுகிறவர் ஆரெனில், அக்கியானிகளுமல்ல, பதிதருமல்ல. அவர்கள் கிறீஸ்துவை அநுசரியாததினாலும், இவர்கள் கிறீஸ்துவின் மெய்யான வேதத்தினின்று பிரிந்ததினாலும், அந்த அஸ்திவாரத்தை விட்டு நிலைகொள்ளாத மணல்மேலே வேலை செய்தவர்கள் என்னப்படுவார்கள். ஆகையால் அக்கியானிகளும், பதிதர்களும், பொறுமை காட்டினாலும், தானங் கொடுத்தாலும், தவஞ் செய்தாலும், பலன் ஒன்றின்றி அவை எல்லாம் அஸ்திவார மில்லாமையால் தானே அழிந்து விழும் பொய்யான தருமங்களாகும் என்று வேத உதாரணங்களால் அறிகிறோம்.

ஆகையால் சேசுநாதர் ஸ்தாபித்த மெய்யான திருச்சபையில் உட்பட்டிருந்தவர் மாத்திரம் அந்த அஸ்திவாரத்தின்மேலேவீட்டைக் கட்டினவர் என்று சொல்லத்தகுமே. இவர்களுக்குள்ளேயும் விசுவாசம், நம்பிக்கை, பத்தி, பொறுமை, தவம், தானம் மற்றச் சுகிர்த நல்லறங்களை விடாமல், நன்னெறியில் நடந்துகொண்டவர் எல்லாரும் பொன் மணி வெள்ளிகளைக்கொண்டு அழியாத அரண்மனைகளைக் கட்டினவராவார்கள். நெருப்புமுகத்தில் அழியும் மர வீட்டைக் கட்டி, வைக்கோலால் மூடினவர் யாரெனில், அவர்கள் கடைசியிலே நெருப்பு வழியாகப் போய், வருந்திக் கரை ஏறிப் பிழைப்பார்கள் என்று அர்ச். சின்னப்பர் சொன்னதனால் காமம், கோபம், ஆங்காரம் மற்றச் சாவான பாவங்களோடு செத்தவர்களல்ல என்று சொல்லக்கடவோம். அதேதெனில், சாவான பாவத்தைக்கொண்டு செத்தவன் முடியாத நரகத்தில் விழுந்து எந்நாளுங் கரை ஏற மாட்டான் என்று இந்நாட் பதிதர்களும் நம்மோடு சொல்லுகிறார்கள்.

ஆகையால் சேசுகிறீஸ்துவாகிய அஸ்திவாரத்தின் மேல் மரத்தாலும் வைக்கோலாலும் வீட்டை கட்டினவர் யாரெனில், சத்தியவேதத்தை அநுசரித்து, சாவான பாவங்களுக்கு இடங்கொடாமல், செவ்வழியில் இடறி அடிக்கடி அற்பப் பாவங்களைக் கட்டிக்கொண்டு வருகிறவர் என்று சொல்லக்கடவோம். ஆகிலும் இது ஞான வீடாகையால், அந்த அஸ்திவாரத்தின் மேல் அவனவன் செய்த வேலை இப்போது கண்ணுற் காணப்படாமல், பூவுலகிற் செய்த அற்பத் தீவினை எல்லாஞ் சுட்டழிக்கும் நெருப்பினால் விளங்கும். அதெப்படியெனில், தனித்தீர்வை நாளில் அவனவன் செய்த தீவினையும், நல்வினையுங் கர்த்தர் நீதி அக்கினியால் சோதித்து ஆராய்ந்து, ஓர் அற்பக் குற்றக் கலப்பின்றி, பொன்னும் மணியுமாக நின்ற நல்வினை செய்தவர்கள் பலனை அடைய, மரமும் வைக்கோலுமாக வெந்து அழிந்து அற்ப தீவினை செய்தவர்கள், அந்த வினையால் ஒரு

பிரயோசனமும் அடையாமல், அவைகள் முழுதும் வேகக் காண்பார்கள். தாங்களோவெனில் சாவான பாவமின்றி, இஷ்டப்பிரசாதத்தோடு செத்ததினால் கரை ஏறுவார்கள். ஆயினும் முன்னே நெருப்பிலே நடந்து போனாற் போல உத்தரிக்கிற ஸ்தலத்தில் அநேக நாள் வருந்தின பின்பு கரை ஏறுவார்களொழிய, மற்றபடியல்ல. இதுவே அர்ச் சின்னப்பர் திருவுளம் பற்றினதற்குரிய அர்த்தமாமே. ஆகையால் இந்நாட் பதிதர் வேண்டாமென்றாலுஞ் சாவான பாவங்களொழிய தேவ இஷ்டப்பிரசாதத்தைப் போக்கடியாத அற்ப பாவங்கள் உண்டென்றும், அந்தப் பாவங்களோடு செத்தவன் உத்தரிக்கிற ஸ்தலத்தில் கிடந்து நெருப்பினால் சுத்தனாகி, மோக்ஷ கரை ஏறுவான் என்றும் வேதத்தில் சொல்லப்பட்டது நிச்சயந்தானே. இப்படியே அர்ச். தெயொபிலும், எரோணிமுசும், அகுஸ்தீனும், தேயோதொரெத்து மன்றி, முதல் 500 வருஷத்தில் பதிதர் சொன்னபடி திருச்சபை வழுவாதிருக்கையில் வழங்கின அநேக வேதபாரகர், இந்த அர்ச். சின்னப்பர் வசனத்துக்கு அர்த்தஞ் சொல்லி, உத்தரிக்கிற ஸ்தலம் உண்டென்று ஸ்தாபித்தார்கள்.

82:—இது அளவின்றி விரியுமென்று அஞ்சி, உத்தரிக்கிற ஸ்தலம் உண்டென்று ஒப்பிப்பதற்குள்ள இத்தகைப்பட்ட பற்பல வேத உதாரணங்களை எடுத்துக்காட்டாமல் சொன்னது போதுமென்றிருக்கிறோம். இதுவுந்தவிர, வேதத்தில் இதற்கு உதாரணங்கள் இல்லாதாயினும், முன் சொன்னபடி அப்போஸ்தலர் நாளில் இருந்தவர்கள் துவக்கி இந்நாள் வரைக்கும் வழங்கின வேதபாரகர் எல்லாரும், செத்தவர்களுக்காக வேண்டிக்கொள்வது திருச்சபை முறைமை என்று எழுதி, அதனை மறுத்தவர் ஒருவரும் இல்லாமையால், அப்போஸ்தலர் படிப்பினையால் துவக்கித் திருச்சபையில் வழங்கின முறை இது என்று சொல்லக்கடவோம். ஆயினும் உத்தரிக்கிற ஸ்தலம் இல்லாதாயின் செத்தவர்களுக்காகச் செய்த வேண்டுதல் அபத்தமாமே.

ஆகையால் செத்தவர்களுக்காக வேண்டுவது அப்போஸ்தலர் படிப்பினையால் வந்த திருச்சபை முறையாகக் கொள்ள, உத்தரிக்கிற ஸ்தலம் உண்டென்று அப்போஸ்தலர் படிப்பித்த விசுவாசமாமே. இந்த முறையின் பழமை உச்சிப்பகலினும் விளங்கினதினால், கண் மூடின பதிதரும் அதனைக் கண்டு, மறுக்கமாட்டாமற் போனார்கள். அப்படியே பதிதனாகிய பெதுருமாற்தீர் என்பவன் முன்சொன்ன அர்ச். சின்னப்பர் அதிகாரத்திற்கு வியாக்கியானஞ் செய்த புஸ்தகத்தில் எழுதினதாவது: திருச்சபை எப்போதுஞ் செத்தவர்களுக்காக வேண்டிக்கொண்ட முறையை எங்களுக்குச் சொல்லி வருகிறார்கள். இது மெய்தானே என்றான். கல்வீனோவென்றால், கற்பனைகளின் 3-ம் காண்டம் 5-ம் அதிகாரம் 10-ம் பிரிவிலே சொன்னதாவது: இதற்கு முன்னே 1300 வருஷந் துவக்கிச் செத்தவர்களுக்கு வேண்டிப் பிரார்த்தித்துக்கொள்ளுவது நடந்த முறைதானே.

ஆகிலும் முன்னிருந்த எல்லாரும் இடறித் தப்பிதமாய் நடந்ததை சொல்லுகிறேன் என்றான். அப்படியே அப்போஸ்தலர் நாள் முதற்கொண்டு சகல நூலினுந் தேர்ந்து, சகல வரத்திலும் விளங்கி, தவத்தில் வழுவாமல் இருந்த வேதபாரகர் எல்லாரும் ஒருவரும் மறுத்துச் சொல்லாமல், ஒரு மொழியாய்த் தெளிந்து, நிச்சயமாகச் சொன்னது தப்பிதமாகிக் கல்வீன் லுத்தேர் ஒவ்வொருவன் தன்னோடு ஒவ்வாமல் சொன்னது மாத்திரம் சத்திய வேதமாமோ? மீளவுங் கர்த்தர் திரு அவதாரஞ் செய்த 354-ம் ஆண்டில் இருந்த அயெரி என்பவன் மாத்திரஞ் செத்தவர்களுக்காகச் செய்த வேண்டுதல் பலன் இல்லாதது என்றான். ஆகிலும் உடனே அவனைப் பதிதன் என்று அக்காலத்திலிருந்த வேதபாரகர் கண்டித்துத் தள்ளினார்கள்.

அப்படியே லுத்தேருக்குப் பிரியமான சீஷனாகிய பிலிப்பு மேலந்தோன் என்பவன் அப்பொலோசிய என்னும் புஸ்தகத்திலே 12-ம் பிரிவில் எழுதி வைத்ததாவது:

செத்தவர்களுக்காகச் செய்த வேண்டுதல் பலன் இல்லாதது என்று அயெரி என்பவன் சொன்னதாக எப்பிப்பானி என்பவர் சொல்லி, அவனைக் கண்டிக்கிறார். நாங்களும் இதிலே அயெரி என்பவனோடு கூடினதல்லவென்றான். ஆகையால் லுத்தோரானிகளும் செத்தவர்களுக்காக வேண்டுவது நல்லதென்றும், அந்த வேண்டுதல் செத்தவர்களுக்கு உதவியாகுமென்றும், அயெரியோடு கூடாதபடிக்குச் சொல்லக்கடவார்கள். அதன் பின்பு உத்தரிக்கிற ஸ்தலம் இல்லை என்று வெட்கமில்லாமல் சொல்லுவானேன்? ஆகிலும் இன்று சொன்னதை நாளை மறுத்து, விபரீதமாய்ச் சொல்வது எப்போதும் பதிதர்களுக்குள்ள முறைதானே.

லுத்தேர் என்பவன் ஒவ்வாத விபரீதங்களைக் கூசாமல் சொல்லுகிறதில் மாத்திரம் எப்போதுந் தன்னோடு ஒத்தவனாகிக் காற்று முகத்தில் ஆடின கொடியைப்போலவும், கள்ளுண்ட வெறியால் பிதற்றின பித்தனைப்போலவும், பொங்கின அலையோடு தளம்பிச் சுழலாநிற்குஞ் சுக்கானில்லாத படகு போலவும், தன் நினைவில் ஒரு நிலை காணாமல் இதிலேயுஞ் சொன்ன விபரீதங்கள் மெத்த உண்டாம். முந்திமுந்தி லிப்பிசிக் தர்க்கத்தில் லுத்தேர் சொன்னதாவது: உத்தரிக்கிறஸ்தலத்தை உறுதியாய் விசுவசிக்கிறவனுமாய், அது உண்டென்று நன்றாய் அறிந்தவனுமாய் இருக்கிற நான், வேதத்தில் இதற்கேற்ற உதாரணங்கள் உண்டென்று எளிதாய் ஒத்துக்கொள்ளுகிறேன் என்றான்.

அதன் பிறகு, விபரீதமாய்ச் சொல்லி, உத்தரிக்கிற ஸ்தலம் உண்டென்று வேத உதாரணங்களினால் ஒப்பிக்கப்படாதென்றான். 2-வது. அங்கே கிடக்கும் ஆத்துமங்கள் இனி கரை ஏறுவதென்று அறியார்கள் என்றான். 3-வது. அங்கே இருக்குந்தனையுந் தங்கள் பலன் வளரவுங் குறையவுஞ் செய்ய வல்லவை என்றான். 4-வது. ஓயாமல் அங்கே அந்த ஆத்துமங்கள் சாவான பாவங்களைச் செய்துகொண்டு வருவது என்றான். 5—வது. திருச்சபை வேண்டுதலினால் தம் வேதனை குறைந்து சீக்கிரமாய் மோக்ஷத்திற் சேரும்

ஆத்துமங்களுக்கு மோக்ஷ பாக்கியமுங் குறையுமென்முன். இது எல்லாம் விபரீதமாய்ச் சொன்ன தப்பிதங்களாயினும், உத்தரிக்கிறஸ்தலம் உண்டென்றும், முந்தி நிச்சயித்த தல்லோ? இது எல்லாஞ் சொல்லுவதற்கு இடம் உண்டாகும்படியே உத்தரிக்கிறஸ்தலம் உண்டென்று உரோமான் திருச்சபையை விட்டுப் பிரிந்த பின்பும் லுத்தேர் நெடுநாள் நிச்சயமாய்ச் சொன்னபோதிலும், உரோமான் திருச்சபைக்கு விரோதமாக மோக்ஷமும், நரகமும் அல்லாமல் உத்தரிக்கிறஸ்தலம் ஒன்றில்லை என்று தணிப் பூசை விலக்கும் புஸ்தகத்தில் எழுதிச் சலஞ் சாதித்து, வெட்கமில்லாமல் ஸ்தாபித்தான்.

அப்படியே இந்நாட் பதிதர் எல்லாரும் இந்த தேவ சத்தியத்தை மறுத்து லுத்தேரோடு ஒத்தவர்களாய் உத்தரிக்கிறஸ்தலம் இல்லை என்கிறார்கள். இதற்குச் சொல்லும் நியாயம் ஏதெனில், அர்ச். மத்தேயுஸ் எழுதின சுவிசேஷத்தின் 25-ம் அதிகாரம் 46-ம் வசனத்தில் சேசுநாதர் திருவுளம் பற்றினதாவது: பாவிகள் முடியாத ஆக்கினை அநுபவிக்கப் போய், நல்லவர்கள் நித்திய சீவியத்தை அடைவார்கள் என்றார். அப்படிப் பற்பல இடத்தில் வேதத்தில் எழுதப்பட்டமையால் மோக்ஷமும் நரகமுமொழிய, செத்தவர்கள் சேரும் வேறு இடம் இல்லை என்பார்கள். ஆகிலும் அதில் சேசுநாதர் நடுத்தீர்க்கிற காலத்து வர்த்தமானத்தைச் சொல்லிக்கொண்டுவந்ததினால் அவர் திருவுளம் பற்றின வாக்கியத்தால் நடுத்தீர்வைக்குப் பிறகு, மோக்ஷமும் நரகமுமொழிய, உத்தரிக்கிற ஸ்தலம் இல்லை என்று சொல்லத்தகும்.

ஆகிலும் நடுத்தீர்வைக்கு முன்னே உத்தரிக்கிற ஸ்தலம் உண்டென்று வேத உதாரணங்களால் ஒப்பித்தோமல்லோ? மீளவும் பதிதர் சொல்லும் நியாயமாவது: அர்ச். லூக்காஸ் சுவிசேஷத்தின் 23-ம் அதிகாரம் 43-ம் வசனத்தில் நல்ல கள்ளனுக்கு சேசுநாதர் திருவுளம்பற்றினதாவது: இன்று நம்மோடு மோக்ஷத்தில் இருப்பாய் என்றார்.

மரண பரியந்தம் பாவியாய் நடந்த கள்ளன் சாகும்போது மாத்திரம் மனந்திரும்பி உத்தரிக்கும்படிக்கு அபராதக் கடன் அவனுக்கு இல்லாதபோது எவர் உத்தரிக்கிற ஸ்தலத்தில் கிடக்கக்கடவார்கள்? என்றார்கள்.

ஆகிலும் அப்போஸ்தலர் முதலாய் சேசுநாதரைக் கைவிட்டபோது அந்தக் கள்ளன் அவரை அறிந்த விசுவாசமும், எல்லாருங் கேட்க அவரைத் துதித்த துணிவும், தன் பாவங்களுக்காகப் பட்ட உத்தம மனஸ்தாபமிகுதியும், கடின மரணத்தை அநுபவித்த பொறுமையும், தாழ்ச்சியும், மற்றப் புண்ணியங்களும் ஒருங்குடன் அந்த நல்ல கள்ளனிடத்தில் இருந்த உத்தம மேரையால் சேசுநாதர் அவனுடைய பாவ தோஷங்களைப் பொறுத்ததுமன்றி, அபராதக் கடனை முழுதும் பொறுத்து அன்றுதானே அவனுக்கு மோக்ஷத்தைத் தந்தார். ஆகிலும் எல்லாப் பாவிகளுக்கும் இப்படியாகும்படிக்கு எல்லாரிடத்திலும் இப்படிப்பட்ட புண்ணியங்களும் அந்தப் புண்ணியங்கள் இருக்க மேலான தன்மையும், எப்போதுங் கிடைக்குமோ வென்ன?

இதுவுந் தவிர, முன் நான் சொன்னபடி பொதுமுறையால் ஆண்டவர் என் பாவ தோஷத்தைப் பொறுக்கும் பொழுதில் அபராதக் கடனை முழுவும், எப்போதும் பொறுப்பவரல்ல. ஆகிலும் விசேஷதயையால் ஓரோரிடத்தில் தமது அளவில்லாத நீதி ஞானத்தின்படியே ஒருத்தனுக்கு அபராதக் கடன் எல்லாம் ஒருமித்துப் பொறுத்தாலுமென்ன? ஆண்டவர் ஒருமுறை ஒருவருக்கு இரங்கிச் செய்த விசேஷ சகாயம் எவருக்குஞ் செய்யத்தகும் முறை என்னலாமோ? ஒரு முறை அற்புதமாய்ச் சம்பவித்தது எப்போதும் முறையோடாகுமென்றால், ஒரு முறை ஒரு கழுதை பேசினதைக் கண்டால் மற்றக் கழுதைகளும் பேசுமென்று பதிதர் நினைப்பார்களாக்கும். அப்படியானால் மோயீசன் எழுதின 4-ம் ஆகமத்து 22-ம் அதிகாரம் 28-ம் வசனத்தில் ஒரு கழுதை வாய் திறந்து பேசிப் பலாம் என்பவனுக்கு உணர்ச்சிகளைச் சொல்லி அவன் சாகாதப

டிக்கு அவன் உயிரைக் காத்ததென்று வாசித்ததினால் பதிதர் எல்லாருந் தங்களுக்கு ஒரு கழுதையைத் தேடித் தங்களுக்கு அதுவே மந்திரியாகவும், தம் உயிர்க் காவலாகவும் வைத்துக்கொள்ளக் கடவார்கள்.

இன்றைவரைக்குஞ் சுலபமாய் இங்கே நான் சொல்லிக் காட்டின நியாயங்களைச் சலஞ் சாதியாமல் ஆராய்ந்து பார்க்கில் உத்தரிக்கிற ஸ்தலமும் உரோமான் திருச்சபை சொன்னபடி உண்டென்பது வேதத்தில் ஊன்றிச் சந்தேகமற விளங்கி விசுவசிக்கத் தகுஞ் சத்தியமென்று நல்லறிவுடைய யாவரும் எளிதாய்க் கண்டு சொல்லக்கடவார்கள். ஆகிலும் இன்னம் உத்தரிக்கிற ஸ்தலம் இல்லை என்று யாதாமொருத்தன் சாதித்தால் அவனுக்கு நரகமேயொழிய, உத்தரிக்கிற ஸ்தலம் இல்லை என்பது நிச்சயந்தானே.

12-ம் அதிகாரம்.

தேவதிரவிய அநுமானங்கள். பொது விளக்கம்.

83.- நமக்காக வேண்டி கர்த்தர் பாடுபட்டு அடைந்த பலன்களை நமக்குக் கொண்டுவிடும் எத்தனங்களாக சேசுநாதர் தாமே கட்டளையிட்ட தேவத்திரவிய அநுமானங்களுக்கடுத்த விஷயத்தில் பதிதர் எல்லாரும் பல தப்பிதங்களைச் சொல்லி, உரோமான் திருச்சபை படிப்பிக்கும் இராசவழியை விட்டு அகன்ற பின்பு, தாங்கள் இடறிக் கெட்டதென்று தோன்றாதபடிக்கு உரோமான் திருச்சபை வழுவினதென்று சொல்லக் கூசாமற் போனார்கள். அப்படியே பித்து மிஞ்சிக் கிடந்தவன் அமிர்தமுங் கசக்குமென்பான். அப்படியே நிறையக் கள்ளுண்டவன் வீடு அசையுமென்பான். ஆகையால் இதில் நாமும் பதிதருஞ் சொல்லுந் தன்மையைக் காட்டித் தீமுகத்தில் பொன்னும், செம்பும் வேறுபடத் தோன்றினதுபோல, வேத உதாரண முகத்

தில் நான் சொல்லுஞ் சத்தியமும், அவர்கள் பிதற்றும் அபத்தமுந்தானே கண்ணுடையவர்க்கெல்லாந் தோன்ற வெளியாக்கித் தருவோம்.

ஆகிலும் முந்தி தேவதிரவிய அநுமான மேதென்று காட்டக்கடவோம். பஞ்சேந்திரியங்களால் காணப்பட்ட பொருளாகி சர்வேசுரன் ஸ்தாபித்த கட்டளையினுல் இஷ்டப்பிரசாதத்தைக் காட்டவும் பயக்கவும் வல்லமையுள்ளது தேவதிரவிய அநுமானந்தானே. இது இப்படியாகக் கொள்ள தேவதிரவிய அநுமானங்கள் எல்லாம் ஆண்டவர் ஸ்தாபித்த தன்மையால் இஷ்டப்பிரசாதத்தைப் புறத்தி அடையாளமாகக் காட்டவும், எத்தன காரணமாக உள்ளே பயக்கவும், அவைகளுக்குரியசுபாவம் என்றுசொல்லக்கடவோம். ஆதலால் அப்போஸ்தலர்மேல் காண்பித்த அக்கினி நாக்குகள் அவர்களிடத்தில் அன்று புதிதாய் வந்த இஷ்டப்பிரசாதத்தை அடையாளமாகக் காட்டினதொழிய, தானே அந்த இஷ்டப்பிரசாதத்தைப் பயத்ததல்லஎன்றதனுல் அவைகள் தேவதிரவிய அநுமானம் என்றுசொல்லக்கூடாது.

மீளவும் நல்ல கள்ளனுக்கு ஆண்டவர் சிலுவையின் பேரில் பாவங்களைப் பொறுத்துத் தமது இஷ்டப்பிரசாதத்தைத் தந்தது சரிதானே. ஆகிலும் ஞானஸ்நானத்திலும், பச்சாத்தாபத்திலும் ஆகிறுப்போல தந்த இஷ்டப்பிரசாதத்தைக் காட்ட அடையாளம் புறத்தில் இல்லாததினுல் அதுவுந் தேவதிரவிய அநுமானமல்ல. ஆகையால் தரங்கம்பாடியார் வேத சாஸ்திரம் என்னும் புஸ்தகத்தில் அநுமானம் என்னுஞ் சொல்லை விட்டு, அவைகளை ஞானதிரவியம் என்றது அபத்தந்தானே. அவைகளால் பயக்கப்பட்ட இஷ்டப்பிரசாதமே ஞானதிரவியம் என்னலாமொழிய, அதனை அடையாளமாகக் காட்டி, காரணமாகப் பயக்கும் ஞானச்சடங்குகளை தேவதிரவிய அநுமானங்கள் என்னக்கடவோம்.

84.— இதுவுந் தவிரப் புறத்தில் தோன்றின பொருள் உயிரிடத்தில் இஷ்டப்பிரசாதத்தை தானே உண்டாக்கத்

தனக்கு வல்லமையில்லே; அந்த வல்லமை அதற்குப் படைப் புண்ட ஒருவராலும் வரக் கூடவுமில்லே. அப்படியே ஞான ஸ்நானத்தில் ஒருவன் தலேமேல்விட்ட தண்ணீர் அவன் பாவங்களேத் துடைத்து ஆத்துமத்தைக் கழுவ தானே சுபாவமாய் வல்லதுமல்ல; அதற்கு அந்த வல்லமை கொடுக்க மனிதருஞ் சம்மனசுகளும் வல்லவரல்ல. ஆதலால் சர்வேசுரன் ஸ்தாபித்த கட்டளேயினுல் தேவதிரவிய அநுமானங்கள் இஷ்டப்பிரசாதத்தை எங்களிடத்தில் பயக்க வல்லதென்றேம். இந்த நியாயத்தைப் பற்றி அவைகள் எல்லாம் அப்போஸ்தலராலும், வேறெருருவராலும் ஸ்தாபிக்கப்படாமல், சேசுநாதரால் தானே உண்டாக்கப்பட்டதென்பது சத்தியமாமே. இந்த சத்தியத்தை மறுத்தவன் திறிதேந்தென்னும் நகரிற் கூடின திருச்சபையால் சபிக்கப்பட்டவன்ருனே.

ஆகையால் மனிதர் தாமே நமக்கு தேவதிரவிய அநுமானங்களே கொடுப்பவராயினும் அவைகள் எல்லாம் ஆண்டவர் செய்கையாகவன்றி மனிதர் செய்கையாகத் தம் பலனேத் தரவுமில்லே. ஆகையால் அவைகளேக் கொடுக்கிறவன் பாவியானுலும் அதனுல் தனக்குக் கேடாகுமல்லாதே அவைகளேப் பெற்றவனுக்கு அதனுல் குறையொன்றும் இல்லே. மீளவும் அந்த நியாயத்தைப்பற்றி ஒவ்வொரு தேவதிரவிய அநுமானத்தைக் கொடுக்க சேசுநாதர் குறித்த வகை மனிதரொழிய, வேறெருருவன் அந்த சடங்கெல்லாஞ் செய்தாலும், அந்த வார்த்தை எல்லாம் உச்சரித்தாலும், தான் பாவத்தைக் கட்டிக்கொள்வதல்லாமல் தேவதிரவிய அநுமானம் அதனுல் ஆவதில்லே. அப்படி குருக்களன்றி யாராகிலும் அப்பத்தைக் கையில் ஏந்தி, ஆசையோடு இது என் சரீரம் என்று ஆயிரம் முறை சொன்னுலும், அது நற்கருணையாகமாட்டாது.

குறிக்கப்பட்டமனிதர்முதலாய்சேசுநாதர் ஸ்தாபித்த பொருளும், கட்டளேயிட்ட வார்த்தையும், நினேத்த கருத்தும், இல்லாமற் செய்தால் தேவதிரவிய அநுமானமாகவு

மாட்டாது. அப்படியே தண்ணீரினிடமாக கள்ளைக் கொண்டு ஒருவனைக் கழுவினாலும், தண்ணீரைக் கொண்டு கழுவிக் கற்பித்த வார்த்தையில் ஒன்றிரண்டு விட்டாலும் தண்ணீரைக் கொண்டு கழுவிச் சொல்லவேண்டியதைச் சொல்லி சேசுநாதர் கட்டளையிட்ட தேவதிரவிய அநுமானத்தைத் திருச்சபை செய்யும் முறையோடு தானுஞ் செய்யக் கருத்தில்லாமல், விளையாட்டுக்காகிலும், சரீர அழுக்குப் போக்குவதற்காகிலும், ஒருவனைக் கழுவினால், அது ஞானஸ்நானமல்ல. இவை எல்லாவற்றிற்கும் நியாயமேதெனில், தேவதிரவிய அநுமானங்களுக்கெல்லாம் சேசுநாதர் ஸ்தாபித்த கட்டளையினால் மாத்திரம் பலனைக் கொடுக்க வல்லமை உண்டாகும். ஆகையால் அவர் கட்டளையிட்ட பொருளாகிலும், வார்த்தையாகிலும், கருத்தாகிலும், இல்லாதாயின் அவைகளுக்கு அந்த வல்லமையுமில்லை. அவைகளும் வீண் சடங்குகளாகி தேவதிரவிய அநுமானம் என்னும் பெயரும் பலனும் அவைகளுக்கு இருக்கமாட்டாது.

85.— பின்னையுந் தேவதிரவிய அநுமானங்களைப் பெறப் போகிற யாவரும், அதன் பலனை அடைய அறிவுள்ளவராகில், அவர்களிடத்தில் விசுவாசமும், பச்சாத்தாபமும் வேண்டியதுதானே ஆகிலும் அந்த விசுவாசமும், பச்சாத்தாபமும் அவர்களிடத்தில் இஷ்டப்பிரசாதத்துக்கு ஆயத்தஞ் செய்வதொழிய, அதனைப் பயக்குங் காரணமல்ல. அப்படியே ஒளிபடாத பொருளை, குறையில்லாத கண்ணாலுங் காணப்படாதல்லோ. ஆயினுங் கண்ணையொழிய ஒளிதான் பார்வைக்குக் காரணமென்று சொல்வாரில்லை. இதனால் ஒளியானது பொருளைக் கண்டதென்று சொல்லாமல், கண்ணே ஒளிபட்ட பொருளைக் கண்டதென்பார். இதிலேயும் உரியமுறையோடு சொல்லும்படிக்குப் பார்வைக்குக் கண் எத்தன காரணமாகையால், பொருளைக் கண் கண்டது என்னாமல், மனிதன் கண்ணால் ஒளிபட்ட பொருளைக் கண்டான் என்பது நியாயமல்லோ?

அப்படியே ஞான ஒளியாகிய விசுவாச முதலிய ஆயத்தமில்லாதவனிடத்தில் தேவதிரவிய அநுமானங்கள் இஷ்டப்பிரசாதத்தைப் பயக்கமாட்டாதாயினும், அந்த இஷ்டப்பிரசாதத்திற்கு அவன் விசுவாசம் காரணமென்று சொல்லப்படாமல், ஒன்றில் விசுவாசத்தால் ஆயத்தப்பட்டவனுக்கு தேவதிரவிய அனுமானங்கள் இஷ்டப்பிரசாதத்தை பயத்ததென்போம். ஒன்றில் இதிலேயும் உரிய முறையோடு சர்வேசுரன் எத்தன காரணமாக தேவதிரவிய அநுமானங்களைக்கொண்டு ஆயத்தப்பட்டவனுக்கு இஷ்டப்பிரசாதத்தை உண்டாக்கித் தந்தார் என்று சொல்லக்கடவோம்.

86 — இந்த சத்தியத்தோடு ஒவ்வாமல் பதிதர் பல அபத்தங்களைப் பிதற்றினார்கள். லுத்தேரும் அவன் பிரிய சீஷனாகிய மேலந்தோனும், கல்வீனும், பலருந் துவக்கத்தில் நினைத்த அபத்தத்தைத் தாங்களே மறைவில்லாமல் சொல்லி, தேவதிரவிய அநுமானங்கள் இஷ்டப்பிரசாதத்துக்குச் சற்றேனும் காரணமாகாமல் ஆண்டவர் நமக்குத் தந்த வார்த்தைப்பாடுகளுக்கு அடையாளமாக மாத்திரம் நிற்குமென்றும், விசுவாசம் ஒன்றே மனிதரிடத்தில் இஷ்டப்பிரசாதத்தைப் பயக்கிறதென்றும் எழுதி வைத்தார்கள். லுத்தேர் 1520-ம் ஆண்டில் பபிலோன் அடிமைத்தனம் என்னும் புஸ்தகத்தில் ஞானஸ்நான அதிகாரத்தில் எழுதினதாவது:

விசுவாசமொழிய ஞானஸ்நானம் ஒருவருக்கும் இஷ்டப்பிரசாதத்தைக் கொடுக்கவுமில்லை, பிரயோசனமாகவும் இல்லை என்றான். மேலந்தோன் 1530-ம் ஆண்டில் தந்த அப்போலோசிய என்னும் புஸ்தகத்தின் 13-ம் பிரிவில் தேவதிரவிய அநுமானங்கள் ஆண்டவர் தந்த வார்த்தைப்பாடுகளைக் காட்டுஞ் சித்திரங்கள் என்றான். கல்வீன் கற்பனைகளின் 4-ம் காண்டத்து 14-ம் அதிகாரம் 17-ம் பிரிவில் எழுதினதாவது: தேவதிரவிய அநுமானங்கள் இஷ்டப்பிரசாதத்தைத் தந்து நம்மை ஆண்டவருக்கு உகந்தவர்

களாக்குஞ் சடங்கல்ல. ஆண்டவர் நமதுமேல் வைத்த தயையை அடையாளமாகக் காட்டுதல் மாத்திரம் அவைகளால் வரும் பலன் என்றான்.

இந்த அபத்தத்தை இப்படி வெளியாகச் சொன்ன பின்பு, உரோமான் திருச்சபையார் சொன்ன நியாயங்களை மறுக்கமாட்டாமையால், பதிதருக்குள்ள முறையோடு வேஷமாறி, அடிபட்ட கள்ளன் தன் திருட்டை மறைக்கும்படி போக்குத் தேடினதுபோல, அவர்களும் முன் வெளியாகச் சொன்ன அபத்தத்தைவெட்கத்தினால் உள்ளே அடக்கிப் புறத்தில் தோன்றும் முகத்தில் நாமே சொன்னபடி தாங்களுஞ் சொல்லத் துவக்கினார்கள். அப்படியே முன் காட்டின தன்மையால் ஞானஸ்நானம் ஒருவருக்கும் உதவாதென்ற லுத்தேர் 15 வருஷத்திற்குப் பிறகு 1535-ம் ஆண்டில் தந்த ஞானஸ்நான முதல் பிரசங்கத்தில் அவன் தானே சொன்னதாவது: நமக்கு உதவும்படிக்கு சரீரத்துக் கடுத்த நன்மைகளைக் கொடாமல், நமக்கு நித்திய இஷ்டப் பிரசாதத்தை, நித்திய தூய்மையை, நித்திய சீவியத்தைத் தரும்படிக்கு ஞானஸ்நானம் ஸ்தாபிக்கப்பட்டதென்றான்.

கல்வீன் தானுந் திறிதேந்தென்னும் நகரில் கூடின திருச்சபை கற்பித்ததற்கு விரோதமாய் எழுதின புஸ்தகத்தில் ஏழாநாள் கூட்டத்தில் செய்த 5-ம் கற்பனை விஷயத்தில் அவன் சொன்னதாவது: தேவதிரவிய அநுமானங்கள் நமக்கு வரத்தகும் இஷ்டப்பிரசாதத்தின் எத்தனை காரணங்களென்று எப்போதும் நினைக்கக்கடவோமென்றான். மற்றப் பதிதரும் அப்படித்தானே பிறகு சொல்லிக்கொண்டு வந்தார்கள். இதில் நாம் சொல்லுஞ் சத்தியத்திற்கு ஒவ்வாதது ஒன்றும் இல்லையென்று தோன்றுமல்லோ? ஆகிலும் ஆட்டுத்தோல் போர்த்திய ஓநாயும் புறத்தில் ஆடென்று தோன்றுமே. ஆகையால் போர்த்தின வேஷத்தை நீக்கி உள்ளே பார்க்கில் ஓநாய்தானே தன் சுய உருவாகத் தோன்றக் காண்போம். இது தெளிவாகும்படிக்கு இந்நாட் பதிதர் சொல்லுந் தன்மையை அறியக்கடவீர்கள்.

விசுவாசமொழிய நமக்குப் பலனாக ஒன்றுமில்லாமல் அவனவன் செய்யுஞ் செபதப தான தரும மற்றப் புண்ணி யங்களால் உத்தம வகையோடு செய்தாலும், இஷ்டப்பிர சாதம் வளரவும், மோக்ஷ பலனை அடையவுங் கூடாதென் றும், இஷ்டப்பிரசாதத்துக்கும் மோக்ஷ பலனுக்கும் விசுவா சமே மாத்திரங் காரணமாகுமென்றுஞ் சொல்லி, இதுவே தங்கள் சமயங்களுக்கு அஸ்திவார சத்தியமாக இந்நாட் பதிதர்கள் எல்லாரும் ஸ்தாபித்தார்கள். ஆகையால், தேவதி ரவிய அநுமானங்கள் இஷ்டப்பிரசாதத்தின் எத்தன கார ணங்களாகுமென்று அவர்களுஞ் சொன்னாலும், சொன்ன அஸ்திவாரத்தை விடாதபடிக்கு அதற்குச் சொல்லும் அர்த்தத்தைப் பார்க்குமிடத்தில், அவர்கள் துவக்கத்தில் வெளியாகச் சொல்லியிருந்த அபத்தத்தை மீளவுங் கக்கிக் கொண்டு வருகிறார்கள்.

அதாவது: தேவதிரவிய அநுமானங்கள் தாமே இஷ் டப்பிரசாதத்துக்குக் காரணமாகாமல், அதற்கு ஒன்றுந் தாமே செய்யாமல், விசுவாசத்தை மாத்திரம் மனதில் விளை விக்குஞ் சடங்குகளாகி, அவைகளால் விளைந்த விசுவாசம் ஒன்றே இஷ்டப்பிரசாதத்தைப் பயக்குமென்பார்கள். எப் படியோவெனில், ஞானப்பிரசங்கம் காதின் வழியால் விசு வாசத்தைக் கிளப்பி விளைவிப்பதுபோல தேவதிரவிய அநுமானங்கள் கண்ணின் வழியால் விசுவாசத்தை எழுப்பி விளக்கி, அந்த விசுவாசத்தால் மாத்திரம் இஷ்டப்பிரசா தத்தை அடைவோமென்பார்கள். ஆகையால் ஒருவன் திரும்பி இஷ்டப்பிரசாதத்தை அடைய ஞானப் பிரசங்கம் காரணமாயிற்றென்று ஒருவகையால் சொல்லப்படுமாப் போல் தேவதிரவிய அநுமானங்களும் அந்த வகையால் மாத்திரம் இஷ்டப்பிரசாதத்துக்குக் காரணமென்று சொல் லத்தகும்.

இது மெய்யானால் விசுவாசத்திற்கு முந்தி உபதேசஞ் சொல்ல சேசுநாதர் கட்டளை யிட்டாற்போல விசுவாசத் திற்கு முந்தி ஞானஸ்நானமுங் கொடுக்கக் கட்டளை யிடாம

லென்ன? அர்ச். மாற்கு சுவிசேஷத்தின் 16-ம் அதிகாரம் 15-ம் வசனத்தில் சேசுநாதர் அப்போஸ்தலர்மாருக்குத் திருவுளம் பற்றினதாவது: உலகமெங்கும் போய் எல்லாருக்கும் உபதேசஞ் சொல்லி விசுவசித்து, ஞானஸ்நானம் பெற்றவன் கரை ஏறுவானென்றார். ஆகிலும் பதிதர் சொன்னது மெய்யானால் உபதேசத்தையும், ஞானஸ்நானத்தையுங் கூட்டி நீங்கள் உபதேசஞ் சொல்ல, ஞானஸ்நானங் கொடுக்க விசுவசிக்கிறவன் கரை ஏறுவானென்பாரல்லோ. அப்படியே ஆரோக்கியத்திற்கு மருந்து காரணமாகையில் ஆரோக்கியத்தை அடைந்து மருந்து குடித்தானென்னாமல், மருந்து குடித்து ஆரோக்கியம் அடைந்தான் என்னக்கடவோம். தேவதிரவிய அநுமானங்களும் விசுவாசத்திற்குக் காரணமாக மாத்திரம் உதவுமானால், விசுவசித்து ஞானஸ்நானம் பெற்றவனென்னாமல், ஞானஸ்நானம் பெற்று விசுவசித்தவனென்பது நியாயமல்லோ.

மீளவுங் கண் வழியாக விசுவாசத்தை எழுப்பினதினால் மாத்திரந் தேவதிரவிய அநுமானங்கள் உதவுமென்றால், சுரூப வணக்கம் ஆகாதென்று பதிதர் விலக்குவானேன்? கண் வழியாக விசுவாசம் உள்ளே எழும்பும்படிக்கு தேவத்திரவிய அநுமானங்களைப் பார்க்கக்கண்டபாடுபட்ட கர்த்தர் சுரூபந் தாவிலேயல்லோ. இதுவுந் தவிர குழந்தைகளுக்குத் தந்த ஞானஸ்நானம் சென்மப் பாவத்தைத் துடைத்து, இஷ்டப்பிரசாதத்தைக் கொடுப்பது பதிதருக்கு நிச்சயந்தானே. ஆகிலும் அவர்களிடத்தில் விசுவாசம் இல்லையே. ஆகையால் இஷ்டப்பிரசாதத்திற்கு ஆண்டவர் ஸ்தாபித்த கட்டளையினால் ஞானஸ்நானச் சடங்கு காரணமாகுமொழிய, விசுவாசம் அதற்குக் காரணம் அல்லவென்று சொல்லக்கடவோம்.

இதற்குப் போக்கிடமில்லாமல் லுத்தேர் முதற்கொண்டு பல லுத்தேரானிகள் சொல்லும் அபத்தமாவது: ஒருநாள்குழந்தை முதலாய் ஞானஸ்நானம் பெறும் க்ஷணத்தில் மாத்திரம் அறிவும், ஞானமும், விசுவாசமும்

உடையதாகி, விசுவாசத்தால் இஷ்டப்பிரசாதத்தை அடைந்தவுடனே இரவலாக வந்த ஞானமும், விசுவாசமும் போய் ஒன்றும் அறியாமல் கிடக்குமென்றார்கள். மற்றப் பதிதருஞ் சிரித்து நகைக்க இந்தப் பரம இரகசியத்தை எந்த சுவிசேஷத்தில் லுத்தேர் கண்டெடுத்தானோ தானே சொல்லக்கடவான்.

87.— ஆகையால் இதில் வேத சத்தியமாக அநுசரிக்கத்தகுந் தன்மையாவது: அறிவுள்ளவர்களுக்குள்ளே விசுவாசம் இல்லாதவனுக்கு தேவதிரவிய அநுமானங்களால் நன்மை ஒன்றில்லை. ஆகிலும் விசுவாசம் உள்ளவனுக்கு சேசுநாதர் ஸ்தாபித்த முறையால் கொடுத்த தேவதிரவிய அநுமானங்களே மாத்திரம் இஷ்டப்பிரசாதத்தைப் பயக்கும் எத்தன காரணமாமே. அந்த விசுவாசம் ஆயத்த முறையால் வேண்டியதொழியக் காரண வகையால் இதில் ஒன்றுஞ் செய்கிறதில்லையென்று வேதசத்தியமாக அநுசரிக்கக்கடவோம். இந்த சத்தியத்தை ஒப்பிக்கச் சொன்னதல்லாதே இன்னம் பல வேத உதாரணங்களைச் சொல்லிக் காட்டுவோம்.

முதலாவது: அர்ச். அருளப்பர் சுவிசேஷத்தின் 3-ம் அதிகாரம் 5-ம் வசனத்தில் சேசுநாதர் திருவுளம்பற்றினதாவது:— தண்ணீராலும், இஸ்பிரீத்து சாந்துவினாலுந் திரும்பப் பிறவாதவன் சர்வேசுரன் இராச்சியத்துக்கு உள்ளாக மாட்டானென்றார். இதில் அவர் விசுவாசமென்னும் பெயரும் நினையாமல் கரை ஏறுதற்குப் பேறுபெற ஞானஸ்நானம் வேண்டியதென்றார். கரை ஏற வேண்டின இஷ்டப்பிரசாதம் விசுவாசத்தினால் மாத்திரம் பதிதர் சொன்னாற்போல் வருவது மெய்யானால் எந்த வகையாலும் விசுவாசம் உண்டானால் போதுமென்று ஞானஸ்நானம் பெறுமதும், கேட்ட உபதேசத்தினால் எழும்பின விசுவாசத்தோடு மாத்திரங் கரை ஏறுவோம் என்னக்கடவோம். சேசுநாதரோவெனில், ஞானஸ்நானம் இல்லாமல் கரை ஏற்றம் இல்லையென்றார். அப்படியே அர்ச். சின்னப்பர் தீத்தென்பவ

ருக்கு எழுதின நிருபத்தின் 3-ம் அதிகாரம் 5-ம் வசனத்தில் கர்த்தர் திருவுளம் பற்றினதற்கு அர்த்தஞ் சொன்னாற்போல ஞானஸ்நானமே மறு பிறப்பென்றும், அதுவே இஸ்பிரீத்துசாந்துவினால் வரும் புது இயல்பென்றுஞ் சொல்லி அதைக்கொண்டு ஆண்டவர் நம்மை ஈடேற்றினார் என்றார்.

இரண்டாவது: அப்போஸ்தலர் நடபடி ஆகமத்தின் 2-ம் அதிகாரம் 38-ம் வசனத்தில் அப்போஸ்தலர் சொன்ன உபதேசத்தை விசுவாசத்தால் உட்கொண்டு, கரை ஏற ஆசையால் அதற்குச் செய்யவேண்டியது ஏதென்று கேட்டவருக்கு அர்ச். இராயப்பர் சொன்னதாவது: பச்சாத்தாபமுடையவராகி சேசுகிறீஸ்து கட்டளையிட்ட முறையால் உங்கள் பாவங்கள் பொறுக்கப்படும்படிக்கு ஒவ்வொருவன் ஞானஸ்நானம் பெறக்கடவானென்றார். இதோ அர்ச். இராயப்பர் அவர்களிடத்தில் கண்ட விசுவாசத்தோடு வேண்டின பச்சாத்தாபத்தையுங் கூட்டி, இவைகளால் ஆயத்தப்பட்ட பின்பு பாவப் பொறுத்தலாகவும், இஷ்டப்பிரசாதத்தை அடையவும், மீளவும் விசுவாசந் தேடாமல், ஞானஸ்நானச் சடங்கு மாத்திரம் வேண்டியதென்றார்.

மூன்றாவது: அப்போஸ்தலர் நடபடியாகமத்தில் 19-ம் அதிகாரம் 5-ம் வசனத்தில் அர்ச். ஸ்நாபக அருளப்பர் கொடுத்த ஞானஸ்நான மாத்திரம் பெற்ற சில பேர்களை எபெசி யென்னும் நகரில் அர்ச். சின்னப்பர் கண்டு சேசுநாதர் கட்டளையிட்ட ஞானஸ்நானம் பெறச் செய்தார். ஆகையால், அர்ச். அருளப்பர் ஞானஸ்நான வகை கரை ஏற்றத்துக்குப் போதாதென்று சொல்லக்கடவோம். ஆகிலும் அதில் சொன்னபடி அர்ச். அருளப்பர் தண்ணீரைக் கொண்டு கழுவுவார். ஆண்டவர் தந்த வார்த்தைப்பாடுகளைக் காட்டுவார். தனக்குப் பிறகு இரட்சிக்க வருஞ் சேசுநாதரை விசுவசிக்கும்படிக்கு ஞானஸ்நானங் கொடுத்துக்கொண்டு வருவார். இப்படி யாகையிலும் அவர் ஞானஸ்நானம் ஈடேற்றத்திற்குப் போதாதே. ஆகையால் அவர்

ஞானஸ்நான வகையால் ஆண்டவர் தந்த வார்த்தைப்பாடு களுக்கு விசுவாசம் உண்டாயினும் அந்த விசுவாசம் நம் மைக் கரை ஏற்றுவதற்குப் போதாமற் போயிற்றல்லோ. ஆகையால் சேசுநாதர் கட்டளையிட்ட ஞானஸ்நானத்துக்கு விசுவாசம் வேண்டியிருந்தாலும், அது ஆயத்தவகையால் வேண்டியதொழிய நம்மைக் கரை ஏற்றும் எத்தனகாரணம் அல்லவென்று சொல்லக்கடவோம்.

நாலாவது: மீளவும் அப்போஸ்தலர் நடபடியாகமம் 22-ம் அதிகாரம் 16-ம் வசனத்தில் மிகுந்த விசுவாசம், பக்தி பச்சாத்தாபத்தோடு அழுதுகொண்டிருந்த சவுலென் னும் அர்ச். சின்னப்பருக்கு அன்னியஸென்பவர் சொன்ன தாவது: எழுந்திருந்து ஞானஸ்நானம் பெற்று சுவாமி நாமத்தைச் சொல்லி உன் பாவங்களைக் கழுவித் துடைப் பாயாக என்றார். இதோ பரலோகத்தினின்று எழுந்தரு ளின சேசுநாதர் தந்த காட்சியால், அர்ச். சின்னப்பரிடத் தில் உத்தம மேரையோடிருந்த விசுவாசத்தினால் பாவப் பொறுத்தலாகாமல் அதற்கு ஞானஸ்நானம் பெறவேண்டி யிருந்தது.

சேசுநாதர் தாமே வந்து, அர்ச். சின்னப்பருக்கு வருத்துவித்த விசுவாசத்தின்மேலும், ஞானஸ்நானங் கொடுக்கும் விசுவாசம் அதிகமென்றுஞ் சொல்லக்கூடுமோ? இல்லையே. ஆகையால் அந்தக் காட்சிக்குப் பிறகு பாவம் போக, ஞானஸ்நானம் வேண்டினதாகில் விசுவாசம் வருத் துவிப்பதற்கு வேண்டியதல்லவென்றும், ஞானஸ்நானத் தில் பாவங்களைப் போக்கி, இஷ்டப்பிரசாதத்தைக் கொடுக் கும் காரணமே விசுவாசம் அல்லவென்றுஞ் சொல்லக்கட வோம். குறித்த அளவு விரிந்ததென்று வேறே பல உதார ணங்களை விட்டுச் சொன்னதைச் சலஞ் சாதியாமல் ஆராய்ந்து பார்க்கில், ஞானஸ்நானத்தினாலே நமக்கு வரும் இஷ்டப்பிரசாதத்துக்கு ஆயத்தமாக விசுவாசம் அறிவுள்ள வர்களிடத்தில் வேண்டினும், அதற்கு விசுவாசங் காரண மாகாமல் சேசுநாதர் ஸ்தாபித்துக் கட்டளையிட்ட முறை

யால் அந்த சடங்குதானே இஷ்டப்பிரசாதத்திற்கு எத்தன காரணமென்று சொல்வது நியாயமாமே. அப்படியே மற்ற தேவதிரவிய அநுமானங்களிலேயும் யோசிக்கக் கடவோம்.

மீளவுந் தேவதிரவிய அநுமானங்களிலே விசுவாசம் காரணமாகாமல் வேறே காரணத்தாலே நமக்கு மோக்ஷ பலனும், இஷ்டப்பிரசாதமும் உண்டாகுமென்று வேத உதாரணங்களால் நிச்சயமாகையில் விசுவாசமொழிய மோக்ஷத்தை அடையும் பேறு கொடுக்க வல்லது ஒன்றுமில்லையென்று பதிதர் ஸ்தாபித்த அபத்தமான அஸ்திவாரம் உள்ளுடைந்திடிந்து, மேல் ஏற்றிவைத்த கோபுரமுந் தகர்ந்து, நிந்தைப்பட விழுந்ததுதானே. ஆகையால் சாவான பாவம் இல்லாத கிறீஸ்துவன் செய்யுஞ் செப, தப, தானம் மற்றப் புண்ணியங்கள் மோக்ஷத்தை அடையப் பலன் அதிகமாவதற்குக் காரணமென்று வேண்டின காலத்தில் இந்த நியாயங்களைக்கொண்டு பதிதருக்கு ஒப்பிப்பது எளிதாமே.

88.— பதிதர் சொல்லும் அபத்தத்தை ஒப்பிக்கக் கொண்டுவிடும் வேறு உதாரணங்கள் ஏதெனில், அர்ச். சின்னப்பர் உரோமாபுரியாருக்கு எழுதின நிருபத்தின் 3-ம் அதிகாரம் 28-ம் வசனத்தில் சொன்னதாவது: வேதத்தில் கட்டளையிட்டதைச் செய்யாமல் விசுவாசத்தைக்கொண்டு மனிதருக்கு இஷ்டப்பிரசாதமாகுமென்று நினைக்கிறோமென்றார். ஆகிலும் முந்தி அதில் பழைய வேதத்திற்கும், புதிதாய் சேசுநாதர் ஸ்தாபித்த வேதத்திற்கும் வேற்றுமை காட்டி பழைய வேதத்தில் கட்டளை இட்டதைச் செய்ததினாலாக்கும் நமக்கு இஷ்டப்பிரசாதம் வர அறியாதென்றார். மீளவும் பழைய வேதகற்பனை எல்லாவற்றையுங் குறித்து அதிலேயுங் கற்பித்திருந்த பத்துக் கற்பனைகளின்படியே முதலாய் நடந்ததினால் பலனில்லை என்றாரோ? இல்லையே. பழைய வேதத்தில் கற்பித்திருந்த விருத்தசேதனம் முதலிய சடங்குகளால் இப்போது பலன் ஒன்றில்லையென்றார்.

அப்படியே கொரிந்தியாருக்கு எழுதின முதல் நிருபம் 7-ம் அதிகாரம் 19-ம் வசனத்தில் விருத்தசேதனம் வீண் தானே, தேவ கற்பனையின்படி நடப்பதே கருமமென்றார். இதில் தேவ கற்பனையென்னும் பெயரால் பத்துக் கற்பனைகளைக் குறித்தார். அப்படியே கலாசியாருக்கு எழுதின 2-ம் அதிகாரம் 21-ம் வசனத்தில் விருத்தசேதன முதலிய பழைய சடங்குகளைக் குறித்துப் பழைய வேத முறைமைகளால் இஷ்டப்பிரசாதமாகுமென்றால் வீணாய்க் கிறீஸ்து மரணத்தை அடைந்தாரென்று சொல்லக்கடவோமென்று அவர் தாமே சொன்னார். இதில் தேவதிரவிய அநுமானங்களும், உத்தம வகையோடு செய்த தருமங்களும் இஷ்டப்பிரசாதத்துக்குக் காரணம் அல்லவென்று அர்ச். சின்னப்பர் சொன்னதாகச் சொல்லக்கூடுமோ என்ன?

மீளவும் அர்ச். மாற்கு சுவிசேஷத்தின் 16-ம் அதிகாரம் 16-ம் வசனத்தில் விசுவசித்து ஞானஸ்நானம் பெற்றவன் கரை ஏறுவானென்று சேசுநாதர் சொன்ன உடனே, விசுவசியாதவன் நரகத்தில் தள்ளப்படுவானென்றார். ஞானஸ்நானம் பெறாதவன் என்னாமல், விசுவசியாதவன் கரை ஏறானென்றபோதே கரை ஏறுகிறதற்கு விசுவாசமொழிய ஞானஸ்நானங் காரணம் அல்லவென்று சொல்லக்கடவோமென்று பதிதர் சொல்லுகிறார்கள். ஆகிலும் ஒளி இல்லாமல் ஒன்றுங் காணப்படாதென்றதினால் பார்வைக்கு ஒளி தானே காரணமென்று சொல்வார் உண்டோ? அப்படியே, விசுவசியாதவன் கரை ஏறான் என்றதினால், கரை ஏறுகிறதற்கு விசுவாசங் காரணமென்று சொல்லக்கூடாது.

இதில் சேசுநாதர் சொன்ன வசனத்திற்கு நியாயம் ஏதெனில், அறிவுள்ளவர்களுக்குள்ளே விசுவாசத்தினால் ஆயத்தப்படாதவனும், ஞானஸ்நானம் பெற்ற மாத்திரத்தில் கரை ஏறுவானென்று நினையாதபடிக்கு ஞானஸ்நானம் பெறாதவனென்னாமல், விசுவசியாதவன் ஞானஸ்நானம் பெற்றாலும், பெறாமற்போனாலுங் கரை ஏறானென்று தோன்றும்படிக்கு அந்த வசனத்தைச் சொன்னார். ஆதலால் அறிவுள்ளவர்களுக்கு ஞானஸ்நானந் தன் பலனைக்

கொடுக்கும்படிக்கு ஆயத்த வகையால் மாத்திரம் விசுவாசம் வேண்டியதென்று நாம் முன் சொன்னபடி, இந்த உதாரணத்தால் ஒப்பிக்கப்பட்டது நிச்சயந்தானே. அப்படியே வேறே பல வேத உதாரணங்களால் கரை ஏற விசுவாசம் வேண்டியதென்றாலும் அது ஆயத்த வகையால் வேண்டியதென்று சொல்லவேண்டுமொழியக் காரண வகையால் வேண்டியதாகச் சொல்லப்படாதென்று நாம் முன் சொல்லித் தந்த வேத உதாரணங்களால் ஒப்பிக்கப்பட்டதல்லோ.

13-ம் அதிகாரம்.

தேவத்திரவிய அநுமானங்கள். தனி விளக்கம்.

89.— இன்றையவரைக்குந் தேவத்திரவிய அநுமானங்கள் ஏதென்றும், அவைகளினால் நமக்கு வரும் பலன் ஏதென்றுங் காட்டின பின்பு, தேவத்திரவிய அநுமானங்கள் எத்தனையென்று சொல்லக்கடவோம். இதில் முந்தி அறிய வேண்டியதாவது: லுத்தேர் திருச்சபை இலக்ஷணமென்னும் புஸ்தகத்தின் கடைசியிலேயும், அவன் பிரிய சீஷனாகிய மேலங்தோனின் அப்போலோசியவென்னும் புஸ்தகத்தின் 7-ம் பிரிவிலேயும், கல்வீன் கற்பனைகளின் 4-ம் காண்டம் முதல் அதிகாரம் 9-ம் பிரிவு துவக்கி மூன்று பிரிவுகளிலேயும், மற்றப் பதிதர் எல்லாரும் மெய்யான திருச்சபை இலக்ஷணங்களைச் சொல்லும்போது தேவத்திரவிய அநுமானங்களின் விஷயத்தில் ஒத்த முறையோடு உணர்வாக நிற்பது மெய்யான திருச்சபைக்குப் பிரதான இலக்ஷணமென்று ஸ்தாபித்தார்கள்.

ஆகிலும் லுத்தேர் முதற்கொண்டு தேவதிரவிய அநுமானங்களின் விஷயத்தில் ஒரு நிலை கொள்ளமாட்டாமல் அந்தத் தேவத்திரவிய அநுமானங்கள் எத்தனையென்று முதலாய் நிச்சயமாகச் சொல்லமாட்டாமற் போனார்கள்.

ஆகையால் அவர்கள் தாமே சொன்ன இலக்ஷணத்தினுல் அவர்கள் சபை மெய்யான திருச்சபை அல்லவென்று தாங்களே சொல்லக்கடவார்கள். அப்படியே லுத்தேர் 1520-ம் ஆண்டிலே தந்த பபிலோன் அடிமைத்தனமென்னும் புஸ்தகத்தின் துவக்கத்தில் எழுதினதாவது: வேதத்தில் எழுதப்பட்ட தன்மையால் ஒரு தேவத்திரவிய அநுமானம் மாத்திரம் உண்டென்ருன். பிறகு ஏழுந் தள்ளிப் பின்பு மூன்று மாத்திரம்: ஞானஸ்நானம், நற்கருணை, பச்சாத்தாபம் இவைகளை ஒத்துக்கொள்ளச் சொன்ஞன்.

அந்தப் புஸ்தகத்தின் நடுவிலேதான் ஏழு தேவத்திரவிய அநுமானம் மறுக்கிறதில்லையென்று வேத உதாரணங்களால் மாத்திரம் ஏழும் ஒப்பிக்கப்படாதென்ருன். அதில் தானே கடைசியில் உரியமுறையோடு பேசவேண்டுமாகில் ஞானஸ்நானம், நற்கருணையென்று இவ்விரண்டு மாத்திரந் தேவத்திரவிய அநுமானம் என்னப்படுமென்ருன். இப்படி லுத்தேர் ஒருவன் ஒரு புஸ்தகத்தில் இந்த ஒரு விஷயத்தில் அத்தனை விபரீதங்களை எழுதி வைத்தான். அவன் பிரிய சீஷனுகிய மேலங்தோனேவெனில் முந்தி லுத்தேரோடு ஞானஸ்நானம், நற்கருணையென்று இரண்டு மாத்திரம் உண்டெனருன். பிறகு அவனேடு பச்சாத்தாபத்தைக் கூட்டி அப்போலோசியவென்னும் புஸ்தகத்தின் 13-ம் பிரிவில் மூன்று உண்டென்ருன்.

1536-ம் ஆண்டில் தந்த கிரந்தத்திலோவெனில் அம்மூன்றுக்குங் குருத்துவங் கூட்ட எனக்கு மிகவுஞ் சம்மதிதானே என்ருன். மீளவும் 1538-ம் வருஷத்தில் அச்சுப்பதித்த அவன் புஸ்தகத்தில் விவாகத்தையுங் கூட்டினுன். கடைசியில் லுத்தேர் செத்த இரண்டு வருஷத்திற்குப் பிறகு, 1648-ம் ஆண்டில் லிப்சேஞ்சிய கூட்டத்தில் அவனும் இருந்துகொண்டு கூடின பதிதர் எல்லாரும் ஏழு தேவத்திரவிய அநுமானங்கள் உண்டென்று ஸ்தாபித்தார்கள். அப்படியே மற்ற லுத்தேராணிகள் எல்லாருங் காட்டுவழி சாய்ந்த மாடுகளைப்போல ஒரு முகமாய்ப் போகாமல் திரிந்து, தாங்கள் சொன்ன அடையாளத்தைக்கொண்டு

தாங்கள் கூடினது மெய்யான திருச்சபைக் கூட்டம் அல்லவென்று காட்டினார்கள். தரங்கம்பாடிப் பதிதர் முதலாய் நற்கருணை ஆபத்தமென்னும் புஸ்தகத்தில் பச்சாத்தாபத்தைக் கூட்டினாற்போலப் பேசி, வேத சாஸ்திரமென்னுங் கிரந்தத்தில் ஞானஸ்நானம், நற்கருணையென்று இரண்டு தேவத்திரவிய அநுமானம் மாத்திரம் உண்டென்று எழுதி வைத்தார்கள்.

உரோமான் திருச்சபையோவெனில், சேசுநாதரால் ஸ்தாபிக்கப்பட்டதாகையால் இதிலேயும் வேறுபடாமல் எப்போதும் ஏழு தேவத்திரவிய அநுமானங்கள் உண்டென்று மிகாமலும், குறையாமலும் எல்லார் வாயிலும் ஒரு மொழியாய் எக்காலத்தும் ஒரு நிலையாய்ச் சொல்லிக் கொண்டு வந்ததறிவோம். ஏழு தேவத்திரவிய அநுமானங்கள் ஏதெனில், ஞானஸ்நானம், உறுதிப்பூசுதல், நற்கருணை, பச்சாத்தாபம், அவஸ்தைப்பூசுதல், குருத்துவம், மெய்விவாகமென்று இவை ஏழுமென்க. ஆகிலும் ஏழு என்னுங் கணக்கும், தேவத்திரவிய அநுமானமென்னும் பெயரும் வேதாகமங்களில் எழுதப்பட்டது எங்கேயென்று பதிதர் கேட்கவுந் தேவையில்லை. நாம் அதை ஒப்பிக்கவுந் தேவையில்லை. வேதத்தில் இரண்டு மூன்றென்றுங் கணக்கு இல்லாமலும், தேவத்திரவிய அநுமானமென்னும் பெயர் விவாகத்துக்கன்றி வேறொன்றிற்கும் இல்லாமலும் பதிதர்தாமே இரண்டு மூன்று தேவத்திரவிய அநுமானங்கள் உண்டென்று வேத உதாரணங்களால் ஒப்பிக்குந் தன்மையால் நாமும் ஒவ்வொன்றாய் ஆராய்ந்து ஏழும் உண்டென்று ஒப்பிக்கக் கடவோம்.

90.— இதில் நாமும் பதிதரும் ஒருப்படச் சொல்லுந் தன்மையாவது: ஒரு வேதச் சடங்கினைத் தேவத்திரவிய அநுமானமென்று சொல்லும்படிக்கு மூன்று குணங்கள் அதற்கு வேண்டியதாம். முதலாவது: புறத்தில் காணப்படும் அடையாளமுஞ் சடங்குமாக வேண்டும், 2-வது: அதினால் நமக்கு இஷ்டப்பிரசாதம் வருவது நிச்சயமாக

வேண்டும். 3-வது: அதற்கதனை ஸ்தாபித்த ஆண்டவர் கட்டளை உண்டாகவேண்டும். இந்த மூன்று குணங்களையுடைய தெல்லாத்துக்குந் தேவத்திரவிய அநுமானமென்னும் பெயர் செல்லுமொழிய அதில் ஒன்றில்லாதாயின் அந்தப் பெயர் செல்லாதென்னக்கடவோம். இதிப்படியாகையில் நாம் சொன்ன ஏழு சடங்குகளுக்கெல்லாம் அம் முக்குணம் உண்டென்றும், அவைகளுக்கு மாத்திரம் உண்டென்றும் வேத உதாரணங்களினால் ஒப்பித்தால் நாம் சொன்ன ஏழு தேவத்திரவிய அநுமானங்கள் உண்டென்றும், அவைகள் அல்லாமல் வேறில்லை யென்றும் ஒப்பித்தாற்போல் ஆகுமல்லோ.

ஆகையால், முதலாது ஞானஸ்நானம். இதனை அர்ச். சின்னப்பர் எபெசியாருக்கு எழுதின 5-ம் அதிகாரம் 26-ம் வசனத்தில் தண்ணீரால் கழுவுதலென்றார். இதோ புறச் சடங்கு. பின்னையும் அர்ச். மாற்கு சுவிசேஷத்தின் 16-ம் அதிகாரம் 16-ம் வசனத்தில் சேசுநாதரை விசுவசித்து ஞானஸ்நானம் பெற்றவன் கரை ஏறுவானென்றார். இதோ இதனால் வரும் இஷ்டப்பிரசாதத்தின் நிச்சயம். மீளவும் அவர் தாமே அர்ச். அருளப்பர் சுவிசேஷத்தில் 3-ம் அதிகாரம் 5-ம் வசனத்தில் தண்ணீராலும், இஸ்பிரீத்து சாந்துவினாலும் திரும்பிப் பிறவாதவன் கரை ஏறுமென்றார். அர்ச். மத்தேயு சுவிசேஷத்தின் 28-ம் அதிகாரம் 19-ம் வசனத்தில் எங்கும் போய் எல்லாருக்கும் உபதேசஞ் சொல்லி ஞானஸ்நானங் கொடுங்களென்றார். இதோ ஸ்தாபித்த கட்டளை. இம்மூன்று குணங்கள் உண்டாகையால் ஞானஸ்நானந் தேவதிரவிய அநுமானமென்பது பதிதருக்குஞ் சந்தேகமில்லை.

91.—இரண்டாவது, உறுதிப்பூசுதல். அப்போஸ்தலர் நடபடியாகமத்தின் 8-ம் அதிகாரம் 14-ம் வசனத்தில் சமாரிய பட்டணத்துப் பலர் ஞானஸ்நானம் பெற்ற செய்தி அப்போஸ்தலர் அறிந்து, எருசலேமிடத்திலிருந்து அர்ச். இராயப்பரும், அருளப்பரும் நெடு வழி நடந்து போய்

அவர்கள்மேல் கை வைத்து, இஸ்பிரீத்துசாந்துவை அடைந்தார்களென்று எழுதி இருக்கிறதொழிய அடிக்கடி அப்போஸ்தலர் ஞானஸ்நானம் பெற்றவர்கள் மேல் கை வைத்து, இஸ்பிரீத்துசாந்து தவறுமல் எழுந்தருளி வந்ததென்று அந்த ஆகமத்தில் பல இடத்தில் எழுதி இருக்கிறதல்லோ?

இதில் தலைமேல் வைத்த கை புறச்சடங்காமே. இஸ்பிரீத்துசாந்து தப்பாமல் எழுந்தருளினதினுல் அதில் வரும் இஷ்டப்பிரசாதத்தின் நிச்சயமாமே. உள்ளே இஷ்டப்பிரசாதத்தைப் பயக்கும் வல்லமை புறத்தில் செய்யப்பட்ட ஓர் சடங்குக்கு ஆண்டவர் கட்டளையினுல் வருமொழிய ஒருவராலும் வர அறியாதென்று பதிதருஞ் சொன்னதினுல் இதில் ஆண்டவர் ஸ்தாபித்த கட்டளை வெளியாமே. மீளவும் அப்போஸ்தலர் கை வைக்க இஸ்பிரீத்துசாந்து வருமென்று ஆண்டவர் ஸ்தாபியாதிருந்தால் எல்லாருக்கும் இஸ்பிரீத்துசாந்து வர அடிக்கடி அப்போஸ்தலர் தலைமேல் கை வைக்கிறது சர்வேசுரனை வீணுய்ச் சோதிக்கிறதாகையால் பாவமாமே. இதற்கு அப்போஸ்தலர் சம்மதிக்கப் போகிறதில்லை. ஆகையால் இதற்கு சேசுநாதர் அப்போஸ்தலருக்குக் கட்டளை செய்தது நிச்சயந்தானே. இத்தன்மைக்கு இதிலேயுஞ் சொன்ன மூன்று குணங்களைக் கண்டமையால் உறுதிப்பூசுதலும், தேவத்திரவிய அநுமானமென்பதும் நியாயந்தானே.

மீளவுஞ் சமாரிய பட்டணத்தாருக்கு வேறொருவன் ஞானஸ்நானங் கொடுத்திருக்க, அவனும் இந்தச் சடங்கினைக் கூடச் செய்யாமல் அதற்கு மாத்திரம் இரண்டு அப்போஸ்தலர் நெடு வழி நடந்து போய்ச் செய்ததினுல் இந்தத் தேவத்திரவிய அநுமானத்தை மேற்றிராணியாரொழிய வேறொருவருங் கொடுக்கப்படாதென்று திருச்சபையில் எப்போதும் நடந்த முறைமைதானே. ஆகிலும் நாம் எண்ணெய் கொண்டு பூசின முறைமை இதில் காணுததினுல் சந்தேகப்படவுந் தேவையில்லை. அர்ச். சின்னப்பர் கொரிந்தி

யாருக்கு எழுதின இரண்டாம் நிருபத்தின் முதல் அதிகாரம் 21-ம் வசனத்தில் இந்த முறையைத் தெளிவாக வைத்தார். கிறீஸ்துவின் முகாந்தரமாக எங்களை உங்களோடு கூட உறுதிப்படுத்தினவர் சர்வேசுரன் தாமே, நம்மெல்லாருக்கும் எண்ணெய் பூசினவர் அவர்தாமே. நம்மிடத்தில் தம் முத்திரைப் பதித்தவர் அவர்தாமே. நம் உயிரிடத்தில் இஸ்பிரீத்துசாந்துவின் அடைமானத்தைத் தந்தவர் அவர் தாமே யென்றார்.

இதோ உறுதிப்பூசுதலென்னும் பெயரும், எண்ணெய் பூசின சடங்கும் வரும். இஸ்பிரீத்துசாந்துவின் இஷ்டப் பிரசாதமும் இனி நாம் சொல்லிக் காட்டப்போகிறபடிக்கு இந்தத் தேவத்திரவிய அனுமானத்தினால் நமக்குப் பதிக்கப்பட்ட தேவ முத்திரையாக ஆத்துமத்தில் எழுதப்படும் அக்ஷரமும், இவையெல்லாம் ஒருப்படத் திருச்சபை செய்யும் முறையோடு இதில் வெளியாய் வேத சத்தியமாகக் காட்டப்பட்டதாமே. இதெல்லாம் இப்படியாகையில் வேதத்தில் எழுதப்பட்டதெல்லாம் உள்ளபடி அர்த்தத்தை திருகாமற் கொள்ளவேண்டுமென்று சொல்லிக்கொண்டு வரும் பதிதர் இந்தத் தேவத்திரவிய அநுமானத்தை மறுத்துத் தாங்கள் ஒத்துக்கொள்ளாமலென்ன. மீளவும் அப்போஸ்தலர் காலத்திலிருந்த அர்ச். தியொனிசியுஸென்பவர் துவக்கி விடாமல் வந்த வேதபாரகரெல்லாரும், தெர்துலியானும், சிப்பிறியானும், எரோணிமுசும், அகுஸ்தீனும், மற்றவரும் எண்ணெய் கொண்டு பூசி, மேல் கை வைத்து மேற்றிராணியார் இந்தத் தேவத்திரவிய அநுமானத்தைக் கொடுக்கும் முறை எப்போதுந் திருச்சபையில் நடந்த முறையாக எழுதி வைத்தார்கள்.

92.—மூன்றாவது, நற்கருணை. அர்ச். மத்தேயு சுவிசேஷத்தின் 26-ம் அதிகாரம் 26-ம் வசனந் துவக்கி சேசுநாதர் அப்பத்தையும், பாத்திரத்தையும் கையில் ஏந்தித் தோத்திரஞ் செய்து, சிறிது வார்த்தை சொல்லித் திவ்ய நற்கருணை உண்டாக்கினமுறை எழுதினதாமே. இதோ

செய்ய வேண்டிய சடங்கு. பின்னையும் அர்ச். அருளப்பர் சுவிசேஷத்தின் 6-ம் அதிகாரம் 52-ம் வசனத்தில் இந்த அப்பத்தை உண்டவன் நித்திய சீவியத்தை அடைவா னென்று சேசுநாதர் திருவுளம்பற்றினார். இதோ வரும் இஷ்டப்பிரசாதத்தின் நிச்சயம். மீளவும் அதிற்றானே 54-ம் வசனத்தில் நம்முடைய மாம்ஸத்தையும், இரத்தத் தையும் உண்ணாதவன் சீவன் இல்லாதவனென்றார். ஆகை யால் நம்மோடு பதிதருஞ் சந்தேகமின்றி நற்கருணை தேவத் திரவிய அநுமானமென்று ஒத்துக்கொள்வார்கள்.

93.— நாலாவது, பச்சாத்தாபம். அர்ச். அருளப்பர் சுவிசேஷத்தின் 20-ம் அதிகாரம் 21-ம் வசனத்தில் சேசு நாதர் அப்போஸ்தலருக்குத் திருவுளம்பற்றினதாவது: பிதா நம்மை அனுப்பினபடி நாமும் உங்களை அனுப்புகிறோம் என்றபின்பு, இதற்கு அர்த்தஞ் சொல்லுந் தன்மையால், நீங்கள் எவர்கள் பாவங்களைப் பொறுப்பீர்களோ அவர்களுக் குப் பொறுக்கப்படும். எவர்களுக்குப் பொறுக்கமாட்டீர்க ளோ அவர்களுக்கு பொறுக்கப்படாதிருக்கும் என்றார். இதில் தீர்வையிடும் முறையாகையால் புறச் சடங்கு உண் டாமே. பாவங்கள் பொறுக்கப்படும் என்றதனால் இஷ்டப் பிரசாதத்தின் நிச்சயமாமே. பிதா நம்மை அனுப்பினாற் போல நாமும் உங்களை அனுப்புகிறோமென்றது பிதாவின் கட்டளையினால் பாவங்களைப் பொறுக்க நாம் வந்தபடி நீங்க ளும் எம் கட்டளையினால் பாவங்களைப் பொறுக்கப் போங் கள் என்றதாகையால் இதுவே தேவ கட்டளையாமே.

ஆகையால் சொன்ன முக்குணங்கள் இதற்கும் உண் டாகி, இதுவுந் தேவத்திரவிய அநுமானம் என்று சொல் லக்கடவோம். ஆகிலும் இன்னஞ் சேசுநாதர் திருவுளம் பற்றின வார்த்தைக்கு அர்த்தம் வெளியாகும்படிக்கு அறிய வேண்டியதாவது: சேசுநாதர் தாம் பாடுபட்டு அடைந்த பலனினாலேயும், தமக்குள்ள தேவ வல்லமையினாலேயும், மனிதர் பாவங்களை எல்லாம் பொறுக்கும்படிக்குத் தம் பிதாவாகிய சர்வேசுரனால் அனுப்பப்பட்டார் என்றது நிச்

சயந்தானே. அப்படியே அவர் பாடுபட்டுப் பாவங்கள் எல்லாம் பொறுக்கப்படும்படிக்கு வேண்டினதின் மேலும் உத்தம மேரையால் அளவில்லாத பலன்களை அடைந்தார். ஆகிலும் அப்படித் தாம் அடைந்த பலன் உலகமெங்கும், நாடோறும், உலகம் முடியுந்தனையும், அதற்குப் பாத்திரமாயிருக்கும் பேர்களுக்கு மாத்திரந் தேவத்திரவிய அநுமானங்களை எத்தனைக் காரணங்களாகக்கொண்டு கொடுக்க வேண்டுமென்று ஸ்தாபித்தார்.

ஆகையால் மோக்ஷத்துக்கு எழுந்தருளிப்போக நாள் கிட்டினபோது, தமது இடமாக உலகெங்கும் அப்போஸ்தலரும், அவர்கள் வழியாக வருங் குருக்களும் போய்த் தேவத்திரவிய அநுமானங்களைக்கொண்டு தாம் அடைந்த பலனை மனிதருக்கு உதவியாகச் செலவழித்துப் பாவங்களைப் பொறுக்கும் உத்தியோகத்தைக் கொடுத்தார். ஆதலால் பிதா தம்மைப் பாவங்களைப் பொறுக்க அனுப்பினாற்போல, தாமும் அவர்களை அனுப்பினதாகச் சொன்னார். பாவங்களைப் பொறுக்க உண்டாக்கின தேவத்திரவிய அநுமானங்கள் இரண்டுண்டாம்: ஞானஸ்நானம், பச்சாத்தாபம். இவைகளில் ஞானஸ்நானம் முந்தினதாகையால் முழுத் தயைவகையால் கொடுக்கச் சித்தமாகி இதில் பாவ தோஷமும், அபராதக்கடனும் முழுதும் பொறுப்பதல்லாமல் இந்தத் தேவத்திரவிய அநுமானத்தைக் கொடுக்க எல்லாருக்கும் உத்தாரங் கொடுத்தார்.

இந்த நன்றியறியாதவர்கள் ஞானஸ்நானம் பெற்ற பின்பு, செய்த பாவங்களைத் தயையோடு கூடின நீதிவகையால் பொறுக்கப் பச்சாத்தாபத்தை ஸ்தாபித்தார். இதனால் அப்போஸ்தலருக்குச் சொல்லி, அவனவன் செய்த பாவங்களை நன்றாய் விசாரித்துப் பொறுக்கத்தகுவதைப் பொறுக்கவும், பொறுக்கத்தகாததைப் பொறுக்காதிருக்கவும் அவர்களுக்கு உத்தியோகங் கொடுத்தார். அப்படியே பச்சாத்தாபந் தீர்வைவகையால் உண்டாக்கப்பட்ட தேவத்திரவிய அநுமானமாகக்கொள்ள இதில் பாவ தோஷத்தைப்

பொறுத்து, நித்திய அபராதக் கடனை முழுதும் பொறுக்காமல், நித்திய அபராதக் கடனை இன்னம் நிற்கச் சித்தமானார். இதுவுந் தவிர இந்தத் தீர்வையிட எல்லாருக்கும் உத்தாரங்கொடாமல் இதற்கு அப்போஸ்தலரையும் அவர்களோடு சகல குருக்களையும் ஸ்தாபித்தார்.

அப்படியே அர்ச். சின்னப்பர் கொரிந்தியாருக்கு எழுதின 2-ம் நிருபம் 5-ம் அதிகாரம் 18-ம் வசனத்தில் இந்தத் தேவத்திரவிய அநுமானத்தைக் குறித்துச் சொன்னதாவது: மறுவுறவாக்கும் உத்தியோகத்தை எங்களுக்கு ஆண்டவர் தந்தார் என்றார். எல்லாருக்குந் தந்தார் என்னாமல் எங்களுக்குத் தந்தார் என்றதினால் குருக்களுக்கொழிய, இதில் பாவங்களைப் பொறுக்கும் வல்லமை ஒருவருக்கும் இல்லை என்று சொல்லக்கடவோம். இதில் லுத்தேர் எப்போதுந் தன்னோடு ஒத்தவனாய் மதி கெட்ட பித்தனைப் போல் பேசி ஆணும், பெண்ணும் எல்லாரும் பாவசங்கீர்த்தனங் கேட்டுப் பாவங்களைப்பொறுக்கவல்லவர் என்றதும் போதாமல், 1534-ம் ஆண்டில் அச்சில் பதித்த தனிப் பூசை விலக்கச் செய்த புஸ்தகத்தில் பசாசு முதலாய் மனித ரூபமாகத் தோன்றி, இந்தத் தேவத்திரவிய அநுமானத்தை முடித்துப் பாவங்களைப் போக்க வல்லதென்றான்.

மற்றப்படி இந்தத் தேவத்திரவிய அநுமானத்தைக் கொடுக்கும் உத்தியோகத்தை அர்ச். சின்னப்பர் மறுவுறவாக்கும் உத்தியோகம் என்றது ஏதெனில், ஆண்டவருக்கு ஆகாமல் பழம் பகையாகிய சென்மப் பாவத்தோடு பிறந்த யாவரும், ஞானஸ்நானம் பெற்ற மாத்திரத்தில் ஆண்டவரோடு உறவாகி, அவருக்குப் பிள்ளைகளாவது நிச்சயந்தானே. அதன்பின்பு செய்த சாவான பாவத்தால் அந்த உறவு போக்கினவன் மறுபடி ஆண்டவர் உறவு அடையப் பச்சாத்தாபமென்னுந் தேவத்திரவிய அநுமானம் உண்டாக்கப்பட்டதினால், அதில் பாவங்களைப் பொறுத்து மறு உறவினைக் கட்டுவிக்கும் உத்தியோகம், மறு உறவாக்கும் உத்தியோகம் என்றார்.

மீளவுஞ் சேசுநாதர் ஆண்டவராயிருக்க, எல்லாத்தையும் அறிந்தவராயிருக்க, நமக்குத் தரும் பலன் தாம் அடைந்த பலனுயிருக்கத் தம் சித்தத்தின்படியே பாவசங்கீர்த்தனமில்லாமலும், பாவங்களைப் பொறுக்க வல்லவர் தாமே. அப்படி மதலேனம்மாளுக்கும், நல்ல கள்ளனுக்கும், பலருக்கும் பொறுத்தாரென்று அறிவோம். குருக்களோவெனில், சேசுநாதர் பலன்களைக்கொண்டு பொறுத்தினுலேயும், அவர் வைத்த மனிதராக மாத்திரம் அந்த வல்லமை அடைந்ததினுலேயும், சேசுநாதர் கட்டளையிட்டபடி பாவங்களைப் பொறுக்கலாமொழிய, அவர் கட்டளையை மீறிச் செய்தால் அவர்களுக்குக் குற்றமாவதல்லாமல் நமக்குப் பாவப்பொறுத்தலாவதில்லை. சேசுநாதர் கட்டளையிட்ட வகையோவெனில், தீர்வையிடும் முறையாகக் கொள்ள, அவர்கள் தப்பாத தீர்வையிடும்படிக்கு நன்றாய் அவனவன் செய்த பாவங்களை அறிந்து ஆராயவேண்டியதல்லோ?

பல பாவங்களுக்காகவெனில், புறச் சாட்சியில்லாமையால் அவனவன் தன் பாவங்களை ஒளியாமல், குருக்களுக்குச் சொல்லியல்லோ அறிவிக்கக் கடவான். இல்லாதாயின் குருக்கள் இந்தப் பாவம் பொறுக்கலாம், அது பொறுக்கலாகாதென்று தீர்வையிடுவதற்கு இடமில்லை. ஆகையால் இதில் சேசுநாதர் பாவசங்கீர்த்தனத்தைக் கட்டளையிட்டார் என்று சொல்லக்கடவோம். இந்தக் கட்டளையின்படி அர்ச். லூக்காஸ் என்பவர் அப்போஸ்தலர் நடபடியாகமத்தின் 19-ம் அதிகாரம் 18-ம் வசனத்தில் எழுதினதாவது, அநேக கிறீஸ்துவர்கள் வந்து, தாங்கள் செய்த பாவங்களைச் சொல்லிப் பாவசங்கீர்த்தனஞ் செய்துகொண்டு வந்தார்கள் என்றார். மீளவும் அர்ச் அருளப்பர் முதல் நிருபத்தின் முதல் அதிகாரம் 9-ம் வசனத்தில் சொன்னதாவது: நாமே பாவசங்கீர்த்தனஞ் செய்தால் ஆண்டவர் தாம் தந்த வார்த்தைப்பாடுகளைச் செலுத்தும் நீதிபரனுகக்கொள்ள நம்முடைய பாவங்களைப் பொறுப்பார் என்றார்.

கடைசியில் தீர்வையிடும் முறையால் இந்தத் தேவத்திரவிய அநுமானம் உண்டாக்கப்பட்டமையால், இதில் ஆண்டவர் வைத்த மனிதராக நின்ற குருக்கள் கேட்ட பாவங்களுக்குத் தக்கதாய் ஓர் அபராதத்தைக் கட்டளையிட்டுத் தீர்வையிடவும், இட்ட அபராதத்தை நாமே தீர்க்கவுங் கடன்ருனே. அபராதமில்லாவிட்டால் சகாய நன்றி செய்தார்கள் என்னலாமொழியத் தீர்வையிட்டார்களென்று சொல்லக்கூடாதே. இப்படி செய்த பாவங்களைத் தீர்க்கும் மருந்தாகவும், இனிச் செய்யாதபடிக்குக் காக்கும் வேலியாகவும், ஆண்டவர் கட்டளையிட்ட பாவசங்கீர்த்தனம் லுத்தேர் முதற்கொண்டு இந்நாட் பதிதர் முழுதும் மறுக்கமாட்டாமல் உண்டென்று சொன்ன பின்பு, முன் போட்டு அழிந்த அணை அறுத்தோடும் ஆறுபோலத் தடையொன்றின்றிப் பெருகின பாவ வெள்ளத்தில் தாங்கள் முழுகும்படிக்குப் பாவசங்கீர்த்தனமென்னும் பெயரிருக்க அது பாவத்துக்குச் செய்யுந் தடையும், நமக்குத் தரும் பலனுமில்லாததாகப் பல அபத்தங்களை நியமித்தார்கள். அதாவது:

இந்தத் தேவத்திரவிய அநுமானத்தில் ஆண்டவர் கட்டளையிட்ட முறை தீர்வையிடும் முறையல்லவென்றும், இதில் குருக்கள் பாவங்களைப் பொறுப்பவரல்லவென்றும், ஆண்டவர் முன் அவனுக்குத் தந்த பாவப்பொறுத்தலை இவர்கள் நமக்கு அறிவிப்பவர் மாத்திரம் என்றும், இனி நன்னெறியில் நாமே இடருதொழுக உறுதி சொல்பவரென்றுஞ் சொல்லி, அதனுல் அவனவன் செய்த பாவத்தைக் குருக்கள் அறியவுந் தேவையில்லை, மற்றவர்கள் அவர்களுக்குச் சொல்லவுந் தேவையில்லை என்பார்கள். அப்படியே தரங்கம்பாடியில் அச்சுப் பதித்த நற்கருணை ஆயத்தமென்னும் புஸ்தகத்தில் பல இடத் தெழுதினதாகக் கண்டோம்.

ஆகிலும் குருக்கள் இதில் பாவங்களைப் பொறுப்பவரல்லவராகி, முன் ஆண்டவர் பொறுத்ததை அறிவிப்பவர் மாத்திரமானுல், குருக்கள் பாவத்தைப் பொறுத்தோ

மென்று சொல்லுமுன்னே அந்தப் பாவம் பொறுக்கப்பட்டிருந்ததென்று சொல்லத்தகுமே. இப்படியாகில் நீங்கள் பொறுத்த பாவம் பொறுக்கப்பட்டிருந்ததென்னுமல், பொறுக்கப்படுமென்று சேசுநாதர் முன் சொல்லிக்காட்டின உதாரணத்தில் சொல்லுவானேன்? பொறுக்கப்படுமென்றதினால் அப்போதுதானே குருக்கள் பாவங்களைப் பொறுத்து, இட்ட தீர்வை ஆண்டவர் ஏற்றுக்கொண்டு தாமும் பொறுக்கிறார் என்று சொல்லக்கடவோம்.

மீளவுந் தீர்வையிட உத்தியோகத்தை இதில் குருக்களுக்குக் கொடாதே போனால், பாவங்களைப் பொறுக்கவும், பொறுக்காதிருக்கவுந் தந்த உத்தியோகமாவதென்ன? இதுவுந் தவிர நீங்கள் பாவங்களைப் பொறுத்தால், பொறுக்கப்படுமென்று தெளிவாக சேசுநாதர் திருவுளம்பற்றின வசனமுள்ள அர்த்தத்தின்படியே கொள்ளாமல், பொறுப்பதென்ற சொல் அறிவிப்பதென்றதாகக் கொள்ளுவானேன். வேதத்தில் எழுதப்பட்டதெல்லாந் தேவ வாக்கியங்களாகையால் ஓர் அக்ஷரங் குறைக்கவும், ஏற்றவும், திருகவும், மாற்றவும் நினைப்பதே தோஷமென்றும், அவைகளை முகத்தில் தோன்றின அர்த்தத்தோடு தலை பணிந்து ஒத்துக்கொள்ளக்கடவோமென்றும், பரம ஞானிகளைப்போல சொல்லிக்கொண்டு திரிகிறவர் இந்தப் பதிதர்தானேயல்லோ.

ஆகிலும் பொறுத்தல் என்பதும் அறிவித்தல் என்பதும் பொறுத்தல் என்னுஞ் சொல்லுக்கு முகத்தில் தோன்றும் அர்த்தமோவென்ன? தானே தனக்கு இரு கண்களைப் பிடுங்கினலும், தடவியாயினுங் காணப்படும் இந்த அபத்தத்தைப் பதிதர் மாத்திரங் காணுமலென்ன? அவர்கள் அதைக் காணுததற்குள்ள நியாயம் நாமே சொல்லிக்காட்டுவோம். திருச்சபையில் சேசுநாதர் ஸ்தாபித்த முறைகளுக்குள்ளே நிறைவேற்றுதற்கரிய முறையிதுவே. குறையின்றி நிறைவேற்றினல், பாவங்கள் வாராதபடிக்கு எல்லாத்திலும் மிகவும் உதவின முறையிதுவே.

ஆகையால் உயிரைக் கொன்று, பொருளைப் பறிக்குங் கள்ளனுக்கு இராச நீதி பொருந்தாதது போலவும், பாயுங் குதிரைக்குக் கடிவாளம் பொருந்தாததுபோலவும், மதத்தைப் பொழியும் யானைக்கு அதனைத் தூணிற் கட்டின சங்கிலியும், நெற்றியில் நிறுத்தின அங்குசமும்,பொருந்தாதது போலவும், அகன்றவழியைத் தேடிச் சகல பாவங்களுக்கு ஒரு தடையில்லாதபடிக்குத் திருச்சபையினின்று பிரிந்த பதிதருக்கெல்லாம் பாவசங்கீர்த்தனம் பொருந்தாமல், அதனை எல்லாரும் பகைத்து, மறுத்தது நியாயந்தானே. மற்றபடி பாவங்களை விட்டு, நன்னெறியொழுக ஆசையுள்ள யாவரும் அதற்கு இதுவே உத்தம வழியென்று ஆவலோடு தேடுவார்கள்.

அப்படியே நுரெம்பெர்க் பட்டணத்தார் லுத்தேர் மயக்கத்தில் அகப்பட்டுப் பாவசங்கீர்த்தன முறையை விட்டவுடனே அங்கே முன் காணாத அக்கிரமக் காம வகையும், தீராத பகை, பழி, கோபமும், மாறாத நிந்தை, களவு, கொலை மற்றப் பாவங்களும் ஒருங்குடன் திரண்டுகூடி, வெள்ளமாய் எங்கும் மூடினதைக் கண்டு, தாமே தம்மைப் பொறுக்க மாட்டாமல், நெடுநாள் வருந்தின பின்பு லுத்தேர் திறந்த வழியால் வந்து, மூடின கேடுகள் விலகும் உபாயங்களை நெடிதாய்த் தேடினபின்பு, பாவசங்கீர்த்தனம் ஒன்றே மீளவும் ஸ்தாபித்து, அதுவே அணையாக வைத்தால் வந்த கேடுகள் விலகிப் போய், பழையபடி மெய், தயை, தானம், கற்பு, நிறை, நீதி, நட்பு, தவம், மாட்சி மற்றப் புண்ணியங்கள் எல்லாம் மீண்டும் வழங்குமென்று நிச்சயித்து தங்களை அக்காலத்தில் ஆண்ட இராயனாகிய ஐந்தாங் கற்லென்பவர் அண்டையில் ஸ்தானாபதிகளை விட்டுத் தங்களுக்கு வந்த கேடுகளும், அக்கிரமங்களும் விரிவாகச் சொல்லி, அதற்கு அவர் இரங்கிக் கட்டளையிட்டு, பாவசங்கீர்த்தன முறையை மீளவும் ஸ்தாபிக்கச் செய்யும்படி மன்றாடினார்கள்.

94.— ஐந்தாவது, அவஸ்தைப்பூசுதல். அர்ச். யாகப்

பர் எழுதின நிருபம் 5-ம் அதிகாரம் 14-ம் வசனமாவது: வியாதியாய் ஒருவன் கிடந்தபோது குருக்களை அழைப்பித்து அவர்களும் வந்து, கர்த்தர் நாமத்தினால் அவனை எண்ணெய் கொண்டு பூசி, அவனுக்காக வேண்டிக்கொள்ளக் கடவார்கள் என்றார். இதோ சடங்கு. அப்போது விசுவாசத்தோடு செய்த வேண்டுதல் அவனை ஈடேற்றி, ஆண்டவர் அவன் துயர்களை ஆற்றி, பாவங்களில் கிடந்தால், அவைகள் அவனுக்குப் பொறுக்கப்படுமென்றார். இதோ இஷ்டப்பிரசாதத்தின் நிச்சயம். ஸ்தாபித்த தேவ கட்டளை இதில் வெளியாக இல்லாதாயினும், வேண்டிக்கொண்டு எண்ணெய் பூசின சடங்கு செய்தமாத்திரத்தில் எப்போதுந் தப்பாமல் பாவப்பொறுத்தல் உண்டாகுமென்று திடமாய் அர்ச். யாகப்பர் எழுதினதினால் அதற்குத் தேவ கட்டளை இருந்ததென்று கண்டுகொள்ளக்கடவோம். மீளவும் இவ்வகைப் பூசுதல் இஷ்டப்பிரசாதத்தைத் தரும்படிக்குக் கர்த்தர் ஸ்தாபித்ததினாலல்லோ அப்படியாகுமென்று விசுவசித்து, வேண்டிக்கொள்ளச் சொன்னார். ஆகையால் இதிலேயும் முக்குணங்களைக் கண்டமையால் இதுவுந் தேவத்திரவிய அநுமானங்களில் ஒன்றென்று சொல்லக்கடவோம்.

95.— ஆறுவது, குருத்துவம். இதில் புறச் சடங்கு தலைமேல் கை விரித்தல். அப்படியே அப்போஸ்தலர் நடபடி ஆகமத்தின் 6 ம் அதிகாரத்து 6-ம் வசனத்திலும், 13-ம் அதிகாரம் 3-ம் வசனத்திலும், அர்ச். சின்னப்பர் திமோத்தேயுக்கு எழுதின முதல் நிருபம் 4-ம் அதிகாரம் 14-ம் வசனத்திலும், 5-ம் அதிகாரம் 22-ம் வசனத்திலும், அவருக்கு எழுதின இரண்டாம் நிருபத்தின் முதல் அதிகாரத்து 6-ம் வசனத்திலும் எப்போதுந் தலைமேற் கை விரித்த சடங்கோடு குருத்துவந் தந்ததென்று கண்டோம்; ஆகையால் கிரேக் பாஷையில் குருத்துவங் கீரோத்தொனிய என்று சொல்லப்பட்டதாம். கீரோத்தொனிய என்பது கைப்புற தீட்சை என்றவாறு.

இரண்டாவது:— இதில் இஷ்டப்பிரசாதத்தின் நிச்

சய முண்டாம். அப்படியே திமோத்தேயுக்கு எழுதின முதல் நிருபத்தில் 4-ம் அதிகாரம் 14-ம் வசனத்தில் அர்ச். சின்னப்பர் சொன்னதாவது: ஆண்டவர் எனக்குத் தந்த காட்சியின்படியே நான் உன்னை மேற்றிராணியாராக்க, உன் தலைமேல் கை விரித்த சடங்கோடு உனக்கு வந்த இஷ்டப் பிரசாதத்தை எண்ணாதிருக்கவேண்டாம் என்றார். மீளவும் அவருக்கு எழுதின இரண்டாம் நிருபத்தின் முதல் அதிகாரம் 6-ம் வசனத்தில் சொன்னதாவது: நான் உன் தலைமேல் கை விரித்த சடங்கோடு உனக்கு வந்திருக்கும் இஷ்டப்பிரசாதத்தை எழுப்பி நடக்க உறுதி சொல்லுகிறேன் என்றார்.

மூன்றாவது.— இதற்கு ஸ்தாபித்த தேவ கட்டளையு முண்டாம். அப்போஸ்தலர் நடபடி ஆகமத்தின் 13-ம் அதிகாரம் 2-ம் வசனத்தில் சவுலு, பார்னபா என்ற இருவரையும் நாம் தெரிந்துகொண்ட உத்தியோகத்துக்கு மற்றவர்களில் பிரிப்பீர்களாக என்று ஆண்டவர் கட்டளையிட்டபடி மற்ற அப்போஸ்தலர் ஒருசந்தியாயிருந்து வேண்டிக்கொண்டு, அவர்கள் இருவர் தலைமேல் கை வைத்து அனுப்பினார்களென்று எழுதியிருக்கிறதொழிய, அர்ச். சின்னப்பர் எபேசியாருக்கு எழுதின நிருபத்தின் 4-ம் அதிகாரம் 11-ம் வசனத்தில் ஆடுகளை மேய்ப்பவர் உவமையால் மற்றவர்களை நன்னெறியில் நடத்தும் உத்தியோகமுள்ள மேற்றிராணியார் முதல் குருக்கள் எல்லாரையுங் குறித்து இப்படிப்பட்ட உத்தியோகத்தை இவர்களுக்கு ஆண்டவர் தாமே தந்ததென்றார்.

ஆகையால் வேண்டிய முக்குணமும், இதிலேயும் உண்டாகையால் இதுவுந் தேவத்திரவிய அநுமானமென்று சொல்லக்கடவோம். இப்படியே கல்வீன் தானுங் கற்பனைகளின் 4-ம் கண்டம் 19-ம் அதிகாரம் 31-ம் பிரிவில் குருத்துவந் தேவத்திரவிய அநுமானமாக ஒத்துக்கொண்டான். அவன் சீஷரோவெனில், ஒரு நிலை நிற்கமாட்டாமல் குருவழியை விட்டு, இந்தச் சத்தியத்தை மறுத்துக்கொண்டு திரிகிறார்கள்.

96.— ஏழாவது, மெய்விவாகம். அர்ச். சின்னப்பர் எபேசியாருக்கு எழுதின நிருபத்தின் 5-ம் அதிகாரம் 31-ம் வசனத்தில் சொன்னதாவது: ஸ்திரீ பூமான் இருவரும் ஓர் உடலாகக்கடவார்கள். இது பரம இரகசியத்து அடமானமே. அதெப்படியென்றால், கிறீஸ்துவையுந் திருச்சபையையும் பற்றி இது பரம இரகசியமென்றேன் என்றார். இதற்குரிய அர்த்தத்தைச் சொல்லிக்காட்டுவோம். ஸ்திரீ பூமான் இருவரும் ஒருவராகச் செய்யும் புணர்ச்சி மிருகத்திடத்திலுங் காணப்பட்டமையால் பரம இரகசியம் என்னப்படாதல்லோ. ஆகையால் இதில் பரம இரகசியமேதெனில், இருவர் ஒருவராகச் செய்யும் விவாகக் கட்டு மரணபரியந்தம் அவிழ்க்கப்படாமல், பிள்ளைகளில்லாதாயினும், வியாதியுள்ளதாயினும், மனக்குறை வந்ததாயினும், எப்படியாயினும் இருவர் தம்முட் பிரியமாட்டாதபடிக்கு சேசுநாதர் ஸ்தாபித்த விவாக வகையே பரம இரகசியந்தானே.

இதை இப்படி ஸ்தாபித்ததற்குக் குறித்த நியாயமேதெனில், கிறீஸ்துவுக்குந் திருச்சபைக்கும் அவிழ்க்கப்படாமலுள்ள ஞானக் கட்டு முறையைக் காட்டும்படிக்குச் சொன்ன முறையால் விவாகத்தை ஸ்தாபித்தார். ஆகையால் கிறீஸ்துவுக்கு ஒரு திருச்சபையும், திருச்சபைக்கு ஒரு கிறீஸ்துவு மாத்திரம் உள்ளபடி, ஆணுக்கு ஒரு பெண்ணும் பெண்ணுக்கு ஒரு ஆணுமாத்திரம் இருக்கவும், அர்ச். மத்தேயு சுவிசேஷத்தின் 28-ம் அதிகாரம் 20-ம் வசனத்தில் சொன்னபடி உலகம் முடியுந்தனையுஞ் சேசுநாதர் தன் கற்புடையாளாகிய திருச்சபையைக் கைவிடாமலும், பிரியாமலுங் காப்பார் என்றதுபோல, ஸ்திரீ பூமான் இருவரும் மரணபரியந்தம் பிரியாமல் அன்போடு ஒன்றாயிருக்கவுங் கட்டளையிட்டார்.

ஆகையால் இப்போது திருச்சபையிலுள்ள விவாக முறைமை கிறீஸ்துவுக்குந் திருச்சபைக்குமுள்ள ஞானக் கட்டு முறையைக் காட்டும் அடையாளமாக ஸ்தாபிக்கப்பட்டதாமே. ஆதலால் கிறீஸ்துவர்கள் விவாகமே பரம

இரகசியத்து அடமானமென்று அர்ச். சின்னப்பர் எழுதி வைத்தார். இல்லாவிட்டால் விவாகப் புணர்ச்சி கிறீஸ்து வையுந் திருச்சபையையுங் குறித்துப் பரம இரகசியமென்னப்படும் என்று தாமே எழுதுவானேன்? அப்படி அந்த அதிகாரத்தில் தானே திருச்சபைக்குக் கிறீஸ்துவே தலையாவதுபோல, ஸ்திரீயானவளுக்குத் தன் பத்தா தலையாமென்றார். திருச்சபைமேலே சேசுநாதர் அன்பு வைத்தபடி, பூமானும் தன் துணைவியைச் சிநேகிக்கச் சொன்னார். சேசுநாதரைத் திருச்சபை வணங்கி அவருக்குக் கீழ்ப்படிந்தது போல, ஸ்திரீயுந் தன் பத்தாவுக்கு வணக்கஞ் செய்து கீழ்ப்படியக் கற்பித்தார்.

இதோ காணப்படும் மனிதர் விவாகங் காணப்படாததாய் கிறீஸ்துவுக்குந் திருச்சபைக்குமுள்ள ஞானப் புணர்ச்சியைக் காட்டும் அடையாளமாமே. தேவத்திரவிய அநுமானமாவதற்கு வேண்டிய இந்த முதற் குணமல்லாமல் இஷ்டப்பிரசாதத்தின் நிச்சயமும் இதில்தானே காணப்படும். அதெப்படியென்றால், ஆண்டவர் மனுஷாவதாரஞ் செய்தபோது தாமெடுத்த சுபாவம் மெய்யான மனுஷ சுபாவமாகையால் அந்தச் சுபாவத்தின் ஒருமையால் மற்ற மனிதரோடு சேசுநாதர் புணரப்பட்டாரென்று சொல்லலாம். ஆகிலும் மனுஷ சுபாவப் புணர்ச்சி பொது முறையாகி அவ்வகையால் அக்கியானிகளோடேயும் அவர் புணரப்பட்டதாகையில் இதுவன்றித் திருச்சபையை ஒரு கற்புடையாளாகக் கொண்டு தாம் இதனோடு விசேஷமாய்க் கொரிந்தியாருக்கு எழுதின 2-ம் நிருபத்தின் 11-ம் அதிகாரம் 2-ம் வசனத்தில் அர்ச். சின்னப்பர் சொன்னபடி புணரப்பட்டிருக்கிறாரென்று சொல்லக்கடவோம்.

இது சேசுநாதர் திருச்சபையின்மேல்வைத்த விசேஷ பட்சத்தினாலேயும், அதற்கு எந்நாளுங் கொடுத்துக்கொண்டு வரும் இஷ்டப்பிரசாத முதல் பல வரங்களினாலேயுமாகும் ஞானப் புணர்ச்சிதானே. ஆகையால் ஸ்திரீ பூமான் இருவருக்குள்ள அக்கியானிகளுக்கும் பொதுவாகிய புணர்ச்சியொழியத் திருச்சபையோடு சேசுநாதருக்குள்ள ஞான

விசேஷப் புணர்ச்சியைக் காட்ட அவர்களுக்குள்ள தேவ பட்சத்தாலும், இஷ்டப்பிரசாதத்தாலும், வரும் ஞானப் புணர்ச்சி உண்டாக வேண்டியதல்லோ. ஆகையால் அர்ச். சின்னப்பர் சொன்னபடி திருச்சபையோடு கிறீஸ்துவின் ஞானப் புணர்ச்சியைக் காட்டும் அடையாளமாகக் கிறீஸ்துவ விவாகம் ஸ்தாபிக்கப்பட்டமையால் அதற்கு வேண்டிய தேவ பட்சமும் இஷ்டப்பிரசாதமும் இதில் வருவது நிச்சயமாமே. இப்படியே புறத்தடையாளமும், உள்ளத்து இஷ்டப்பிரசாத நிச்சயமும் இதில் உண்டென்று ஒப்பித்தாச்சுது.

மீளவும் இதனை ஸ்தாபித்த தேவ கட்டளையும் உண்டென்று காட்டக்கடவோம். அதெப்படியென்றால், உலகம் வர்த்திக்க விவாகம் ஆண்டவரால் ஸ்தாபிக்கப்பட்டதென்று இந்நாளில் சந்தேகப்படுவாரில்லை. ஆகிலும் மக்களைப் பெறுதற்கு வேண்டிய சுபாவக் கட்டல்லாமல் கிறீஸ்துவர்கள் விவாகம் இஷ்டப்பிரசாதத்தைத் தருஞ் சடங்காகித் திருச்சபையோடு சேசுநாதருக்குள்ள ஞானப் புணர்ச்சியைக் காட்டும் அடையாளமாக ஆண்டவரால் ஸ்தாபிக்கப்பட்டதென்றும், இதனால் இது மெய்யான தேவத்திரவிய அநுமானமென்றும், இந்நாட் பதிதர் ஒத்துக்கொள்ளார்கள். ஆகிலும் இன்றையவரைக்குஞ் சொன்ன நியாயங்களினால் கிறீஸ்துவர்கள் விவாகம் அந்த ஞானப் புணர்ச்சியைக் காட்டும் அடையாளமென்றும், அதனால் விசேஷ இஷ்டப்பிரசாதம் வருமென்றும், வேத உதாரணத்தால் ஒப்பித்ததல்லோ. ஆனால் ஒரு தேவ இரகசியத்தைக் காட்டும் புறச்சடங்கு தப்பாமல் இஷ்டப்பிரசாதத்துக்குக் காரணமாக ஸ்தாபிக்கப்படுவது ஆண்டவராலன்றி வேறொருவராலும் ஆகுந் தன்மையல்லவென்று நம்மோடு பதிதருஞ் சொல்லுகிறார்கள்.

ஆகையால் கிறீஸ்துவர்கள் விவாக இஷ்டப்பிரசாதத்தைத் தந்து, கிறீஸ்துவின் ஞானப் புணர்ச்சியைக் காட்டும் அடையாளச் சடங்காகக்கொள்ள, ஆண்டவரால் அதற்கு

ஸ்தாபிக்கப்பட்டதென்று சொல்லவுங் கடவார்கள். ஆகையால் அர்ச். மத்தேயு சுவிசேஷத்தின் 19-ம் அதிகாரம் 6-ம் வசனத்தில் சேசுநாதர் விவாகத்தைப்பற்றி ஆண்டவர் கட்டினதை மனிதன் பிரிக்காதிருப்பானாக என்று திருவுளம் பற்றின வசனம், சுபாவப்பொது முறையால் செய்த விவாகத்தைப்பற்றிச் சொன்னதொழிய, விசேஷமாய் மரணபரியந்தம் பிரிக்கப்படாத கட்டுள்ள கிறீஸ்துவர்கள் விவாகம், ஆண்டவரால் சொன்ன முறையோடு ஸ்தாபிக்கப்பட்டதென்று அவர் திருவுளம்பற்றினதாகக்கொள்ளக்கடவோம். ஆகையால் விவாகமும் தேவத்திரவிய அநுமானமென்பது சத்தியந்தானே. விவாக முறையில் வெட்கமில்லாத லுத்தேர் சொன்னதை நமக்குள்ள நாணத்தைப் பாராமல், இங்கே எழுதக்கடவோம்.

லுத்தேர் போதித்ததெல்லாம் ஒருமிக்க அவன் சீஷர்கள் அச்சுப் பதித்தார்கள். அதில் 5-ம் புஸ்தகத்தில் 123-ம் ஏட்டில் எழுதியிருக்கிறதாவது: லுத்தேர் வாசமாயிருந்த வித்தேம்பெர்க் நகரில் எல்லாருக்கும் பொதுவாய் 1522-ம் ஆண்டில் விவாக விஷயத்தில் செய்தபிரசங்கத்தில் சொன்ன வார்த்தையாவது: ஸ்திரீயானவள் தன் பத்தாவுக்கு இடங்கொடாளாயின் அப்போது "நீ மாட்டேனென்றால், வேறொருத்தி சம்மதித்து வருவாள்" என்று புருஷன் அவளுக்குச் சொல்லக்கடவான். அப்படியே கொண்ட பெண்சாதி மாட்டேனென்றால், இருக்கிற வெள்ளாட்டியைச் சேர்ப்பீர்களாக என்றான். அப்படியே வேசிகள் கூத்தாடின இடத்தில் இதனைச் சொல்லக் கேட்டாலும், நல்லோர் கூசிச் செவிகளை அடைக்கச் செய்யும் அபத்தம் இதாகித் திருச்சபையை நிறுத்தவந்த புது அப்போஸ்தலனாகிய லுத்தேர் வெட்கமில்லாமல் வேத முறையாக ஞானப் பிரசங்கத்தில் சொல்லக் கூசாதே போனான்.

மீளவும் அர்ச். மத்தேயு 5-ம் அதிகாரம் 32-ம் வசனத்திலும், 19-ம் அதிகாரம் 9-ம் வசனத்திலும், அர்ச். மாற்கு 10-ம் அதிகாரம் 11-ம் வசனத்திலும், அர்ச். லூக்கா 16-ம்

அதிகாரம் 18-ம் வசனத்திலும், அர்ச். சின்னப்பர் கொரிந்தியாருக்கு எழுதின முதல் நிருபத்தின் 7–ம் அதிகாரம் 10–ம் வசனத்திலும் மரணபரியந்தம் விவாகக் கட்டு அவிழ்க்கப்படாதென்று வேத சத்தியமாக எழுதியிருக்கப் பழைய வேதத்தில் முதலாய்ப் பிறர்க்குள்ளாகித் தன் ஸ்திரியானவள் தனக்குத் துரோகம் பண்ணின காரணத்தினாலொழிய, அவளை மறுத்து வேறே கொள்ளப்படாதிருக்க, ஓர் இரண்டு முறை தன் புருஷனுக்கு இடங்கொடாத பெண்சாதியை மறுக்க லுத்தேர் உத்தாரந் தந்தான். ஆகிலும் முதல் தாரத்தைக் கைவிட்டாலொழிய, வேறே கொள்ளப்படாதென்று அந்தப் பிரசங்கத்தில் 1522–ம் ஆண்டில் சொன்னான். அதன்பின்பு 1539-ம் ஆண்டில் 17 வருஷங் கடந்ததாகையால் அவன் தன் ஞானமும் வளர்ந்து, தானுந் தெளிந்து தேறி, லங்கிறு என்பவனுக்கு இரண்டு பெண்சாதிகளைக் கூடப் படைக்க உத்தாரஞ் செய்தான். இவை எல்லாம் மெய்யென்று அறிந்து, இன்னந் நாங்கள் அநுசரிக்குஞ் சமயத்துக்கு லுத்தேரைத் தலைவனாக வைப்பதற்குச் சிலர் கூசாதிருப்பதைக் கண்ட நமக்கு அதிசயந்தானே.

97.— இன்றையவரைக்குஞ் சொல்லிக் காட்டின வேத உதாரணங்களினால், நாம் முன் சொன்ன ஏழு தேவத்திரவிய அநுமானங்கள் உண்டென்று ஒப்பித்ததல்லோ. இந்த ஏழும் நீங்கப் புறத்து அடையாளமாகி, உள்ளத்து இஷ்டப்பிரசாதத்தைத் தரும்படிக்கு ஆண்டவரால் ஸ்தாபிக்கப்பட்ட வேறொரு சடங்கு உண்டென்று வேத உதாரணங்களினால் ஒப்பிப்பாரில்லை. ஆகையால் அந்த ஏழு மாத்திரம் உண்டென்று சொல்லக்கடவோம். ஆகிலும் ஏழு தேவத்திரவிய அநுமானங்களைச் சேசுநாதர் ஸ்தாபித்த தன்மையால் இதில் குறையவும் ஏறவுந் தன் சித்தத்தின்படியே ஸ்தாபிக்க வல்லவர்தாமே. ஆயினும் மிகாமலுங் குறையாமலும் இந்த ஏழும் உண்டாக்கின காரணமேதென்றால், உண்டாக்கினவர் திருவுளமே காரணமொழிய, வேறல்

லாதிருந்தாலும், அவர் நீதி ஞானத்தை அறிந்து, துதிக்க நாமுங் குருடரெனினும் விசுவாசமே கண் காட்டியாகக் கொண்டுபோய் இதில் புகுந்து, தடவியாயினும் இந்த ஏழு தேவத்திரவிய அநுமானங்களை அவர் ஸ்தாபித்ததற்கு ஒத்த நியாயங்களைக் காண்போம்.

அப்படியே பாவத்தில் பிறந்த நாம் எல்லாரும் மறுபடி ஞானத்தில் பிறக்க, ஞானஸ்நானமும் பிறந்த பின்பு துவளாமல் உறுதி பெறத் திரு எண்ணெய் பூசிக் கொடுக்கப்படும் உறுதிப்பூசுதலும், ஞானத்தில் நம்மை வளர்விக்குந் தேவ போசனமாக நற்கருணையும், பின்பு யாதொரு வியாதியைக் கொண்டாலும், திவ்விய மருந்தாகப் பச்சாத்தாபமும், சேவித்த பலனை அடையும் நாளாகிய மரணநேரத்தில் மனங் குழையாமல் பகைவராகிய பசாசுகளை வெல்வதற்கு உறுதி பெற, அவஸ்தைப்பூசுதலும், நன்னெறியில் நம்மை நிறுத்தி, நடத்துந் தலைவராக மேற்றிராணியார் முதல் பல வரிசைக்கிரமக் குருக்களை ஸ்தாபிக்குங் குருத்துவமும், பூவுலகின் வாழ்வுகளில் இடறுமல் அறத்தோடு இல் வாழ்க்கைக் கூட்டி, வர்த்திக்க விவாகமும், இவை யாவையுந் தயாபரரான கர்த்தர் உண்டாக்கி, இவைகளால் பொதுவில் எல்லாருக்குந் தனியே எவருக்கும் வேண்டின உதவி சகாயங்கள் எல்லாம் உண்டாகுமென்று சொன்ன ஏழு தேவத்திரவிய அநுமானங்களை மிகாமலுங் குறையாமலும் ஸ்தாபித்தார் என்று யோசிக்கக்கடவோம்.

98.— சொன்ன ஏழு தேவத்திரவிய அநுமானங்களில் ஞானஸ்நானம், உறுதிப்பூசுதல், குருத்துவம் இம் மூன்றும் ஆத்துமத்தில் அழிக்கப்படாத தேவ முத்திரையாக ஒரு ஞான அக்ஷரத்தைப் பதித்து வைக்குமென்பது திருச்சபை படிப்பிக்குஞ் சத்தியந்தானே. இந்த மூன்று தேவத்திரவிய அநுமானங்கள் அந்த அக்ஷரம் இட்டதினாலேயும், இட்ட அக்ஷரம் எந்நாளும் அழியாததினாலேயும் இவை மூன்றினையும் ஒரு முறையொழிய மீளவும் வாங்கப்படாதென்று நம்மோடு பதிதருஞ் சொல்லுகிறுர்கள். தேவ

முத்திரையாகிய இந்த அக்ஷரத்தைப்பற்றி அர்ச். சின்னப்பர் எபேசியாருக்கு எழுதின நிருபத்தின் முதல் அதிகாரம் 13-ம் வசனத்தில் சேசுநாதர் பேரில் விசுவாசத்தைக் கொண்டு வார்த்தைப்பாடுகளுக்குத் தந்தபடி இஸ்பிரீத்து சாந்துவினால் முத்திரைப் பெற்றிருக்கிறீர்கள் என்றார். அதிலேதானே 4-ம் அதிகாரம் 30-ம் வசனத்தில் இஸ்பிரீத்து சாந்துவினால் முத்திரைப் பெற்றிருக்கிறீர்கள் என்றார்.

மீளவும் அவர் கொரிந்தியாருக்கு எழுதின 2-ம் நிருபத்தின் முதல் அதிகாரம் 21-ம் வசனத்தில் நம்மை உறுதிப்படுத்தினவரும், பூசினவரும், நமக்குத் தம் முத்திரையிட்டவரும், உயிரிடத்தில் இஸ்பிரீத்துசாந்துவின் அடமானத்தைத் தந்தவருஞ் சர்வேசுரன் தானே என்றார். இம்மூவிடத்திலேயுந் தாங்கம்பாடியார் முத்திரைப் பெற்றிருக்கிறீர்கள் என்னுமல்,திடப்படுத்தப்பட்டிருக்கிறீர்கள் என்று திருப்பினார்கள். ஆகிலும் அந்த முத்திரையால் நாம் திடப்படுவது நிச்சயந்தானே. வேதத்தில் எழுதப்பட்ட சொல்லோவெனில் முததிரையும், அடையாளமும், அக்ஷரமுமென்று தமிழாகத் திருப்பலாமொழியத் திடமென்று சொல்லப்படாது.

அவர்களோவெனில் இந்தத் தேவ முத்திரை இல்லையென்றதனால், தாங்களே வேத வசனங்களுககு ஒத்ததாய்ச் சொல்லித் தப்பிதங்களை மறுக்கமாட்டாமல், வேதமே தங்களோடொப்ப அதனை மாற்றி, முத்திரை என்னுஞ் சொல்லைத் திடமென்று வைத்தார்கள். ஆகிலும் இம்மூன்று தேவத்திரவிய அநுமானங்கள் ஆத்துமத்தில் அழியாத அக்ஷரத்தைப் பதியாதாயின், ஒரு முறையன்றி மீளவும் வாங்கப்படாததற்குக் காரணம் பதிதரே சொல்லக் கடவார்கள். பின்னையும் இந்த அக்ஷரங்களால் ஆகும் பலன் ஏதென்றால், ஞானஸ்நானத்தால் வரும் அக்ஷரம், மற்றத் தேவத்திரவிய அநுமானங்களுக்கு நம்மைப் பாத்திரமாகச் செய்யவும், உறுதிப்பூசுதலினால் வரும் அக்ஷரம் நிந்தைக்கும், ஆக்கினைக்கும் அஞ்சாமல் வேண்டிய இடத்தில் பிடித்த வேதத்

தின் சாட்சியாக நிற்க, மன ஊக்கத்தைக் கொடுக்கவும், குருத்துவத்தால் வரும் அக்ஷரம், பிறருக்கு மற்றத் தேவத்திரவிய அநுமானங்களைக் கொடுக்க வல்லமை பயக்கவும் முதற் பலனுமே.

2-வது. கிறீஸ்துவினால் வரும் அக்ஷரமாகையால் அவர் அழியாத சாயல் உயிரிடத்திலே தோற்றுவிக்கும்.

3-வது. கிறீஸ்துவின் சாயலாகக்கொள்ள மற்றவர்களுக்குள்ளே நம்மை வேறுபடத்தோன்றச் செய்யும் இந்த அக்ஷரங்களும் அழியாத ஆத்துமத்தோடு எக்காலத்தும் அழியாமல் மோக்ஷத்திலும், நரகத்திலும் தோன்றி நிற்கும். மோக்ஷத்தில் தேவ நகையாக ஒளிபெறத் தோன்றி விளங்கும். நரகத்திலோவெனில் அந்த நன்றியறியாத பாவிகளிடத்தில் வெட்கமும், மன வருத்தமும் விளைவிக்கும் ஆக்கினையாக எவராலுந் தெளிவாய்க் காணப்படும். தேவத்திரவிய அநுமானங்கள் விஷயத்தில் மாத்திரம் பதிதர் பிதற்றின அபத்தங்களைச் சொல்லி, ஒவ்வொன்றாய் மறுக்கவேண்டுமாகில், பல பெருங் கிரந்தங்களில் அடங்குந் தன்மை அல்லவென்றதினால், இதில் நாம் சொல்லும் வேதத்தில் ஊன்றிய சத்தியங்களும், அவர்கள் சாதித்த சலத்தில் ஊன்றிக் கக்குந் தப்பறைகளும் எவராலுங் காணப்படும்படிச் சொல்லிக் காட்டினது போதுமென்று இருக்கிறோம்.

திவ்வியநற்கருணைக்கடுத்த சில விசேஷங்களை மாத்திரம் வரும் அதிகாரத்தில் சொல்லிக்காட்டுவோம். மற்றப்படித் தேவ பொன் மலையின் சுனையாகச் சேசுநாதர் தாமே நமக்காகச் சிந்தின திவ்விய இரத்தமே ஏழு தேவத்திரவிய அநுமானங்கள் வழியாய், ஏழு ஆறாகப் பிரிந்தோடி, இஷ்டப்பிரசாதம் முதல் பல வரங்களை ஒளிமங்காத மணிகளாகக் கொழித்து, வயல்கள் தோறும், சோலைகள் தோறுங் குளிர்படப் பாய்ந்து, விசுவாசமுதல் பல சுகிர்த புண்ணியங்களைப் பலன்களாக விளைவித்துத் திருச்சபையைத் தேவ பூங்காவனமாகச் சிறப்போடு அலங்கரித்துக்கொண்டு வருவது நிச்சயந்தானே.

பதிதரோவெனில் இந்தப் பூங்காவனமாகிய திருச்சபையை விட்டு அகன்று போய்ச் சுடும் பாலைநிலத்தில் கிடந்து காமம், கோபம், பகை, பழி ஆங்காரஞ் சுடச்சுட நெஞ்சில் வெந்து வருந்துமளவில் தங்கள் மனதைக் குளிர்ப்பிக்க ஒன்றும் இல்லாமையால் பெரியோர் சொல்வதைக் கண்டு பொறுக்கமாட்டாத சிறியோரைப்போல, உரோமான் திருச்சபையில் சகல நன்மைவிளைவிக்கும் ஏழு ஆறுக உள்ள ஏழு தேவத்திரவிய அநுமானங்களில் சிலவை இல்லையென்று சாதித்தும், சிலவை உண்டென்றாலுந் தங்கள் வாய் நஞ்சினைக்கலந்து அவைகளைக்கெடுக்கவும் பிரயாசப்படுவார்கள். ஆகிலும் அர்ச். மத்தேயு சுவிசேஷத்தின் 16-ம் அதிகாரம் 18-ம் வசனத்தில் எழுதினபடியே சேசுநாதர் மாறுமற் செய்யும் உதவியைக்கொண்டு, பசாசினால் வெல்லப்படாத திருச்சபைமேல் ஆண்டவர் வைத்ததயை மாறவும், செய்யுஞ் சகாயங்கள் குறையவும், விளைவிக்கும் நன்மை மெலியவும், பாவிகளால் ஆகுந்தன்மையோ? வச்சிரத்தைக் கடித்த பல்லு உதிருமொழிய, வச்சிரம் என்றுங் குன்றுதொளிருமென்பது நிச்சயந்தானே.

14-ம் அதிகாரம்.

தேவநற்கருணை விளக்கம்.

99. — நற்கருணையாகிய தேவத்திரவிய அநுமானம் உண்டென்று இந்நாட் பதிதரும் ஒருப்பட எல்லாருஞ் சொல்லுவது உள்ளதுதானே. ஆகிலும் அவனவன் இதில் கலந்த பொய்களைப் பார்க்குமளவில், மனிதர் உயிர்களைப் பிழைப்பிக்கச் சேசுநாதர் தந்த தேவாமிர்தமே உயிர்களைக் கெடுக்கப் பாலோடு கலந்து ஊட்டின நஞ்சாகச் செய்தார்களென்பதற்குச் சந்தேகமில்லை. நாமோவெனில் பசாசு தந்திரத்தால் கலந்த நஞ்சினை நீக்கித் திவ்விய சுனையாகிய

சேசுநாதர் திருக்கையில் ஒழுகின தன்மையால் உயிர் தருந் தேவாமிர்தத்தைக் கலப்பின்றி எல்லாரும் உட்கொள்ளும் படிக்குப் பதிதர் இதில் கலந்த பொய்களை மறுத்து உரோமான் திருச்சபை இந்த விஷயத்தில் விசுவசிக்கப்படிப்பிக்கும் ஐந்து சத்தியங்களை வெவ்வேறே வெளிப்படுத்தித் தருவோம்.

அவைகளின் முதலாவது. நற்கருணையில் மெய்யாகவே சேசுநாதர் சரீரமும், இரத்தமும் உண்டென்றும், 2-வது. இதில் நிறம் முதல் அப்பத்தின் குணங்களும், இரசத்தின் குணங்களுமொழிய அப்பமும் இரசமுங் கூட நிற்பதில்லையென்றும். 3-வது. நற்கருணை உட்கொள்ளும்போது இருக்கிற சேசுநாதர் அதற்கு முன்னும் பின்னும் அக்குணங்கள் அழியுமட்டும் நிற்குமென்றும், 4 வது. ஒவ்வொருவகைக் குணங்களுக்குள்ளே சேசுநாதர் முழுதும் இருக்கிறார் என்றதினால், பாத்திரத்தைக் கொள்ளாமல், அப்பத்தின் குணங்களை மாத்திரங் கொண்டவனும் முழு நற்கருணைக் கொள்வானென்றும், 5-வது. நற்கருணை தேவத்திரவிய அநுமானமாக ஸ்தாபிக்கப்பட்டதொழிய மெய்யான பூசையுமாக அதனைச் சேசுநாதர் உண்டாக்கினாரென்றும், இவ்வைந்தும் விசுவசிக்கத்தகும் வேத சத்தியங்கள் தானே.

இவைகளில் தேவத்திரவிய அநுமானமாக நற்கருணைக் கடுத்த முதல் நான்கு இங்கே வெளிப்படுத்தி, வரும் அதிகாரத்தில் தேவ பூசையாகத் திவ்வியநற்கருணைக் கடுத்த ஐந்தாஞ் சத்தியத்தை ஒப்பிக்கக்கடவோம். ஆகையால் சுவிங்கிலியனும், கல்வீனும் இவர்களைச் சேர்ந்த பதிதரும் நற்கருணையில் சேசுநாதர் மெய்யாகவே வந்திருக்கிறாரென்று விசுவசியாமல் அவரைக் காட்டும் அடையாளமும், உவமையுமாக மாத்திரம் நற்கருணை ஸ்தாபிக்கப்பட்டதென்றார்கள். ஆகிலுந் தெளிவாய் வேதத்தில் எழுதப்படாததை விசுவசிக்கலாகாதென்ற பதிதர், இந்த அபத்தம் வேதத்தில் எழுதப்பட்டது எங்கேயென்று தாங்களே காட்டக்கடவார்கள். நாமோவெனில், நற்கருணையில் சேசுநாதர் சரீரமும்,

இரத்தமும் மெய்யாகவே இருக்கிறதென்று வேத உதாரணங்களினால் சந்தேகத்துக்கு இடமில்லாமல் எளிதாய் ஒப்பிக்கலாமே.

அதெப்படி என்றால் அர்ச். அருளப்பர் சுவிசேஷத்தின் 6-ம் அதிகாரம் 48-ம் வசனத்தில் இனி ஸ்தாபிக்கப்போகிற நற்கருணையைக் குறித்துச் சேசுநாதர் சொன்னதாவது: உயிர் தரும் அப்பம் நாமே. கானகவழியில் உங்கள் முன்னோர் மன்னாவென்னும் அற்புதப் போசனத்தைப் புசித்தாலும் செத்தார்கள் அல்லவோ? இந்த அப்பம் பரலோகத்தினின்று வந்ததாகையால், இதனை உண்பவன் என்றுஞ் சாகான். நாம் தரும் அப்பம் எதுவெனில், உலகிற்கு உயிராகும் என் மாம்ஸந்தானே என்றார். இதனைக் கேட்ட சிலர் அதில்தானே 53-ம் வசனத்தில் சொன்னதாவது: இவர் தம் மாம்ஸத்தை எங்களுக்கு உணவாக எப்படிக் கொடுப்பாரோவென்று தங்களுக்குள்ளே தர்க்கமாக யோசித்து, மிகுந்த அருவருப்போடு அதிசயித்துச் சொன்னார்களாமே.

ஆகையால் சேசுநாதர் தாம் மெய்யாகவே தம் சரீரத்தைப் போசனமாகக் கொடுக்க வேண்டுமென்றதாக நினைத்தார்களல்லோ? இல்லாவிட்டால் சரீரத்தின் அடையாளமாக வெறும் அப்பத்தைக் கொடுக்க அந்த வார்த்தை சொன்னாரென்று நினைத்தார்களாகில் அருவருப்பு வருவானேன், அதிசயப்படுவானேன்? சேசுநாதரோவெனில் அவர்கள் நினைத்ததை அறிந்து தப்பிதமாய் நினைத்தீர்களென்று சொல்லாமல் அவர்கள் நினைவு மெய்யென்று ஒத்துக்கொண்டு, மீளவும் ஆணையிட்டு என் மாமஸத்தையும் உண்ணாமல், இரத்தத்தையுங் குடியாமல் பிழைக்கமாட்டீர்களென்று மெய்யாகவே சொல்லுகிறேனென்றார். இதெல்லாந் திருவுளம் பற்றின பின்பு, குறித்த நாள் வந்து சேசுநாதர் இது என் சரீரம், இது என் இரத்தம் இவைகளை வாங்கி உட்கொள்ளுங்களென்று சொல்லி மெய்யான சரீரத்தையும், இரத்தத்தையுங் கொடாதபடிக்கு அவைகளின்

அடையாளங்களை மாத்திரந் தந்தாரென்று ஒருவன் சொன்ஞல் எல்லாரையும் படிப்பிக்கவந்த கர்த்தர் அவர்களை ஏய்த்து மயக்குவித்தாரென்று சொல்லவுங்கடவான்.

நான் விளையாட்டில்லாமல் ஒருவனுக்கு ஒரு குதிரையைத் தருவேனென்றதற்கு அவன் சந்தேகப்படக் கண்டு, நான் ஆணையிட்டு மெய்யாகவே உனக்குக் குதிரையைத் தருவேனென்ற பின்பு படத்தின் மேல் எழுதப்பட்ட குதிரை உருவத்தை மாத்திரந் தந்தால், அவன் தன்னை ஏய்த்த கள்ளனென்று என்னை நிந்திப்பதற்கு நியாயமல்லலோ? ஆகையால் அளவில்லாத தயை நீதி ஞானமுள்ள சேசுநாதரும் ஆணை யிட்டு, மெய்யாகவே என் சரீரத்தைப் போசனமாகத் தருவேனென்ற பின்பு மெய்யான சரீரத்தைக் கொடாமல், சரீரத்தின் உருவமாக வெறும் அப்பத்தைத் தந்து நம்மை ஏய்த்தாரென்று மநியீனன் சொல்லுவானொழிய வேறொருவன் சொல்லவுங் கருதவுமாட்டான்.

மீளவுங் கொரிந்தியாருக்கு எழுதின முதல் நிருபத்தின் 10-ம் அதிகாரம் 3-ம் வசனத்தில் அர்ச். சின்னப்பர் சொன்னபடி யூதா கானக வழியில் உண்ட மன்ஞ சேசுநாதருடைய அடையாளமாய் இருந்ததல்லோ? ஆகையால், நற்கருணையும் இப்படிப்பட்ட அடையாளமாத்திரமென்ருல் அதற்கும் இதற்கும் வேற்றுமை ஏன்ன? அதிலும் இது நல்லதென்பானேன்? அதனை உண்டவர் செத்தார்களென்றும், இதனை உண்பவர் சாகாரென்றுஞ் சேசுநாதர் சொல்லுவானேன்?

இதுவுந் தவிர அர்ச். மத்தேயு சுவிசேஷத்தின் 26-ம் அதிகாரம் 26-ம் வசனத்திலும், அர்ச். மாற்கு சுவிசேஷத்தின் 14-ம் அதிகாரம் 22-ம் வசனத்திலும், அர்ச். லூக்கா சுவிசேஷம் 22-ம் அதிகாரம் 19-ம் வசனத்திலும், அர்ச். சின்னப்பர் கொரிந்தியாருக்கு எழுதின முதல் நிருபத்தின் 11-ம் அதிகாரம் 24-ம் வசனத்திலும் இந்நான்கு விடத்தில் எங்கும் ஒரு வசனமாக இது என் சரீரம், இது என் இரத்தமென்று சேசுநாதர் சொல்லி நற்கருணை உண்டாக்கின

தாக எழுதியிருக்க, இதனை முகத்தில் வெளியாய்த் தோன்றும் அர்த்தத்தின்படியே கொள்ளாமல் உவமையாகச் சொல்லப்பட்டதென்று சொல்வானேன்?

அர்ச். மத்தேயு சுவிசேஷத்தின் 17-ம் அதிகாரம் 5-ம் வசனத்தில் பிதாவாகிய சர்வேசுரன் சேசுநாதரை நோக்கி: இவர் என் குமாரனென்றார். இதனை உவமையாகக்கொண்டு சேசுநாதர் சர்வேசுரனுக்கு மெய்யான குமாரனாகாமல் அவருடைய உருவமாத்திரமென்றால் பதிதரும் கோபித்து, வேத வசனங்களை உள்ளபடித் திருகாமலும் மாறாமலுங் கொள்ள வேண்டுமென்றும், இவர் என் குமாரனென்று பிதா சொன்னபோது அவர் உருவமாத்திரமென்பது என்னவென்றுஞ் சொல்வார்களல்லோ?

பிதாவாகிய சர்வேசுரன் இவர் என் குமாரனென்று சொன்னபடியே, சேசுநாதரும் இது என் சரீரமென்றார். இந்த இரண்டு வசனங்களில் வேற்றுமை இல்லாமையால் அது உள்ளபடிக்கொண்டு சேசுநாதர் மெய்யான தேவ குமாரனாகக் கொள்ளவேண்டுமென்று சொன்னவர், இரண்டாம் வசனத்தையும் உள்ளபடியே கொண்டு நற்கருணையில் அவர் மெய்யான சரீரம் உண்டென்று ஒத்துக் கொள்ளாமலென்ன? அப்பமாக நின்ற பொருள் சேசுநாதர் சரீரமாக நிற்பது கண்டுபிடிக்கப்படாத அற்புதமாகையால் உவமையோடு சொன்ன வசனமாகக் கொள்ளவேண்டுமென்று பதிதர் சொன்னால், அப்படியே மெய்யான மனுஷனானவன், மெய்யான சர்வேசுரனாக நிற்பது கண்டுபிடிக்கப்படாத இரகசியந்தானல்லோ ?

இப்படியாயினும் ஆண்டவருக்குள்ள அளவில்லாத வல்லமையை நாம் அறியத்தகும் அளவின் மேலும் அவர் செய்ய வல்லவரென்று நிச்சயித்து, மனுஷாவதாரஞ் செய்த வகையைக் கண்டுபிடியாமல், அதனை விசுவசித்ததுபோல, நற்கருணையின் பரம இரகசியத்தையும் விசுவசியாமலென்ன? உச்சிப் பகலினும் நன்றாக விளங்கின இந்த நியாயங்களைப் பற்றி மற்றப் பதிதரும் முதலாய்க் கல்விஞானிகள் சொன்

னதை நகைத்து மெய்யாகவே சேசுநாதர் நற்கருணையில் எழுந்தருளி இருக்கிறாரென்று கத்தோலிக்கு உரோமான் திருச்சபையோடு சொல்லுகிறார்கள்.

100.— கல்வீனியானிகளெல்லாரும் இப்போது அநுசரிக்கும் இந்த அபத்தத்தை லுத்தேர் காலத்தில் இவன் சீஷனாகிய கார்லோஸ்தாதென்பவன் முந்திச் சொல்லத் துவக்கினான். உரோமாபுரி இராயருக்குப் பயந்து லுத்தேர் ஒளிந்திருக்கும்போது இவன் அங்கங்கே திரிந்து, நற்கருணை சேசுநாதர் அடையாளமாவதொழிய மெய்யாகவே அதில் அவர் சரீரம் இல்லையென்று படிப்பித்துக்கொண்டு வந்தான். தன்னை அல்லாமல் திருச்சபையில் புது விதிகளைப் படிப்பிப்பார் உண்டென்று லுத்தேர் பொறுக்கமாட்டாமல் புறப்பட்டுக் கார்லோஸ்தாதிருந்த ஊருக்குப் போய் பொதுப்பிரசங்கமாக அவன் சொன்ன அபத்தத்தை மறுத்ததன்றி, அவனையும் மட்டொன்றின்றி நிந்தையாக வைது சுண்டித்த பின்பு லுத்தேர் கருங் கரடி விருதை ஏற்றிய விடுதி வீட்டுகுப் போனான்.

கார்லோஸ்தாதென்பவனும் அங்கே போய்த் தங்களுக்குள்ளே வெகு பேச்சு நடந்தபின்பு, லுத்தேர் ஒரு பெரிய தங்கக் காசெடுத்து முன்னே வைத்து நான் சொன்னதை மறுக்க நீ ஒரு புஸ்தகம் எழுதுவாயென்று வார்த்தைப்பாடு கொடுப்பாயாகில் உனக்கு இதைக் கொடுக்கிறேனென்றான். அவனும் அந்தத் தங்கக் காசை எடுத்துக் கொண்டு அப்படியே எழுதுவேனென்றான். அப்போது லுத்தேர் சாராயத்தை நிறப்பின ஒரு பெரும் பாத்திரத்தை ஏந்தி, நீ எழுதுவது நன்றாகவென்று நகைத்துக் குடித்தான். அவனுங் குறை வையாமல் குடித்துத் தேவநற்கருணையில் சேசுநாதர் சரீரம் உண்டோ இல்லையோவென்கிற பரம தேவ இரகசியத்தை வெளிப்படுத்த இந்த உச்சித முறையோடு இருவரும் 1524-ம் ஆண்டு ஆவணி மாதம் 22-ந் தேதியில் துணிந்தார்கள்.

அதன்பிறகு லுத்தேர் அவனை நோக்கி: நீ செத்துத்

தெருவில் கிடக்க நான் காணக் கடவதென்று அவனை அனுப்ப, அவனும் நீ இந்த ஊரை விட்டு அகலாமுன்னே உன் கழுத்தொடியக் கடவதென்றுபோனான். இப்படியே வேற்றுமையின்றி லுத்தேர் பிரபந்தங்களின் 2-ம் வகுப்பிலேயும், பல லுத்தேரானிகள் எழுதின புஸ்தகங்களிலேயும் எழுதப்பட்டதாமே. இந்த வர்த்தமானத்தை வாசிக்கும்போது வழுவின திருச்சபையை நெறியில் நிறுத்தவும், கெட்ட உலகம் இரட்சிக்கப்படவும், ஆண்டவரால் அனுப்பப்பட்ட இரண்டு அப்போஸ்தலருக்கு ஏற்ற முறை இதென்பதும், சேசுநாதர் மந்தை ஆடுகளைக் கொன்று விழுங்கக் கருங் காடி விருதேந்தி இரண்டு ஓநாய்கள் துணிந்த முறை இதென்பதும், முழு மதி கெடாதவனுகில் தானே கண்பானல்லவோ?

101.— சொன்னபடியே கார்லோஸ்தாதென்பவன் மேல் லுத்தேர் வைத்த பகையால் நற்கருணையில் மெய்யாகவே சேசுநாதர் சரீரம் உண்டென்று ஒப்பிக்கத் துணிந்தாலும், உரோமான் திருச்சபைமேல் அவன் வைத்த பகை அதிலேயும் பெரிதாகையால், அந்தச் சத்தியத்தை மறுக்க லுத்தேர் மிகவும் ஆசையாயிருந்தான். அப்படியே ஏழாம் புஸ்தகத்தின் 501-ம் ஏட்டில் அவன் அற்சேந்திருைக்கு எழுதினதாவது: நற்கருணையில் மெய்யாகவே சேசுநாதர் சரீரமும், இரத்தமும் இல்லையென்பதற்கு யாதொரு வழியை எனக்குச் சொல்லித் தந்தால் மிகவுஞ் சந்தோஷந்தானே; இதுவே நான் நியமித்தபடி உரோமான் திருச்சபையாருக்கு மனநோகச் செய்வதற்கு உத்தம வழியாமே என்றான். இதில் முந்தி லுத்தேருடைய கருத்தைப் பார்க்கக் கடவீர்கள்.

இதோ மனிதரை ஏய்க்க, வழுவின திருச்சபையைத் தானே நெறியில் நிறுத்தத் துணிந்ததென்று சொல்லி உரோமன் திருச்சபை மேலும், அர்ச். பாப்பு மேலுந் தான் வைத்த பழி, பகை தீர்ப்பதே அவன் நியமித்த கருத்தென்று தான் எழுதின வசனத்தினுல் தெரியப்பட்ட

தல்லோ. இந்த வர்மத்தினலல்லோ சேசுநாதர் மறைவின்றித் திருவுளம் பற்றினதைப் பார்க்கில், நற்கருணையில் அவர் சரீரமும் இரத்தமும் இல்லை யென்று சொல்லக்கூடாதென்று பின்பு லுத்தேர் தானே உரோமான் திருச்சபையோடு முழுதுங் கூடாதபடிக்கு இதில் பல விகற்பங்களை நினைத்தான். நிறம் முதல் அப்பத்தின் குணங்களொழிய அப்பத்தின் சுபாவம் இல்லாமற்போய்ச் சேசுநாதர் மாத்திரமே நற்கருணையில் இருக்கிறாரென்று சத்தியமாக உரோமன் திருச்சபை விசுவசித்ததினால் அதற்கு லுத்தேர் விகற்பஞ் சொல்ல அப்பங்கூட நிற்பதென்றான்.

இதிலேயும் எப்போதும்போல ஒரு நிலையாய் நிற்க மாட்டாமல் துவக்கத்தில் பபிலோன் அடிமைத்தனமென்னும் புஸ்தகத்தில் நற்கருணை அதிகாரத்தில் சொன்னதாவது: அப்பங்கூட நிற்குமென்றாலும் இல்லையென்றாலும் பாரமல்ல, வேண்டும்படிச் சொல்வதற்கு உத்தாரங் கொடுக்கிறேனென்றான். இது ஏது? முழுதும் மதி கெட்டாயோ லுத்தேரே! உண்டு, இல்லை யென்று இரண்டில் ஒன்று பொய்யல்லோ? ஆகையால் இந்தப் பரம தேவ இரகசியத்தில் பொய்யை அநுசரிப்பது பாரமல்லவென்றோ நீ இதில் அப்பம் உண்டெனினும் இல்லையெனினும் பாரமல்லவென்றாய். மீளவும் உண்டு இல்லையென்று வேண்டும்படிச் சொல்ல நீயே உத்தாரங் கொடுக்கும்போது, பரம தேவரகசியங்களில் பொய்யைச் சொல்ல நீயே உத்தாரங் கொடுக்கத் துணிந்தாயல்லோ. இப்படியே மதி கெட்டவனாகி லுத்தேர் சொன்னபின்பு தானே 1523-ம் ஆண்டில் வால்தெஞ்சியாருக்கு எழுதின புஸ்தகத்தில் சொன்னதாவது:

நற்கருணையில் அப்பம் இல்லையென்பது தப்பிதமாயினும், அது கன அபத்தமல்லவென்று இன்றையவரைக்கும் நான் எண்ணினது சரிதானே. ஆகிலும் இப்போது பாப்பிஸ்தாகிய உரோமான் திருச்சபையாருக்கு விரோதமாக அப்பமும், இரசமுங் கூட நிற்குமென்று விசுவசிக்கத் துணிந்தேனென்றான். ஆகையால் பரம தேவரகசியங்களில்

அற்ப அபத்தங்களைச் சொல்வதற்கு உத்தாரங் கொடுக்க லுத்தேர் வல்லவனாகக்கொள்ள நற்கருணையில் அப்பம் இல்லையென்பது கன அபத்தமல்லவென்று எண்ணினதினால் அதனைச் சொல்ல முன் தானே உத்தாரங்கொடுத்தான். ஆகிலும் தன் பகையை மறுக்கத் தான் வல்லவனல்ல.

ஆகையால் வேதத்தில் எப்படி எழுதப்பட்டிருந்தாலும் அதனைப் பாராமல் பகைத்த உரோமான் திருச்சபைக்கு விரோதமாகில், அதுவே விசுவசிக்கத்தகுஞ் சத்தியமாமே. அதெப்படியென்றால், நற்கருணையில் அப்பம் இல்லையெனினும் உண்டெனினும் பாரமல்ல வென்றவன், பின்பு அதில் அப்பம் இல்லையென்று சொல்லாமல் உண்டென்று சொல்லுவது விசுவசிக்கத்தகுஞ் சத்தியமென்பதற்கு நவமாய்க் கண்ட நியாயம் ஏதென்று லுத்தேவென்பவனைக் கேட்கில், இது வேதத்தில் எழுதப்பட்டதினாலேயும் அல்ல; இதற்கு மறுக்கப்படாத நியாயங்களைக் கண்டதினாலேயும் அல்ல; அப்பங் கூட உண்டென்றால் உரோமான் திருச்சபைக்கு விரோதமாகுமென்றதினால் மாத்திரம் அதனை வேத சத்தியமாக விசுவசிக்கத் துணிந்தேன் என்றான்.

இதோ முன் சொன்னபடி லுத்தேர் விசுவாசத்தின் அஸ்திவாரமெல்லாந் தன் பகைதானே. இதன் பின்பு இன்னம் அவன் பிதற்றினதை ஒத்துக்கொள்வார் உண்டோ? வழுவின திருச்சபையை நெறியில் நிறுத்த அவனே ஆண்டவரால் அனுப்பப்பட்டவனென்று நினைப்பார் உண்டோ? ஆகையால் லுத்தேர் தன் பகையைக் கண் காட்டியாகக் கொண்டு சொல்லுந் தன்மையாவது: நற்கருணையில் சேசுநாதர் சரீரம் அப்பத்திலேயாகிலும், அப்பத்தோடேயாகிலும், அப்பத்தின் கீழாகிலும் இருக்கிறதென்று சொல்லக் கடவோமென்றான். இதோ குருடனுக்குக் கை தந்த குருடன் தடவிச் சொல்லும் அபத்தம்.

இப்படியே மற்ற லுத்தேரானிகளும். இப்படியே தரங்கம்பாடிப் பதிதரும் அச்சுப் பதித்த வேத சாஸ்திரத்தின்

2-ம் வகுப்பு 14-ம் அதிகாரம் முதல் சல்லாபத்தில் தெளி வாய் வைத்தார்கள். ஆகிலும் சேசுநாதர் கையில் அப் பத்தை ஏந்தித் திருவுளம்பற்றின வார்த்தையின் வல்லமை யால் அப்பம் இல்லாமற்போனது பொய்யாகி, அதிலேயா கிலும் அதோடாகிலும் அதன் கீழாகிலும் அவர் சரீரம் இருந்தால் இங்கே என் சரீரம் உண்டென்று அவர் சொல் லவேண்டியதல்லோ. அப்படிச் சொல்லாமல் இது என் சரீரமென்று சொன்னது பொய்யாகுமே. அப்படி ஒருவன் கையில் ஏந்திய கல்லிலேயும், கல்லோடேயும், கல்லின் கீழேயும் சர்வேசுரன் இருக்கிறாரென்பது நிச்சயமாமே. நிச்சயமாயினும் ஏந்தின கல்லை நோக்கி: இதுதான் சர்வே சுரனென்றால் பொய்யாகுமல்லோ?

ஆகையால் இது என் சரீரமென்று சேசுநாதர் சொன் னதினால் பொய் சொல்லமாட்டாதவராகக் கொள்ள அதில் அப்பம் இராமல் அவர் சரீரமே இருக்கிறதென்று சொல் லக்கடவோம். மீளவும் இது என் சரீரமென்றதை கல்வீன் உவமையாகக்கொண்டு, இது என் சரீரத்தின் அடையாளம் என்றதாக அர்த்தத்தைக் கொண்டதினால், அவனை லுத்தேர் முதலாய்க் கோபித்து, வேத வசனங்கள் முகத்திற் காட் டின சுபாவ அர்த்தத்தோடு அவைகளைக் கொள்ள வேண்டு மொழிய, மணலைக் கயிறாகத் திரிக்கிறவனைப் போலச் சுபாவ அர்த்தத்தை முறுக்கி மாற்றி மனதின்படியே கொள்ளலா காதென்று, பின்பு லுத்தேர் தானும் இது என் சரீரமென் றது சுபாவமாய்க் கொள்ளாமல் இதில் என் சரீரமென்றும், இங்கே என் சரீரமென்றுஞ் சொன்னதாக அர்த்தத்தைத் திருப்பி, இந்த அபத்தங்களைச் சொல்லுவானேன்? பதித ருள் ஒருவன் சுவிங்கிலியுஸென்பவன் முதலாய் எழுதின தாவது:

இது என் சரீரமென்று கர்த்தர் சொன்ன வசனத் தைச் சுபாவ அர்த்தத்தோடு கொள்ளவேண்டுமாகில் அப் பத்தின் சுபாவம் இல்லாமற் போய்ச் சேசுநாதர் சரீரமாக வேண்டியதுதானே, ஆகையால் அப்பமாக நின்ற பொருள்

அந்த வார்த்தைக்குப் பிறகு அப்பம் அல்லவென்றான். அப்படியே சலஞ் சாதியாமல் மெய்யறியும் ஆசையால் சேசுநாதர் திருவுளம்பற்றின வசனத்தைக் காட்டும் அர்த்தத்தைக் கொள்ளவேண்டுமாகில், அவர் தம் கையில் அப்பத்தை ஏந்தி இது என் சரீரமென்றபோது, இது முந்தி அப்பமாகி இப்போது என் சரீரமாச்சுதென்றதாகக் கொண்டு சொன்ன வார்த்தையின் வல்லமையால் அப்பம் இல்லாமற் போய், நற்கருணையில் சேசுநாதர் திரு சரீரமும், திரு இரத்தமும் அல்லாமல் அப்பமும், இரசமும் இல்லையென்பது நியாயந்தானே. இதுவே உரோமான் திருச்சபையின் விசுவாசம்.

102.— இதுவுந்தவிர லுத்தேராணிகள் சொல்லும் அபத்தமாவது: நற்கருணையில் மெய்யாகவே சேசுநாதர் சரீரமும், இரத்தமும் இருந்தாலும் அவைகளை அவனவன் உட்கொள்ளும்போது இருக்கிறதொழிய மற்ற நேரம் வெறும் அப்பமும், வெறும் இரசமும் நிற்குமென்றார்கள். ஆகிலுஞ் சேசுநாதர் தமது கையில் அப்பமும், இரசத்தின் பாத்திரமும் இருக்கும்போதல்லோ இது என் சரீரமென்றும், இது என் இரத்தமென்றுந் திருவுளம்பற்றினார். ஆகையால் ஒன்றில் சேசுநாதர் சொன்னது பொய்யாகவேண்டும்; ஒன்றில் அப்போஸ்தலர் நற்கருணை உட்கொள்ளா முன்னும் அப்பத்தின் குணங்களுக்குள்ளே அவர் சரீரமும், இரசத்தின் குணங்களுக்குள்ளே அவர் இரத்தமும் இருந்ததென்று சொல்லக்கடவோம்.

ஆகிலுஞ் சேசுநாதர் சொன்னது பொய்யென்று மதிகெட்டவனுஞ் சொல்லான். ஆகையால் லுத்தேராணிகள் சொன்னது பொய்யாமே. இது மிகவுந் தெளியும்படிக்குக் குருக்கள் அநுதினம் இது என் சரீரமென்றும், இது என் இரத்தமென்றுஞ் சொல்லும்போது அந்த வார்த்தைக்குச் சேசுநாதர் ஸ்தாபித்துக் கட்டளையிட்ட வல்லமையினால் நற்கருணை ஆகுமென்று பதிதருஞ் சொல்லுகிறார்கள் அல்லோ? இந்த வார்த்தையைச் சொன்ன பிற்பாடு சனங்

களுக்கு நற்கருணையைப் பகிர்ந்து கொடுக்குமளவில், பல முறை அறுநூறு எண்ணூறு பேர்களாகக்கொள்ள நாலு ஐந்து நாழிகை செல்லுமல்லோ? ஒவ்வொருவன் அதை வாங்குகிறபோது வேறே வார்த்தை சொல்லாமலும் வெவ்வேறே நற்கருணை ஆகுமென்று தூங்கினவனுங் கூசாமல் சொல்லமாட்டான்.

ஆகையால் ஒருமுறை ஒருமிக்க எல்லாருக்கும் உண்டாக்கப்பட்ட நற்கருணையைக் கொடுத்துக்கொண்டு வருகையில், நாலு ஐந்து நாழிகைக்குப் பிறகு கடைசியில் நின்றவன் அதை உட்கொள்ளுமட்டும் அதில் சேசுநாதர் இருக்கிறாரென்று சொல்லக்கடவோம். நாலு ஐந்து நாழிகை நின்றபடி, நாலு ஐந்து நாள் நிற்குமென்றால் குறையென்ன? அதற்குப் பதிதர் அப்படி நிற்குமென்று வேதத்தில் எழுதப்படவில்லை யென்றார்கள். ஆகிலும் அவர்கள் சொன்னாப்போல நில்லாதென்று வேதத்தில் எழுதப்படவுமில்லையே. மீளவும் ஒரு முறை சேசுநாதர் இது என் சரீரமென்ற பின்பு, தாமே இனி இது என் சரீரம் அல்லவென்று சொல்லுந்தனையும் நற்கருணையில் அவர் சரீரம் நிற்குமென்பது வேதத்திற் கொத்த நியாயமல்லோ.

ஆகையால் உரோமான் திருச்சபை படிப்பிக்குந் தன்மையாவது: சேசுநாதரிடமாகக் குருக்கள் இது என் சரீரம், இது என் இரத்தம் என்றவுடனே அப்பமும் இரசமும் இல்லாமற் போய், நிறமுதல் பல குணங்கள் மாத்திரம் நின்று, அவைகளுக்குள்ளே சேசுநாதர் சரீரமும், இரத்தமும் எழுந்தருளி அந்தக் குணங்கள் அழியுந்தனையும் விடாமல் நிற்குமென்று படிப்பிக்குஞ் சத்தியமாமே. இந்தச் சத்தியமேதெனில் வேதத்தில் ஊன்றிய சத்தியந்தானே. அதெப்படி யென்றால், அப்பம் இரசமென்று இவ்விரு வகைக் குணங்களுக்குள்ளே மாத்திரஞ் சேசுநாதர் எழுந்தருளியிருக்க ஸ்தாபித்தாரென்று வேத வசனங்களால் அறிவோம். ஆகையால் அந்தக் குணங்கள் அழியாதிருக்குந்தனையும், தாமும் அதில் இருக்கிறாரென்றும், அவைகள்

அழிந்தவுடனே தாமும் அதில் இல்லையென்றுஞ் சொல்லு வது நியாயமாமே.

103.— தேவநற்கருணையில் மெய்யாகவே சேசுநாதர் சரீரமும் இரத்தமும் இருக்கிறதென்றும், நிற முதல் பல குணங்களொழிய, அப்பமும் இரசமும் இல்லையென்றும், அக்குணங்களுள்ளமட்டும் அவைகளுக்குள்ளே சேசுநாதர் இருக்கிறார் என்றும், இம்மூன்று சத்தியங்களை ஒப்பித்த பின்பு உரோமான் திருச்சபை படிப்பிக்கும் நாலாஞ் சத்தி யமாவது: ஒவ்வொரு வகைக் குணங்களுக்குள்ளே சேசு நாதர் தாம் முழுதும் இருக்கிறார் என்று விசுவசிக்கக்கட வோம். ஆகையால் அப்பத்தின் குணங்களுக்குள்ளே இது என் சரீரம் என்ற வார்த்தையின் வல்லமையினால் சரீரம் மாத்திரம் இருந்தாலும், விடாத துணை முறையால் அவர் இரத்தமும், ஆத்துமமும், தேவ சுபாவமுங் கூட நிற்ப தென்றும்; அப்படியே இரசத்தின் குணங்களுக்குள்ளே இது என் இரத்தமென்ற வார்த்தையின் வல்லமையினால் அவர் இரத்தம் மாத்திரம் இருந்தாலும் விடாத துணை முறையால் அவர் சரீரமும், ஆத்துமமும், தேவ சுபாவமுங் கூட நிற்கிறதென்றும் விசுவசிக்கத் தகுஞ் சத்தியமாமே.

இதிலேயும் லுத்தேர் தன் குணத்தை விடாமல், 16-ம் பிரிவின் விசேஷங்களை ஸ்தாபித்த இடத்தில் இந்தச சத் தியத்தைத் தெளிவாகச் சொன்னபின்பு, காற்றின் முகத் துத் திரும்புங் கொடியைப் போல சிநேகிதன் ஒருவனுக்கு எழுதின இடத்தில் இதை நகைப்பாக மறுத்தான். வால் தெஞ்சியாருக்கு எழுதின புஸ்தகத்திலோவெனில், நற்க ருணை விஷயத்தில் பேசும்போது ஒவ்வொரு வகைக் குணங் களுக்குள்ளே சேசுநாதர் முழுதும் இருக்கிறார் என்றாலும் என்ன? ஒன்றில் அவர் சரீரம் மாத்திரம், ஒன்றில் அவர் இரத்தம் மாத்திரம் இருக்கிறதென்றாலுமென்ன ? இதில் காரியமில்லை என்று தப்பித்துக்கொள்ளும்படிக்கு மறைவா கத்தட்டின குருடனைப்போல எழுதினான். அப்படியே அவன் சீஷர்களும் மூன்று பிரிவாக நின்று நம்மோடு சொல்வா ருமுண்டு, அந்தச் சத்தியத்தை மறுப்பாருமுண்டு, இதில்

செவ்வையான மறுவுத்தரஞ் சொல்லாமல் தப்பித்துக்கொள்ளுவாருமுண்டு.

நாமோவெனில், எளிதாய் வேத உதாரணங்களினால் ஸ்தாபித்த சத்தியத்தை ஒப்பிக்கக்கடவோம். அதெப்படியென்றால், இது என் சரீரமென்று சேசுநாதர் திருவுளம் பற்றினதினால் அப்பத்தின் குணங்களுக்குள்ளே அவர் சரீரம் மெய்யாகவே நிற்குமென்பது லுத்தேராணிகளுஞ் சொல்லுகிறார்கள். நாமும் இதில் முதல் சத்தியமாக ஒப்பித்தோம். ஆகிலுஞ் சேசுகிறீஸ்து மரித்து எழுந்தருளின பின்பு மீளவும் இனிச் சாகாரென்று வேத சத்தியமாக அர்ச். சின்னப்பர் உரோமாபுரியாருக்கு எழுதின நிருபத்தின் 6-ம் அதிகாரம் 9-ம் வசனத்தில் சொன்னாராகையால், அப்பத்தின் குணங்களுக்குள்ளே சேசுநாதர் சரீரஞ் செத்த பிணமாயிராமல் இரத்தத்தோடேயும், ஆத்துமத்தோடேயும் நிற்கிறதென்று சொல்லக்கடவோம்.

மீளவும் மனுஷ சுபாவத்துக்களவாகத் தேவ வார்த்தை என்னுஞ் சுதனாகிய சர்வேசுரன் பிரியாதிருக்கிறதென்றும், தேவ ஆளும், தேவ சுபாவமும் வேறாகாமல் ஒன்றென்றும் பதிதரும் நம்மோடு வேத சத்தியமாகச் சொல்லுகிறார்களல்லோ. ஆகையால் கிறீஸ்துவின் மனுஷ சுபாவமாகிய இரத்தத்தோடு சரீரமும், ஆத்துமமும் நற்கருணை அப்பத்தின் குணங்களுக்குள்ளே இருக்கக்கொள்ள, அதற்காளாகிய தேவ ஆளும், அதனோடு ஒன்றாகிய தேவ சுபாவமுங் கூட நிற்குமென்பது வேத உதாரணங்களால் ஒப்பிக்கப்பட்ட சத்தியமாமே. இப்படியே இரசத்தின் குணங்களுக்குள்ளே சேசுநாதர் முழுதும் இருக்கிறார் என்று ஒப்பிக்கக்கடவோம்.

மீளவும் நற்கருணையைப்பற்றிச் சேசுநாதர் அர்ச். அருளப்பர் சுவிசேஷத்தின் 6-ம் அதிகாரம் 58-ம் வசனத்தில் சொன்னதாவது: என்னை உண்பவன் என்னால் உயிர்பிழைத்திருப்பான் என்றார். இதில் என் சரீரம் உண்பவன் என்னாமல், என்னை உண்பவன் என்றதனால், சேசுநாதர்

முழுதும் உண்ணப்படுவார் என்று சொல்லக்கடவோம். ஆகிலும் அப்பத்தின் குணங்களிலே மாத்திரங் கர்த்தர் உண்ணப்படுவார். ஆகையால் அப்பத்தின் குணங்களில் சேசுநாதர் முழுதும் இருக்கிருர் என்பதும் சத்தியமாமே. இது வுந் தவிர, அப்பத்தின் குணங்களில் அவர் சரீரமல்லாமல், அவர் இரத்தமுங் கொள்ளப்படுமென்று விசேஷமாய் ஒப்பிக்கும்படிக்குச் சேசுநாதர் அந்த அதிகாரத்தில் தானே 54-ம் வசனத்தில் சகல பேர்களையும் நோக்கி: என் மாம்ஸத்தையும் இரத்தத்தையும் உட்கொள்ளாமல், ஞான சீவனை அடையமாட்டீர்கள் என்ற பின்பு, 59-ம் வசனத்தில் இந்த அப்பத்தை உண்பவன் நித்திய சீவனை அடைவானென்ருர்.

ஆகையால் அப்பத்தைமாத்திரம் உண்பவன் சேசுநாதர் உடலையும் இரத்தத்தையும் உட்கொள்பவனென்று சொல்லவேண்டியதல்லோ. இன்னம் இது மிகத் தெளியும் படிக்கு யோசிக்குந் தன்மையாவது: சேசுநாதர் கட்டளையின்படியே நித்திய சீவனை அடைய அவர் மாம்ஸத்தையும் இரத்தத்தையும் உட்கொள்ள வேண்டுமல்லோ? தேவ அப்பத்தை மாத்திரம் உட்கொள்பவன், அவர் தாம் சொன்னபடி நித்திய சீவனை அடைவான் ஆகையால் அந்த அப்பத்தை உட்கொள்பவன் சேசுநாதருடைய மாம்ஸத்தையும் இரத்தத்தையும் உட்கொள்பவன் என்னப்படுவான். ஆகையால் இதில் உரோமான் திருச்சபை படிப்பிக்குந் தன்மை வேத சத்தியமாமே.

104.— இதெல்லாம் இப்படியாகக்கொள்ள, உரோமான் திருச்சபை குருக்களுக்கன்றி மற்றவர்களுக்கு நற்கருணைப் பாத்திரத்தைக் கொடாமல், அப்பத்தின் குணங்களில் மாத்திரம் நற்கருணைக் கொடுத்ததிஞல் அவர்களுக்கு ஒரு குறையுமில்லை. அதேதெனில், முன் சொன்னபடி ஒரு வகைக் குணங்களில் மாத்திரம் நற்கருணை கொண்டாலுங் கர்த்தர் சரீரம் இரத்தமென்று இரண்டையுங் கொள்ளப்படுமே. இருவகைக் குணங்களில் நற்கருணைக் கொண்டா

னும் அவ்விரண்டையும் மாத்திரம் இருவகையால் கொள்ளப்படுமொழிய அதிகமாய்க் கொள்ளப்படாதே. அப்படியே பெரிய ஓஸ்தியைக் கொண்டவன் பெரிய சேசுநாதரைக் கொண்டானென்றும், சின்ன ஓஸ்தியைக் கொண்டவன், சின்ன சேசுநாதரைக் கொண்டானென்றுஞ் சொல்லக் கூடாதல்லோ.

இதெல்லாத்துக்கும் நியாயமேதெனில். சேசுநாதர் சரீரமுடையவராயினுங் கண்டிப்புள்ள பொருளைப்போல் நற்கருணையில் இராமல் என் உடலில் என் ஆத்துமம் நிற்பதுபோல முழுதும் ஒவ்வொரு வகைக் குணங்களில் நிற்கிறாரென்று விசுவசிக்குஞ் சத்தியமாமே. ஆத்துமமோவெனில், சின்ன உடலிற் சின்னதாய், பெரிய உடலிற் பெரியதாய் நிற்குமென்று சொல்லப்படாமல், ஒவ்வோர் ஆத்துமந் தன் சரீரத்தில் எங்கும் ஒன்றாய் நிற்பதன்றி, முழுதுந் தானே ஒவ்வொரு சின்ன உறுப்புக்களிடத்தில் நிற்குமல்லோ. அப்படியே நம்மால் கண்டுபிடிக்கப்படாத அற்புத முறையால் சேசுநாதர் சரீரமும் உயிரின் தன்மையால் உலகமெங்கும் அநுதினம் உண்டாக்கப்படும் நற்கருணையினின்று தாமே ஒருவராய் முழுதும் ஒவ்வோர் அப்பத்தின் குணங்களிலேயும், இரசத்தின் குணங்களிலேயும் வேற்றுமையின்றிப் பிரிவின்றித் தமது அளவில்லாத பட்சத்தின் வல்லமையால் இருக்கத் திருவுளமானார்.

ஆகிலும் எல்லாருக்கும் நற்கருணைப் பாத்திரத்தைக் கொடாததினால், இந்நாட் பதிதர் மிகவும் முறைப்பட்டு, விசேஷமாய் இதனால் உரோமான் திருச்சபையை விட்டுப் பிரிந்தோமென்று பலர் சொல்லிக்கொண்டு வருவதால், இன்னம் இதில் சில நியாயங்களைச் சொல்லிக்காட்டுவோம். லுத்தேர் என்பவன் இதில் விசேஷமாய் மயங்கிப் பித்தனைப் போலச் சொன்ன விபரீதங்களை முப்பத்தாறாகக் கொக்கிளே என்பவர் சேர்த்து எழுதிவைத்தார். அப்படியே 1519-ம் ஆண்டில் லுத்தேர் பொஹேமியா இராச்சியத்தாருக்கு எழுதினதாவது: இருவகைக் குணங்களில் நற்கருணை

வாங்குவது நல்லதாயினுஞ் சேசுநாதர் இதில் ஒன்றுங் கட்டளையிடாமையால் ஒரு வகைக் குணங்களில் மாத்திரம் அதனை வாங்கச் சமாதானமாயிருப்பதே அதிலேயும் நல்லதென்றான்.

மீளவும் 1522-ம் ஆண்டில் அவர்களுக்கு எழுதி, அஞ்சினவர் வேண்டும்படியே இருவகைக் குணங்களிலாயினும் ஒரு வகைக் குணங்களிலாயினும் நற்கருணைவாங்க உத்தாரந் தந்தோமென்றான். அப்படியே அவன் செய்த நற்கருணைப் பிரசங்கத்தில் அதனை இருவகைக் குணங்களில் வாங்கக் கடனில்லை என்றான். இத்தன்மையால் இதற்குக் கட்டளையுங் கடனுமில்லை என்றபின்பு, பபிலோன் அடிமைத்தனம் என்னும் புஸ்தகத்தின் முதல் அதிகாரத்தில் இருவகை நற்கருணை வாங்கவும், கொடுக்கவும் ஆண்டவர் கட்டளையிட்டார் என்றும், அதனால் நமக்குக் கடன் உண்டென்றும் விரிவாக எழுதினான். கனாக் கண்ட பித்தன் குளறிப் பிதற்றுந் தன்மை இதல்லோ. மீளவுஞ் சொன்ன நற்கருணைப் பிரசங்கத்தின்மேல் தான் எழுதின வியாக்கியானத்தில் கூடின எல்லாத் திருச்சபைக் கட்டளையில்லாமல் மேற்பிராணியார் ஒவ்வொருவராயினுஞ் சிலர் மாத்திரமாயினும் இருவகைக் குணங்களில் எல்லாருக்கும் நற்கருணை கொடுக்க ஸ்தாபித்தால் எனக்கு நல்லதல்லவென்றான்.

பிறகு தானே 16-ம் பிரிவின் விஷயத்தை ஸ்தாபித்த இடத்தில் சொன்னதாவது: கூடின திருச்சபை கட்டளையில்லாமலும், பாப்பு வேண்டாமென்றாலுங் கிறீஸ்துவை மாதிரிகையாகப் பின்சென்று ஒவ்வொரு மேற்பிராணியார் எல்லாருக்கும் இரு வகை நற்கருணைக் கொடுக்க ஸ்தாபித்தால் மிகவும் நல்லதென்றான். முழுமதி கெட்டவனும் இதன்மேல் விபரீதங்களைச் சொல்லுவானோ? கடைசியில் பூசை செய்யும் மாதிரிகை என்னும் புஸ்தகத்தில் லுத்தேர் தன் நெஞ்சு கொள்ளாமல் உள்ளே தளம்பி நின்ற விஷயத்தைச் சகிச் சொன்னதாவது: உரோமான் திருச்சபைகூடி, இருவகைக் குணங்களில் எல்லாரும் நற்கருணை வாங்கக் கற்

பித்தாலும் உத்தாரமாத்திரஞ் செய்தாலும் நாங்கள் அப்படி வாங்காமல் அந்தச் சபைக்கு நிந்தையாக ஒன்றில் ஒருக்காலும் நற்கருணை முழுதும் வாங்காதிருப்போம். ஒன்றில் எப்போதும் ஒரு வகைக் குணங்களில் மாத்திரம் அதை வாங்கி, அந்தச் சபையின் படியே இருவகையாக வாங்கின யாவரையும் வெறுத்துச் சாபிக்கக்கடவோம் என்றான்.

இதோ போர்த்தியிருந்த ஆட்டுத்தோலை நீக்கித் தன் உருவத்தைக் காட்டின ஓநாய். முன் சொன்னபடி இரு வகை நற்கருணை வாங்கக் கர்த்தரிட்ட கட்டளை இப்போதெங்கே? அதற்கு நமக்குள்ள கடனும் இப்போதெங்கே? ஆகையால் லுத்தேர் என்பவன் வேதத்திற்கொத்த நியாயங்களை ஆராய்ந்தவனுமல்ல. சேசுநாதர் ஸ்தாபித்த கட்டளையைக் கருதினவனுமல்ல. தான் கரை ஏறும் வழியைத் தேடினவனுமல்ல. உரோமான் திருச்சபைக்கு விரோதமே தான் தேடிப் படிப்பித்த உபதேசந்தானே. உரோமான் திருச்சபை இரு வகைக் குணங்களில் நற்கருணையை வாங்க வேண்டாமென்று விலக்கினால் இரு வகை வாங்குவது சேசுநாதர் கட்டளையிட்ட கடன் என்றான்.

உரோமான் திருச்சபை இரு வகை நற்கருணை வாங்க உத்தாரஞ் செய்தால் நான் அப்படி வாங்கேன் என்றும், மற்றவரும் அப்படி வாங்கலாகாதென்றும், அப்படி வாங்கினவனைச் சபிப்பேன் என்றுஞ் சொன்னது வழுவின திருச்சபையை நெறியில் நிறுத்த ஆண்டவரால் அனுப்பப்பட்ட அப்போஸ்தலன் பேசுந் தன்மைதானோ? அப்படியே லுத்தேர் சொன்ன அபத்தங்களை மறுக்கச் சொல்லி, அவனுக்கு அர்ச். பாப்பு எழுதினதற்கு அவன் அர்ச். பாப்புக்கு எழுதின மறு உத்தாரத்தின் 30-ம் வசனத்தில் 109-ம் ஏட்டில் சொன்னதாவது: நீ ஆகாதென்றதெல்லாம் நானே நல்லதென்பேன். நீ நல்லதென்றதெல்லாம் ஆகாதென்பேன். இதோ உன் சொற்படிக்கு நான் அபத்தங்களை மறுக்கும் வகை என்று நீச லுத்தேர் சேசுநாதர் ஸ்நானத்திலிருப்ப

வருக்கு நிந்தையாக அவரை நகைத்து எழுதி அனுப்பினுன்· ஒழுங்குபடாமல் துள்ளி, இடைவிடாமல் இடறி, வழியில் லாமல் தாண்டிக் கால் தளர்ந்து அலேந்து திரியுங் கள் ளுண்ட வெறியனைப் பின்சென்று நாமும் அலேயாதபடிக்கு, லுத்தேர் இதில் சொன்ன விபரீதங்களை விட்டு மற்றப் பதிதர் இந்நாளில் சொல்லுந் தன்மையைக் காட்டக்கட வோம்.

105.— ஒவ்வொரு வகை நற்கருணைக் குணங்களில் சேசுநாதர் முழுதுமிருந்தாலும், அர்ச். மத்தேயு எழுதின சுவிசேஷத்தின் 26-ம் அதிகாரம் 27-ம் வசனத்தில் கர்த் தர் தாமே அப்போஸ்தலருக்கு நற்கருணைப் பாத்திரத்தை யுந் தந்து, இதில் எல்லாருங் குடியுங்கள் என்றூர். ஆகை யால் அப்பத்தைமாத்திரங் கொள்ளச் சொல்லாமல் அத்து டன் பாத்திரத்தையும் எல்லாருங் கொள்ளக் கட்டளையிட் டார் என்று இந்நாட் பதிதர் எல்லாருஞ்சொல்லுகிறூர்கள். ஆகிலும் அர்ச் மாற்கு எழுதின சுவிசேஷத்தின் 14 ம் அதிகாரம் 23-ம் வசனத்தில் அப்போஸ்தலர் மாத்திரம் பாத்திரத்தில் குடித்தமாத்திரத்தில் எல்லாருங் குடித்தார் கள் என்றூர்.

ஆகையால் அந்த எல்லாரும் அப்போஸ்தலரொழிய, மற்றப் பேர்களைப் பற்றிச் சொல்லப்பட்டதல்லவென்று கொள்ளக்கடவோம். அப்படியே அப்போஸ்தலர் எல்லா ருக்குங் கட்டளையிட்டாரென்றும், அதனேடு சகல குருக் களுக்குங் கட்டளையிட்டாரென்றுஞ் சொன்னல் நியாயந் தானே. மற்றச் சனங்களோடு சேசுநாதர் பேசினபொழு தோவெனில், ஒருக்காலும் அப்பத்தையும் பாத்திரத்தை யுங் கொள்ளச் சொல்லாமல், சரீரத்தையும் இரத்தத்தை யுங் கொள்ளக் கட்டளையிட்டார். ஆகிலும் இவ்விரண்டும் ஒவ்வொரு நற்கருணைக் குணங்களில் குறைவில்லாமல் கொள்ளப்படுமென்று ஒப்பித்தாச்சுதல்லோ. ஆகையால் குருக்கள் இருவகையில் நற்கருணைக் கொள்ளக் கட்டளை யிட்டது சரிதானே.

மற்றவர்களோவெனில், அவர் சரீரத்தையும் இரத்தத்தையுங் கொள்ளக் கட்டளையிட்டதொழிய, அவ்விரண்டையும் இரண்டு வகையாற் கொண்டு, அப்பத்தையும் பாத்திரத்தையுங் கொள்ள எல்லாருக்கும் பொதுக் கட்டளையிட்டவரல்ல. இதனாலல்லோ அர்ச். அருளப்பர் சுவிசேஷத்தின் 6-ம் அதிகாரத்தில் எவருக்கும் பொதுவாய்ச் சேசுநாதர் பேசினவிடத்தில் தாம் ஐந்து முறை அப்பத்தின் பெயரைச் சொல்லி, ஒரு முறையாகிலும் இரசமென்கிற சொல் பாத்திரமென்கிற சொல் சொன்னவரல்ல.

106.– மீளவும் அப்பத்தின் குணங்களிலேயும் இரசத்தின் குணங்களிலேயுஞ் சேசுநாதர் நற்கருணை உண்டாக்கினதினால் அதனை ஒருவகைக் குணங்களில் மாத்திரம் வாங்கினவன் பாதி தேவத்திரவிய அநுமானத்தை மாத்திரம் வாங்குவானல்லோவென்றும், கர்த்தர் கட்டளையிட்ட முழுத் தேவத்திரவிய அநுமானத்தைக் கொடாமலும், வாங்காமலும், பாதியை மாத்திரம் கொடுப்பதுங் கொள்வதும் பாவமல்லோவென்றும் பதிதர் சொல்லுகிறார்கள். இதற்கு நாம் விரிவின்றித் தெளிவாய் மறு உத்தாரஞ் சொல்வதற்கு அறியவேண்டியதாவது: நற்கருணை தேவத்திரவிய அநுமானமாகவும் தேவ பூசையாகவும் ஸ்தாபிக்கப்பட்டதாமே. தேவ பூசையாக இனி நாம் சொல்லுந் தன்மையால், இரு வகைக் குணங்கள் வேண்டியதுதானே.

இதனால் அர்ச். மத்தேயு சுவிசேஷத்தின் 26-ம் அதிகாரம் 26-ம் வசனத்திலும், அர்ச். மாற்கு சுவிசேஷத்தின் 14-ம் அதிகாரம் 22-ம் வசனத்திலும், அர்ச். லூக்கா சுவிசேஷத்தின் 22-ம் அதிகாரம் 19-ம் வசனத்திலும் இந்தத் தேவ பூசை செய்ய அப்போஸ்தலரைக் குருக்களாக ஸ்தாபித்தபோது, அப்பத்தையும் பாத்திரத்தையும் உட்கொள்ளத் தந்து, நீங்களும் அப்படியே செய்வீர்களாக என்றார். நற்கருணை தேவத்திரவிய அநுமானமாகவோவெனில் ஒவ்வொரு வகைக் குணங்கள் போதுமென்று ஒப்பிப்போம். அதெப்படியென்றால் போன அதிகாரத்தில் சொன்னபடி

குறைவில்லாமல் ஒரு சடங்கு தேவத்திரவிய அநுமானமா கும்படிக்குத் தன் உள்ளே ஆத்துமத்திலாகும் நன்மையைத் தானே வெளியில் காட்டும் அடையாளமாகவேண்டுமல்லோ.

நற்கருணை ஆத்துமத்துக்கு ஒரு தேவ போசனமு மாகி நாம் நம்மோடேயுஞ் சேசுநாதரோடேயுஞ் விசேஷப் புணர்ச்சியின் முறையால் ஒன்றுபடவுஞ் செய்வது இந்தத் தேவத்திரவிய அநுமானத்தால் உள்ளேயாகும் நன்மை யாமே. இவ்விரு வகை நன்மைகளோவெனில் ஒவ்வொரு நற்கருணைக் குணங்களால் காட்டப்படுமென்பது நிச்சயந் தானே. அதெப்படியென்றால் பல கோதும்பை அரிசி அரைபட மாவாகி ஒன்றுபடத் தண்ணீரால் சேர்த்து அப் பமாகும் என்றதினால், அப்பத்தின் குணங்கள் தனியேயா னாலும் நம்மோடேயுங் கிறீஸ்துவினோடேயும் ஒன்றுபட நற்கருணையினால் நமக்கு வரும் ஞானப் புணர்ச்சியைக் காட்ட நல்லதல்லோ. பின்னையும் இதில் ஞான போசன மும் ஞான திருப்தியுமாகையால் வேத வசன முறையால் உண்பதுங் குடிப்பதும் ஒன்றுதானே. அதனால் ஒன்றைப் பற்றி அதை உண்ணப் பசியும், குடிக்கத் தாகமும் உண் டென்று வேற்றுமையின்றி வேதத்தில் எழுதப்பட்ட தல்லோ.

அப்படியே சேசுநாதர் அர்ச். மத்தேயு சுவிசேஷத் தின் 5-ம் அதிகாரம் 6-ம் வசனத்தில் ஞான நீதியைப்பற் றிப் பசியுந் தாகமுமுள்ளவர் பாக்கியமுடையவர் என்றார். ஆகையால் உண்ணப்படும் நற்கருணை அப்பத்தின் குணங் கள் குறைவில்லாமல் ஞானப் போசனத்தையும் ஞானத் திருப்தியையும் அடையாளமாகக் காட்ட வல்லதென்று சொல்லக்கடவோம். இதனாலல்லோ சேசுநாதர் அர்ச். அருளப்பர் சுவிசேஷத்தின் 6-ம் அதிகாரம் 35 ம் வசனத் தில் தம்மை உயிர் தரும் அப்பம் என்றபின்பு அந்த அப் பத்தை உண்டு தம்மை அண்டினவர்களுக்குப் பசியுந் தாக மும் இனி வராதென்றார். இதோ இந்த தேவ அப்பம் பசி யையுந் தாகத்தையுந் திருப்தியாய் ஆற்றும் ஞான போசன மாமே.

இதுவுந் தவிரச் சேசுநாதர் தாமே சொன்ன அதிகாரத்தின் 55-ம் வசனத்தில் என் மாம்ஸத்தை உண்டு, என் இரத்தத்தைக் குடிப்பவன், நித்திய சீவியத்தை அடைவான் என்முர். 59-ம் வசனத்திலோவெனில், இந்த அப்பத்தை உண்பவன் நித்திய சீவியத்தோடு உயிர் வாழ்வான் என்முர். இதோ தன் சரீரத்தைப் புசித்து, தன் இரத்தத்தைக் குடித்து, வரும் பலனெல்லாங் குறையாமல் இந்த தேவ அப்பத்தைப் புசித்தமாத்திரத்தில் வருமென்பது நிச்சயந் தானே. ஆகையால் அப்பத்தின் குணங்களில் மாத்திரம் நற்கருணைக்கொண்டாலும், குறையில்லாமல் முழுத் தேவத் திரவிய அநுமானங் கொள்ளப்படுமென்பது தேவ சத்திய மாமே. இதனுல் சேசுநாதர் இருவகையில் நற்கருணைக் கொள்ளக் கட்டளையிடாமல் விலக்கவில்லை என்றதினுல், அப்போஸ்தலர் நாளில் முதலாய்த் திருச்சபையில் நற்கருணை அப்பத்தோடு பாத்திரத்தையும், பாத்திரமின்றி அப்பத்தை மாத்திரமும் வேற்றுமையில்லாமல் வாங்கிக் கொண்டு வந்தார்கள்.

அர்ச். லூக்கா எழுதின அப்போஸ்தலர் முயற்சியில் அக்காலத்துத் திருச்சபையாரைத் தோத்திரஞ் செய்ய 2-ம் அதிகாரம் 42-ம் வசனத்தில் சொன்னதாவது: அந்நாள் கிறீஸ்துவர்கள் அப்போஸ்தலர் உபதேசத்தைக் கேட்கவும் ஒருங்குடன் கூடி அப்பத்தைப் பிட்டு உண்ணவும், செபஞ் செய்து வேண்டிக்கொள்ளவும், ஓயாமல் காலக்ஷேபஞ் செய்துகொண்டு வந்தார்கள் என்முர். இங்கே சொல்லப் பட்ட அப்பம் உடலுக்குப் போசனமாகிய வெறும் அப்ப மல்ல. இல்லாவிட்டால் ஓயாமல் சோற்றை புசித்துக் கொண்டிருந்தார்கள் என்றது அந்நாள் கிறீஸ்துவர்களுக் குத் தோத்திரமாகுமோவென்ன?

பின்னையும் அப்போஸ்தலர் சொன்ன பிரசங்கங்களைக் கேட்பதுஞ் செபஞ் செய்வதும் இவ்விரண்டும் ஞான உத்தியோகங்களாகையால் அவைகள் நடுவே அநுதினம் விடாமல் அப்பத்தை உட்கொண்டார்கள் என்றது கூட்டினதி

ளுல் இதுவும் உயிருக்கு ஞானப் போசனமாகிய நற்கருணை அப்பத்தைப் பிட்டுப் புசித்தார்கள் என்று கண்டுகொள்ளக் கடவோம். ஆகையால் அப்பத்தைச் சொல்லிப் பாத்திரத்தைச் சொல்லாமையால் அந்நாள் கிறீஸ்துவர்கள் சிலமுறை பாத்திரத்தையுங் கூடக் கொண்டாலுந் தப்பாமல் அநுதினம் இந்த ஞான அப்பத்தைப் பாத்திரமில்லாமலுங் கொண்டார்களென்று சொல்லக்கடவோம்.

ஆகையால் அப்போஸ்தலர் தாமே சேசுநாதர் கட்டளையை மீறினார்களென்றுஞ் சனங்களுக்கு முழு நற்கருணையைக்கொடாமல் பாதியைக்கொடுத்தார்களென்றுஞ் சொல்லக் கூடாமையால் பாத்திரத்தையும் எல்லாருங் கொள்ளச் சேசுநாதர் கட்டளை இல்லையென்றும், பாத்திரமின்றி அப்பத்தின் குணங்களில் முழு நற்கருணை கொடுக்கப்படுமென்றும் நிச்சயமாமே. அப்படியே அப்போஸ்தலர் காலத்துக்குப் பிறகு முதல் 500 வருஷங்களில் பதிதருஞ் சொன்னபடித் திருச்சபை வழுவாதிருக்கக்கொள்ள வியாதியாய்க் கிடந்தவர்களுக்கும் வேதத்துக்காகச்சிறைப்பட்டவர்களுக்கும், இரசத்தைக் குடிக்க அரோசிகமுள்ளவர்களுக்கும், பாத்திரமில்லாமல் அப்பத்தின் குணங்களில் மாத்திரம் நற்கருணைக் கொடுத்துக்கொண்டு வந்தார்களென்று பதிதருஞ் சொல்லக்கடவார்கள்.

அப்படியே லுத்தோரானிகளுக்குள்ளே கல்வீஸ்தனும், பிறேத்தோரியனும், பலரும் இந்த விஷயத்தில் தாங்கள் எழுதின புஸ்தகங்களில் ஒத்துக்கொண்டார்கள். இதெல்லாம் இப்படியாகக்கொள்ள, நெடுநாள் வேண்டும் பேர்களுக்குப் பாத்திரத்தையுங் கொடுத்த பின்பு, பூவுலகெங்குமாகிய கிறீஸ்துவர்கள் மிகுதியால் இது எல்லாருக்குங் கூடாததினுலேயும், இதில் பல குறை கலந்ததினுலேயும் எல்லாரும் ஒரு நிலையாய் நின்று, ஒரு முறையாய் நடக்கவும் சேசுநாதர் கட்டளையிடாத முறையால் பாவமும், சங்கைக் கேடும் வராதபடிக்குச் செய்யவும், நியாயத்தின் படியே திருச்சபை சேசுநாதர் சரீரத்தையும் இரத்தத்தை

யும் ஒரு வகையாக மாத்திரம் எல்லாருங் கொள்ளச் சொல்லி, அப்பத்தைத் தந்து, பாத்திரத்தை விலக்கினதாம். அப்படியே லுத்தேர் முதலாய்ச் சொன்னபடி திருச்சபை துவக்கத்தில் மும்முறை தண்ணீரில் ஞானஸ்நானம் பெறுகிறவனைத் துவைத்து, அமுக்கி ஞானஸ்நானங் கொடுப்பது நடந்த முறையல்லோ; பிறகு ஒரு முறை துவைத்துக் கொண்டு வந்தார்கள்.

கடைசியில் அதனால் பல குறை உண்டாவதைக்கண்டு தலைமேல் தண்ணீரை விட்டுக் கழுவி, ஞானஸ்நானம் இந்நாளில் கொடுக்கப்படுகிறதல்லோ. இந்த முறை லுத்தேரானிகளும் ஏற்றுக்கொண்டதனால் திருச்சபை வழுவினதென்று சொல்லாதிருந்தார்கள். ஆகையால் ஆண்டவர் கட்டளையில்லாதபோது காலமும் இடமும் அறிந்து, தேவத்திரவிய அநுமானங்களைக் கொடுக்கிறதில் பலமுறைகளை ஸ்தாபிக்கவும் மாற்றவுந் திருச்சபை வல்லதுதானே. ஆகையால் இருவகைக் குணங்களில் நற்கருணைக் கொள்ளச் சேசுநாதர் கட்டளையில்லாமைபால், முந்தித் திருச்சபை கொடுத்த பாத்திரத்தை இப்போது கொடாதாயினும், இதனால் திருச்சபை வழுவிக் கெட்டதென்று சொல்ல நியாயமில்லை.

15-ம் அதிகாரம்.

பூசை விளக்கம்.

107.— முன் சொல்லியபடித் திவ்விய நற்கருணை தேவத்திரவிய அநுமானமாக ஸ்தாபிக்கப்பட்டதல்லாமல் மெய்யான தேவ பூசையாக அதனைச் சேசுநாதர் உண்டாக்கினாரென்பது உரோமான் திருச்சபை படிப்பிக்கும் ஐந்தாஞ் சத்தியமாமே. இது சொல்லும்போது நற்கருணை உண்டாகு முன்னும் பின்னும் திருச்சபை கட்டளை

யிட்ட சில மந்திரவகையும், சில சடங்கின் ஒழுங்கும், சில வஸ்திர முறையுஞ் சேசுநாதர் ஸ்தாபித்த பூசை என்று கருதவேண்டாம். இதெல்லாம் விசுவாசம் வளரவும், மனஸ்தாபம் எழும்பவும், வேண்டியதைக் கேட்கவுந் திருச்சபையால் ஸ்தாபித்த ஞான முறைகள் மாத்திரமென்று சொல்லப்படும். நாம் எதில் நம்முடைய பூசைக் குணமெல்லாம் ஸ்தாபித்தோமென்று வெளியாகும்படிக்கு முந்திப் பூசையாவது ஏதென்று காட்டக்கடவோம்.

ஆகையால் ஒன்றாகிய மெய்யான கடவுள் எல்லாத்தையும் உடையவராகி, எல்லாத்தையும் ஆளும் ஆண்மையைக் காட்டவும், அவருக்கு நாம் கீழ்ப்படிந் தூரிய வணக்கத்தைச் செய்யவும் ஸ்தாபிக்கப்பட்ட குருக்களால் யாதொரு ஞான அர்த்தத்தைக் காட்டும் புறச் சடங்கோடு லௌகிகப் பொருளே தேவ பலியாகும்படிக்குத் திருப்பொருளாகச் செய்த பின்பு, அந்தப் பலியே அழிக்கப்பட்டுக் கடவுளுக்கு மாத்திரஞ் செய்யப்படும் படைப்புப் பூசையாமே. ஆகையால் மெய்யான குருக்களன்றி, மற்றவர் ஆணும், பெண்ணும் என்ன சடங்கு செய்தாலும், என்னத்தைப் படைத்தாலும், அது மெய்யான பூசையல்ல. அப்படிச் செப தப திருப்புகழ் மற்றப் புண்ணியங்கள் கடவுளுக்குத் தோத்திரமாகச் செய்யப்பட்டாலும் மேலந்தோன் அபத்தமாய்ச் சொன்னபடி மெய்யான பூசை என்று சொல்லப்படாது.

அர்ச். மத்தேயு சுவிசேஷத்தின் 9-ம் அதிகாரம் 13-ம் வசனத்தில் சேசுநாதர் தாமே தயையே வேண்டும் பூசை வேண்டாமென்றார். இதோ தயையாகிய புண்ணியமும் பூசையும் வேறு படுத்தினதாமே. அப்படியே ஆண்டவருக்குப் படைக்கப்பட்ட காணிக்கைகளை எல்லாம் கல்வீன் அபத்தமாய்ச் சொன்னபடி மெய்யான பூசை என்று சொல்லப்படாது. தாவீதரசன் 39-ம் சங்கீதத்தின் 7-ம் வசனத்தில் ஆண்டவரை நோக்கிப் பூசையும், மற்றக் காணிக்கையும், வேண்டாமென்றீர் என்றெழுதினார். இதோ காணிக்கை

வேறே, பூசை வேறே வைக்கப்பட்டதாமே. மீளவும் பூசையால் வணங்கப்பட்டவர் எல்லாத்தையும் உடையவ ரொன்றும், எல்லாத்தையும் ஆண்டவரொன்றுங் காட்டப் பூசை செய்யப்பட்டமையால் ஒரு மெய்யான கடவுளுக் கொழிய எவருக்கும் பூசை செய்யப்படாது.

ஆகையால் நாம் செய்யும் பூசை சர்வேசுரனுக்கொழி யத் தேவமாதாவுக்காகிலும், மற்ற மோக்ஷவாசிகளுக்காகி லுஞ் செய்கிறோமென்று பதிதர் சொல்வது வெட்கமில்லா மல் சொன்ன அக்கிரமமான தப்பறைதானே. இதில் திருச் சபை செய்யுந் தன்மை அர்ச். அகுஸ்தீன் என்பவர் பாவுஸ் தினுஸ் சொன்ன அபத்தங்களை மறுத்த 20-ம் புஸ்தகத் தின் 13-ம் அதிகாரத்தில் சொன்னதாவது: கிறீஸ்துவர் கள் ஒருங்குடன் கூடி, வேத சாட்சிகளுடைய திருநாட் களைப் பத்தியோடு கொண்டாடுவது மெய்தான். ஆயினும் இது வேதசாட்சிகள் காட்டின புண்ணிய மாதிரிகைக்கொப் பத் தாங்களே நடக்கவும், அவர்கள் அடைந்த பலன்களில் பங்குடையவராகவும், அவர்கள் வேண்டுதலினால் ஆதரவ டையவுஞ் செய்வார்களொழிய, வேதசாட்சிகளுக்குப் பீடம் ஏற்றிப் பூசை செய்து படைப்பார்களென்று நினைக்க வேண்டாம். வேதசாட்சிகளை நினைத்து, அவர்களுக்கு ஆண்டவர் செய்த சகாயங்களுக்குத் தோத்திரமாகச் சர் வேசுரனுக்கு மாத்திரம் பீடத்தை ஏற்றுவதும், படைத் துப் பூசையைச் செய்வதுஞ் சத்தியந்தானே என்றார்.

மீளவும் முன் சொன்ன பூசையின் குணங்களைப் பற் றிச் சேசுநாதர் கபாலமலையின்மேல் தாமே பரம தேவ குருவாகவும், தாமே மாசில்லாத பலியாகவும், உலகந்துவக் கின நாள் முதற்கொண்டு செய்யப்பட்டதொழிய, இனி உலகம் முடியுந்தனையுஞ் செய்யப்படும் பாவங்கள் எல்லா வற்றையுந் தீர்க்கச் சிலுவையில் அறையுண்டு, இரத்தத்தைச் சிந்தி அடைந்த மரணமே மெய்யான உரிய பூசை என்று நம்மோடு பதிதருஞ் சந்தேகமறச் சொல்லுகிறார்கள். அந் தச் சிலுவை பூசைக்கொத்ததாய் நற்கருணைப் பூசை உண்

டென்று நாமே சொல்லுகிறோம். சிலுவையில் படைக்கப் பட்ட தேவ பலி சேசுநாதர்; இதிலேயுந் தேவ பலியாக நிற்பவர் அவர் தாமே. சிலுவையில் பலியைப் பிதாவுக்குப் படைத்த பரம தேவ குரு சேசுநாதர்; இதிலேயும் பிரதான குருவாகப் பூசையை முடிப்பவர் அவர்தாமே. மற்றக் குருக்கள் சேசுநாதருக்கு ஊழியஞ் செய்பவரொழியத் தம் வினையாகப் பலியைப் படைப்பவரல்ல.

இதினாலல்லோ மற்றதெல்லாந் தம் வார்த்தையாகக் குருக்கள் சொன்ன பின்பு, நற்கருணையை உண்டாக்குகிற போது சேசுநாதர் வார்த்தையாக இது அவர் சரீரம் என்னுமல், இது என் சரீரம் என்று சொல்லி உண்டாக்குகிறார்கள். ஆகையால் சேசுநாதர் வார்த்தையாகவும் அவர் வினையாகவுங் குருக்கள் எல்லாரும் நற்கருணை உண்டாக்குகிற செய்கைதானே மெய்யான பூசைக்கு வேண்டிய குணமெல்லாம் உடையதாகி, அந்தச் செய்கைதானே மெய்யான நற்கருணைப் பூசை என்று சொல்லக்கடவோம். அதெப்படியெனில், மெய்யான பூசைக்கு லௌகீகப் பொருள் வேத சடங்கோடு திருப்பொருளாகவும் ஆண்டவருக்குப் படைக்கப்படவும் அவருக்குத் தோத்திரமாக அழிக்கப்படவும் இவை மூன்றும் மெய்யான குருவினால் செய்யவேண்டியதல்லோ.

நற்கருணைப் பூசையிலோவெனில், பிரதான பரம தேவகுருவாகிய சேசுநாதர் நற்கருணை உண்டாக்குகிற செய்கையில் தானே இம்மூன்றையுஞ் செய்கிறாரென்று ஒப்பிப்போம். ஆகையால் முதலாவது இதில் வெறும் அப்பமும் இரசமுஞ் சேசுநாதர் சரீரமும் இரத்தமுமாகி, லௌகீகப்பொருள் உத்தம பலியாகும்படிக்குத் தேவ சடங்கோடு திருப்பொருளாகக் கண்டோம். இரண்டாவது, முன் அங்கே இல்லாத சேசுநாதர் சரீரமும் இரத்தமும் சொன்ன வார்த்தையின் வல்லமையால் அப்பத்தின் குணங்களிலேயும் இரசத்தின் குணங்களிலேயும் உண்டாக்கி, ஸ்தாபித்த பீடத்தின் மேலே ஆண்டவர் சமுகத்தில்

அதனை வைத்தபோது தேவ பலியே சர்வேசுரனுக்குப் படைக்கப்படுவது சரிதானல்லோ. மூன்றாவது, சேசுநாதர் நற்கருணை வார்த்தையின் வல்லமையால், மெய்யான போசனமாகையில் சொன்னபடி இதில் படைத்த தேவ பலி உண்ணப்படும்படிக்கு வைத்தமையால், மெய்யாகவே அழிக்கப்படும்படிக்கு வைத்ததென்று சொல்லக்கடவோம். இது பிறகு பூசை செய்யுங் குருக்கள் நற்கருணை உட்கொள்ளும் போது முடியுங் கருமமாமே.

இதனால் தோலேது நகரில் கூடின திருச்சபையார் ஸ்தாபித்த ஐந்தாங் கற்பனையில், சில குருக்கள் பூசை செய்யும்போது தாங்களே நற்கருணை உட்கொள்ளாதிருந்தார்களென்று அறிந்ததினால், அவர்களை மிகவுங் கண்டித்துப் பூசிக்கிறவன் முதலாய் அதில் ஒன்றுங் கொள்ளாமல் முடித்த பூசையை பூசை அல்லவென்றார்கள். ஆகிலும் இதில் தேவ பலியாக நிற்கும் சேசுநாதர் போசனமாக நின்றாலும், போசனமாக உண்ணப்பட்டாலும் அவர் அழிபடவுமில்லை, குறைபடவுமில்லை யென்பது மெய்தானாயினும் இதில் படைத்த பலி அழியாமல், மெய்யான பூசை இதல்லவென்று சொல்லவும் வேண்டாம். அதேதெனில், சேசுநாதருக்குள்ள சுபாவத்தன்மை இதில் கெடாதாயினும் புதிதாய் நற்கருணை அப்பத்தின் குணங்களிலேயும் இரசத்தின் குணங்களிலேயும் அவர் அடைந்த தன்மை குருக்கள் நற்கருணை உட்கொண்ட வினையால் மெய்யாகவே முழுதும் இல்லாதே போவது சத்தியந்தான்.

மீளவும் நற்கருணைப் பூசை, சிலுவைப் பூசையைக் காட்டும் நினைவு அடையாளமாகஸ்தாபிக்கப்பட்டதல்லோ? அப்படி அர்ச். லூக்கா சுவிசேஷத்தின் 22–ம் அதிகாரம் 19-ம் வசனத்தில் சேசுநாதர் திருவுளம்பற்றினதாவது: என்னை நினைத்து நீங்களும் இதனைச் செய்யக்கடவீர்களென்றார். அதனால் அவர் அடைந்த மரண நினைவாக இதனைச் செய்யக்கடவோமென்று அர்ச். சின்னப்பர் முதல் நிருபத்தின் 11-ம் அதிகாரம் 26–ம் வசனத்தில் கொரிந்தி

யாருக்கு எழுதினர். அப்படியே சிலுவைப் பூசையைக் காட்டும் நினைவு அடையாளமாக வேண்டுமென்றதினால், நற்கருணை அப்பத்தின் குணங்களிலேயும் இரசத்தின் குணங்களிலேயும் உண்டாக்கப்பட்டதென்று சொல்லக் கடவோம்.

அதெப்படியென்றால், ஒவ்வொரு வகைக் குணங்களில் முன் சொன்னபடிப் பிரியாத் துணை முறையால் சேசுநாதர் சரீரமும், இரத்தமும், ஆத்துமமும், தேவசுபாவமும் இருந்தாலும், சொன்ன நற்கருணை வார்த்தையின் வல்லமையால் அப்பத்தின் குணங்களில் அவர் சரீரமாத்திரம், இரசத்தின் குணங்களில் அவர் இரத்தமாத்திரம் இருப்பது சத்தியந்தானே. ஆகையால் நற்கருணையில் மெய்யாகவே சேசுநாதர் சரீரமும், இரத்தமும் பிரியாதாயினும் பிரிந்த பாவனை காட்டினதினால் சிலுவைமேல் அறையுண்டவர் திருமேனியில் நின்று சிந்தின இரத்தமெல்லாம் மெய்யாகவே பிரிந்த தன்மையை நற்கருணைப் பூசை அடையாளமாகக் காட்டுமல்லோ. இதனால் நற்கருணை குறையின்றி முழுத் தேவத்திரவிய அநுமானமாக ஒவ்வொருவகைக் குணங்கள் போதுமென்றாலும், அந்த நற்கருணைதானே சிலுவைப் பூசையைக் காட்டுந் தேவ பூசையாக இருவகைக் குணங்கள் அவசியமாய் வேண்டியதென்று முன் சொன்னோமல்லோ?

108.— இதெல்லாத்தையும் வெளிப்படுத்தின பின்பு, சேசுநாதர் நற்கருணையை உண்டாக்கினபோது நமக்குத் தேவத்திரவிய அநுமானங் கட்டளை இட்டதன்றி அவர் தாமே மெய்யான பூசை செய்தாரென்றும், அப்போஸ்தலரும், மற்றக் குருக்களும் மெய்யான பூசை செய்யக் கட்டளையிட்டாரென்றும் ஒப்பிக்கக்கடவோம். மலக்கீயனென்னுந் தீர்க்கதரிசி முதல் அதிகாரம் 10-ம் வசனந் துவக்கி, பழைய வேதத்தில் செய்யப்பட்ட பூசைகளெல்லாவற்றையுஞ் சர்வேசுரன் வெறுத்து நீக்கி, அதுகளுக்கு இடமாக வேறோர் உத்தம தேவ பூசை ஸ்தாபிப்பாரென்றும், அது

பூவுலகெங்குஞ் செய்யப்படுமென்றும் எழுதி வைத்தார். ஆகிலுந் தேவ சிலுவைப் பூசை ஒருமுறை மாத்திரம் ஓரிடத்தில் மாத்திரஞ் செய்யப்பட்டமையால் அது இதில் தீர்க்கதரிசி சொன்ன பூசை அல்லவென்றுசொல்லக்கடவோம்.

ஆகையால், பழைய பூசைகளுக்கு இடமாகச் சிலுவைப் பூசைக்கொப்பாக எங்கும் அநுதினமும் செய்யப்படுந் தேவநற்கருணைப் பூசைதானே அந்தத் தீர்க்கதரிசி சொன்ன பூசை என்பது நிச்சயமாமே. இந்தத் தீர்க்கதரிசியின் வார்த்தையைப்பற்றி அர்ச். அருளப்பர் சுவிசேஷத்தின் 4-ம் அதிகாரம் 21-ம் வசனந் துவக்கிச் சமறித்தானவள் ஒருத்திக்குச் சேசுநாதர் திருவுளம் பற்றினதைப் பார்க்கக்கடவோம். யூதருக்கும், சமறித்தானருக்கும் நெடுநாள் வேத விகற்பமாகி எருசலேம் நகரிடத்தில் மாத்திரமே மெய்யான பூசை செய்யப்படுமென்று யூதர் சொல்ல, சமறித்தானரெல்லாருந் தம் ஊருக்கு அடுத்த கரிசி என்னும் மலைமேல் பூசையை முடிப்பது நல்லதென்று சொல்லிக் கொண்டு வந்தார்கள்.

இதில் மிகவுந் தங்களுக்குள்ளே தர்க்கமாகும் போது சமறித்தானர் வகையில் ஒருத்தி சேசுநாதரைக் கண்டு பேசி அவர் சொன்ன தேவ உணர்ச்சிகளால் அவரை வேத சாஸ்திரியென்றும், யூதர் குலத்தாரென்றும் அறிந்து கேட்டதாவது: எங்கள் பிதாக்கள் இம்மலைமேலே தேவாராதனை செய்தார்களல்லோ? நீங்களோவெனில் அந்த ஆராதனை எருசலேமாநகரில் செய்யவேண்டுமென்கிறீர்கள்; இதென்ன ஐயாவென்று கேட்டாள். அதற்குச் சேசுநாதர் இம்மலைமேலும், எருசலேமிடத்திலும் பிதாவுக்குச் செய்த ஆராதனை முடியும் நாள் வந்ததுதானே என்ற பின்பு, மெய்யான வணக்கமுறை உடையவர் மெய்முறையாலும், ஞான முறையாலும் பிதாவுக்கு ஆராதனை செய்யக் காலம் இதுதானென்றார். இதில் மெய்யான வணக்க முறை உடையவரென்றபோது, சேசுநாதர் கிறீஸ்துவர்களைக் குறித்தாரென்று சந்தேகப்படுவார் இல்லை.

மீளவும் யூதருக்கும், சமறித்தானருக்கும் இருந்த விகற்பம் மெய்யான பூசை ஆராதனையாலே வந்ததினால், இதில் சேசுநாதர் தேவாராதனை என்றபோது வேறு ஆராதனையைச் சொல்லாமல் மெய்யான பூசை ஆராதனையைச் சொன்னாரென்று சந்தேகப்படத் தேவையில்லை. ஆகையால் சேசுநாதர் சொன்னதற்கு அர்த்தமேதெனில், மலக்கியென் சொன்னபடி யூதரும், சமறித்தானருஞ் சர்வேசுரனுக்குச் செய்துகொண்டு வந்த பூசைகளெல்லாம் அவரால் வெறுக்கப்பட்டு நீங்கி முடியும்படிக்கு நாளாகி இனிமேல் எருசலேம் நகரில் மாத்திரம் அல்ல, கரிசி மலைமேல் மாத்திரமும் அல்ல, எங்குங் கிறீஸ்துவர்களால் வேறோர் உத்தம பூசை செய்யப்படுங் காலம் இதுவே என்றார். இதோ மலக்கியென் சொன்ன தன்மை தானே.

மீளவும் பழைய வேதத்தின் பூசைகளில், ஆடுகள் முதலான மிருகங்கள் பலியாக வைத்ததினால். ஞான முறையால் செய்யப்பட்ட பூசைகளென்று சொல்லப்படாதல்லோ? பின்னையும் அந்தப் பலிகளெல்லாம் நீசப் பலியாகையால், சிலுவைப் பூசையில் கொடுக்கப்பட்ட தேவ பலியாகிய சேசுநாதரை மிகுந்த வேற்றுமையோடு காட்டினதினால் அதுகளை மெய் முறையால் செய்யப்பட்ட பூசைகளென்று சொல்லவுங் கூடாதே. கிறீஸ்துவர்கள் அநுதினங் காணும் நற்கருணைப் பூசையிலோவெனில், சேசுநாதர் தாமே பிரதான குருவும், தேவ பலியுமாகக்கொள்ளச் சிலுவைப் பூசைக் கொத்ததாய் மெய் முறையாலும், ஞான முறையாலுஞ் செய்யப்படும் பூசை என்பதற்குச் சந்தேகம் என்றுமில்லை. ஆகையால், மெய் முறையாலும், ஞான முறையாலுங் கிறீஸ்துவர்கள் எங்கும் பூசை செய்வார்களென்று சேசுநாதர் சொன்னபோது, உரோமான் திருச்சபையில் செய்யப்பட்ட நற்கருணைப் பூசையைக் குறித்தாரென்று சொல்லக்கடவோம்.

109.— மீளவுஞ் சேசுநாதர் நற்கருணை உண்டாக்கின வகையைச் சலஞ் சாதியாமல் ஆராய்ந்து பார்க்கில் நாம்

சொல்லுஞ் சத்தியந்தானே வெளியாகுமே. ஆகையால் அதற்கு முந்தி அறியவேண்டியதாவது: தாவீதரசன் பாடின 109-ம் சங்கீதம் 4-ம் வசனத்தில் சொன்னபடியும், அர்ச். சின்னப்பர் எபிறேயருக்கு எழுதின 7-ம் அதிகாரம் 17-ம் வசனத்திலும், 26-ம் வசனத்திலுஞ் சொன்னபடியும், ஆண்டவர் சத்தியமாகச்சொல்லுகிறேனென்று ஆணையிட்டுச் சேசுநாதரை மேல்கீசேதேக்கன் வகையால் நித்தியமாய் எந்நாளும் பூசிக்கிற குருவாக ஸ்தாபித்தாரென்று நிச்சயமாய் அறிவோமல்லோ? மேல்கீசேதேக்கன் செய்த பூசையோவெனில், மோயீசன் முதல் ஆகமத்தின் 14-ம் அதிகாரம் 18-ம் வசனத்தில் சொன்னபடி மேல்கீசேதேக்கன் அப்பத்தையும், முந்திரிகைப்பழத்தின் இரசத்தையும் படைத்துப் பூசை செய்ததறிவோம்.

ஆகையால் சிலுவையில் சேசுநாதர் தம்மை நமக்காகப் பலியாகச் சாகக்கொடுத்துச் செய்த பூசை அப்பத்தையும், இரசத்தையுங்கொண்டு செய்யாமையால் அந்தப் பூசை மேல்கீசேதேக்கன் வகைப் பூசையுமல்ல. அதனை ஒரு முறை மாத்திரஞ் செய்ததினால் சிலுவைப் பூசையை மாத்திரம் பற்றிச் சேசுநாதர் நித்தியமாய் எந்நாளும் பூசிக்கிற குருவாக ஸ்தாபிக்கப்பட்டவரும் அல்ல. ஆகையால் வேறே வகைப் பூசையைப்பற்றி அந்த வார்த்தையை ஆண்டவர் சத்தியமாகத் திருவுளம்பற்றினாரென்று சொல்லக்கடவோம். இந்த வேறே வகைப் பூசையோவெனில், நற்கருணைப் பூசையொழிய வேறுண்டென்று இந்நாள்வரைக்குஞ் சொல்வாருமில்லை, நினைப்பாருமில்லை. நற்கருணைப் பூசையோவெனில் அப்பத்தையும், இரசத்தையுங் கொண்டு அநுதினஞ் சேசுநாதர் பரம தேவ குருவாகச் செய்யுந் திவ்விய பூசையாகையால், இதுவே மேல்கீசேதேக்கன் வகைப் பூசையென்று நித்தியமாய் எந்நாளும் பூசிக்கிற குருவாகிய சேசுநாதர் அநுதினம் எங்குஞ் செய்யும் பூசை என்றுஞ் சொன்னால் புத்திக்கொத்த நியாயமாமே.

ஆகையால் சேசுநாதர் அப்பத்தையும் இரசத்தையும்

வெவ்வேறு கையில் ஏந்திக்கொண்டு இது என் சரீரம், இது என் இரத்தமென்று நற்கருணை உண்டாக்கித் தம்மைச் சீஷர்களுக்குப் போசனமாகக் கொடுக்குமுன்னே, தம்மைப் பிதாவுக்குப் பூசையாகப் படைத்தாரென்று சொல்லக்கடவோம். இல்லாவிட்டால் அப்பத்தையும், இரசத்தையும் படைத்த மேல்கீசதேக்கன் வகைப் பூசை சேசுநாதர் செய்தது எப்போதென்று பதிதர் தாமே காட்டக்கடவார்கள். ஆகையால் சேசுநாதர் அப்பத்தையும், இரசத்தையுங் கொண்டு நற்கருணை உண்டாக்கின வகையைப் பார்க்கில், நற்கருணை மெய்யான பூசையென்பதற்குச் சந்தேகமில்லை.

110.- மீளவும் நற்கருணை உண்டாக்கினபோது சேசுநாதர் திருவுளம் பற்றின வார்த்தையும் ஆராய்ந்து பார்க்கில், இதில் சந்தேகப்படவுந் தேவையில்லை. அதெப்படியென்றால், அர்ச். லூக்கா சுவிசேஷத்தின் 22-ம் அதிகாரம் 19-ம் வசனத்தில் சேசுநாதர் இது என் சரீரமென்று மாத்திரஞ் சொல்லாமல், இது உங்களுக்காக இப்போது கொடுக்கப்படும் என் சரீரமென்றார். அந்த இப்போதென்கிற சொல் வேதத்திலில்லை. ஆகிலும் வேதத்தில் எழுதப்பட்ட சொல், நிகழ்காலத்துக்கு மாத்திரம் உரியதாய்ச் செல்லுமென்றமையால் கொடுக்கப்படுமென்ற சொல், தமிழ்மொழி வகையால் நிகழ்காலத்துக்கும் எதிர்காலத்துக்கும் வேற்றுமையின்றிச் செல்லுமென்று நாம் அதை வேதத்தில் உள்ளபடி நிகழ்காலத்துக்குச் சொன்னதாகக் காட்ட இப்போதென்னுஞ் சொல்லைக்கூட்டி வைத்தோம்.

இதிப்படியிருக்கக்கொள்ள, அன்றுதானே தேவநற்கருணை சீஷர்களுக்கு ஞான போசனமாகக் கொடுக்கப்பட்டதன்றி, அவர்களுக்காகத் தேவ பலியாய்ப் பிதாவுக்குப் படைக்கப்பட்டதென்று சொல்லக்கடவோம். அதெப்படியென்றால், அன்று நற்கருணையில் சேசுநாதர் தமது சரீரத்தைத் தேவ போசனமாக மாத்திரங் கொடுத்தாராகில், உங்களுக்குப் கொடுக்கப்படுஞ் சரீரம் என்பாரொழிய, உங்க

ளுக்காகக் கொடுக்கப்படுஞ் சரீரமென்று கொடிய வசன மாய்ச் சொல்லமாட்டாரல்லோ? மீளவும் அதற்குப் பிறகு சிலுவைப் பூசையில் அவர்களுக்காகச் சேசுநாதருடைய திருச் சரீரந் தேவபலியாகக் கொடுக்கப்படுவது சரிதா னென்று ஒப்புக்கொள்ளவேண்டியதுதானே.

ஆகிலும் அது சேசுநாதர் அந்த வார்த்தை சொன்ன தற்கு மறுநாளாகவேண்டிய கருமமென்றதினால், சிலுவைப் பூசையைக் குறித்து யோசிக்கில் இனி உங்களுக்காகக் கொடுக்கப்படும் என் சரீரம் இது என்பாரொழிய இப் போது சிலுவைப் பூசையில் உங்களுக்காகக் கொடுக்கப்ப டுஞ் சரீரமென்பது பொய்யாகக்கொள்ளச் சிலுவை பூசை யைப்பற்றி அந்த வார்த்தையை அவர் சொன்னவர் அல்ல. ஆகையால், சேசுநாதர் சொன்ன வார்த்தையை உரிய அர்த் தத்தோடு கொள்ளும்படிக்கு இரத்தஞ் சிந்தாமல் நற்கரு ணைப் பூசைவகையால் உங்களுக்காகத் தேவ பலியாய்ப் பிதாவுக்கு இப்போது நான் படைத்த என் சரீரம் இதுவே. இதனை உங்களுக்குப் போசனமாக வாங்கி உட்கொள்வீர் களாக என்றாரென்று சொல்லக்கடவோம்.

இப்படி இரசத்தையுந் தந்த முறையால் யோசித்துச் சேசுநாதர் தம்மைச் சீஷர்களுக்குத் தேவத்திரவிய அநு மானமாகக் கொடுக்கும் முன்னே தேவ பூசையாகத் தம் மைப் பிதாவுக்கு மெய்யாகவே கொடுத்தாரென்று சொல் லுவது நியாயமாமே. மீளவுந் தாம் செய்ததை அப்போஸ் தலரும், அவர்கள் வழியாக வரும் மற்றக் குருக்களுஞ் செய்யச் சொல்லி என் நினைவாக இப்படியே நீங்களுஞ் செய்யக்கடவீர்களென்று முன் சொன்ன 19-ம் வசனத் தில் தானே சொன்னதினால் அன்றுதானே தாம் மெய்யா கவே நற்கருணைப் பூசை செய்ததுந் தவிர, மற்றக் குருக்க ளும் அந்தப் பூசையைச் செய்யக் கட்டளையிட்டாரென்று சொல்லக்கடவோம்.

இந்தக் கட்டளையின்படியே அப்போஸ்தலரும் நற்க ருணைப் பூசை செய்துகொண்டு வந்தார்களென்று அறி

வோம். அப்படியே அப்போஸ்தலர் நடபடி ஆகமத்தின் 13-ம் அதிகாரம் 2-ம் வசனத்தில் அர்ச். லூக்கா எழுதினதாவது: அப்போஸ்தலர் ஆண்டவருக்குப் பூசை செய்து, ஒருசந்தி பிடித்துக்கொண்டு வருகையில் நாம் குறித்த உத்தியோகத்துக்குச் சவுலும், பர்னபாவும் மற்றவர்களிற் பிரிப்பீர்களாகவென்று இஸ்பிரீத்து சாந்துவானவர் அவர்களுக்கு அறிவித்தாரென்றார். ஆகிலும் நற்கருணைப் பூசையன்றி திருச்சபையில் வேறு பூசை இல்லையென்று பதிகருஞ் சொல்லுகிறார்கள். ஆகையால் அப்போஸ்தலர் நற்கருணைப் பூசை செய்துகொண்டு வந்தார்களென்று வேத உதாரணங்களால் அறிவோம். தரங்கம்பாடியார் இதில் அப்போஸ்தலர் பூசை செய்தார்களென்று எழுதாமல், ஆண்டவருக்கு ஆராதனை செய்தார்களென்று தமிழாகத் திருப்பினார்கள்.

ஆகிலும் அர்ச். லூக்காவென்பவர் அந்த ஆகமத்தை கிரேக் பாஷையில் எழுதி இதில் லித்துர்செயோ வென்னுஞ் சொல்லை வைத்தார். அந்தச் சொல்லோ வெனில், தேவகாரியங்களில் வைக்கப்படும்போது மெய்யான பூசையைச் செய்வதென்கிற அர்த்தத்தைக்கொண்டது நிச்சயந் தானே. அப்படியே தனக்குக் கேடாக லுத்தேரோடு மிகவுஞ் சிநேகமாயிருந்த எராஸ்மன் கிரேக் பாஷையைக் கசடறக் கற்றவனுகையால் இதில்தான் அந்தச் சொல்லை லத்தீன் சொல்லாகத் திருப்பிப் பூசை செய்தார்களென்று வைத்தான். இப்படியே நாம் செய்யும் நற்கருணைப் பூசை கிரேக் பாஷையிலே லித்துர்சியாவென்று சொல்லப்பட்டதாமே. ஆகையால், அர்ச். லூக்கா அங்கே சொன்ன ஆராதனை மெய்யான பூசையால் வந்த ஆராதனையென்று சொல்லக்கடவோம்.

111.– மீளவும் மெய்யான பூசை நாலு வகையாக வகுக்கப்படும். அவை வணக்கப் பூசை, தோத்திரப் பூசை, பாவப் பொறுத்தற் பூசை, வரங்கள் பெறுதற் பூசை என்று இவை நான்குமாம். ஆண்டவர் மகிமையைக் காட்டச் செய்யப்படும் வணக்கப் பூசைவகையும், அவர் நமக்குத் தந்

தையை நன்றியறிந்து அவருக்குத் தோத்திரமாகச் செய்யப் படும் பூசைவகையும் இவ்விரண்டு மாத்திரம் நற்கருணைப் பூசைக்குச் செல்லுமென்று பதிதர் ஒத்துக்கொள்ளுகிறார் கள். அதேதெனில், அவ்விரு குணங்கள் மெய்யான பூசை ஆகாததற்குஞ் செல்லுமென்றதினால், நற்கருணை மெய்யான பூசை என்னுமலும், அவ்விருவகைப் பூசை ஆகக்கொள்ளச் சம்மதித்தார்கள். அப்படியே செபதப முதலிய தருமங்க ளும், ஆண்டவருக்கு வணக்கமும், தோத்திரமுமாகையில் அவைகள் முதலாய் அவ்விருவகையால் பூசை என்று ஒரு விதமாய்ச் சொல்லப்படுமே.

உரோமான் திருச்சபையோவெனில், நற்கருணைப் பூசை உத்தம மெய்யான பூசையாகக்கொள்ள அந்நாலு குணங்க ளும் அதற்குச் செல்லுமென்று படிப்பிக்குஞ்சத்தியமாமே. அப்படியே பதிதருஞ் சொன்ன இருவகைப் பூசை அல்லா மல் நற்கருணை பாவப்பொறுத்தல் பூசையென்று லுத்தே ராணிகளுஞ் சொல்லக்கடவார்கள். அதெப்படியென்றால், அவர்கள் தானே அர்ச். மத்தேயு சுவிசேஷத்தின் 26-ம் அதிகாரம் 28-ம் வசனத்தில் சொன்னபடி நற்கருணை பாவப் பொறுத்தலாக ஸ்நாபிக்கப்பட்டதென்று நம்மோடு அவர் களும் அப்பொலொசியவென்னும் புஸ்தகத்தின் 11-ம் பிரி வில் நிச்சயமாகச் சொன்னார்கள். ஆகிலுந் தேவத்திரவிய அநுமானவகையால் நற்கருணைப் பாவப்பொறுத்தலாக ஸ்தாபிக்கப்பட்டதென்று சொல்லக்கூடாதே. ஆகையால், மெய்யான பூசைவகையால் பாவங்களைப் பொறுக்க ஸ்தா பிக்கப்பட்டதாகச் சொல்லக்கடவோம்.

இதில் நற்கருணை தேவத்திரவிய அநுமானவகையால் பாவங்களைப் பொறுக்க ஸ்தாபிக்கப்பட்டதல்ல என்பதற்கு நியாயம் ஏதெனில், அதற்கு ஸ்தாபிக்கப்பட்டிருந்தால் பாவமுடையவன் முதலாய் அதனை அறிந்து, தனக்கு அது பொறுக்கப்படும்படிக்கு வேறு வழியால் அந்தப் பாவத் தைத் தீர்த்துச் சுத்தனாகும் முன்னே நற்கருணை வாங்கலா மல்லோ? அப்படியே ஞானஸ்நானம், பச்சாத்தாபம் பாவங்

களைப் பொறுக்க ஸ்தாபிக்கப்பட்ட தேவத்திரவிய அநுமானங்களாகையால், பாவமுடையவர்கள் தாமே அவைகளைப் பெற்றுச் சுத்தராவார்களே. ஆகிலும் அர்ச். சின்னப்பர் கொரிந்தியருக்கு எழுதின முதல் நிருபத்தின் 11-ம் அதிகாரம் 27-ம் வசனந் துவக்கிச் சொன்னபடிப் பாவத்தோடு நற்கருணை வாங்கலாகாதென்று முன் தான் அறிந்த பாவங்களைத் தீர்த்துச் சுத்தனாகிய பின்பு வாங்கவேண்டும் அல்லோ?

ஆகையால் நற்கருணை தேவத்திரவிய அநுமானமாகப் பாவங்களைப் பொறுக்க ஸ்தாபிக்கப்பட்டதல்ல. ஆகையால், பதிதருஞ் சொன்னாப்போல சேசுநாதர் அர்ச். மத்தேயு சுவிசேஷத்தில் திருவுளம் பற்றினபடியே நற்கருணைப் பாவப் பொறுத்தலாக ஸ்தாபிக்கப் பட்டதினால் அதற்குத் தேவ பூசையாக ஸ்தாபிக்கப்பட்டதென்று சொல்லக்கடவோம். அப்படியே அப்போஸ்தலராகிய அர்ச். யாகப்பர் நற்கருணைப் பூசை செய்யும் மாதிரியைத் தந்த இடத்தில் ஆண்டவரை நோக்கிச் சொன்னதாவது: இரத்தஞ் சிந்தாமல் செய்யப்படும் இந்தப் பூசையை எங்கள் பாவங்களைத் தீர்க்கவும், மற்ற அக்கியானத்தைப் போக்கவும் உமக்கு ஒப்புக்கொடுக்கிறோம் என்றார்.

அப்படியே அப்போஸ்தலர் காலத்திருந்த அர்ச். சாங்தப்பரும், பிறகு தொடர்ந்து வந்த அகுஸ்தினும், ஒரிசேனும், அத்தனாசியும், பசிலியும், மற்ற வேதபாரகர் எல்லாரும் எழுதிவைத்தார்கள். ஆகிலும் பச்சாத்தாபத்தாற் பாவப் பொறுத்தலாகுந் தன்மையோடு நற்கருணைப் பூசையால் ஆகுமென்று நினைக்கவேண்டாம். பச்சாத்தாபம் பாவப்பொறுத்தலுக்கு மெய்யான எத்தன காரணமென்று முன் சொன்னோமல்லோ? நற்கருணைப் பூசையோவெனில், அதற்குத்தானே காரணமாகாமல் அதில் படைக்கப்பட்ட தேவ பலியின் மாட்சிமையைப்பற்றித் தப்பாமல் ஆண்டவர் கோபமாறவும், பாவிகள் மேல் அவர் மனமிரங்கவும், அவர்கள் மனந்திரும்பி மனஸ்தாபப்பட்டுப் பாவப்பொறுத்

தனுக்கு வேண்டியதெல்லாஞ் செய்யத் துணிவதற்கு ஆண்டவர் அவர்களுக்கு உதவிசெய்யவும், நற்கருணைப் பூசையால் வருந் தப்பாத பலன் என்றமையால் அந்தப் பூசையால் பாவப்பொறுத்தலாகுமென்று சொல்லக்கடவோம்.

அப்படியே நற்கருணைப் பூசை பாவங்களைத் தீர்ப்பதற்கு உதவினுப்போல பகை, படை, பஞ்சம் முதலிய துயர்களைத் தீர்க்கவும், இஷ்டப்பிரசாத முதலிய ஞான நன்மைகளை அடையவும், ஆரோக்கியம் முதலிய லௌகீக நன்மைகளைப் பெறவும், தப்பாமல் வல்லதென்றதாகையால் வரங்கள் பெறுதல் பூசைவகையென்று முன் சொன்ன வேதபாரகரெல்லாரும் மறுப்பார் இல்லாமல் எழுதி வைத்தார்களே. ஆகையால் அந்நான்கு வகைப் பூசையாக நற்கருணைப் பூசை ஒன்றே ஸ்தாபிக்கப்பட்டதென்பது நிச்சயந் தானே.

112.— இதற்குப் பதிதர் சொல்லுந் தன்மையாவது: பாவப் பொறுத்தல் அடையவும், வேண்டிய வரங்களைப் பெறவும், நற்கருணைப் பூசை உண்டென்று ஸ்தாபித்தால் சிலுவையில் அறையுண்டு பாடுபட்டு இறந்த சேசுநாதர் நமக்கு அடைந்த பாவப் பொறுத்தலும், அளவில்லாத பலன்களும் போதாதென்று சொல்லவுங் கடவோம். இது சொல்லக்கூடாமையால் அதுவுஞ் சொல்வது நியாயமல்ல என்பார்கள். அப்படியே அர்ச். சின்னப்பர் எபிறேயருக்கு எழுதிச் சிலுவைப் பூசைக்குப் பிறகு நமது பாவங்களைப் பொறுக்கவும், நமக்குப் பலன்களை அளிக்கவும், வேறு பூசை தேவையில்லையென்று 9-ம் அதிகாரத்திலும், 10-ம் அதிகாரத்திலும், பல இடத்தில் சொன்னாலலோ?

ஆகையால் சிலுவைப் பூசைக்குக் குறை சொல்லாமல் ஸ்தாபிக்கப்படாத நற்கருணைப் பூசை அபத்தமாய் மனிதர் உண்டுபண்ணின அக்கிரம முறையென்று வெறுக்கக்கடவோமென்பார்கள். ஆகிலும் பாவப் பொறுத்தலாகவும், சகல வரங்கள் பெறுதலாகவும், சேசுநாதர் பாடுபட்டு அடைந்த அளவில்லாத பலன்கள் போதாதென்றால் அபத்

தந்தானே. உரோமன் திருச்சபை இந்த அபத்தத்தைச் சொல்லாமல் படிப்பிக்குஞ் சத்தியமாவது: சேசுநாதர் சிலுவைப் பூசையால் அடைந்த பலன்கள் நமக்கெல்லாருக்குஞ் சகல பாவங்கள் பொறுக்கப்படவும், சகல வரங்கள் கொடுக்கப்படவும் போதுமென்றும், வேண்டினதின்மேலும் அளவில்லாத பலன்களென்று நிச்சயமாகப் படிப்பிக்குஞ் சத்தியமாமே.

ஆகையால் அர்ச். சின்னப்பர் சொன்னபடியே சேசுநாதரைத் தவிர வேறொரு கிறீஸ்து நமக்காகப் பாடுபட வரத் தேவையில்லை; இந்தக் கிறீஸ்துதானே மீளவும் இங்கே வந்து திரும்பப் பாடுபடவுந் தேவையில்லை. ஆகிலும் இது மெய்யென்றாலும், அநுதினம் பலர் பாவப்பொறுத்தல் அடையாமல் நரகத்தில் விழுவது நிச்சயமாகக்கொள்ளச் சேசுநாதர் அடைந்த பலன்கள் அளவில்லாதாயினும், அவர் கட்டளையிட்ட வழியால் அந்தப் பலன்கள் நமக்கு வந்தாலொழிய அவைகளாலே நமக்குப் பிரயோசனம் இல்லையென்று சொல்லவுங் கடவோம். அதெப்படியென்றால், பெருங்கடலொத்த ஆழமும், கரையுங் காணாமல் அகன்ற பூந்தடாகத்தில் பாய்ந்த தீம்புனற் குளிர்ந்த தண்ணிர் நிறைந்திருக்க, கரையில் ஒழுங்குபட வைத்திருந்த பல பெரும் மடைகளைத் திறவாமல், அதின் அருகிலுள்ள வயலில் தண்ணீர் பாயவும், அதில் இட்ட பயிர் விளையவுமாட்டாதே.

ஆகையால் வயலிலுள்ள செந்நெல் விளையத் திறந்த மடைகள் வழியால் வயலில் தண்ணீர் பாயவேண்டுமென்றால், குளத்திலுள்ள தண்ணீர் போதாதென்று சொன்னதாகக் கொள்வார் உண்டோ? அத்தன்மையே நம்முடைய கர்த்தர் பாடுபட்டு இரத்தமெல்லாஞ் சிந்தி, சிலுவையில் அடைந்த பலன்கள் கரைகாணாத கருணைக் கடலாய் எல்லாப் பாவங்களைத் தீர்க்க, எல்லா நன்மைகளை விளைவிக்க அளவும் பிரமாணமுமின்றி வல்லதுதானே. ஆகிலும் அவர் கூட்டின பலன்களை நமக்குச் செல்லக் கொண்டுவிடுந் திவ்

விய மடைகளாக ஏழு தேவத்திரவிய அநுமானங்கள் அல்லாமல் நற்கருணைப் பூசை முதலானவைகளை ஸ்தாபித்தா ரென்றதினால் நாம் அந்த மடைகளைத் திறந்தாற்போலத் தேவத்திரவிய அநுமானங்களையும், பூசையையுங் கொண்டு பாவப்பொறுத்தலும் நன்மைப் பெறுதலும் அடைய வேண்டுமென்றால், சேசுநாதர் சிலுவையில் நமக்கு அடைந்த பலன்கள் போதாதென்று நாம் சொன்னதாக நினைப்பார் உண்டோ?

ஆகையால் நாம் சிலுவைப் பூசைக்குக் குறைவாக ஒன்றுஞ் சொல்லாமல் அந்தப் பூசைக்குத் தோத்திரமாக நாம் சொன்ன நியாயத்தைப் பார்க்கில், சிலுவைப் பூசை ஒன்று அல்லாமல் வேதத்தில் வேறொரு பூசை முன் இருந்ததுமில்லை, இனி இருக்கப்போகிறதும் இல்லையென்று சொல்லலாம். அதெப்படியென்றால், பழைய வேதத்தின் பூசைகளும், நாம் செய்யுந் திவ்விய பூசையும் மெய்யான பூசைகளாயினுஞ் சிலுவைப் பூசைக்கு வேறுபடாமல் ஒரு முகத்தைக் காட்டும் பல கண்ணாடிகளாக நின்று, சிலுவைப் பூசையைக் காட்டின நினைவு அடையாளங்களென்று சொல்லக்கடவோம். இதுவுந்தவிர மற்றப் பூசைகளால் வந்த நன்மைகளும் நாம் செய்யுந் தேவ பூசையால் வரும் நன்மைகளும் சேசுநாதர் சிலுவைப் பூசையால் அடைந்த நன்மைகளொழிய வேறல்ல. ஆகையால் இப்போது சொன்னபடிச் சிலுவைப் பூசை நிறைந்த பூந்தடாகமாக நிற்க, அதில் கூடின பலன்களாகிய தண்ணீரைச் செந்நெல் விளையவிடும் பல மடைகளாக முன்னிருந்த பலவகைப் பூசைகளும் நாம் செய்யும் பூசையுங் கொள்ளக்கடவோம்.

ஆகையால் சிலுவைப் பூசை ஒன்றே எல்லாப் பூசைகளால் காட்டப்பட்ட பூசையென்றும், எல்லாப் பூசைகளில் நமக்குப் பலன்களைத் தருங் காரணப் பூசையென்றுஞ் சொல்வது நியாயமாமே. இருகண் மூடின பதிதரோ வெனில், இந்த நியாயங்களைக் கண்டுபிடிக்கமாட்டாதவர்களைப் போல நம் மெல்லாரையுங் குருடரென்றெண்ணிச்

சேசுநாதர் சிலுவைப் பூசையால் அடைந்த அளவில்லாத பலன்கள் நம்மைக் கரை ஏற்றப் போதாதென்று நாம் படிப்பிக்கிறதாகச் சொல்லுவார்கள். ஆகிலும் உரோமான் திருச்சபைமேல் விரோதமாகி, ஏழைச்சனங்களை ஏய்க்கப் பதிதர் தங்கள் வாயால் இந்த அபத்தத்தைச் சொல்லுவதொழிய நாம் அந்தத் தப்பறையைச் சொல்லாமல் படிப்பிக்குஞ் சத்தியத்தைத் தங்கள் மனமே அறியுமென்பதற்குச் சந்தேகம் இல்லை.

113.— இந்த நியாயங்களை நன்றாய்க் கண்டறிந்தல்லோ லுத்தேர் துவக்கத்தில் நற்கருணை பூசையை விலக்கலாகாதென்றிருந்தான். அவன் தான் தனிப் பூசை விலக்கும் புஸ்தகத்தில் எழுதினதாவது: அப்போஸ்தலர் துவக்கி இந்நாள்வரைக்கும் இருந்த வேதபாரகரெல்லாருஞ் சந்தேகத்துக்கு இடங்கொடாமல் நற்கருணைப் பூசை உண்டென்று தெளிவாய்ச் சொல்லி, இதுவே திருச்சபையோடு துவக்கின முறையாகக்கொள்ள நான் அதை மறுக்கவோ? நான் ஒருவன் கண்ணுடையவனாகி, மற்றவரெல்லாருங் குருடர்தானேயென்று அஞ்சிக் கூசி நிற்க, தன் சிநேகிதனாகிய பசாசு எப்போதும்போல மனுஷ உருபமாய் வந்து தோன்றிப், பூசையை விலக்க வேண்டுமென்று சொல்லத் தான் எழுதினபடிப் பசாசு வார்த்தையை ஒருக்காலும் மறுக்கமாட்டாத லுத்தேர் நற்கருணைப் பூசையின் நிச்சயத்தை அறிந்தவனாகக்கொள்ள இத்தருணத்தில் பசாசு சொன்னதற்குச் சம்மதியாமல், நெடுநேரங் கொடியதோர் தர்க்கஞ் செய்ததபின்பு, கடைசியில் பசாசு சொன்ன நியாயங்களுக்கு இணங்கானாயினும், பசாசு கூப்பிட்ட இடிமுழக்கத்தாலும், காட்டின பயங்கர உருவத்தாலும், தன்னை வெருட்டி மயக்குவித்ததினால் கட்டாயமாய் இணங்கி, நற்கருணைப் பூசையை விலக்கத் துணிந்தேனென்று தானே அந்த புஸ்தகத்தில் எழுதி வைத்தான்.

அப்படியே பிராண சிநேகிதனாகிய பசாசின் வார்த்தையை மறுக்கமாட்டாமல் கேட்ட லுத்தேர் தனக்குத்

தானே கண்ணைப் பிடுங்கினுற்போல் தான் கண்டறிந்த நியாயங்களை மறுக்கவும், தன் ஆத்துமத்தைக் கெடுக்கவுங் கூசாமற்போனுன். இதனுல் 1542-ம் ஆண்டில் லுத்தேர் உண்டாக்கின ஒரு புது மந்திரத்தில் தனக்குத் தோத்திரமாக ஆண்டவரைப் பார்த்துச் சொன்னதாவது: சுவாமீ, நான் ஒருக்காலும் பசாசுக்கு விரோதம் செய்யவுமில்லை, அதற்கு மனம் நோகச் செய்யவும் இல்லையென்றுன். இது வுந்தவிர எப்போதும் மனிதரைக் கெடுத்துப் பசாசுக்குச் சந்தோஷம் விளைவிக்கப் பிரயாசைப்பட்டேனென்று லுத்தேர் கூட்டிச் சொன்னுலும் பொய்யுமல்லாமல், அவனுக்கு ஏற்ற தோத்திரமுமாகுமல்லோ? இதெல்லாம் இதில் வாசிக்கும்போது லுத்தேர் தானே இதனை எழுதுவானேவென்று சந்தேகப் படுவார் உண்டாமே.

ஆகிலும் இதிலேயும், இந்தப் புஸ்தகத்தின் மற்ற இடங்களிலேயும் லுத்தேர் சொன்னதாக நாம் வைத்ததெல்லாம் உரோமான் திருச்சபையார் எழுதின கிரந்தங்களிலே மாத்திரம் வாசிக்கத்தகும் விசேஷங்களல்ல. லுத்தேர் வாசமாயிருந்து தன் சமயத்தைப் போதிக்கத் தெரிந்த வித்தேம்பேற்க் நகரிடத்திலே லுத்தேரானிகள் தானே லுத்தேர் எழுதினதெல்லாங் கூட்டி அச்சுப் பதித்த புஸ்தகங்களிலேதானே நாம் சொன்னதெல்லாங் காணப்படுவது நிச்சயந்தானே. சொன்னபடியே தன் குருவாகிய பசாசு சொன்ன கொடிய உபதேசத்தால் மயங்கின லுத்தேர் நற்கருணைப் பூசையை விலக்கத் துணிந்தாலும், இன்னந் தன் மனதில் ஒளிபட விளங்கித் தோன்றின நியாயங்களை முழுதும் விலக்கமாட்டாமலும், பசாசு சொன்னதை மறுக்கமாட்டாமலும், நற்கருணைப் பூசையை விலக்கினுலும், விலக்கினதென்று காண்பியாமல் ஏழைச் சனங்களை ஏய்க்க லுத்தேரும், அவனைச் சேர்ந்த பதிதருந் துவக்கத்திலே பூசை என்னும் பெயரும், அதற்குக் குறித்த வஸ்திர வகையும், புறத்துச் செய்யக் கற்பித்த ஞானச் சடங்குகள் முறையும், எவருங் கேட்கச் சொல்லப்பட்ட மந்திர ஒழுங்கும் இவை எல்லாவற்றையும் உரோ

மான் திருச்சபை செய்துகொண்டு வந்த தன்மையால் விடாமல் அவர்களுஞ் செய்துகொண்டு வந்தார்கள்.

அப்படியே தாங்கள் நற்கருணைப் பூசையை மறுத்து விட்டார்களென்று தங்கள் மேலே அநியாயமாய் நாம் சொன்னதாக முறைப்பட்டு, அப்போலோசியவென்னும் புஸ்தகத்தின் 12-ம் பிரிவில் எழுதி வைத்தார்கள். ஆகிலுந் திருச்சபை நற்கருணை உண்டாக்கு முன்னும், உண்டாக்கிய பின்னும் அந்தப் பூசையை உயிர் வாழும் எல்லா மனிதருக்கும், உத்தரிக்கிற ஸ்தலத்து ஆத்துமாக்களுக்கும் நன்மையாகப் பிதாவுக்குப் படைத்து ஒப்பிக்கும்படிக்குக் குருக்கள் சொல்லக் கட்டளையிட்ட மந்திரங்கள் எல்லாவற்றையும் அவர்கள் தள்ளி, படைத்தலென்றும், ஒப்பிக்தலென்றும் இந்தச் சொற்களை மிகவும் வெறுத்துக் கூட அதிலே நற்கருணை வாங்கினவர்களுக்கன்றி பூசை ஒருவருக்கும் உதவாதென்று சொன்னார்கள்.

இதோ சேசுநாதரின் மந்தை ஆடுகளை ஏய்த்து விழுங்க ஆட்டுத் தோலைப் போர்த்திய ஓநாய் தன் உருவத்தைக் காட்டி இதிலே பூசை என்னும் பெயர் பலனில்லாத வெறும் பெயராக வைத்து, மெய்யாகவே நற்கருணை தேவத்திரவிய அநுமானமாவதொழிய மெய்யான பூசையாவதில்லையென்று தாங்கள் சொன்னது பிரசித்தமாமே. அப்படியே முகத்தில் அப்பந் தோன்றுதபடிக்கு அதனை மறைத்துக் கோலம்பூசின வங்கப் பானையாக லுத்தேரொன்பவன் பொதுப் பூசை நல்லதென்று தனிப் பூசை ஆகாதென்றான். பொதுப் பூசை என்னுஞ் சொல்லால் பொதுவில் எல்லாருக்கும் நன்மையாகச் செய்யப்பட்ட பூசை என்று சொன்னால், லுத்தேர் சொன்னது நியாயந்தானே. குருக்கள் எல்லாரும் பொது மனிதராகவும், பொதுத் திருச்சபைக்கு இடமாகவும், பொதுவில் எல்லாருக்கும் நன்மையாகவும், தனியே பூசை செய்தாலும், எல்லாருங் காணச் செய்தாலும், அநுதினம் பூசை செய்வார்களென்பது உரோமான் திருச்சபை படிப்பிக்குந் தன்மைதானே.

ஆகையால் நாம் செய்யும் பூசை எல்லாம் பொதுப் பூசையொழியத் தனிப் பூசை ஒன்றில்லையே. ஆகிலும் லுத்தேர் நினைத்த அர்த்தம் இதுவல்ல. அவனே பூசை என்னும் பெயரை உரிய அர்த்தத்தோடே கொள்ளாமல், இதிலே பிதாவுக்குத் தேவ பலியாகச் சேசுநாதர் படைக்கப் படுவதில்லையென்று, நற்கருணை வாங்குவதே பூசை என்றான். ஆதலால் மற்றச் சனங்கள் கூட நற்கருணை வாங்கின பூசை பொதுப் பூசை என்றும் பூசை செய்யுங் குருவானவர் மாத்திரம் நற்கருணை வாங்கின பூசை தனிப் பூசை என்றும் தானே இந்த வகைத் தனிப் பூசை ஆகாதென்றான். ஆகையால், நற்கருணைத் தேவத்திரவிய அநுமானமாக வாங்குவதுமாத்திரமே பூசை என்றுனொழிய, வேறே வகைப் பூசை எல்லாம் வெறுத்தானல்லோ? ஆகிலும் மனிதருக்குக் கொடுக்கப்படும் நன்மை மெய்யான பூசை என்று சொல்வார் இல்லை. ஆண்டவருக்குப் பலியைப் படைப்பதே மெய்யான பூசை என்று சொல்ல வேண்டியது.

ஆதலால் மேலிட்ட பொய்க் கோலமாக மனிதரை ஏய்க்க நற்கருணைப் பொதுப் பூசையாக ஸ்தாபித்தாற் போல லுத்தேர் பேசி மெய்யாகவே அது தேவத்திரவிய அநுமானமாவதொழியப் பூசை அல்லவென்று ஸ்தாபிக்க நினைத்தானல்லோ? நாம் படிப்பிக்குந் தன்மையோவெனில், பூசை கண்ட யாவருங் கூட நற்கருணை வாங்கினால் நல்லதென்று அவர்களைத் திருச்சபை விலக்கவும் இல்லை. ஆனால் வேறொருவரும் வாங்காதாயினுந் தேவநற்கருணை உண்டாகிறபோது யாவருக்கும் பொதுப் பலனாகத் தேவ பலியாகிய சேசுநாதர் பிதாவுக்குப் படைக்கப்படுவார் என்றதினால் அதுவே மெய்யான பூசை என்று சொல்லக்கடவோம். லுத்தேரோவெனில், இப்படிச் சிறிதுநாள் மறைவாகப் பூசையை விலக்கின பின்பு, தன் குருவாகிய பசாசு தனக்குப் படிப்பித்த உபதேசத்தை மறைவில்லாமல் சொல்லத் துணிந்து நற்கருணை கர்த்தர் கட்டளையிட்ட இராப்போ

சனமாவதொழியத் தேவ பூசை அல்லவென்று தான் வெளியாகச் சொல்லத் துவக்கினான்.

அப்படி லுத்தேர் சொல்லிக்கொண்டு படிப்பித்தாலும், இன்னம் உரோமான் திருச்சபை முறையின்படியே தேவநற்கருணை உண்டாயின உடனே குருக்கள் அதனை எடுத்துக் காட்டவும், அடித்த மணியின் ஓசையோடு அனைவருந் தன் நெஞ்சடித்து, காட்டின நற்கருணையை வணங்கவுஞ் செய்தான். ஆகிலும் இது தேவ பலியைப் பிதாவுக்கு ஒப்புக்கொடுக்குஞ் சடங்காகி, மெய்யான பூசைக்கேற்றதொழிய இராப்போசனத்துக்குரிய தல்லவென்றுகையில், அதனை வைக்கக் காரணம் என்னவென்று லுத்தேர் சீஷர்கள் அவனைக் கேட்டார்கள். அதற்கு லுத்தேர் தனக்கேற்ற இரண்டு நியாயங்களைச் சொன்னான். அதாவது: நமக்கு இது ஒவ்வாத முறையாமெனினும், என் பகையாளி கார்லோஸ்தாதென்பவன் அந்த முறையை விலக்கினானென்று நான் அவனுக்கு விரோதமாகவும், பசாசு எனக்கு எல்லாவற்றையும் படிப்பித்ததென்று தோன்றுதபடிக்கும் அந்த முறையை நிறுத்தி வைத்திருக்கிறேன் என்றான்.

இப்படி இந்த உத்தம முறையை அக்கிரமமான காரணங்களைப்பற்றி 25 வருஷமாக லுத்தேர் தன் சமயத்திலே வைத்துக்கொண்ட பின்பு, 1543-ம் ஆண்டில் தன் துணை சொன்னபடிக் கேட்க வேத முறையாய் நிறுத்தினதைத் தானே ஆகாதென்று முழுதும் விலக்கினான். இதெல்லாம் லுத்தேர் பிரிய சீஷனும், தோழனுமாகிய மேலந்தோனுடைய மருமகன்தானே எழுதி வைத்தான். ஆகையால் தன் குருவாகிய பசாசின் சிநேகமும், அர்ச். பாப்புமேல் வைத்த பகையும், தன்னை ஆதரித்த துரையின் சலுகையும் இவை மூன்றுந் தன் விசுவாசத்தின் காரணமாகவும், தன் சமயத்தின் மாதிரிகையாகவும் எண்ணி நியாயத்தை ஒன்றும் பாராமல் பிதற்றி லுத்தேரொன்பவன் திருச்சபையில் மெய்யான பூசை ஒன்றில்லையென்று சொல்லக் கூசாமற் போனான்.

அப்போது அப்போஸ்தலரும், மற்ற வேதபாரகருஞ் சந்தேகத்துக்கு இடம்விடாமல் பூசை உண்டென்று தெளிவாய்ச் சொன்னதையும், திருச்சபை துவக்கின நாள் முதற்கொண்டு நற்கருணையைப் பூசையாகப் பிதாவுக்கு ஒப்பித்துக்கொண்டு வந்த முறையையும், அவன் சொன்ன தற்கு எதிராகக் காட்டின இடத்தில் சொல்லும் மறு மொழி யல்லாமல், பபிலோன் அடிமைத்தனமென்னும் புஸ்தகத்தின் முதல் அதிகாரத்தில் மதி கெட்ட பித்தனைப் போல எழுதினதாவது: எதிர்த்துக் காட்டின உதாரணங் களுக்குச் செல்லுமான மறு உத்தரம் இல்லாதாகில், நற் கருணைப் பூசை உண்டென்று ஒத்துக்கொள்ளுவதைப் பார்க்க எல்லா உதாரணங்களும் பொய்யென்று மறுப் பதே நல்லதென்றான்.

மீளவுந் தனிப் பூசை விலக்கும் புஸ்தகத்தில் சொன் னதாவது: பாப்புக்குக் கீழ்ப்படிந்தவர்கள் நமக்கு எதிரா கத் திருச்சபை முறையும், வேதபாரகர் உதாரணங்களுஞ் சொல்லிக் காட்டினால் இதெல்லாம் நமக்குத் தடையுமல்ல. இதிலே மனிதர் செய்ததும், சொன்னதுஞ் சற்றாகிலும் நாம் மதிக்கப்போகிறதில்லை. தீர்க்கதரிசிகள் முதலாய் அவர்களோடே அப்போஸ்தலருஞ் சில தப்பிதஞ் செய்த தறிவோமே. ஆகையால் கிறீஸ்துவின் வார்த்தையாகத் திருச்சபைக்கும், அப்போஸ்தலருக்கும், சம்மனசுகளுக் கும் முதலாய்த் தீர்வை இடுபவர் நாமே என்று லுத்தேர் தேவ தூஷணத்துக்கு அஞ்சாத துணிவோடு உலகங் கூசக் கூசாமல் கக்கிச் சொன்னான். ஆகிலும் இதிலே சேசுநாத ருக்குங் கூடத் தீர்வை தானே இடுவானென்று சொல்லா திருந்தது அதிசயந்தானே. இப்படிச் சத்தியத்தையும், திருச்சபை காட்டின நியாயத்தையும் விட்டுப் பிரிந்தவர் கள் கண் கெட்டு இடறி விழுந்து, உருண்டு எல்லா அக்கிர மத்தின் பாதாளத்தில் அமிழ்ந்திக் கிடப்பார்களல்லோ.

16-ம் அதிகாரம்.

தேவ வாக்கிய விளக்கம்.

114.— இன்றைவரைக்குஞ் சொன்ன வேத சத்தியங் களெல்லாவற்றையும் ஒப்பித்துக் காட்டத் தேவ வாக்கியமே திரு விளக்காகக் கொண்டோமல்லோ. ஆகையால் இப்போது தேவ வாக்கியத்துக்கடுத்த சிலவற்றைச் சொல்லிக் காட்டக்கடவோம். இதிலே பதிதர் சொல்லும் முதல் அபத்தமாவது: எழுதப்பட்ட தேவ வாக்கியமன்றி எழுதப் படாத தேவ வாக்கியம் ஒன்றில்லை யென்றும், தேவ வாக்கியமாக எழுதினதை மாத்திரம் விசுவசிக்கவும், செய்யவுங் கடவோமொழிய எழுதப்படாமல் பரம்பரையாய்த் தேவ வாக்கியமாக வந்த தேவ இரகசியங்களை விசுவசிக்கவும், அப்படி வந்த தேவ கற்பனைகளைச் செலுத்தவும் ஒண்ணாதென்று இந்நாட் பதிதரெல்லாருஞ் சொல்வார்கள். ஆகிலும் இந்த அபத்தத்தைப் பல நியாயங்களால் காட்டி மறுப்பது எளிதே.

அவைகளின் முதலாவது: மோயீசனுக்கு முந்தி எழுதப்பட்ட தேவ வாக்கியம் ஒன்றில்லையென்றும், அவருக்கு முந்தி 2000 வருஷத்திற்கு மேலும், விசுவாசமுள்ள மகாத்துமாக்கள் தேவ கற்பனையின்படி நடந்தார்களென்றும், பதிதருஞ் சொல்லுஞ் சத்தியமல்லோ. ஆகையால் எழுதப் படாமல் வந்த தேவ இரகசியங்களை விசுவசிக்கவுந் தேவ கற்பனைகளைச் செலுத்தவுமொண்ணாதென்று பதிதர் சொன்னது பொய்யாகும்.

2-வது: சேசுநாதர் தாமே அப்போஸ்தலருக்கு உபதேசத்தை எழுதிக் கொடுக்கவுமில்லை, அவர்களை எழுதச் சொல்லிக் கட்டளை இடவுமில்லை. அப்படி உபதேசத்தை எழுதக் கட்டளையிடாமல், வாயினால் எல்லாருக்குஞ் சொல்லக் கட்டளை இட்டாரல்லோ? ஆகையால் அவர் தம் திருச்சபைக்கு அஸ்திவாரமாக எழுதின தேவ வாக்கியத்தை

ஸ்தாபியாமல் எழுதாத தேவ வாக்கியமே ஸ்தாபித்தார். அப்படியே அப்போஸ்தலர் உடனே எங்கும் உபதேசத்தைச் சொல்லப் போனதொழிய, எழுதப்பட்ட நாலு சுவிசேஷங்களும், நிருபங்கள் மற்ற ஆகமங்களுந் திருச்சபை துவக்கின நெடுநாளைக்குப் பிறகு மாத்திரம் எழுதப்பட்டதென்று அறிவோம். இதெல்லாம் எழுதப்படும் முன்னே பரம்பின திருச்சபை சேசுநாதர் புதிதாய்ப் படிப்பித்த தேவ இரகசியங்களையும், இட்ட விசேஷ கற்பனைகளையும் எழுதாத தேவ வாக்கியமாகிய அப்போஸ்தலர் சொன்ன உபதேசத்தாலே மாத்திரம் அறிந்து எழுதாமல் படிப்பித்ததை விசுவசியாதிருந்ததுமில்லை; எழுதாமல் கற்பித்ததைச் செலுத்தாதிருந்ததும் இல்லை.

3-வது: தேவ வாக்கியமாக எழுதப்பட்ட புஸ்தகங்கள் உண்டென்றும் நாம் அறியும்படிக்கு வழி என்ன? அந்தப் புஸ்தகங்களில் இது தேவ வாக்கியமென்று எழுதியிருந்தாலும், இந்த வசனந்தானே தேவ வாக்கியமென்று முந்தி அறிந்தாலொழிய அதனைக் கொண்டு புஸ்தகமெல்லாந் தேவ வாக்கியமென்று கொள்ளக் கூடாதல்லோ. அப்படியே மகமது எழுதின அல்கொரானிலே தானே இது தேவ வாக்கியமென்று பல இடத்தில் எழுதியிருக்கக் கண்டாலும் அதை தேவ வாக்கியப் புஸ்தகமாகக் கொள்ளமாட்டோமே. மீளவுந் தேவ வாக்கியமாக எழுதப்பட்ட புஸ்தகங்கள் உண்டென்று அறிந்தாலும், அவைகள் இன்ன புஸ்தகங்களென்று நாம் அறியும்படிக்கு வழி என்ன? அர்ச். தோமையார் சுவிசேஷமென்றும், அர்ச். அந்திரேய சுவிசேஷமென்றுஞ் சிலர் கையிலே வழங்கினது அறிவோமல்லோ.

அப்படியாகிலும், இரண்டு அப்போஸ்தலர் பெயர் கொண்டிருந்த இந்த இரண்டு சுவிசேஷங்களைப் பொய் யென்று மறுத்து, அப்போஸ்தலராய் இராத அர்ச். லூக்கா சுவிசேஷமும், அர்ச. மாற்குச் சுவிசேஷமுந் தேவ வாக்கியமாக நாமும் பதிதரும் ஒத்துக்கொண்டோமே. அவைகளைத் தள்ளி இவைகளைக் கைக்கொள்ள நியாயம்

என்ன? இதுவுந்தவிரத் தேவ வாக்கியமாக இன்னார் எழுதின புஸ்தகம் இன்னதென்று அறிந்தாலும், எங்கள் கையில் உள்ள புஸ்தகம் அவர் எழுதினது தானோ அல்லவோ வென்றும், அதிலே வேறொருவரால் பொய் கலந்தது உண்டோ இல்லையோவென்றும் நாம் அறியும்படிக்கு வழி என்ன? இவை எல்லாவற்றையும் நிச்சயமாய் அறியேனுகையால், எழுதப்பட்ட தேவ வாக்கியம் இன்னதென்று நன்றாய் அறியவும், அதனை விசுவாசமாகக் கொள்ளவுங் கூடாதல்லோ. இதற்கு நிச்சய மாகும்படிக்குக் கலப்பில்லாத வேதாகமங்கள் இன்னதென்று ஆண்டவர் தாமே திருவுளம்பற்றிக் காட்ட வேண்டும்.

ஆகிலும் ஆண்டவர்தாமே ஒவ்வொருததனுக்கும் அறிவிப்பாரென்று சொல்லவுங் கூடாதாகையால் எழுதப்படாமல் பரம்பரமாய் வழங்கின தேவ வாக்கியமே எழுதப்பட்ட தேவ வாக்கியம் இன்னதென்று காட்ட உண்டென்று சொல்லக்கடவோம். இந்த நியாயத்தை மறுக்கமாட்டாமல் பிரதான லுத்தேரானிகளாகிய பிறெஞ்சியும், கெம்நீசியும் எழுதின வேதாகமங்கள் இன்னதென்று அறியும்படிக்கு மாத்திரம் எழுதாமல், பரம்பரமாய்த் திருச்சபையில் வழங்கின தேவ வாக்கியம் உண்டென்று சொல்லவும், அதனை அநுசரிக்கவும் வேண்டியதுதான் என்றார்கள். இதிப்படியாகக்கொள்ள, எழுதப்பட்ட தேவ வாக்கியமொழிய அநுசரிக்கத்தகுந் தேவ வாக்கியம் இல்லையென்று பதிதர் சொன்னது பொய்யாமே. ஆகையால் எழுதப்படாமல் சேசுநாதரும், அப்போஸ்தலரும் படிப்பித்ததாகத் தலைமுறை மாறாமல் திருச்சபையில் வழங்கின தேவ வாக்கியமும் உட்கொள்ளக் கடவோமென்று பதிதருஞ் சொல்லக்கடவார்கள்.

115: —4-வது: இயல் வேதம், வரி வேதம், அருள் வேதமென்று இம்மூவகையாய் இந்நாள் வரைக்கும் வழங்குகிற சத்தியவேதத்தில் எங்கும் இரத்தத்தையும் இரத்தஞ் சிந்தாமல் கொன்ற பொருளையும் உண்பது பாவமென்று

விலக்கினதல்லோ? அப்படியாகிலும் அதனை விலக்கின கற்பனை இப்போது மறுக்கப்பட்டதென்பதற்கு எழுதின தேவ வாக்கியம் இல்லாதாயினும், பதிதர் முதலாய் இப்போது அது பாவம் அல்லவென்று அதை உண்ணலாம் என்பார்களல்லோ? மீளவுஞ் சனிக்கிழமையை ஆசரிக்க மூன்றுங் கற்பனையாக எழுதப்பட்டதல்லோ? அப்படியாகிலும் பதிதர் முதலாய்ச் சனிக்கிழமையை ஆசரியாமல் ஆதிவாரங் கொண்டாடுகிறார்கள். இப்படி நாட்களை மாற்று வதற்கு உத்தாரம் வேதத்தில் எழுதப்பட்டது எங்கே? பின்னையும் நம்மோடே பதிதரும் அநுசரித்துச் சொல்லும் விசுவாச மந்திரம் வேதத்தில் எழுதினது எங்கே?

இப்படியே குழந்தைகளுக்கு முதலாய் ஞானஸ்நானங் கொடுக்கவேண்டுமென்றும் எவரும் ஞானஸ்நானங் கொடுக்கலாமென்றும், பெண்பிள்ளைகளுக்குந் தேவநற் கருணைக் கொடுக்க வேண்டுமென்றும் இவை எல்லாம் வேதத்தில் எழுதப்பட்டது எங்கே? எங்கும் எழுதாதிருக்க பதிதரும் இவை எல்லாவற்றையும் அநுசரிப்பானேன்? இவை எல்லாஞ் செய்ய வேண்டியதென்று பதிதருஞ் சொல்லும்போது இவை எல்லாம் ஆண்டவர் படிப்பித்ததும், கற்பித்ததுமாக வேண்டுமல்லோ. எழுதின தேவ வாக்கியத்தால் கற்பியாதிருக்கக்கொள்ள அதனைக் கற்பித்த தேவ வாக்கியம் எழுதப்படாமல் பரம்பரமாய்த் தலைமுறை, தலைமுறையாக வழங்கினதென்றும், அப்படிப் பரம்பரமாய் எழுதப்படாமல் வழங்கின தேவ வாக்கியத்தை நாம் சொன்னபடி உட்கொண்டு விசுவசிப்பது நியாயமென்றும் பதிதருஞ் சொல்லக் கடவார்கள்.

5-வது: மோயீசன் எழுதின 5-ம் ஆகமத்தின் 32-ம் அதிகாரம் 7-ம் வசனத்தில் ஆண்டவர் வேத காரியங்களில் சந்தேகப்படுகிறவர்கள் எழுதின வேதத்தை ஆராயப் போங்களென்று சொல்லாமல், உன் பிதாவைக் கேட்டால் அவரே மறுமொழி சொல்வார்; உன் பெரியோரைக் கேட்டால் அவர்களே சொல்வார்களென்றார். அர்ச். சின்னப்

பரோவெனில், தெசலோனியருக்கு எழுதின இரண்டாம் நிருபத்தின் 2-ம் அதிகாரம் 14-ம் வசனத்தில் சொன்ன தாவது: தம்பிமாரே, உறுதியாயிருந்து நான் உங்களுக்குச் சொன்ன வார்த்தையினாலும், எழுதின நிருபங்களினாலும் படிப்பித்துத் தந்ததை நிறைவேற்றிக் காப்பீர்களாகவென்றார். இதோ எழுதப்பட்ட தேவ வாக்கியமும், எழுதாத தேவ வாக்கியமும் வேறுபட வைத்து இரண்டையும் வேற்றுமையின்றி அநுசரிக்கச் சொல்லி வேதத்திலே கற்பித்தது நிச்சயமாமே.

6-வது: எழுதப்பட்ட தேவ வாக்கியமன்றித் திருச்சபையில் அநுசரிக்கத்தகும் வேறே எழுதாத தேவ வாக்கியம் இல்லையென்று பதிதர் வேத சத்தியமாகச் சொல்லுகிறார்களல்லோ. ஆகிலும் அவர்கள் சொல்லும் இந்த வசனந்தானே வேதத்தில் எழுதப்பட்டது எங்கே? எங்கும் எழுதப்பட்டாலுந் தாங்கள் அதைத் தேவ வாக்கியமாக விசுவசித்தபோது, தாங்களே எழுதாத தேவ வாக்கியத்தை விசுவசிக்கிறார்களல்லோ. இதன் பிறகு எழுதாத தேவ வாக்கியம் விசுவசிக்கலாகாதென்று தாங்களே சொல்லுவானேன்?

இவை எல்லாம் இப்படியிருக்கத் திருச்சபை பொதுவிலே எல்லாரும் விசுவசிக்கப் படிப்பிக்குஞ் சத்தியங்களும், நிறைவேற்றக் கற்பிக்குந் தருமங்களும் வேதாகமங்களில் எழுதப்பட்ட தல்லவென்றால் சேசுநாதரும், அப்போஸ்தலருஞ் சொன்ன படிப்பினையும், கற்பனையும் அதுவென்று சொல்லக்கடவோம். அதிலே நாள்வட்டத்திலே தப்பிதங்கள் கலந்ததென்று சந்தேகப்படவுந் தேவையில்லை. அதேதெனில், திருச்சபை தேவ இரகசியமாகப் பொய்யையும், தேவ கற்பனையாகப் பாவத்தையும் படிப்பித்தால் திருச்சபை வழுவிக் கெட்டதென்றும், மனிதர்களை யேறுவதற்கு இடம இல்லாமற்போமென்றும் நிச்சயிக்க வேண்டியது.

ஆகிலுஞ் சேசுநாதர் அர்ச். மத்தேயு எழுதின சுவிசேஷத்தின் 16-ம் அதிகாரம் 18-ம் வசனத்தில் திருவுளம்

பற்றினபடி எக்காலத்திலும் பசாசினுல் கெடுக்கப்படாத திருச்சபை வழுவித் தப்பிதங்களைப் படிப்பிக்கப் போகிறதும் இல்லை. அளவில்லாத தயையும், நீதியுமுள்ள சர்வேசுரன் மனிதர் களை ஏறுவதற்கு விக்கினமாக நிற்கும் அந்தத் தப்பிதங்கள் திருச்சபையில் வரவிடவுமில்லை. ஆகையால், தேவ இரகசியமாகவும், தேவ கற்பனையாகவுந் திருச்சபை படிப்பித்ததெல்லாம் வேதத்தில் எழுதப்படாதாயினும், அப்போஸ்தலர்கள் துவக்கித் தலைமுறை தலைமுறையாகப் பாரம்பரியமாய்க் கலப்பின்றி வழங்கின தேவ வாக்கியமாக உட்கொள்ளவும், அநுசரிக்கவுங் கடவோமல்லோ.

116: — அப்படியே எழுதப்படாமல் பாரம்பரமாய் வழங்கின தேவ வாக்கியங்களை அநுசரிக்கத் தேவையில்லையென்பது வேதத்திலில்லாத வசனமாமே.* இதுவுந்தவிர அவைகளை அநுசரிக்கவேண்டுமென்று முன் சொன்னபடி அர்ச். சின்னப்பர் தெசலோனியருக்கு எழுதின 2–ம் நிருபம் 2–ம் அதிகாரம் 14–ம் வசனத்தில் வேதமாக எழுதினரல்லோ. இப்படியாகியும் பதிதர் சலஞ் சாதித்து எழுதாததை அநுசரிக்கமாட்டாமல், நாம் சொல்லுவதற்கெல்லாம் இது வேதத்தில் எழுதினதாகக் காட்டுங்களென்றும், எழுதாததைச் செய்யோமென்றுஞ் சொல்லுகிறூர்கள். ஆகையால் கள்ளக் குருவாகிய லுத்தேர் சீஷரான பதிதர் இதிலே பரமார்த்த குருவின் சீஷரோ ஆனூர்கள்.

அதெப்படியென்றுல் இந்நாட்டில் வழங்குங் கதையின்படியே ஒரு கண் குருடும், ஒரு கால் நொண்டியும், வாலுமின்றி, காதுமின்றித் தவ உருபமாய் வற்றின ஓர் குதிரையின்மேல் பரமார்த்த குரு வழிப் போகையில், கீழே தொங்கின மரக் கொம்பு பட்டுத் தலைப்பாகை பிறகே விழுந்ததாம். அதனைச் சீஷர்கள் எடுத்தார்களென்று எண்ணிச் சற்று அப்பால் நடந்த பின் அது எங்கேயென்று குரு கேட்டானும். அதற்கு அவர்கள் தலைப்பாகை அங்கே விழுந்து கிடக்குமென்றதற்கு அவன் கோபித்து, விழுந்ததெல்லாம் எடுக்கத் தேவையில்லையோ என்றுன். அதைக்

கேட்ட சீஷர் ஓடிப்போய் விழுந்த பாகையை எடுத்துக் கொண்டு வருகையில், அன்று இராத்திரி பசும் பயிரில் மேய்ந்த குதிரை கழிந்து கிடந்த லத்தியையுந் தலைப்பாகை யில் வந்தி எடுத்துக் குருவின் கையில் வைத்தார்கள். அதற்கு அவன் மிகவுஞ் சினந்ததற்கு, விழுந்ததெல்லாம் எடுக்கக் கற்பித்ததல்லோ என்றார்கள். அப்போது அவன் எடுக்கத்தகுந்ததும், எடுக்கத் தகாததும் உண்டென்றமை யால் எடுக்கத் தகுந்ததை மாத்திரம் வேறுபட எழுதச் சொன்னார்கள். அவனும் எழுதினான்.

அப்புறம் போகையில், வழுக்கு நிலத்தில் தளர்ந்த நடையோடு நொண்டிக் குதிரை தவறி விழுந்தது. அரு கிலிருந்த தாழ்ந்த குழியில் பரமார்த்த குருவுந் தலைகீழ், கால் மேலாக விழுந்து, கோவென்றலறி என்னை எடுக்க ஓடிவாருங்களென்று கூப்பிட, சீஷர்கள் வந்து எழுதித் தந்த ஓலையை எடுத்து ஒருவன் வாசிக்க, தலைப்பாகை விழுந்தால் எடுக்கவும், சோமன் வேஷ்டி விழுந்தால் எடுக் கவும், சட்டையும் உள்ளுடையும் விழுந்தால் எடுக்கவு மென்று அவன் வாசித்தபடி ஒன்றொன்றாய் எல்லாவற்றை யும் எடுத்து வைக்க, நிருவாணமாய்க் கிடந்த குரு தன்னை யும் எடுக்கச் சொல்லி எத்தனை சினந்தாலும், உம்மை எடுக் கச் சொல்லி எழுதினது எங்கே காட்டுமென்றும், எழுதிய படிச் செய்வோமொழிய எழுதாததை ஒருக்காலுஞ் செய் யச் சம்மதியோம் என்றுஞ் சீஷர்கள் சாதித்ததினால் தப் பும் வழி வேறொன்றின்றி, அந்தக் குரு ஓலையும், எழுத்தா ணியும் வாங்கிக்கொண்டு, கிடந்த இடத்திலே நானும் விழுந் தால் எடுக்கக்கடவீர்களென்று எழுதினான். எழுதினதைச் சீஷர்கள் கண்ட பின்னர் குருவையும் எடுத்துக்கொண் டார்கள். இந்தக் கதை பதிதரிடத்தில் மெய்யாகவே நடக் குந் தன்மையல்லோ.

117.— இதுவுந்தவிர எழுதப்பட்ட வேதாகமங்களை அவனவன் தன் மனதின்படியே மறு பாஷையாகத் திருப் பவும், திருப்பினதை அவனவன் வாசிக்கவும், அதற்கு

அர்த்தஞ் சொல்லவும் நல்லதென்று பதிதர் அபத்தமாய்ச் சொல்லுகிறார்கள். உரோமான் திருச்சபையோவெனில், வேதாகமங்கள் நாம் விசுவசிக்க வேண்டிய தன்மைக்கும், நடக்க வேண்டிய முறைக்கும் அதுவே மாத்திரையாகக் கொள்ள, மாத்திரை கெட்டால் அதில் ஊன்றின விசுவாசமும், தரும நடக்கையுங் கெடுமென்றதினால், அந்த வேத மாத்திரை கெடாமற்போய்க் கலப்பில்லாதபடிக்குத் தன் உத்தாரமில்லாமல் ஒருவரும் மறு பாஷையில் அதைத் திருப்பவும், வாசிக்கவும், அர்த்தஞ் சொல்லவும் விலக்கின தாமே. அதற்கு நியாயம் ஏதெனில், வேதாகமங்கள் தேவ வாக்கியமாகக்கொள்ள எவருக்கும் உயிர் தரும் அமிர்தமாமே. ஆகிலும் பசுவின் பால் அமிர்தமெனினுஞ் ஜீரண சக்தியற்றவர்களுக்கு அது விஷமல்லோ?

அப்படியே அர்ச். இராயப்பர் 2-ம் நிருபத்தின் 3-ம் அதிகாரம் 16-ம் வசனத்தில் சொன்னபடி வேதாகமங்களில் கண்டுபிடிப்பதற்கரிய பலவும் உண்டாம்; அவைகளைச் சிலர் கண்டுபிடியாமல் தங்களுக்குக் கேடாக மாற்றிக் கெடுக்கிறார்களென்பது நிச்சயந்தானே. மீளவுங் கடலினுள்ள முத்தும், பவளமும் நீர்மேல் மிதவாமையாலே முழுகிக் குளிக்க வேண்டியிருக்கக்கொள்ள அத்தொழில் அறிந்தவரன்றி மற்றவர்களும் அவைகளுக்கு ஆசைப்பட்டு முழுகினால் அந்த மணிகளைக் கைக்கொள்ளாமல் அதிலேதானே அமிழ்ந்திச் சாகிறது நிச்சயம். அப்படியே அமிர்தக் கடலாகிய வேதாகமங்களுக்குள் முழுகி அறியாதவனும் அவைகளுக்கு அர்த்தஞ் சொல்லி அதிலே முத்தும் பவளமுமாக உள்ள தேவ இரகசியங்களை எடுக்கத் துணிந்தால், அவைகளைக் கண்டுபிடியாமல் அபத்தங்களை நினைத்துத் தன் ஆத்துமத்தைத் தானே கெடுப்பானென்பதற்குச் சந்தேகமில்லை.

இதை அறிந்து திருச்சபை தன் பிள்ளைகள் மேலே மிகுந்த தயாபமுள்ள தாயாகி, தானே வேதக் கடலில் முழுகித் தேவ இரகசியங்களாகிய திரு மணிகளை எடுத்து, நமக்குக் கையிலே தந்தாற்போல வேதத்திலே மறைந்தி

ருக்கிற சத்தியங்களை நமக்கு வெளியாகக் காட்டுமல்லோ? பதிதரோவெனில், எல்லாரையும் அந்தக் கடலில் முழுகச் சொல்லி ஜென்ம பாஷையில் வேதாகமங்களைத் திருப்பவும், வாசிக்கவும் செய்யவும் பிரயாசைப்படுகிறார்கள். அதன் பின்பு ஏழைச் சனங்களுக்கு அதனைக் காட்டி, அவர்கள் உள்ள அர்த்தத்தைக் கண்டுபிடியாததினால் அவர்களுக்குத் தாங்களே அபத்தமாய் வெளிப்படுத்தித் தம் பொய்யான சமயங்களை எளிதாய்ப் பரப்பிக்கொண்டு வருகிறார்கள்.

அப்படி லுத்தேர் தானே துவக்கத்திலே தன் மதம் எளிதாய்ப் பரம்பும்படிக்குச் சேசுநாதர் வந்த பின்பு எழுதப்பட்ட வேதாகமங்களெல்லாந் தன் ஜென்ம பாஷையாகத் திருப்பி அதிலே எஞ்சேரென்பவர் ஒப்பித்தாற்போல 1105 பொய்யும், தப்பிதங்களுங் கலந்து, விஷத்தை இனிய பாலோடு ஊட்டினாற்போலச் சிறந்த அலங்காரச் சொல்லால் எழுதி, அச்சிலே பதிக்கச் செய்தான். இந்த வழியால் வெகு சனங்கள் கெட்டுப்போய் தன்னோடே சேர்ந்ததென்று கண்டு சந்தோஷப்பட்டு, மீளவும் ஆங்கிலேய தீவுந் தனக்கு உள்ளாக வேண்டுமென்று பல தந்திரங்களைச் செய்துகொண்டு வருகையில், அதற்கு அந்தத் தீவின் இராசா இடங்கொடாமையால், நெடுநாள் லுத்தேர் எடுத்த தந்திரமெல்லாம் வீணாய்ப் போனதைக் கண்டு நினைத்த உபாயம் ஏதெனில், 1526-ம் ஆண்டிலே கொலோனென்னு மாநகரில் அச்சுப்பதிக்குந் தொழிலாளி ஒருவன் கள்ளுண்ட வெறியிலே இனி இராசா வேண்டாமென்றும் கொஞ்ச நாளிலே ஆங்கிலேய தீவு எங்கும் லுத்தேர் மதம் ஸ்தாபிக்கப்படும் என்றான்.

இதைக் கேட்ட கொக்கிலே என்பவன் அவனைத் தன் வீட்டில் அழைத்துப் பட்சத்தைக் காட்டி, நீ சொன்னதற்கு அர்த்தம் என்னவென்று கேட்கவே, அத்தொழிலாளி சொன்னதாவது: ஆங்கிலேய நாட்டார் இருவர் லுத்தேர் தந்திரத்துக்கு உள்ளாகி, அவன் முன் ஜெர்மானிய பாஷையாகத் திருப்பின வேதாகமங்களை இவர்

களுக்கு ஆங்கிலேய பாஷையாகத் தந்து, மூவாயிரம் பிரிவுகளை இரகசியமாய் அச்சிலே பதித்துக்கொண்டு வருவோம். இவைகள் ஆங்கிலேய தீவில் சென்ற பின்பு, லுத்தேர் மதமும் நுழைவது அரிதோவென்றான். விசாரிக்கும் போது சொன்னது மெய்யாகி, ஆங்கிலேய இராசாவுக்கு இந்தச் செய்தியை அறிவித்ததின்மேல், அவன் தன் சீர்மையில் அந்தப் புஸ்தகங்கள் நுழையாதபடிக்குக் காவல் வைத்தான். இதோ தரங்கம்பாடியார் வேதாகமங்களைத் தமிழாகத் திருப்பினதிலே நினைத்த கருத்தும், பலனும் இதுவே.

அப்படியே இவர்களும் தங்கள் குருவாகிய லுத்தேர் காட்டின வழியைப் பின்சென்று, சேசுநாதர் அமிர்த வசனமாகத் தங்கள் மதத்தின் விஷயத்தை உங்களுக்கு ஊட்ட வேண்டுமென்று சத்திய வேதத்தைக் கெடுத்து, தங்கள் தப்பறைக்கேற்ற சிலவற்றைக் கூட்டி, அதற்கு ஆகாத சிலவற்றைக் குறைத்து மாற்றி அதனைத் தமிழாகத் தந்தார்கள். அப்படியே அர்ச். இராயப்பர் எழுதின 2-ம் நிருபத்தின் முதல் அதிகாரம் 10-ம் வசனத்தில் சொன்னதாவது: தம்பிமாரே, ஆண்டவர் எங்களை அக்கியானத்தினின்று அழைத்துத் தெரிந்து கொண்ட சகாயம், உங்கள் தரும நடக்கைகளைக் கொண்டு நிலைகொள்ளும்படிக்குச் செய்யப் பிரயாசைப்படுவீர்களாக என்றார்.

தரங்கம்பாடியாரோவெனில், விசுவாசத்தாலொழிய மற்றத் தரும நடக்கைகளால் கரை ஏற்றத்துக்கு ஒரு பலனும் வர அறியாதென்று அவர்கள் சொல்லும் அபத்தத்துக்கு ஆகாதென்று அதிலே தரும நடக்கைகளைக் கொண்டென்கிற சொல்லை எழுதாதிருந்தார்கள். மீளவும் அர்ச். சின்னப்பர் எபிரேயருக்கு எழுதின நிருபத்தின் 13-ம் அதிகாரம் 4-ம் வசனத்தில் எல்லாவற்றிலும் விவாகஞ் சங்கிக்கக்கடவதென்றார். அதற்கு அர்த்தம் ஏதெனில், விவாகஞ் செய்தவர்களெல்லாரும், அது தேவத்திரவிய அநுமானமென்றறிந்து சங்கிக்கத்தகுங் கட்டாக எண்ணி அதனை அவிழ்க்காமலும், அதற்கு விரோதஞ் செய்யா

மலும், சமுசார வகையில் ஒழுங்கு மரியாதை விடாமலும், தங்களுக்குள்ளே பட்சமாய் ஒன்றுபட்டுச் செய்கிறதிலேயும், பேசுகிறதிலேயும் உள்ளும் புறமும் எல்லாவற்றிலுந் தாங்கள் கொண்ட விவாகத்தைச் சங்கிக்கக்கடவார்களென்றார்.

இதனால் அர்ச். சின்னப்பர் இந்த வசனஞ் சொன்னவுடனே விவாகத்தைச் சங்கியாமல் கொண்ட தாரத்தையொழிய மற்ற ஒருத்தியைத் தீண்டினவனை ஆண்டவர் தண்டித்து ஆக்கினை இடுவாரென்று கூட்டி எழுதினார். தாங்கம்பாடியாரோவெனில், குருக்களும், சந்நியாசிகளும் விவாகஞ் செய்வது நல்லதென்று லுத்தேரோடே தாங்கள் சொல்லும் அபத்தத்துக்கு இந்த வசனம் உதவும்படிக்கு அதனை மாற்றி எல்லாவற்றிலும் என்னுமல் சகல பேர்களிடத்திலே சமுசார தத்துவஞ் சங்கைப்படத்தக்கது என்றார்கள். ஆகையால் குருக்களிடத்திலேயும், சந்நியாசிகளிடத்திலேயும் விவாகம் நல்லது என்பார்கள். ஆயினுஞ் சகல பேர்களிடத்திலேயும் விவாகம் நல்லதென்றால், பெற்ற மகளைத் தகப்பன் கொண்டாலும், அண்ணன் கூடப் பிறந்த தங்கைச்சியைக் கொண்டாலுஞ் சங்கிக்கத் தகும் விவாகம் அது என்பார்களோ?

அப்படியே அர்ச். சின்னப்பர் முதல் நிருபத்தின் 9-ம் அதிகாரம் 5-ம் வசனத்தில் கொரிந்தியாருக்கு எழுதினதாவது: மற்ற அப்போஸ்தலர்மாரும், கர்த்தருடைய தம்பிமாரும், கெப்பஸென்பவருஞ் செய்கிறபோல நாங்களும் ஒரு பெண்பிள்ளையை பணிவிடைக்காக சகோதரியாகக் கூட்டிக்கொண்டு போகக் கூடாதோ வென்றார். அதற்கு அர்த்தமேதெனில், நாங்களும் மற்ற அப்போஸ்தலரைப் போல எங்களைத் தங்கைச்சியாக விசாரிக்க ஒருத்தியைக் கூட்டிக்கொண்டு திரியவும் அதற்கு எல்லாம் உங்கள் கையிலே செலவு வாங்கவும் நியாயம் உண்டாமே. ஆகிலுங் கிறீஸ்துவின் சுவிசேஷத்தைத் தடையின்றிப் போதிக்க உங்களுக்குச் செலவு நேரிடாதபடிக்கு இப்படிச் செய்யாதிருந்தோமென்று அர்ச். சின்னப்பர் சொன்ன

தற்கு அர்த்தமாக அவர் தாம் அதிலே எழுதின 12-ம் வசனத்தை ஆராய்ந்து பார்த்த யாவருக்குந் தோன்றுமல்லோ?

பதிதரோவெனில், அப்போஸ்தலர் முதலாய் பெண்சாதியை வைத்திருந்தார்களென்று சாட்டி, மற்றக் குருக்களும் சந்நியாசிகளும் விவாகஞ் செய்வது நல்லதென்று எண்பிக்க அந்த அர்ச். சின்னப்பர் வசனத்துக்குப் பெண்சாதி என்னுஞ் சொல்லைக் கூட்டி, அதைத் தமிழாகத் திருப்பின தன்மையாவது: மற்ற அப்போஸ்தலர்களைப் போலேயும், ஆண்டவருடைய சகோதரர்களைப் போலேயும், கெப்பஸென்கிறவர்களைப் போலேயுங் கூடப் பிறந்தவர்களாயிருக்கிற ஒருத்தியைப் பெண்சாதியாக அங்கங்கே கூட்டிக்கொண்டு போகவும் எங்களுக்கு வல்லமை உண்டாயிருக்குதல்லோ வென்று தரங்கம்பாடியார் எழுதிவைத்தார்கள். ஆகையால் கூடப் பிறந்த தங்கைச்சியைப் பெண்சாதியாக வைப்பது மிருக இனத்திலொழிய, அக்கியானத்தில் அமிழ்ந்தின நாட்டிலும் நடவாத அக்கிரமமேயானாலும் அப்போஸ்தலருக்கேற்ற உத்தம முறையாமென்று தரங்கம்பாடியார் ஞானத்துக்குத் தோன்றினதல்லோ.

மீளவுஞ் சேசுநாதருக்குச் சகோதரர்கள் உண்டென்றபோது அவனையல்லாமல் தேவமாதா பெற்ற பல பிள்ளைகள் உண்டென்றும், ஆகையால் அவள் கன்னி மாறுத தாயல்லவென்றுஞ் சொல்லக்கடவார்கள். ஆகிலுந் தாங்களும் நம்மோடே தேவமாதாவைப் பரிசுத்த கன்னி யாஸ்திரீ என்று விசுவசிக்கிறூர்களல்லோ. எண்ணப்படாமல் இத்தகைப்பட்ட அக்கிரமங்களைக் கலந்தெழுதின புஸ்தகங்கள் வேதமென்று கொள்வது நியாயமோ? வேதத்தைக் கெடுத்து, தமிழை அழித்து, தரங்கம்பாடியார் எழுதின புஸ்தகங்களை வைத்துக்கொண்டு ஒரு நீசப் பறையன் வேதமெல்லாந் தன் கையில் அகப்பட்டதென்று மகிழ்ந்து சொன்னனும். இது இவனே முழு மதி கெட்ட

வனுகி, கர்த்தர் திருவுளம்பற்றினபடியே குருடனுக்குக் குருடன் கை தந்தபோது இருவருங் குழியில் விழுவார்கள் என்றதுபோலத் தானும் மோசமாய்க் கெடுவது நிச்சயந்தானே.

118. — ஆகையால் முன் சொன்னபடி எல்லாரும் மனதின்படியே ஜென்ம பாஷையாக வேதத்தைத் திருப்பவும், வாசிக்கவும் நியாயத்தின்படியே திருச்சபை விலக்கினதென்று சொல்லக் கடவோம். பின்னையும் இந்த நியாயத்தைக்கொண்டு சில பேர் இந் நாட்டில் எங்கள் மேலே முறைப்பட்டதற்கு மறு உத்தரந்தானே வெளியாகுமல்லோ. அதெப்படியென்றால், கீழ்த்திசையினின்று தமிழாய் வேதப் புஸ்தகம் புறப்பட்டதாகக் கண்டு, நாங்கள் இந்நாள் வரைக்கும் வேதத்திலுள்ள சிலவற்றை மாத்திரம் அறிவித்து, மற்றவையெல்லாம் எங்களுக்கு வைத்துக் கொண்டு திருட்டுத்தனமாக ஒளித்தோமென்று தூறுகிறார்கள்.

ஆகிலும் பல வகைக் கறியும், அன்னமும் இனிதாய் உண்ட தாயானவள் பிள்ளைக்கு முலைப்பால் மாத்திரங் கொடுப்பது திருட்டென்றால், நாங்கள் செய்ததுந் திருட்டுத்தானே. குழந்தை கெட்டிப் போசனம் உண்ணவும், உண்டால் ஜீரணிக்கவுமாட்டாமையால், அதற்குக் கேடாகுமென்று அதனைத் தாயே உண்டு, தனது அன்பின் தொழிலால் இனிய அமிர்தமாக்கி, அதனைக் குழந்தைக்குப் பாலாக ஊட்டினால், பிள்ளைக்கு வஞ்சனை செய்யாமல் அன்பு காட்டினளென்று சொல்லவேண்டியதல்லோ. அவ்வண்ணமே நீங்களும் வேதத்தில் இன்னங் குழந்தைகளாகையால் வேத வசனங்களும், அதிலேயுள்ள வர்த்தமானங்களும் உள்ளபடி உங்களுக்குக கெட்டிப் போசனமாகத் தந்தால், அவைகளைக் கண்டுபிடியாமல், ஜீரணியாத உணவு போல உங்களுக்குக் கேடாகுமென்று நாங்கள் அதனை ஆராய்ந்து, இனிய அமிர்தமாக்கிப் பல முறையோடு அன்பு பொருந்தி உங்களுக்குச் சொல்லவும், பல ஞானப் புஸ்தகங்களில் எழுதிக் காட்டவுஞ் செய்தோம். செய்தா

னும் இது அன்பொழிய வஞ்சனை என்றும், திருட்டென்றுஞ் சொல்வாருண்டோ.

அப்படித்தான் அர்ச். சின்னப்பர் கொரிந்தியாருக்கு எழுதின முதல் நிருபத்தின் 3-ம் அதிகாரம் 2-ம் வசனத்தில் தம் பிரசைகளுக்கு எழுதினதாவது: உங்களுக்குக் கெட்டி உணவு கொடாமல் பாலை ஊட்டினேன். அதேதெனில், இன்றைவரைக்கும் நீங்கள் கெட்டி உணவு கொள்ளக் கூடாமல் இப்பொழுதும் அதற்கு வல்லவரல்லவென்றார். மீளவும் நாலு எழுத்துக் கூட்டி வாசிக்கமாட்டாதவனுக்கு நன்னூல், காரிகை, பொருள் அலங்காரம் முதலானவைகளைக் கையில் கொடுத்தால் அவனுக்கு உதவியாகுமோ? அவன் உபாத்திக்கு உணர்வோ? அவைகளைக் கையிற் கொடாமலும், வாசியாமலுமிருந்தால் அது வஞ்சனை என்பதோ? அது திருட்டென்பதோ?

நம்முடைய கர்த்தராகிய சேசுநாதர் தாமே அர்ச். அருளப்பர் சுவிசேஷத்தின் 16-ம் அதிகாரம் 12-ம் வசனத்தில் அப்போஸ்தலர்மாருக்குத் திருவுளம் பற்றினதாவது: இன்னம் உங்களுக்கு உரைக்கப் பல செய்திகள் எனக்கு உண்டாயினும், நீங்கள் இப்பொழுது அவைகளைத் தாங்கமாட்டீர்கள் என்றார். அவைகளைக் கண்டுபிடிக்கத் திறமில்லாதவருக்கு அத்திறத்தைக் கொடுக்க வல்லவராயிருந்த சேசுநாதர் முதலாய் அப்போஸ்தலர்களுக்கு எல்லாவற்றையுஞ் சொல்லாமல் அவர்கள் வல்லமைக்குத் தக்கதாய் மாத்திரஞ் சொல்லிக் காட்டின பின்பு, நாங்களும் சேசுநாதர் செய்தாற் போலேயும், அர்ச். சின்னப்பர் செய்தாற் போலேயும் எல்லாவற்றையும் உங்களுக்கு உடனே வெளிப்படுத்தாமையால், நாங்கள் திருடரென்றும், உங்களை ஏய்த்தவர்களென்றும், வேதத்தை ஒளித்தவர்களென்றுஞ் சொல்ல நியாயமுண்டோ?

மோக்ஷக் கரை ஏறுவதற்கு அறிய வேண்டிய இரகசியங்களையும், செய்யவேண்டிய புண்ணியங்களையும், விலக்க வேண்டிய பாவங்களையும் இம் மூன்று வகை உணர்ச்

சிகளை அறிவியாமல் ஒளித்திருந்தால் இது குறைதானே. மோக்ஷக் கரை ஏறுவதற்கு வேண்டியதை ஒளியாது படிப்பித்துக் காட்டி மற்ற வர்த்தமானங்களை உங்களுக்கு உடனே காட்டாதிருப்பது நல்ல அறிவில்லாத பாலகன் கையிலே கூர்ந்த முனையுள்ள கத்தியைக் கொடுக்கமாட்டாத தகப்பனைப்போல உங்களுக்குக் கேடு வராத படிக்கு நாங்கள் நடத்தின பட்சத்தின் அடையாளமல்லோ.

119. — மீளவுந் தரங்கம்பாடியார் தமது ஊரின் பெயரைத் தமிழில் செவ்வையாய் எழுதமாட்டாதவராகி தேவ புஸ்தகத்தைத் தமிழுரையாகத் திருப்பினோமென்று, ஒளிவிடு மணியைச் சேற்றில் புதைத்தாற்போலவும், இனிய அமுதிலே நஞ்சினைக் கலந்தாற் போலவும், வடிவுள்ள சித்திரத்தின்மேல் கரியைக் கிழித்து மாசு படுத்தினாற் போலவும், வேத உண்மை மறையவும், அதன் உயிரைக் கெடுக்கவும், வடிவற்று மாசு கொள்ளவுந் தமிழை அறியாதவர்கள் நமது மனம் நோகக் கொடிய மொழிகளால் எழுதித் தந்த புஸ்தகங்கள் வேதமென்னப்படுவதோ? இந்நாள் வரைக்கும் இந்நாட்டுத் தமிழாக வடமொழி சிலவைகளன்றித் தென்மொழித் தமிழே வழங்கினதென்று அறிவோம்.

இப்போது தரங்கம்பாடியார் தந்த புஸ்தகங்களை வாசித்த அளவில் கீழ் மொழித் தமிழும் மூன்றும் வகையாக எவரும் நகைத் திகழும்படிக்கு முளைத்தது கண்டோம். அதிலே அவர்கள் பாஷை அறியாமையால் வைத்த எவரும் கண்டுபிடிக்கமாட்டாத வசனங்களை இங்கே நாம் காட்டவேண்டுமாகில் விரிவாகுமென்றதினால், ஒன்றிரண்டு மாத்திரஞ் சொல்லிக் காட்டுவோம். அதேதெனில் அர்ச். சின்னப்பர் கொரிந்தியாருக்கு எழுதின முதல் நிருபத்தின் 7-ம் அதிகாரம் 3-ம் வசனத்தைப் பதிதர் திருப்பின வகையாவது: புருஷனானவன் தன் ஸ்திரீயானவளுக்குச் செய்யவேண்டிய பிற உபகாரத்தைச் செய்யக்கடவான் என்றார்கள். ஆகிலுந் தன் ஸ்திரீக்குச் செய்யும் பிற உப

காரமாவது: தானே தன் ஸ்திரீயின் ஆசையைப் பிறனைக் கொண்டு ஆற்றுவிக்கவோ? ஆனால் இது அவர்களிடத்தில் நடக்கும் முறையோவென்று தாங்களே சொல்லுவார்கள். வேதத்திலும், மனிதர் நாட்டிலும் நடவாத முறைதானே. ஆகையால் வேதத்தில் எழுதினதைச் செவ்வையான தமிழாக்கி, புருஷன் தன் ஸ்திரீக்குச் சமுசாரக் கடனைச் செலுத்தக்கடவா னெனல்வேண்டும். என்றாலும் இது எவருக்கும் பொருந்தும் கற்பனையல்லோ.

மீளவும் அர்ச். மத்தேயு எழுதின சுவிசேஷத்தின் 18-ம் அதிகாரம் 17-ம் வசனத்தை அவர்கள் சொன்ன வகையாவது: திருச்சபையினுடைய புத்திகளைக் கேளாதிருந்தால் அக்கியானியைப்போலவும், ஆயக்காரனைப்போலவும், அவன் எண்ணம் உனக் கிருக்கட்டுமென்று கொடிதாய் அவர்கள் தமிழாக்கின வசனத்துக்கு அர்த்தமென்ன? அப்படிப்பட்டவனை நீ பிறருக்குக் கொடாமல், மடியிலே வைத்துக்கொள்ளவோ உனக்கிருக்கட்டும் என்றார்கள். வேதத்தில் உள்ளபடி யேதெனில், திருச்சபை சொன்னதைக் கேளானாயின் அக்கியானியைப் போலவும், நீசனைப்போலவும் உனக் கவன் ஆகக்கடவானென்று சொல்லக் கடவோம்.

மீளவும் அர்ச். சின்னப்பர் உரோமாபுரியாருக்கு எழுதின நிருபத்தின் 9-ம் அதிகாரம் 22-ம் வசனத்தை அவர்கள் தமிழாக்கினது எப்படியென்றால், சர்வேசுரன் கோபாக்கினியைக் காட்டித் தம்முடைய வல்லமையை விளங்கப்பண்ணவேண்டுமென்று இருந்தபோது, கேட்டுக்கு ஆயத்தப்பட்டிருந்த கோபாக்கினியினுடைய நவபாண்டங்களை மகா பொருமையோடே உத்தரித்தார் என்றார்கள். இதிலே குயவன் தந்த நவ பாண்டங்களை ஆண்டவர் அவனுக் குத்தரித்தாரென்று நினைத்தார்களோ தெரியாது. இது தமிழ் மொழியாகத் தமிழ் வசனமாகாமல் இதற்குள்ள அர்த்தத்தைக் கண்டுபிடித்துச் சொல்லத் தக்கவருண்டோ? சொன்ன வசனக் கொடுமையை அறியும்

படிக்கு அவ்வசனத்தை வேதத்திலுள்ளபடியே தமிழாக்கிக் காட்டுவோம்.

ஆண்டவர் உடனே பாவிகளைத் தண்டியாமல் சில நாள் பொறுத்துக்கொண்டிருந்தாலும் நம்பாமல் பின்னுக்கு அதிகமான ஆக்கினையிடுவாரென்று அஞ்சும்படிக்கு அர்ச். சின்னப்பர் சொன்னதாவது: சர்வேசுரன் தன் கோபத்தையுந் திறத்தையுங் காட்டச் சித்தமாகி, கோபத்துக்கும் ஆக்கினைக்கும் உரிய பாத்திரங்களை உடனே கொடாமல் பொறுத்துக்கொண்டிருந்தாரென்று அர்ச். சின்னப்பர் எழுதி வைத்தார். மீளவும் அர்ச். சின்னப்பர் திமோத்தேயு என்பவருக்கு எழுதின முதல் நிருபத்தின் 3-ம் அதிகாரம் 6-ம் வசனத்தில் திருச்சபையைப் பராமரிக்க வைக்கத்தக்கவன் எப்படிப்பட்டவனுக வேண்டுமென்று காட்டிச் சொன்னதைப் பதிதர் தமிழாக்கினது எப்படியென்றால், அப்படிக்கொத்தவன் வாய்க் கொழுப்பாயிருந்து, தூஷணக்காரருடைய நடுத்தீர்வையில் அகப்படாதபடிக்குப் புதிதாக நாட்டப்பட்டவனுக இருக்கவொண்ணுதென்றார்கள். இதிலே வாய்க் கொழுப்பாவது, தூஷணக்காரராவது, புதிதாய் நாட்டப்பட்டவனுவது வேதத்தில் எழுதப்பட்டதேதெனில், பசாசு தன்னை எண்ணின ஆங்கார நினைவோடொப்பத் திருச்சபையைப் பராமரிக்கத் தக்கவனும், ஆங்காரத்தாலெழும்பித் தன்னை எண்ணுதபடிக்கு அவன் புதுக் கிறீஸ்துவனுகவேண்டாமென்று அர்ச். சின்னப்பர் எழுதினுர்.

அப்படியே இவர் தாம் கொரிந்தியாருக்கு எழுதின முதல் நிருபத்தின் 3-ம் அதிகாரம் 2 ம் வசனத்தில் நீங்கள் இன்னம் மாம்ஸத்தாரா யிருக்கிறீர்களென்று அவர்கள் திருப்பினதென்ன? மாம்ஸமில்லாத மனிதருண்டோ? மாம்ஸத்தை உடையவர்களாகுதல் பாவமோ? உடல் ஆசையில் தாழ்ந்த உணர்வினராயிருக்கிறீர்களென்றது அர்ச். சின்னப்பர் வசனத்திற்கு அர்த்தமாகும். அப்படியே பற்பல இடத்தில் அர்ச். சின்னப்பர் சர்வ சனங்களுக்கு எழு

தின நிருபங்களில் பட்சமாய் அவர்களைத் தம்பிமாரோ என்றபோதெல்லாம் தமிழ்ச் சொல் உரிமை அறியாத பதிதர் கூடப் பிறந்தவர்களே என்று வைத்தார்கள். ஆகிலுங் கூடப் பிறந்தவர்கள் என்பதற்கு எல்லாரும் அர்ச். சின்னப்பருடைய தகப்பனுக்குப் பிறந்தவர்களோ?

இதிலேயும் அபத்தமாய் அர்ச். மத்தேயு எழுதின சுவிசேஷத்தின் 4-ம் அதிகாரம் 18-ம் வசனத்தில் அவர்கள் எழுதினதாவது: இரண்டு சகோதரர்களாகிய பேதுரு என்கிற நாமத்தைக் கொண்டிருக்கிற சிமோனையும், அவருடைய தமையனாகிற அந்திறேயு எனகிறவனையும் ஒன்று வைத்த பிற்பாடு, அவர்கள் தானே அர்ச். லூக்கா எழுதின சுவிசேஷத்தின் 6-ம் அதிகாரம் 14-ம் வசனத்தில் அப்போஸ்தலர்மாரை எண்ணின இடத்தில் அவர்கள் யாதென்றால், பேதுரு என்கிற நாமத்தைக்கொண்டிருக்கிற சிமோனும், அவருடைய தம்பியாகிற அந்திறேயும் என்றார்கள். ஒருவன்றானே ஒருவனுக்குத் தமையனுந் தம்பியுமாக கண்டதெங்கே? பித்தருஞ் சொல்லாத இப்படிப்பட்ட விபரீதங்கள் குன்றாத சத்திய வேத வசனங்கள் என்பார்களோ?

மீளவும் அர்ச். இராயப்பர் முதல் நிருபத்தின் 2-ம் அதிகாரம் 2-ம் வசனத்தில் புத்திக்கடுத்த கலப்பில்லாத பாலை, ஆசைப்பட்டு இத்தாலே வத்தியுங்கோவென்றார்கள். ளகரப்படாமலும், ரகரவொற்றில்லாமலும், வத்தியுங்கோவென்றது நீசர் சொல்லுங் கீழ் மொழித் தமிழாவதன்றி, பாலால் வளருவார் உண்டென்று அறிவோமொழிய, பாலால் வர்த்திப்பார் உண்டென்று கேட்பாருண்டோ? இவ்வண்ணமாக எண்ணப்படாத வசனங்களை எடுத்துக் காட்டலாமெனினும், உங்கள் காதுகளை உரித்துக் கொடுந்தீயூற்றினாற்போல ஆகுமென்று மற்றதெல்லாவற்றையும் விட்டுக் காட்டின வசனங்களே போதுமென்று இருக்கிறோம்.

120. — இந்தக் கொடிய கீழ் மொழித் தமிழ் வசனங்

களை வாசிக்கும்போது, தரங்கம்பாடியார் சற்றுங் கூசாமல், வேத சாஸ்திரமென்னும் புஸ்தகத்தின் முகப்பில் எழுதின வசனத்தைச் சிரிப்புஞ் சினமுமின்றி நினைப்பாரில்லை. அங்கே அவர்கள் எழுதின வசனமாவது: நாங்கள் இந்தத் தேசத்தில் வந்து, தமிழ் படித்து இந்த தேசத்தார் எழுதின தமிழ்ச் சுவடிகள், புஸ்தகங்கள் எல்லாம் வாசித்து, ஆராய்ந்து பார்த்து அவைகள் பலவிதமாயிருக்கின்றனவென்று கண்டோமென்றார்கள்.

ஆகையால் அவர்கள் அகத்தியம் தொல்காப்பியம், நன்னூல், இருபொருள், காரிகை, அலங்காரம் மற்ற இலக்கணங்களும்; உட்சமயம், புறச்சமயம், பதினெண் புராணங்கள், ஸ்தல புராணங்கள், அறுபத்து நாலு கலைக்கியானம், தத்துவங்கள் தொண்ணூற்றாறு, ஈரடிப் பயனே, நாலடிப் பயனே, சிந்தாமணி, சிலப்பதிகாரம், பாரதம், இராமாயணம் மற்ற இலக்கியங்களும் இவை எல்லாம் ஒன்றும் விடாமல், கீழ் மொழித் தமிழராகிய தரங்கம்பாடியார் தாங்களே வாசித்து ஆராய்ந்து பார்த்தார்கள் என்றாற் போல ஆச்சுதல்லோ. ஆயினும் மிருகங்களின் இராசாவான சிங்க வேஷத்தைப் போர்த்துக்கொண்ட வேசரி பேச வாய் திறந்த மாத்திரத்தில், மறைவின்றி வேசரியாகத் தோன்றிக் கூடின மற்ற மிருகங்கள் அதனை நகைத்தது போல, அவர்கள் எழுதின கீழ் மொழிப் புஸ்தகங்களைக் கண்ட யாவரும் அதிலே யுள்ள வழுவின சொற்கொடுமையும், மாறின வசனக் கடோரமுங் கண்டவுடனே சந்தேகமின்றி, இந்த இராச்சியத்துப் பெரியோர் எழுதினது ஒன்றாகிலுந் தரங்கம்பாடியார் கண்டதேயில்லை என்று நிச்சயமாய்ச் சொல்வார்களல்லோ.

இந்நாட்டிலே முன்னோர்கள் எழுதினதெல்லாஞ் செந்தமிழாக எழுதப்பட்டதினால், அவர்கள் அதில் ஒரு வரி வாசிக்கவும் ஒரு சொல் கண்டுபிடிக்கவும் மாட்டார்களென்று நாமே கூசாமல் சொல்வோம். அதேதெனில் நாமே தரங்கம்பாடியார் காரியமாக நம்முடைய உபதே

சிக்கு அனுப்பின பத்திரம் அவர்கள் கையிற் சென்று, செந்தமிழ்ச் சொல்லால் எழுதப்பட்டதை தாங்களுந் தங்கள் சாஸ்திரிகளும் ஒருங்குடன் கூடி, மூன்றுநாள் வருந்தி அதனை வாசிக்கமாட்டாமல் கைவிட்டார்களென்று அறிவோமே. ஆகையால் இரண்டு சொல் கூட்டி வாசிக்கத் துவக்குங் குழந்தைகள் பள்ளிக்கூடத்தில் படிக்கும் ஆத்திச்சூடி முதலாய்த் தாங்கம்பாடியார் அர்த்தத்தைக் கண்டு பிடியாமல் நாவிடறின்றிச் சொற்றளர்வின்றி வாசிக்க வல்லவராகில் அதிசயந்தானே.

இவையெல்லாம் இப்படியாகக்கொள்ளப் பொய்க்கஞ்சாமலும், நிறையொன்றில்லாமலுந் தமிழ் எல்லாம் வாசித்தோமென்று மனிதரை ஏய்க்க நினைத்து அவர்கள் தேவ வாக்கியத்தைத் தங்கள் வாயால் உரைக்கவும், தமிழாக எழுதவும் வல்லவர்களென்போமோ. அவர்கள் கொடிய சொற்களை வழுவின முறையால் கூட்டி, பித்தனுக மதத்தைக் கக்கினாற்போல எழுதின புஸ்தகங்கள் வேதாகமங்க ளென்பமோ. அவர்களோடொத்த நினைவுடையவனன்றி, வேறொருவரும் இதைச் சொல்லவுங் கருதவுமாட்டார்கள்.

121. — ஆகையால் எவருக்கும் பொது உணர்வாக அர்ச். சின்னப்பர் கலாத்தியருக்கு முதல் அதிகாரம் 6-ம் வசனந் துவக்கி எழுதினதை நாம் உங்களுக்குச் சொல்லி, இந்த அதிகாரத்தை முடிப்போம். அதாவது: கிறீஸ்துவின் சிநேகத்தை அடைய உங்களை அழைத்தவரை விட்டு வேறே சுவிசேஷத்தை அநுசரிக்க அத்தனை சீக்கிரமாய்த் திரும்பினீர்களென்பது எனக்கு அதிசயந்தானே. இந்த வேறே சுவிசேஷமேதெனில், சிலர் உங்களை மயக்குவிக்கவும், கிறீஸ்துவின் சுவிசேஷத்தைக் கெடுக்கவும் சொன்ன வசனங்களொழிய, வேறொன்றுமல்ல. ஆகையால் நாங்கள் முன் உங்களுக்குச் சொன்ன உபதேசமன்றி, நாங்களாயினும் வானத்திலிருந்து வந்த சம்மனசாயினும் விபரீதமாய் வேறொன்றினைப் படிப்பித்தால், சபிக்கப்படுவதாக

வென்று அர்ச். சின்னப்பர் எழுதி வைத்தார். இதுதானே நீங்கள் கரை ஏறுகிறதற்கு உங்களுக்கு எழுதப்பட்டதாக எண்ணி, பதிதர் கீழ் மொழித் தமிழாய் அச்சிலே பதித்துத் தந்த சுவிசேஷமும், பற்பல வேறே பிரபந்தங்களும் உயிரைக் கொல்லும் நஞ்சென்று அவைகளை வெறுத்து, காணவுங் கேட்கவும் வேண்டாம்.

17-ம் அதிகாரம்,

வேத முத்திரையாகிய புதுமை விளக்கம்.

122. — ஆண்டவர் அருளிச் செய்த வேதம் ஒன்றொழிய, மனிதரும் எங்கும் எக்காலத்தும் பற்பல சமயங்களை உண்டு பண்ணி, அவைகளை வேதமென்று சொல்லிக் கொண்டு வருவதால் மற்ற யாவரும் மயங்கி, ஆண்டவர் தந்த மெய்யான வேதம் இன்னதென்று பலவற்றுள்ளே தெரிந்துகொள்வது அரிதாகி, மெய்யான வேதம் ஒன்றிலேயுள்ள ஈடேற்றமும் அடைவதரிதாம். இதனை அறிந்த கடவுள் தாம் தந்த வேதத்திற்கு இட்ட, ஒருவராலுக் மாற்றப்படாத முத்திரையாக அதனை எவருக்கும் எண்பிக்க எங்கும் எக்காலத்தும் புதுமைகளைச் செய்தருளினார். அதெப்படியென்றால், புதுமையானது படைப்புண்ட வல்லமை எல்லாங் கடந்த செய்கையாகையால், ஆண்டவருக்குள்ள அளவில்லாத வல்லமையினால் ஆகவேண்டியிருக்கும்.

ஆகையால் ஆண்டவர் தாமே பொய் சொல்லமாட்டாமலும், பிறர் சொன்ன பொய்யை ஒத்துக்கொண்டு எண்பிக்கமாட்டாமலும், ஒரு வேதத்தை மெய்ப்பிக்க அவர் ஒரு புதுமையைமாத்திரம் ஒரு முறை செய்தாரென்று கண்டோமாகில், அந்த வேதமே அவர் அருளிச்செய்த வேதம் என்றும், மெய்யான வேதமென்றும், கரை ஏற

எவருக்கும் வேண்டிய வேதமென்றும் நிச்சயிக்கக்கட வோம். ஆகையால் இன்றைவரைக்குஞ் சொன்னதெல்லாம் பாராமலும், உரோமான் திருச்சபை அநுசரிக்கும் வேதத் தில் ஒரு மெய்யான புதுமை மாத்திரம் உண்டென்று எண்பித்தாலும், உரோமான் திருச்சபை அநுசரிக்கும் வேத மாத்திரம் எவருங் கரை ஏற வேண்டியதாகி, பொது வாய் நிற்கும் மெய்யான வேதமென்று சந்தேகமறச் சொல்லக்கடவோம்.

123. — இந்த நியாயத்தை அறிந்த பதிதரும் தாங் கள் உண்டு பண்ணின பொய்யான சமயங்களை மெய்யான புதுமைகளால் ஆண்டவர் எண்பிக்கமாட்டாமையால், பொய்யை மெய்ப்பிக்கப் பொய்யான புதுமைகளைக் காட் டப் பிரயாசைப்பட்டார்கள். ஆகிலுந் தம் முத்திரையை மாறவொட்டாத சர்வேசுரன் அந்தப் புதுமைகளின் தப் பறையைக் காட்டி, அவர்கள் சமயமுந் தப்பறையாகத் தோற்றுவித்தார். அப்படியே லுத்தேர் பசாசுக்குந் தனக் குமிருந்த பழக்கமுஞ் சிநேகமும் நம்பி, தன் மதத்தை அநுசரித்திருந்த ஒருத்தியைப் பிடித்த பசாசை ஓட்டுவே னென்று ஸ்திரமாய்ச் சொல்லி, தானும சில பேர்களும் ஓர் அறையிலிருந்து பசாசை ஓட்டத் துவக்கி, நான் சொல்லும் வேதம் மெய்யானதென்று எண்பிக்க உடனே போவாயாக என்று பசாசை அதட்டி சொன்னான். மற்ற வர் மயங்காதபடி ஆண்டவர் ஏவலால் பசாசு அந்த அறை யைத் திறக்கப்படாதபடிக்கு அடைத்து, லுத்தேர் என்ப வனைப் பிடித்து உதைத்து அடித்துக் கொல்ல இருக்கை யில், அவன் பதறி அலறி அடைக்கப்பட்ட கதவை ஒடித் து, பெயர்த்துப் பிடுங்கி ஓடிப்போய், வெட்கி ஒளித்துக் கொண்டான். இதெல்லாவற்றையுங் கூட நின்ற ஸதாபி லன் என்னும் ஒருவன் எழுதி வைத்தான்.

124. — பின்னையும் லுத்தேர் மதத்திற் பிரிந்த அன பப்தீஸ்தர் என்பவர்களில் ஒருவன் நான் சொன்னதற் குச் சாட்சியாக நாளைக்கு பரலோகத்திலிருந்து இஸ்பிரீத்

துசாந்துவாகிய சர்வேசுரன் வந்து தோன்றுவானென்றான். அதற்கு மறுநாள் அந்தப் புதுமையைக் காண வெகு கூட்டங் கூடின பின்பு, மோட்சத்தினின்று இஸ்பிரீத்துசாந்துவாகிய சர்வேசுரன் வராமல், நரகத்தினின்று ஒரு பசாசு பயங்கர அவலட்சண உருவத்தோடு தோன்றி அவன் தலைமயிரைப் பிடித்து அவனை ஆகாயத்தில் தூக்கின பின்பு விட்டு, அவன் தண்ணீரில் விழுந்து அமிழ்ந்திச் செத்து அந்தப் பசாசோடே நரகத்தில் புதைக்கப்பட்டான்.

125. — மீளவும் 1544-ம் ஆண்டில் ஒல்தன் ஊரிலிருந்து கல்வின் இருந்த செநேவ் பட்டணத்திற்கு வந்த பிறுலே என்பவனும் அவன் ஸ்திரீயுந் தம் வறுமைக்கு ஆதரவு கல்வினிடத்தில் கேட்க வந்தார்கள். கல்வீனோவெனில், தான் சொன்ன தப்பறைகளுக்கு முத்திரையிட்டு அவைகளை எண்பிக்க நல்ல சமையம் இதுவென்று புருஷன் பெண்சாதி என்ற இருவரையும் அந்தரங்கமாய் அழைப்பித்து, சில பணங்களையுங் கொடுத்து, புருஷன் செத்தவனைப்போல கிடக்க, பெண்சாதி தலை விரித்து அழுது அலறி, அவனை எழுப்பத் தன்னை அழைக்க ஓடிவரச் சொல்லி, தானும் வந்து எழுந்திருவென்ற மாத்திரத்தில் புருஷன் எழுந்திருக்கவும், தான் செத்தவனை எழுப்பின புதுமையாகக் காட்டவுந் தந்திரஞ் செய்தான். அப்படியே செத்த பிணமாய்ப் புருஷன் கிடக்க, ஐயோ இறந்துவிட்டானென்று விம்மி அலறி, அவன் ஸ்திரீ கல்வீனை அழைக்க ஓட, அவனும் மனதிரங்கினாற்போலத் துயரங் காட்டிச் சம்மதித்து, உண்டுபண்ணின தன் மதம் சேசுநாதர் அருளிச் செய்த வேதமென்று சந்தேகமற எல்லாரும் அறிய வெகு சனங்களைக் கூட்டிக்கொண்டு போய்க் கிடந்தவனை எழுந்திருக்கச் சொன்னான்.

உடனே எழுந்திராமையால் அதிலேயும் உரத்துக் கூப்பிட்டு அலறி, மீளவும் அவன் அசையாததைக் கண்டு, தான் அவனைக் கையைப் பிடித்து இழுத்து அசைத்துக் குலுக்கி சீக்கிரம் எழுந்திரு என்று சினந்து கூப்பிட,

அவன் செத்தானென்று கண்ட பெண்சாதி முன் பொய்யாகக் காட்டின அழுகையை மாற்றி, கோவென்று அலறி, தனக்கு முன் கல்வீன் பணங்களைத் தந்து பண்ணின தந்திரமெல்லாங் காட்டி, செத்தவனை எழுப்ப வந்தவன் உயிரோடிருந்தவனைக் கொன்றானென்று எல்லாருங் கேட்க அவளே சொல்லிக் கீழே விழுந்து மோதிப் புரண்டு அழ, தன்னையுங் கொல்வார்களென்று அஞ்சிக் கல்வீன் தன்னோடொத்த சிலரைக் கூட்டி வெட்கி ஓடிப் போய் ஒளித்தானென்று அவன் சரித்திரத்திலேதானே எழுதப்பட்டதென்று அறிவோம். இவ்வண்ணமே தங்கள் பொய்யான சமையங்களை எண்பிக்கப் பதிதர் செய்யத் துணிந்த புதுமை நம்முடைய சத்திய வேதத்தைக் காட்டுவதற்கு உதவினதன்றி அவர்களுக்கு வெட்கமுங் கேடும் விளைவித்ததென்பது சத்தியந்தானே.

126. — உரோமான் திருச்சபை அநுசரிக்கும் வேதத்தைக் காட்ட ஆண்டவரால் செய்யப்பட்ட புதுமைகளோவெனில், ஓர் எண்ணிக்கையுள் ளடங்காமையால் வேறொரு புதுமையோடன்றி அவைகளை ஒருவரும் எண்ணவும் எழுதவுமாட்டார்கள். ஆகிலுஞ் சத்திய இராச்சியங்களிலே சம்பவித்த புதுமைகளுள் சிலவற்றை நாம் இங்கே எழுதி வைத்தாலும், கண்ணுக்கு அகன்ற இடத்துச் செய்தியாகையால் அவைகளைப் பதிதர் நாம் உண்டு பண்ணின கதைகளென்பார்க ளல்லாமல், தாங்களுந் தம் நாட்டிலே தங்கள் சமயத்தை ஸ்தாபிக்கப் புதுமை சம்பவித்ததென்று வெட்கமில்லாமலும் பொய்க்கு அஞ்சாமலுஞ் சொல்வார்கள்.

ஆகையால் அவைகளை விட்டு இந்த இராச்சியத்திலே தானே அர்ச். சவேரியார் செத்தவர்களை எழுப்பி, பிறவிக் குருடருக்குக் கண்ணைத் தந்து, முடவருக்குக் காலுங் கையும் வழங்கச் செய்து, தீராத நோய்களைத் தீர்த்து, தாம் இந்த வேதத்தை உபதேசிக்கும்போது செய்த புதுமைகளையும், இந்நாள் வரைக்கும் அவர் வேண்டுதலினால்

ஆண்டவர் செய்துகொண்டு வருகிற புதுமைகளையும் நீங்களே அறிவீர்களொழிய நாம் இங்கே சொல்ல வேண்டியதல்லவே. அத்தனை புதுமைகளுக்குள்ளே ஒரு மெய்யான புதுமையிராதோ? ஒன்றுமாத்திரம் மெய்யானால் அதினால் எண்பிக்கப்பட்ட உரோமான் திருச்சபை அநுசரிக்கும் வேதமே ஆண்டவர் அருளிச்செய்த மெய்யான வேதமென்பதற்கு அற்ப சந்தேகமாகிலும் கொள்ளத் தேவையில்லை. ஆகிலும் இப்பொழுது இவைகளுங் கண்ணாற் காணப்படாமையால், இவைகளையும் விட்டுச் சந்தேகப்பட்ட யாவரும் வேண்டுமாகில் இப்பொழுதுங் காணத்தகுஞ் சில புதுமைகளை மாத்திரஞ் சொல்லிக் காட்டுவோம்.

வேதசாட்சியாகிய அருளாநந்தர் சுவாமியால் விளங்கின புதுமைகள்.

127. — நம்முடைய சத்திய வேதத்தை எண்பிக்க உலமெங்கும் அதற்காக வலியப் பிராணனைத் தந்து, கோடாகோடி பேர்கள் சாட்சி சொல்லியிருக்க, நீங்கள் அந்தச் சாட்சிகளைத் தேடி புற நாட்டிற்குப் போகாமல், இங்கேதானே அதற்குச் சாட்சியைச் சொல்லி உங்களுக்கு எண்பிக்கும் பொருட்டாக ஆண்டவர் அருளாநந்த சுவாமியைத் தெரிந்துகொண்டார்.

இந்த அருளாநந்த சுவாமி நெடுநாளாக இவ்விராச்சியங்கள் எங்குங் காரணக் குருவாய்த் திரிந்து, ஆறுத பத்தியும், அவியாத விசுவாசமும், சலியாத தயையும், மெலியாத தவமும், உடையாத பொறுமையும், மற்றுமுண்டாகிய சுகிர்த புண்ணியங்களும், அவருக்கு விடாத துணைகளாக நின்று உரோமான் திருச்சபைப் பரம சத்திய வேதத்தைப் போதித்த பின்பு, அதுவே மெய்யான வேதமென்றும், அதுவேயன்றி ஈடேற்றமில்லையென்றுந் தானே சாட்சியாக நின்று, சிந்தின இரத்தத்தினால் உங்களுக்கு மாறுத எழுத்தாய் எழுதி வைக்க 1693-ம் ஆண்டில் மாசி மீ

4-ந் தேதி புதன்கிழமை மறவன் சீமையிலுள்ள ஓரியூரிலே மனம் பொருந்தி மகிழ்ந்த மனதோடு, உயர்ந்த துணிவோடு, ஆனந்த ஆசையோடு உயிரை வலியத் தரச் சம்மதித்து, கொடியவர்களுக்கு அஞ்சாத தலையை நீட்டித் தந்து வேதசாட்சியானாரல்லோ?

அப்படியே அருளாநந்த சுவாமியும் உரோமான் திருச்சபை வேதமாத்திரம் பொதுவாய் நிற்கும் மெய்யான வேதமென்று நீங்கள் அறியத் தன் இரத்தத்தினால் எழுதி வைத்த நாள் துவக்கி, இந்நாள்மட்டும் இவர் எழுதினது மெய்யென்று சந்தேகமற எவரும் நிச்சயிக்கும்படிக்கு, ஆண்டவர் தாமே மாற்றப்படாத தேவ முத்திரையிட்டாற்போல அவரைக் குறித்து மட்டில்லாத புதுமைகளை விடாமல் செய்து கொண்டு வருகிறார். ஆகையால் சொன்ன யாவும் போதாமல், இன்னமும் உரோமான் திருச்சபை சேசுநாதர் உண்டாக்கின திருச்சபை என்றும், எவருக்குங் கரை ஏற வேண்டியதாகிப் பொதுவாய் நிற்குந் திருச்சபை என்றுஞ் சந்தேகப்படுவார் உண்டானால், மறவன் சீமைக்குப் போய் விசாரிக்கும்போது அருளாநந்த சுவாமி வேண்டுதலினாலாகிய புதுமைகளைக் காணாத ஊரைக் காண்பதரிதேயாகிச் சலஞ்சாதியாதவனால் தானே தெளிந்து, மோட்சக் கரை ஏற அத்தனை புதுமைகளால் எண்பிக்கப்பட்ட உரோமான் திருச்சபையில் உட்பட்டு நடக்கவேண்டியதென்று நிச்சயம் பண்ணித் தானும் நடக்கக்கடவான்,

128. — ஆராகிலும் இத்தன்மையால் அங்கே போகத் துணிந்தால் கிடங்கூர் பாமணிவயலென்னும் ஊரிலே மறவ இராயப்பனைக் காண்பான். அவன் ஒருவரும் அறியாத பிணியைக்கொண்டு தலை நீங்கலாக உடலில் எங்கும் ஒருவகைக் கொப்புளம் புறப்பட்டு நாவற் பழங்களைப் போல எங்குந் தொங்கி ஆடாநிற்க மிளகுபோலவும், பாக்குப்போலவும், எலுமிச்சங் காய்போலவும், விளாங்காய்ப் போலவும் பற்பல பருமத்துத் தோன்றினதாம்: அவைகளில் சில கொப்புளங்களைக் கீறின இடத்துத் திரளாய் இரத்த

மும், சாமை அரிசிபோலவும் புறப்பட்டதாம். அப்படியே நெடுநாள் அவனைப் பார்த்த யாவர்க்கும் அச்சந் தரும் உருவத்தோடு ஒரு மருந்து உதவியில்லாமல் வருந்தி நாணித் திரிந்த பின்பு, வேதசாட்சியாகிய அருளானந்த சுவாமி வெட்டுண்ட ஸ்தலத்தில் போய் அவர் வேண்டுதலினால் ஆண்டவரை ஆரோக்கியந் தரச் சொல்லி ஆசையோடே மன்றாடி அங்கே கிடந்த மண்ணைக் கரைத்து உடலெங்கும் பூசிக்கொண்டான். பூசின பின் ஆறு நாளிலே சொன்ன கொப்புளமெல்லாம் முழுதும் மறைந்து ஓர் அடையாளமின்றி இந்நாள்வரைக்கும் நன்றாயிருக்கிறான்.

129.— மீளவும் அப்பாலே போய் மணக்குடி குறுமடை என்னும் ஊரில் சென்று அங்கே மறவ அருளப்பனைக் காண்பான். இவனுக்கு எப்போதும் நன்றாயிருந்த இடது கை 1720-ம் ஆண்டில் தோள் மட்டுஞ் செத்துக் கிடந்தாற்போலச் சீவனில்லாமல் துவண்டு, சதை இல்லாமல் வற்றி, அசைவில்லாமல் கிடந்து, தோலும் எலும்புமாய்ச் சுருங்கிக்கருகி நோவதற்கொழிய, ஒரு தொழிற்காயினும் உயிரில்லாமல் வழங்காதிருக்க அதனை வலது கைக் கொண்டு எடுக்கவும், திருப்பவும், வைக்கவும் வேண்டியிருந்ததாம். கண்டவர் யாவரும் அவனுக்கு இரங்கினதன்றி, உதவும் ஒரு மருந்தாயினும் அறிந்து கொடுப்பார் இல்லை. கடைசியிலே மனிதரால் ஆகாத உதவி, வேதசாட்சி அருளானந்த சுவாமியால் ஆகுமென்று நிறைந்த நம்பிக்கையோடு அவர் பாடுபட்ட இடத்துப் போய் அழுது வேண்டிக்கொண்ட பின்னர், அங்கே கிடந்த மண்ணைத் தானுங் கரைத்து நொந்த கையில் பூசினமாத்திரத்து உடனே நோவு நீங்கி, சதை வளர்ந்து, இரத்தம் ஓடி, நரம்புகள் பலத்து, நோகாத வலது கைத்தோளுக்கு இடது கைத் தோள் ஒரு வேற்றுமையின்றி நிற்கவும், அசையவும், நீளவும், முடங்கவும், பாரம் எடுக்கவும், தொழிலைச் செய்யவும் வழங்கினதாம். இந்நாள் வரைக்கும் ஒரு மெலிவின்றிப் பயிரிடுந் தொழிலைச் செய்துகொண்டிருக்கிறான்.

130.— இன்னம் அப்புறம் போய் வெட்டி வயலென்னும் ஊரிலே மறவ இராயனுக்கும், சாந்தாயிக்கும் பிறந்து, பிறவிச் சப்பாணியும், ஊமையுமாய்க் கிடந்த அருளாயி என்பவளைக் காண்பான். இவள் ஏழு வயது மட்டும் ஒரு சொல் உச்சரியாமலும், இடைமட்டும் இருகால் வழங்காமலும் இருந்து அவளைத் தூக்கி வைத்தாலுங் காலை நிறுத்தி நிற்கவும், அவைகளை அசைக்கவுமாட்டாமல் இரு கால்களிலேயுஞ் சதையின்றி, கிள்ளினாலும் நோவின்றி, உணர்வின்றிப் பிறந்த நாள் முதல் ஏழு வயதாந்தனையுங் கிடந்தாள்.

1721-ம் ஆண்டில் அருளாநந்த சுவாமி வேண்டுதலினால் ஆண்டவர் அனுதினஞ் செய்யும் புதுமைகளைக் கேட்டு, அவள் தகப்பனும், அத்தையும், சிறிய தாயும், பலருங் கூடிப் பிள்ளையை எடுத்துக்கொண்டு அவர் பாடுபட்ட நாளாகிய புதன்கிழமை அவர் வேதசாட்சியாய்ப் பாடுபட்ட இடத்துப் போய் ஒருசந்தி பிடித்து, 50 பெயருக்குப் பிச்சையும், 50 பெயருக்கு அசனமுந் தந்து, அப்படி மூன்று புதன் கிழமையுஞ் செய்வோமென்று வேண்டிக்கொண்டு சப்பாணிப் பிள்ளையை அவர் வெட்டுண்ட ஸ்தலத்தின்மேலே வைத்துக் காலைப்பற்றிச் சூழப் பிரதக்ஷிணமாய் இழுத்துத் தளராத விசுவாசத்தோடே வேண்டிக்கொண்ட உடனே அந்நாள் மட்டும் ஒரு சொல்லாகிலும் உச்சரியாத பிள்ளை மழலைச் சொல்லாய்ப் பேசிப் பசிக்குதென்று கஞ்சி தாச் சொல்லிக் காலை ஊன்றி அதன்மேலே நின்று நாலு அடியும் அங்கேதானே நடந்ததுமன்றி, மறு புதன்கிழமை வரும் முன்னே வற்றின கால்களிலும், தொடைகளிலுஞ் சதையும் வளர்ந்து, உயிரும் ஓடிக் குறையொன்றின்றி நடக்கவும், குதிக்கவும், விளையாடவுஞ் செய்தாள். மறுபடிக் காலில் ஒரு நோவும் மெலிவுமின்றி இன்னம் நன்றாய் இருக்கிறாள்.

131.— இதிலேயும் அதிசயமாய் வேறே சப்பாணி நடந்த புதுமையை அறிவதற்குக் கிழக்குப் போய் மறவன் சீமையோடே சேர்ந்து, கடலோரத்திலிருக்குந் திருப்பாற்

குடி என்னும் ஊரில் எல்லாருஞ் சொல்ல அறியப்படும் புதுமையாவது: பரவராகிய லூயிஸ் அந்தோனி என்பவனும், மரியசலோமை என்பவளுமாகிய ஸ்திரீ பூமானும், மூன்று வயது மட்டும் வற்றித் துவண்ட இருகால் சப்பாணியாய்க் கிடந்த ஒரு பிள்ளையைப் பாட்டியார் வீட்டிலே விட்டு மறுபடிப் பிள்ளை பெற மாட்டாமல் சாக இருந்த தாய், அருளானந்த சுவாமி வேண்டுதலினால் ஒரு குறையின்றித் தந்த வேறொரு பிள்ளையை எடுத்துக்கொண்டு இருவரும் 1722-ம் ஆண்டிலே அவர் பாடுபட்ட இடத்துக்குப் போய் அவர் தந்த பிள்ளையை அங்கே வைத்துத் தோத்திரஞ் செய்துகொண்டு வருகையில் வீட்டிலே வைத்த சப்பாணிப்பிள்ளையை நினைத்து அவனுக்கும் ஆரோக்கியந் தரவேண்டுமென்று மிகவும் ஆசையோடே வேண்டிக்கொண்டார்கள்.

அதன் பிறகு அவர்கள் மறுநாள் ஊருக்குச் சென்ற உடனே முதல் நாள் சப்பாணிப் பிள்ளைக்காகத் தாங்கள் வேண்டிக்கொண்ட அந்நேரத்திலே தானே அவனும் உதவியின்றித் தானே எழுந்திருந்து கால்மேல் நின்று, தன் வயதுள்ள மற்றப் பிள்ளைகளைப் போல ஓடவும், விளையாடவுமிருந்தானென்று மற்றவர் சொல்லவுங் கேட்டார்கள். தாங்களும் மகிழ்ந்து அதிசயப்படக் கண்ணாலே கண்டார்கள்.

132.— மீளவும் நடுச் சீமையிலிருக்குஞ் சருகணியென்னும் ஊரிலே, குலத்தில் இடையன், தொழிலில் உபாத்தியென்னும் ஆதியப்பனுக்கும் அவன் ஸ்திரீ ஆனந்தாயிக்கும் பிறந்த பூவாயி 1722-ம் ஆண்டில் பதினைந்து வயதுள்ளவள், இருந்தாற்போலே மயங்கி விழுந்து செத்தாற்போலே கிடந்தபின்பு, எழுந்திருந்து இருவிழி புறப்பட, இருகண் வீங்கி, பார்வையுங் கெட்டு, அகன்ற பொருள் ஒன்றையுங் காணாமல், அடுத்த பொருளைப் புகை படர்ந்தாற்போலத் தெளிவறக் கண்டு, இராவில் சுடர் விளக்கு எரித்தாலும் ஒன்றையுங் காணாமல், பகலினும் அருகே ஆள் முன் போனாலொழிய வழியைக் கண்டு செவ்வே போக

மாட்டாமலிருந்தாள். வந்த மயக்கமும், குருடுந்தானே கரைந்து நீங்குமோவென்று இரண்டு மாதமும் பார்த்துக் கொண்டிருந்த இடத்தில் அது நாளுக்கு நாள் அதிகமதிக மாகி, மருந்து ஒன்றுந் தேடாமல் மிகுந்த நம்பிக்கையோ டே அருளாநந்த சுவாமி பாடுபட்ட ஸ்தலத்தைச் சேவிக் கப் போனாள்.

அங்கே முழங்காலிலே நின்று அவரை ஆண்டவர் பலத்தினாலே தன் குறையைத் துடைத்து இரட்சிக்க வேண்டுமென்று உறுதி விசுவாசத்தோடே வேண்டிக் கொண்ட உடனே சூழ எல்லாமும் இராவிருளினும் இருண்டு தோன்றி மயங்கி விழுந்தாள். இப்படி மூச்சினை இன்றிச் செத்தவளைப்போல ஒன்றரை நாழிகையாகக் கிடந்ததைக் கண்டு மற்றவரெல்லாருஞ் செத்தாளென்று அழுதிருக்க அங்கே நின்ற சில பிராமணர், கண்ணைத் தேடி வந்தவளைக் கொல்லுவது உங்கள் சுவாமி செய்யும் புதுமையோவென்று நகைத்துச் சொல்லிக்கொண்டிருக் கத் தூங்கினவள் விழித்து எழுந்தாற்போல பூவாயி தானே எழுந்து, சூழயாவையுங் குறையொன்றின்றித் தெளிவாய்க் கண்டு, புதுமை, புதுமையென்று களிகூர்ந்து அவள் சொல்ல, அந்தப் பிராமணரும் மற்ற யாவரும் மிகவும் அதிசயப்பட்டுப் புதுமை இதுவேயென்றும், இது புது மை அல்லவெனில் புதுமை ஏதென்றும், ஆண்டவரையும், அருளானந்த சுவாமியையுந் தோத்திரஞ் செய்தார்கள். பூவாயியோவெனில், முன்போல் வழியைக் காட்டுந் துணை யைத் தேடாமல் எல்லாருக்கும் முன்னே நடந்து போ னாள். பின்னையும் இந்நாள்வரைக்குங் கண்ணுக்கு ஒரு நோ வின்றிப் பார்வைக்கு ஒரு குறையுமின்றி இருக்கிறாள்.

133.— இதிலேயும் அதிசயமாக ஓரியூர்த் தென்புறத் திலிருக்கும் முழத்தகமென்னும் ஊரிலே 1721-ம் ஆண் டில் பள்ளப் பெரியானுக்கு அவன் ஸ்திரீ அன்புடையாள் பிறவிக் குருடியாய் ஒரு பெண்ணைத் தந்தாள். அந்தச் செய்தியைக் கேட்டு ஊரெல்லாங் கூடிப் பார்க்கப்போன

இடத்து நன்ருய்த் திறந்த இரண்டு கண்ணும் வேற்றுமை யின்றித் தூயவெள்ளையாய்த் தோன்றிக் கறுத்த விழி சற்றுங் காணப்படவில்லை. அப்போது மனதிலிரங்கிச் சில பேர் புதுமைகளால் மிகவும் விளங்கின அருளாநந்த சுவாமியை நினைத்து நாமும் அக்கியானிகளும் இந்த வேதத்தின் சத்தியத்தையும் உம்முடைய புதுமையான திறத்தையும் அறியத் தயைபுரிந்திரங்கி, இந்தப் பிள்ளைக்கு ஒரு கண்ணுகிலுந் தாவேண்டுமென்று மிகவும் வேண்டிக் கொண்டு வீட்டிலே வைத்திருந்த அவர் பாடுபட்ட ஸ்தலத்து மண்ணைக் கரைத்துச் சற்றுக் குழந்தைக்கு உள்ளே கொடுத்து இருகண்ணிலேயும் பூசினார்கள். பூசினவுடனே அவர்கள் வேண்டினபடிக்கு ஒரு கண்ணுக்கு மாத்திரம் வெளிச்சமாக வலது கண் பிறந்த படி வெள்ளையாய்க் கிடக்க, இடது கண்ணிலே கருவிழிதோன்றி மருந்தொன்றில்லாமல், குறையும் ஒன்றில்லாமல் இப்பொழுதும் இருந்து அந்தக் கண்ணாலே நன்ருய்க் காண்கிருள். இதற்கு ஊரொல்லாஞ் சாட்சியாக நின்று சர்வேசுரன் வல்லமையும். இந்த வேதத்தின் மகிமையும் பகலினும் விளங்கினதாமே,

134.— மீளவும் இராசியமங்கலக் குறுமடை என்னும் ஊரிலே பள்ள அன்புடையானுக்கும், அன்புடையாளுக்கும் பிறந்த அருளாயிக்கு 1723-ம் வருஷத்தில் பெரு வியாதி வந்து கால் விரலும், கை விரலும் எல்லாம் புண்ணுகி இரத்தமும், சீழும் ஓடித் துர்க்கந்தம் நாறி, நகங்கள் விழுந்து, விரல்கள் குறைந்து, பல வைத்தியர் அறிந்த மருந்தெல்லாந் தந்து, பலனுமின்றி, நம்பிக்கையுமின்றி அவளைக் கைவிட்டார்கள். நாள்வட்டத்திலே புண்ணும் வளர்ந்து கிளம்பின நாற்ற மிகுதியால் அவள் கிடந்த வீட்டில் ஒருவரும் அடிவைக்கமாட்டாமல் அவளும் பத்து வயது பிள்ளையாயினுந் தரையில் அடிவைத்து நிற்கவும், நடக்கவுமாட்டாதிருந்தாள்.

இப்படி நெடுநாள் பூலோகவைத்தியர் உதவியின்றிக் கிடந்த பின்பு, பரலோகத்துள்ள பரம வைத்தியராகிய

அருளானந்த சுவாமி உதவியைத் தேடச் சிலபேர் அந்தப் பிள்ளையை எடுத்து அவர் வெட்டுண்ட ஸ்தலத்துக்குக் கொண்டுபோய் அங்கே வேண்டிக்கொண்டார்கள். அன்று தானே வியாதியின் கடூரந் தணிந்து, முன்னே தரைமேல் காலை வைக்கமாட்டாத பிள்ளை கஸ்தி இல்லாமல் அநேக தூரம் நடந்தது. நாலாநாளோவெனில், ஒரு மருந்துமின்றி எல்லாரும் அதிசயப்படப் புண்ணெல்லாம் முழுதும் ஆறிக் காலிலேயும், கையிலேயும் நகமும், சதையும், நரம்பும், தோலும் வளர்ந்து, ஒரு குறையின்றி எவருக்கும் உள்ள படியே காலும், கையுமாகி, மறுபடி அந்த வியாதி அடையாளமுமின்றி இன்னம் நன்றாய் இருக்கிறாள்.

135-ம்.— இதுவுமன்றி ஓரியூர்ப் பள்ள இஞ்ஞாசி என்பவன் 1723-ம் ஆண்டில் புரட்டாசி மாதந் தோஷக் காய்ச்சலாய் விழுந்து, அடுத்த கிராமமாகிய புல்லூருக்கு அவன் சகலனும், உபதேசியும், வைத்தியனுமாயிருக்கிற சூரன் வீட்டிலே கொண்டுபோய் வைத்தார்கள். சொன்ன சூரனும், வேறே பல வைத்தியரையுங் கூட்டி ஆனதெல்லாம் பார்த்த இடத்து நம்பிக்கையும் அற்றுப்போய், இஞ்ஞாசியும் நினைவின்றிச் செத்தாற்போல கிடந்தான். முன்னிருந்த வியாச்சியத்தினால் அவன் செத்தால் அங்கே அடக்கவொட்டார்களென்று, பிழைக்க அங்கே வந்த இஞ்ஞாசியை இனிக் கல்லறையிலே வைக்க அவன் ஊராகிய ஓரியூருக்கு எடுத்துக்கொண்டு போகத் துணிந்தார்கள். போகிற வழியில் அருளானந்தசுவாமி பாடுபட்ட ஸ்தலத்துக்கு அருகே போகையில், ஆண்டவர் தந்த உறுதித் துணிவு மனதில் கிளம்பக் கண்டு, கூடப்போன எல்லாரும் நம்பிக்கொண்டு அங்கே போய் இஞ்ஞாசியைச் செத்த பிணமாகக் கிடத்தி வெகு நேரம் ஆண்டவரை வேண்டிக் கொண்டார்கள்.

அப்பொழுதெல்லாங் கால் கை அசைவொன்றின்றி அவன் கிடந்ததனால் முழுதுஞ் செத்தானோவென்று சொன்ன சூரன் பெண்சாதி அவன் காலைப் பிடித்துப் பார்த்தாள்.

அதற்கு இஞ்ஞாசி முகந் திரும்பிப் பார்த்தமையால் எல்லாரும் அதிகமாய் நம்பி அதிக சுறுசுறுப்போடே மன்றுடினார்கள். அதன்பின், பின்னுஞ் சற்றுநேரம் போய் இஞ்ஞாசிதானே உதவியின்றி, வியாதியின்றி, பலவீனமின்றித் தெளிந்த முகத்தோடு எல்லாருங் காணவும், அதிசயப்பட்டு மகிழவும் எழுந்திருந்து நன்றாய் இருக்கிறேனென்று அவனும், மற்ற யாவரும் மகிழ்ச்சியால் அழுதுகொண்டு வேதசாட்சி அருளாநந்த சுவாமி வேண்டுதலினால் அந்த அதிசயமான புதுமையைச் செய்தருளின சர்வேசுரனைத் தோத்திரம் பண்ணி, எல்லாருஞ் சூழவர இஞ்ஞாசி இளைப்பில்லாமல் நடந்து வீட்டுக்குச் சென்று, தன்னிடத்திலே சம்பவித்த புதுமையை எங்கும் இன்னஞ் சொல்லிக்கொண்டு திரிகிறான்.

136.— இவ்வண்ணமே ஆண்டவர் அருளிச் செய்த வேதத்துக்காக அருளாநந்த சுவாமி பாடுபட்டுச் சிந்தின இரத்தத்தினால் அதற்குச் சாட்சியாக நின்றார். ஆண்டவரும் அவரைக் குறித்துச் செய்யும் புதுமைகளினால் அவர் பாடுபட முகாந்தரமாயிருந்த வேதத்துக்கும், அவர் மோக்ஷத்தில் அடைந்த மகிமைக்குந் தாமே சாட்சியாக நிற்கிறார். இப்படிப்பட்ட புதுமைகள் மட்டில்லாதாயினும் இது விரியுமென்று அஞ்சிச் சொன்னது போதுமென்று இதிலே அறியவேண்டியதாவது: சொன்ன புதுமைகளும், அதற்கு அதிசயமான புதுமைகளும் மறவன் சீமை எங்குங் கண்ணால் காணப்படுஞ் செய்தியல்லோ? ஆகையால் கடலைக் கடந்து புதுமைகளைத் தேடவும் வேண்டாம், முன்னோர் எழுதின புதுமைகள் சிலஞ் சாதித்த பதிதர் மெய்யென்று ஒத்துக் கொள்ளமாட்டாமையால் அவைகளைக் கேட்கவும் வேண்டாம். இங்கே தானே இப்போது தானே எல்லாரும் அறிய நம்முடைய வேதத்தைக் கேளாதவருஞ் சாட்சியாகக்கொண்டு சொல்லும் புதுமைகளைச் சொல்லிக் காட்டினோம்.

சொன்ன புதுமைகளால் ஆரோக்கியம் அடைந்த பேர்கள் எல்லாரையும் நாமே கண்டு பேசினோம். அவர்

கள் சொன்னதை ஆராய வேண்டுமென்று சாட்சியாய்க் கூட நின்ற அநேகம் பேர்களை வெவ்வேறே அழைத்து, நுணுக்கமாய்ச் சோதித்து, சத்தியமுங் கொண்டு கேட்ட இடத்தில் எல்லாரும் அந்தப் புதுமைகள் சம்பவித்த நேரமும், இடமும், வகையுஞ் சொன்னதிலே சற்றும் வேற்றுமையின்றி ஒத்த சாட்சியைச் சொல்லக் கேட்டோம். ஆகையால் இன்னமும் முழுதுஞ் சந்தேகம் விடாதவர் உண்டானால், அவர்கள் தாமே அங்கே போய்ப் பராமரிக்கக்கடவார்கள்.

சொன்னதெல்லாம் மெய்யென்று காண்பதால் பொய்யை ஒப்பிக்க ஆண்டவர் புதுமை செய்யமாட்டாததனால், மெய்யான வேதத்தை ஒப்பிக்க ஒரு புதுமை போதுமென்றிருக்கையில், உரோமான் திருச்சபை அநுசரிக்கும் வேதத்தை ஒப்பிக்க ஆண்டவர் தமது முத்திரையென்று உங்கள் கண் முன்பாகக் கோடாகோடி புதுமைகளைச் செய்து கொண்டு வருகிறதொன்று கண்ணால் கண்டவராகி, இந்த வேதமே ஆண்டவர் அருளிச் செய்த மெய்யான வேதமென்றும், கரை ஏறுதற்கு எவருக்கும் வேண்டின வேதமென்றுஞ் சந்தேகப்படாமல் ஒத்துக்கொள்ளக்கடவீர்கள். இப்படியும் ஒத்துக்கொள்ளாதவன் தன் கண்ணைத் தனக்குப் பிடுங்கின குருடனென்னப்படுவது போதாமல், கையாலே தடவியாயினும் எளிதாய் அறியத்தகுஞ் சத்தியத்தைத்தான் கண்டுபிடிக்கமாட்டாமையால் அவன் மனிதர் கூட்டம் அல்லவாகி அவனை இருகால் வேசரி என்பது நியாயந்தானே.

18-ம் அதிகாரம்.

வேத விளக்க நிலைமை.

137.— பதிதர் சொல்லுந் தப்பறை மனதில் புகுத்தின இருளைத் துடைத்துக் கதிரை வீசிப் பதினெண் சுடருள் விளக்குப்போல எரிப்பப் பதினெண் அதிகாரமாக முடித்த இந்த வேத விளக்கம் நிற்கும் நிலைமையேதெனில், மோட்சக் கரை ஏறுதற்கு எவருக்கும் வேண்டின மெய்யான ஆசைதானே, இந்த ஞான விளக்கு நிற்பவும், எரிப்பவும், பொன்னால் செய்த நிலைக்கால் ஆகுமென்று எல்லாரும் அறியக்கடவீர்கள். இந்த ஆசையில்லாதவற்கு இது விளக்காக நிற்கவுமாட்டாது. தான் இதை வாசித்தாலும், அதன் பலன் அடைந்து தெளியவுமாட்டான். கரை ஏற ஆசையுள்ளவன் ஞானத்தையும் அறிய ஆசை கொண்டு அதனை எளிதாய்க் கண்டுக்கொள்வான்.

அப்படியே வேதத்தில் ஞான ஆகமம் 6-ம் அதிகாரம் 13-ம் வசனத்தில் ஆண்டவர் திருவுளம் பற்றினதாவது: எக்காலத்து மங்காத ஒளி விளக்காமே ஞானம். அதுவே தன்னை விரும்பினவற்கு எளிதாய்த் தோன்றி, அதுவே தன்னைத் தேடினவற்கு அகப்படுமென்றார். அந்த ஆசை இல்லாதவரோவெனில், பதிதர் சமயங்களிலுள்ள அபத்தங்களை ஆராயவுமாட்டாமல், சத்திய வேதத்துரிமையைக் கேட்கவுமாட்டாமல் இருகண் மூடிக்கொண்டு உச்சிப்பகலும் இருண்டதென்று தூங்கிக்கிடப்பார்கள்.

138.— இதனால் சிலபேர்கள் இங்கே சொன்ன நியாயங்களைக் கேட்டுப் பட்ட சந்தேகமும், அதிசயமுந் தீரத் தெளிவுண்டாம். அதேதெனில், இத்தனை தெளிந்த நியாயங்களைப் பதிதர் அறியார்களோ? அறிந்தால் அவைகளால் சந்தேகமற ஒப்பிக்கப்பட்ட உரோமான் திருச்சபை அநுசரிக்கும் வேதத்தின் சத்தியத்தைக் கண்டுக்கொள்ளாமலும், அநுசரியாமலும் இருப்பார்களோவென்று சில

பேர்கள் அதிசயப்பட்டுக் கொண்டார்கள். இதற்கு முன் சொன்னது தான் மறுவுத்தரமாமே. கரை ஏற ஆசை இல்லாதவன் நியாயத்தைக் காணவுமாட்டான். ஏதாகிலுங் கண்டால் பாவங்களை நீக்கி நடக்கத் துணியவுமாட்டான்.

அப்படித்தானல்லோ பரதாரத்தை விரும்பினவனும், பறித்துயிர் கொல்பவனும், தாயை உதைப்பவனுந் தாங்கள் செய்வது பாவமென்றும், தீமையென்றும் அறியார்களோ? அறிந்தும் அறியார்களைப்போலக் காம வெறியாலும், பொருள் ஆசையாலும், கோப மிகுதியாலுங் கரை ஏற ஆசை இல்லாமல் மயங்கிக் கிடக்கிறார்கள். மற்றப்படிக் கரை ஏற ஆசையினால், உரோமான் திருச்சபையை விட்டுப் பதிதர் சமயங்களில் உட்படுவார் ஒருவரிருவர் உண்டோ இல்லையோவென்று சந்தேகந்தானே. பதிதர் சமயங்களை அநுசரிக்கும்படிக்கு வர்மத்தினாலே கெடுவார் சிலரோ. சகல பாவங்களுக்குத் தடையொன்றின்றி மனதின்படியே அதிலே புரண்டு கிடப்பதற்கு ஆசையால் கெடுவார் சிலரோ. பதிதர் தந்த உத்தியோகமும், பணமும் ஆசைப்பட்டுக் கெடுவார் சிலரோ.

ஆகிலுஞ் சரக்கைக் கொள்பவனன்றி விற்பவன் அதனைக் கொள்ளச் சொல்லிப் பிறருக்குப் பணந் தந்தால் அந்தச் சரக்கு ஆகாதென்று இதிலேயுங் கண்டுகொண்டு மறுக்கத் தேவையில்லையோ. ஆகையால் எல்லாரையுங் கரை ஏற்றக் காரணக் குருவாய் ஆண்டவரால் அனுப்பப்பட்டவர் நாமாகக்கொள்ள, வழி தப்பி வழுவிக் கெடும் உயிர்கள் மேல் இரங்கி, எல்லாருக்குஞ் சொல்லத்தகும் உணர்ச்சியாவது: வடிவாய்த் தோன்றி ஒழியும் மின்னல் ஒளியை விரும்பாமல் என்றுங் கெடாத சூரியன் கதிரை விரும்பிப் பதிதரால் உங்களுக்கு இலாபம் வந்தாலும், கேடு அதென்று எண்ணிப் பகல் ஒளியினும் விளங்கின சத்திய வேதத்தைக் கைவிட வேண்டாம். நாலுநாள் நிற்க அறியாது அழியும் வாழ்வுகளை எண்ணாமல், என்றும் அழியாத பரம கதி பேரின்ப பாக்கியங்களை ஆவலோடே தேடக் கடவீர்கள்.

உரோமான் திருச்சபைக் கப்பால் ஈடேற்றம் இல்லை யென்று சந்தேகமறக் கண் இல்லாதவருந் தடவிக் காணும் படிக்கு இதிலே ஒப்பித்தபின்பு தலைமேற் நிற்குஞ் சாவுக்கு அஞ்சாமலும், காற்கீழ் அவியா தெரியும் நரக அக்கினிக்கு அஞ்சாமலும், நாலுநாள் நீசச் சிற்றின்பத்தை நக்கிக் கொள்ள ஆசையால் ஊழியுள்ளதனையும் வேகாமல் வெந்து, சாகாமல் செத்து, நரகில் அவியாத கட்டையாய்க் கிடந்து வருந்துவது உங்களுக்கு நல்லதோ? லுத்தேரோடே கூடப் பிறந்தாள் ஒருத்தி, அவன் புதுச் சமயத்தை உண்டாக்கின செய்தியைக் கேட்டுச் சந்தேகப்பட்டுத் தான் அவனுக்கு எழுதி நான் இந்நாள்வரைக்கும் அநுசரித்த உரோமான் திருச்சபை வேதம் நல்லதோவென்று கேட்டாள்.

அதற்கு லுத்தேர் கூடப் பிறந்தவளை ஏய்க்கமாட்டா மல் எழுதின மறுமொழியாவது: பயமுமின்றித் தடையு மின்றி மனதின்படியே இங்கே வாழ்வதற்கு நான் சொல் லும் வேதமே நல்லது. சாகுங்காலத்தில் அஞ்சாமல் நம் பிக்கையோடிருந்து, பரமகதி அடைவதற்கோ வெனில், உரோமான் திருச்சபை வேதம் ஒன்றே நல்லதென்றான். இதனைக் கேட்டவள் அவனையும் வெறுத்து, அவன் சொன்ன தப்பறைகளையும் மறுத்து உரோமான் திருச் சபையை விடாமல் மரணபரியந்தம் நன்னெறி ஒழுகி வழு வாமல் நடந்தாள். அவளுக்கு லுத்தேர் சொன்னதை உங் களுக்குச் சொன்னதாகக் கொண்டு அவளைப்போலத் துணி யக் கடவீர்கள்.

139.— அப்படித்தானல்லோ அநுசரித்த வேத வகை யிலே உரோமான் திருச்சபையார் மாத்திரம் மரண நேரத் தில் அஞ்சாமல் நிற்பார்கள். அதெப்படியெனில், தீர்வை இட எழுந்தருளின சேசுநாதர் அவனவன் அநுசரித்த வேதமும், நியாயமுங் கேட்கும்போது உரோமான் திருச் சபையாரெல்லாருஞ் சொல்லத்தகும் மறுமொழியாவது: நாங்கள் அநுசரித்த வேதம் ஏதெனில், கல்வித் துறையும், தவத் துறையுங் கடந்து விளங்கின வேதபாரகர், எங்கும்

எப்போதும் விபரீதமின்றி நடுக்கமின்றி எழுதின ஞானப் பிரபந்தங்களால் சாட்சி சொல்லவும், எங்கும் பிரிந்து நின்ற அருந் தவத்தோரும், உயர் குலத்தோரும், குருக்களும், மேற்றிராணிமார்களும் பற்பல முறையும், பற்பல இடத்துங் கூடி நெடுநாள் தெளிய ஆராய்ந்து ஒத்த சாட்சி சொல்லவும், தேவரீர் தலைவராக வைத்த அர்ச். இராயப்பனை விடாத தொடர்போடு ஒருவர்க்கு ஒருவர் பின் சென்று ஆளா நின்ற அர்ச். பாப்புக்கள் பொய்யா மொழியால் சாட்சி சொல்லவும், மாறு முறையோடு உலகமெல்லாம் அதனை அநுசரித்த அரசரும், அறிஞரும், குலத்துயர்ந்தோரும், அறத்தமைந்தோரும் அதனை அணுகிச் சாட்சி சொல்லவும் மட்டில்லாத சனங்கள் ஆணும், பெண்ணும் எவ்வயதிலும், எக்குலத்திலும், எவ்விடத்திலும், எக்காலத்துங் கொடிய துயர்க்கு அஞ்சாமல் வலியப் பிராணனைத் தந்து சாட்சி சொல்லவும், தேவரீர்தாமே மட்டில்லாத புதுமைகளை எங்கும் எப்போதுஞ் செய்து சாட்சி சொல்லவும், சந்தேகமொன்றின்றி விளங்கி எக்காலத்துங் குறையாமல், மிகாமல், வேறுபடாமல், ஒரு நிலையாய் ஒரு முகமாய் நின்ற வேதமாகிய உரோமான் திருச்சபை அநுசரிக்கும் வேதமே நாங்களும் அநுசரித்தோமென்று தாங்கள் அச்சமொன்றின்றி நிற்பார்கள்.

பதிதரோவெனில், ஆண்டவர் அருளிச் செய்த வேத வசனத்தொவ்வாமலும், ஞானப் புத்திக்கொவ்வாமலும், ஒவ்வொரு சமயந் தன்னோடு ஒவ்வாமலும், பகையில் பிறந்து, காமத்தில் வளர்ந்து, சகல பாவங்களில் பலத்தொரு மெய்ப் புதுமையின்றி, ஒரு தலையின்றி, ஓர் ஒழுங்கின்றி நாளுக்கு நாள் மாறி, எல்லாப் பாவங்களுக்கும் அகன்ற வாசலைத் திறந்த சமயங்களைப் பாவத்தாசையாலும், கைப்பொருள் ஆசையாலும் அவர்கள் அநுசரித்தார்கள் என்றமையால், அன்று தீர்வை இட வந்தருளின நாதருக்கு மறு உத்தாரஞ்சொல்லமாட்டாமல் அஞ்சிப் பதறி நரகத்திலே தள்ளுண்டு என்றென்றைக்குங் கெடாத பாடு படுவார்களல்லோ? ஆகையால் வந்து தீராத கேடு வரும்

முதலே பதினெண் சுடர்விளக்கு ஏந்தி நாம் இங்கே சுலபமாய் இந்த வேத விளக்கத்தில் காட்டின தப்பாத வழியைப்பற்றி மோட்சக்கரை ஏற ஆசையைக் கொண்டு நடக்கக்கடவீர்கள்.

140.— பசாசு தந்திரத்தால் பதிதர் மயக்கத்தில் அகப்பட்டவர்களோவெனில், மெய்யான விசுவாசமாகிய தேவ திரு விளக்கு ஒளியை மறந்து, பொய்ச் சமயமாகிய விடியாத இராவிருளில் கிடந்து, நல்லுயிர் கொல்லும் பாவமே தீமையென்று எண்ணுமல் சுக நிழலென்று அதன் கீழ் ஒடுங்கி, நிலை அதென்று உட்கார்ந்திருந்து காற்கீழத் திறந்த நரகத்தில் அவியாத ஆக்கினைக்கு அஞ்சாதிருக்கிறார்களே. இதனை அறிந்து நீங்களே அவர்கள்மேல் இரங்கி ஆண்டவரைப் பார்த்துச் சக்கரியாவென்பவர் அர்ச். லூக்கா சுவிசேஷத்தின் முதல் அதிகாரம் 79-ம் வசனத்தில் சொன்னாற்போல ஒப்புரவுள்ள வழியிலே நாம் எல்லாருங் கூடி நடக்கும்படிக்கு இருளிலும், சாவின் நிழலிலும் உட்கார்ந் திருந்தவர்களை விலக்குவீராக சுவாமீ என்று விடாமல் வேண்டிக்கொள்ளக் கடவீர்கள்.

மற்றப்படி மிக நன்ருய் அறியவேண்டியதாவது: அர்ச். சின்னப்பர் பதிதரை மிகவும் விலகச் சொல்லிப் பற்பல இடத்தில் கட்டளையிட்டதன்றி, அர்ச். அருளப்பர் எழுதின 2-ம் நிருபத்தின் 10-ம் வசனத்தில் எல்லாருக்கும் வேத முறையாகக் கற்பித்ததாவது: கிறீஸ்துவின் உபதேசத்தை விட்டுப் போனவன் உங்கள் அண்டைக்கு வந்தால் வீட்டிலே அவனுக்கு இடமுங் கொடாமல், வாழவென்றுஞ் சொல்லாமல் இருக்கக்கடவீர்கள். வாழவென்று அவனுக்குச் சொன்னல் அவன் பாவங்களில் உங்களுக்கும் பங்கு உண்டாகுமென்ருர். ஆகையால் சேசுநாதர் தந்த சத்திய வேதத்தைக் கேளாதவனேடு உறவாடினாலும், அதனைக் கேட்டு மறுத்த பதிதனேடு உறவெல்லாம் ஆகாதென்று வேதத்தில் எழுதப்பட்ட சத்தியமாமே. இந்தத் தேவ கற்பனையை மீருமல் எப்போதுந் திருச்சபை பதி

தனை முழுதும் விலகி நடந்த உத்தம முறை இதென்று அறியக்கடவீர்கள்.

இதிலே தெயொதோரேத்தென்பவர் தந்த புராணங்களின் 4-ம் காண்டத்தின் 14-ம் அத்தியாயத்தில் எழுதினபடியே சமோசத்தேஞ்சியர் இடத்தில் நடந்ததை மாத்திரம் இங்கே சொல்லிக் காட்டுவோம். அதாவது: அந்நகரிலுள்ள யாவரும் உரோமான் திருச்சபைக்கு உட்பட்டிருக்க அவர்களுள் குலத்திலும், உத்தியோகத்திலுமே நின்ற ஒருவன் மாத்திரம் உணர்விலே கீழ்ப்படத் தாழ்ந்து பதிதனாயிருந்தான். அதனைப்பற்றி மற்றவரெல்லாரும் அவன் குலத்தின் மேன்மையும், உத்தியோகத்தின் வல்லமையும் பாராமல் அஞ்சாத வேதத்துணிவோடு ஒருங்குடன் கூடி அவனை விலகி அவனோடு உண்ணவும், பேசவும், இருக்கவுஞ் செய்யாமல் அவனே குளித்த தடாகத்திலே முதலாய் ஒருவருங் குளிக்கமாட்டாதிருந்தார்கள்.

மீண்டொரு நாள் சில பாலர்கள் கூடி தெருவிலே பந்து விளையாடுகையில், அந்தப் பதிதன் குதிரை ஏறி வந்த இடத்தில் அவர்கள் ஆடி எறிந்த பந்து தவறிப் போய் அவன் குதிரைக் குளம்பில் பட்டதென்று கண்ட சிறு பாலர் கோவென்றலறி, ஒருங்குடனோடி விறகுகளைத் திரளாய்த் தெருவிலே குவித்துத்தழல் மூட்டுவித்து ஊதிக் கனகனவென்று அழலெரிந்த பின்பு, பதிதன் குதிரை தீண்டின பந்தைக் கையால் தொடாமல் நீண்ட குறட்டால் எடுத்து நெருப்பில் போட்டுச் சூழ அவர்களெல்லாரும் முழங்கிக் கூப்பிட அதைச் சுட்டெரித்தார்கள். இதோ திருச்சபையை விட்டுப் பிரிந்த பதிதனை நாமும் விட்டு நீங்கிப் பிரிந்து நடக்க வேண்டிய தன்மையே. இதுவுந் தன் உயிர் கெடாதபடிக்கு அவனவன் தான் தன்னைச் சிநேகிக்க வேண்டிய முறையாமொழிய அவர்கள்மேல் வைத்த பகையாமென்று நினைக்கவும் வேண்டாம்.

சாக வேண்டுமென்று கிணற்றில் விழுந்து செத்தவனோடே கூட விழுந்து சாகாதவன் அவனைப் பகைத்தவன்

என்பார் உண்டோ? ஒருவன் தன் இரு கண்களைப் பிடுங்கிக்கொண்டு வழியில் இடறித் தவறக் கண்டால் இரங்கி அவனுக்குக் கை தந்து நெறியில் கூட்டிக்கொண்டு போவதே நல்லதொழிய நீங்கள் அவனுக்குச் சிநேகிதனொன்று கூட உங்கள் கண்களைப் பிடுங்கிக்கொள்வது அக்கிரமமல்லவோ? ஆகையால் நீங்கள் கூடக் கெடாதபடிக்குப் பதிதனை முழுதும் விலகவுங் கடவீர்கள்; அவர்கள் விட்ட திருச்சபை நெறியில் சேர்ந்து உயிர் பிழைக்கும்படிக்கு அவர்களுக்குக் கை தந்தாற்போல அநுதினம் அவர்களுக்காக வேண்டிக்கொள்ளவுங் கடவீர்கள். இதுவே சேசுநாதர் கற்பித்த ஞான சிநேகத்து ஒழுங்காமொழியப் பிறனைச் சிநேகித்தாற்போலத் தன் ஆத்துமத்தைப் பகைத்துக் கெடுவது முழு மதிகெட்டவன் நினைக்கும் அக்கிரமந்தானே.

ஆகிலும் அறிந்தவர் முன்னே பூனையைப்போலே ஒதுங்கி, அறியாதவனைக் கண்டால் புலியைப்போல் பாய்ந்து கர்ச்சிப்பது பதிதர்க்கெல்லாம் உள்ள இயல்பாகையில், உங்களைக் கெடுக்க வேத உதாரணங்களைக்கொண்டு தாங்கள் சொல்லும் அபத்தங்களை ஒப்பிக்கவந்தால், நீங்கள் அதற்கு இடங் கொடாமல் அவர்கள் சொன்னதற்கு மறு உத்தாரஞ் சொல்லவுந் தேவையில்லை. எல்லாவற்றிலும் நீங்கள் மனதிலே தேறவும், பதிதருக்கு வாயை அடைக்கவும் ஒரு பொது நியாயத்தை மாத்திரம் இங்கே சொல்லிக் காட்டுவோம். அதாவது: அர்ச். மத்தேயுஸ் சுவிசேஷத்தின் 16-ம் அதிகாரம் 18-ம் வசனத்திலே சேசுநாதர் திருவுளம் பற்றித் தாம் ஸ்தாபித்த திருச்சபை எக்காலத்துங் கெடப்படாமல், பசாசினால் வெல்லப்படாதென்றதினாலேயும், மெய்யான திருச்சபை முதல் 500 வருஷத்தின் பிறகு லுத்தேர் காலத்து மட்டும் 1000 வருஷமாகக் கெட்டுக்கிடந்ததென்றால், 1000 வருஷமாக ஒருவருங் கரை ஏற மாட்டாமல் ஆண்டவர் நீதிக்கும், தயைக்குங் குறை உண்டாகும் என்றதினாலேயும், திருச்சபை கெடலாமென்றால் மனிதர் கொண்ட விசுவாசத்தில் நிச்சயமாக மாட்டாதென்றதினாலேயுஞ் சேசுநாதர் ஸ்தாபித்த மெய்யான

திருச்சபை ஒருகாலுங் கெடப்படாதென்பது குன்றாத சத்தியமாமே.

ஆகிலும் முதல் 500 வருஷமட்டும் பதிதர்கள் சொன்னபடியே உரோமான் திருச்சபை சேசுநாதர் ஸ்தாபித்த மெய்யான திருச்சபையாக நின்றதாமே, ஆகையால் அந்த 500 வருஷம் மெய்யான திருச்சபையாக நின்ற உரோமான் திருச்சபை கெடப்படாமையால் கெட்டதுமில்லையென்று சொல்லக்கடவோம். ஆகையால் இன்னம் இந்நாளிலே அதுவே கெடாமல் சேசுநாதர் ஸ்தாபித்த மெய்யான திருச்சபை என்பது நிச்சயந்தானே. ஆகையால் அதனைவிட்டுப் பிரிந்த சபை எல்லாம் பொய்ச் சபையென்று வெறுத்து மெய்யான திருச்சபையில் மாத்திரம் உள்ள ஈடேற்றத்துக்கு ஆசைப்பட்டு உரோமான் திருச்சபையை விடாமல் அதுவே அநுசரித்த வேதத்தை நீங்களும் மரணபரியந்தம் விடாதபடிக்கு நடக்கக்கடவீர்கள். இந்தச் சத்திய நியாயமே பகைவர் எய்த அம்புகளைத் தாங்குங் கேடயமாகவும், அவர்களை வெல்லும் வச்சிராயுதமாகவும் விடாமல் பிடிப்பதொழிய ஏழைச் சனங்கள், குருடர் சிலம்பஞ் செய்தாற்போல வேறே தர்க்கத்துக்கு இடங் கொடுக்கத் தேவையில்லையென்று நிச்சயமாகக் கொள்ளக்கடவீர்கள்.

வேத விளக்கத் தொகுப்பாகிய விசுவாச சங்கீர்த்தனம்.

பாலில் கலந்த தண்ணீரை நீக்கித் தூய வெண் டூவி அன்னங் கலப்பின்றி இனிய பாலை உண்ணுமென்பார் சிலரோ. இது அரிதாயினுஞ் சத்திய வேதத்தில் பலவகைப் பதிதர் கலந்த பொய்யை நீக்கிக் கலப்பில்லாத தேவ இரகசியங்களை உட்கொள்ளுந் தன்மையே அதிலும் மிக அரிதல்லோ? இதனை அறிந்து பாலில் கலந்த நஞ்சினையுண்டு உயிர் கெடாமல் காக்கும்பொருட்டு நாமே இதிலே இன்றையவராக்கும் பிரயாசைப்பட்டு இந்நாட் பதிதர் விசேஷமாய்க் கலந்த தப்பறை யாவையும் நீக்கி, உங்களுக்கு

இனிய அமிர்தத்தைப் பொற்பாத்திரத்தில் ஏந்தி ஊட்டி ஞற்போல விசுவசிக்கத் தருந் தேவ இரகசியங்களைக் கலப் பில்லாமல் காட்டித் தந்தோம். நாமே விரிவாய் இங்கே எழுதித் தந்ததை னுத்தோர் நாளிலே திறிதேந்தென்னும் நகரில் கூடின திருச்சபை சுலபமாக அனைவருஞ் சொல்லும் படிக்கு விசுவாச சங்கீர்த்தனமென்று தந்து காட்டின தாமே.

ஆகையால் ஈடேறுதற்கு ஆசையுள்ள யாவரும் அநு சரிக்கத்தகும் விசுவாசத்துக்கு ஒரு தேவ மாத்திரையாகு மென்று சொன்ன திருச்சபை எவருக்குந் தந்தது. நாமும் இங்கே சொன்னதற்கு ஒரு குறிப்பிடமாகுமென்று அதைத் தமிழாக்கி உங்களுக்குத் தருவோம். இதுவே அனைவருந் தம் விசுவாசத்தின் மாத்திரையாமென்று எண்ணி இதனை வாழ் நாளில் பல்முறை சொல்லவேண்டினும், விசேஷமாய் மரண நேரத்தில் கூடுமாகில் முழு மன வணக்கத்தோடு இதனைச் சொல்லக்கடவார்கள் அதாவது: உரோமான் திருச்சபையில் வழங்கும் விசுவாச மந்திரத்திலுள்ள தேவ இரகசியங்கள் எல்லாவற்றையும் உறுதி விசுவாசத்தோடே அடியேனும் (இராயன்) விசுவசிக்கிறேன். அதாவது: பரமண்டலத்தையும், பூலோகத்தையும் படைத்த... மற் றதும்.

அப்போஸ்தலர் நாள் துவக்கித் தலைமுறை தலைமுறை யோடு பரம்பரமாய்த் திருச்சபையில் வழங்கின முறைகளை யும், மற்றக் கற்பனைகளையும் ஸ்திரமாய் ஏற்றுக்கொண்டு ஒத்துக்கொள்ளுகிறேன். மீளவும் எழுதப்பட்ட வேதமா கத் திருச்சபை ஏற்றுக்கொண்ட 72 புஸ்தகங்களுக்கு அர்த்தஞ் சொல்லுவது திருச்சபைக்கு மாத்திரம் உரியதா கையில் திருச்சபை அவைகளுக்குச் சொன்ன அர்த்தமுங் கைக்கொண்டு ஒத்துக்கொள்ளுகிறேன். அவைகளிலுள்ள தேவ வாக்கியங்களைத் திருச்சபையில் வழங்கின வேதபாா கர் ஒருப்படத் தந்த அர்த்தத்திலே கொள்வதொழிய வேறுபட ஒருகாலும் அவைகளுக்கு அர்த்தஞ் சொல் லேன்.

பின்னையும் ஒவ்வொருத்தனுக்கு எல்லாம் வேண்டா தேபோனாலும், மனிதர் கரை ஏறுதற்கு வேண்டினதாக நம்முடைய கர்த்தராகிய சேசுகிறீஸ்துவினால் உண்டாக்கப் பட்ட மெய்யான ஏழு தேவத்திரவிய அநுமானங்கள் உண்டென்றும், அவைகள் ஞானஸ்நானம், உறுதிப்பூசுதல், நற்கருணை, பச்சாத்தாபம், அவஸ்தைப்பூசுதல், குருத்து வம், மெய்விவாகமாகிய இவை ஏழுமென்றும், அவைக ளெல்லாம் நமக்கு இஷ்டப்பிரசாதத்தைக் கொடுப்பதென் றும், அவைகளில் ஞானஸ்நானம், உறுதிப்பூசுதல், குருத் துவமென்னும் இம்மூன்றும் ஒருமுறை யொழிய, பாவ மின்றி மீளவுங் கொள்ளப்படாதென்றுஞ் சந்தேகமற விசு வசிக்கிறேன். சொன்ன ஏழு தேவத்திரவிய அநுமானங் களை நிறைவேற்றுகிறதிலே பொதுவாய் நிற்கும் உரோ மான் திருச்சபை நடத்தின முறை எல்லாம் நல்லதென்று ஒத்துக்கொள்ளுகிறேன்.

சென்மப் பாவமென்றும், பாவப் பொறுத்தலென் றும் இவ்விரண்டையும் வெளிப்படுத்தத் திறிதேந்தென் னும் நகரில் கூடின திருச்சபை ஸ்தாபித்ததெல்லாம் ஒன் றும் விடாமல் கைக்கொண்டு அநுசரிக்கிறேன். மீளவுஞ் செய்யும் பூசையிலே சீவியர்களுக்கும், மரித்தவர்களுக்கும் உதவியாக மெய்யான பூசை சர்வேசுரனுக்கு ஒப்பிக்கப்படு மென்றும், திவ்விய நற்கருணையிலே அடையாளமாய் இரா மல் மெய்யாகவே நம்முடைய கர்த்தராகிய சேசுகிறீஸ்து வின் சரீரமும், இரத்தமும், ஆத்துமமும், தேவ சுபாவமும் இருக்கிறதென்றும், அப்பத்தின் சுபாவமும் அற்றுப் போய் அவர் சரீரமாகி, இரசத்தின் சுபாவமும் அற்றுப் போய் அவர் இரத்தமாகிக் கத்தோலிக்குத் திருச்சபை படிப்பித்தபடிச் சுபாவம் மாறுதலாகுமென்றும், அப்பத் தின் குணங்களை மாத்திரங் கொண்டாலும், இரசத்தின் குணங்களை மாத்திரங் கொண்டாலுங் குறையில்லாமல் சே சுநாதர் முழுதுங் கொள்ளப்படுவாரென்று மெய்யாகவே

முழுதும் நற்கருணை கொள்ளப்படுவதென்றும் ஸ்திரமாகச் சொல்லுகிறேன்.

உத்தரிக்கிற ஸ்தலம் உண்டென்றும், அங்கே நிறுத்தப்பட்ட ஆத்துமங்களுக்குத் திருச்சபை வேண்டுதலினாலேயும், செய்யுந் தருமங்களினாலேயும் உதவியாகுமென்றும் உறுதியாக விசுவசிக்கிறேன். மீளவும் மோட்சத்திலே சேசுநாதரோடே கூட வாழ்ந்து ஆளாநிற்கும் அர்ச்சியசிஷ்டர்களை வணங்கவும், வேண்டிக்கொள்ளவும் நியாயமென்றும், அவர்கள் நமக்கு வேண்டி ஆண்டவனைப் பிரார்த்தித்துக் கொண்டு வருகிறார்களென்றும், அவர்களுடைய அர்ச். பண்டங்களை வணங்குவது நியாயமென்றும், சேசுகிறீஸ்துவையும், எப்போதும் பரிசுத்த கன்னியாஸ்திரீயாகிய தேவமாதாவையும், மற்ற மோட்சவாசிகளையுங் காட்டுகிற சுரூபங்களை வைத்துக்கொள்ளவும், அதற்கதற்குரிய முறையோடு அவைகளை வணங்கவும் நியாயமென்றுஞ் சந்தேகப்படாமல் ஸ்திரமாய்ச் சொல்லுகிறேன்.

பலவகைப் பூரண பலன்களை ஸ்தாபிக்கச் சேசுநாதர் திருச்சபைக்கு வல்லமை தந்தாரென்றும், அப்படி ஸ்தாபிக்கப்பட்ட பலன்களாலே திருச்சபை உட்பட்ட யாவருக்கும் மிகவும் இலாபமாகுமென்றும் நிச்சயமாகச் சொல்லுகிறேன். பொதுவாய் நிற்கும் அப்போஸ்தொலிக்கு உரோமான் திருச்சபை உலகமெங்கும் பரம்பின மற்றத் திருச்சபைக்கெல்லாந் தாய்ச் சபையென்றும், மற்ற யாவையும் படிப்பிக்குந் தலைச்சபை என்றும் நிச்சயித்து உரோமாபுரியில் ஆளும் அர்ச். பாப்பு, பிரதான அப்போஸ்தலராகிய அர்ச். இராயப்பர் துவக்கி விடாமல் பின் தொடர்ந்து வந்த திருச்சபைத் தலைவனென்றும் சேசுநாதர் ஸ்தானத்தில் இருப்பவனென்றும் அங்கீகரித்து முழு மனதோடு அவருக்குக் கீழ்ப்படிந்து, அவர் இட்ட கற்பனை எல்லாங் கேட்பேனென்றுஞ் சத்தியம் பண்ணுகிறேன்.

மீளவும் பொதுத் திருச்சபைக் கூட்டங்களிலேயும், மற்றத் திருச்சபைக் கட்டளைகளிலேயும், விசேஷமாய்த்

திறிதேந்தென்னும் நகரில் கூடின திருச்சபை இட்ட கற்பனைகளிலேயும் வெளிப்படுத்தி ஸ்தாபிக்கப்பட்டது எல்லாவற்றையும் நானுஞ் சந்தேகமற உறுதியாகவும் அங்கிகரிக்கிறேன். இவைகளுக்கு விபரீதமாயிருக்கின்றன வெல்லாவற்றையும் சகல பதிதர், துர் மதங்களையுந் திருச்சபை வெறுத்துத் தள்ளிச் சபித்ததுபோலே நானும் அவைகளை வெறுத்துத் தள்ளிச் சபிக்கிறேன். இப்படிக்கொத்த விசுவாசத்தைக் கொண்டவருக்கல்லாதே ஒருவருக்கும் ஈடேற்றம் இல்லையென்றமையால், எவருக்கும் வேண்டியதாகிப் பொதுவாய் நிற்கும் இந்த விசுவாசத்தை இப்பொழுது மனதில் அநுசரித்து வாயினால் வலியச் சொல்லிக் காட்டினதுபோல அதுவே மரணபரியந்தங் குறையாமலும், வேறுபடாமலும் ஆண்டவர் உதவியினால் மனதில் அநுசரிக்கவும், வாயினால் காட்டவும், என் கீழ் அடங்கியிருக்கிற யாவரும் அங்கிகரிக்கவும், சொல்லவும், போதிக்கவும் என்னால் ஆகுமட்டும் பிரயாசைப்படுவேனென்று நானே (இராயன்) ஆண்டவருக்கு வார்த்தைப்பாடு கொடுத்துச் சத்தியமாகச் சொல்லுகிறேன். அப்படியே சர்வேசுரனும், அவருடைய திருச் சுவிசேஷங்களும் எனக்கு உதவியாகக் கடவது.

வேத விளக்கம் முற்றிற்று.

* * *

பேதகமறுத்தல்.

பாயிரம்.

வெண்பா.

மெய்க்கெஞ்சாவேதம் வெறுப்ப வெருவிடுமோர்
பொய்க்கஞ்சாப்போர்வையிலாம் பூரியர்சொன் மைக்கஞ்
தீதகந்தீர்த்துய்யத் தெளியார்யார்பொய்க்கலப்பிற் [சாத்
மேதகப்பேதமைகண்டு.

அர்ச். அகுஸ்தீன் என்பவர் திருச்சபையை விட்டுப் பிரிந்தவர்களுக்குள்ள குணத்தைக் காட்டி, சலஞ்சாதித்தலும் பொய்யைச் சொல்லுதலும் எல்லாப் பதிதர்களுக்கு இயல்பாகுமென்முர். ஆகையால் ஒரோரிடத்தில் மெய்யை விட்டு வேறுபடச் சொல்வது எவருஞ் செய்வார்கள். ஆனல் சொன்ன அபத்தத்தைக் கண்டாலுங் கண்ட நியாயத்தை மறுத்துச் சாதிப்பது பதிதர் செய்யுந் தொழிலாமே. மீளவும் பித்து மிஞ்சிக் கிடந்தவன், தன் வாய்க் கசப்பை மறைக்க அமிர்தமுங் கசக்குமென்பதுபோலவும், நிறையக் கள்ளுண்டவன் தன் காலாட்டத்தை மறைக்க வீடு ஆடுமென்பதுபோலவும், பதிதருந் தாங்கள் நீதி வழியில் வழுவிச் செய்த அபத்தத்தை மறைக்கத் தாங்கள் பிரிந்துவிட்ட உரோமான் திருச்சபை வழுவிக் கெட்டதென்று சொல்லக் கூசாதே போனர்கள்.

அப்படியே அர்ச். அகுஸ்தீன் என்பவர் தாவீதரசன் பாடின நூற்ருராங் கீதத்தின்மேல் இரண்டாம் பிரசங்கத்திலே திருச்சபை முறைப்பட்ட பாவனையாகச் சொல்லுவித்ததாவது: என்னை விட்டுப் பிரிந்தவர்கள் என்மேலே தூறினதென்ன? கெட்டவர்கள், நானே கெட்டேனென்று

சலஞ் சாதித்துச் சொல்வதென்ன வென்று திருச்சபை சொன்னதாக எழுதி வைத்தார். ஆகிலும் ஒரு மாசில்லாத கற்புடையவளாகத் தமக்குச் சேசுநாதர் தெரிந்துகொண்ட திருச்சபை எல்லாத்துக்கும் வழுவமாட்டாமையால் அதிலே பதிதர் மெய்யான குற்றம் ஒன்றினையுங் காணமல், இல்லாதாயினும் உண்டென்று பொய்யாகவாரோபித்துப் பத்தும் பத்தாய் விசாரியாத ஏழைச் சனங்களை ஏய்க்கப் பிரயாசைப்படுகிருர்கள்.

ஆகையால் இப்படிப் பாவத்துக்கு அஞ்சாமல் இல்லாத பொய்களைச் சற்றுங் கூசாமல் உரோமான் திருச்சபை மேலே சொல்லுவது பதிதர் முறையாகக்கொள்ள இப்பொழுது தரங்கம்பாடியாரும் இந்த முறையை பின்சென்று, தம்மைத்தாமே பதிதரென்று எல்லாருக்கும் ஒப்பித்தார்கள். எப்படியென்றுல், இந்நாள் வரைக்கும் பாலிலே நஞ்சை கலந்து ஊட்டினுற்போலப் பொதுநியாயங்களைச் சொல்லி, அங்கங்கே சில அபத்தங்களை மாத்திரம் மறைவாகக் கலந்து, பல புஸ்தகங்களை அச்சிலே பதித்தார்கள். இப்போது கெம்பீரமாய் வெளிப் பகை செய்யத் துணிந்து, உரோமான் திருச்சபைமேல் இல்லாத பொய்யெல்லாம் வெட்கமில்லாமல் சொல்லிப் புதிதாய்த் திருச்சபைப் பேதகமென்று ஒரு சின்ன புஸ்தகம் எழுதினுர்கள்.

அதிலே இல்லாத அபத்தங்களை உரோமான் திருச்சபைமேலே சொன்ன பின்பு, வேசித் துணிவோடே தாங்கள் அவைகளைச் சொன்னது போதுமென்றுற்போலச் சொன்னதை ஒப்பிக்கப் பிரயாசைப்பட்டவர்களல்ல. நாமும் உண்டாக்கின வேதவிளக்கத்திலே லுத்தேர் மதத்தார் சொன்ன அபத்தங்கள் பலவற்றையும் எழுதி வைத்தோம். ஆகிலும் அவர்கள் அச்சுப் பதித்த புஸ்தகங்களில் எழுதி வைத்த வசனங்களை எடுத்துக் காட்டி, ஒவ்வொன்றுய்ச் சொன்னதெல்லாம் ஒப்பித்தோமல்லோ. தரங்கம்பாடியாரோவெனில், சேசுநாதரைக் கொன்றுபோட்ட துரோகிக

ளான யூதர்கள் செய்தபடியே செய்கிறார்கள். அதெப்படியென்றால், அர்ச். அருளப்பர் சுவிசேஷத்தின் 18-ம் அதிகாரம் 29-ம் வசனத்தில் யூதர்கள் கூடித் தாங்கள் பிடித்த சேசுநாதரைப் பிலாத்து முன்பாகக் கொண்டு விட்டவிடத்திலே இவன்மேலே குற்றமேதென்று பிலாத்து கேட்க, யூதர்கள் ஆங்காரித்து இவன்மேலே குற்றமில்லாதாகில் உன்கிட்டக் கொண்டுவந்து விடோமல்லோ என்றார்கள்.

ஆகையால் சர்வ உலோக பாவங்களைத் தீர்க்க வந்து, சர்வ சனங்களுக்கு நன்மை செய்து, சர்வ வகையில் மட்டில்லாத புதுமைகளைக் காட்டின சேசுநாதரை நிந்தையாகக் கொல்ல நீதி முறை ஒன்றும் பார்க்கவுந் தேவையில்லை, அவர்மேல் ஒரு குற்றஞ் சொல்லிச் சுமத்தவுந் தேவையில்லை, அவரைப் பகைத்த யூதர்கள் சொன்னதை ஒப்பிக்கவுந் தேவையில்லை, அவர் சாகத்தக்கவரென்று தாங்கள் சொன்னதே போதும். இப்படியே ஆங்காரத்தினாலே யூதர்கள் நினைத்தார்கள். இப்படியே தரங்கம்பாடிப் பதிதரும் நினைத்ததாகக் கண்டோம். சேசுநாதரைக் கொல்ல யூதர்கள் சொன்னது போதும், சேசுநாதருடைய உரோமான் திருச்சபையை மறுக்கத் தரங்கம்பாடியார் சொன்னதுபோதும். சொன்ன பொய்யான அபத்தங்களை ஒப்பிக்கத் தேவையில்லை, தாங்கள் சொன்னதினால் அதுவே எல்லா நியாயத்திலும் உத்தம நியாயமென்று நினைத்தார்கள்.

ஆகிலும் அவர்கள் கொண்ட வர்மத்தின் மிகுதியால் உரோமான் திருச்சபைமேலே குற்றத்தை யாரோபிக்கத் தாங்கள் அதைச் சொன்னது போதுமென்று நினைத்தாலும் மற்ற யாவரும் அவர்களைப்போல மதி கெட்டவர்களாய் அதை ஒத்துக்கொள்ள அதுவே போதுமென்பார்களோ? அக்கியானத்தில் அமிழ்ந்தின நாட்டிலும், பகையாளிமேல் ஒருவன் ஒப்பியாமல் சொன்ன குற்றத்தினால் அவனைத் தீர்வையிட்டுக் கொல்வாருண்டோ? பிறர்மேல் சொன்ன குற்றம் ஒப்பிக்கத் தேவையில்லாதாகில், பொய்யே சொல்லி ஒருவன் ஒருவனைக் கெடுப்பதரிதோ? பதிதர்

பாராத நியாயத்தைஅக்கியானி முதலாய்ப் பாராதிருப் பானோ?

ஆகையால் சொன்ன புஸ்தகத்தில் அவர்கள் வைத்த இருபத்து நாலு பேதகங்களை ஒன்றொன்றாய் வகுப் பறுத்து ஆராய்ந்து, அவைகளில் பல பொய்யில்லாதது ஒன்றில்லை என்று தெளிவாய் இங்கே ஒப்பிப்போமென்ற மையால், பேதக மறுத்தலென்னும் பெயர் இந்தப் புஸ்த கங் கொண்டதாமே. இப்படி அதிலே தரங்கம்பாடியார் உரோமான் திருச்சபைமேலே கெம்பீரமாய், கூசாமல், ஒரு காரணமின்றி, ஓர் அத்தாட்சியின்றிச் சொன்ன பொய்களை அவர்கள் மறுக்கமாட்டாதபடிக்கு நாம் இங்கே பிரத்தியக்ஷமாய் ஒப்பித்த காலத்திலும் அவர்கள் வெட்கி நாணிக் கிடப்பார்களோ? ஆகிலுந் தன் நெஞ்சு அறி யப் பொய் சொல்லத் துணிந்தவனுக்குக் வெட்கமில்லை என்றதனால், அவர்கள் நாணாதாயினும் மற்ற யாவரும் அவர்களைத் தப்பறைக்காரரென்று அறிந்து வெறுக்கக் கடவார்கள்.

மீளவும் இப்போது அவர்கள் தமிழாக்கின புஸ்தகம் இரண்டு வருஷத்துக்கு முன்னே 1726-ம் ஆடிலே லுசித் தான் பாஷையாகத் தரங்கம்பாடியில் அச்சுப் பதித்திருந் தார்கள். அதிலே சர்வேசுரன் அருளிச்செய்த மெய்யான பழைய வேதந் தங்கள் வேதமென்றும், மனுஷரால் கட் டப்பட்ட பொய்யான புது வேதம் உரோமான் வேத மென்றுஞ் சிட்டறவே கூசாமல் எழுதியிருக்க அதை ஒப் பிக்க ஒரு சொல்லுமில்லை. ஆகிலுந் தரங்கம்பாடியார் அநு சரிக்கும் புறச்சமையம் இருநூறு வருஷத்துக்கு முன்னே லுத்தேர் தலைவனாக வர்மத்தில் முளைத்த சமையமாகையில் அதுவே சேசுநாதர் தந்த பழைய வேதமென்று சொல்லு வதற்கு இப்பொழுது அவர்கள் முதலாய்க் கூசினாற்போல அந்தப் புஸ்தகத்தைத் தமிழாக்கின இடத்திலே மெய் யான பழைய உபதேசத்துக்கும், பொய்யான புது உப தேசத்துக்குமுள்ள பேதகமென்று வைத்தொழிய,

பழையதேதென்றும், புதியதேதென்றுஞ் சொல்லக் கூசினார்கள்.

கடைசியில் அந்தத் தமிழ் புஸ்தகத்தின் முகப்பிலே தரங்கம்பாடியார் ஒன்றினைக் கூட்டி வைத்தார்கள். அதாவது: அந்தப் புஸ்தகத்தை லுசித்தான் பாஷையில் எழுதினவனும் உரோமான் திருச்சபை விட்டு, அப்போஸ்தலிக்குத் திருச்சபையோடே சேர்ந்தவன் என்று எழுதி வைத்தார்கள். இதிலே தங்கள் சபை லுத்தேர் சபையாகையில் அதைச் சற்றும் அஞ்சாமல், அப்போஸ்தொலிக்குத் திருச்சபை என்று சொன்ன துணிவும் பாராமல், இதை வாசிக்கும்போது தோன்றும் நினைவேதென்றால், யாதாமொருத்தன் நெடுநாள் உரோமான் திருச்சபையில் வளர்ந்து, தான் கற்ற நூலின் முறையோடு எல்லா நியாயங்களையும் ஆராய்ந்த பின்னர், அதை ஆகாதென்று விட்டு லுத்தேர், கல்வின் இவர்களால் கட்டப்பட்ட சமையத்தைத் தேர்ந்து உட்கொண்டானென்று தோன்றுமல்லோ. அப்படியல்ல, லுசித்தான் பாஷையில் அந்தப் புஸ்தகத்தை எழுதினவனும், உரோமான் திருச்சபையில் பிறந்தவன்றானே.

ஆயினுஞ் சிறுவத்தில் அவன் தாய் தகப்பன் வார்த்தை உதறிப்போட்டுப் பதிதரோடே கூடிப் பல தேசங்களிலே திரிந்து, தான் அதிலே எழுதினபடியே பதினாலு வயதில் பதிதனானான். அப்படியே உரோமான் திருச்சபை ஆகாதென்று நியாயத்தைக் கண்டு தேர்ந்த வித்தியாபாரகன் பதினாலு வயது பையல்தானே இவனுக்கும். நெடுநாள் பதினை பின்பு, வேறொருவன் இஸ்பாணிய பாஷையில் எழுதினதை லுசித்தான் பாஷையாகத் திருப்பித் தந்தான். இப்படி யாகையில், ஏழைச் சனங்களை மயக்குவிக்க உரோமான் திருச்சபையை விட்டு வந்தவன் எழுதினதென்று தரங்கம்பாடியார் மறைபொருளாகச் சொன்னார்கள். இப்படியே அந்தப் புஸ்தகத்தின் பெயரையும் அதற்கு முகப்பில் எழுதினதையும் ஆராய்ந்து காட்டின பின்பு, சொன்ன 24 பேதகங்கள் ஒவ்வொன்றாய் ஆராயக்கடவோம்.

இதிலே தரங்கம்பாடியார் வைத்த நீசத் தமிழ்ச் சொற் கொடுமையால் அவைப் பேர்த்து எழுதின கையும், பார்த்து வாசித்த கண்ணும், எடுத்து உச்சரித்த நாக்கும், கேட்டு உள்ளுணர்ந்த காதுங் கொடிதாய்ச் சுடுமென்று அஞ்சி, அவர்கள் சொன்ன பொருளை யொழிய, சொன்ன வசனங்களை இங்கே காட்டமாட்டாதிருந்தோம். ஆயினும் நான் சொன்னதற்கு ஐயந் தோன்றுதபடிக்கு மற்றவை விட்டு நாம் இங்கே மறுக்கத்தகுந்ததைமாத்திரந் தரங்கம் பாடியார் எழுதின வசனப்படியே ஒவ்வொரு பேதகமாகச் சொன்னதைக் காட்டி, அதன் மறுத்தலைத் தொடர்ந்து தருவோம்.

லுத்தேர், கல்வீன், மற்ற இந்நாட் பதிதர் சொன்ன தப்பறை ஒழியவும், சேசுநாதர் தந்த சத்திய வேதம் விளங்கவும், நன்னெறி வழுவாமல் அனைவரும் ஒழுகிப் பரம கதியைச் சேரவும், வேத விளக்கமாக இத்தலை நாட்டினராய், உரோமான் திருச்சபைச் சந்நியாசியாராய், காரணக் குருவாகிய தைரியநாத இராஜரிஷி குரு சுவாமியார் அவர்கள் கர்த்தர் திரு அவதாரஞ் செய்த 1728-ம் ஆண்டில், கீலக வருஷம் வைகாசி மாதம் 25-ந் தேதியில், ஏலாக் குறிச்சி திருக்காவலூர் மடத்தில், 3412 கிரந்தத்தளவோடு தந்த பயனை எல்லாருக்கும் நன்றாக எழுதி முடிந்ததே.

பேதகமறுத்தல்.

முதல் பேதகமறுத்தல்.

இதிலே தரங்கம்பாடியார் சர்வேசுரன் அருளிச் செய்த பூர்வீக உபதேசப் படிப்பனை இன்னதென்று காட்டின பின்பு, புதிதாய் மனிதரால் கட்டப்பட்ட உபதேசமாக உரோமான் திருச்சபை படிப்பிக்குந் தன்மை இன்னதென்று காட்டச் சொன்ன கொடிய வசனமாவது: "இதுக்கெதுகையாக மனுஷராலே கட்டப்பட்ட புதிதான உபதேசம் போதிவிக்கிறதாவது: தேவ வேத புஸ்தகம் சர்வேசுரனுடைய ஏவுதலினால் எழுதப்பட்ட சர்வேசுரனுடைய திரு வசனமாயிருந்தாலும், ஞாயத்தையும் நடுவையுஞ் சொல்லுகிற வல்லமை தன்னாலேதானே அதுக்குண்டாயிராதென்று முண்டாயிருக்கக் கூடாதென்றுமானாலோ திருச்சபையினுடைய சம்மதியினாலேயும், சாட்சியினாலேயும் அப்படிக்கொத்த வல்லமை அதற்குச் செல்லவேண்டுமென்றும், அது குறைச்சலுந் தாட்சியும் போதாததுமாயிருக்கிறதென்றுஞ் சர்வேசுரனுக்குச் செய்யவேண்டிய ஆராதனைக்கும், ஊழியத்துக்கும், எங்களுடைய சொந்தமான ஈடேற்றத்திற்குந் தேவையாயிருக்கிற ஞாயங்களெல்லாம் அதிலே அடங்கியிருக்கவில்லையென்று மானாலோ வந்த குறைகளை நிறப்புகிறதற்கு எழுதப்பட்டிருக்காத படிப்பினைகளைச் சேர்க்க வேண்டுமென்று மனுஷராலே கட்டப்பட்ட புதிதான உபதேசம் போதிவிக்கும்'' என்று எழுதினார்கள்.

இந்த முதல் பேதகத்தில் முந்தி ஆராயவேண்டியதாவது: எழுதப்பட்ட வேதப் புஸ்தகம் ஆண்டவர் ஏவலால் அவர் வார்த்தையாக எழுதப்பட்டதாயினும், அதற்கு வல்

லமை திருச்சபையால் வர வேண்டுமொழிய தனக்குத் தன்னாலே வல்லமை இல்லையென்று உரோமான் திருச்சபை படிப்பித்ததாகத் தரங்கம்பாடியார் இதிலே எழுதினார்கள். ஆகிலும் இந்த விஷயத்திலே நாம் சொல்லுந் தன்மை வேத விளக்கத்தின் 16-ம் அதிகாரம் 104-ம் பிரிவின் மூன்றும் நியாயத்தில் காணப்படுமே. அதெப்படியென்றால், ஆண்டவர் அளவில்லாத நியாயமுடையவராகையில் அறியாமல் தப்பிதங்களைச் சொல்லவுமாட்டார். அவர் அளவில்லாத நீதி உடையவராகையில், அறிந்து பொய்யைச் சொல்லவுமாட்டார். ஆகையால் அவர் திருவுளம் பற்றின வாக்கியம் இன்னதென்று அறிந்தமாத்திரத்தில், அதை நாம் வணங்கிச் சந்தேகமொன்றின்றித் திட்டமாய் அநுசரிக்கும்படிக்குத் தேவ வாக்கியந் தன்னாலே வல்லது தானே.

அப்படியே ஆண்டவர் தாம் தந் திரு வாயினாலே நம்மோடே பேசாமல், சில மகாத்துமாக்களைக் கொண்டு எழுதி வைத்த வாக்கியம் இன்னதென்று அறிந்தால், கீழ்ப்படிந்து அதுவே தேவ வாக்கியமாக விசுவசிக்கவும், அநுசரிக்கவும் வேண்டியதுதானே. ஆகிலும் ஆண்டவர் தாந் திருவுளம் பற்றினதை எழுத இன்னாரைத் தெரிந்துகொண்டாரென்று நாம் அறியும்படிக்கு வழி என்ன? பின்னையும் அதற்கு இன்னாரை அவர் தெரிந்துகொண்டாரென்று அறிந்தாலும், இன்னார் எழுதினது இன்னதென்று நாம் அறியும்படிக்கு வழி என்ன? மீளவும் அவர் எழுதினது இன்னதென்று அறிந்தாலும், அதிலே மற்றொருவனால் பொய் கலந்ததில்லை என்று நாம் அறியும்படிக்கு வழி என்ன? இதெல்லாம் அறியாமல் எழுதப்பட்ட வசனந் தேவ வாக்கியமென்று அறியவும் படாதல்லோ. மகமது எழுதின கொரானில் அதுவே தேவ வாக்கியமென்று பல இடத்திலும் அவன் எழுதினானல்லவோ? எழுதியிருந்தாலும் அதைத் தேவ வாக்கியமாகப் பதிதர் முதலாய்க் கொள்வார்களோ?

ஆகையால் எழுதப்பட்ட வசனந் தேவ வாக்கிய

மென்று அறியத் திருச்சபைச் சாட்சி வேண்டுமென்று நாமே சொல்லுகிறோம். அதேதெனெனில், சேசுநாதர் திருவுளம் பற்றினதினாலேயும், பல நியாயங்களை ஆராய்ந்ததினாலேயும் அவர் உண்டாக்கின திருச்சபை எக்காலத்திலும் வழுவப்படாமல், பொய் சொல்லமாட்டாதென்று நாம் அறிந்திருக்கக் கொள்ள, அப்படிப்பட்ட திருச்சபை இதுவே. தேவ வாக்கியப் புஸ்தகமென்றமாத்திரத்தில் அதைத் தலைமேல் கொண்டு, அதிலே உள்ளதெல்லாம் ஆண்டவர் திருவுளம் பற்றினதாக வணங்கி, அநுசரிக்கக் கடவோம். அப்படியே அர்ச். அகுஸ்தீன் என்பவர் அஸ்திவார நிருபத்தை மறுத்த ஐந்தாம் அதிகாரத்தில் எழுதினதாவது: திருச்சபை சாட்சியில்லாததால், சுவிசேஷத்தை விசுவாசமாய்க் கொள்ளேனென்றார்.

அப்படியல்லோ அப்போஸ்தலராகிய அர்ச். தோமையார் சுவிசேஷமென்றும், அர்ச். அந்திரேய சுவிசேஷமென்றும், பதிதர் முதலாய் அவைகளைப் பொய்யென்று கைக்கொள்ளாமல், அர்ச். மாற்கு சுவிசேஷமும், அர்ச். லூக்காஸ் சுவிசேஷமும், நம்மோடே தேவ வாக்கியமாக விசுவசிப்பார்கள். இதற்குக் காரணமேதெனில், திருச்சபை சொல்லி அறிவித்ததினால், முன் சொன்ன சுவிசேஷங்கள் பொய் யென்று தள்ளி, மற்ற இரண்டையுந் தேவ வாக்கியமாக ஒத்துக்கொண்டோம். ஆகையால் நாம் விசுவசிக்கவும், வணங்கவும், கீழ்ப்படியவும் பிராப்தியாயிருப்பது வேறொரு காரணத்தால் வராமல், தேவ வாக்கியந் தன் இயல்பாகக் கொண்டிருக்கிற வல்லமைதானே.

ஆகிலும் இன்ன விசேஷ வசனந் தேவ வாக்கியமென்று நாம் அறியும்படிக்கு மாத்திரந் திருச்சபை சாட்சி வேண்டியதென்று உரோமான் திருச்சபை படிப்பிக்குஞ் சத்தியந்தானே. இராசாவானவன் நாடெல்லாஞ் சுற்றித் திரிந்து, ஒவ்வொருவனுக்குத் தன் கட்டளைகளை அறிவியாமல், அரண்மனையிலிருந்து இட்ட கட்டளை அவன் ஸ்தா

பித்த மனுஷன் நமக்கு அறிவிக்க அதுவே இராசா கட்டளை என்று எண்ணிக கீழ்ப்படியும்போது, இராசா கட்டளைக்கு அந்த மனுஷனால் வல்லமை வந்ததென்றும், அந்த மனுஷனுக்கொழிய இராசாவுக்கு நாம் இதிலே கீழ்ப்படிந்ததில்லை என்றுஞ் சொல்வாருண்டோ? ஆகிலும் வழிப் போக்கன் ஒருவன் வந்து, இராசா இட்ட கட்டளை இன்னதென்று சொன்னாலுங் கேட்பார்களோ? இராசா வைத்த முத்திரை மனுஷன் சொன்னாலொழிய, இராசாவின் கட்டளை அறியவுங் கேட்கவுமாட்டோமல்லோ.

அப்படியே ஆண்டவர் திருவுளம் பற்றின வாக்கியம் இன்னதென்று நமக்கு அறிவிக்க, அவரால் ஸ்தாபிக்கப்பட்ட திருச்சபையே வேத வாக்கியம் இன்னதென்று சாட்சியாகச் சொன்னாலொழிய, அதைத் தேவ திருவுள வசனமாகக் கைக்கொள்ளவுந் தேவையில்லை என்று உரோமான் திருச்சபை அநுசரிக்குஞ் சத்தியமாமே. ஆயினும் இதனால் நான் திருச்சபைக்கொழிய, தேவ வாக்கியத்துக்குக் கீழ்ப்படிந்ததில்லை என்றும், திருச்சபையாலே மாத்திரந் தேவ வாக்கியங்களுக்கு வல்லமை வந்ததென்றுஞ் சொல்லக்கூடுமோ? இதெல்லாம் இப்படியிருக்கக்கொள்ள, வேத வாக்கியஞ் சர்வேசுரனுடைய திரு வசனமாயிருந்தாலும், நியாயத்தையும், நடுவையுஞ் சொல்லுகிற வல்லமை தன்னாலே அதற்கு இல்லை என்று நாம் படிப்பித்ததாகத தரங்கம் பாடியார் எழுதினது முழுத் தப்பறைதானல்லோ. பின்னையுந் திருச்சபை சம்மதியினாலேயுஞ் சாட்சியினாலேயும் அப்படிப்பட்ட வல்லமை அதற்குச் செல்லவேண்டுமென்று நாம் படிப்பித்ததாக அவர்கள் சொன்னது தப்பறையாமே.

மீளவும் இந்த முதல் பேதகத்திலேதானே தரங்கம் பாடியார் சொன்னதாவது: எழுதப்பட்ட வேத வாக்கியங்களிலே சர்வேசுரனுக்குப் பிரியமாகவும், நாம் கரை ஏறவுஞ் செய்யவேண்டியதும், விசுவசிக்க வேண்டியதுமெல்லாங் குறைவொன்றின்றி அடங்கியிருக்குமென்றார்கள். ஆகிலும் முந்தமுந்தத் தேவமாதா பரிசுத்த கன்னியாஸ்திரீ

என்று விசுவசிக்கத்தகுஞ் சத்தியமென்று அவர்களுஞ் சொல்லுகிறார்களே. ஆனால் இந்தச் சத்தியம் வேதத்தில் எழுதப்பட்டது எங்கே? இரண்டாவது, ஞாயிற்றுக்கிழமைத் திருநாளாகக் கொண்டாட வேண்டியதென்று அவர்களுஞ் சொல்லுவார்களே. இதுவும் எழுதப்பட்டது எங்கே? மூன்றாவது, குழந்தைகளுக்குக் கட்டளையிட்ட ஞானஸ்நானங் கொடுக்கவேண்டியதென்றும், கொடுத்தால், குழந்தைகளுக்கு உதவுமென்றும் அவர்களும் படிப்பிக்கிறார்களே. இதுவும் வேதத்தில் எழுதப்பட்டது எங்கே? இவையும், இத்தகைப்பட்ட பலவும், ஆண்டவர் ஊழியம் நிறைவேற்றவும் பரமகதி நாஞ் சேரவும், எல்லாரும் அநுசரிக்கத்தகும் வேத முறைமை என்று பதிதரும் நம்மோடே சொல்லியிருக்க, வேதப் புஸ்தகத்தில் எழுதப்படாததினால், எழுதப்பட்ட வேத வாக்கியங்களில் எல்லாங் குறையொன்றின்றி அடங்கியிருக்கு மென்பது தரங்கம்பாடியார் இந்த முதல் பேதகத்தில் சொன்ன மூன்றாந் தப்பறையாமே.

2-ம் பேதகமறுத்தல்.

இந்த இரண்டாம் பேதகத்திலேயுந் தரங்கம்பாடியார் வேதப் புஸ்தகத்தை எவரும் வாசித்து ஆராய்தலே நல்லதென்ற பின்பு, நாமே படிப்பித்ததாகச் சொன்னதாவது: "இதுக்கெதுகையாக மனுஷராலே கட்டப்பட்ட புதிதான உபதேசம் போதிவிக்கிறதாவது: அறியாமையானது பய பத்தியொழுக்க வணக்கத்துக்கு ஒத்தாசையா யிருக்கிறதென்றும், விசுவாசத்தையும் வேதத்தையுங் காக்கத்தக்கதாகவும் கையாளத் தக்கதாகவுங் குருப்பட்டமில்லாத திருச்சபையார் வேத புஸ்தகத்தை ஆராய்ந்து பார்க்கிறதுக்குத்தாரங் கொடாமல் தடை பண்ணுகிறது தாவிளையென்றும் வேத புஸ்தகம் பதிதர் மார்க்கங்களுக்குக் காரணமு

மாய்த் தாயுமா யிருக்கிறதென்று மனுஷராலே கட்டப் பட்ட புதிதான உபதேசம் போதிவிக்கும்" என்றூர்கள்.

இதற்கு வேத விளக்கத்தின் 107-ம் பிரிவிலே நாம் சொன்னதைக் காணக்கடவீர்கள். இங்கேயோவெனில், இந்தப் பேதகத்திலுந் தரங்கம்பாடியார் சொன்ன தப்பறை களைமாத்திரங் காட்டி வெளிப்படுத்துவோம். ஆகையால் அறியாமையானது பய, பத்தி, ஒழுக்கம், வணக்கத்துக்கு ஒத்தாசையாயிருக்குமென்று உரோமான் திருச்சபை படிப் பித்ததாகத் தரங்கம்பாடியார் எழுதினூர்கள். இதுவே இந் தப் பேதகத்திலுள்ள முதல் பொய்யாமே. இந்த வசனந் திருச்சபை படிப்பினையாக ஒருவனுகிலும் உரோமான் திருச்சபையாருக்குள்ளே சொன்னதென்று ஒப்பிக்கக்கட வார்கள். ஒருவனுகிலும் அதைச் சொன்னதென்று ஒப்பிக் கார்களாகில், தாங்களே பொய் சொன்னதாக ஒத்துக் கொள்ளக்கடவார்கள். மீளவும் அறியாமையானது புண்ணி யத்துக்கு ஒத்தாசையாகுமென்று எண்ணினூமாகில், புண்ணிய மாத்திரையாக ஸ்தாபிக்கப்பட்ட குருக்களை எல்லாரிலுஞ் சாஸ்திரிகளாகவும் உரோமான் திருச்சபை தெரிந்துகொள்வதென்ன?

பின்னையும் அறியாமையானது புண்ணியத்தின் வழி என்று எண்ணினூமாகில், புண்ணிய வழியைக் காட்டும் படிக்குச் சாஸ்திரங்களைப் படிப்பித்துப் பற்பல உத்தம நியாயங்களை குறித்து, பூவுலகெங்கும் எண்ணப்படாத சாஸ்திரப் புஸ்தகங்களை உரோமான் திருச்சபையார் எழு திப் பரப்பினதென்ன? இதுவுந் தவிர வேதத்தையும், விசு வாசத்தையுங் காக்க வேதப் புஸ்தகத்தை வாசியாதபடிக்கு நாமே விலக்குகிறூமென்று பொதுவசனமாய்த் தரங்கம் பாடியார் சொன்னதினூல் இதுவும் பொய்யாமே. முத்தும், பவளமும் முழுகி எடுக்க அறியாதவர்கள், மோசம் போ காதபடிக்குக் கடலில் விழ வேண்டாமென்று இராசா விலக்கினூல், கடலில் கிடக்கும் முத்தும், பவளமும் எடுக்க வேண்டாமென்று அவன் விலக்கினதாகச் சொன்னூல், அது பொய்யல்லோ. அவ்வண்ணமே அமிர்தக் கடலாகிய

வேதாகமங்களில் முத்தும், பவளமுமாகத் தேவ இரகசியங்கள் கிடப்பது நிச்சயந்தானே.

ஆகிலுங் கடலிலுள்ள மணிகள் நீர்மேல் மிதவாதது போல, வேதத்திலேயும் பல தேவ இரகசியங்கள் மேலே தோன்றுமல் ஒளித்திருப்பதே நிச்சயமாகி அறப்படியாதவன் அவைகளைக் கண்டெடுக்க வேண்டுமென்றாற்போலே மறைந்திருக்கும் வேத வசனங்களுக்குத் தானே அர்த்தஞ் சொல்லத் துணிந்தால், ஆண்டவர் நினைத்த அர்த்தத்துக்கு விபரீதங்களைச் சொல்லி, மயங்கிக் கெடுவது நிச்சயந்தா தானே. அப்படி அர்ச். இராயப்பர் 2-ம் நிருபம் 3-ம் அதிகாரம் 16-ம் வசனத்தில் எழுதிவைத்தார். ஆகையால் கடலில் குளிக்க அறிந்தவர்களை விட்டு மணிகளை எடுத்து மற்ற யாவருக்குங் கொடுப்பதுபோல, திருச்சபையும் அறிந்த சாஸ்திரிகளைக் கொண்டு வேதத்தில் ஒளித்திருக்குந் தேவ இரகசியங்களை எடுத்து வெளியாக்கி, மற்ற யாவருக்கும் அறிவிப்பது உரோமான் திருச்சபையின் முறைமையாமே. அதனால் வேத வசனங்களை வெளியாக்க உரோமான் திருச்சபை சாஸ்திரிகள் உண்டாக்கின புஸ்தகங்களை பல ஆயிரம் வருஷங்கள் சென்று இடைவிடாமல், ஒருவன் வாசித்தாலும் வாசித்து முடிக்கமாட்டானல்லோ.

இப்படி வேத வசனங்களை அறிவிக்க அத்தனை புஸ்தகங்களை உரோமான் திருச்சபையார் எழுதின பின்பு, வேதத்தை அறியாமலிருப்பது நல்லதென்று நாமே படிப்பிக்கிறோமென்பது மோசத் துணிவோடே சொன்ன பொய்யல்லோ. ஆகிலும் இதிலே நம்மிடத்தில் ஒரு குறை மாத்திரம் இல்லை என்று சொல்லமாட்டோம். அதாவது: பதிதர் செய்வதுபோல நாமுஞ் செய்யாமல், சக்கிலியன், வண்ணான், குயவன், வேசிகள் இவர்கள் எல்லாருந் தங்கள் தொழிலைச் செய்யும்போது நினைத்தபடியே வேத வசனங்களுக்கு அர்த்தஞ் சொல்ல வொட்டாதிருப்போம். இது வே பதிதர் நியாயத்திற்கு அத்தியந்த குறையாகத் தோன்றுமல்லோ. நன்னூல் தொல்காப்பியத்திலேயும், சிந்தா

மணி சிலப்பதிகாரத்திலேயுங் கண்ட சந்தேகந் தீர, அதற் குரிய அர்த்த மேதென்று வயலில் நாற்று நடுகிற பள்ளித் திகளேயும், சேற்றிலே கிளிஞ்சில் எடுக்கிற பறைச்சிகளேயுங் கேளாமல் நெடுநாள் செந்தமிழ் அறப் படித்த கற்றோரை மாத்திரங் கேட்கவேண்டுமென்று சொன்னுல் அப்படியே பதிதருக்குக் குறையாகத் தோன்றுமாக்குமல்லோ.

இதுவுமன்றியே ஆண்டவர் தயை புரிந்து அருளிச் செய்த வேத வாக்கியங் குறையாமலும், மிகாமலும், மாறு மலும் ஒரு கலப்பின்றி நிற்க வேண்டுமென்று, தன் உத் தாரமில்லாமல் மனதின்படியே அவனவன் அதை மறு பாஷையில் திருப்பவும், அதற்கு அர்த்தஞ் சொல்லவும் வேண்டாமென்று உரோமான் திருச்சபை விலக்கினது உள்ளதுதானே. ஆகிலும் அமிர்த நீர்நிலையில் மிருகங்கள் வராமலும், நீசர் காலுங் கையும் வையாமலும், சூழக் கா வல் வைத்து, காவல் காத்தவர்கள் தாமே தண்ணீர் எடுக்க வந்த நீசரை அண்டவொட்டாமல், தாங்களே தண்ணீர் முகந்தெடுத்து எல்லாருக்கும் வார்த்துக்கொண்டிருப்பது சீமை ஒழுக்கத்துக்கு ஒத்ததல்லோ. அப்படியே கரையும், ஆழமும் மட்டற அகன்ற அமிர்தத் தடாகமாகிய வேத புஸ்தகத்தில் அறியாத மிருகங்களும், நீச உணர்வினரும் வாய் வைத்து அதைக் கலக்காதபடிக்குத் திருச்சபை வேத பாரகரைக் காவலாக வைத்து வந்த யாவர்க்கும் அவர்களே வேத இரகசியங்களை எடுத்துக் காட்டி, வேதாமிர்தத்தை எவர்க்கும் ஆசைக்கு அளவாக வார்த்துக்கொண்டிருப் பார்கள். இதுவே உரோமான் திருச்சபை நடத்தும் உத் தம முறையாமே.

முன்னோர் தேர்ந்து, கல்வித்துறையில் பாடின காவி யங்களைப் பள்ளிக்கூடத்தில் பேர்த்து எழுதின மாத்திரத் தில் அவைகள் கெடுமென்றமையால், பிழைப்பாடம் என்ப தற்குப் பள்ளிப்பாடம் என்பாரல்லோ. இதிப்படியாகக் கொள்ள, எழுபத்திரண்டு ஆகமமாக எழுதப்பட்ட வேதத் தை அவனவன் மனதின்படியே பேர்த்து எழுதுவதுந் தவிர, அதை மறு பாஷையில் திருப்ப அவனவனுக்கு

உத்தாரமுண்டாகில், வேத வாக்கியங் கெடாமல் இருக்குமோவென்ன? இந்தக் கேடு வராதபடிக்குத் தன் உத்தாரமில்லாமல், வேதத்தைத் திருப்பவும், அச்சுப் பதிக்கவும் நீதியின்படியே விலக்கினதொழிய, வேதத்தை வாசிக்க வேண்டாமென்றும் அதை அறியாதிருந்தாலே தாவிளை என்றும் உரோமான் திருச்சபை படிப்பிக்கிறதென்கிறது தரங்கம்பாடியார் இந்த இரண்டாம் பேதகத்தில் சொல்லும் மூன்றும் பொய்யாமே.

கடைசியிலே சேசுநாதர் வந்த நாள் முதற்கொண்டு இந்நாள்வரைக்கும்,மெய்யான திருச்சபையைவிட்டுப்பிரிந்த பதிதர் எல்லாருஞ் சொன்ன பல பொய் அபத்தங்களை ஒப்பிக்க வேத வசனங்களை எடுத்துக் காட்டினார்களென்பது நிச்சயந்தானே. அப்படியே கல்வீன் வேத உதாரணங்களைக்கொண்டு நற்கருணையில் சேசுநாதர் அடையாளமொழிய அவர் சரீரம் மெய்யாக இல்லையென்று சொல்ல, நம்மோடே லுத்தேரும் அந்த உதாரணங்களைக்கொண்டு சேசுநாதர் மெய்யாகவே சரீரத்தோடே நற்கருணையில் எழுந்திருப்பாரென்று ஒப்பிக்கிறதல்லோ? அப்படியே அனபப்தீஸ்தரென்கிற பதிதர் குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் உதவாதென்று வேத உதாரணங்களினால் ஒப்பிக்கப் பிரயாசைப் படவே, நம்மோடே லுத்தேரும் வேத உதாரணங்களைக்கொண்டு குழந்தைகளுக்கு அவசியம் ஞானஸ்நானமும் உதவுமென்று ஒப்பித்தானல்லோ?

அப்படியே வேத வசனங்களில் ஊன்றி, நாம் சொல்லுஞ் சத்தியங்களெல்லாம் மறுத்துப் பதிதர் எல்லாரும் இந்நாள் வரைக்குஞ் சொன்ன விபரீத அபத்தங்களை வேத உதாரணங்களாலல்லோ ஒப்பித்ததென்று இருந்தார்கள். ஆகிலும் வேதத்தில் விபரீதம் உண்டோ? ஒன்றைப்பற்றிச் சர்வேசுரன் உண்டு இல்லை, ஆம் அல்லவென்று ஒரு வசனமாகச் சொல்லலாமோ? இல்லையே. விபரீதமாய் எதிர்த்து நிற்கும் இரண்டில் ஒன்று பொய்யாகையில், அந்தப் பொய்யை வேத வசனங்களே ஒப்பிக்கும் என்று சொல்லலா

மோ? அதுவும் இல்லையே. ஆகையால் வேதமே பொய்யு மின்றி, விபரீதமுமின்றி உத்தமமாயினும், அதினுடைய அர்த்தத்தைக் கொள்பவன் உள்ளபடிக் கொள்ளாமல் கெடுத்து விரோத அர்த்தத்தைக் கொள்வானென்று சொல்லவேண்டுமல்லோ?

அப்படி அர்ச். இராயப்பர் இரண்டாம் நிருபத்தின் மூன்றும் அதிகாரம் 16-ம் வசனத்திலே தெளியாமல் மயங்கின அறிவுடையோர் வேத வாக்கியங்களைக் கண்டு பிடியாமல் தங்களுக்குக் கேடாக அர்த்தத்தைச் சொல்லிக் கெடுக்கிறார்களென்றார். இதைப்பற்றி வேத வசனங்கள் கொண்ட அர்த்தத்தைக் கண்டுபிடியாமல் அவைகளைத் தம் ஆசைக்கு அளவாகத் திருத்தி மாற்றினவர்களுடைய அறியாத தன்மையும், அறிந்தவர்களைக் கேட்டுக் கீழ்ப்படியாத ஆங்காரமுஞ் சகல பதிதர் மதங்களுக்குங் காரணமாயிற்றென்று உரோமான் திருச்சபையார் நியாயத்தின்படியே சொல்லி வருகிறார்கள். தரங்கம்பாடியாரோவெனில், நாலாம் பொய்யாக வேதந்தானே சகல பதிதர் மார்க்கத்துக்குங் காரணமென்று நாம் படிப்பித்ததாக இதிலே எழுதி வைத்தார்கள். பசுவின் பால் அமிர்தமாயினுஞ் சுரங் காய்ந்தவருக்கு விஷமாகுமென்றேனுகில், பசுவின் பாலே விஷமென்றேனென்று சொல்லலாமோ? சொன்னால் அதுவே தப்பறையாகுமல்லோ?

3-ம் பேதகமறுத்தல்.

மெய்யும், பொய்யுங் காட்டுங் கண்ணுடியாகத் தேவ வாக்கியமே திருச்சபையில் நிற்பதென்று தரங்கம்பாடியார் இதிலே சொன்ன பின்பு, உரோமான் திருச்சபைப் படிப்பினையாக அவர்கள் எழுதினதாவது: "இதுக்கெதுகையாக மனுஷராலே கட்டப்பட்ட புதிதான உபதேசம் போதிவிக்கிறதாவது: பாப்பென்கிறவருக்கு அவரிட்ட

கட்டளைக்கு மனுஷர் வழியாய் வந்த படிப்பினைகளுக்கு மெதிர்பேசி யவைகளைத் தள்ளுகிற பேர்களெல்லாரும் பொய்யான குருக்களாயிருக்கிறார்களென்றும், பாப்பென் கிறவர் சகலமான வேத தர்க்கங்களிலே நடுச்சொல்லித் தீர்த்துப் போடுகிறதற்குந் தேவ வேத புஸ்தகத்தினுடைய மெய்யான அர்த்தத்தை இதுதானென்று சொல்லித் தீர் மானம் பண்ணுகிறதற்கு மவருக்கு வல்லமை யுண்டாயி ருக்குதென்று மவரிட்ட கட்டளையைத்தள்ளிமறு கையிலே போக உத்தாரமில்லையென்று மனுஷராலே கட்டப்பட்ட புதிதான உபதேசம் போதிவிக்கும்" என்றார்கள்.

மெய்யும், பொய்யும் அறிய எழுதப்பட்ட வேதமே மாத்திரையாகுமென்பதும், வேதத்துக்கு ஒவ்வாயல் விபரீ தமாய் எதிர்த்ததெல்லாம் அபத்தமென்பதும் உள்ளது தானே. இதனாலல்லோ வேத விளக்கத்தில் நாம் எவருக் குந் தெளிவாய் ஒப்பித்தாற்போலே லுத்தோரானிகளும், கல்வீனியானிகளும் வேதத்துக்கு ஒவ்வாத விபரீதங்கள் பலவையும் அநுசரித்ததினால் அவர்கள் திருச்சபையினின்று பிரிந்த பதிதரொன்று சொல்லப்படுவார்கள். ஆகிலும் உரோ மான் திருச்சபை இந்த மாத்திரை பாராமல் கைவிட்ட தென்பதும், பரம்பரமாய் நிற்கும் மனுஷர் படிப்பினை மாத் திரம் வேத மாத்திரையாக உரோமான் திருச்சபையார் அநுசரிப்பார்களென்பதும் இதிலே தரங்கம்பாடியார் சொன்ன இரண்டு பொய்யாமே. இது வெளியாகும்படிக்கு அறியவேண்டியதாவது: யாதொரு விஷயத்திலே சந்தேகந் தோன்றி, மெய்யும் பொய்யும் அறிய வேத வசனங்களை ஆராயக்கடவோம்.

அப்படியே அர்ச். அருளப்பர் சுவிசேஷம் 5-ம் அதி காரம் 39-ம் வசனத்தில் சேசுநாதர் திருவுளம் பற்றின தாவது: நாம் உலகத்தை இரட்சிக்க வந்தவரொன்று ஒத் துக்கொள்ளமாட்டீர்களே. இரட்சிக்க வந்தவர் நாமே என்று நமக்குச் சாட்சி சொல்லுவது வேதவாக்கியங்களல் லோ? அவைகளை ஆராய்ந்து பாருங்களென்றார். ஆனல்

வேத வசனங்கள் பலவும் அர்ச். இராயப்பர் எழுதினபடி, கண்டுபிடிப்பதற்கு அரிதாகையில் அந்த வசனங்களில்தானே சந்தேகந் தோன்றி அதற்குரிய அர்த்தம் இதுவோ அதுவோ வென்று அறியும்படிக்குச் செய்யவேண்டிய தென்ன? சக்கிலியனும், குயவனும் ஒவ்வொருவனுந் தனக்குத் தோன்றின அர்த்தமே அவனவன் கைக்கொள்ளக் கடவானென்று பதிதர் படிப்பிக்கிறார்கள். ஆனால் மாடு சாய்ந்த காட்டு வழியே போல ஆயிரம் முகமாய்ப் பிரிந்து நிற்கும் பதிதர் சமயங்களல்லோ?

சர்வேசுரனேவென்றால், மோயீசன் 5-ம் ஆகமம் 32-ம் அதிகாரம் 7-ம் வசனமாக வேதாகமங்களில் பிறந்த சந்தேகங்களைத் தீர்க்கப் பெரியோரைக் கேட்கக் கட்டளையிட்டார். அப்படியே உரோமான் திருச்சபையும், வேத வசனங்களில் பிறந்த சந்தேகங்களைத் தீர்க்க அவனவன் நினைத்த காட்டு வழியே போக விடாமல் சந்தேகமுள்ள வசனத்துக்கு அர்த்தம் அறியச் சேசுநாதர் தந் திருச்சபைக்குத் தலைவராக அர்ச். இராயப்பரைத் தொட்டு ஸ்தாபித்த அர்ச். பாப்புக்களைக் கேட்கச் சொல்லி அவர்கள் தாமே யாகிலும் அவர்கள் கூட்டின வேதபாரகர் சபையாகிலும் நெடிதாலோசனை செய்து வெளிப்படுத்தின அர்த்தமே சலஞ் சாதியாமல் கீழ்ப்படிந்து எல்லாருங் கைக்கொள்ளக் கற்பித்த முறையாமே. இதற்கு வேத விளக்கத்தின் பதினலாம் பிரிவு துவக்கி இரண்டாம் அதிகாரம் முடியுமட்டுங் காணக்கடவீர்கள்.

மீளவும் அப்போஸ்தலர் நடபடி ஆகமத்தின் 15-ம் அதிகாரம் 41-ம் வசனத்தில் எழுதப்பட்டதாவது: அப்போஸ்தலரும் மற்றப் பெரியோர்களும் இட்ட கற்பனை மீறாமல் காக்க வேண்டுமென்று கற்பித்துக்கொண்டு திருச்சபைக்கு உறுதி சொல்லிச் சீரியமுஞ் சிலீசியமுமென்ற இரு நாடுகளில் அர்ச். சின்னப்பர் திரிந்தாரென்று எழுதியிருக்கத் திருச்சபைத் தலைவராகச் சேசுநாதரால் ஸ்தாபிக்கப்பட்ட அர்ச். பாப்புக்கள் இட்ட கற்பனை மீறாமல் காக்க

வேண்டுமென்று நாமே படிப்பித்தால், மனுஷர் படிப்பனை மாத்திரம் வேத மாத்திரையாகக் கொண்டோமென்று பதிதர் பொய்க்கு அஞ்சாமல் சொல்லக் கூசாதே போனூர்கள். அர்ச். சின்னப்பர் வேதத்தில் செய்த முறையும், கற்பித்த ஒழுங்கும் இதுதானல்லோ? இதுவுமன்றியே அர்ச். லூக்காஸ் சுவிசேஷத்தின் 10-ம் அதிகாரம் 16-ம் வசனத்தில் அப்போஸ்தலருக்குச் சேசுநாதர் திருவுளம் பற்றினதாவது: உங்கள் வார்த்தையைக் கேட்பவன் என் வார்த்தையைக் கேட்பவன்றனே என்றூர். ஆகையால் அப்போஸ்தலருக்குத் தலைவராக நின்ற அர்ச். இராயப்பர் ஸ்தானத்திலிருக்கும் அர்ச். பாப்புக்கள் திருச்சபைக்கெல்லாங் கற்பித்ததைச் சேசுநாதர் கற்பித்ததாக எண்ணிக் கேட்கவேண்டுமென்று நாமே படிப்பித்தால் குறை என்ன? சேசுநாதர் வேதமாகப் படிப்பித்த நீதி முறையாமல்லோ?

4-ம் பேதகமறுத்தல்.

நாலாம் பேதகமாகத் தரங்கம்பாடியார் எழுதினதாவது: "சர்வேசுரன் திருவுளம்பற்றின பூருவத்துபதேசமெங்களுக்குப் போதிவிக்கிறதாவது: நாங்கள் சர்வேசுரனொருத்தரைமாத்திரம் வணங்கி யவருக் கூழியஞ் செய்ய வேண்டுமென்று போதிவிக்கு மதேதென்று லவரொருத்தர் மாத்திரம் லோகமெல்லாத்தையுஞ் சிஷ்டிக்கிறவருமாய தை யாண்டு கொள்ளுகிறவருமா யிரட்சிக்கிறவருமாயிருக்கிறூர். இது எங்களாண்டவராகிய கிறீஸ்துவினுடைய வுபதேசத்துக் கொத்திருக்கு மவர் மத்தேயு சுவிசேஷத்தின் 4-ம் அதிகாரம் 10-ம் கவியிலே திருவுளம் பற்றுகிறதாவது: உன்னுடைய சர்வேசுரனயிருக்கிற ஆண்டவரை வணங்கி யவரொருத்தருக் கூழியம் பண்ணுவாயாகவென்று திருவுளம் பற்றின ரிதுக்கெதுகையாக மனுஷராலே கட்டப்பட்ட புதிதான வுபதேசம் போதிக்கிறதாவது: சர்

வேசுரனை வணங்கவேணு மென்கிறதுந் தவிர வர்ச்சியசிஷ்டவர்களையும் வணங்கவேணுமென்று மந்தந்தச் சாதிகளுக்கும், பட்டணங்களுக்கும், கிராமங்களுக்கும், கப்பல்களுக்கும், கூட்டங்களுக்கும், சபைகளுக்கும், வேதமத்ங்களுக்கும், வியாதி நோவு நோக்காடுகளுக்கு மவர்களை முன்னிற்கிறவர்களாகவுங் காவற்காரராகவும் வயித்தியராகவு மேற்றுக்கொள்ள வேணுமென்று மனுஷரால் கட்டப்பட்ட புதிதான வுபதேசம் போதிவிக்கும்" என்று தரங்கம்பாடியார் எழுதி வைத்தார்கள்.

இதிலே சர்வேசுரன் ஒருவரை மாத்திரம் வணங்கி அவருக்கே மாத்திரம் ஊழியம் பண்ணக்கடவோமென்று தரங்கம்பாடியார் எழுதினார்கள். ஆகிலும் இதிலே தாங்கள் நினைத்தவகை வெளிப்படுத்தக் கடவார்கள். அதேதெனில், சர்வேசுரனுக்கல்லாதே மற்றொருவருக்கு எந்தவகை வணக்கமும், எந்தவகை ஊழியமுஞ் செய்யலாகாதென்று நினைத்தார்களாகில், வேதத்துக்கு ஒவ்வாத அபத்தமான பொய்யாமே. பிதாவையும், மாதாவையுஞ் சங்கித்து வணங்கச் சொல்லி நாலாம் வேத கற்பனை அல்லோ? மீளவும் அர்ச். சின்னப்பர் திமோத்தேயுவென்பவருக்கு எழுதின முதல் நிருபம் 6-ம் அதிகாரம் 2-ம் வசனத்தில் பூவுலகில் அவனவன் தன்னைக் கொண்ட நாதனை வணங்கி அவனுக்கு ஊழியஞ் செய்யப் படிப்பிக்கக்கடவாய். இதற்கு விரோதமாய் ஏதாகிலும் படிப்பிக்க வந்தவன் சேசுநாதர் திருவுளம் பற்றின உத்தம வசனங்களுக்கும், தயையில் தெளிந்த ஞானத்துக்குங் கீழ்ப்படியாதவன் அவனே, ஆங்காரி அவனே, ஒன்றும் அறியாத மடையன் அவனே, என்று அர்ச். சின்னப்பர் எழுதி வைத்தார்.

ஆகையால் எந்தவகைச் சங்கையும், ஊழியமுஞ் சர்வேசுரனுக்கொழிய மற்றவர்களுக்குச் செய்யலாகாதென்பது வேதத்துக்கு ஒவ்வாத தப்பிதமாகி, ஆங்காரத்தாலும், அறியாத மடமையாலுஞ் சொன்ன தப்பறையாமே. அல்லது தேவ வணக்கமும், தேவாராதனைக்கடுத்த ஊழியமுஞ்

சர்வேசுரனுக்கு மாத்திரஞ் செய்யக்கடவோமென்று தரங்கம்பாடியார் இதிலே நினைத்தார்களாகில் இது மெய்யாமே. ஆயினும் இந்த மெய்யை மறுத்து உரோமான் திருச்சபை மோட்சவாசிகளை வணங்குமென்று அவர்கள் சொன்னது முழுப் பொய்யாமே. நாமே மோட்சவாசிகளைத் தேவராக எண்ணவும் இல்லை. தேவாராதனையாக வணங்கவும் இல்லை. சர்வேசுரனுக்கு உகந்தவர்களாகையில் அவரைக் குறித்து நாம் அவருடைய சிநேகிதரைச் சங்கித்து நமக்கு வேண்டிய வரங்களை அவர்கள் கொடுக்கக் கேளாமல், சர்வேசுரன் தாமே அந்த வரங்களை நமக்குத் தரும்படிக்கு அவர்கள் மன்றாடக் கேட்கிறோமல்லோ. ஆகையால் எப்படியாயினும் இதிலேயுந் தரங்கம்பாடியார் பொய் சொன்னது கண்டோம். இதற்கு விவரமாய் வேத விளக்கத்தின் மூன்றும் அதிகாரத்தில் நாம் சொன்னதை வாசிக்கக் கடவீர்கள்.

5-ம் பேதகமறுத்தல்.

ஐந்தாம் பேதகமாகத் தரங்கம்பாடியார் எழுதினதாவது: "சர்வேசுரன் திருவுளம் பற்றின பூர்வத் துபதேசம் போதிவிக்கிறதாவது: சர்வேசுரனுக்குச் செய்யவேண்டிய தேவாராதனைக்கும் ஊழியங்களுக்குந் தேவ வேத புஸ்தகத்திலே பலப்படி அஸ்திவார மத்தாட்சி யுண்டாயிருக்க வேண்டுமென்று சர்வேசுரன் அதிலே பரிபூரணமாக வெளிப்படுத்தி யிருக்கிற தம்முடைய பரிசுத்தமான சித்தத்தின்படியே இஸ்பிரீத்துவிலேயு முண்மையிலேயுந் தம்மை வணங்க வேண்டுமென்றிருக்கிறார். யொயன்னசு 4-ம் அதிகாரம் 24-ம் கவியிலே ஊழிய மனுஷருக்குத் தோன்றின பிரகாரமாகவானாலு மனுஷருடைய படிப்பினை பழக்கங்களின்படியே யானாலுந் தம்மை வணங்க வேண்டாமென்றிருக்கிறாரென்று போதிவிக்கும்படியே சர்வேசுரன் தீர்க்கத்

தரிசியாகிற எசெக்கியெலென்கிறவனைக் கொண்டு 20-ம் அதிகாரம் 18-ம் கவியிலே வெளிப் பொருளாகக் கற்பிக்கிறதாவது: நீங்களுங்கள் பிதாக்களினுடைய வழிப்பாடுகளின்படியே நடக்காமலு மவர்களுடைய நீதி நியாயங்களைக் கைக்கொள்ளாமலு மவர்களுடைய விக்கிரக தேவர்களைக்கொண் டுங்களை அசுத்தமாக்காமலுமிருங்கள். நாமுங்களுடைய சர்வேசுரனும் கர்த்தருமாயிருக்கிறோம். நீங்கள் நம்முடைய வழிப்பாடுகளின்படியே நடந்து, நம்முடைய நீதி நியாயங்களைக் கைக்கொண் டதுகளைச் செய்யுங்களென்று திருவுளம் பற்றினார். அந்தப்படிதானே யெங்களுடைய கர்த்தராயிருக்கிற யேசுக்கிறீஸ்துவானவர் எங்களைப் படிப்பித்து மத்: சுவி. 15-ம் அதி. 9-ம் கவியிலேயாறுலவர்கள் மனுஷருடைய கற்பனைகளாகிற படிப்பினைகளைப் படித்துக்கொண்டு வருகிறபடியினாலே பிரயோசனமில்லாமல் நமக்கூழியஞ் செய்கிறார்களென்று திருவுளம் பற்றினார். இதுக்கெதுகையாக மனுஷரிலே கட்டப்பட்ட புதிதான வுபதேசம் போதிவிக்கிறதாவது; தேவாராதனையிலேயு மூழியத்திலேயுந் திருச்சபையினுடைய முறமைகளையுஞ் சடங்குகளையுங் கட்டளைகளையுங் கைக்கொள்ள வேண்டியதா யிருக்கிறதென்றுங் கனோனிக்கோ நீதி புஸ்தகம் பாப்புகளிட்ட கட்டளைகளுக்குஞ் சுவிசேஷத்துக்குந்தானே யுண்டாயிருக்கிற நிறையையும் பலத்தையும் நடக்கச் செய்கிறதென்றுஞ் சகல சமையங்களிலே இந்தக் கட்டளைகளைக் கைக்கொள்ள வேண்டுமென்றும் போதிவிக்கும். அதேதென்றால் நாலாவது லெயோவென்ற பாப்புவானவர் சொன்னதாவது: பாப்புக்களுடைய கட்டளைகளுக்கும் முறமைகளுக்குங்கூட கீழ்ப்படிந்து நடந்தாலொழிய சுவிசேஷத்தை நன்றாய்க் கைக்கொள்ளக் கூடாதென்று சொன்னார்" என்றார்கள்.

இதிலே முன்னே தரங்கம்பாடியார் சொன்னதாவது: மனுஷருக்குத் தோன்றினபடியாகிலும், மனுஷர் படிப்பித்தபடியென்கிலும் பற்றிக் கீழ்ப்படிந்து நடப்பது சர்வேசுரனுக்குப் பொருந்தாதென்றும், அவர் அதை விலக்கின

றென்றும் எழுதினர்கள். ஆகிலும் இது பொது வசனமாகச் சொன்னபோது பொய்யாமே. பெரியோர் இட்ட நல்ல கற்பனை கேட்டு, அவர்கள் காட்டின நல்வழிபற்றி நடப்பது சர்வேசுரன் விலக்காமல் தமக்குப் பொருந்தின முறையென்று வேதத்தில் காட்டினர். அப்படியே எரோமியஸ் 350-ம் அதிகாரத்தில் யொனதபென்பவன் தன் கோத்திரத்திற்கு இட்ட கற்பனை அவர்கள் மீறுமல் நெடுநாள் நடந்ததினல் அவர்களை ஆண்டவர் தாமே மிகவுந் தோத்திரஞ் செய்தாரென்று கண்டோமல்லோ? அப்படி முன் நாம் காட்டின தன்மையால் அப்போஸ்தலரும், மற்றப் பெரியோர்களும் இட்ட கற்பனை மீறுமல் நடக்கச் சொல்லி அர்ச். சின்னப்பர் கற்பித்துக்கொண்டு வந்தாரல்லோ?

ஆகையால் கரங்கம்பாடியார் எழுதின வசனம் பொதுவாய்ச் சொல்லும்போது வேதத்துக்கு ஒவ்வாத பொய்யாமே. அதற்கு அவர்கள் எடுத்துக் காட்டின எசெக்கியேலின் வசனமோவெனில், அந்தப் பொது வசனத்தை ஒப்பிக்கச் சற்றுகிலும் உதவவுமாட்டாது. அதெப்படியென்றால், அந்த எசெக்கியேல் இரண்டாம் அதிகாரத்திலே தானே எழுதப்பட்டதாவது; எஜிப்து தேசத்தை விட்டு யூதர்கள் வனத்து வழி வரும்போது ஆண்டவர் இட்ட கற்பனை மீறி, உண்டாக்கப்பட்ட வஸ்துக்களைத் தேவனென்று எண்ணி, அவைகளுக்குப் பூசையும், திருநாளுங் கொண்டாடி, அபத்தமான முறைகளை ஸ்தாபித்தார்களென்று எழுதின பின்பு, சர்வேசுரன் அவர்கள் மக்களுக்குக் கற்பித்ததாவது: உங்கள் பிதாக்கள் ஸ்தாபித்த கற்பனையின் படியே நடக்கவும், அவர்கள் அபத்தமாய் எண்ணின முறைகளைக் காக்கவும் அவர்கள் வணங்கின பொய்யான தேவர்களை வணங்கி அசுத்தராகவும் வேண்டாமென்றார். இதுவே நியாயமல்லோ?

நம்முடைய பிதாக்களாயினும், பெரியோர்களாயினும், சம்மனசுகளாயினும் ஆண்டவருக்கு ஏற்காத அபத்தங்களைப் படிப்பித்தால் கேட்கத் தேவையில்லை. ஆகையால்

உரோமான் திருச்சபையும், இதிலே அர்ச். பாப்புக்களுங் கட்டளையிட்ட முறைகளும், ஆசாரங்களும் நாம் அநுசரிப்பது சர்வேசுரனால் விலக்கப்பட்டதென்று தரங்கம்பாடியார் இதிலே எழுதினபோதே அந்த முறைகளும், ஆசாரங்களும் ஆண்டவருக்கு ஏற்காத முறைகளாகுமென்று அவர்களே ஒப்பிக்கக்கடவார்கள். இப்படி ஒப்பிக்கமாட்டாதே போனார்களாகில், இதுவும் அவர்கள் இதிலே சொன்ன இரண்டாம் பொய்யாமே. இதற்கு மூன்றாம் பேதகமறுத்தலில் சொன்னதைக் காணக்கடவீர்கள்.

6-ம் பேதகமறுத்தல்.

இதிலே தரங்கம்பாடியார் சொன்னதாவது: சர்வேசுரன் திருவுளம் பற்றின பூருவத்துபதேச மெங்களுக்குப் போதிவிக்கிறதாவது: சுரூபங்களை ஸ்தாபித்துக்கொண்டு பூசை பண்ணி, ஆராதனை செய்து, வணங்குகிறதென்கிறது சர்வேசுரனுக்கு மகா அருவருப்பான காரியமாயிருக்கிறதென்று போதிவிக்கும்" என்றார்கள். இதைப் பல வேத உதாரணங்களைக்கொண்டு ஒப்பிக்கப் பிரயாசைப்பட்ட பின் அவர்கள் மீளவுஞ் சொன்னதாவது: "இது நிமித்தமாக கிறீஸ்துவர்களுடைய தேவாலயங்களிலே சுரூபங்களை ஆராதனை செய்யத்தக்கதாகப் பரிச்சேதம் ஸ்தாபிக்கவொண்ணாதென்று எங்களுடைய நாதரோசுக் கிறீஸ்துவானவ ரொருவர் மாத்திரந் தேவாலயங்களிலே விசுவாசமுள்ளவர்களுடைய கண்களுக்கு முன்பாக எழுதப்படத்தக்கவரா யிருக்கிறாரென்றும், இதை ஊமையாயிருக்கிற சுரூபங்களினாலே யல்ல வானாலோ விசேஷமாக அவருடைய அர்ச். சுவிசேஷத்தை விசேஷமாகவு மிடைவிடாமலும் வாய்ப் பிரசங்கம் செய்கிறதினாலே செய்ய வேண்டுமென்று சர்வேசுரன் திருவுளம் பற்றின பூருவத்துபதேசம் போதிவிக்கும். கலாத்தியர் 3-ம் அதி. 1-ம் கவி.

இதுக்கெதுகையாக மனுஷராலே கட்டப்பட்ட புதிதான வுபதேசம் போதிவிக்கிறதாவது: சுரூபங்களை ஸ்தாபித்து ஆராதனை ஆசாரம் செய்து வணங்குகிற தென்கிறது சர் வேசுரனுக்கு மெத்தப் பிரியமுமாய்த் திருச்சபைக்கு மெத்தத் தேவையுமாய்ப் பிரயோசனமுமா யிருக்கிறதென் றுஞ் சுரூபங்கள் லோகத்தாருக்கு மூடருக்கு மல்லாமற் படித்தெடுத்தவர்களுக்குங் குருக்கள் கூட்டத்துக்கு முத லாய்ப் புஸ்தகங்கள் பாவனையாயிருக்கிறதென்று மிதுக் கெதுகையாக போதிவிக்கிறவன் சபிக்கப்பட்டவனாயிருப் பானென்று மனுஷராலே கட்டப்பட்ட புதிதான வுபதே சம் போதிவிக்கும்" என்றார்கள்.

இதிலே சுரூப வணக்கத்தை யொழிக்கத் தரங்கம்பா டியார் பிரயாசைப்பட்டதினால் வேத விளக்கத்திலுள்ள ஆறும் அதிகாரமும், ஏழாம் அதிகாரமும் ஆராய்ந்து பார்க்கில் இதற்கு விரிவாக மறு உத்தரங் காணப்படுமே. ஆனால் இங்கேயும் நியாயம் சொல்லி அவர்கள் இதிலே எழுதின பொய்களைக் காட்டக்கடவோம். ஆகையால் இதி லே தரங்கம்பாடியார் எடுத்துக் காட்டின வேத உதாரணங் களில், சர்வேசுரன் எந்தவகை உருவ சுரூபங்களைச் செய் யாதபடிக்கு விலக்கினார் என்றார்களாகில், இது வேதத் துக்கு ஒவ்வாத தப்பறையாமே. அதேனெனில், விக்கிர கங்களையும், உருவங்களையும் உனக்குச் செய்யாதிருப்பா யாகவென்று சர்வேசுரன் கட்டளையிட்ட மோயீசன் இரண் டாம் ஆகமத்திலே தானே 25-ம் அதிகாரத்தில் ஆண்டவர் தாமே சம்மனசுக்களுடைய சுரூபங்கள் இரண்டையுந் தூய தங்கத்தால் உண்டாக்கவும், தமக்குத் தேவ பூசை வழங் கின இடத்திலே ஸ்தாபிக்கவும், விக்கிரகங்களை விலக்கின வேத கற்பனை எழுதப்பட்ட கற்பலகை வைத்திருந்த பே ழையின்மேல் அந்தச் சம்மனசுக்கள் உருபங்களைப் பிரதிஷ் டை செய்யவுங் கட்டளை இட்டாரல்லோ?

இப்படியாகையில் எவ்வகை உருவ சுரூபங்களைச் செய்வது சர்வேசுரன் விலக்கின அக்கியானமாகில், அந்த

அக்கியானம் வழங்கும்படிக்குக் கோயிலிலேதானே, தேவ பூசை முகத்திலேதானே, வேத கற்பனை வைத்த பேழையின்மீதிலேதானே அவர்தாமே அந்தச் சுரூபங்களை ஸ்தாபிக்கக் கற்பிப்பாரோ? இல்லையே. அவர் கற்பித்ததாக வேதத்தில் எழுதப்பட்டபோதே எல்லாவகை உருவங்களைச் சர்வேசுரன் விலக்காமல் இதிலே தரங்கம்பாடியார் சொன்னது வேதத்துக்கு ஒவ்வாத பொய்யாமே.

பின்னையும் யூதர் காலத்திலே விக்கிரகங்களை முழுதும் ஆண்டவர் விலக்கியிருந்தாலுஞ் சேசுநாதர் உண்டாக்கின திருச்சபையிலேயும் விலக்கினுனென்பது தரங்கம்பாடியார் இதிலே சொன்ன இரண்டாம் பொய்யாமே. இவர்கள் இதைச் சொல்லும்போது தங்கள் அப்போஸ்தலனும், குருவும், தலைவனுமாகிய லுத்தேர் பொய்யைப் படிப்பித்தானென்று சொல்லவுங் கடவார்கள். அதெப்படியென்றால், நாம் வணங்குஞ் சேசுநாதர் சுரூபங்களும், தேவமாதா, மோட்ச வாசிகள் உருவங்களும் வணங்கப்படாதென்றவைகளைச் சில பேர் இடித்து உடைத்துத் தீயிற் சுட்ட செய்தியை லுத்தேர் கேட்டு மிகவும் அவர்களைக் கோபித்ததுந் தவிர, 1525-ம் ஆண்டில் அவர்களைப் பரியாசமாகப் பரலோக தீர்க்கதரிசிகளென்று சொல்லி, அவர்களுக்கு விரோதமாக ஒரு புஸ்தகத்தை எழுதினுன். அதை இரு வகுப்பாகப் பிரித்து முதல் வகுப்பிலே அரூபியான சர்வேசுரன் உரூபம் உடையவனென்று, அவருக்கு வைத்த சுரூபங்களை மாத்திரம் பழைய வேதத்திலே விலக்கினதொழிய, கிறீஸ்துவின் சுரூபங்களும், சிலுவை உருவமும், தேவமாதா, மற்ற மோட்சவாசிகள் வடிவுகளும் விலக்கப்பட்டதல்லவென்று ஒப்பித்த பின்பு, இவைகளும் அதிலே விலக்கப்பட்டதென்று சொல்பவர் எல்லாரும் யூதர்களாக வேண்டுமொழியக் கிறீஸ்துவர்கள் அல்லவென்று சொல்லக் கடவோமென்றுன்.

இதோ லுத்தேர் தானே நாம் வணங்குஞ் சுரூபங்களை வேதத்தில் விலக்கப்பட்டதல்லவென்று விரிவாக எழுதி

வைத்தான். ஆகையால் இப்போது தரங்கம்பாடியார் சொன்னதைப் பார்க்குமிடத்திலே தங்கள் குரு பொய் சொன்னானென்று ஒத்துக்கொள்ளக் கடவார்கள். இல்லா விட்டால் அவர்களே தங்கள் குருவின் சாட்சியாகப் பொய் சொன்னார்களென்றும், அவர்களே கிறீஸ்துவின்கூட்டமல்ல வென்றும் அவர்களே யூதர்கள் என்னப்படுவார்களென் றும் வெளியாச்சுதல்லோ?

இவையெல்லாம் இப்படியாகக்கொள்ள, சர்வேசுரன் விக்கிரகங்களைச் செய்யாதபடிக்கு வேதத்திலே விலக்கின இடம் எங்கும் அவர் விலக்கினதேதெணில், தேவனல்லாத வனைத் தேவனாக எண்ணி, அவன் உருவத்தைச் செய்து தேவாராதனையாக வணங்கவும், வைத்த உருவங்கள் அடை யாளமாகக் காட்டும் பொருள் மெய்யான தேவனாயினும், அவரைப் பாராமல் அந்தச் சுரூபங்களிலே நிற்கும் ஆரா தனையோடு அவைகளை வணங்கவும் வேண்டாமென்று வி லக்கினார். அப்படியே உரோமான் திருச்சபையுந் தேவனல் லாதவனைத் தேவனாக உருவங்களை வைத்து வணங்கவும் இல் லை, உருவங்களுக்குச் செய்யும் வணக்கம் அவைகளிலே நிற்கவுமில்லை.

சேசுநாதரைக் காட்டுஞ் சுரூபத்தை வணங்கினால் அதை அடையாளமாக மாத்திரங் கொண்டு, மெய்யான சர் வேசுரனாகிய சேசுநாதரை நினைத்து, தேவாராதனை அவ ருக்கே செய்வோம்; தேவமாதாவையும், மற்ற மோட்ச வாசிகளையுங் காட்டுஞ் சுரூபங்களை வணங்கினால் அவைகளை அடையாளமாக மாத்திரம் வைத்துக்கொண்டு, தேவமாதா வுக்குரிய நமஸ்காரமும், மற்ற மோட்சவாசிகளுக்குரிய வணக்கமும் அவர்களுக்குச் செய்வோமொழிய, அவர் களைத் தேவாராதனையாக வணங்கவில்லை யென்பது நிச்சயந் தானே. இந்த உத்தம முறையோவென்றால், வெளவா லுக்கு ஒளி பொருந்தாததுபோல, நியாயத்தைப் பொறுக் கமாட்டாத பதிதருக்கு மாத்திரம் ஒத்திராமல், நீதி நியா யம் அறிந்த யாவருக்கும் நல்லதென்று தோன்றுமல்லோ?

7-ம் பேதகமறுத்தல்.

இதிலே தரங்கம்பாடியார் எழுதினதாவது: "சர்வேசுரன் திருவுளம்பற்றின பூருவத்துபதேச மெங்களுக்குப் போதிவிக்கிறதாவது, அர்ச். வர்கள் கிறீஸ்துவினுடைய மாகிரிகை பார்த்து நடந்தாற்போலே விசுவாசமுள்ள கிறீஸ்துவர்கள் அர்ச். வர்களுடைய விசுவாசத்தையும் பய பத்தியையும் புண்ணியங்களையும் நல்ல உபதேசத்தையுங் கண்டு பிடித்துப் பின்செல்லவேண்டுமேயல்லாம லவர்களைப் பார்த்து மன்றாடுகிறதினாலு மவர்கள்பேரிலே தன்னுடைய நம்பிக்கையை வைக்கிறதினாலும் அது பரிச்சேத மாக வேண்டாமென்று போதிவிக்கும். அதற்கு மூன்று முகாந்திரங்களுண்டு. முதலாவது. ஒருவனைப் பார்த்து மன்றாடுகிறதென்கிறது சர்வேசுரனொருவருக்கு மாத்திரஞ் செய்யப்படத்தக்க சங்கையா யிருக்கிறது. இந்தப்படிக்கு சர்வேசுரன்தானே தீர்க்கதரிசியாகிற எசையாஸ் என்கிறவனைக் கொண்டு 48-ம் அதிகாரம் 11-ம் கவியில் திருவுளம் பற்றுகிறதாவது: நாம் நம்முடைய சங்கையை வேறொருவனுக்குக் கொடுக்கப்போகிறதில்லை என்று திருவுளம்பற்றுகிறார். இரண்டாவது. அர்ச். வர்கள்தானே யவர்கள் பூலோகத்திலே யின்னமிருந்தபோது இப்படிக்கொத்த சங்கையை யெடுத்துக்கொள்ள மாட்டோமென்றார்கள். அப்போஸ்தலர் நடபடி 10-ம் அதிகாரம் 26-ம் கவி, 14-ம் அதிகாரம் 14–15 கவி யென்கிறதுமல்லாமல் சம்மனசுகள் தானே முதலா யதைத் தள்ளிப்போட்டார்களென்று யுவான சு–அறி 19-ம் அதிகாரம் 10-ம் கவியிலே 22-ம் அதிகாரம் 9-ம் கவியிலே வாசிக்கிறோம். மூன்றாவது. அர்ச். வர்களெங்களுடைய காரியங்களி லொன்று மறியார்கள். அவர்களெங்களை முதலாயறியவில்லை. இப்படி தீர்க்கதரிசியாகிற எசையசு 63-ம் அதிகாரம் 16-ம் கவி வெளிப்பொருளாகச் சொல்லுகிறதாவது: அபிராமென்கிறவ ரெங்களை யறியாரென்கிறதுந் தவிர இஸ்ராயே லென்கிறவருக்கு எங்களு

டைய காரியங்கள் தெரியாது. ஆனால் கர்த்தராயிருக்கிற தேவரீ ரெங்களுடைய பிதாவுமாய் எங்களை இரட்சிக்கிற வருமா யிருக்கிறீரென்று சொல்லுகிறு ராகையினாலே பழைய தெஸ்தமேந்தின் காலத்திலே இஸ்ராயேலித்தார் சர்வேசுர ரொருவருக்கு மாத்திர மல்லாமல் பின்னொருவ னுக்குப் பலியிட்டாலப்போ அவர்களெப்படி யதினாலே விக்கிரகவாராதனைக்காரருமாய்ச் சர்வேசுரனுடைய வேத கற்பனைகளை மீறுகிற பாவிகளுமாய்ப் போனார்களெப்படி யோ அந்தபடிக்கு இக்காலத்திலே அர்ச்சியசிஷ்டவர்களைப் பார்த்தானாலுஞ் சம்மனசுக்களைப் பார்த்தானாலு மன்றாடு கிற பேர்களெல்லாரு மப்படிக்கொத்தவர்களா யிருக்கிறார் கள் அதேதென்று விவர்களதினாலே கிறீஸ்துவானவர் தீற் கமாகவுந் தெளிவாகவும் போதிவித்த வுபதேசத்துக்கு விரோதமாகச் செய்கிறார்கள்."

இதெல்லாந் தரங்கம்பாடியார் சொன்ன பின்பு, பல வேத உதாரணங்களைக் குறித்ததல்லாதே, அவைகளை எடுத்துக் காட்டினால், தங்களுக்கு உதவாதென்று விரித் துச் சொல்லாமல், ஏழைச் சனங்களை ஏய்க்கப் பல விலக் கங்களைப் பெருங் குப்பையாகக் குவித்து வைத்தார்கள். அதன் பின்பு அவர்கள் எழுதினதாவது: "இதுக்கெதுகை யாக மனுஷராலே கட்டப்பட்ட புது உபதேசம் போதி விக்கிறதாவது: அர்ச். வர்கள் சர்வேசுரனுடைய சிநேகிதரு மாய்த் தோழருமாயிருக்கக்கொள்ளக் கிறீஸ்துவர்கள் அர்ச். வர்களையுஞ் சம்மனசுக்களையும் பார்த்து மன்றாடவேண்டு மென்று மிவர்கள் சர்வேசுரனண்டையிலே மன்றாடுகிற மன் றாட்டை நம்பி யிவர்களுடைய சகாயத்தை யிப்படி யடைய வேண்டுமென்றும் அர்ச்சியசிஷ்டவர்கள் பாவிகளுக்காக வேண்டிக்கொண்டு மன்றாடுகிற தில்லையென்றும் அர்ச். வர்களைப் பார்த்து மன்றாடுகிறதென்கிறது விக்கிரகவாரா தனைக்கடுத்த பாவமுமாய்ச் சர்வேசுரனுடைய திரு வசனத் துக்கு விரோதமுமா யிருக்கிறதென்கிறது மிக தப்பறையு மாய்ப் பொல்லாத நினைவுமாயிருக்கிறதென்று மிப்படி

பிணைக்கிறவனு மிப்படி போதிவிக்கிறவனுஞ் சபிக்கப்பட்டவனு யிருப்பானென்று மனுஷராலே கட்டப்பட்ட புதிதான வுபதேசம் போதிவிக்கும்."

இதிலே முந்தமுந்த மோட்சவாசிகளை வேண்டிக் கொள்ளல் ஆகாதென்று திருச்சபை பூருவ உபதேசமாகப் படிப்பித்ததென்று தரங்கம்பாடியார் எழுதினார்கள். ஆகிலும் இது தாங்கள் இதிலே சொன்ன முதல் பொய் யென்று அறிய, நாம் வேதவிளக்கத்தின் ஐந்தாம் அதிகாரத்தில் விரிவாகச் சொன்னதை வாசிக்கக்கடவீர்கள். அதிலே கர்த்தர் பிறந்த பிற்பாடு முதல் ஐந்நூறு வருஷத்திற்குள்ளே பதிதருஞ் சொன்னபடித் திருச்சபை வழுவாதிருக்கையில் வழங்கின பற்பல வேதபாரகர் எழுதி வைத்த வசனங்களை எடுத்துக் காட்டி, திருச்சபைத் துவக்கத்திலே மோட்ச வாசிகளை வணங்கி மன்றாடுகிற முறை வழங்கினதாக ஒப்பித்தோமல்லோ. ஆகையால் பூர்வ திருச்சபை மோட்சவாசிகளை வேண்டிக்கொள்ளல் ஆகாதென்று படிப்பித்ததென்பது தரங்கம்பாடியார் சொன்ன பொய்யாமே.

பின்னையும் மோட்சவாசிகள் பேரிலே நம்பிக்கைப் பரிச்சேதமாய் வைக்கவேண்டாமென்பது பழைய திருச்சபைப் படிப்பினை என்று தரங்கம்பாடியார் எழுதினது இரண்டாம் பொய்யாமே. அதேதெனெனில், முன்சொன்ன அதிகாரத்தில் நாம் விரிவாக வேதவிளக்கத்தில் எழுதினபடிக் கர்த்தர் பிறந்த 254—ம் வருஷத்திலே இறந்த ஒரிஜெனென்பவர் புலம்பலென்னும் புஸ்தகத்தில் எழுதினதாவது: எனக்கு உதவியாகச் சகல மோட்சவாசிகளை வேண்டிக்கொள்ளத் தொடங்குவேனென்றார். அக்காலத்திலிருந்த நெகித்தாரி வேதசாட்சியாகிய அர்ச். தெயொதோர் என்பவரை நோக்கி எழுதினதாவது: எங்கள் குறைப்பாடுகளையும், தளர்ந்த இழிவுகளையும் மறவாதவராய் இடைவிடாமல் எங்களுக்கு வேண்டி, ஆண்டவரை மன்றாடச் சலிக்கவேண்டாமென்றார்.

மீளவும் 393-ம் ஆண்டில் இறந்த அர்ச். கிறகோரியு நிசேனுஸ் முன்சொன்ன வேதசாட்சிக்குத் தோத்திரப் பிரசங்கமாக எழுதினதாவது: அந்நாள் வரைக்குங் குறையுங் கேடுமின்றி, நாங்கள் வாழ்ந்திருந்ததே உமது வேண்டுதலினால் எங்களுக்கு வந்த சகாயமென்று, உம்மைத் தோத்திரஞ் செய்கிறோம். இனி வருங் காலத்தும் அழிவின்றி எங்களைக் காப்பீராகவென்று மிகவும் மன்றாடுகிறோம் என்றார். இதையும் இத்தகைப்பட்ட பலவையும் பார்க்கும்போது திருச்சபை துவக்கத்திலேதானே வழங்கின வேதபாரகர் முதலாய் மோட்சவாசிகளால் நமக்கு உதவி வருமென்று முழு மனதோடே நம்பியிருந்தார்களல்லோ. ஆகையால் பூர்வ திருச்சபை மோட்சவாசிகளைப் பரிச்சேதமாய் நம்பவேண்டாமென்று படிப்பித்ததென்பது தாரங்கம்பாடியார் அதிலே சொன்ன இரண்டாம் பொய்யாமே.

இதுவுந் தவிர், மோட்சவாசிகளை வேண்டிக்கொள்ளல் ஆகாதென்று ஒப்பிக்கத் தாரங்கம்பாடியார் மூன்று நியாயங்களைக் காட்டப் பிரயாசைப்பட்டு, வேறே எழு தப்பறைகளைச் சொன்னார்கள். அவைகளின் முதலாவது: ஒருவனை மன்றாடுகிறதென்கிற சங்கை சர்வேசுரனுக்கு மாத்திரஞ் செய்யத்தகுஞ் சங்கையாமே என்றார்கள். இது பொய்யாவதொழிய, மதிகெட்டவனும் நினைக்கமாட்டாத அபத்தமான தப்பிதமாமல்லோ. தாரங்கம்பாடியார் சொன்னது மெய்யானால், இந்தப் பூலோகத்தில் ஒருவன் ஒருவனை அநுதினம் பல முகாந்தரமாக மன்றாடுகிற போதெல்லாம் இவன் அவனைத் தெய்வ சங்கையாக வணங்கினானென்று சொல்லக் கடவோமல்லோ. நாம் ஒருவனை மன்றாடுகிறபோது அவன் இதிலே நமக்குப் பெரியவனென்று சங்கிக்கிறது நிச்சயந்தானே. ஆகிலும் இதனால் அவன் நம்மைத் தேவனாக வணங்கினானென்று நினைப்பாருண்டோ?

தரங்கம்பாடியார் இதற்குச் சொல்லும் இரண்டாம் நியாயமாவது: சொன்ன சங்கை இந்தப் பூலோகத்திலேயும், அர்ச்சியசிஷ்டவர்கள் தமக்குச் செய்யவொட்டாதே போனார்களென்று எழுதி வைத்தார்கள். ஆகிலும் முன் சொன்ன சங்கை மன்றாடுகிறதினால் வருஞ் சங்கையல்லோ. ஆகையால் அர்ச்சியசிஷ்டவர்கள் இந்தப் பூலோகத்திலே தம்மைப் புறத்தியார் மன்றாடல் ஆகாதென்று விலக்கினார்கள் என்றாற்போலே ஆச்சுதல்லோ? ஆயினுந் தம்மை மன்றாட வொட்டாமல் விலக்கினார்களாகில், தாங்கள் தாமே புறத்தியாரை மன்றாடுவானேன்? அப்படியே அர்ச். சின்னப்பர் சுவிசேஷமாய்த் தாம் எழுதின நிருபங்களிலே அடிக்கடி சனங்களை மன்றாடினார். அப்படியே பிலிப்பெஞ்சியருக்கு எழுதின நிருபம் 4-ம் அதிகாரத்தின் இரண்டாம் வசனத்திலும், உரோமாபுரியாருக்கு எழுதின நிருபத்தின் 15-ம் அதிகாரம் 30-ம் வசனத்திலுங் காணப்படுமே. பின்னையும் மோட்சவாசிகளை நமக்காக வேண்டிக்கொள்ள நாமே மன்றாடுகிறாப்போலே, அர்ச். சின்னப்பர் தாமே கொலோசெஞ்சியாருக்கு எழுதின நிருபத்தின் 4-ம் அதிகாரத்தில் 2-ம் வசனத்திலும், தெசலோனியாருக்கு எழுதின முதல் நிருபத்தின் 5-ம் அதிகாரத்தின் 25-ம் வசனத்திலும், 2-ம் நிருபத்தின் 3-ம் அதிகாரம் முதல் வசனத்திலும் நமக்காக வேண்டிக்கொள்ளுங்களென்று மன்றாடி எழுதினாரல்லோ. ஆகையால் மன்றாடுகிற சங்கை ஆகாதென்று மகாத்துமாக்கள் இந்தப் பூலோகத்திலே விலக்கினார்களென்பது தரங்கம்பாடியார் சொன்ன பொய்யாமே.

மீளவும் இப்பூலோகத்திலே அர்ச்சியசிஷ்டவர்கள் தங்களை மன்றாட வொட்டாதிருந்தார்களென்று ஒப்பிக்க, அப்போஸ்தலர் நடபடியாகமத்தின் 10-ம் அதிகாரம் 26-ம் வசனத்தைத் தரங்கம்பாடியார் குறித்தார்கள். ஆகிலும் இதிலே கொர்னேலி என்பவன் அர்ச். இராயப்பரைக் கண்டவுடனே சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கினனென்றும், அதைக் கண்ட அர்ச். இராயப்பர் அவனைக்

கை தூக்கி, நானும் மனுஷனல்லோவென்றுமென்றும் எழுதியிருக்க, தம்மை ஆராதனை செய்யவேண்டாமென்று அர்ச். இராயப்பர் விலக்கினுெரொழிய, அதிலே அவன் இவனை மன்றாடவுமில்லை, அவர் தம்மை மன்றாட வேண்டாமென்று சொல்லவுமில்லை. இதுவுந் தவிர, அதற்குத்தானே அந்த ஆகமத்தின் 14-ம் அதிகாரம் 14-ம் வசனத்தையுந் தரங்கம்பாடியார் குறித்தார்கள்.

ஆகிலும் இதிலே அர்ச். சின்னப்பரும், பார்னபாவென்றவரும் பிறவிச் சப்பாணிக்கு ஆரோக்கியந் தந்து காட்டின புதுமையால், இவர்களைத் தேவர்களென்று நினைத்து, வெகு சனங்கள் கூடி, அவர்கள் வணங்கின பிரதான தேவனுக்குப் பூசிக்கிறவனும் வந்து, இவர்களுக்குப் பூசையாகப் பலி கொடுக்க வேண்டுமென்று இருந்தான். அதைக் கண்டு அர்ச். சின்னப்பரும், பார்னபாவென்றவரும் மிகுந்த துக்கத்தைக் காட்டிக் கூப்பிட்டு, உங்களைப்போலே நாங்களும் மனுஷரல்லோவென்று அந்த அக்கிரமமான பூசையை விலக்கினுர்கள். அப்படியே தரங்கம்பாடியார் தமிழாகத் திருப்பின புஸ்தகத்திலே முதலாய் எழுதியிருக்கிறதல்லோ. இது இப்படியிருக்கக்கொள்ள, அர்ச்சியசிஷ்டவர்கள் முதலாய் இப்பூலோகத்தில் இருக்கும்போது தம்மை மன்றாடவொட்டார்களென்று ஒப்பிக்க, தமக்குத் தேவ ஆராதனையும், தேவ பூசையுஞ் செய்யவொட்டாத அத்தாட்சியைக் கொண்டு விடவோ? மன்றாடுகிற சங்கையும், பூசையாகப் பலியைக் கொடுக்கிற சங்கையும் ஒன்றென்பார்களோ?

இதுவே வெட்கமெல்லாங் காலாலே மிதித்து, மற்ற ஏழைச் சனங்களை ஏய்த்துக் கெடுக்கச் சொன்ன இரண்டு பொய்யல்லோ. அப்படியே மன்றாடப்படுகிற சங்கை சம்மனசுகள் முதலாய்த் தங்களுக்குச் செய்யவொட்டாதே போனுர்களென்பதும் பொய்யாமே. மோயீசன் முதல் ஆகமத்தின் 48-ம் அதிகாரம் 16-ம் வசனத்தில் யாக்கோபு என்பவர் தன் பேரப்பிள்ளைகளைக் குறித்துச் சொன்னதாவது:

சகல தின்மைகளில் என்னைக் காத்த சம்மனசானவர் இந்தப் பிள்ளைகளை ஆசீர்வதிக்கக் கடவதென்றார்.

இதோ அவர்களை வேண்டி, யாக்கோபு என்பவர் சம்மனசானவரை மன்றாடினதொன்று வேதத்தில் எழுதப்பட்டதாமே. ஆகையால் தரங்கம்பாடியார் சொன்னது வேதத்திற்கு விரோதமான பெய்யாமே. மீளவும் இந்தப் பொய் ஒப்பிக்க அவர்கள் குறித்த இரண்டு வேத உதாரணங்கள் இதை ஒப்பிக்குமென்பதும் பொய்யாமே. அதெப்படியென்றால், அர்ச். அருளப்பர் காட்சியாகமத்திலே தரங்கம்பாடியார் குறித்த 19-ம் அதிகாரம் 10-ம் வசனத்திலும், 22-ம் அதிகாரம் 9-ம் வசனத்திலுந் தம்மை அர்ச். அருளப்பர் வணங்காதபடிக்குச் சம்மனசு விலக்கினதொழிய, தம்மை மன்றாட வேண்டாமென்று விலக்கினதில்லையே. மீளவும் அதிலே அந்தச் சம்மனசு தனக்கு வணக்கஞ் செய்ய விலக்கினதினால், நாம் சம்மனசுகளை வணங்கலாகாதென்று தரங்கம்பாடியார் நினைக்கவுந் தேவையில்லை. அதேனெனில் அர்ச். அருளப்பர் சம்மனசுகளை வணங்கத் துணிந்தது நிச்சயமாகக்கொள்ள, அந்தப்படியே நாமுஞ் சம்மனசுகளை வணங்கினால், அப்போஸ்தலர் காட்டின வழியையல்லோ பின்சென்று நடக்கிறோம்.

பதிதரோவெனில், அப்போஸ்தலனைப் பார்க்கத் தெளிந்த ஞானிகளாய் அப்போஸ்தலர் செய்யத் துணிந்ததை வேதத்தில் விலக்கின அக்கியானமென்பார்களோ. சம்மனசு முதலாய் அந்த வணக்கம் ஆகாதென்று விலக்கினாரோ அல்ல. ஆகாதென்று விலக்கினாராகில், 19-ம் அதிகாரத்தில் அந்த வணக்கம் ஆகாதென்று அர்ச். அருளப்பர் அறிந்த பின்பு, திரும்பவும் 22-ம் அதிகாரத்தில் எழுதப்பட்டபடியே சம்மனசை வணங்கத் துணிவாரோ? ஆகையால் சம்மனசானவர் தம்மை வணங்க வேண்டாமென்றபோதே அந்த வணக்கம் ஆகாதென்றதினால், அதை விலக்காமல், அதற்கு வேறே காரணம் உண்டென்று சொல்லக்கடவோம். அதேதெனில் சுதனாகிய சர்வேசுரன் மனுஷவ

தாரஞ் செய்யாமுன்னே வேதத்தில் எழுதினபடியே அபிரகாமும், லோத்தும் மற்றப் பலருஞ் சம்மனசுகளை வணங்கினவிடத்திலே, சம்மனசுகள் அவர்களை விலக்கினதில்லையே. ஆனால் சம்மனசுகள் தாமே ஆண்டவர் அவதரித்தெடுத்த மனுஷ சுபாவத்தை வணங்கத் துவக்கினபின் போவென்றால், மனுஷருக்குள்ளே மகாத்துமாக்கள் விசேஷமாய்த் தங்களை வணங்காதபடிக்குத் தாழ்ச்சிக் கடையாளமாகவும், சேசுநாதர் எடுத்த மனுஷ சுபாவத்துக்குச் சங்கையாகவுஞ் சம்மனசுகள் விலக்கினதறிவோம்.

ஆகையால் நாம் சம்மனசுகளை வணங்கவேண்டுமென்பது வேதத்துக்கொத்த முறையாகும். அவர்களுந் தம்மை வணங்க வேண்டாமென்பது தாழ்ச்சிக்கொத்த முறையாகும். அப்படியே அர்ச். லூக்கா சுவிசேஷத்தின் 4-ம் அதிகாரம் 41-ம் வசனத்தில் எழுதின தன்மையால், சேசுநாதர் துரத்தின பசாசுகள், நீரோ சர்வேசுரனுடைய குமாரனென்று புகழ்ந்த இடத்திலே சேசுநாதர் அவைகளைக் கண்டித்து, பேசாதபடிக்கு அடக்கினாரல்லோ. ஆகிலுஞ் சேசுநாதர் தம்மைத் தோத்திரஞ் செய்யாதபடிக்குப் பசாசுகளை அடக்கினதினால், நாமுஞ் சேசுநாதரைத் தோத்திரஞ் செய்யலாகாதென்று நினைப்பாருண்டோ? மீளவும் அர்ச். லூக்கா சுவிசேஷத்தின் 23-ம் அதிகாரம் 28-ம் வசனத்தில் எழுதினபடியே சேசுநாதர் சிலுவையைச் சுமந்து போகையில், அவரைப் பார்த்து சில ஸ்திரீகள் இரங்கி அழுகிறதைக் கண்டு அவர் எனக்கிரங்கி அழவேண்டாமென்றார். ஆகையால் நம்மை இரட்சிக்கச் சேசுநாதர் பட்ட பாடுகளை நினைத்து இரங்கி அழுவது ஆகாதென்று நினைப்பாருண்டோ? அப்படியே சம்மனசானவர் தம்மை வணங்காதபடிக்கு அர்ச். அருளப்பரை விலக்கினதினால், நாமுஞ் சம்மனசுகளை வணங்கலாகாதென்று சலஞ்சாதித்த பதிதரொழிய மற்றவர்கள் சொல்வாருண்டோ.

கடைசியில் மோட்சவாசிகளை மன்றாடலாகாதென்று ஒப்பிக்கத் தரங்கம்பாடியார் சொல்லும் மூன்றாம் நியாய

மாவது: மோட்சவாசிகள் நம்மை அறியவுமில்லை. நமக்கு அடுத்தவைகளில் ஒன்றும் அவர்களுக்குத் தெரியவுமில்லை என்றார்கள். ஆகிலும் இது மோட்சவாசிகளுக்குத் தூஷணமாகவும், வேதத்துக்கு விரோதமாகவுந் தரங்கம்பாடியார் சொன்ன பொய்யல்லோ. தோபியாஸ் ஆகமத்தின் 12-ம் அதிகாரம் 12-ம் வசனத்தில் இரபயேல் என்கிற சம்மனசு தோபியாசைப் பார்த்துச் சொன்னதாவது: நீ கண்ணீரை விட்டழுது வேண்டின அளவில் நானே உன் வேண்டுதலை ஆண்டவருக்கு ஒப்புக்கொடுத்தேன் என்றாரே. தோபியாசை அறியாமலும், அவன் விட்ட கண்ணீரைக் காணாமலும், அவன் செய்த வேண்டுதலைக் கேளாமலும் இதெல்லாஞ் சம்மனசானவர் செய்தாரோ என்ன?

அப்படியே அர்ச். அருளப்பர் காட்சி ஆகமம் 5-ம் அதிகாரம் 8-ம் வசனத்திலும் 8-ம் அதிகாரம் 3-ம் வசனத்திலும் ஆண்டவர் சமுகத்தில் 24 மூப்பர்களும், ஒரு சம்மனசும் விழுந்து பொற் பாத்திரங்களில் பூம்புகை காட்டின பாவனையாக மோட்சத்திலிருந்த தாங்களே பூவுலகிலிருந்த நல்லோர் செய்த வேண்டுதலைக் காட்டி மன்றாடினதாக எழுதியிருக்க அவர்களும் அந்த நல்லோரை அறியாமலும், இவர்கள் செய்த வேண்டுதலைக் கேளாமலும், அதைப் பூம்புகையாக ஆண்டவருக்குக் காட்டி மன்றாடினார்களோ என்ன. அப்படியே மக்கபேயர் இரண்டாம் ஆகமத்தின் 15-ம் அதிகாரம் 12-ம் வசனந் துவக்கி எழுதப்பட்டபடியே மரணத்தை முன் அடைந்த எரேமியசென்பவர் இசுறயேல் சனங்களுக்காகவும், எருசலேமென்கிற திருநகருக்காகவும் வேண்டிக்கொண்டிருந்தாரென்றும், அவர்களுக்கு வந்த ஆபத்தறிந்து, சர்வேசுரனை மன்றாடி, அற்புதமாய் அடைந்த வெற்றிவாளை யூதசென்கிற தளகர்த்தனுக்குச் சத்துருக்களை வெல்லச் சொல்லிக் கொடுத்தாரென்றும் அறிவோமே. இதெல்லாம் ஒன்றும் அறியாமல் செய்ததாகச் சொல்லுவோமோ என்ன.

ஆகையால் மோட்சவாசிகள் நம்மை அறியவுமில்லை,

நாம் செய்த வேண்டுதலைக் கேட்கவும் இல்லையென்பது வேதத்துக்கொவ்வாத பொய்யாமல்லோ. இதற்கு வேத விளக்கத்தின் 26-ம் 27-ம் பிரிவிலே நாஞ் சொன்னதைக் காணக்கடவீர்கள். இப்போது ஒருபக்கத்து ஏட்டிலே தரங்கம்பாடியார் சொன்ன ஒன்பது பொய்களை ஒப்பித்தது போதுமென்று இருக்கிறோம்.

8-ம் பேதகமறுத்தல்.

எட்டாம் பேதகமென்று தரங்கம்பாடியார் பூர்வவேத சத்தியமாகச் சேசுநாதர் ஒருவரே துணையுமின்றி, குறையுமின்றி நம்மை எல்லாரையும் இரட்சித்தவரென்று சொன்னபின்பு, நாம் இந்த மறுத்தாற்போலப் படிப்பித்ததாக அவர்கள் எழுதினதாவது: "இதுக்கெதுகையாக மனுஷராலே கட்டப்பட்ட புது உபதேசம் போதிவிக்கிறதாவது: எங்களுடைய நாதர் ஏகக்கிறீஸ்துநாதர் செய்த மீண்டிரட்சித்துதல் குறையற்றதா யிருக்கவில்லையென்று போதிவிக்குமதேதென்றால் கிறீஸ்துவானவர் சென்மப் பாவத்துக்காக மாத்திர மரித்தாரென்றுந் தம்முடைய மரணத்தினாலே குற்றத்திற்காக மாத்திர மீடு செய்தாரென்றும் ஆக்கினையோவென்றால் மனுஷன் தானே ஆக்கினைப்பட்டுச் சர்வேசுரனுடைய நீதிக்கு இதுக்காக வீடு செய்ய நீதியுள்ள சர்வேசுரன் வேண்டுமென் றிருக்கிறாரென்றும் புண்ணியக்கிரிகைகளைச் செய்கிறதுந் தபசு செய்து சரீரத்தை யொறுத்தாலுங் கோவிற்பண மவதாரங் கொடுத்தாகிலு மீடு செய்கிறதும் பூசைகளும் இந்துல்செஞ்சியாக் கடுதாசிகளும் உத்தரிக்கிற ஸ்தலத்திலே யாக்கினை வாதைப் படுகிறது மிவைகளெல்லாம் பாவங்களைப் பரிக்கிரகம் செய்து தன்னைச் சுத்தம் செய்கிறதற்கான வகையோடே கூட்டாயிருக்கிற வகைகளா யிருக்குதென்றும் புதிதான வுபதேசம் போதிவிக்கும்" என்றார்கள்.

இதிலே சேசுநாதர் நம்மைக் குறையற இரட்சித்தவ ரல்லவென்றும், சென்மப் பாவத்துக்காக மாத்திரம் மரித் தாரொன்றும், தாம் அடைந்த மரணத்தினால், பாவத்தி னால் வரும் ஆக்கினைக் கடன் தீராமல் பாவதோஷத்தை மாத்திரந் தீர்த்து உத்தரித்தாரொன்றும், உரோமான் திருச் சபை படிப்பித்ததாகத் தரங்கம்பாடியார் எழுதக் கூசாதே போனார்கள். இந்த மூன்று அக்கிரமமான பொய்களை மறுக்க உரோமான் திருச்சபை உட்பட்ட கிழவிகள் முத லாய்ப் போதுமல்லோ. அப்படிப்பட்டவர்களை முதலாய்க் கேட்டால் இந்த விஷயத்திலே சொல்லப்போகிற தன்மை யாவது:

சேசுநாதர் ஒருவரோ மனுஷர் அனைவருஞ் செய்த எல் லாப் பாவங்களுக்காக உத்தரிக்க வல்லவரொன்றும், அப் படியே சிலுவையில் அறையுண்டு அடைந்த மரணத்தினால் சென்மப் பாவத்துக்காகவும், சகல கருமப் பாவங்களுக்கா கவும் பாவ தோஷமொழியப் பாவத்தால் வரத்தகும் ஆக்கி னைக் கடன் தீரவும் வேண்டின முறையின்மேலும் அளவில் லாத உத்தம மேரையாய் உத்தரித்தாரொன்றும், அதனால் அவர் ஒருவரோ நம்மை இரட்சித்தவரொன்றும், குறையற மிஞ்சின உத்தம முறையோடு இரட்சித்தவரொன்றுங் கிழ விகள் முதலாய்ச் சொல்வார்களல்லோ? இது இப்படியாக விருக்கையில் தரங்கம்பாடியார் சற்றுங் கூசாமல் அந்த அபத்தங்களை உரோமான் சபையார் படிப்பிக்கிறார்களெ ன்று எழுதினார்களே. நாம் இதிலே படிப்பிக்குஞ் சத்தி யம் ஏதென்று வேத விளக்கத்தின் 78-ம் பிரிவிலேயும், 112–ம் பிரிவிலேயுங் காணக்கடவீர்கள்.

9-ம் பேதகமறுத்தல்.

இதிலே தரங்கம்பாடியார் சொன்னது ஏதெனில்: "சர்வேசுரன் திருவுளம் பற்றின பூருவத் துபதேசமெங் களுக்குப் போதிவிக்கிறதாவது: எங்கள் நாதர் ஏசுக்கிறீஸ் துவானவ ரொருத்தர் மாத்திரஞ் சர்வேசுரனுக்கு மனுஷ ருக்கு மொன்றான நடுவருமாய்த் தம்முடைய அனாதியான பிதாவினண்டையிலே யவரொருத்தர் மாத்திர மெங்களுக் காகப் பரிந்துபேசுகிறவருமாய் மன்றாடுகிறவருமா யிருக்கி றாரொன்று இதின் முகாந்திரமாக வேறொருவரானாலு மெங் களுக்குக் கிடைக்கமாட்டாரொன்று நாங்களும் வேறொரு வரைப் பரிச்சேதமாகத் தேடவேண்டாமென்றும் போதி விக்கும்." இந்தக் கொடிய வசனங்களைத் தரங்கம்பாடியார் சொல்லிச் சொன்னதற்குப் பல முகாந்தரங்களைக் காட்டின பின்னர் எழுதினதாவது: "இதுக்கெதுகையாக மனுஷரா லே கட்டப்பட்ட புது உபதேசம் போதிவிக்கிறதாவது: எங்களுடைய நாதர் ஏசுக்கிறீஸ்துவானவர் ஒருவர் மாத்தி ரஞ் சர்வேசுரனுக்கு மனுஷருக்கும் ஏகனா யிருக்கப்பட்ட நடுவராயிராம லவரல்லாம லவரோடேகூட பரமண்டலத்தி லே யாண்டுக்கொள்ளுகிறவராயிருக்கிற அர்ச். வர்களு மிப் படிக்கொத்த நடுவரா யிருக்கிறார்களென்கிறதுந்தவிர தேவ மாதாவாகிற அர்ச். கன்னிமரியாளும் பாவிகளுக்குஞ் சகல மான மனுஷ சாதிக்கு முன்னிற்கிறவளுமாய் மன்றாடுகிற வளுமாய்ப் பரிந்து பேசுகிறவளுமா யிருக்கிறாளென்று மனுஷருடைய புது வுபதேசம் போதிவிக்கும்" என் றார்கள்.

இதற்கு வேத விளக்கத்தின் 24-ம் பிரிவில் எழுதப் பட்டதைக் காண்பீர்களாக. ஆகிலும் இதிலே தரங்கம்பா டியார் ஏழைச் சனங்களை ஏய்க்க மறைவாகச் சொன்ன தப்பறைகள் வெளியாகும்படிக்கு அறியவேண்டியதாவது: மனுஷர் செய்த பாவமெல்லாஞ் சர்வேசுரன் சந்நிதியில் அவர்கள் மேலே சுமத்தின பல கடனாமே. அதனாலல்லோ

பரமண்டல மந்திரத்தில் எங்கள் பாவங்களைப் பொறுமென்பதற்கு எங்கள் கடன்களை எங்களுக்குப் பொறுமென்று கேட்கச் சேசுநாதர்தாமே படிப்பித்தார். இதிப்படியாகையில், இருவருக்கு உண்டாகிய கடன் வியாச்சியத்தைத் தீர்க்க மற்றொருவன் நடுவே நின்று மூன்றுவகையில் அந்த வியாச்சியத்தைத் தீர்த்து உறவு உண்டாக்கும் மத்தியஸ்தனுவான்.

அவைகளின் முதலாவது: இருவரில் அவனுக்கு இவன் கடன் கொடுக்க வேண்டுமென்றும், கொடுக்க வேண்டிய கடன் இம்மாத்திரமென்றுஞ் சொல்வது மத்தியஸ்தன் வியாச்சியத்தைத் தீர்க்கும் முதல் வகையாமே. இந்த வகையால் ஆண்டவர் எல்லாவற்றையும் அறிந்த நீதிபரனுக்கக்கொள்ள அவருக்கும் நமக்கும் வேறொரு மத்தியஸ்தன் தேவையில்லையே. இரண்டாவது: அவனுக்கு இவன் இவ்வளவாகக் கடன் தரவேண்டுமென்று நிச்சயமாகி இவன் கடனை உத்தரிப்பதற்கு ஒன்றும் இல்லாதவனுகக்கொள்ள மற்றொருவன் இரங்கி இவனுக்கு வேண்டித் தன் கைப்பொருளைக் கொடுத்துச் சுமந்த கடனைத் தீர்ப்பது மத்தியஸ்தன் வியாச்சியத்தைத் தீர்க்கும் இரண்டாம் வகையாமே.

இந்த வகையால் மெய்யான சர்வேசுரனும், மனுஷனுமாகிய சேசுநாதரொழிய அளவறுக்கப்படாத பாவக் கடனைத் தீர்த்து, நமக்கும் ஆண்டவருக்கும் மத்தியஸ்தராக நிற்க வல்லவர் ஒருவருமில்லை. அப்படி அர்ச். சின்னப்பர் திமோத்தேயுஸ் என்பவருக்கு எழுதின முதல் நிருபத்தின் 2-ம் அதிகாரம் 5-ம் வசனத்தில் சொன்னதாவது: சர்வேசுரன் ஒருவரே. சர்வேசுரனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தர் ஒருவரே. எல்லாரையும் மீட்கத் தாமே தம்மைத் தந்த மனுஷனை சேசுகிறீஸ்துதானென்றார். அப்படியே பட்ட பாவக் கடனை உத்தரிக்கமாட்டாமல் அடிமையாய்க் கிடந்த நம்மை எல்லாரையும் மீட்டிரட்சிக்கத் திவ்விய தன் இரத்தத்தை விலையாகச் சேசுநாதர் தந்து நமக்கு வேண்டித் தாமே தம்மைச் சிலுவை மரத்திற்கு ஒப்

புக்கொடுத்த மத்தியஸ்தர் அவர் ஒருவரேயென்று உரோமான் திருச்சபை படிப்பிக்குஞ் சத்தியமாமே.

ஆகையால் இந்த இரண்டாம் வகையால் சேசுநாதரொழிய மற்ற மோட்சவாசிகளும், அவருடைய தேவதாயும் நமக்கு மத்தியஸ்தராக நிற்கிறார்களென்று நாம் சொன்னதுங் கருதினதுமில்லை. சொன்னோமென்று தரங்கம்பாடியார் இதிலே எழுதினது குழந்தைகள் முதலாய் நகைக்கத்தகும் பொய்யாமே. மூன்றாவது: அவனுக்கு இவன் உத்தரிக்கமாட்டாமல் பட்ட கடனை அவன் தயையாகப் பொறுக்க மன்றாடினவனும், இருவருக்கு மத்தியஸ்தனாக நிற்பானென்பார்கள். இந்த மூன்றாம் வகையால் நமக்குஞ் சர்வேசுரனுக்கும் மத்தியஸ்தராகச் சேசுநாதர் நிற்பதன்றி சேசுநாதர் அடைந்த பாடுகளைக் குறித்து நமக்கு ஆண்டவர் இரங்க மன்றாடி மோட்சவாசிகளும் இங்கே நம்மோடே கூடத் திரிகிறவர்களும் மத்தியஸ்தராகலாமென்றுஞ் சொல்லத்தகுமே. அப்படியே மோயீசன் தாம் எழுதின ஐந்தாம் ஆகமத்தின் 5-ம் அதிகாரம் 5-ம் வசனத்திலே சர்வேசுரனுக்கும், யூதர்களுக்கும் நடுவாய் நின்ற மத்தியஸ்தன் நான்தானேயென்று தெளிவாகச் சொன்னார். அப்படியே அர்ச். சின்னப்பர் கலாத்தியருக்கு எழுதின 3-ம் அதிகாரம் 19-ம் வசனத்தில் மோயீசனை நடுவாய் நின்ற மத்தியஸ்தனென்றாராகையால் இந்த வகையோடே சேசுநாதர் ஒருவரோ மாத்திரம் நமக்கு மத்தியஸ்தரென்று தரங்கம்பாடியார் சொன்னது இரண்டாம் பொய்யாமே.

ஆகிலும் முன் சொன்ன இரண்டாம் வகையால் சேசுநாதர் நமக்கு மத்தியஸ்தராகி நாம் கொண்டிருந்த பாவக்கடனெல்லாங் குறையற உத்தரித்த பின்பு, மீளவும் அந்தக் கடனை ஆண்டவர் பொறுக்க மன்றாடும்படிக்கு வேறே மத்தியஸ்தர் வேண்டுமோ? வேண்டுமென்றால், நாமே பட்ட கடனைத் தீர்த்து, நம்மை மீட்கச் சேசுநாதர் தந்த மதியாத விலையாகிய தமது திவ்விய இரத்தம் போதா

தென்று சொல்லவும் வேண்டுமல்லோ? இது பெரிய அபத்தமாகையில், வேறே மத்தியஸ்தனைத் தேடலும் அபத்தமாமேயென்று இதிலே சொல்வார்களாக்கும். ஆகிலும் நமது பாவக் கடனைக் குறையறத் தீர்த்த பிற்பாடு சேசுநாதர் தாமே பிதாவின் வலது பாரிசத்திலே இருந்து உரோமாபுரியாருக்கு 8-ம் அதிகாரம் 34-ம் வசனத்தில் அர்ச். சின்னப்பர் எழுதினபடியே நமக்கு வேண்டி மன்றுடுவானேன். இனி யாதொருவன் பாவத்தைச் செய்தால் பிதாவினிடத்தில் நமக்கு வேண்டி மன்றுடுகிறவராகச் சேசுநாதரே நிற்கிறுரென்று அர்ச். அருளப்பர் முதல் நிருபத்தில் 2-ம் அதிகாரம் முதல் வசனத்தில் எழுதுவானேன்?

சேசுநாதர் இங்கே பாடுபட்டு அடைந்த பலன்கள் போதாதென்றே இப்போது மோட்சத்திலும் நமக்காக மன்றுடிக்கொண்டிருக்கிறுர். மீளவும் அர்ச். சின்னப்பர் உரோமாபுரியாருக்கு எழுதின 15-ம் அதிகாரம் 30-ம் வசனத்தில் ஆண்டவரிடத்திலே நீங்கள் எனக்காக வேண்டிக்கொண்டு எனக்கு உதவவேண்டுமென்று எழுதுவானேன்? அப்படியே மோட்சக் கரை ஏறும்படிக்கு ஒருவன் ஒருவனுக்காக வேண்டிக்கொள்ளுங்களென்று அர்ச். யாகப்பர் 5-ம் அதிகாரம் 16-ம் வசனத்தில் எழுதுவானேன். சேசுநாதரால் நமக்கு வந்த பலன்கள் போதாதென்றே ஒருவன் ஒருவனுக்காக வேண்டிக்கொண்டு நாம் கரை ஏறவேண்டுமென்றுர்கள். இதெல்லாம் வெளியாகும்படிக்கு அறியவேண்டியதாவது: நம்மை மீட்கச் சேசுநாதர் தந்த விலையும், நாம் கரை ஏற அவர் நமக்கு அடைந்த பலன்களும் போதுமேயொழிய வேண்டியதின் மேலும் அளவொன்றின்றி மிஞ்சினதுதானே.

ஆகிலும் சேசுநாதர் தனித் தயை முறையால் பாடுபட்டு அடைந்த பலன்கள் தயையோடே கூடின நீதி முறையால் பாத்திரமாய் இருக்கிறவர்களுக்கு மாத்திரம் உதவவேண்டுமென்று சித்தமானுர். நாமோவென்றுல்,

அறிவடைந்த பின்னர் அந்தப் பலன்கள் உதவியை அடையப் பாத்திரமாவதற்குச் சர்வேசுரன் ஒத்தாசையும், நமது மனத் துணிவும் வேண்டியதாமே. இதனாலல்லோ சகலருங் கரை ஏற வேண்டியதின்மேலும், சேசுநாதர் எல்லாருக்கும் பலன்களை அடைந்திருந்தாலும் எல்லாருங் கரை ஏறாமல் இன்னம் அநுதினம் எண்ணப்படாத பேர்கள் நரகத்திலே விழுகிறார்கள். ஆகையால் நாமும் இப்படி விழாதபடிக்கு ஆண்டவர் நமக்கு விசேஷ ஒத்தாசை செய்யவும், அவர் உதவியைக்கொண்டு நாமும் மனதிலே துணியவும், சர்வேசுரன் இரங்கிச் செய்யவேண்டுமென்று சேசுநாதர் நமக்கு வேண்டி எந்நேரமும் பிதாவை மன்றாடுகிறாரென்றும், இப்பூவுலகில் ஒருவன் ஒருவனுக்காக மன்றாட வேண்டுமென்றும் வேதத்தில் எழுதப்பட்டதாமே.

ஆகிலுஞ் சேசுநாதர் நமக்கு அடைந்த அளவில்லாத பலன்களுக்கு நாம் பாத்திரமாகச் சேசுநாதரும், இங்கே இருக்கிற பேர்களுங் குறையொன்றின்றிச் சர்வேசுரனை வேண்டிக்கொள்ளலாம் என்றதுபோல அதற்குத்தானே மோட்சத்தில் வாழும் பேர்களும் வேண்டிக்கொள்ளலாமென்றால் குறை என்ன? மேலான தேவ மத்தியஸ்தனாகிய சேசுநாதருக்குக் குறை செய்யாமல், பூவுலகில் நமக்காக வேண்டிக்கொள்ளச் சொல்லி வேறே மத்தியஸ்தனைத் தேடலாமென்று பதிதருஞ் சொல்ல, அதற்குத்தானே வானுலகில் வாழும் மோட்சவாசிகளை மத்தியஸ்தராகத் தேடலாகாதென்ற சொல்வதென்ன? இதுவே உச்சிப் பகலும் இருண்டதென்று சொல்லத் தான் தனக்கு ஒருவன் இரு கண் பிடுங்கின தன்மையாமல்லோ.

* ❋ *

10-ம் பேதகமறுத்தல்.

பத்தாம் பேதகமாகத் தரங்கம்பாடியார் கொடுமொழித் தமிழாக எழுதினதாவது: "சர்வேசுரன் திருவுளம் பற்றின பூர்வத் துபதேச மெங்களுக்குப் போதிவிக்கிறதாவது: எங்களை இரட்சித்தவராகிற ஏசுகிறீஸ்துவானவர் தம்முடைய அனுதியான பிதாவாகிற சர்வேசுரனுக்குஞ் சகலமான மனுஷருக்குஞ் சரியாய்க் குறையற நிறைந்த பிரகாரமாகச் சமாதானம் செய்துகொண்டாரென்று மிந்தச் சமாதானம் செய்தலைத் தாந்தானுகிற வந்த வொன்றுன பழுதற்ற பலியினுலே முடித்துக்கொண்டார். இந்தப் பலியை யாதொரு பாவத்தைப் பரிக்கிரகம் நிவர்த்தி செய்யத் தக்கதாக அவரொருதரங் கசப்பானதுவுமாய்ப் பாரமானதுவுமாயிருக்கிற சிலுவையின் மரத்திலே பலியிட்டு இந்தப் பிரகாரமாக அவர்களுக்கு ஊழிகால நிற்கிற-இரட்சித்துதலை வரச்செய்துகொண்டா ரானதுகொண்டு-இப்போ பாவங்களுக்காக வேறே பலியானுலுங் காணிக்கையென்கிலு மிருக்கவுமில்லை இனித் தேவையா யிருக்கவுமில்லை. எபிரேயருக்கு நிருப 9 அதி. 12-25-26-கவி. எபிரேயருக்கு 10 அதி. 12-18–கவி. யிதுக்கெதுகையாக மனுஷருடைய புது வுபதேசம் போதிவிக்கிறதாவது: மிசாவென்கிற பூசை உயிரோடே யிருக்கிற பேர்களுக்கும் மரித்தவர்களுக்கும் பாவப் பொறுத்தலைப் பலிக்கச் செய்கிற சமாதான பலியா யிருக்கிறதென்று போதிவிக்கும்" என்றூர்கள்.

இதிலே தரங்கம்பாடியார் சொன்னதாவது: நம்முடைய பரம கர்த்தராகிய சேசுநாதர் கபாலமலைமேல் ஒருமுறை சம்மைத்-திவ்விய பலியாகத் தந்து முடித்த சிலுவைப் பூசையால் குறையறச் சகல பாவங்கள் பொறுக்கப்படவும், சகல மனுஷர் மேல் கறை ஏறவும், பலனை அடைந்து குறை வையாமல் நம்மை இரட்சித்தாரென்றூர்கள். இது குன்றுத சத்தியந்தானே. இதுவே சத்திய

மாகக்கொள்ள இனி வேறொரு கிறீஸ்து வந்து நமக்காகப் பாடுபடவுந் தேவையில்லே. இந்தக் கிறீஸ்து தானே மறுபடி வந்து பாடுபடவுந் தேவையில்லே. இதுவே அர்ச். சின்னப்பர் எபிரேயருக்கு எழுதின 9-ம் 10-ம் அதிகாரத்திலே சொன்னதற்கு அர்த்தமாகும். இந்தச் சத்தியத்தைச் சொன்ன பின்பு, தரங்கம்பாடியார் இதிலே எழுதி வைத்ததாவது: இதற்கு விரோதமாக உரோமான் சபையார் இன்ன நற்கருணைப் பூசை சீவியர்களுக்கும், மரித்தவர்களுக்கும் பிரயோசனமாக உண்டென்று சொல்வார்கள். இப்படி அவர்கள் இதிலே எழுதினதைக் கண்டோம்.

ஆகிலும் முன் சொல்லப்பட்ட சத்தியத்திற்கு விரோதமாக நற்கருணைப் பூசை உண்டென்று சொன்னோமாகில், நம்மைக் குறையற இரட்சிக்கும்படிக்குச் சிலுவைப் பூசை போதாமல் இன்னம் அந்தக் குறை தீர நற்கருணைப் பூசை வேண்டியதாகப் படிப்பிக்கிறோமென்று சொல்லவேண்டுமல்லோ? இல்லாவிட்டால் நாஞ் சொன்ன அந்தச் சத்தியத்துக்கு எப்படி விரோதமாகும். இதோ உரோமான் திருச்சபைமேலே பாமர சனங்களுக்கு அருவருப்பு உண்டாகத் தரங்கம்பாடியார் வெட்கமில்லாமல் சொல்லும் அக்கிரமமான பொய்களே. சிலுவைப் பூசை போததினால், நற்கருணைப் பூசை வேண்டியதென்று உரோமான் திருச்சபையாரில் ஒருவன் மாத்திரம் எழுதினதாக அவர்களே காட்டக் கடவார்கள். காட்டமாட்டாதேபோனால் அக்கிரமமாய்த் தாங்களே பொய் சொன்னார்களென்று கீழே தலை குனிந்து, நாணி உலகமெல்லாம் அறிய ஒத்துக்கொள்ளக் கடவார்கள். நற்கருணைப் பூசை மெய்யான பூசை என்றும், சீவியர்களுக்கும், மரித்தவர்களுக்கும் உதவும் பூசை என்றும், உலகம் முடியுமட்டும் முடியாது அநுதினஞ் செய்யத்தகும் பூசை என்றும் உரோமான் திருச்சபை படிப்பிக்கிறது உள்ளதுதானே.

ஆகிலும் முன் சொன்ன சத்தியத்திற்கும், சிலுவைப் பூசைக்கும் விரோதமாக நற்கருணைப் பூசை உண்டென்று

நாம் சொல்லுகிறோமென்கிறது பொய்தானே. இதிலே உரோமான் திருச்சபை படிப்பிக்குஞ் சத்தியம் ஏதென்றறிய நாம் தந்த வேத விளக்கத்திலுள்ள பூசை விளக்கமென்னும் 15-ம் அதிகாரம் முழுதும் விசேஷமாய் அதிலே 112-ம் பிரிவுங் காணக்கடவீர்கள். குறை வையாமல் சேசுநாதர் முடித்த சிலுவைப் பூசைக்கு நித்தம் நினைவு உண்டாகவும், நன்றியறிந்த தோத்திரமாகவும், அவர்தாங் கட்டளையிட்டபடியே அவர்தாந் தேவ குருவும், தேவ பலியுமாகி அநுதின நற்கருணைப் பூசை உரோமான் திருச்சபையில் வழங்கும் உத்தம முறையாமே.

சகல நன்மையின் ஊற்றுக்களாகச் சேசுநாதர் சிலுவைப் பூசையில்-திறந்த தந் திருக் காயங்கள் ஓயாமல்-தந் தொழுகும் புலன்களை நமக்குக் கொண்டுவிடுங் காலாகவும், போன பேதகத்திலே சொன்ன தன்மையால் அந்தப் பலன்களுக்கு நாமே பாத்திரமாவதற்குப் பிதாவாகிய சர்வேசுரனை விசேஷ ஒத்தாசை செய்யச் சொல்லி அவருக்கு மிகவும் பிரிய பலியாகவும், நற்கருணைப் பூசை அனுதினம் வழங்கும் உத்தம முறைமையாமே. நிறைந்த தடாகங் கொண்ட தண்ணீர் வயலில் பாயத் திறந்த மடைகள் அதற்கு விரோதமென்பார் உண்டோ? உச்சிப்பகலினுந் தெளிந்த இந்த நியாயங்களைக் கண்டு பிடியாதவனே குருடனாகவும், கண்டுபிடித்தாலும் அவைகளைப் பொறுக்க மாட்டாமல் மயக்தவனே ஒளி பகைத்த வெளவாலாகவும் வேண்டியதல்லோ.

11-ம் பேதகமறுத்தல்.

இதிலே தரங்கம்பாடியார் எழுதினதாவது: "சர்வேசுரன் வெளிப்படுத்தின பூருவத் துபதேச மெங்களுக்குப் போதிவிக்கிறதாவது: வேத கற்பனைகள் பிறமாணத்தின் படியே செய்கிற புண்ணியக் கிரிகைகளதிலே கூட்டா

யிராமல்-ஏசுக்கிறீஸ்துவின் பேரிலே உண்டாயிருக்கிற விசுவாசத்தினாலே மாத்திரம் நாங்கள் நீதி விளங்கப் பண்ணப்பட்டுச் சர்வேசுரனுடைய நடுத் தீர்வையிலே யெங்களுடைய பாவங்களெல்லா நீங்கிப்போகிறதென்று போதிக்கும்.-றோம். 3 அதி. 24–28-கவி. கலாச்சிய 2 அதி. 16 கவி. அப்படியே இஸ்பிரீத்து சாந்துவானவர் சகல விசுவாசமுள்ள பேர்களுடைய பிதாவாகிற அபிறுமென்கிறவர் பேரிலே சாட்சி கொடுத்துச் சொல்லுகிறதாவது: அபிறுமென்கிறவர் சர்வேசுரனுக்கு விசுவாசமாயிருந்தார். அது அவருக்கு நீதியாக லபிச்சுதென்று சொன்னார். மோசேசு 1 புஸ்தகம் 15 அதி. 6 கவி. றோம். 4 அதி. 3- கவியிடத்திலே அப்போஸ்தலனாகிற அர்ச். பவுலுவென்கிறவர் தீர்க்கமாகக்கூடச் சொல்லுகிற தேதென்றாலிது அவருக்காக எழுதப்பட்டிருக்கிறது என்கிறதுமல்லாமல் விசுவாசமானது எங்களுக்கு நீதியாகப் பலிக்கும்படிக்கு எங்களுக்காகவும் எழுதப்பட்டதென்று றோம். 4 அதி. 23-24- கவியிலே சொல்லுகிறார். பின்னையு மிந்த வப்போஸ்தலன்தானே கலாச்சிய நிரு. 2 அதி. 21- கவியிலே சொல்லுகிறதாவது: வேதத்தினுடைய கிரிகைகளினாலே நீதி யுண்டானால் கிறீஸ்துவானவர் விருதாவிலே மரித்தாரென்று சொல்லுகிறார். இதுக்கெதுகையாக மனுஷருடைய புது உபதேசம் போதிவிக்கிறதாவது: சர்வேசுரன் நடுச் சொல்லுகிற வசனத்தின் முன்பாக மனுஷன் நீதி விளங்கச் செய்கிறதிற்கு விசுவாசமல்லாமல் கிரிகைகளுங் கூட உதவியாயிருக்குமென்று புது உபதேசம் போதிவிக்குமென்றார்கள்.''

இதிலே வேத கற்பனையின்படியே செய்யப்பட்ட புண்ணியக் கிரிகைகளில்லாமல் விசுவாசத்தால் மாத்திரமே ஆண்டவர் சமுகத்தில் எங்கள் பாவங்கள் நீங்கி, அவருக்கு நல்லவராவோமென்று தரங்கம்பாடியார் வேதப் படிப்பனையாக எழுதினார்கள். ஆகிலும் இதற்கு எதிராக அர்ச். யாகப்பர் 2-ம் அதிகாரம் 24-ம் வசனத்தில் எழுதினதாவது: விசுவாசத்தினால் மாத்திரமல்ல, நல்வினைகளினாலேயும் மனுஷனைவன் ஆண்டவருக்கு உகந்தவனாவானென்று அறி

யக்கடவீர்களென்றார். தாங்கம்பாடியார் சொன்னதற்கு நேரிட்டு எதிர்த்த வேத வசனம் இதுவே அல்லோ. பின்னையும் அவர்தாம் அதிலே 14-ம் வசனமாக எழுதினதாவது: விசுவாசத்தைக் கொண்டிருக்கிறேனென்று ஒருவன் நல்லொழுக்கம் இல்லாதவனாகில் அவனுக்கு வரும் பலன் என்ன? அப்போது அவனை விசுவாசம் ஈடேற்றலாமோ வென்றார். அப்படியே புண்ணிய ஒழுக்கமில்லாத விசுவாசம் மனுஷரை ஈடேற்றமாட்டாதென்று அர்ச். யாகப்பர் வேத வாக்கியமாகச் சொல்லியிருக்கத் தாங்கம்பாடியார் புண்ணிய நடக்கை இல்லாத விசுவாசமே மாத்திரம் மனுஷரை ஈடேற்றுமென்றார்கள். இதற்குமேல் எதிர்பட வேதத்திற்கு ஒவ்வாத பொய்யும் உண்டோ?

பின்னையும் அர்ச். யாகப்பர்தாமே அந்த அதிகாரத்து இருபதாம் வசனத்தில் எழுதினதாவது: நல்லொழுக்கமில்லாத விசுவாசம், உயிரில்லாத பிணம் என்றார். இதற்கு அர்த்தமேதெனில், உயிரில்லாத பிணங் கிடந்து நாறி, எவருக்கும் அருவருப்பாகுமொழிய ஓர் அடி நடக்கவும், ஓர் வினை செய்யவுமாட்டாததுபோல புண்ணிய ஒழுக்கத்தோடு இசையாத விசுவாசமும், இஷ்டப்பிரசாதமாகிய உயிரில்லாமல் கிடந்து, பாவமாகிய துர்க்கந்தம் நாறி ஆண்டவருக்கு அருவருப்பாகுமொழிய அதனால் நல்லது ஒன்று ஆகவுமாட்டாதென்று அதற்கு அர்த்தமாகும். தாங்கம்பாடியாரோவெனில், வேத கற்பனை ஒழுக்கமில்லாத விசுவாசத்தினால் ஆண்டவருக்கு நாம் நல்லவர்களாகி, எல்லா நன்மையும் அடைவோமென்றார்கள். இதுவும் வேதத்திற்கு நேர் எதிர்ப்பட்ட பொய்யல்லோ? அர்ச். யாகப்பர் இப்படி எழுதினாரோ இல்லையோவென்று சந்தேகப்படவுந் தேவையில்லை. தாங்கம்பாடியார்தாமே தமிழாகத் திருப்பின சுவிசேஷப் புஸ்தகத்தில் 921-ம் ஏட்டில் 14-ம் வசனமும், மறு ஏட்டிலே 20-ம் வசனமும் 24-ம் வசனமுங் கொடிய மொழியாலே எழுதப்பட்டதாகக் காணப்படுமே.

ஆகிலும் அர்ச். சின்னப்பர் உரோமாபுரியாருக்கு எழு

தின 3-ம் அதிகாரம் 28-ம் வசனத்தில் சொன்னதற்கொப்ப நாங்களுஞ் சொன்னோமென்று தரங்கம்பாடியார் எழுதினார்கள். இதுவும் இவர்கள் சொன்ன மற்றொரு பொய்யாமே. அதிலே அவர்கள் சொன்ன தன்மையால் வேத கற்பனையின்படியே செய்யப்படும் புண்ணியக் கிரியைகளின்றி, விசுவாசத்தினால் மாத்திரம் இஷ்டப்பிரசாதமும், கரை ஏற்றமும் ஆகுமென்று அர்ச். சின்னப்பர் சொன்னாரோ- இல்லையே. பல முறைகளைக் கற்பித்து மோயீசனைக் கொண்டு சர்வேசுரன் தந்த பழைய வேதத்திற்கும், விசுவாசத்தினால் வழங்கும் சேசுநாதர் தந்த அருள் வேதத்திற்கும் உள்ள வேற்றுமை அந்த அதிகாரத்தில் அர்ச். சின்னப்பர் காட்டி அதிலும் இது நல்லதென்று சொன்னபின்பு, சேசுநாதர் வந்த பிறகு பழைய வேதத்தில் கற்பிக்கப்பட்டிருந்த முறைகளினால் இப்போது நமக்கு ஈடேற்றமாகாமல், சேசுநாதர் தந்த விசுவாசத்தினால்வழங்கின அருள் வேத முறைகளினால் இஷ்டப்பிரசாதம் அடைந்து, சுவாமிக்கு நல்ல வராவோம் என்றார்.

இதனாலல்லோ அவர் தாம் மறு வசனத்தில் சர்வேசுரன் யூதருக்குமாத்திரம் ஆண்டவரோ, மற்றச் சனங்களுக்கும் ஆண்டவரல்லவோ? அவர்களுக்கு முந்தி ஆண்டவர் அவர்தாமே என்றார். இதற்கு அர்த்தமேதெனில், இப்போது யூத வேதத்தில் உட்படாமலும், அந்த வேத முறைகளை அநுசரியாமலுஞ் சேசுநாதர் காட்டின விசுவாச வழியால் நடந்தோமாகில், சர்வேசுரன் யூதரை இரட்சித்ததிலேயும் அதிகமாய் நம்மை ஆண்டு இரட்சித்துக் கரை ஏற்றுவாரென்பது அர்த்தமாகும். அக்காலத்தில் சேசுநாதர் வேதத்தில் உட்பட்ட யூதர்கள் அக்கியானத்தினின்று வந்து ஞானஸ்நானம் பெற்றவர்களும், தங்களைப்போலே மோயீசன் வேதத்தில் உட்பட்டு, விருத்தச் சேதனஞ் செய்து, பழைய முறைகளெல்லாம் அநுசரிக்க வேண்டுமென்று சாதித்தார்கள். அர்ச். சின்னப்பரோவெனில், அந்த முறைகளை அநுசரிக்கத் தேவையில்லையென்று ஒப்பிக்கப் பல இடத்தில் பிரயாசைப்பட்டார்.

அப்படி இதிலே மோயீசன் வேதத்தில் கற்பித்திருந்த விருத்தச் சேதனமுதல் பல முறைகளை இப்போது அநுசரிக்கத் தேவையில்லையென்று எழுதினாரொழிய, பத்து வேத கற்பனையின்படியே செய்யப்படும் புண்ணியங்கள் இப்போது கரை ஏற வேண்டியதல்லவென்று எழுதவும் நினைக்கவுமில்லையே. இதிலே அர்ச். சின்னப்பர் மறைவாகச் சொன்னதற்கு அர்த்தஞ் சொன்னாற்போலத் தாமே வெளியாகக் கொரிந்தியாருக்கு முதல் நிருபம் 7-ம் அதிகாரம் 19-ம் வசனத்தில் எழுதினதாவது: விருத்தச்சேதனம் வீண்தானே. வேத கற்பனை அநுசரித்தாலே கருமமென்றார். அப்படியே கலாத்தியருக்கு எழுதின 2-ம் அதிகாரம் 21-ம் வசனத்தில் விருத்தச்சேதனம் முதலிய சடங்குகளைக் குறித்து அவர்தாமே சொன்னதாவது: அந்தப் பழைய வேதமுறைகளால் நமக்கு இஷ்டப்பிரசாதம் ஆகுமென்றால், வீணாய்க் கிறீஸ்து மரணத்தை அடைந்ததாகச் சொல்லவேண்டும் என்றார்.

இவையெல்லாம் ஆராய்ந்து பார்க்கில், பழைய வேதத்தில் வழங்கின விருத்தச்சேதனம் பூசைகள் ஸ்நான முறைகள் முதலிய சடங்குகள் இப்போது வேண்டியதுமல்ல, இப்போது அவைகளால் நமக்கு ஒரு பலன் வருவதுமல்லவென்று அர்ச். சின்னப்பர் படிப்பித்தாரொழிய, புண்ணியங்களைச் செய்யாமல் செத்த பிணமாய்க் கிடக்கும் விசுவாசத்தால் கரை ஏறுவோமென்று பதிதர் அபத்தமாகச் சொல்லுந் தப்பறைக்கொப்ப அவர் எழுதினதாகச் சொல்லவும், கருதவுங் கூடாதல்லோ? இதற்கு வேத விளக்கத்தில் 73-ம் பிரிவிலேயும், 74-ம் பிரிவிலேயுஞ் சொன்னதைக் காணக்கடவீர்கள்.

12-ம் பேதகமறுத்தல்.

இதிலே "சர்வேசுரன் வெளிப்படுத்தின பூர்வத் துப தேச மெங்களுக்குப் போதிவிக்கிறதாவது: விசுவாசமா னது சந்தேகத்தோடே கூடின காரியமா யிருக்கவுமில்லே, இருக்கத் தேவையுமில்லே யானலோ கிறீஸ்துவினுடைய இரத்தத்திலே இப்போதானே யுண்டாயிருக்கிறதுவுமா யினிமே லின்னம் வரப்போறதுவுமா யிருக்கிற- இரட்சித் துதலேக்கொண்டு ஐயமில்லாமற் கெட்டியான நிக்ஷயம் விசுவாசத்துக் குண்டாயிருக்கிற தென்கிறதுந் தவிர உண் டாயிருக்கவேண்டுமென்றும் போதிவிக்கும்" என்று தரங் கம்பாடியார் சொல்லிப் பலவையும் வைத்தபின்பு எழுதின தாவது: "இதுக்கெதுகையாக மனுஷருடைய புது வுபதே சம் போதிவிக்கிறதாவது: அவனவன் தன் தன் பேரிலே எடுத்துப் போட்டுக்கொள்ளுகிற நீதி விளங்கச் செய்யுதல் மெத்த வய்யமுமாய்ச் சந்தேகமுமா யிருக்கிறதென்றும் அவனவனுடைய வீடேற்ற மிதிலுஞ் சந்தேகமாயிருக்கிற தென்றும் போதிவிக்கும். இந்த பிரகாரமாக எல்லாரு மவனவன் தன்னுடைய சொந்தமான வீடேற்றத்தின் பேரிலே எப்போதுஞ் சந்தேகப்பட வேண்டியதாயிருக் கிறது. இது வல்லாமல் சர்வேசுரனுடைய தயவின்பேரிலே யும் வரப்பிரசாதத்தின் பேரிலேயு மொத்தாசையின் பேரி லேயுஞ் சந்தேகப்படாம லிருக்கிறதென்கிறது மகா பெரிய வாங்காரப் பெருமையா யிருக்கிறதென்றும் நீதி விளங்கச் செய்கிற விசுவாசம் புண்ணியஞ் சினேகிதந் தர்மக்கிரிகை யில்லாம லிருக்கலாமென்றும் அநேகம் விசை யிப்படியி ருக்குமென்று மனுஷருடைய புது வுபதேசம் போதிவிக் கும்" என்றார்கள்.

முந்தித் தரங்கம்பாடியார் இதிலே ஆண்டவர் அரு ளிச் செய்தசத்தியங்களே அனுசரிக்கும் விசுவாசமும், அவர் தாந் தந்த வாக்குத்தத்தங்களே நம்பும் நம்பிக்கையும் ஒன்று படக் கலந்தார்கள். நாமோவெனில், வேறுபட இரண்டையும்

பிரித்து உரோமான் திருச்சபை இதிலே படிப்பிக்குஞ் சத்தியங்களைச் சொல்லிக் காட்டுவோம். அந்தச் சத்தியங்களைக் காட்டின தன்மையால் இதிலே தரங்கம்பாடியார் எழுதின தப்பறைகளும் வெளியாமே. ஆகையால் சர்வேசுரன் அளவில்லாத ஞானம் உடையவராகையில் எல்லாவற்றையும் உள்ளபடியே அறிவாரென்றும், அவர் அளவில்லாத நீதி உடையவராகையில், எல்லாவற்றையும் அறிந்தபடியே அறிவிப்பாரென்றுங் 'குன்றாத சத்தியமாகக் கொள்ள இவ்விரண்டு அசையாத வச்சிரத் தூண்கள் மேலே விசுவாசமே தளராது நின்று, சர்வேசுரன் அறிவித்ததெல்லாஞ் சற்றுஞ் சந்தேகப்படாமலும், சற்றுந் தத்தளியாமலும் உட்கொள்ளக் கடவோம். எவ்வளவாகிலுஞ் சந்தேகத்துக்கு இடங் கொடுத்தோமாகில், ஒன்றில் ஆண்டவர் ஞானத்துக்கு விரோதமாய் அவர் எல்லாவற்றையும் அறிந்தவரல்லவென்றும், ஒன்றில் நீதிக்கு விரோதமாய் எல்லாவற்றையும் அறிந்தபடி அறிவித்தவரல்லவென்றுஞ் சந்தேகமாமே.

ஆகையால் எக்காலத்தும் எப்படியும் ஆண்டவர் அறிவித்த சத்தியங்களை அநுசரிக்கும் விசுவாசந் தளராமல் நிற்கவேண்டியது நிச்சயந்தானே. நம்பிக்கையோவெனில், மோட்சபாக்கியம் முதற்கொண்டு எல்லா நன்மை மனுஷருக்குத் தருவோமென்று சர்வேசுரன் வாக்குத்தத்தங்களைத் தந்தாரென்றும், அவைகளைச் செலுத்த அவர் அளவில்லாத வல்லமையும், அளவில்லாத தயையும் உடையவரென்றும், சற்றும் அஞ்சாமல் நிச்சயிக்கும் விசுவாசத்தின் மேலே ஊன்றி நிற்கும் புண்ணியமே தேவ நம்பிக்கைத் தானே. ஆண்டவர் வல்லமையாகிலும், தயையாகிலும் நம்மைக் கரை ஏற்றப் போதுமோ போதாதோவென்று சந்தேகப்பட்டால் விசுவாசமும், நம்பிக்கையுங் கெட்டுத் தேவதூஷணமாக அக்கிரமமான பாவமாமே.

ஆகிலும் அர்ச். அகுஸ்தீன் எழுதினபடியே நம்மை அல்லாமல் தாமாக நம்மைப் படைத்த சுவாமி, நம்மை அல்லாமல் நம்மைக் கரை ஏற்றார். அதேதெனில், ஆண்ட

வர் புறத்துணை உதவி தேடாமல் நம்மைப் படைத்தாரா யினும், நம்மைக் கரை ஏற்றத் தாம் இட்ட கற்பனையின்படி நாஞ் செய்யத்தகும் புண்ணியங்களே துணையாக வேண்டு மென்று திருவுளமானுர். அதெப்படியென்றல், சர்வே சுரன் நமக்கு மோட்சந் தருவோமென்று முற்று வசனமா கச் சொல்லாமல், ஓர் உடன்படிக்கைக் கூட்டி மனுஷர் அறிவடைந்த பின்பு, வேத கற்பனையின்படியே நடந்தால் தான் அவர்களுக்கு மோட்சத்தைத் தருவோம் என்றுற் போல அர்ச். மத்தேயு சுவிசேஷத்தின் 19-ம் அதிகாரம் 17-ம் வசனமாக நித்திய சீவியமாகிற மோட்சத்தில் புக வேண்டுமாகில், வேத கற்பனையை மீருமல் காப்பாயாக என்றுர்.

மீளவும் அங்கேதானே 24-ம் அதிகாரம் 13-ம் வச னத்தில் மரணபரியந்தம் புண்ணியத்திலே நிலைகொண்ட வனே கரை ஏறுவானென்றுர். ஆகையால் ஆண்டவர் நமக்கு வார்த்தைப்பாடு தந்தபடிக் கரை ஏறவேண்டுமாகில், அவர் உதவியினுல் எம்மிடத்திலே கற்பனை யொழுக்கமும், மரண பரியந்தம் நிலைமையும் வேண்டியதல்லோ? நாமோ வெனில், இப்போது கற்பனைக்கு ஏற்காத ஒரு பாவமின் றிச் சுவாமிக்குப் பிரியமாக நடக்கிறேமோ, அவருக்கு விரோதமாக நடக்கிறேமோ நிச்சயமாக அறியமாட்டோ மே. அப்படியே சலோமோன் எழுதின இரண்டாம் ஆக மம் 9-ம் அதிகாரம் முதல் வசனமாக ஆண்டவர் சந்நிதி யில் அவனவன் சிநேகத்திற்கோ, பகைக்கோ தான் பிராப் தியாயிருப்பது அறிவார் இல்லையென்று எழுதியிருக்கு மல்லோ?

மீளவும் இப்போது ஆண்டவருக்கு உகந்தவனுனேன் என்று அறிந்தாலும், இனி மரணபரியந்தம் வழுவாமல் புண்ணிய நெறியிலே நிற்பேனென்று ஒருவரும் அறியார். இன்று நெறியில் நிற்கிறேனென்று இருக்கிறவன் விழாத படிக்கு எச்சரிக்கையாயிருக்கக் கடவானென்று அர்ச். சின்னப்பர் கொரிந்தியாருக்கு முதல் நிருபத்தின் 10-ம் அதிகாரம் 12-ம் வசனத்தில் எழுதினுர். ஆகையால் ஆண்

டவர் தயையைப் பற்றி நம்மைக் கரை ஏற்றச் சித்தமா யிருக்கிறுரென்றும், அவர் வல்லமையைப் பற்றி அதற்கு வேண்டிய உதவியைச் செய்வாரென்றும், சற்றுஞ் சந்தேகப்படாமல் விசுவசித்துத் தத்தளியாமல் நம்பினலும், அதற்குத் துணையாய் வேண்டிய நம்முடைய ஒழுக்கமும், நிலைமையும் நம்மால் பழுதற ஆகுமோ, இல்லையோ என்று நிச்சயம் இல்லாமையால், நாம் எப்போதுந் தாழ்ச்சியுள்ள பயத்தோடு இருக்கக்கடவோம். அப்படியே அர்ச். சின்னப்பர் பிலிப்பேஞ்சியருக்கு எழுதின 2-ம் அதிகாரம் 12-ம் வசனத்தில் பய நடுக்கத்தோடே கரை ஏறப் பிரயாசைப் படுவீர்களென்ருர். இவையெல்லாம் வேதத்தில் ஊன்றி உரோமான் திருச்சபை இதிலே படிப்பிக்குஞ் சத்தியங்களென்று அறியக்கடவீர்கள்.

ஆகையால் நானே கரை ஏறுவேனென்று நிச்சயமாக விசுவசிக்கிறேனென்பது தேவ விசுவாசமல்ல. பதிதர் பசாசினல் ஏய்க்கப்பட்டதால் கொண்ட ஆங்காரந்தானே. மெய்யான நம்பிக்கைக்கு அஸ்திவாரமாய் நிற்குந் தேவ விசுவாசம் ஏதெனில், எவருக்குந் தப்பாத ஆண்டவர் உதவியினல் மரணபரியந்தம் புண்ணியத்திலே நடந்தவர்களுக்குமோட்ச பாக்கியத்தைக் கொடுப்போமென்று அவர் திருவுளம் பற்றினரென்றும், அப்படியே கொடுப்பாரென்றுந் திட்டமாய் விசுவசிக்கிறேனென்பது. சகல நன்மை விளைவிக்கும் விசுவாசம் இதுவே. மெய்யான நம்பிக்கைக்கு அஸ்திவாரம் இதுவே. ஆகையால் நம்முடைய ஈடேற்றத்தில் ஐயமின்றி நிச்சயமாக நிற்கவேண்டுமென்பது தரங்கம்பாடியார் இதிலே வேதத்திற்கு எதிர்படச் சொன்ன பொய் தானே.

மீளவும் அவனவன் கரை ஏற்றந் திட்டமில்லாத கருமமென்று படிப்பிக்கிறது மனுஷரால் கட்டப்பட்ட புது உபதேசமென்பது பொய்தானே. பின்னையும் நாம் கரை ஏறச் சர்வேசுரன் உதவி செய்வாரோ, இல்லையோவென்று எந்நேரமுஞ் சந்தேகப்பட வேண்டுமென்று நாம் படிப்பித்தோமென்பது பொய்தானே. கடைசியிலே நம்மை ஆண்ட

வருக்கு உகந்தவர்களாக்கி, நீதி விளங்கச் செய்யும் மெய்யான விசுவாசம், புண்ணிய நடக்கை இல்லாதிருக்குமென்று நாம் படிப்பித்தோமென்பது பொய்தானே. இந் நாலு பொய்யும் இதிலே முன் சொன்னதை ஆராய்ந்து பார்க்கில், எவருக்குந் தெளிவாய்த் தோன்றுமல்லோ?

13-ம் பேதகமறுத்தல்.

தரங்கம்பாடியார் இதிலே எழுதினதாவது: "சர்வேசுரன் வெளிப்படுத்தின பூர்வத் துபதேச மெங்களுக்குப் போதிவிக்கிறதாவது: எங்களுடைய நல்ல கிரிகைகளைப் போதுந் திருத்தமில்லாததுமாய்ப் பாவங்களினாலே கறை பட்டதுமா யிருக்கிறபடியினாலே சர்வேசுரனுக்கு முன்பாக வியாதொன்றுக்குஞ் சுதந்தரமுமாயிருக்க வில்லையென்று மவைகளுக்குச் செல்லுஞ் சுதந்தரமுமா யிருக்கக் கூடாதென்றும் போதிவிக்கு மிந்தப்படிக்குத் தீர்க்கதரிசியாகிற இசையாசென்கிறவர் 64-ம் அதி. 6-ம் கவியிலே சொல்லுகிறதாவது: நாங்களெல்லாரு மசுத்தமுள்ளவனைப்போலே யிருக்கிறோமென்கிறதுந் தவிர வெங்களுடைய நீதிகளெல்லாங் கறைபட்ட வஸ்திரங்களைப்போலே யிருக்கிறதென்றார். எங்களுடைய நாதர் கிறீஸ்துவானவரும் லூக்கா. சுவி. 17 அதி. 10 கவியிலே திருவுளம் பற்றுகிறார். இதுக்கெதுகையாக மனுஷருடைய புது உபதேசம் போதிவிக்கிறதாவது: எங்களுடைய நல்ல கிரிகைகளினாலே சர்வேசுரனுடைய கிருபையையும் நித்திய சீவனையுந் தொட்டு நமக்குச் செல்லுஞ் சுதந்தரமு முண்டாயிருக்கலாமென்றும் மெய்யாகவே யுண்டாயிருக்கிறதென்று மிதுவுமல்லாமல் நாங்கள் தனக்குப் பொக்கிமே லதிகமாயிருக்கிறதுவுமாய் மிஞ்சின மீதாரியுமாயிருக்கிற கிரிகைகளைச் செய்யலாமென்றும் போதிவிக்கும். இதற்கு அருத்தமேதென்றால் சர்வேசுரன் தம்முடைய பரிசுத்தமான வேதப் பிரமாணத்

திலே யெங்களுக்குக் கற்பித்தவையைப் பார்க்க நல்லதுவு மா யவைகளைச் செய்கிறவருடைய கடனிலேயு மதிலிரட்டி யுமாயிருக்கிற கிரிகைகள்தானே யிதுவல்லாம லப்படிக் கொத்த கிரிகைகள் பிறத்தியாரையு மிரட்சிக்கிறதற் குத வியுமாய்ப் பலனுள்ளதுவுமா யிருக்குமென்று மனுஷரு டைய புது உபதேசம் போதிவிக்கு மென்றார்கள்."

இதிலே நாஞ் செய்யுங் கருமமெல்லாம் எப்போதும் பாவமுள்ளதாமென்று தரங்கம்பாடியார் சொன்னது வே தத்திற்கு விரோதமான பொய்யாமே. அர்ச். இராயப்பர் 2-ம் நிருபத்தின் முதல் அதிகாரம் 10-ம் வசனத்தில் நல் வினைகளைச் செய்யச் சொன்ன பின்னர் அவைகளைச் செய் தால் ஒருகாலும் பாவஞ் செய்யாதிருப்பீர்களென்றார். அர்ச். அருளப்பர் முதல் நிருபத்தின் 3-ம் அதிகாரம் 6-ம் வசனமாகச் "சேசுநாதரைச் சேர்ந்திருக்கிறவன் பாவஞ் செய்யானென்றார். இதோ தரங்கம்பாடியார் சொன்ன பொய்யை மறுக்க வேத சத்தியமாகப் பாவமில்லாத கிரி யைகளை ஆண்டவர் உதவியினால் மனுஷர் செய்யலாமென்று வேதத்தில் எழுதப்பட்டதாமே.

மீளவும் நாஞ் செய்யுங் கருமமெல்லாம் ஆண்டவர் சந்நிதியில் பலன் ஒன்றில்லாததாயிருக்குமென்று தரங்கம் பாடியார் மொத்தமாய்ப் பொது வசனமாகச் சொன்னது வேதத்திற்கு எதிர்பட்ட பொய்தானே. அதெப்படியென் றால், அர்ச். மத்தேயு சுவிசேஷம் 6-ம் அதிகாரம் 18-ம் வசனத்தில் ஒருசந்தியாயிருந்ததற்குப் பிதாவாகிய சர்வே சுரன் பலனைக் கொடுப்பாரென்று சேசுநாதர் திருவுளம் பற்றினாரல்லோ? அவனவன் செய்த இருவினைக்கு அள வாக ஆண்டவர் சம்பாவனை கொடுப்பாரென்று உரோமா புரியாருக்கு 2-ம் அதிகாரம் 6-ம் வசனத்தில், அர்ச். சின் னப்பரும், கண்ட காட்சி ஆகமத்தின் 22-ம் அதிகாரம் 12-ம் வசனத்தில் அர்ச். அருளப்பரும் எழுதி வைத்தார்கள்.

அப்படியே பொதுத் தீர்வையில் இராசாவாகிய சேசு நாதர் நல்லவர்களுக்கு வைத்திருக்கும் மோட்ச இராச்சி

யத்தில் என்றென்றைக்கும் வாழ அவர்களை அழைக்கும் போது தாமே அவனவன் தந்த பிச்சை, செய்த தருமங் களைச் சொல்லிக்காட்டி அவைகளினிமித்தமாக மோட்ச இராச்சியத்தைக் கைக்கொள்ள வாருங்களென்று அழைப் பாரென்று அர்ச். மத்தேயு சுவிசேஷத்தின் 25-ம் அதி காரம் 34-ம் வசனந் துவக்கிச் சேசுநாதர் திருவுளம் பற்றி னதாக எழுதினதைக் கண்டோம். இவையும் இத்தகைப் பட்ட மட்டில்லாத வசனங்களும் வேதத்தில் எழுதியிருக்க வேத வாக்கியங்களை மறுத்தாலொழிய நாஞ் செய்யுங் கருமமெல்லாம் பலன் ஒன்றில்லாததென்று பொது வசன மாகச் சொல்லவும், கருதவுங் கூடாதே.

உரோமான் திருச்சபை இதிலே படிப்பிக்கும் வேத சத்தியம் ஏதெனில், நம்முடைய சுபாவப் பலத்தைக் கொண்டு மோட்சத்திற்கேற்ற நல்லது ஒன்றுஞ் செய்ய மாட்டோமென்றும், ஆண்டவர் உதவியைக் கொண்டு தருமங்களை நாமே செய்தாலும், அவைகள் தன் சுபாவப் பலத்தினால் மோட்சம் அடையப் பலன் ஒன்றில்லாததென் றுஞ் சொல்லி இந்த அர்த்தத்தோடு இசையாளென்பவரும், அர்ச். லூக்காளென்பவருந் தரங்கம்பாடியார் குறித்த இடத் தில் எழுதினதைக் கொள்ளவேண்டியதென்றும் படிப் பிக்கும். ஆகிலும் ஆண்டவர் உதவியினால் சுகிர்த புண்ணி யங்களை நாமே செய்யலாமென்றும் அவைகள் சேசுநாதர் பாடுபட்டு அடைந்த பலன்களால் பலனுள்ளவைகளாகு மென்றும் உரோமான் திருச்சபை படிப்பிக்குஞ் சத்திய மாமே.

ஆகையால் நாஞ் செய்த நல்வினைகளால் இஷ்டப் பிரசாதத்திற்கும், மோட்ச பாக்கியத்திற்கும் பேறு பெறு வோமென்று நாம் படிப்பித்ததாகத் தரங்கம்பாடியார் இதி லே சொன்னபோது, நாஞ் செய்த நல்வினைக்குள்ள சுபா வப் பலத்தைப்பற்றி அதைச் சொன்னோம் என்றார்களா கில், நாம் நினையாத அபத்தம் இதாகையில் இதுவும் அவர்கள் சொன்ன பொய்தானே. அல்லது சுவாமி உதவி யால் செய்த நல்வினை சேசுநாதர் இரத்தத்தின் பலத்தினால்

அந்தப் பேழுபெற்றதாகச் சொன்னோம் என்றார்களாகில், அது மெய்தானே. ஆகிலும் இது வேதத்திற்கு எதிராக மனுஷரால் கட்டப்பட்ட போதகமென்று அவர்கள் எழுதினது முன் எடுத்துக்காட்டின வேத உதாரணங்களைப் பார்க்கில் பொய்யென்று தோன்றுமல்லோ?

கடைசியில் இந்தப் பிரிவின் முடிவிலே தரங்கம்பாடியார் கொடுந் தமிழாக எழுதினதாவது: "நாங்கள் தனக்குப் பொக்கிமே லதிகமாயிருக்கிறதுவுமாய் மிஞ்சின மீதாரியுமாயிருக்கிற கிரிகைகளைச் செய்யலாமென்று போதிவிக்கும். இதுக் கர்த்தமேதென்றால் சர்வேசுரன் தம்முடைய பரிசுத்தமான வேதப் பிறமாணத்திலே யெங்களுக்குக் கற்பித்ததைப் பார்க்க நல்லதுவுமா யதுகளைச் செய்கிறவருடைய கடனிலேயு மதி விரட்டியுமாயிருக்கிற கிரிகைகள் தானே இதுவல்லாம லெப்படிக்கொத்த கிரிகைகள் பிறத்தியாரையு மிரட்சிக்கிறதற்கு உதவியும் பலனுள்ளதுவுமா யிருக்குமென்று மனுஷருடைய புது உபதேசம் போதிவிக்கும்" என்று இதிலே எழுதினார்கள்.

இதுவே தரங்கம்பாடியார் எழுதின செந்தமிழாமே. ஆகிலும் இந்தக் கீழ்மொழிக் கொடிய வசனங்களையும் அதற்கு அவர்கள் வைத்த அர்த்தத்தையும், தொல்காப்பியனாரும் கண்டுபிடிப்பாரோ என்ன? ஆனால் அவர்கள் குளறிச் சொன்னதிலே நினைத்ததை வெளிப் பொருளாகத் தருவோம். அதாவது: வேதத்தில் சிலவற்றை எவருக்குஞ் செய்யக் கடனாகச் சர்வேசுரன் கற்பித்ததன்றி, சிலவற்றை நல்லதென்று காட்டினாலும், ஒருவருக்குங் கட்டளையாகக் கற்பித்தவரல்ல. அப்படியே அர்ச். மத்தேயு சுவிசேஷத்தின் 19-ம் அதிகாரம் 17-ம் வசனமாகப் பத்துக் கற்பனை மீறாமல் நடப்பது களை ஏறச் செய்யத்தகுங் கருமமென்ற பின்பு, சேசுநாதர் தாமே 21-ம் வசனமாக இதிலேயும் உத்தம மேலாயாய் நடக்க வேண்டுமாகில், உனக்குள்ளதெல்லாம் விற்று இரப்போர்க்கு ஈவாயாக என்றார். இதுவே உத்தமமென்றாலுங் கடனாகச் செய்யக் கற்பித்தவரல்லவே.

ஆகையால் எல்லாவற்றையும் விற்காமலும், இரப்போர்க்கு ஈயாமலும், பக்துக் கற்பனை மீறாமல் நடந்தோமாகில், கரை ஏறலாம் என்போமாகிலும், சேசுநாதர் காட்டின உத்தம மேரையைப் பின்செல்ல எல்லாவற்றையும் விற்றுப் பிச்சையாக வகுத்தால் கரை ஏறச் செய்ய வேண்டினதின்மேலும் உத்தம மேரையாய் நடந்ததென்று சொல்வோம். அப்படியே, தன் தாரமல்லாதே பரதாரத்தைத் தீண்டாதிருப்பதற்குக் கற்பனை உண்டாமொழிய, ஒரு தாரத்தையுங் கொள்ளாமல் கன்னி கழியாதிருப்பது கற்பிக்கப்பட்டதல்லவென்று அர்ச். சின்னப்பர் கொரிந்தியருக்கு முதல் நிருபத்தில் 7-ம் அதிகாரம் 25-ம் வசனத்தில் எழுதினாராகிலும், அதிலேதானே 38-ம் வசனமாக விவாகஞ் செய்வதிலேயும், கன்னி கழியாதிருப்பது உத்தமமென்றார்.

ஆகையால் விரத்தனாயிருப்பவன் கற்பித்ததின்மேலும், உத்தம மேரையாய் நடப்பவனென்று வேத நியாயங்களின் படியே சொல்லக்கடவோம். இவையும் பலவும் இப்படியாகக்கொள்ள நாம் கரை ஏறக்கடவையச் செய்யவேண்டியதின்மேலும், அதற்கு வேதத்தில் கற்பித்ததின்மேலும் உத்தம நல்வினை ஆண்டவர் உதவியால் செய்யலாமென்று வேதத்தில் வழங்கின சத்தியமாமே. ஆகையால் வேதத்திற்கு எதிராக மனுஷர் உபதேசம் இதுவென்று தரங்கம்பாடியார் சொன்னது வேதத்திற்கு எதிர்ப்பட்ட பொய்யாமே.

பின்னையும் இப்படிப்பட்ட கிரிகைகள் புறத்தியாரையும் இரட்சிக்க உதவியும், பலனுமுள்ளதென்று நாம் சொன்னதாக அவர்கள் எழுதினது முழுத் தப்பறைதானே. அதேதெனனில், உரோமான் திருச்சபைப் படிப்பனையாக நமக்குள் ஒருவனாகிலுஞ் சேசுநாதர் புண்ணியங்களொழிய மற்றொருவன் செய்த நல்வினை புறத்தியாரை இரட்சிக்க வல்லதென்று எழுதினதை ஒப்பிக்கமாட்டார்கள். நாம் சொல்லுந் தன்மை ஏதெனில், ஆண்டவருக்கு உகந்தவனாயிருந்து ஒருவன் பழுதறச் செய்யும் நல்வினை

யால் மூன்று பலன்கள் உண்டாம். மோட்சம் அடையச் சுதந்தரப் பலனும், ஆண்டவர் சந்நிதியில் வரங்களை அடைய மன்றாட்டுப் பலனும், பாவத்தால் வந்த அபராதக் கடனைத் தீர்க்க உத்தரிப்புப் பலனும் இம்மூன்றும் நல்வினைகளால் வரும் நன்மைகளாமே.

இதிலே முதல் பலன் நல்வினை செய்தவனுக்கொழிய பிறருக்குப் போக அறியாது. மற்ற இரண்டும் பிறருக்கும் உதவியாக ஆண்டவர் சித்தத்தின்படியே செல்லக் கொடுக்கலாமென்று நாமே படிப்பிக்கிறோம். அப்படியே மக்கபேயர் 2-ம் ஆகமம் 12-ம் அதிகாரம் 43-ம் வசனம் யூதஸென்பவர் செத்தவர்களுக்கு வேண்டி மன்றாடவும், அவர்கள் பாவக் கடனைத் தீர்க்கவும், வெகு திரவியங்களைத் தந்து பூசைகளை நடத்தினதினால், தோத்திரஞ் சொல்லி இருக்கிறதைக் கண்டோம். ஆகையால் நாம் இதிலே படிப்பிக்குஞ் சத்தியம் வேதத்தில் ஊன்றினதன்றி, வேதத்திற்கு எதிராக மனுஷர் உண்டு பண்ணின புது உபதேசமென்பது தரங்கம்பாடியார் இதிலே சொன்ன ஏழாம் பொய்யாமே.

14-ம் பேதகமறுத்தல்.

"இதிலே சர்வேசுரன் வெளிப்படுத்தின பூர்வத் துபதேச மெங்களுக்குப் போதிவிக்கிறதாவது: எங்களுடைய நாதர் சேசுகிறீஸ்து வொருவர் மாத்திரந் தம்மாலே சிநேகிக்கப்பட்ட பிரியமான அர்ச். திருச்சபையினுடைய தலையுமாய் மணவாளனுமா யிருக்கிறாரென்றுமவர் தம்முடைய இஸ்பிரீத்துவைக் கொண்டுந் திரு வசனத்தைக் கொண்டுந் திருச்சபையை யாண்டுக்கொண்டு போதிவிக்கிறாரென்றுந் திருச்சபை தன துண்மையுள்ள நிதானமான மணவாளனுமாய்த் தலையுமாயிடையருமாயிருக்கிற ஏசுக்கிறீஸ்துவினுடைய சத்தத்தைக் கேட்டுக் கீழ்ப்படிந்து நடக்க வேண்டு

மென்றும் போதிவிக்கும்" என்று தரங்கம்பாடியார் சொல்லிச் சேசுநாதர் கற்பித்ததைக் கேட்கக் கடவோமென்று ஒப்பித்த பின்னர் எழுதினதாவது: "இதுக்கெதுகையாக மனுஷருடைய புது உபதேசம் போதிவிக்கிறதாவது: கிறீஸ்து வல்லாமல் பாப்புவென்கிறவருந் திருச்சபையினுடைய மணவாளனுமாய்த் தலையுமாய்க் கிறீஸ்துவுக்குவதில்க்காறருமாய் விக்காரி யிருப்பிடத்திலே பூலோகத்திலிருக்கிறானென்றும் பாப்பு பாதீசனுடையவும் நரகத்தினுடையவுந் திறவுகோல்களைக் கொண்டிருக்கிறானென்று மிதைக் கொண்டு இரட்சிக்கிறதற்குஞ் சாபிக்கிறதற்கும் வல்லமையவருக் குண்டாயிருக்கிறதென்று மிந்த முகாந்திரத்திற்காக எல்லாருமவருடைய கட்டளை கேட்டுக் கீழ்ப்படிந்து நடக்க வேண்டுமென்று எவனாகிலுமவருடைய கட்டளைக்கெதிரியாகவுமாவென்காமற் கீழ்ப்படிந்திராவிட்டா லவன் பதிதனென்று மனுஷருடைய புது உபதேசம் போதுவிக்கும்" என்றார்கள்.

திருச்சபைத் தலைவராய்ச் சேசுநாதர் நிற்பது நிச்சயந்தானே. சேசுநாதர் அல்லாதே அவர் ஸ்தானத்தில் காணப்பட்ட திருச்சபைக்குக் காணப்படுந் தலைவராக அர்ச். இராயப்பரைத் தொட்டு மற்ற அர்ச். பாப்புகள் ஸ்தாபிக்கப்பட்டார்களென்றும், அதற்கு நியாயமும், முறையும் எப்படிக்கொத்ததென்றும் வேத விளக்கத்தின் 69-ம் பிரிவிலேயும், 70-ம் பிரிவிலேயும் விரிவாய்ச் சொல்லிக் காட்டினோம். இதிலே தரங்கம்பாடியார் சொன்ன பொய்களை மாத்திரங் காட்டுவது கருத்து. ஆகையால் முந்தமுந்தச் சேசுநாதரல்லாதே அர்ச். பாப்புவும் திருச்சபைக்கு ஒரு மணவாளனென்று நாஞ் சொன்னதாகத் தரங்கம்பாடியார் எழுதினது பொய்தானே. பொய்யல்ல என்றார்களாகில், உரோமான் திருச்சபையாரில் ஒருவன் திருச்சபைப் படிப்பினையாக இதை எழுதினதென்று அவர்கள் காட்டக் கடவார்கள்.

இரண்டாவது: மோட்சத் திறவுகோலும், நரகத்

திறவுகோலும் அர்ச். பாப்பு வைத்திருக்கிறொன்று உரோமான் சபையார் எழுதினதாக இதிலே தரங்கம்பாடியார் சொன்னார்கள். ஆனால் இதையும் அவர்களே ஒப்பிக்கக் கடவார்கள். ஒப்பியாதபோதே தாங்களே இந்தப் பொய்யுஞ் சொன்னார்களென்று ஒத்துக்கொள்ளக் கடவார்கள். சேசுநாதர் அர்ச். மத்தேயுஸ் சுவிசேஷத்தின் 16-ம் அதிகாரம் 19-ம் வசனத்தில் அர்ச். இராயப்பருக்குச் சொன்னபடியே மோட்சவிராச்சியத்தைத் திறக்கவும், அடைக்கவுந் திறவுகோல்களை அர்ச். பாப்புக்கள் கொண்டிருக்கிறார்களென்று நாமே படிப்பிக்கிறது உள்ளதுதானே.

ஆகிலும் அது வேதத்தில் ஊன்றின சத்தியமாவதன்றி வேதத்திற்கு விரோதமென்பது தாங்கள் இதிலே சொன்ன மூன்றாம் பொய்யாமே. நரகத் திறவுகோலோவெனில், நட்சத்திரம் போலே மேனின்று விளங்கினவனைத் தவறிக் கீழே விழுந்தவனுக்கே கொடுக்கப்பட்டதென்று அர்ச். அருளப்பர் காட்சியின் 9-ம் அதிகாரத் துவக்கத்தில் எழுதினாரல்லோ? அவன் ஆரெனில், நாமே லுத்தேரினத்தியல் பென்று ஒரு பத்திரமாக எழுதின புஸ்தகத்தில் ஒப்பித்தாற்போலே நரகத் திறவுகோலுள்ளவன் லுத்தேர்தானென்று சொன்னாலும், நியாயத்திற்கு ஒத்திருக்குமல்லோ?

மீளவும் அர்ச். பாப்பு நம்மை இரட்சிக்க வல்லவரென்று நாம் சொன்னதாக இதிலே தரங்கம்பாடியார் எழுதினது நாலாம் பொய்யாமே. நம்மை இரட்சிக்க வல்லவரும், மெய்யாகவே நம்மை இரட்சித்தவருஞ் சேசுநாதர் ஒருவரேயொழிய, வேறொருவருமில்லையென்று நாம் படிப்பிக்குஞ் சத்தியமாமே. ஆகையால் சேசுநாதர் அர்ச். இராயப்பரைத் தொட்டு மற்ற அர்ச். பாப்புகளுக்குத் தந்த திருச்சபைத் தலைமை மூன்று உவமையாகக் காட்டினார். அர்ச். மத்தேயுஸ் சுவிசேஷத்தின் 16-ம் அதிகாரம் 18-ம் வசனத்தில் அர்ச். இராயப்பரை நோக்கி: நீயே இராயன், இந்த இராயன்மேல் என் திருச்சபை ஸ்தாபிக்க இருக்கிறேனென்றார்.

ஆகையால் அர்ச். இராயப்பரைத் திருச்சபைக்கு அஸ்திவாரமாக ஸ்தாபிக்கச் சித்தமானார். கொரிந்தியாருக்கு முதல் நிருபத்தின் 2-ம் அதிகாரம் 11-ம் வசனத்தில் அர்ச். சின்னப்பர் எழுதினபடியே திருச்சபைக்குத் தேவ முதல் அஸ்திவாரஞ் சேசுநாதர்தாமே. அவரிடமாக அவர் காணாதேபோகையில், காணப்பட்ட திருச்சபைக்குக் காணப்படும் அஸ்திவாரமாக அவரால் ஸ்தாபிக்கப்பட்டவர் அர்ச். இராயப்பர்தாமே. மேல் ஏற்றின கோபுரத்திற்கு அஸ்திவாரமே ஆதிமுதலானாற்போல திருச்சபைக்கெல்லாஞ் சேசுநாதர் ஸ்தானத்தில் ஆதிக்கம் அர்ச். இராயப்பருக்குத்தாமே.

மீளவும் அர்ச். மத்தேயுஸ் சுவிசேஷத்தின் 16-ம் அதி. 19-ம் வசனமாகத் திருச்சபையாகிற பரலோகத்துக்கடுத்த இராச்சியத்தின் திறவுகோல்களை அர்ச். இராயப்பரை நோக்கி உனக்கே தருவோமென்றார். அதேதெனில், இராசா கோட்டையை விட்டுப் போகையில் அவன் தன் ஸ்தானத்தில் வைத்தவனுக்கே கோட்டைத் திறவுகோல்களைக் கொடுத்து, கோட்டைக்குத் தலைவனாக அவனை ஸ்தாபிக்குமாப்போல சேசுநாதருங் காணப்பட்ட திருச்சபையினின்று பரலோகத்திற்குப் போகையில், அந்த திருச்சபையைத் தம்மிடமாக ஆளும்படிக்கு அர்ச். இராயப்பரை ஸ்தாபிக்க வேண்டுமென்றதனால் உவமையாக அர்ச். இராயப்பருக்கு மோட்ச இராச்சியத்தின் திறவுகோல்களைத் தருவோமென்றார்.

ஆனால் அர்ச். அருளப்பர் கண்ட காட்சி ஆகமத்தின் 3-ம் அதி. 7-ம் வசனத்தில் எழுதப்பட்டபடியே திறக்கவும், பூட்டவுஞ் சுபாவச் சுதந்தரமாய் அந்தத் திறவுகோல்களை வைத்திருக்கிறவர் சேசுநாதர்தாமே. ஆகையால் அந்தத் திறவுகோல் அர்ச். இராயப்பருக்குத் தந்தபோது, சேசுநாதர் ஸ்தானத்தில் அர்ச். இராயப்பர் திருச்சபைத் தலைவனாக ஸ்தாபிக்கப்பட்டாரென்பது நிச்சயந்தானே. கடைசியில் குறித்த தலைமையைக் கொடுக்கச் சித்தமாகிச்

சேசுநாதர் பரலோகத்திற்கு எழுந்தருள நாள் வந்து அர்ச். அருளப்பர் சுவிசேஷத்தின் 21-ம் அதி. 17-ம் வசனத்தில் அவரோ அர்ச். இராயப்பரை நோக்கி: என் ஆடுகளை மேய்ப்பாயாக என்றார். அதேதெனில், அர்ச். அருளப்பர் சுவிசேஷத்தின் 10-ம் அதி. 14-ம் வசனந் தொட்டுச் சொன்னபடிச் சேசுநாதர் தாம் இடையனாகவும், தம் திருச்சபை ஒரு மந்தையாகவும், திருச்சபையில் சேர்ந்த யாவரும் ஆடுகளாகவும் உவமையாகச் சொல்லி இருக்கத் தமது ஸ்தானத்தில் அர்ச். இராயப்பரைத் திருச்சபைத் தலைவனாக ஸ்தாபிக்க வேண்டுமென்று தாம் பூலோகத்தை விட்டுப் போகையில், அம்மந்தையும், அவ்வாடுகளும், அர்ச். இராயப்பர் கையில் ஒப்புக்கொடுத்து நீ என்னிடமாய் நல்ல இடையனாக நின்று என் ஆடுகளை மேய்ப்பாயாக என்றாற் போலாயிற்று.

இது இப்படியாகக்கொள்ள எல்லா அப்போஸ்தலர்களுக்குப் பொதுப்படச் சேசுநாதர் தந்த வல்லமை அவர்களிடமாக வந்த மற்றக் குருக்களுக்குந் தந்தாரென்று பதிதரும் நம்மோடே சொல்லுவார்களல்லோ? அப்படியே மற்ற அப்போஸ்தலர்களுக்குள்ளே வேறுபட அர்ச். இராயப்பருக்கு விசேஷமாய்ச் சேசுநாதர் தந்த உத்தியோகமும் வல்லமையும் மற்றக் குருக்களுக்குள்ளே விடாத தொடர்போடு அர்ச். இராயப்பரைத் தொட்டுவந்த அர்ச். பாப்புக்களுக்குத் தந்தாரென்றும், அதனால் அவர்களே திருச்சபையில் ஓர் அஸ்திவாரமாகவும், கோட்டை வாசல் திறவுகோலுள்ளவராய், இராசா ஸ்தானத் தாள்பவராகவும், சேசுநாதர் ஆடுகளை நடத்தி மேய்க்குங் கோவலராகவும், திருச்சபைத் தலைவராக நின்றார்களென்றும், உலோக முடியும்மட்டும் நிற்பார்களென்றும், வேதத்தில் ஊன்றின சத்தியமாகப் பதிதரும் நம்மோடே சொல்லவுங் கடவார்கள்.

அப்படியே இந்த அஸ்திவாரத்தினின்று பிரிந்த மதில்களாகவும், இந்தக் கோட்டை வாசலினின்று பிரிந்த பிரஷ்டராகவும், இந்தக் கோவலர் வார்த்தை கேளாமல் இந்த

மந்தையினின்று பிரிந்த ஆடுகளாகவும், அர்ச். பாப்புக்கள் வார்த்தை கேளாமல் சாதித்த யாவரும் பிரிந்தமையால் திருச்சபையினின்று புறத்திப்பட்டவர்களென்கிற பெயரோ அவர்களுக்குச் செல்லுமல்லோ? ஆகிலும் புறத்திப்பட்டவர்களென்பது பதிதரென்கிறதற்கு அர்த்தமாமே. ஆகையால் அர்ச். பாப்புக்கள் வார்த்தை கேட்கமாட்டாமல் சாதித்தயாவரும் பதிதர் என்னப்படுவது காட்டினபடியே வேதத்தில் ஊன்றின சத்தியமாவதன்றி, வேதத்திற்கு விரோதமாய் மனுஷர் உண்டு பண்ணின உபதேசமென்று தரங்கம்பாடியார் எழுதினது தாங்கள் இதிலே சொன்ன ஐந்தாம் பொய்யாமே.

15-ம் பேதகமறுத்தல்.

இதிலே தரங்கம்பாடியார் பூருவ வேத சத்தியமாக வேதத்தி லெழுதப்பட்ட தெல்லாவற்றையும் வேறொன்றும் கூட்டாம லெல்லாரு மறியும் பாஷையிற் சனங்களுக்குக் குருக்கள் படிப்பிக்கக் கடனுண்டென்று சொன்ன பின் னெழுதினதாவது: "இதினு லென்ன வறியலாமென்றால் கிறீஸ்துவி னுடைய நிதானமான ஆழியக் காறருமாய்த் தங்களுக்கொப்புக்கொடுக்கப்பட்ட மந்தைகளுடைய நல்ல உண்மையுள்ள இடையருமா யிருக்கவேண்டுமென் றிருக்கிற பேர்கள் தங்களுக்குத் தோன்றின தங்களுடைய சுய நினைவுகளை யானாலு மனுஷர்கள் கட்டின வேறே யாதொரு கற்பினையானாலுஞ் சர்வேசுரனுடைய சனங்களுக்குப் போதிவிக்க வேண்டாமானாலோ சர்வேசுர னவர்களுக்குக் கற்பித்த சகல காரியங்களை மாத்திரம் போதிவிக்கவேண்டுமென்று இதுகளிலெந்த முகாந்திரத்திற்காக வானாலுந் திருச்சபையாருக்கொன்று மறைத்துச் சொல்லாமலிருக்க வேண்டாமென் றிதினாலே அறியலாம். மத்தேயு சுவிசேஷம் 10 அதி. 27 கவி. யுவானி சுவி. 15 அதி. 15 கவி.

அப்போஸ்தலர் நடபடி 20 அதி. 27 கவி. இதிற்கெதுகை யாக மனுஷருடைய புது உபதேசம் போதிவிக்கிறதாவது: திருச்சபையிலே குருப்பட்டமா யிருக்கிற பேர்கள் பலி யிட்டு மீசாவென்கிற பூசை சொல்வி லத்தீன் பாஷையிலே பாட்டுகளைப் பாடிச் செபம் செய்யவேண்டுமென்றும் ரோமான் சபையினுடைய சடங்குகளைக் கைக்கொள்ள வேண்டுமென்றும் பாப்புமார்களுங் கொஞ்சிலியர்களு மெங் தக் கட்டளைகளை யிட்டார்க ளதுகளெல்லாஞ் சனங்களுக் குப் போதிவித்து அதுகள் தேவ வேத புஸ்தகத்திற் கொத்திராவிட்டாலு மதுகளை வேண்டிய கருத்தோடே யெப்பேச்சும் பேசாமற் கைக்கொள்ளத் தக்கதாக இவர் கள் சனங்களுக்குக் கற்பிக்க வேண்டுமென்று மனுஷரு டைய புது உபதேசம் போதிவிக்கும்" என்றார்கள்.

இந்தப் பேதகத்திலே தரங்கம்பாடியார் யோசிக்கும் வகை பார்க்கும்போது வெறிகொண்டவன் இருட்டு அறை யில் அரும் பொருள் தேடினாற்போலத் திக்குங்கெட்டு, மதியுங்கெட்டுத் தடவித் தடுமாறினவன் கையைக்கண்ட யாவருஞ் சிரித்து நகைப்பார்கள். அம்மதெனில், சனங் களுக்கு ஞான போசனமாகக் குருக்கள் வேத வாக்கியங் களை எல்லாரும் அறியும் பாஷையில் சொல்லிப் பிரசங் கிக்க வேண்டுமென்ற பின்பு, இதற்கு விரோதமாக உரோ மான் திருச்சபைக் குருக்கள் எல்லாரும் அறியும் பாஷை விட்டு லத்தீன் பாஷையில் பூசையுஞ் செபமும் செய்வார் களென்று தரங்கம்பாடியார் எழுதினார்கள். ஆகிலும் எல் லாருக்குந் தெரியப் பிரசங்கஞ் செய்யவேண்டி அதற்குச் சனங்களுக்குத் தெரியாமல், குருக்கள் பூசையுஞ் செப மும் செய்வது விரோதமென்பரோ. தமிழரோடே தமிழ்ப் பேசவேண்டியதற்கு வடுகரோடே வடுகு பேசினால் விரோ தமோ என்ன?

சனங்களோடே பேசி நல்லுணர்ச்சிகளைச் சொல்லி எல்லாரும் அறியும் பாஷையில் பிரசங்கஞ் செய்து, மறு படி ஆண்டவரோடே விண்ணப்பஞ் செய்து, பூசையிலே

யும், செபத்திலேயும் ஆண்டவர் அறிந்த பாஷை பேசினால் குறை என்ன? எல்லாரையும் படிப்பிக்கப் பிரசங்கஞ் செய்கிறதினால், அதை எல்லாரும் அறியும் பாஷையில் செய்ய வேண்டியதென்பது நியாயந்தானே. ஆனால் பூசையும், செபமும் ஆண்டவரைத் துதித்து வணங்கவும், எல்லாருக்கும் வேண்டி மன்றாடவும், குருக்கள் செய்கதனால் அவர்கள் அறிந்த பாஷையில் செய்தால் போதாதோ என்ன? ஆகையால் குருக்கள் லத்தீன் பாஷையில் பூசையும், செபமுஞ் செய்ய உரோமான் திருச்சபை கட்டளை இட்ட முறையே வேதத்திற்கு விரோத கற்பனை என்பது தரங்கம்பாடியார் இதிலே சொன்ன முதற் பொய்யாமே. மீளவும் ஆண்டவருக்கேற்ற குருக்கள் தங்களுக்குத் தோன்றின சுய நினைவுகளைச் சனங்களுக்குப் போதிக்கலாகாதென்று தரங்கம்பாடியார் இதிலே சொன்னார்களல்லோ?

ஆகையால் கொரிந்தியருக்கு முதல் நிருபம் 7-ம் அதிகாரம் 12-ம்வசனத்தில் அர்ச். சின்னப்பர்தாமே இது ஆண்டவர் வார்த்தையல்ல, என் வார்த்தையாக நானே சொல்லுகிறேனென்றபோதே தமக்குத் தோன்றின சுய நினைவுகளைச் சனங்களுக்குப் போதித்து, கர்த்தருக்கு ஏற்காதவராய் நடந்தாரென்று சொல்லவுங் கடவார்கள். இல்லாவிட்டால் இதிலே தாங்கள் சொன்ன இரண்டாம் பொய் இதுதானே. இதுவுந் தவிர ஆண்டவர்க்கேற்ற ஊழியஞ் செய்பவன், சனங்களுக்கு ஆண்டவர் கற்பித்ததன்றி, மனுஷர் கற்பித்ததைப் படிப்பிக்கலாகாதென்றும் இதிலே சொன்னார்களே. ஆகையால் அப்போஸ்தலர் நடபடியாகமத்தின் 15-ம் அதிகாரம் 41-ம் வசனத்திற் சொன்னபடியே அர்ச். சின்னப்பர் தாமே அப்போஸ்தலரும், மற்றப் பெரியோர்களுங் கற்பித்ததை எல்லாருஞ் செய்யச் சொல்வித் திரிந்தபோதில், அவர் ஆண்டவருக்கு ஏற்காத ஊழியஞ் செய்தாரென்று தரங்கம்பாடியார் சொல்லவுங்கடவார்கள். இதுசொல்லமாட்டார்களாகில், முன் சொன்ன வசனம் பொய்யென்று ஒத்துக்கொள்ளக்கடவார்கள்.

பின்னையும் அர்ச். சின்னப்பர் செய்தபடியே முதல் அப்போஸ்தலராகிய அர்ச். இராயப்பரைத் தொடர்ந்து வந்து திருச்சபையில் பெரியோருமாய்த் திருச்சபைக்குத் தலைவருமாயிருக்கும் அர்ச். பாப்புக்கள் திருச்சபைக்குக் கட்டளையிட்டதெல்லாம் எல்லாரும் நிறைவேற்ற நாமே படிப்பிக்கிறது உள்ளதுதானே. ஆகிலும் ஒப்பித்தபடி இது வேதத்தில் வழங்கின முறையேயொழிய, அதற்கு விரோதமாக மனுஷர் உண்டு பண்ணின உபதேசமென்பது தாங்கம்பாடியார் ஒப்பியாமல், இதிலே சொன்ன நாலாம் பொய்யாமே.

இதுவுந் தவிர, ஆண்டவர் கற்பித்ததெல்லாம் ஒன்ருெளியாமலும், ஒன்றேற்ருமலுந் தன் சுய நினைவு ஒன்று உட்கலவாமலுஞ் சொல்லவேண்டியதென்று ஒப்பிக்க, அவர்கள் குறித்த வேத உதாரணங்களைப் பார்க்கில், இதிலே சொன்ன ஐந்தாம் பொய் இதுதானென்று காண்போம். அதெப்படியென்ருல், அர்ச். மத்தேயுஸ் சுவிசேஷம் 10-ம் அதிகாரம் 27-ம் வசனத்தில் சேசுநாதர் சொன்னதாவது: நான் இருளில் உங்களுக்கு அறிவித்ததை வெளிப்படச் சொல்லுங்களென்ருர். அர்ச். அருளப்பர் சுவிசேஷம் 15-ம் அதிகாரம் 15-ம் வசனத்திலோவெனில், என் பிதாவிடத்தில் நான் கேட்டதெல்லாவற்றையும் உங்களுக்கு அறிவித்தேனென்ருர்.

அப்போஸ்தலர் நடபடி 20-ம் அதிகாரம் 27-ம் வசனமோவெனில், அவர்களே 21-ம் வசனமாகத் திருப்பின படி ஒன்றும் மறைக்காமல் சர்வேசுரனுடைய சித்தமெல்லாம் உங்களுக்கு வெளிப்படுத்தினேனென்று அர்ச். சின்னப்பர் சொன்னூர். ஆகிலும் இந்த உதாரணங்களிலே ஆண்டவர் கற்பித்ததெல்லாம் அறிவிக்கவேண்டுமல்லாதே சுய நினைவாகவும் பெரியோர் கற்பனையாகவும் ஒன்றுங் கூட்டிச் சொல்லவேண்டாமென்று சர்வேசுரன் கற்பித்ததாக ஒரு வார்த்தையாகிலும் உண்டோ? இல்லாதபோது அப்படிக் கற்பித்தானென்று ஒப்பிக்கிறதற்கு இந்த உதாரணங்களை பாமரச் சனங்களை ஏய்க்கக் குறித்து வைப்பானேன்?

கடைசியில் நாணமழியத் தெருவில் அழிவுபட்ட வேசிகள், வெட்கத்திற்கு அஞ்சாத முதத்தோடு ஏசலைச் சொன்னாற்போல, தரங்கம்பாடியார் இதிலே சொன்ன ஆறும் பொய்யாவது: அர்ச். பாப்புக்கள் கற்பித்ததெல்லாந் தேவ வேத புஸ்தகத்திற்கு ஒத்திராவிட்டாலும், அவைகளைப் பேசாமல் கைக்கொள்ளச் சனங்களுக்குக் கற்பிக்கவேண்டுமென்று உரோமான் சபையார் படிப்பித்ததாக எழுதக் கூசாதே போனார்கள். பொய்யைச் சொல்லத் தங்களுக்கு வெட்கமில்லாதாயின் மற்ற யாவர்க்கும் மெய்யை ஆராய்ந்து அறிய, சற்றும் உணர்விலலை என்று நினைத்தார்களோ? அந்த அக்கிரமமான அபத்தத்தை நாம் சொன்னதில்லை. நாமே சொன்னதென்று கெட்டியாய்த் தாங்கள் ஒப்பியாதிருக்குந் தனையுந் தாங்களே அக்கிரமமான தப்பறைக்காரரென்று உலோகத்தில் எங்குஞ் சொல்லப்படுவார்கள்.

16-ம் பேதகமறுத்தல்.

இதிலே தரங்கம்பாடியார் குளறிச் சொன்னதாவது: "சர்வேசுரன் திருவுளம்பற்றின பூருவத்துபதேசம் எங்களுக்குப் போதிவிக்கிறதாவது: கோவிலிலே தெரியப்பட்டிராமல் மறு பாஷைகளைப் பழக்கிவைக்கிறதற் குத்தாரமில்லையென்றும் படித்தெடுக்காத சனங்களவைகளைக் கேட்டதினாலே அவர்களுக்குப் பிரயோசனமில்லையென்றும் போதிவிக்கும். அவைகளினாலே நாங்கள் சர்வேசுரனைத் தோஸ்திரம் செய்து புகழுகிறோமென்று சொன்னாலுஞ் சரியானாலோ கோவிலிலே போதிவித்துப் பிரார்த்தித்துக் கொண்டு மந்திரங்களைச் சொல்லிப் பாட்டுப் பாடுகிற பேர்களிதினா லெல்லாருக்கும் நல்ல புத்தியும் பயபத்தியு மாறுதலு முண்டாகும்படிக்கு அதை யாவருக்குந் தெரிந்ததாயிருக்கிற பொதுப் பாஷையிலே செய்யவேண்டும். குரி–1

நிருபம் 14-ம் அதிகாரம் 3-16-7-18-கவி. பின்னை அந்த அதிகாரத்திலே முழுதும் இதிற்கெதுகையாக மனுஷரு டைய புது உபதேசம் போதிவிக்கிறதாவது: கோவிலிலே நடக்கிற தேவாராதனையிலேயு மற்றுண்டான சகல தேவா ராதனை வகைகளிலேயும் லத்தீன் பாஷை நடக்க வேண்டு மென்று தேவ வேத புஸ்தகத்தைத் தேச வழக்கமான பா ஷையிலே சபைக்கு முன்பாகத் திறந்த சொல்லாக வாசித் தாலும் பாடியாலு மிருந்தால் அது பிரயோசன மில் லாததா யிருக்குமென்கிறதுந் தவிர அனேகஞ் சனங்க ளுக்கு மய்யங் கோளாறுகளுக்கு மிடமாயிருக்குமென்று மனுஷருடைய புது உபதேசம் போதிவிக்கும்" என்றார் கள்.

முந்த இதிலே தரங்கம்பாடியார் எழுதினதாவது: கோயிலிலே தெரியப்பட்டிராமல், மறு பாஷைகளைப் பழக் குவிக்கிறதற்கு உத்தாரமில்லை என்று சர்வேசுரன் அரு ளிச் செய்த வேதம் படிப்பிக்குமென்றார்கள். ஆகையால் கோவிலிலே குருக்கள் செய்யுஞ் செபமும், முடிக்கும் பூசையும், வாசிக்கும் வேதப் புஸ்தகமும் எல்லாரும் அறிந்த பாஷையாயிருக்க வேண்டுமென்று சர்வேசுரன் கற்பித்ததாக எழுதினதாச்சுதல்லோ. ஆகிலும் வேதப் புஸ்தகத்திலே எஸ்திருஸ் என்பவருடைய இரண்டாம் ஆகமத்து 8-ம் அதிகாரத்து 8-ம் வசனந் துவக்கி எழுதின படியே எஸ்திருஸ் என்கிற குருவானவர் சனங்களில் அநே கர் அறியாத பாஷையாக வேதப் புஸ்தகத்தை வாசித்ததி னால், அவர்கள் கண்டுபிடியார்களென்று அவர் அதற்கு அர்த்தஞ் சொல்ல, வேத வாக்கியங்களை எல்லாருங் கண்டு பிடித்து, மிகவுஞ் சந்தோஷப்பட்டு, மகிழ்ச்சியால் அழுது கொண்டிருந்தார்களென்று எழுதியிருக்க, அப்போது அந்தக் குருவானவர் அபத்தத்தைச் செய்தாரென்று வேத தூஷணமாகச் சொல்லாதபடிக்குத் தாங்களே சொன்னது பொய்யாமென்று வேத சத்தியமாகத் தரங்கம்பாடியார் சொல்லக்கடவார்களல்லோ.

இரண்டாவது: பூசை முதலிய செபங்களைச் சனங்கள் அறியாத பாஷையில் குருக்கள் செய்தால் அதின் அர்த்தத்தைச் சனங்கள் அறியாததனால், அவர்களுக்குப் பிரயோசனமில்லை என்று சர்வேசுரன் அருளிச் செய்த உபதேசம் அதை விலக்கினதென்றார்கள். ஆகிலும் மோயீசன் 3-ம் ஆகமத்தின் 16-ம் அதிகாரம் 17-ம் வசனத்தில் எழுதினபடியே முதல் குருவானவர் உட்கோயிலிலே புகுந்து, தனக்குந் தன் வீட்டுக்கும், மற்றச் சகல பேர்களுக்கும் வேண்டிக்கொள்ளப் போகிறபோது, கூட அங்கே ஒருவருமிராமலும், அவரைக் காணாமலும், அவர் உச்சரிக்கும் வார்த்தையைக் கேளாமலும் எல்லாரும் புறத்து நிற்க, ஆண்டவர்தாமே கட்டளையிட்டாரல்லோ.

அப்படியே அர்ச். லூக்காஸ் சுவிசேஷம் முதல் அதிகாரம் 10-ம் வசனத்தில் சக்கரியாஸென்பவர் தூபப் பூசை செய்திருக்கையில், இந்தக் கட்டளையின்படி எல்லாரும் புறத்து நின்றார்களென்று எழுதியிருக்கிறதல்லோ. அப்போது சனங்களே, குருக்கள் சொன்னதற்கு அர்த்தங் கண்டுபிடியாதிருந்ததல்லாதே சொன்ன வார்த்தை கேட்கவுங், குருக்களை முதலாய்க் காணவுமாட்டாதிருந்தார்களல்லோ. ஆகையால் சனங்களுக்குப் பிரயோசனமில்லாத பூசையுஞ் செபமுஞ் செய்யச் சொல்லி, ஆண்டவர் கட்டளையிட்டாரென்று சொல்வார்களோவென்ன? இதைத் தேவ தூஷணமாகச் சொல்லாதபடிக்குத் தாங்களே இந்தப் பொய்யும் எழுதினார்களென்று தரங்கம்பாடியார் வேத சத்தியமாகச் சொல்லக்கடவார்களல்லோ.

மூன்றாவது: கோயிலிலே செய்யப்படும் பூசை, தேவாராதனை எல்லாம் லத்தீன் பாஷையில் செய்யவேண்டுமென்று உரோமான் திருச்சபை படிப்பிக்கிறது சரியே. ஆகிலும் இது சர்வேசுரன் வேதத்திற்கு விரோதமாய் மனுஷர் புதிதாய் உண்டுபண்ணின உபதேசமென்று தரங்கம்பாடியார் எழுதினது பொய்தானே. அதேதெனில், பெல்லார்மீனென்பவர் வேத தர்க்க முதற் காண்டத்தின்

தேவ வாக்கியத்து இரண்டாம் புஸ்தகம் 15-ம் அதிகாரத்தில் விரிவாய் எழுதி ஒப்பித்ததைப் பார்க்கில், அப்போஸ்தலர் நாள் துவக்கித் திருச்சபை எங்குங் குருங்கள் பூசையும், செபமுங் கோயிலிலே செய்யும்போது எப்போதுங் கிறேக் பாஷையும், லத்தீன் பாஷையும் அவைகளைப் பொதுவே எல்லாரும் அறியாதிருந்த இராச்சியங்களிலே முதலாய் வழங்கினதென்று தெரியவருமே. அவைகளையும் விட்டு லுத்தேரும், அவன் வகைப் பதிதருமுதலாய்த் துவக்கத்திலே திருச்சபைப் பழைய முறைவிடாமல், பூசையை லத்தீன் பாஷையில் செய்கிறோமென்று தாங்களே அப்பொலோசிய வென்னும் புஸ்தகத்தின் 12-ம் பிரிவில் எழுதி வைத்தார்கள். ஆகையால் பூசையும், மற்றத் தேவாராதனைகளுங் கோயிலிலே லத்தீன் பாஷையில் குருக்களால் செய்யப்படும் முறை புதிதாய் மனுஷரால் வந்த முறையென்பது பொய்யாமே.

இந்தப் பொய்களெல்லாம் ஒப்பிக்கத் தரங்கம்பாடியார் இதிலே அர்ச். சின்னப்பர் கொரிந்தியாருக்கு எழுதின முதல் நிருபத்தின் 14-ம் அதிகாரம் பார்க்கச் சொல்லி, அதிலே எங்கும் அவர் எல்லாரும் அறியும் பாஷையால் கோயிலிலே தேவாராதனை செய்யவேண்டுமென்று கட்டளையிட்டார் என்றார்கள். ஆகிலும் இதுவே நாலாம் பொய்யாமே. அதேதெனில், அந்த அதிகாரத்தில் அர்ச். சின்னப்பர் சொன்னது தேவாராதனை, செபம், பூசை குறியாமல் கிறீஸ்துவர்கள் அக்காலத்தில் கோயிலிலே கூடி, தேவாராதனை முடிந்தபின்பு, தங்களுக்குள்ளே புண்ணிய கருமங்களுக்கடுத்த நியாயங்களைப் பேசிக்கொண்டு நடந்த முறையைப் பற்றிச் சொன்னார். அதனால் அர்ச். சின்னப்பர் அந்த அதிகாரத்தின் 3-ம் வசனத்திலே தீர்க்கதரிசியாக நியாயத்தைச் சொல்லுகிறவர் புண்ணியம் வளரவும், படிப்பனையாகவும், ஆறுதல் செய்யவும் மனுஷரோடல்லோ பேசுகிறார் என்றார். அதனால் எவரும் அறியும் பாஷையாகப் பேசவேண்டுமென்றார்.

தேவாராதனே, பூசை, செபமோவெனில், ஆண்டவ ரோடே நாம் பேசுகிற முறையேயொழிய, மனுஷரோடே பேசுகிற வகையல்ல. அப்படி 29-ம் வசனத்தில் இருவர் மூவர் பேசிக்கொண்டிருக்க, மற்றவர் கேட்டதை மதித் துச் சொல்வார்களென்றார். அப்படியே 30-ம் வசனத்தில் மற்றொருவனுக்கு ஆண்டவர் நல்லதொன்றை அறிவித் தால், முன் பேசிக்கொண்டிருந்தவன் பேசாதிருக்கவென் றார். அப்படியே 34-ம் வசனத்தில் கோயிலிலே பெண்பிள் ளேகள் மௌனமாயிருக்கக்கடவார், அவர்கள் பேச உத்தார மில்லே என்றார். இவைகளும் அவர் இதிலே எழுதின இத் தகைப்பட்ட பலவும் பார்க்கில், அந்த அந்த அதிகாரத்தி லே சொன்னதெல்லாந் தேவாராதனே, பூசை, செபம் பற் றிச் சொல்லாமல், அவர்கள் தங்களிலே அப்போது செய் துகொண்டுவந்த ஞான சல்லாபங்களேப்பற்றிச் சொன்ன தாக வேண்டுமல்லோ.

ஆகிலும் 14-ம் வசனத்தில் மாத்திரஞ் செபத்தைப் பற்றி எல்லாரும் அறியும் பாஷை பேசவேண்டுமென்று எழுதினதாகத் தோன்றுமே. ஆனல் இதிலேயுந் தேவாரா தனேயாகப் பொதுவாய்க் கட்டளேயிட்ட பூசை செபமும் பற்றிச் சொன்னதல்ல. அவனவன் தன் பத்திக்குத் தக்க தாய் ஆண்டவருக்குத் தோத்திரமாகச் சொன்ன ஞானப் பாட்டுக் கீதங்களேக் குறித்து மற்றொருவரும் அறியாத பாஷையால் அவைகளேச் செய்து, பாடி வேண்டிக்கொண் டால், எல்லாருங் கேட்கச் செய்ததனுற் பலனென்ன? அப்படிப்பட்ட கீதங்களே உண்டாக்க அறியாதவரும், மற்ற வர்கள் செய்ததைக் கேட்டுக் கண்டுபிடித்தாலும், மன தினல் ஒருப்பட்டு ஆண்டவரை அவர்களுங்கூட வேண் டிக்கொண்டு பிரயோசனப்படவேண்டும் என்றார். அப்படி யே நீங்களுங் கோயிலிலே பாடிக்கொண்டு வருஞ் சங்கீதப் பாட்டுகளே மறுபாஷையாகச் சொல்லாமல், உங்கள் தமிழ் மொழியாகச் சொல்வீர்களல்லோ?

மற்றப்படிக் குருக்கள் தேவாராதனேயாகச் செய்யும்

பூசையும், முடியுஞ் செபமும், வாசிக்கும் வேத புஸ்தகமும் எல்லாரும் அறியும் பாஷையால் ஆகவேண்டுமென்று அர்ச். சின்னப்பர் சொன்னதாகத் தரங்கம்பாடியார் ஒப்பிக்கக்கடவார்கள். கடைசியில் சன்மப் பாஷையாகத் தன் உத்தாரமில்லாமல் வேத புஸ்தகத்தைத் திருப்பவும், வாசிக்கவும் உரோமான் திருச்சபை விலக்கினது உள்ளதுதானே. ஆகிலும் இதற்கு நியாயமும், வகையும் இதிலே இரண்டாம் பேதகம் மறுத்தபோது எழுதினதைக் காணக்கடவீர்கள்.

17-ம் பேதகமறுத்தல்.

இதிலே சேசுநாதர் உண்டாக்கின தேவத்திரவிய அநுமானங்கள் நமக்குப் பலன் தரும்படிக்கு அவைகளை விசுவாசத்தோடே கைக்கொள்ளவேண்டுமென்று தரங்கம்பாடியார் சொன்ன பின்பு அதற்கெடுத்துக் காட்டின உவமையாவது: "விசுவாசத்தோடே கலந்துபோகாத திருவசன மதைக் கேழ்க்கிறவர்களுக் கொன்றுக்கும் பிரயோசன மில்லாததா யிருந்ததுவு மல்லாம லவர்களைச் சாபிக்கப் பட்டவர்களாய்த் தானே யெப்படி விட்டு வைக்குமோ அப்படிக்கு அர்ச். சக்கிரமேந்துகள் விசுவாசத்தோடே வாங்கிக் கொள்ளப் படாதேபோனால் சொன்ன பிறகாரமாகத்தானே பலிக்குமொழிய மற்றப்படியல்ல" என்றார்கள். இதிலேயும் பல உதாரணங்களைக் குறித்து வீணாய்க் குவித்த பிற்பாடு எழுதினதாவது: "இதுக்கெதுகையாக மனுஷருடைய புது உபதேசம் போதிவிக்கிறதாவது: புது தெஸ்தமேந்தினுடைய சக்கிறமேந்துகள் சும்மா யதுகளை வாங்குகிற கிரிகையினாலே யெக்கிசொப்பெரோ யொப்பேராத்தோ அந்தந்தப் பிரசாதங்களைக் கொடுக்குமென்று போதிவிக்கிறது. இதுக்கர்த்தமேதென்றால் இந்த சக்கிறமேந்துகளை வாங்குகிற பேர்களிடத்திலே பத்தி விசுவாசத்தினுடைய

வொரு குணமடையாளமானுலு மில்லாமலிருந்தாலுஞ் சக்கிறமேந்துகளைப் புறம்பாக வாங்குகிற கிரிகையினுடைய பலத்தினுலேதானே யந்த வரப்பிரசாதங்களைப் பலிக்கப் பண்ணுமென்று மனுஷருடைய புது உபதேசம் போதிக்கும்' என்று தரங்கம்பாடியார் கொடிய தமிழாய்க் குளறி எழுதினுர்கள்.

இந்தப் பேதகத்தை மறுக்கவும் உரோமான் திருச்சபை இந்த விஷயத்திலே படிப்பிக்குஞ் சத்தியத்தை அறியவும், வேதவிளக்கத்தின் 12-ம் அதிகாரமெல்லாம் வாசிக்கக் கடவீர்கள். அங்கே சொல்லப்பட்ட நியாயங்களைப் பார்க்கும்போது இதிலே தரங்கம்பாடியார் எழுதின பொய்யும் வெளியாகும். அதேதெனில், சொல்லப்பட்ட தேவ வாக்கிய உபதேசம்போலே, தேவத்திரவிய அநுமானங்களும் பலன் தருமென்பது பொய்யாமே. நாஞ் சொல்லும் உபதேசம் உள்ளே நுழையவிடாமல் மறுத்தவனுக்கு அந்த உபதேசத்தால் பலன் ஒன்றில்லை. குழந்தைகளுக்குத் தந்த ஞானஸ்நானமோவென்றுல், அந்தக் குழந்தைகள் அறிவில்லாமையால் அழுது, தலை சாய்த்து உதைத்து, வேண்டாமென்றுற்போலே கிடந்தாலும், அவைகளுக்கு ஞானஸ்நானம் பலித்து, இஷ்டப்பிரசாதத்தைக் கொடுக்குமென்று தரங்கம்பாடியாருஞ் சொல்லுவார்களல்லோ.

மீளவும் அறிவுடையவர்களிடத்தில் தவ விசுவாசபத்தி, ஆயத்த வகையால் வேண்டியதென்றும், அதில்லாமல் தேவத்திரவிய அநுமானங்கள் பலன் கொடாதென்று உரோமான் திருச்சபை படிப்பிக்குஞ் சத்தியமாகக்கொள்ளத் தேவத்திரவிய அநுமானங்களை வாங்கினவனிடத்தில் ஒரு புண்ணியக் கிரியையுந் தேவையில்லையென்று நாம் படிப்பித்தோமென்பது முழுப் பொய்யாமே. தேவத்திரவிய அநுமானங்கள் தங்கள் வினைப்பயத்தால் எத்தனக் காரணமாக இஷ்டப்பிரசாதத்தைத் தருவது மெய்தானே. நாம் அதற்குச் செய்யும் வினையாகிற தவ விசுவாசம் மற்றதெல்லாம் அதற்கு ஆயத்தமொழிய, காரணமல்ல. இதற்கெல்

லாம் முன்சொன்ன அதிகாரத்தை வாசித்தால் உள்ள நியாயங்கள் தெளிவாய்த் தெரியவருமே.

18-ம் பேதகமறுத்தல்.

இதிலே சேசுநாதர் தேவநற்கருணை உண்டாக்கின போது கூடநின்ற பன்னிரு சீஷர்களுக்கெல்லாந் தேவ அப்பத்தைத் தந்ததல்லாதே நற்கருணைப் பாத்திரத்தையுந் தந்தருளி, இதில் எல்லாருங் குடியுங்களென்று திருவுளம் பற்றினதாகத் தரங்கம்பாடியார் எழுதின பின்பு சொன்னதாவது: "இதுக்கெதுகையாக மனுஷராலே கட்டப்பட்ட புது உபதேசம் போதிவிக்கிறதாவது: பீடத்தினுடைய சக்கிறமேந்தாகிற கர்த்தருடைய ராப்போசனங் குருப்பட்டமுள்ளவர்களுக்கு மாத்திரம் அப்பத்திற்குள்ளேயும், முந்திரிகைப்பழ ரசத்திற்குள்ளேயுங் கொடுக்கப்பட வேண்டுமெல்லாமல், குருப்பட்ட மில்லாதவர்களுக்கும் மற்றத் திருச்சபையாருக்கும் அப்பத்திற்குள்ளே மாத்திரங் கொடுக்கப்பட வேண்டுமென்று போதிவிக்கும்" என்றார்கள்.

இந்தப் பேதக விஷயத்தையுங் கண்டுபிடிக்க வேத விளக்கத்தில் 103-ம் பிரிவு துவக்கி 14-ம் அதிகாரம் முடியுமட்டும் ஆராய்ந்து பார்க்கக்கடவீர்கள். இதிலேயுந் தரங்கம்பாடியார் சொன்ன பொய்மாத்திரம் வெளியாகும்படிக்கு அறியவேண்டியதாவது: சேசுநாதர் அப்போஸ்தலருக்கெல்லாம் நற்கருணை அப்பத்தையல்லாதே பாத்திரத்தையுந் தந்து, எல்லாருங் குடியுங்களென்றதனால் குருக்களொழிய, மற்ற சனங்களும் பாத்திரத்தைக் கொள்ளச் சொன்னாரென்று தரங்கம்பாடியார் எழுதினது இதிலுள்ள முதல் பொய்யாமே. அத்தரவாயிலேதானே நான் செய்தபடியே செய்யுங்களென்று அப்போஸ்தலரைக் குருக்களாக ஸ்தாபித்து, நற்கருணை உண்டாக்கக் கட்டளையிட்டாரல்

லோ. அதனல் எல்லோரையும் நற்கருணை உண்டாக்கக் கட்டளை செய்தாரென்று நினைப்பாருண்டோ?

மீளவுங் குருக்களல்லாத பேர்களுக்கு நற்கருணை அப்பத்தைத் தந்தாற் போதுமென்று படிப்பிக்கிறது மனிதர் புதிதாய்க் கட்டின உபதேசமென்பது பொய்தானே. அப்போஸ்தலர் நாளிலே முதலாய்ப் பலமுறை நற்கருணைப் பாத்திரத்தை மற்றச் சனங்கள் கொள்ளாமல், தேவ அப்பத்தை மாத்திரங்கொண்டு, நடந்த முறையிதென்று சொல்லக்கடவோம். அப்படியே அப்போஸ்தலர் நடபடியாகமத்தின் 2-ம் அதிகாரம் 42-ம் வசனத்தில் அந்நாள் கிறீஸ்துவர்களைத் தோத்திரஞ் சொல்லி, அர்ச். லூக்காஸ் எழுதினதாவது: அந்நாள் கிறீஸ்துவர்கள் அப்போஸ்தலர் உபதேசத்தைக் கேட்கவும், ஒழுங்குடன் கூடி, அப்பத்தைப் பிட்டு உண்ணவும், செபஞ் செய்து வேண்டிக்கொள்ளவும், ஓயாமல் காலக்ஷேபஞ் செய்துகொண்டு வந்தார்களென்றார். இதோ பாத்திரத்தைச் சொல்லாமல் அப்பத்தைமாத்திரஞ் சொன்னதினல், அந்நாளிலே முதலாய் மற்றச் சனங்கள் சிலமுறை நற்கருணைப் பாத்திரத்தைக் கூடக் கொண்டாலுந் தப்பாமல் அநுதினம் இந்தத் தேவ அப்பத்தைப் பாத்திரமில்லாமலுங் கொண்டார்களென்று சொல்லக்கடவோம். இதற்கு வேத விளக்கத்தில் 106-ம் பிரிவு வாசிக்கக்கடவீர்கள்.

19-ம் பேதகமறுத்தல்.

விவாகம் நல்லதென்பது வேத சத்தியமாகவும், தகாதென்பது பசாசு படிப்பனையாகவும் இதிலே தரங்கம்பாடியார் சொன்னபின்பு வைத்த வசனமாவது: "இதுக்கெதுகையாக மனுஷருடைய புது வுபதேசம் போதிவிக்கிறதாவது: விவாகமானது மாங்கிஷத்திற்கடுத்த மாற்கமாயிருக்கிறதென்று மிதின் முகாந்திரமாக ஞானிகளாயிருக்கப்பட்ட

பேர்களெல்லாரு மதனை விலக்கி வைக்கவேண்டுமென்றும் போதிவிக்கிறது. பின்னையு மிந்தக் கட்டளைப் பலப்பிடியாகப் பிடித்துச் சொல்லுகிறதாவது: சர்வேசுரன் கற்பித்த பிரகாரமாக வாசார ஒழுங்கின் படியே விவாக முடித்துக் கொள்ளுகிறதைவிட வொருபிறெலாதோவாகிலும் ஞானியாயிருக்கிறவனென்கிலும் ரகசியப் பொருட்டாக வானுலும் வெளிப்பொருட்டாக வானுலுங் கள்ள மார்க்கங்களிலேயு மசுத்தத்திலேயுந் திரிந்தா லிது வொருமட்டாகலாமென்றுஞ் சொல்லும். இந்தப்படிக்குப் பெல்லற்மீனென்கிறவர் சொல்லுகிறதாவது: ஞானியாயிருக்கிறவன் கலியாணம் செய்கிறதென்கிறது சோர தோஷத்திலேயுங் கெட்டதாயிருக்கிறதென்றூர். அதுக்கவர் சொல்லுகிற முகாந்திரமேதென்றால், விவாகம் செய்கிறவன் தானேற்றுக்கொண்ட நேத்திக் கடனை நிறைவேற்றுகிறதற்குத் தன்னைத்தான் சாமார்த்தியமல்லவனுக்கிறு னிப்படியே வேசித்தனம் செய்கிறவன் செய்கிறதில்லையென்கிற முகாந்திரத்தைச் சொல்லுகிறூர்" என்றூர்கள்.

இதிலே விவாகம் நல்லதென்றும், விவாகம் ஆகாதென்றால் பசாசு ஏவலால் வந்த உணர்ச்சி என்றுந் தரங்கம்பாடியார் சொன்னபின்பு, நாம் அதற்கு விரோதமாகப் படிப்பிக்கிறோம் என்றூர்கள். இதுவே வெட்கமில்லாமல் சொன்ன பொய்யல்லோ. அவர்களே விவாகந் தேவத்திரவிய அநுமானமல்லவென்று சாதித்திருக்க, நாமே ஏழு தேவத்திரவிய அநுமானங்களில் விவாகம் ஒன்றென்று சொல்லுகிறோமல்லோ. மீளவும் ஞானிகள் எல்லாரும் விவாகஞ் செய்ய ஒண்ணுதென்று படிப்பிக்கிறோமென்பது பொய்தானல்லோ. நாமே எண்ணப்படாத பேர்கள் விவாகஞ் செய்து இல்லறத்தோடே ஞானமடைந்து, உத்தமரானூர்களென்று அவர்களை அர்ச்சியசிஷ்டர்களாக வணங்குகிறோமே. அதன்பிறகு ஞானிகள் விவாகத்தோடிருத்தல் ஆகாதென்று படிப்பிக்கிறோமென்பது வெட்கமில்லாமல் சொன்ன பொய்யல்லோ. ஆகிலும் விவாகத்தோடு இல்லறம் நல்லதாயினும், விரத்தத்துவத்தோடு துறவறமதிலே

யும் நல்லதென்று நாம் படிப்பிக்கிறோம். ஆகிலும் இது மனுஷர் புதிதாய் கட்டின உபதேசமென்பது பொய்தானே.

வேதசத்தியமாக அர்ச். சின்னப்பர்தாமே கொரிந்தியாருக்கு முதல் நிருபம் 7-ம் அதிகாரம் 38-ம் வசனத்தில் விவாகஞ் செய்வது நல்லதாயினும், அதைச் செய்யாதிருப்பது மிகவும் அதன்மேலும் நல்லதென்றார். இதனைப்பற்றி ஆண்டவர் சமுகத்து ஊழியஞ் செய்யத் தெரிந்துகொள்ளப்பட்ட சந்நியாசிகளுங் குருக்களும், விவாகத்திலேயும் உத்தம விரதமாக விரத்தராயிருக்கத் திருச்சபை கட்டளையிட்டது தானே. நீ விவாகஞ் செய்யவேண்டாமென்று நாமே விலக்கினதல்ல. ஆகிலும் விவாகஞ் செய்யவேண்டுமாகில், குருவுமாகவேண்டாம். குருக்களில் ஒருவன் ஸ்தாபிக்கப்பட ஆசையாயிருந்தால், மரண பரியந்தம் விவாகமின்றி விரத்தனயிருப்பேனென்று ஆண்டவருக்கு வார்த்தைப்பாடு கொடுக்கக்கடவானென்று திருச்சபை கட்டளையிட்டதினால் குறை என்ன? பெண்ணாசையால் உள்ளே பற்றிய தீயை அவிக்கமாட்டாதெரிந்து, விரக நோயால் வெந்து, நொந்திருப்பாயாகில் குருவாகும் ஆசையை விட்டு விவாகஞ் செய்வது நல்லதுதானே.

உன் கைப்பொருளை எனக்குத் தரக் கட்டாயஞ் செய்யேன். ஆயினும் நீ பணந் தாராமல், என் உடமை உனக்குத் தரவுமாட்டேனென்றாற்போல, நீதியின்படியே விரத்தனக ஒருவர்க்குங் கட்டாயஞ் செய்யவில்லை. ஆயினுஞ் சந்நியாசத்தாலும், குருத்துவத்தாலும் வருஞ் சங்கையும் நன்மையும் விரத்தனக வார்த்தைப்பாடில்லாமல், ஒருவருக்குந் திருச்சபை தரவுமாட்டாதே. அப்படியே விவாகத்திலும் விரத்தனவது உத்தமமென்று வேத சத்தியமாக அறிந்து, மனமே பொருந்திப் புறக்கட்டாயமில்லாமல், மரணபரியந்தம் பெண்ணாசை வெறுத்து, விரத்தனய் நிற்பேனென்று எல்லாரும் அறிய ஆண்டவருக்கு வார்த்தைப்பாடு தந்த பின்பு, விவாகம் அவனுக்கு ஆகாதென்பது வேதசத்தியமாகுமொழிய, மனுஷரால் கட்டப்பட்ட உபதேசமென்

பது பொய்தானே. அதேதெனெனில், வேதமாகச் சலோமோன் எழுதின 2-ம் புஸ்தகம் 5-ம் அதிகாரம் 3-ம் வசனத்தில் ஆண்டவர் அருளிச்செய்ததாவது: தந்த வார்த்தைப்பாடெல்லாஞ் செலுத்தக்கடவாய். செலுத்தாயாகில், வார்த்தைப்பாடு கொடாதிருப்பது மிகவும் நல்லதென்றார்.

ஆகையால் விரத்தனுகத் தந்த வார்த்தைப்பாடு செலுத்தாமல், செய்த விவாகம் ஆகாதென்பது மனுஷர் உபதேசம் என்னுமல், சர்வேசுரனிட்ட கற்பனையென்பது சத்தியந்தானே. கடைசியிலே பகிதர்க்கெல்லாம் ஒரு புலியாக, கல்வித்துறை எல்லாங் கடந்து, நூலோடறச் செல்வமுங் கூட்டி, எங்கும் ஒளிப்பெயர்பெற்ற பெல்லார்மீனென்பவரைத் தரங்கம்பாடியார் நகைத்தாற்போல் அவர் எழுதிவைத்த வசனத்தை இதிலே நிந்திப்பாகக் காட்டினார்கள். அதாவது: மரணபரியந்தம் விரத்தனுக நிற்பேனென்று ஆண்டவருக்கு வார்த்தைப்பாடு தந்தவன் ஓரோரிடத்தில் ஸ்திரீ போகத்தில் விழுந்து, செய்யும் பாவத்திலேயும் அவன் அந்த வார்த்தைப்பாடு தந்தபின்பு விவாகஞ் செய்தால், அதுவே அதிக பலத்த அக்கிரமமாகுமென்று சொன்ன சாஸ்திரியானவர் எழுதிவைத்தார். அதற்கு அவர் சொன்ன நியாயமேதெனில், ஓரோரிடத்துச் சேற்றிலே விழுவதைப் பார்க்க, அதிலே படுத்துப் புரண்டு சுகமாய்க் கிடப்பதே அதிக அக்கிரமமாவது போல ஓரோரிடத்துப் பரஸ்திரீ போகத்தில் விழுந்து ஆண்டவருக்குத் தந்த வார்த்தைப்பாடு மீறிச் செய்த பாவத்தைப்பார்க்க, மரணபரியந்தம் அந்த வார்த்தைப்பாடு செலுத்தாதிருப்பேனென்று தனக்கு ஆகாத விவாகத்தைச் செய்யத் துணிவது மிகவுங் கன அக்கிரமமென்றார். இதுவே நகைக்கத்தகும் அக்கிரம நியாயமென்று தரங்கம்பாடியாருக்குத் தோன்றி இதிலே நிந்தித்தார்கள்.

ஆகையால் ஓரோரிடத்துப் பறைச்சேரியில் பிராமணன் புகுவதைப்பார்க்க, தான் அதிலே வீடு கட்டிக் குடியாய்க் கிடப்பது நல்லதென்பார்கள். அப்படியே கண்ட

நியாயத்தை மறுத்துச் சலஞ்சாதித்த யாவரும் மதிகெட்டு எல்லோரும் நகைக்கப் பிதற்றுவார்களல்லோ. மற்றப்படி அர்ச். அகுஸ்தீனுங் கைமைச் செல்வ மென்னும் புஸ்தகத்தின் 11-ம் அதிகாரத்தில் விரத்தனை ஆண்டவருக்கு வார்த்தைப்பாடு தந்த பின்பு விவாகஞ் செய்தால், பரதாரத்தைத் தீண்டிச் செய்யப்படுந் துரோகத்தைப்பார்க்க, அதுவே அக்கிரம பாதகமாகுமென்று எழுதிவைத்தார். ஆகையால் இது தரங்கம்பாடியார் இதிலே சொன்ன நாலாம் பொய் தானே.

20-ம் பேதகமறுத்தல்.

தரங்கம்பாடியார் இதிலே சொல்லுந் தன்மையாவது: "சர்வேசுரன் திருவுளம்பற்றின பூர்வத்துபதேச மெங்களுக்குப் போதிவிக்கிறதாவது: எதாகிலும் வாயின் வழியாயுள்ளே புகுகிறது மனுஷனை யசுத்தம் செய்கிறதில்லையென்றும் மத்தேயு 15-ம் அதிகாரம் 11-ம் கவி. சகல போசன வகைகளும் பதார்த்தங்களுஞ் சுத்தமான சிருஷ்டிப்படைப்புகளா யிருக்கிறதென்றும் விசுவாசமுள்ளவர்களைத்தனை வித்தியாசம் செய்யாமலு மொன்றுக்கு மய்யப்பட்டுச் சந்தேகப்படாமலுஞ் சுத்தமானதுவுமாய் நல்லதுவுமாயிருக்கிற மனதோடே ஸ்தோத்திரம் செய்து வாங்கியனுபவிக்கலா மென்றும் லூக் 10-ம் அதிகாரம் 7-ம் கவி. கொருந்தியாருக்கு முதல் நிருபம் 10-ம் அதிகாரம் 25-26-27 கவி. திமோ முதல் நிருபம் 4-ம் அதிகாரம் 3-4 கவி. தீத்து முதல் அதிகாரம் 14-15 கவி. இதுக்கெதுகையாக இருக்கிறதைப் படிப்பிக்கிறதென்கிறது துன்மனசுக்களுடைய வுபதேசமாச்சுதென்றும் பூருவத்துபதேசம் போதிவிக்கிறது. இதுக்கெதுகையாக மனுஷருடைய புதுவுபதேசம் போதிவிக்கிறதாவது: சகலவகையான போசனங்களை வித்தியாசம் செய்யாம லென்றென்றைக்கு மென்

னேரம் பார்த்தாலும் புசிக்கிறதென்கிறதற்குக் கிறீஸ்துவர்களுக் குத்தார மில்லையென்று மிப்படி செய்கிறது சாவுக்கிடமான பாவமாயிருக்கிறதென்றுஞ் சொல்லுகிறது. இவைகள் விலக்கியிருக்கிற நேரங்களோவென்றுலொரு சந்தி நாற்பது நாட்கள் சதுர்க்கால நாட்களும் வெள்ளி சனி சிறிது அர்ச். வர்களுடைய வெஸ்வாக திருநாட்களுமிவைக ளப்படிக்கொத்த நேரங்களென்று மனுஷருடைய புது உபதேசம் போதிவிக்கிறது' என்றூர்கள்.

வாயில் புகுந்த பொருளால் ஆத்துமத்திற்கு அழுக்கு ஆகாதென்றும், பாவமின்றி உண்ணப்படாத பொருள் இல்லை யென்றும் வேத சத்தியமாக இதிலே தரங்கம்பாடியார் சொன்னதின் பிறகு, வெள்ளி, சனி தபசுகால முதற் பல நாளும் மாம்ஸத்தை உண்ணலாகாதென்று விலக்கி அது உண்டால் பாவமாகுமென்று நாமே படிப்பிக்கிறது சொன்ன வேத சத்தியத்திற்கு விரோதமாகும் என்றூர்கள். ஆகிலும் அப்போஸ்தலர் முயற்சி ஆகமத்தின் 15-ம் அதி. 28-ம் வசனந் துவக்கிப் பொய்யான தேவர்களுக்குப் படைக்கப்பட்ட பொருளையும், இரத்தஞ் சிந்தாமல் கொல்லப்பட்ட பொருளையுந் தின்னலாகாதென்று விலக்கி, தின்றால், அது பாவமாகுமென்று இஸ்பிரீத்து சாந்துவின் ஏவலால் அப்போஸ்தலர் கட்டளை இட்டார்களல்லோ? அந்தக் கட்டளை மீறி விலக்கின பொருட்களை உண்டால் அது பாவமாகுமல்லோ.

ஆகையால் பாவமின்றி ஓரோரிடத்து உண்ணப்படாத பொருள் உண்டென்று நிச்சயமாகி, அவர்கள் இதிலே சொன்னது பொய்யாச்சுதல்லோ? இதற்கு அவர்கள் சொல்லத்தகும் மறு உத்தாரமாவது: அந்தப் பொருட்களைத் தின்றதினால் பாவம் இல்லை, அவைகளை விலக்கின கற்பனை மீறினதினால் பாவமாகுமென்பார்கள். அப்படியே நாமும் மாம்ஸத்தை உண்பது பாவமென்னுமல், அதை விலக்கின நாளிலே உண்பது மாத்திரம் பாவமென்போம். ஆகையால் நாம் படிப்பிக்கும் முறையே வேத சத்தியத்

திற்கு ஒவ்வாத தப்பிதமென்று அவர்கள் சொன்னபோது பொய்யே சொன்னார்களல்லோ? மீளவும் இதனை மறுத்துத் தரங்கம்பாடியார் சொல்லுந் தன்மையாவது: பாவமில்லாமல் உண்ணத்தகும் பொருளைச் சில நாள் உண்ணாதபடிக்கு உரோமான் சபை விலக்குவானேன்? விலக்கினாலும், அதன்படியே நடந்துகொள்வது சர்வேசுரனுக்குப் பிரியமாகுமோ என்பார்கள்.

ஆகிலும் எரேமியஸ். ஆகமத்தின் 35-ம் அதிகாரத்தில் எழுதினபடியே பாவமில்லாமல் குடிக்கத்தகும் முந்திரிகைப் பழத்தின் இரசத்தைக் குடியாதபடிக்கு யோனதபென்பவன் விலக்குவானேன்? அவன் விலக்கினபடியே அதைக் குடியாமலிருந்தவர்களை ஆண்டவர் தாமே அதில் எழுதினபடித் தோத்திரம் செய்வானேன்; தமக்குப் பிரியமாகாமலோ அவர்களைத் தோத்திரம் செய்தார்? ஆகையால் சரீரத்தை அடக்கவும், தவத்தைச் செய்யவுஞ் சிறிதுநாளாகிலும் பல பண்டங்களை உண்ணாதிருக்கத் திருச்சபை கட்டளையிட்டதும் உத்தம முறைமைதானே. கட்டளை இட்டபடி நாஞ் செய்வதும், வேதத்தில் ஸ்துதிக்கப்பட்ட முறைமைதானே.

21-ம் பேதகமறுத்தல்.

இதிலே தரங்கம்பாடியார் பொய் சொல்லாதிருத்தலும், தந்த வார்த்தைப்பாட்டைச் செலுத்தலும், இட்ட ஆணைமீறுதிருத்தலும் எவர்க்குங் கடனுண்டென்று நியாயத்தின்படியே சொன்ன பிற்பாடு எழுதினதாவது: "இதுக்கெதுகையாக மனுஷருடைய புது உபதேசம் போதிவிக்கிறதாவது: பதிதர்களுக் காணையையானாலு மவர்களுக்கு ஞாயத்தையானாலும் பார்க்கத் தேவையில்லையென்றும் றோமான் சபையாருக்குப் பிரயோசன முண்டாகத் தன்னுடைய வாணையையும் வார்த்தைப்பாட்டையு மீறுகிறதற்

குத்தார மிருக்கிறதென்றும் பாப்புவென்கிறவர் குடியான வர்கள் தங்கள் பிரபுமார்களுக் காணையிட்டுக் கொடுத்த வாணையை யபத்தம் பண்ணக் குடியானவர்களைக் குற்ற மில்லாமற் காற்கலாமென்றும் பின்னையவர் மற்றச் சகல நேர்ச்சிக் கடன்களையு மாணைகளையு மபத்தம் பண்ணலா மென்றும் போதிவிக்கிறது. இந்தப்படிக்குக் கொன்ஸ்தாஞ் சிய பட்டணத்திலே கூடிவந்த கொஞ்சிலியொவென்று சொல்லப்பட்ட சங்கத்தார் தீர்த்துப் போட்டு ராயருடைய பட்டோலைக்கு மெங்கு நடத்தையா யிருக்கிற விசுவாசத் திற்கும் விரோதமாக வவர்கள் யுவானூசென்பவருக்கு வருத்திவித்த மரணத்திலே யதை யொப்பிவித்தார்கள்" என்றுந் தரங்கம்பாடியார் 21-ம் பேதகமாக எழுதிவைத் தார்கள்.

பதிதருக்குத் தந்த வார்த்தைப்பாட்டைச் செலுத்தத் தேவையில்லையென்று நாம் படிப்பித்ததாகத் தரங்கம்பாடி யார் இதிலே சொன்னார்கள். சொன்னதையும் ஒப்பிக்கத் தந்த நம்பிக்கை மீறி யோவானூஸென்கிற பதிதனை உரோ மான் சபையார் கொன்ற செய்தியை எழுதினார்கள். ஆகி லும் இதிலே அவர்கள் சொன்னதும், அதை ஒப்பிக்கக் கொண்டு விட்ட அத்தாட்சியும் இவ்விரண்டும் இரண்டு பொய்தானே. பதிதர்க்குத் தந்த வார்த்தைப்பாடு செலுத் தத் தேவையில்லையென்கிற அபத்தத்தைத் திருச்சபை படிப்பனையாக உரோமான் சபையாரில் ஒருவனுகிலும் எழு தினதென்று காட்டமாட்டார்களல்லோ. லுத்தேர் சொன்ன தப்பிதங்களை மறுக்கத் திறிதேந்தென்னும் நகரில் கூடின உரோமான் திருச்சபை 1551-ம் வருஷம் 13-ம் கூட்டத்தி லேயும், மறு வருஷம் 15-ம் கூட்டத்திலேயும், 1562-ம் வருஷம் 18-ம் கூட்டத்திலேயுஞ் சகல பதிதருக்கும் நம் பிக்கைக் கட்டளையிட்ட பின்பு, தந்த நம்பிக்கை ஆராகி லும் மீறி விரோதஞ் செய்யாதபடிக்கு விலக்கி, அதை மீறின யாவரும் வஞ்சகர்க்கேற்ற ஆக்கினைக்கு உள்ளாகக் கடவார்களென்று கட்டளை இட்டதாமே. இதிப்படியாகை யில், பதிதர்க்குத் தந்த வார்த்தைப்பாடு செலுத்தத் தேவை

யில்லையென்று உரோமான் திருச்சபை படிப்பித்ததாகவெட்கமில்லாமல் எப்படி தரங்கம்பாடியார் எழுதத் துணிந்தார்கள்? யோவானூஸென்பவனைக் கொன்ற செய்தியோவெனில், உரோமாபுரி இராயன் அவனுக்கு நம்பிக்கைத் தந்து திருச்சபைக் கூட்டத்திற்கு அழைத்தது உள்ளதுதானே. பிற்பாடு அதிலே அவனைச் சுட்டுக் கொன்றது உள்ளதுதானே.

ஆகிலும் அவனுக்குத் தந்த நம்பிக்கை இப்படியும் மீறுதிருந்தது உள்ளதுதானே. † அதெப்படியென்றால் இராயன் அவனுச்கு நம்பிக்கை கொடுக்கும்போது, நீ வந்து ஓடிப்போனால் உனக்கு ஆக்கினை இடுவோமென்றார். அந்தப் பதிதனும் வந்த இடத்திலே முன் தான் சொன்ன அபத்தங்களை அந்தத் திருச்சபைக்கு ஒப்பிக்கக் கூடாதென்று கண்டு ஒருநாள் ஒளித்தோடிப்போனான். ஓடினவனைப் பிடித்து ஆக்கினை இட்டார்கள். அபபடியே அக்காலத்துச் செய்திகளை எழுதின சில பதிதர் முதலாய் எழுதி வைத்தார்கள். இதிப்படியாகையில், இதிலே உரோமான் சபையார் தந்த நம்பிக்கை மீறினதென்பவோ யோவானூஸென்கிற பதிதன் தந்த வார்த்தைப்பாடு மீறினதென்பவோ. இவனே தான் சொன்னதைச் செலுத்தாமல், தனக்குக் கட்டளையிட்டதை மீறிச் செய்த துரோகத்திற்கேற்ற ஆக்கினை அடைந்தானென்பது நியாயமல்லோ.

---

† யோவானூஸ் அநேக கலாப கொலை முதலிய பாதகங்களுக்குக் காரணமான ஒருபுது மதத்தை உண்டாக்கி இருந்தாலும், தன் போதனையில் ஒரு பழுதில்லையென்று சாதிப்பான். ஆகையால் அதைப் பரிசோதிக்குஞ் சங்கத்துக்கு இராயன் அவனை அழைப்பித்து, வழியில் அவனுக்குத் தடையொன்றில்லை என்கிறதற்கு மாத்திரம் நம்பிககை ஓலை கொடுத்து அவன் தன் போதனைக்கும், நடத்தைக்குஞ் சரியான நியாயங் கொடாவிட்டால், ஆக்கினை தப்பாதென்று அவனுக்கு அறிவித்திருந்தானென்று மில்னரென்கிற சாஸ்திரி அத்தாட்சியோடு எழுதினார்.

22-ம் பேதகமறுத்தல்.

தரங்கம்பாடியார் இதிலே எழுதினதாவது: "சர்வேசுரன் திருவுளம் பற்றின பூர்வத் துபதேச மெங்களுக்குப் போதிவிக்கிறதாவது: ஒவ்வொரு வாற்றும மல்லது ஒவ்வொரு மனுஷ மேற்பட்டவர்களாயிருக்கிற துரைத்தன முள்ளவர்களுக்கு மிராசாக்களுக்குஞ் சனங்களுடைய பிரபுமார்களுக்குங் கீழ்ப்படிந்திருக்க வேண்டுமென்று போதிவிக்கிறது. ரோம். 13 அதி. 1 கவி. இதுக்கெதுகையாக மனுஷருடைய புது வுபதேசம் போதிவிக்கிறதாவது: செங்கோலென்றும் லோகப்பட்ட மென்றுஞ் சொல்லப்படுகிற லோக துரைத்தன முள்ளவர்களுக்கு ஞானிகளாயிருக்கிற பேர்கள் கீழ்ப்பட்டவர்களா யிருக்கவில்லை. ஆனாலோ ஞானிகளாயிருக்கிறவர்களுமா யிராதவர்களுமா யிருக்கிற பேர்களெல்லாரும் பாப்பென்கிறவர்களுக்குக் கீழ்ப்படிந்திருக்க வேண்டுமென்று போதிவிக்கிறது: இவர், தம்மைத்தானே சூரியனுக் கொப்பனையிட்டுச் சந்திரனுக்கு எம்பரதோரென்கிற ராயனை ஒப்புக்கொடுக்கிற நிதின் முகாந்திரமாக விராசாக்களு மெம்பரதோர்மார்களுங் கீழ்ப்படியுதலுக்கும் பணி செய்யுதலுக்கு மடையாளமாக வவருக்குப் பாத முத்தி செய்கிறார்கள்" என்று தரங்கம்பாடியார் எழுதினார்கள்.

இதிலே தரங்கம்பாடியார் எழுதினதாவது: எவரும் ஆளும் பிரபுக்களுக்குக் கீழ்ப்படிந்திருப்பது வேதப் படிப்பனை என்றார்கள். இது சத்தியந்தானே. ஆகிலும் இதற்கு விபரீதமாய்க் குருக்களும், சந்நியாசிகளும லௌகிக இராசாக்களுக்குக் கீழ்ப்படியத் தேவையில்லை யென்று நாம் படிப்பிக்கிறோமென்பது பொய்யாமே. எல்லாருக்கும் பொதுவாய் இராசாவிட்ட நீதியுள்ள கற்பனை மீறாதே நடப்பது சந்நியாசிகளுக்குப் பொதுக் கடனென்று படிப்பித்தோமொழிய வேறுபட உரோமான் திருச்சபையாரில் ஒருவன் படிப்பித்ததாகத் தரங்கம்பாடியார் காட்டமாட்

டார்கள். ஆகிலுங் குருக்கள் மேலேயும், மற்றச் சந்நியாசிகள் மேலேயுங் குற்றம் உண்டென்று லௌகீக இராசாக்களிடத்திலே வழக்குப்பேசவும், அவர்கள் மேலே குற்றஞ் சுமந்ததென்று அவர்கள் இராசாக்கள் தண்டிக்கவுங் கூடாதென்று நாமே படிப்பிக்கிறது உள்ளது தானே. இது அர்ச். பாப்புக்கள் ஸ்தாபித்த கட்டளையினாலேயும், மற்ற இராசாக்கள் உள்ள நியாயத்தைக் கண்டு வலிய ஸ்தாபித்த மரியாதையினாலேயும் வந்த முறைமையொழிய வேத விஷயத்தில் எவருக்கு மேலாய் நிற்குங் குருக்களே தஞ் சீஷரிடத்திலே வழக்குப் பேசவும், தஞ் சீஷராலே தண்டிக்கப்படவும் நியாயமல்லவென்று கண்ணுடைய யாவருக்குந் தோன்றுமல்லோ? ஆகிலும் இந்த நியாயமுள்ள முறை வேதத்திற்கு விரோதமாக மனுஷரால் ஸ்தாபிக்கப்பட்டதென்று தரங்கம்பாடியார் சொன்னது பொய்தானே. அப்போஸ்தலர் நாளில் துவக்கின முறை இதொழிய இதற்கு விபரீதமாய்ப் பூருவத் திருச்சபையிலே நடந்ததாகத் தரங்கம்பாடியார் ஒப்பிக்கமாட்டார்கள்.

23-ம் பேதகமறுத்தல்.

இதிலே தரங்கம்பாடியார் சொல்லுந் தன்மையாவது: "சர்வேசுரன் திருவுளம் பற்றின பூர்வத் துபதேசமெங்களுக்குப் போதிவிக்கிறதாவது: அந்திக் கிறீஸ்துவானவன் சர்வேசுரன் பாவனையாய்ச் சர்வேசுரனுடைய தேவாலயத்திலே இடம் பெற்றுப் போயுட்கார்ந்திருந்து சர்வேசுரனுக் கடுத்ததைத் தனக்குத்தானே யெடுத்துப் போட்டுக்கொள்ளுவானென்றும் தெசலோ. 2 நிரு. 2 அதி. 4 வசி. ஏழு மலைகளின் மேலே நிற்கிறதுவுமாய் பூமியினுடைய விராசாக்களின் பேரிலே யிராச்சிய பாரம் பண்ணுகிறதுவுமாயிருக்கிற மகா பெரிய பட்டண மவனிருக்கிற விராசதானிப் பட்டணமுமா யிருக்குமென்றும் போதிவிக்கிறது.

யுவானிசு அறி-புஸ்தகம் 107 அதி. 1-18 கவி. பட்டணம் ரோமாபுரிதானே. இதுக்கெதுகைகயாக மனுஷருடைய புது வுபதேசம் போதிவிக்கிறதாவது: அந்திக் கிறீஸ்துவானவன் யூதர்களுடைய சாதியிலே தானென்கிறவனுடைய கோத்திரத்திலே யிருந்து வரவேண்டுமென்று மவனுடைய விராச்சியத்தி னிராசதானிப் பட்டணமல்ல தவனிருக்கிற தானம் எறுசலெமென்கிற பட்டணத்திலே யிருக்குமென்றும்" போதிவிக்கிறது. இதெல்லாந் தரங்கம்பாடியார் எழுதிய கொடுமொழி வசனம்.

சேசுகிறீஸ்து தந்த சத்திய வேதத்தை மறுத்து நீக்கவும், கிறீஸ்துவின் திரு நாமம் நிந்தித்தொழிப்பவும், அவருக்கு எதிர் பகையாக அந்திக் கிறீஸ்து என்னப்பட்ட ஒரு பெரும் பாவி உலோகத்திலே பிறந்து, புண்ணியத்தைப் பகைத்து ஆளுவானென்று வேத உதாரணங்களினால் அறிந்திருக்கிறோம். இந்நாட் பதிதரோடே தரங்கம்பாடியாருஞ் சொன்ன அந்திக் கிறீஸ்து அர்ச். பாப்புத்தானேயென்று காட்ட அப்படிக்கொத்த பாவி உரோமாபுரியிலே ஆளுவானென்று இதிலே எழுதினார்கள். எழுதினதுமன்றி இதுவே வேத சத்தியமென்றார்கள். ஆகிலும் இதுவே அக்கிரமமான பொய் என்னக்கடவோம். ஓர் இடத்திலாகிலும் வேத உதாரணங்களிலே அந்திக் கிறீஸ்து வந்து ஆளுமிடம் இன்னதென்று வெளியாய்க் குறிக்கப்பட்டதல்ல. ஆகையால் இவ்விடம் அவ்விடமென்பது வேத சத்தியமுமல்ல.

தரங்கம்பாடியாரோவெனில், சொன்னதை ஒப்பிக்க அர்ச். அருளப்பர் கண்ட காட்சி யாகமத்தின் 17-ம் அதிகாரத்தைக் கொண்டுவிட்டார்கள். அதிலே சிவந்த பட்டாடை உடுத்து, விரியொளி மணியணியணிந்து, மானமாட்சியும், நாணமும் இழந்து, பல வழிக் காமத்தழுந்தி, ஏழு மலைமேல் ஆண்டிருந்த ஒரு வேசையைக் கண்டார். கண்ட வேசையே ஏழு மலையுள்ள உரோமாபுரி ஆளும் அர்ச். பாப்புக்களையென்று ஒத்துக்கொள்ள வேண்டுமென்று பதிதர்

சாதிக்கிறார்கள். ஆகிலும் அதிலேதானே அந்த வேசை மற்ற உலோகத்து அரசனை ஆளும் பட்டணமென்று 18-ம் வசனத்தில் எழுதியிருக்கவும், பல மகாத்துமாக்களையும், சேசுநாதர் வேதசாட்சிகளையுங் கொன்று சிந்தின இரத்தத்தால் அந்த வேசை நிறைந்திருப்பாளென்று ஆறும் வசனத்தில் எழுதியிருக்கவும் இதெல்லாம் அர்ச். பாப்புக்கள் இப்போது ஆளாநிற்கும் உரோமாபுரிக்குச் செல்லாதல்லோ.

அதிலே அர்ச். அருளப்பர் சொன்ன வேசை உரோமாபுரியென்று சொல்லவேண்டுமாகில், நெரோன் முதற்கொண்டு பல அக்கியானிகளான இராயர் சேசுநாதர் சத்திய வேதத்தைப் பகைத்து மட்டில்லாத மகாத்துமாக்களை வேதத்திற்காகக் கொன்று, தெருவெல்லாஞ் சிந்தின இரத்தம் ஓட, கொடுங்கோல் கோணி ஆளாநின்ற அக்கியான உரோமாபுரியைக் குறித்தாரொழியச் சத்திய வேத உரோமாபுரியைக் காட்டினவரல்லவென்று பற்பல வேத பாரகர் சொன்னபடியே சொன்னால் நியாயத்திற்கு ஒத்திருக்குமல்லோ? மற்றப்படி பல உவமையாலே மூடி மறைத்த விஷயமே கூசாமல் வேத சத்தியமென்பார் உண்டோ? இப்படிப் பல உவமையால் மறைந்த இரகசியத்தை வேதபாரகர் ஒருங்குடன்கூடி எடுத்துக் காட்டி அந்த வேசை உவமையால் குறிக்கப்பட்டது உரோமாபுரிதானென்றும், உரோமாபுரியில் ஆளும் பாப்புக்களென்றும் எழுதி வைத்திருந்ததாகில், அப்போது அதைச் சத்தியமாக ஒத்துக்கொள்வது நியாயமாமே.

ஆகிலும் அர்ச். அருளப்பர் சொன்ன வேசை சத்திய வேத உரோமாபுரிதானென்றும், அதிலே ஆளாநிற்கும் அர்ச். பாப்புக்களென்றும் பூருவத்திலுள்ள வேத பாரகரில் ஒருவரிருவராயினும் எழுதினதாகத் தரங்கம்பாடியார் காட்டக்கடவார்கள். அப்படியே காட்டக் கூடாதாகில், இதுவே பூருவ திருச்சபை படிப்பித்த வேத சத்தியமென்று எப்படி வெட்கமில்லாமல் எழுதக் கூசாதே போனார்கள். நாமோ வெனில், சொன்ன அந்திக் கிறீஸ்து எருச

லேமென்கிற பட்டணத்தில் ஆளுவானென்றது சரியே யென்றாலும், பல வேதபாரகர் இப்படி எழுதினதொழிய அர்ச். அருளப்பர் கண்ட காட்சி ஆகமத்தின் 11-ம் அதிகாரம் 8-ம் வசனத்தில் சொன்ன அந்திக் கிறீஸ்து கொன்ற வேதசாட்சிகளுடைய சரீரங்கள் அவர்களுடைய கர்த்தர் சிலுவையில் அறையுண்ட பட்டணத்தின் தெருக்களிலே கிடக்கும் என்றதைப்பற்றி அந்திக்கிறீஸ்து ஆளாநிற்கும் பட்டணமே எருசலேம் என்றோம்.

ஆகிலும், இதுவும் வெளிப் பொருளாக வேதத்தில் எழுதப்படாததினாலும், இதற்குத் திருச்சபை விவரப் படிப்பனை இல்லாததினாலும் இது நியாயத்திற்கு ஒத்திருக்குமென்பதொழிய இதுவே வேத சத்தியமென்று உரோமான் திருச்சபையாரில் ஒருவரும் படிப்பித்ததல்ல. ஆகையால் இதுவே நம்முடைய திருச்சபை வேதப் படிப்பனையென்று தரங்கம்பாடியார் இதிலே எழுதின பொய் யென்பதற்குச் சந்தேகமில்லை. அப்படியே சொன்ன அந்திக்கிறீஸ்து யூதர்வகையில் பிறப்பானென்றும், யூதர்களுக்குள்ளே தானென்றவனுடைய கோத்திரத்தில் பிறப்பானென்றும் வேத சத்தியமாகச் சொன்னோமென்றது பொய் தானே. வேதத்தில் ஊன்றிய நியாயமாக மாத்திரம் அது தோன்றுமென்று நாமே படிப்பிக்கிறோம்.

கடைசியாகப் பதிதர் இதிலே யோசிக்கும் வகையாவது: அர்ச். சின்னப்பர் தெசலோனிய பட்டணத்தாருக்கு எழுதின 2-ம் நிருபம் 2-ம் அதிகாரம் 4-ம் வசனத்தில் சொன்ன அந்திக்கிறீஸ்து சர்வேசுரனுடைய கோயிலிலே வீற்றிருந்து ஆளுவானென்றார். ஆனால் சர்வேசுரனுடைய மெய்யான ஞானக் கோயில் ஏதெனில், சேசுநாதர் ஸ்தாபித்த திருச்சபைதானல்லோ. ஆகையால் சேசுநாதர் திருச்சபையில் வீற்றிருந்து ஆளாநிற்கும் பாப்புகளே அந்திக்கிறீஸ்து வென்று சொல்லக் கடவோமென்று லுத்தேருக்குப் பிரதான சிஷனாகிய மேலந்தோன் முதற்கொண்டு இந்நாட் பதிதர் யோசித்து எழுதிவைத்தார்கள். இதெல்லாம்

பொய்யாயினும் பகைவர் எறிந்த ஆயுதத்தைத் திருப்பி, அவர்களை நாமே குத்தி ஊடுருவிச் சங்கரிக்கும்படிக்குச் சொன்னதெல்லாம் மெய்யென்று ஒத்துக்கொண்டு நாமே சொல்லுந் தன்மையாவது: பதிதர் சொன்னபடிச் சேசுநாதர் ஸ்தாபித்த மெய்யான திருச்சபை என்கிற கோயிலில் ஒரு தலைவனாக அந்திக்கிறீஸ்து ஆளாநிற்பானல்லோ?

ஆனால் சொன்ன அந்திக்கிறீஸ்து அர்ச். பாப்புக்களொழிய வேறில்லையென்று பதிதர்தாமே சொன்னார்கள். ஆகையால், அர்ச். பாப்புக்கள் தலைவராய் ஆளாநிற்குந் திருச்சபை சேசுநாதர் ஸ்தாபித்த மெய்யான திருச்சபை என்று சொல்லவுங் கடவார்கள். ஆகிலும் பதிதருஞ் சொன்னபடிச் சேசுநாதர் திருச்சபை ஒன்றாய் நிற்குமொழிய வேறுபடப் பலவாகாதென்பது நிச்சயமாமே. ஆகையால் அர்ச். பாப்புக்கள் ஆளும் உரோமான் திருச்சபையை விட்டுப் பிரிந்த லுத்தோரானிகளும், கல்வினியானிகளும், மற்ற வகைப் பதிதரெல்லாருஞ் சேசுநாதர் ஸ்தாபித்த மெய்யான திருச்சபைக்குப் புறத்திப்பட்டவர்களென்று சொல்லவேண்டியதல்லோ. ஆனால் மெய்யான திருச்சபையிலொழியப் புறத்தியிலே கரை ஏற்றம் இல்லையே. ஆகையால் லுத்தோரானிகள் முதற்கொண்டு பதிதர்க்கெல்லாங் கரை ஏற்றம் இல்லை யென்று தாங்களே சொல்லக்கடவார்கள். இதெல்லாம் இப்படியாகையில், பதிதர் சொன்ன நியாயத்தின்படியே தங்களுக்கு நரகமே கதியொழிய வேறில்லை. வேறே கதியை நம்பவேண்டுமாகில், சொன்னதை மறுத்துவிடவும் வேண்டுமென்பது நிச்சயந்தானே.

அர்ச். பாப்புத்தானே அந்திக்கிறீஸ்துவென்று பதிதர் சொன்ன அபத்தத்தைக்கொண்டு இதெல்லாஞ் சொன்னோமல்லோ. ஆகிலும் உள்ளபடிச் சொல்லவேண்டுமானால், வேத சத்தியங்களை மறுத்தாலொழிய வாத்தகும் அந்திக்கிறீஸ்து அர்ச். பாப்புக்களென்று சொல்லப்படாதென்று எளிதாய் ஒப்பிப்போம். தரங்கம்பாடியார் குறித்த தெசலோனியாருக்கு 2-ம் நிருபம் 2-ம் அதிகாரம் 4-ம் வசனத்

திலே அர்ச். சின்னப்பர் அந்திக்கிறீஸ்துவைக் குறித்து எழுதினதாவது: தெய்வம் என்னப்படுவதும், அல்லது வணங்கப்படுவதுமாகிய எல்லாத்தையும் அவன் பகைத்து, அதிலேயுந் தன்னை உயர்த்தினதினால், தன்னைத் தேவனாகக் காட்டித் தேவாலயத்தில் இருந்து கொள்வானென்றார். அப்படியே தீர்க்கதரிசியாகிற தனியேலென்பவர் 11-ம் அதிகாரம் 37-ம் வசனத்தில் அந்திக்கிறீஸ்துவைக் குறித்துச் சொன்னதாவது: அவனே தன் பிதாக்கள் வணங்கின தேவனையும் எண்ணான். மற்றத் தேவர்களையுங் கைக்கொள்ளான். எல்லாத்தையும் பகைத்து எழுந்து எதிர்ப்பானென்றார்.

அர்ச். அருளப்பர் முதல் நிருபம் 2-ம் அதிகாரம் 22-ம் வசனத்தில் சொன்னதாவது: பொய்யன் ஆரோனில், சேசுவைக் கிறீஸ்துவல்ல என்பவனொழிய வேறல்ல. இவனே பிதாவையும், சுதனையும் மறுத்தவனாய் அவர்கள் இல்லையென்னும் அந்திக்கிறீஸ்துத்தானே என்றார். ஆகையால், அந்திக்கிறீஸ்துவின் இயல்பேதெனில், ஒன்றாயிருக்கும் மெய்யான தேவனையும், பலவாயிருக்கும் பொய்யான தேவர்களையும் வணங்காமல் பகைப்பதுமன்றியே, தன்னையொழிய வேறொரு தேவனும், கிறீஸ்துவும் இல்லையென்று, தான் ஒருவன் எவராலும் வணங்கப்படும்படிக்கு, அவனே தேவாலயத்திலே தன் கொலு வைத்து வீற்றிருந்து ஆளாநிற்பது, சொன்ன அந்திக்கிறீஸ்துவின் இயல்பாமென்பது வேத சத்தியமாமே. இதிப்படியாகையில், அர்ச். பாப்புக்கள் இந்நாள்வரைக்குங் கிறீஸ்துவை மறுக்கவுமில்லை, தங்களைக் கிறீஸ்துவென்று சொல்லவுமில்லை. அப்படியே அவர்கள் பொய்யான தேவர்களை மறுத்துப் பகைப்பதொழியப் பிதாச் சுதன் இஸ்பிரீத்துசாந்து என்னும் மூவாட்களாகிய ஒரு மெய்யான சர்வேசுரனை மறுக்கவுமில்லை, தங்களை வணங்கத் தகுஞ் சர்வேசுரன் என்னவுமில்லை. திரித்துவ ஏக சர்வேசுரனையும், நம்மை இரட்சிக்க மனிதனாகிய சேசுகிறீஸ்துவையுந் தாங்களே உத்தம முறையால் அர்ச்சிப்பதொழிய, உலகம் எங்கும் இப்படிப்பட்ட தே

வாராதனை வழங்கும்படிக்கு எந்நேரமும் பிரயாசைப் படுவார்களென்று கண்டிருக்கிறோம்.

ஆதலால் வேத சத்தியங்களை மறுத்தாலொழிய அர்ச். பாப்புக்களை வேதத்தில் சொல்லப்பட்ட அந்திக்கிறீஸ்துவென்று சொல்லவுங் கருதவுங் கூடாதல்லோ. ஆகையால் எய்த அம்பு ஊடுருவ முனை கூரத் தீட்டினாற்போல இதிலே சொன்னதெல்லாத்தையும் மூவிலேவேலாக முவ்வசனங்களில் அடக்கித் தருவோம், அதாவது: அந்திக்கிறீஸ்துவானவன் தன்னை அல்லாதே வேறே கிறீஸ்துவும், தேவனும் இல்லையென்பான். இதுவே வேத சத்தியம். அர்ச். பாப்புக்களோவெனில், மெய்யான கிறீஸ்துவும், தேவனும் உண்டென்று வணங்குவதல்லாதே தங்களைக் கிறீஸ்துவென்றும், தேவனென்றும ஒருக்காலுஞ் சொன்னதில்லை. இதுவே கண்ணாற்கண்ட சத்தியம். ஆகையால் அர்ச். பாப்புக்கள் அந்திக்கிறீஸ்து அல்லவென்று சொல்லக்கடவோம். இதுவே பகல் ஒளியொப்பத் தெளிந்து மறுக்கப்படாத சத்தியமாமே.

24-ம் பேதகமறுத்தல்.

இதிலே "சர்வேசுரன் திருவுளம் பற்றின பூர்வத்துபதேச மெங்களுக்குப் போதிவிக்கிறதாவது: இந்த லோகத்தை விட்டுப் பிரிந்து போகிறவர்களுக்கு இரண்டு வழி யல்லாமல் இதிலுமதிலு மதிகமா யிருக்கிறதில்லை. யிதுக ளேதென்றால் முதலாவது மோட்சத்திற்குப் போகிற வழி இது மரணத்தை விட்டுக் கடந்து நித்திய சீவனத்திற்குப் போய் உள்ப்படுகிறவர்களுக் குண்டாயிருக்கும். இரண்டாவது நரகத்திற்குப் போகிற வழி இது பொல்லாதவர்களுக்கும் விசுவாசமில்லாதவர்களுக்கு முண்டாயிருக்கிறது" என்று தரங்கம்பாடியார் சொல்லி யிதற்குப் பல

உதாரணங்களையுங் குறித்த பிற்பாடு சொல்லுந் தன்மையாவது: "இதுக்கெதுகையாக மனுஷருடைய புது உபதேசம் போதிவிக்கிறதாவது: மரணத்தை யடைந்து பிரிந்து போன வாற்றுமங்களுக்கு அனேகம் ஸ்தலங்கள் குறித்திருக்கிறதென்று போதிவிக்கிறது. இதுகளேதென்றால் மோட்சம், நரகம், பழையதேஸ்தமேந்திலே யிருந்த அர்ச். பிதாப் பிதாக்களின் ஆத்துமங்களுடைய வறை, ஞானஸ்நானம் பெறுமற் செத்துப்போன சிறு பிள்ளைகளினுடைய வாத்துமங்களிருக்கிற விருட்டறை, உத்தரிக்கிற ஸ்தம், பின்னை யுத்தரிக்கிற ஸ்தலமண்டையிலே யதிலுஞ் சத்தேசலக்கறணையுமாய் நெளிதமுமாயிருக்கிற வேறொரு ஸ்தலமென்று சொல்லுவது" இதெல்லாந் தரங்கம்பாடியார் எழுதி இதை ஒப்பிக்கப் பெல்லார்மீனென்பவர் உத்தரிக்கிற ஸ்தலத்தின் இரண்டாம் வகுப்பு 7-ம் அதிகாரத்தில் சொன்னதை வாசிக்கச் சொன்ஞர்கள்?

இற்றைவரைக்கும் எழுதினதைப் பார்க்கில் இதிலே தரங்கம்பாடியார் தேவமாதா முதற்கொண்டு எல்லா மோட்சவாசிகளைப் பகைத்து, நாமே அவர்களை வணங்கலாகாதென்றும், வேண்டிக்கொள்ள லாகாதென்றும், அவர்களே செவிடராய் எங்கள் மன்றாட்டைக் கேளார்களென்றும், அவர்களே குருடராய் எங்கள் இடையூறுகளைக் காணார்களென்றுந் தூஷித்து இழிவுறக் கக்கினதுந் தவிரப் பூவுலகிலுள்ள நல்லதெல்லாம் நிந்தித்துப் பகைத்தார்களல்லோ? திருச்சபைக்கு இங்கே தலையும் இல்லை, பூசையும் இல்லையென்றும், திருச்சபையிட்ட கற்பனை கேட்கலாகாதென்றும், ஒருசந்தி தவமில்லாமல் வெள்ளி, சனி தபசு நாள் வேறுபடக் காக்கலாகாதென்றும், பாவமொழியப் புண்ணியமில்லையென்றும், செய்த தருமவினைகளால் பலனொன்றில்லையென்றும், தேவத்திரவிய அனுமானங்கள் இஷ்டப்பிரசாதத்தைத் தர அறியாதென்றும், சேசுநாதர் ஸ்தானத்தில் பிரதான குருவாய் நிற்கும் அர்ச். பாப்பு முதற்கொண்டு மற்றக் குருக்களையும், சந்நியாசிகளையும் இகழ்ச்சியாகச் சொல்லி, நீசாக நிந்தித்து விரத்தத்து

வம் ஆகாதென்றும், இத்தொகைப்பட்ட அபத்தங்களைச் சொல்லக் கூசாதே போனார்கள்.

இப்படியே சத்திய வேதம் இருள, இராச நீதி ஒழிய, தவத்தின் மாட்சி மடங்க, தரும ஒழுக்கம் வழுவ, தரங்கம்பாடியார் வானுலகத்தையும் பூவுலகத்தையும் பகைத்த பின்பு, பாதாளத்திலும் நுழைந்து போய் அங்கே பசாசு பகைக்குத் தப்பின ஆத்துமங்கள் இவர்கள் பகைக்குத் தப்பாதபடிக்கு இந்தக் கடைசி பேதகத்திலே தரங்கம்பாடியார் அவைகளைப் பகைக்கத் துணிந்தார்கள். அதெப்படியென்றால், செத்த தாய் தகப்பன் முதலான பேர்களுக்கு உதவியாக நாமே திவசஞ் செய்யாதபடிக்கு அவர்கள் செத்த பின்பு நின்ற பாவக்கடனை உயிர்நொந்து உத்தரிக்கும் ஸ்தலம் ஒன்றில்லையென்று இதிலே சொல்ல வந்தார்கள். தீயோர்க்கு நரகமும், நல்லோர்க்கு மோட்சமுமொழியச் செத்தவர்கள் சேரும் வேறிடம் இல்லையென்று சொல்லி, அதற்குப் பல வேத உதாரணங்களைக் குறித்துக் காட்டினார்கள்; ஆகிலும் நமக்குக் கடைசிக் கதியாக நரகம், மோட்சமொழிய வேறிடம் இல்லையென்பது உள்ளதுதானே. அப்படியே சேசுநாதர் கடைசி நடுத்தீர்வை வர்த்தமானத்தைச் சொல்லிக் காட்டின பின்பு, அர்ச். மத்தேயு சுவிசேஷத்தின் 25-ம் அதி. 46-ம் வசனத்தில் பாவிகள் நித்திய ஆக்கினை அநுபவிக்க நரகத்திலே விழுந்து நல்லோரெல்லாரும் நித்திய சீவியத்தோடே வாழ மோட்சத்தில் சேருவார்களென்றார்.

ஆகையால் அந்தப் பொதுத் தீர்வை முடிந்த பின்னர் உத்தரிக்கிற ஸ்தலம் இல்லாதே போமென்பது உள்ளது தானே. ஆகிலும், அந்தத் தீர்வை முடியாமுன்னே நிற்குங் கதியாயிராமல் தங்கிக் கடனைச் செலுத்தும் இடமாகவும், தேவ சன்னதிக்கொவ்வாத வழக்குத் தீர்த்து ஒப்புரவாக்கும் இடமாகவும், சாவான பாவமின்றிச் செத்தவர்களில் பலரோ அர்ச். சின்னப்பர் கொரிந்தியாருக்கு முதல் நிருபத்தின் 3-ம் அதி. 15-ம் வசனத்தில் சொன்னபடியே

தீயில் நடந்தவர்களாக அங்கே சிறிது நாளிருந்து அற்ப பாவத்தின் அழுக்குத் தீர்ந்து நின்ற கடனை உத்தரிக்கும் படிக்கு வேதனை ஸ்தலம் ஒன்றில்லையென்று வேதத்தில் எழுதப்பட்டதென்பது பொய்தானே. வேத விளக்கத்தின் 11-ம் அதிகாரத்தில் விரிவாக நாம் எழுதிவைத்த நியாயங் களை ஆராய்ந்து பார்க்கில் உத்தரிக்கிற ஸ்தலம் உண் டென்று விசுவசிக்கத்தகும் வேத சத்தியமாகத் தோன்று மல்லோ?

மீளவும் மோட்சவாசிகள் வாழும் இடமும், முன்னே பிதாக்களிருந்த இடமும், இப்போது ஞானஸ்நானமின் றிச் சாகுங் குழந்தைகள் கிடக்கும் இடமும், சபிக்கப் பட்ட பாவிகள் என்றென்றைக்கும் வேகாநிற்கும் இட மும், பாவக் கடனை முழுதுந் தீராமல் இஷ்டப்பிரசாதத் தோடே செத்தவர்கள் அந்தக் கடனை உத்தரிக்கும் இடமு மென்று இவையெல்லாமன்றியே மற்றொரிடம் உண்டெ ன்று நாமே படிப்பித்ததாகத் தரங்கம்பாடியார் இதிலே சொல்லியதற்குப் பெல்லார்மீனென்பவரை உத்தரிக்கிற ஸ்தலத்து இரண்டாம் வகுப்பு 7-ம் அதிகாரத்தில் பார்க்கச் சொன்னார்கள். ஆகிலும் அதிலே அவர் சொன்னதேதெ னில், சிலபேர்கள் வேறிடம் உண்டென்று எழுதினது சரியே. ஆனால் அவர்கள் சொன்ன இடவகை இருக்குமா கில், அதுவே உத்தரிக்கிற ஸ்தலத்தின் சேர்க்கையாகு மொழிய வேறிடமென்று சொல்லக் கூடாதென்றார். இப் படியாகையில், வேத சத்தியமாக அந்த வேறிடம் உண் டென்று பெல்லார்மீன் படிப்பித்தாரென்று தரங்கம்பாடி யார் எழுதினது பகைவெறியோடே கண்ணை மூடிப் பித் தராய்ச் சொன்ன அக்கிரமத் தப்பறை இதுவேயல்லோ.

பேதகமறுத்தலின்

கடைப் புணர்ச்சி.

தஞ் சபைக்கும் உரோமான் சபைக்கும் பேதகம் இன்னதென்று காட்டத் தரங்கம்பாடியார் எழுதித் தந்ததை ஆராய்ந்து அதிலே சொல்லப்பட்டப் பொய்களை மறுத்துக் கொண்டு வந்தது சரிதானல்லோ? பொய்யை மறுத்த பின்பு, நாமே உண்மையை ஸ்தாபிக்க, அவர்களுக்கும் நமக்குமுள்ள மெய்யான வேற்றுமைகளை இங்கே சொல்லிக் காட்டுவது நியாயமாமே. ஆகிலும் இது குறித்த அளவின்மேலும் விரிந்ததென்றும், புத்தி மயங்கி அவர்களோடே சேர்ந்த சிலரோ சந்தேகமறத் தெளிந்து, விட்ட சத்திய வேதத்தை மீண்டுங் கைக்கொள்ளவும், மற்ற யாவரும் இனி அவர்களோடே சேராமல் கெடாதபடிக்கும், இங்கே எவர்க்குந் தானே தோன்றும் நியாயமும், வேற்றுமையும் போதுமென்றிருக்கிறோம். அதேதெனில், சேசுநாதர் சத்திய சுரூபியாகக் கொள்ள அவர் தந்த வேதத்திற்கும், அவர் ஸ்தாபித்த திருச்சபைக்குங் குன்றாத அடையாளம் ஏதெனில், பொய்க் கலப்பில்லாத சத்தியந்தானே.

ஆதித்தாய் தகப்பனை ஏய்க்கப் பொய்யைச் சொல்லி நம்மைக் கெடுத்தப் பசாசோவெனில், இன்னம் பொய்யைக்கொண்டு உலகெல்லாங் கெடுக்கப் பிரயாசைப் படுமென்றதனால், பசாசு ஏவலினால் மனுஷர் உண்டுபண்ணின மதங்களில் பொய்க் கலப்பில்லாதது ஒன்றில்லை. இதிப்படியாகையில், லுசித்தான் பாஷையால் தரங்கம்பாடியார் பதின்மூன்று ஏடாக அச்சுப்பதித்த இந்தப் பேதகச் சுவடி ஒன்றிலே எழுபத்தெட்டுப் பொய் உண்டென்று நாமே இங்கே மறுக்கப்படாத நியாயங்களால் ஒப்பித்தோமல்லோ. இதைக்கண்டு தரங்கம்பாடியார் சபை சொல்லிக் காட்டும் வழி சேசுநாதர் தந்த சத்தியவேதமோ, பசாசினால் வந்த பொய் மதமோவென்றும், அவர்கள் சபை சேசுநா

தர் திருச்சபையோ, ஆர் சபையோவென்றும் அவனவன் தானே கண்டுகொள்ளக்கடவான்.

தரங்கம்பாடியார் இருளை நாடித் தாங்கள் அச்சுப் பதித்த புஸ்தகங்கள் முதலாய் எங்கள் கையிலே சோரத்ப டிக்கு மிகவுஞ் அஞ்சிப் பத்திரஞ் சொல்லிக்கொண்டு வருகிறார்கள். நாமோவெனில், பகல் ஒளிக்கு அஞ்சாததினால் வலிய இந்தப் பேதகமறுத்தல் அவர்களுக்கு அனுப்பினோம். அவர்களும் இதனை நன்றாய் ஆராய்ந்து தங்கள் மேலே சுமத்தின 78 பொய்களை மறுத்துப் பொய் அல்லவென்று காட்டக்கடவார்கள். தங்களைச் சேர்ந்த பாமரரோடே சாமர்த்தியம் பேசி, நாம் இங்கே எழுதினதெல்லாந் தப்பறையென்றும், உரோமாபுரிச் சந்நியாசிகள் பொய் சொல்ல அஞ்சார்களென்றும், வாயால் சொல்லக் கூசாதிருப்பார்களென்று நன்றாய் அறிந்திருக்கிறோம். ஆனால் இருட்டறையுள் இருந்து இந்தத் துணிவோடு இத்தனைச் சொன்னதின் பிறகு, அதற்குப் பாதியாயினும் வெளியாய் எழுதி நமக்கு அனுப்பினாலே சாமர்த்தியம். அதன்பிறகு நாம் எல்லாருக்குமொக்க மறு உத்தரம் எழுதாதிருந்தோமாகில், அவர்கள் சொன்னது மெய்யாக உட்கொள்ளக் கடவீர்கள். அப்படியே அவர்களும் நாம் இங்கே எழுதினதை மறுத்து யாவர்க்கும் ஒப்பிப்பது ஒன்றே. தாங்கள் பதின்மூவேட்டிலே எழுபத்தெட்டுப் பொய் சொன்னது மெய்யென்று ஒத்துக்கொள்வது ஒன்றே. இவ்விரண்டில் ஒன்று தப்பாது.

ஆகையால் இதற்கு மறுமொழி ஒன்றும் எழுதாமல், வாயினால் அங்கே என்ன சொன்னாலும் மனதிலே வெட்கி, நாம் சுமத்தின பொய்யெல்லாம் உள்ளதுதானென்று ஒத்துக்கொண்டார்களென்பது நிச்சயமாமே. இதிப்படியாகக் கொள்ள வேத காரியத்திலே பதின்மூவேடு எழுதி முடியா முன்னே சகட்டிலே எடொன்றுக்கு ஆறு பொய்யாக எழுபத்தெட்டுப் பொய்களை எழுதக் கூசாதவர்களை இனிமேல் நம்பி அவர்கள் உங்களுக்குச் சத்தியத்தைக் காட்ட

வும், மோட்சத்திற்கு உங்களைக் கூட்டிக்கொண்டு போகவும் வல்லவனென்று நினைப்பீர்களோ என்ன? கடைசியிலே லுத்தேர் சொன்னதைக் கொண்டு லுத்தேர் சீஷராகிய தரங்கம்பாடியாருக்குத் தீர்வை இடும்படிக்குச் சந்நியாசிகள் கொடுக்கும் வார்த்தைப்பாடுகளின் விஷயத்தில் லுத்தேர் உண்டாக்கின புத்தகத்தில் எழுதினதாவது: ஒருவன் ஒன்றிலே மாத்திரம் ஒரு பொய்ச் சொன்னானே சந்தேகமற அவனிடத்தில் சர்வேசுரன் இல்லை, இதுவுந் தவிரச் சொன்ன மற்றதிலேயும் அவனை நம்பத்தேவையில்லை என்றான். இந்த நியாயத்தைச் சொன்ன லுத்தேர் தன் சீஷர்கள் இப்போது ஒரு சின்ன சுவடியில் எழுபத்தெட்டுப் பொய் சொன்னதை அறிந்தால் என்ன செய்வானென்று எழுதவுந் தேவையில்லை.

பேதகமறுத்தல் முற்றிற்று.

ஒத்தோரினத்தியல்பு.

—:(*):—

பதிதர் புத்தகத் தகுதி.

1. — புறநிலைக்கர்ப்பியனார் கூறுந் தமிழ்ச் சாத்தனுக்கு எல்லா நன்மையில் சிறப்பு உண்டாகவும். கேசரியன் கையில் தான் வரவிட்ட ஓலை வந்து, மேலிட்ட பொறியை நீக்கி, நான் அதை வாசியாமுன்னே கேசரியன் சொல்லத்தான் முன்பட்ட சஞ்சலக் கவலை அறிந்தேன். அவன் சொன்ன செய்தியை மீண்டு மீண்டு வினவிக் கேட்க, நானும் நின்ற யாவருந் தான் முன் வருந்தினதற்கு மும்மடங்காக மகிழ்ந்து நகைத்தோம். தான் வரவிட்ட கேசரியன் சொன்னதேதெனில், ஐந்துநாள்முன் தான் புலவர் பலருஞ் சூழ்ந்து, நறும்பூஞ் சண்பகச் சோலைநிழலில் நின்று மூத்தோர் உரைத்த பயன்களை நெடுநாள் பிடித்த முறையோடு ஆராய்ந்திருக்கக் கீழ்த்திசையினின்று ஒரு கிழமகன் வந்து மேற்கதி தருந் தமிழ்ப்பயன் இதென்று ஒரு புத்தகத்தைத் தந்தானும். அதன் புறத்து அரிய வடிவோடு எழுதிய பொற்பொறிச் சிறப்பும், அச்சுப்பதித்த அக்கர ஒழுங்கும், கவிகவியாய் அதை வகுத்த தன்மையுந் தானே கண்டு புறத்துக் கோலமிருக்க உட்பயன் எவ்வளவாகும் என்று எண்ணிப் பூரித்த மகிழ்ச்சி மனம் உட்கொள்ளாது அங்கே பூமலர் கொய்து பிரிந்த தோழனை அழைத்து, இதோ வான்மேற்றிசையினின்று வந்த தேவ தமிழ்ப்பயன் இதுவெனக் களித்துக் கூறி வாசிக்கத் தொடங்கினான்.

ஒரு வரி முடியா முன்னே பார்த்தக் கண்ணும் வேக, உச்சரித்த நாவுந் துவர்ப்ப, கேட்ட காதுங் கைப்ப மிகவும் வருந்துதற்காரணமாகத் தொடர் எழுத்து இயைந்த வகையும், எழுத்து வழுவி எடுத்த நீசச் சொல்லும், கீழி

ழிந்து இடறிய சொல்லைக் கூட்டின வசனமும் இவையெல்லாந் தளர்ந்து, மயங்கிச் செந்தமிழ் கெடுக்கவும், கேட்பார் காதிரண்டையும் பிளந்துரித்துக் கொடுந் தீயூட்டி வருத்தவும், கொடியர் நினைத்த மற்றோர் பாஷை அதென்றீ, பொங்கிய வெகுளியோடு அதைத் தான் எறிந்து வந்ததைக் கொணர்ந்த சிறிய சிந்தையானைச் சினந்து அடித்து ஐயெனத் துரத்தி, மிகவும் வருந்த நின்றதாம்.

தீம்புனல் பொய்கையில் மலர்ந்த குளுமதுத் தாமரைப் பள்ளியில் தூங்கின அன்னம், தீயெரி வனத்தில் சேர்ந்து வருந்தினாற்போலத் தேன் பொழி குளுந் தமிழ் இனிதில் ஆய்ந்த தானுங் கீழ்த்திசைக் குடியாம், கீழ்மகன் தந்த கீழ்மொழியச் சுடுந் தமிழ் கண்ட அளவின் மனஞ் சுட வருந்தினபடியையும், இனிய தேனை உண்பார் கைக்கும் வேம்பை உட்கொண்டால் வருந்தி•அதனைக் கக்கினாற் போலத் தானும் அக்கொடுஞ் சொற்றமிழ் எறிந்த சினத்தையும் நினைத்த பொழுதெலாம் நாங்களே சிரிப்படக்க மாட்டாது அன்று கூட நின்றோம் இல்லையென்று ஆசையின் மாத்திரம் வருந்தா நிற்போம்.

புறக்கோலமுள்ளழிவு.

2. — ஆகினுந் தான் புறக்கோலத்து அளவைக் கொண்டு உட்பயனை மதித்து மயங்கினதென்ன? உள் நிறை இல்லாமாதரல்லோ வாசனை கமழப் பூசி, அணிகலன் சுமக்கத் தாங்கி, மதுமலர் நெருங்கச் சூடி, கற்புமடந்தையர் நாணத் தம்முடன் மினுக்கிப் பேணா நிற்பார். காஞ்சிரப் பழத்தின் புறத்து அழகு எண்ணி அதனை உண்பார் உண்டோ? தன் அழகின் மரப்பாவை ஒளிபெறத் தகம் மேல் பூசி அலங்கரிப்பார் உண்டொழிய, விரியொளித் தூய்மணிப் பாவை மேல் ஏதேனும் பூசுவார் உண்டோ? ஆயினும் பொற்பொறிப் பூசின கொடுமொழித் தமிழை வாசித்த தன்மையில் தான் மயங்கி நினைத்த பழுதளவாக வருந்தினதுஞ் சரிதானல்லோ.

லுத்தேரானிகளார்.

3. — இத்தன்மைத்துக் கேசரியன் சொன்ன காதையைக் கேட்டு மகிழ்ந்த பின்பு, தன் ஓலையை வாசித்து அதிலே முன் அவன் உரைத்தவை தானும் எழுதின தன் மேல் வைத்த வசனமாவது: அக்கொடு மொழித் தமிழ் எழுதின கொடியார் ஆரோவென்று விசாரித்த அளவில், தரங்கம்பாடியிலிருக்கும் லுத்தேரானிகளென்றார்கள். ஆயினும் லுத்தேரானிகள் யாவரென்றும், எப்பிறப்பவரோ வென்றும், அடியேனுக்கு அறிவிப்பத் திருவுளமிரங்கி எழுதக் கற்பித்தருளவுமென்று தான் எழுதினதல்லோ. அப்படியே லுத்தேர் உண்டுபண்ணின சமயத்தாராகிய லுத்தேரானிகள் எப்பிறப்பு இனத்தாரென்றும், எவ்வகை இயல்பாரென்றுந், தான் கேட்டபடிக்கு எழுதுவேனாயினும், உள்ளதை நானே சொன்னாலும், அவ்வினத்து இயல்பின் கொடுமையைக் கேட்டவர் நான் சொன்னதெல்லாம் பகையால் கண்ட கனவென்று உட்கொள்ளாரென்று அஞ்சி, நானாக ஒன்றுஞ் சொல்லாமல், பொய்யா நிறைமொழி வாயனாகிச் சத்திய வேதத்திலுள்ள நாலு சுவிசேஷங்களில் ஒன்றினை எழுதின அர்ச். அருளப்பர் அருளித் தந்ததை மாத்திரம் எழுதித் தருவோம்.

ஏழு காளம்.

4. — ஆகையால் சொன்ன அர்ச். அருளப்பர் கண்ட காட்சி ஆகமத்தின் ஞானமே திருவிளக்காகக் கொண்டு, முன் ஆயதைத் கண்டாற்போல, பின் ஆவதைக் கண்டு எழுதின பலவற்றுள்ளே வானோர் எழும் ஏழு காளங்களை ஊதின தன்மைத்து உலகமெங்கும் ஏழுவகைத் துரிதக் கேடுகள் தொடர்ந்த முறையால் வருவதென்று விரிவாய் எழுதித்தந்தார். அவற்றுள் முதல் நாற் காளங்கள் முழங்கிக் காட்டின தின்மையே அப்போஸ்தலர் நாள் துவக்கி உலகங் கெடவந்துதித்த பிரதான பதிதர் வகை நான்கு

மென்று லூத்தேரானிகள் முதலாய் ஒத்துக்கொள்வார்கள். அந்நால்வகைப் பதிதர் ஆமொனில், எபியோனித்தர், கினோஸ்திக்கர், சமோசத்தேனியரோடு அரியானிகள், பெலசியானிகள் என்று இந்நால்வகைப் பதிதர் முதல் நீற் காள முழக்கத்தால் காட்டப்பட்டார்கள். இதுவுமன்றியே ஆறுங் காளம் அந்திக்கிறீஸ்து கலாபத்தையும், ஏழாங் காளம் உலக முடிவையுங் காட்டினதென்று சந்தேகப்படுவார் இல்லை.

ஐந்தாங் காளம் இடியென முழங்கி உலகில் காட்டின கேடோவென்னில், முன் சொன்ன நால்வகைப் பதிதருக்குப் பின்னரும், அந்திக்கிறீஸ்துவுக்கு முன்னரும் இந்நாட்குரிய ஐந்தாம் ஆக்கினையாகவும், அந்திக்கிறீஸ்து என்னும் பெரும் பாவிக்குரிய வழி செய்பவராகவும், இதற்கு முன் இருநூறு வருஷமாக முளைத்த பதிதராகிய லூத்தேரானிகளால் வந்தொழியாத கேடென்று தான் அறியக்கடவான். அர்ச். அருளப்பர் உரைத்தவை தந்து, "நான் அதற்குரிய பயன் விரித்துரைக்கில், உச்சிப் பகலினுந் தெளிவாய் லூத்தேர் யாரென்றும், லூத்தேரானிகள் எப்பிறப்பு, எவ்வியல்பென்றுந் தானே வெளியாகும் ஆகையால் அற்புதக் காட்சியால் 9-ம் அதிகாரம் 5-ம் காள முழக்கத்தோடு கண்டதை அர்ச். அருளப்பர் எழுதித் தந்த தன்மையாவது.

வேத வாக்கியம்.

அகவல்.

5. — மீத்திசை நின்று கீழ்வீழ்ந்த வொளிமீன்
நீத்திசைவாயிற் றிறக்குங் கோல்வாங்கி
யத்திசைத் திறந்துளி யாதவன் முகமுத
லெத்திசை வெளியெலா மிருட்படப் புகையெழீஇ
யெழீஇயின புகையினின் றெண்ணறமுளைத்துக்
குழீஇயின பதங்கங் குழாங்கொடு மொய்ப்பன

மானிடர் முகத்தொடு மாதர்குழலொடுங்
கானிடைவளரரிக் கடையெயிற் றுருவுறீஇத்
தேளுடை நஞ்சிற் றீயனகணையொடு
வாளுடைமுனையின் வாய்ப்பன வாலுறீஇக்
கரும்பொற்சுரிகை கடியமார்பணிய
வரும்பொற்சுடிகை யணியொடுதோன்றிக்
காய்மாபகைமுதிர் கடும்படைமுகத்துப்
பாய்மாப்பரப்பென்ப் பகைத்துமிற்பன
போர்முகத்துயிர்கெடப் புகைந்தெதிர்திரிதருந்
தேர்முகத்தொலியொடு சிறகர்புடைப்பன
தேர்முகத்தொலியொடு சிறகர்புடைப்பன
வெப்படைசிதைத்தோன் வெந்திசையரச
ணிப்படைமிசையாங் கிறைவனென்றெழுமெனத்
தந்நுதலணியெனத் தற்பரன்குறியிலார்
துன்னுதலொழியச் சூழ்பசும்புன்முதற்
றீண்டாதெனப்பணி செய்ததிறையோன்
றுண்டாநீக்கித் தகுதியிதுவென.

அர்ச். அருளப்பர்.

காட்சி.

6. — வேதமாக அர்ச். அருளப்பர் கண்ட அரிய காட்சியைத் தாம்தாமே எழுதின தன்மை இதுவே. ஆகையால், வான்மேல் விளங்கின மீன் கீழ் விழுந்ததாகவும், விழுந்த மீன் நரகக் குழிவாய் திறக்குங் கோலை வாங்கி அதனைத் திறந்த அளவில் புகை எழுந்து இரவியும் ஆகாயமும் இருட்பட மண்டினதாகவும், மண்டின புகையில் நின்று எண்ணிறந்த குழாங்கொடு விட்டிற் பறவை மொய்த்ததாகவும், விட்டிலாக மொய்த்த பறவை அதிசயத்துடனே வடிவு மாறி ஆண் முகத்தையும், பெண் கூந்தலையும், கொடிய சிங்கப்பல்லையும், அம்பு வாள் முனையைப்போலக் கூர்ந்த நச்சுத் தேட்கொடுக்கு வாலையுமுடைய உருக்கொடு தோன்றித் தலைமேல் பொன் முடி புனைந்து, மார்பில் இருப்புக்

கவசம் அணிந்து, வெம்போர் யுத்தத்துக்கு ஆயத்தப் பட்ட புரவிப் பரப்புப்போலப் பகையில் பொங்கி நின்று, கொடும் போர்க்களத்தில் ஓடுந் தேர்ப்படை விடும் ஒலி யொப்ப முழக்கமெழ, இரு சிறகைப் புடைத்ததாகவும், இத்தொகை விட்டிற் படைமேல் அரசனாகச் சங் கரித்தோ னெனப்படும் நரக அரசன் நின்றதாகவும், ஆண்டவர் குறி யை நுதலணியாக இல்லாதாரையன்றிப் பசும் புல் முத லாய் ஒன்றும் அவ்விட்டிற் படைகள் தீண்டாததற்கே பரம நீதிக் கடவுள் கற்பித்ததாகவும், அர்ச். அருளப்பர் அன்று கண்டெழுதின அதிசயக் காட்சி வெளியாம்படிக்கு நான் அதனை விரித்துச் சொல்லத்தகும் பயன் தகுதியைக் கேட்கக்கடவான்.

விழுந்த மீன்.

7. — மீத்திசை நின்று கீழ் வீழ்ந்த ஒளி மீன் என் பது, ஆசையென்னும் மாசுள்ள பூவுலகின்மேல் எழுந்து வானத்திலிலங்கிய மீனைப்போல ஒளி பெற்றவனாய் இட றிக் கீழே இழிவுற விழுந்தவன் லுத்தேர் தானல்லோ. இவ னே வாலிபத்து ஆசைப் பகையை வென்று துறவறம் பற்றி, வால சந்நியாசியுமாய்க் குருவுமாய் எவருக்கும் ஒரு விளக்காகப் பல நாள் விளங்கா நின்றான். எல்லாவற்றையுந் துறந்து பூவுலகு அகன்றாற்போல உணர்வில் உயர்ந்து, ஞானவயத்தால் வான்மேல் நின்று தவ, நிறை, தானம், தயை, பொறை ஊக்கம் மற்ற அறமெல்லாம் இவனிடத்து ஒரு நற்கதிரெனத் தோன்றி, தான் ஒரு மீனென விளக் கின பின்பு, தவங் கெடப் போகமும், நிறையற வஞ்ச மும், தானமழிய உலோபமும், தயைவிடப் பகையும், பொறைபட ஆங்காரமும், ஊக்க மடியத்தீய ஆசையும் உளத்தில் புகவே, நெடுநாள் துறவோன் புது மணவாள னாகப் பிடித்த விரதமேன்மையில் கீழே விழுந்து தாழ்ந்த உணர்வினோடு அறத்தால் விளைந்த சுகத்திலும், மிருக வினத்திற்கும் பொதுவாகிய சிற்றின்பமே நல்லதென,

உண்ணவும், குடிக்கவும், காமபோகத்து அமிழ்ந்தவுஞ் செய்தவன் லுத்தேர்தானல்லோ? எளியனாய்ப் பிறந்து, தரித்திரனாய்த் திரிந்து, அவமானனாயிறந்து நம்மை ஆளித்த சேசுநாதனைப்பற்றிப் பொருளும், மணமும், மக்களும் வேண்டாதாக வெறுத்த பின்பு, பொருளையும், மணத்தையும், மக்களையும் வேண்டுவதாகப் பற்றிச் சேசுநாதனை வெறுத்தவனாய்க் கைவிட்டவன் லுத்தேர்தானல்லோ.

நரகத் திறவு கோல்.

8.— அப்படியே வான் வீட்டைத் திறக்கவும், அடைக்கவும் திறவுகோல் சேசுநாதர் கையில், அர்ச். இராயப்பரைத் தொட்டு மற்ற அர்ச்சியசிஷ்ட பாப்புக்கள் வாங்கியிருக்க, இவர்களுக்கு ஓயா வெளிப் பகை செய்ய முளைத்த லுத்தேர் நரகத்தின் திறவுகோல் வாங்கிக் கொண்டதாக அர்ச். அருளப்பர் சொல்ல, கீழ் விழுந்த ஒளிமீன் றீத் திசை வாயின் திறக்குங் கோல் வாங்கிற்றென்றார். கர்த்தர் தன் பிரதான அப்போஸ்தலனாகிய அர்ச். இராயப்பருக்கு மோட்சத்தின் திறவுகோலைத் தந்தபடியே பசாசுந் தன் பிரதான அப்போஸ்தலனாகிய லுத்தேருக்கு நரகத்தின் திறவு கோலைத் தந்தது நியாயந்தானே.

9. — மீளவும்.

அத்திசைத்திறந்துளி யாதவன் முகமுத
லெத்திசைவெளியெலா மிருட்படப் புகையெழீஇ.

என்பது: — வாங்கின திறவு கோலைக் கொண்டு லுத்தேர் நரகத்திசையின் வாயிலைத் திறந்தான். திறந்த அளவில் செஞ்சுடர் முகமும், ஆகாய வடிவும் இருண்டு மறைதற் காரணமாக நரகக் குழியினின்று அடர்ந்த புகையே மண்டி எழுந்ததாமே. அப்படித்தானல்லோ லுத்தேர் முளையா முன்னே சேசுநாதர் திருச்சபை வழங்கின உலகமெங்கும் ஞானத்திருளறத் தெளிந்து வேதத்தயர்வறத் தேறி எங்கும் ஒரு முகம், ஒரு நிலை, ஒரு நூலாக விபரீத

மின்றி, மயக்கமின்றி எல்லாப் பாஷைக்கு ஒரு பொருளாய், எல்லா வாய்க்கு ஒரு மொழியாய், எல்லா நெஞ்சத்து ஒரு சுடராய், எல்லா உயிர்க்கு ஒரு பலனாய் விளங்கினதன்றோ.

லுத்தேர் இடறி விழுந்து போதித்த புதுப் பொய் மதத்தாலே நரக வாயிலைத் திறந்தவுடனே இருட் புகை மண்டி, ஞானச் செஞ்சுடராகிய சேசுநாதரும், பரவின ஒளி ஆகாயமாகிய எழுதப்பட்ட வேதமும் புகைபட்டு இருண்டாற்போலத் திருச்சபை வேறுபட லுத்தேர் முதல் அவன் மதத்தார் எல்லாருங் கண் கெட்டுத் தடவின தன்மையால் ஒன்றிலும் நிலைகொள்ளாமல் இன்று சொன்னதை நாளை மறுத்து, தங்களோடு ஒவ்வாமல் விபரீதப்பட்டு, தங்கள் விசுவாசத்திலுந் தாங்களே ஐயங்கொண்டு, இருட்டு அறை'யூடரும் பொருளைத் தேடின தன்மையில் தடவித் தவறி நகைபட, இழிபடப் பிதற்றின அபத்தங்களை அறியாரில்லையே.

தேவப் பரிதியாகிய சேசுநாதர் மண்டின புகையால் இருட்படச் செய்ய வேண்டுமென்றாற் போலவல்லோ சேசுநாதரைச் சகல பாவிகளினும் பாவியென்றும், அவரை யொழியப் பாவி இல்லையென்றும், அவரைக் கள்ளனென்றும், கர்த்தத் துரோகியென்றும், தேவ தூஷணனென்றும், வேதத்தைக் கெடுத்தவனென்றும், அவரைப் பசாசென்றுந் தீயெரி நரகவாய்ப் புகையாக லுத்தேர் கக்கி, அர்ச். சின்னப்பர் கலாசியத்தாருக்கு எழுதின நிருபத்திற்குத் தான் செய்த வியாக்கியானத்திலேயும், ஞானஸ்நான முதற் பிரசங்கத்திலேயும் எழுதக் கூசாதேபோனான். வேதாகமங்களிலே லுத்தேர் மதத்தாலே மண்டின புகையோவெனில், கர்த்தர் தேவநற்கருணை முன் உளவாக்கின இடத்தில், இது என் சரீரம் என்ற வசனம் ஐயமொன்றின்றி முன் எவருக்குந் தெளிந்ததாயிருக்க, பதிதர்க்கு இப்போது மண்டி இருள் அடைந்ததாகி, இவ்வொரு வசனத்திற்கு இருநூறு விபரீத அர்த்தங்களைப் பதிதர் எழுதின

தாக ஒருவன் சேர்த்துக் காட்டினனல்லோ. இப்படித் தானும் மற்றத் தேவ வாக்கியங்களும் மாசடைந்து இவர்களுக்கு இருண்டதாமே.

விட்டிற்பறவை

10. — பின்னையும்.

எழீஇயினபுகையினின் றெண்ணறமுளைத்துக்
குழீஇயினபதங்கங் குழாங்கொடுமொய்ப்பன.

என்பது: — லுத்தேர் திறந்த நரகக் குழியினின்று எழுந்து மண்டின இருட் புகைப் பிறப்பாய் எண்ணிறந்தடர்ந்து மொய்த்த பதங்கமாகிய விட்டிற்பறவைகளாவது ஏதெனில், சொன்ன லுத்தேர் தன் வாய்திறந்து போதித்த இருள் சேர் மதத்தில் உட்பட முளைத்த லுத்தேரானிகளென்பது நிச்சயந்தானே. இவர்கள் புகைப் பிறப்பென்னும் விட்டிற்பறவையென்று நானே சொன்னேனாகில், கேட்ட யாவரும் என்னை நகைப்பாரல்லோ? ஆயினும் வேதமாக அர்ச். அருளப்பர் எழுதினதொழிய விட்டிலினத்தியல்பு ஆராய்ந்து பார்க்கில், எவரும் லுத்தேரினத்தியல்பு அதுவேயென்று இவ்வுவமை உரியதென்பார். அதேதெனெனில், விட்டிற்பறவை உடலெலாம் முழு வயிறாகையில், செவ்வே நடக்கவும், மேலே பறக்கவுமாட்டாமல், சிறகை விரித்தெழுந்து ஓரோரிடத்துப் பறக்கத் தொடங்கினாலும், உடனே வயிற்றுப் பாரத்தால் கீழே விழுவதைக் காண்போம்.

அதன்படியே லுத்தேரானிகளும் பெரு வயிறொன்றினை உடையாரானாற்போலத் தம் வயிறொன்றைப் பேணி, வெள்ளி, சனி தவநாள் ஒன்றின்றி வேண்டுவதெல்லாம் நிறைய உண்ணவும், குடிக்கவும் ஆசைக்களவில் எல்லா வழியில் மோகிக்கவும், தவம், துறவொழுக்கமெல்லாம் ஆகாதென்று பகைத்து வேதகற்பனை வழியில் நடக்கவும், ஞானத்தெழுந்து பறக்கவுமாட்டார்கள். சிறகை விரித்து

ஓரிடத்தில் பறக்கத் துணிந்தாற்போல மேலெழுந்து உயர்ந்த ஞான முறைகளைச் சொல்ல இவர்களுந் துணிவது சரியே. ஆயினும் விட்டில்களைப்போல தம்வயிற்றாசை கீழ் இழுக்க உடனே விழவுஞ் செய்வார்கள். இப்படித் தங் கம்பாடியிலிருக்கும் லுத்தேரானிகள் அக்கியானம் ஒழியவும், சத்தியம் பரம்பவும் ஆசைகாட்டி, வெகு பொருள் நேர்ந்து, தரும நடக்கையென்றும், சத்திய வேதமென்றும், மோட்ச வழி நிலையென்றும், கலப்பில்லாத சுவிசேஷமென்றும், இத்தொகைப் பலவையும் அச்சுப் பதித்து வலிய எவர்க்குந் தருவது கண்டு பரம ஞானிகளாக உணர்விலெழுந்து மேலே பறப்பதென்போம்.

ஆனல் விட்டிற்பறவையாகையில் உடனே கீழே மூக்கழிய விழுவதுங் காண்போம். சொன்ன புஸ்தகங்களில்தானே தவம் ஒருசந்தி ஆகாதென்றும், நல்வினை ஒன்றையுஞ் செய்யக் கூடாதென்றும், தருமங்களால் விளைவதோர் பயன் இல்லை என்றும், துறவறம் பாவமே என்றும், கூடப் பிறந்தாளை மனைவியாக வைப்பது தரும மாதிரிகை என்றும் இத்தொகைப்பட்ட அக்கிரம நீச அபத்தங்கள் வேதமாகப் படிப்பிக்கக் கண்டு, பறக்கத் துணிந்த விட்டில் தன் வாய் சேற்றில் புதைபட விழுந்த தன்மை அதுவேயெனத் தகுமல்லோ.

அரசின்மை.

11. — மீளவுங் கூட்டங் கூட்டமாய்ச் சேரினும் ஓர் அரசு ஓர் தலையின்றி ஆசை காட்டும் வழியே திரிவது விட்டிற்கு இயல்பதாமே. அப்படியே ஞானகமத்தில் வேத மாகச் சலோமோன் எழுதினது அறிவோம். இத்தன்மைத்து லுத்தேரானிகள் சபையும் எவ்வளவாகப் பெருகிக் கூடினுந் தன் சபைக்கு ஓர் அரசு ஓர் தலை இருக்கலாகாதென்று மற்றொருவன் கற்பனை கேளாது அவனவன் உணர்ந்தபடி மறை முறைகளை அநுசரிப்பது நல்லதென்பார்கள். ஆகையால் சேசுநாதர் அர்ச். இராயப்பனைத்

தொட்டு மற்ற அர்ச். பாப்புக்களைத் திருச்சபைத் தலைவராகவைத்த நீதி முறையை மறுத்து, நாம் அத்தலைமையை வணங்கி, அர்ச். பாப்புக்களுக்குக் கீழ்ப்படிந்து ஒழுகுந் தன்மை எல்லா அக்கிரமங்களில் அக்கிரமமென்று சொல்லக் கூசார்கள். முப்பெயருள்ள வீடும், முவ்வீடுள்ள ஊரும், முவ்வூருள்ள நாடும், ஒரு தலையின்றி ஒழுங்கோடு நிற்ப அறியாதாகையில், . விட்டிற்பறவையும், லுத்தேர் இனத்தின் சபையுமொழிய, தலை ஒன்றின்றிக் கூட்டமாய் நிற்பதொன்றில்லை. ஆகையால் இவையெல்லாம் உணர்ந்து பார்க்கில், விட்டில் இனமும், லுத்தேர் இனமும் இயல்பொன்றுள்ளதாகி, அர்ச். அருளப்பர் புகைப் பிறப்பாக மொய்த்த விட்டில்களை என்றபோதே லுத்தேர் இனத்தைக் குறித்தாரென்பது நியாயமாமே.

ஆண்முகம்.

12. — ஆயினும் அர்ச். அருளப்பர் கண்ட விட்டில் காட்டின உருவும், தரித்த அணிகளும், கொண்ட இயல்பும் அதிசயமாகையில் அவையெல்லாம் விரிவாய் எழுதினார். அவரோ எழுதினபடிக்கு நாமுஞ் சொல்லித் தருவோம்.

ஆகையால்,

மானிடர்முகத்தொடு மாதர்குழலொடுங்
கானிடைவளரரிக் கடையெயிற்றுருவுறீஇத்
தேளுடைகஞ்சிற் றீயனகணையொடு
வாளுடைமுனையின் வாய்ப்பனவாலுறீஇ

என்பது. — உருவின் தோற்றம், ஆண் முக வடிவும், பெண் மயிர் அழகுங் காட்டி, கொடிய சிங்கப் பல்லுந் தேள் வாலொப்ப நஞ்சுள்ளதாகி, அம்பு வாள் முனையோடொப்பக் கூர்ந்த கொடுக்கு வாலுமுடையது அவ் விட்டில்களை என்றார். அதிலே அந்த அற்புத விட்டில்களுக்கு உணர்வாண்மையில் சிறந்த மனுமுக உருவும், விடாது நறு

நெய் பூசி, நீங்காது ஒளிமணி சேர்த்து, மங்கா மதுமலர் சூடி, ஒழுங்கிட வகுத்து, வனப்புற வளைத்து, புடைப் பெழச் சொருகி, சேர்த்த மடந்தையர் கூந்தலுமாவதே தென்று அறியவேண்டுமாகில், தரங்கம்பாடியிலிருக்கும் லுத்தேரானிகள் செய்யுந் தன்மையைப் பார்க்கவும். தான் இப்போது கண்ட அவர்கள் புத்தக வனப்புப் பார்க்கில், ஒழுங்குற அச்சுப் பதித்த வடிவும், ஒருப்பட நெருங்கி ஏடுகள் சேர்ந்த சீர்மையும், ஒளி பெறப் புறத்துப் பொற் பொறி வகுத்த கோலமும், இப்போது நான் வனைந்து உரைத்த மங்கையர் கூந்தலின் வனப்போடொத்ததல்லோ.

நிறைகெட அறிவினை மயக்குவிக்கும் அம்மயிர் அழகினைப் போலச் சொன்ன புத்தக வடிவுந் தன்னையல்லோ மயக்குவித்ததாமே. அப்படி அவர்கள் ஒருவனைக் கண்ட முகத்தில் மனிதனைப்போல ஞானத்தைப் பேசி, மாதனைப் போல அன்பினைக் காட்டி, கலப்பில்லாத சுவிசேஷ மார்க்கமீதென்றும், பரகதிசேர் பெரும் பாதையீதென்றும், பொய்யான தேவனை மறுத்து, மெய்யோர் கடவுள் இயற்கை காட்டும் ஞானமீதென்றும், தாங்களே தரும மேனியர் பிரகாச மேனியரென்றுஞ் சொல்லி, வந்த யாவர்க்கும் அன்பு மிக மலர் முகத்தோடு உண்ணவும், குடிக்கவும், வேண்டுவது ஈந்து, பணங்களையும் இறைத்துச் செய்வார்கள். இதோ ஆண் முகமும் மாதர் கூந்தலுங் கண்டோம்.

பெண் கூந்தல்.

13.— ஆனால் பெண்ணோடொத்ததோர் வடிவு அவ்விட்டில்கள் கொண்டதாக அர்ச். அருளப்பர் எழுதிக் காட்ட வேண்டுமென்று இருக்கையில், பெருகி நீளுங் களிக்கண்ணுயினும், நடுங்கித் துவளுஞ் சிற்றிடையாயினும், திருந்திக் குவியுஞ் சீரடியாயினும், மற்றொன்றாயினுஞ் சொல்லாமல் பெண் அழகு உறுப்புக்களின் மயிர் அழகொன்றே அவ்விட்டில்களுக்கு உண்டென்று எழுதினதென்ன?

அதற்குக் காரணமேதெனில், மற்ற அழகில்லாமையால் உண்டென்று காட்டப்படாமல், படர்ந்த பாதஞ் சுருங்கவும், பெருகின நுசுப்புச் சிறுக்கவும், திரண்ட சிறு கண் நீளவுஞ் செய்யக்கூடாதிருக்க, மயிர் அழகொன்றே இல்லாதாயினும் உண்டென்று பொய்யாகக் காட்டி இடிமயிர் சொருகி, அதன் குறை மறைத்துப் பெருகத்தோன்றும் பொருட்டு மிக்க அழகாசை மடந்தையர் அளகஞ் சேர்த்துத் திரிவார்களாகையால், பெண் அழகு எல்லாத்திலும் மயிர் அழகே பிறரை ஏய்ப்பதற்குரிய பொய் அழகாகையில், இதுவே துத்தேராணிகள் உலகம் ஏய்க்க முகத்தில் காட்டும் பொய் அன்பினிமையும் பொய்ச் சிறப்பழகு முவமிக்க உரியதென்று அர்ச். அருளப்பர் மற்றெல்லாம் விட்டு மாதர் கூந்தலை மாத்திரம் உடையது அவ்விட்டில்கள் என்றார்.

இதற்கு அத்தாட்சியாகத் தன் சிநேகிதனாகிய சங்கிரோசி அவால்தாந் சொன்னது போதாதோவென்ன? அதேதெனில், அவன் தரங்கம்பாடிக்குப் போனவிடத்தில் அவர்கள் வீடு வாசல்களைக் காட்டி, எங்களைச் சமுசாரிகளென்பார் சிலரோ; அது பொய்யாகி நாங்கள் வால சந்நியாச விரத்தராகையில் இதோ இங்கே பெண் உருவ முதலாயில்லாது பாராயென்றார்கள். ஆகிலுஞ் சிறிதுநாள் போய் பழஞ் சந்நியாசி புது மாப்பிள்ளையாக எவரும் அறிய மணப்பறை முழங்கி, அந்தப் பரம சந்நியாசிகளில் ஒருவன் இரு கட்டறுத்த பெண்ணைக் கைப்பற்றி, மணவறையில் சந்நியாசமெல்லாம் அமிழ்ந்திக் கரைந்தது அறிவோமே.

தேட்கொடுக்கு.

14. — அப்படியே அவர்கள் காட்டின ஞானமும், அன்பும் பொய்யென்று அறிய, மறுபடி அவர்கள் பேசினவுடனே உயிரைக் கொல்ல நஞ்சொத்த அபத்தங்களைச் சொல்லக் கேட்போம். ஆதலால் ஆண் முகம் பெண் மயி

ருடைய வீட்டிலே தேட்கொடுக்கொப்பக் கூர்ந்த நச்சு வால் உடையதென்றூர். பரம ஞானிகளைப்போலத் தருமங் களைச் செய்யச் சொன்ன பின்னர் தருமங்களால் ஆயபயன் என்னென்று கேட்கில், வாலை மடக்கிக் கொடுக்குக் காட் டித் தருமங்களின்மேல் ஆசை அவிக்க அதுகளால் வரும் பயன் ஒன்றில்லை என்பார்கள். செய்த பாவங்களுக்காக நொந்து அழச் சொன்ற பின்னர், அப்பாவ தோஷந் தீரச் செய்வதேதென்று கேட்கில், சகல பாவங்களுக்கு ஆண்ட வர் பாடுபட்டு உத்தரித்த பின்பு, அதற்கு நாம் உத்தரிக்க வேண்டுமென்பது தோஷமென்பார்கள். பெரியோரைச் சங்கிப்பது நல்லதென்ற பின்னர், இராசாதிராசனுகிய பரம கர்த்தரை ஈன்ற தேவதாயை வணங்கலாமோவென்று கேட்கில், அது ஆகாதென்று மற்ற ஸ்திரீகளோடொத்த தாய் அவளையும் எண்ணி வணங்கலாகாதென்பார்கள்.

எவர்க்கும் நன்மை செய்யச் சொன்ன பின்னர், இறந்த தாய் தகப்பனுக்கு உதவுந் திவசமாகச் செய்யவே ண்டுவதேதென்று கேட்கில், செத்தவர்களை நினைக்கவும் வேண்டாமென்பார்கள். தாங்கள் அச்சுப் பதித்த புஸ்த கங்களை வேண்டாதவர்க்கும் அன்பு காட்டி வலியத் தந்த பின்னர், விட்ட அவ்வலையில் அகப்படாமல், அவர்கள் மதத்துட்படமாட்டாதவன் வாங்கினதெல்லாம் உத்தரிக் கச் சொல்லி அவனைக் காவல் செய்து, நிந்தையாய் உபா திப்பார்கள். வஞ்சக சர்ப்பனை ஆகாதென்று போதித்த பின்னர், பொய்ச் சாட்சிகளைக்கொண்டு விட்டுப் பிறரைக் கெடுக்க வஞ்சனை செய்தவனை அறிந்து, பிரியத்துடனே அவனைத் தங்கள் மதத்துக்கேற்ற உபதேசியாக வைப்பார் கள். இப்படி லுத்தோரானிகள் ஞானமும், அன்புங் காட் டின பின்னர், உயிர்க்கேடாக நஞ்சுமிழ்ந்த அக்கிரம அபத்தங்களைக் கக்கவும், காட்டவுஞ் செய்வார்கள். இதோ மனுமுகமும், மாதர் கூந்தலுங் கண்டபின்பு, தேள்வால் மடக்கி நஞ்சுட் புகுப்பக்கொட்டுங் கொடுக்குங்கண்டோம்.

சிங்கப்பல்.

15. — கடைசியில் கொடிய சிங்கப் பல்லேதெனில், எவனையும் எண்ணாமல் கொண்ட பகைக் களவாக லுத்தேரனிகள் எவர்க்கும் இழிவுறப்பழிமொழி தூறுங் கொடுமையாமே. லுத்தேரானிகளல்லோ சிங்கப் பல்லைக்காட்டி, மோட்சவாசிகள் நம் இடையூறுகளைக் காணாத குருடரென்றும், அவர்களை வணங்கி நாம் செய்யும் வேண்டுதலைக் கேளாத செவிடரென்றும், 'அப்போஸ்தலருந் தீர்க்கதரிசிகளுந் தப்பிதங்களைச் செய்தார்களென்றும், வானோர்களெல்லாரும் இவ்விடத்துச் செய்தி ஒன்றும் அறியார்களென்றும், வான்மேல் வாழ்ந்தால், அவனை முதலாய்க் கொடிய சினத்திற் கடிக்கச் சிங்கப் பல்லை நீட்டின பின்னர், இப்பூவுலகின் மன்னவர் யாவருந் தம்முடிமேல் ஏற்றிய பாதத்தை வணங்கிக் கீழ்ப்படிந்திருக்க, சேசுநாதருக்கிடமாய்க் காணப்பட்ட திருச்சபைக்கெல்லாங் காணப்படுவதோர் தலைவராக ஆளா நிற்கும் அர்ச். பாப்பு அவர்களைச் சேசுநாதருக்கு எதிர் பகையாகிய அந்திக்கிறீஸ்துவென்றும், உலகம் ஏய்க்கும் பெரிதோர் கள்ளனென்றும், சுவிசேஷத்தைக் கெடுத்தவனென்றும் இவர்கள் சொல்வதல்லாதே, உரோமான் சபையிலுள்ள சந்நியாசிகளைக் கள்ள ஞானிகளென்றும், கல்வித் துறை யெல்லாங் கடந்த கேள்விப் புலமையில் தேர்ந்த வேதபாரகரை வேசரிக் கூட்டமென்றும், உரோமான் திருச்சபை, நிறை கெட்டு அழிந்து தன் பத்தாவை விட்டு நாணமழிந்த வேசியானதென்றும், அதுவே சேசுநாதர் பாடுபட்டு அடைந்த பலன்கள் போதாதாகவும், எல்லாப் பாவங்களுக்கும் அவர் பாடுபட்டவரல்லராகவும் படிப்பிக்குமென்றும் பொய்க்கஞ்சாமல் சொல்லவருவார்கள். இவையும் இத்தொகைப் பலவும் இவர்களால் எழுதப்பட்டிருக்க, உரோமான் திருச்சபை நிந்தைப்பட இப்பழி மொழி எல்லாந் தூறின லுத்தேரானிகள் உயிர் கொன்று, உடலைத் தின்று, தசைகள் தொங்கி, ஊத்தை ஒழுகி நாறுங் கொடிய சிங்கப்பல்லை உடையரென்பது நியாயமல்லோ.

இருப்புக்கவசம்.

16. — பின்னையும்

கரும்பொற்சுரிகை கடியமார் பணிய
வரும்பொற்சுடிகை யணியொடுதோன்றி

என்பது.—சொன்னபடி அவ்விட்டில் உருவைக் காட்டின பின்பு, அவை தரித்த அணிகளைச் சொல்லி, இருப்புக் கவசம் மார்பில் அணிந்து, பொன் முடி சூடாநின்றன என்றார். இவற்றுள் இருப்புக்கவசமாவதேதெனில், உச்சிப் பகலினுந் தெளிவாய் ஒப்பித்த நியாயங்களுக்கு அசையாத நெஞ்சின் சலந்தானே. கண்ணால் கண்ட நியாயத்தை மறுத்துச் சலஞ்சாதிப்பது பதிதருக்கெல்லாம் பொது இயல்பாயினும், லுத்தோானிகள் விசேஷமாய் அறியாமல் கேட்டோமென்று நினைவில் தேறினும், பிடித்த பிடியை விடுவது இகழ்ச்சி என்று ஆங்காரத்தால் கேட்டு, தாங்களே தங்களுக்குப் பொய்யைச் சொல்லித் தான் தனக்கு ஒருவன் இரு கண் பிடுங்கினாற்போலே எழும்பின அறிவொளி ஆசைப் புகையால் இருட்பட மூடி, இருப்பு நெஞ்சின் கடோரத்து அறிந்து நரகில் விழத் துணிவார்கள். லுத்தேர்தானே இப்பூவுலகில் நாலுநாள் வாழ்வதற்கொழியத் தன் மதம் மேற்கதி அடைவதற்கு ஆகாதென்றும், உரோமான் திருச்சபை ஒன்றிலே மெய்க் கரை ஏற்றம் உண்டென்றும் எழுதினது அறிவோம்.

பொன்முடி.

17. — அப்படிக் கண்ட அபத்தங்களை மறுக்கவொட்டாத ஆங்காரமே பிடித்து விடாத சலத்துக்கு அவர்களிடத்தில் காரணமாகையில், சலத்துக்கு அடையாளமாக இருப்புக்கவசம் மார்பில் அணிந்த விட்டில் ஆங்காரத்திற்கு அடையாளமாகப் பொன் முடி தலைமேல் கொண்டதாக அர்ச். அருளப்பர் கண்டார். ஆயினும் லுத்தேர் ஆங்காரத்தையும், கெம்பீரத்தையும், அளக்குங் கோல் இங்குண்

டோ? செயோற்சி என்னும் அவன் துரைக்கு அவன் எழுதின புத்தகத்தை லுத்தேரானிகள் அச்சுப் பதித்துத் தந்தபடியே வைத்திருக்கிறோம். அதிலே அவன் சொன்னதாவது: அப்போஸ்தலர் நாள் முதற்கொண்டு இந்நாள் வரைக்கும் வேதபாரகராயினும், மற்றைக் கல்விப் புலமையோராயினும் ஒருவரும் என்னைப்போல் உத்தம முறையாய், தெளிந்த தேறின நூலாய் எவர்க்கும் ஆறுதலாக நியாயங்களை வெளிப்படுத்தினவர் இல்லையே. எவர்க்கு மேல் நின்று ஒவ்வாக் கல்வியில் சிறந்த அகுஸ்தீன், அம்புரோஸ் என்று இவ்விருவர் முதலாய் எனக்கு நிகரல்லவென்று நிச்சயமாக அறிவேன் என்றான்.

மீளவும் எருசலேம் அழிவென்னும் பிரசங்கத்தில அவன் எழுதினதாவது: அப்போஸ்தலர் நாளில் முதலாய் இப்போது நான் வெளிப்படுத்தின தெளிவோடு சுவிசேஷம் வழங்கினதல்லவென்றான். இது உள்ளதுதானே. கூடப்பிறந்த தங்கைச்சியைப் பெண்டாட்டியாக வைப்பது அப்போஸ்தலர் நீள்முறையென்ற பரம இரகசியமே அவர்கள் நாளிலே வழங்காமல், இப்போது லுத்தேர் ஓதின போதகத்தால் உண்டானதல்லோ. கடைசியில் பொங்கின ஆங்காரம் கரை புரண்டு ஓடி, லுத்தேர் கெம்பீரத் துணிவு எவ்வளவேறினதென்னில், பத்தாஞ் சிங்கராயர் என்னும் அர்ச். பாப்பு நிருபத்தை லுத்தேர் மறுக்கத் துணிந்தவிடத்தில், சேற்றில் ஊர்ந்த புழுவாய்க் கிடந்த அவன் சேசுநாதர் ஸ்தானத்தாளா நின்ற அர்ச். பாப்பு அவர்களைச் சபிக்கக் கூசாதே போனான். இந்த ஆங்காரத்தாலல்லோ லுத்தேரானிகள் எல்லாருந் தங்களைத் தீர்க்கதரிசிகளென்றும், சுவிசேஷிகளென்றும், விழுந்த திருச்சபையை நெறியினிறுத்தின வேதியரென்றும், அவிந்த திருவிளக்காகிய மெய் விசுவாசத்தைத் தூண்டிக் கொளுத்தின பாரகரென்றும், இத்தொகைப் பெருமையில் வீங்கின நாமங்கள் ஆயிரந் தங்களுக்கெடுத்துக்கொண்டு தாங்களே தங்களுக்கு ஆங்காரமாய்ப் பொன் முடி தலைமேல் புனைவது கண்டோம்.

18. — இவ்வாறு உருவும், மணியுங் காட்டின பின்னர் அவ்விட்டில் இயல்பினைக் காட்ட அர்ச். அருளப்பர் மூந்திச் சொன்னதாவது:

காய்மாபகைமுதிர் கடும்படைமுகத்துப்
பாய்மாப்பரப்பெனப் பகைத்துநிற்பன

என்பது. — பொங்கிய பகையால் போர்பொர விரும்பி நின்ற குதிரைப் பெரும் படைபோலச் சொன்ன விட்டில்கள் நின்றனவென்றார். அதேதெனில், எந்நேரமும் லுத்தேரானிகள் பகைக்கும் படைக்கும் ஆயத்தப்பட்டு நிற்குந் தன்மை இதாமே. திறிதேந்தென்னும் நகரிற் கூடின திருச்சபை லுத்தேரையும் அழைத்து வேறுபட அவன் நவமாய்ச் சொன்னதை ஆராய்ந்து இடையிற் கலந்த பொய்யைக் காட்ட அவனை வரச்சொல்லி அநுப்பின நம்பிக்கை ஓலைக்கு அவன் மறு உத்தரமாவது: இருபதினாயிரங் காலாளும், ஐயாயிரங் குதிரையும் என்னைச் சூழ்ந்து வரக் கூடின பின்பு, நான் கூட்டத்துக்கு வருவேன், அன்னபடி நான் சொல்லு நியாயமே செல்லவுஞ் செய்வேனென்றான். இதோ லுத்தேர் மதமே பெரும் படை கொண்டு போர் முகத்தோதத்தகும் மதமாகையில், போர் பொர ஆயத்தப் பட்ட குதிரைப் பரப்புப்போல அன்று லுத்தேரானிகளை அர்ச். அருளப்பர் கண்டார்.

அப்படி லுத்தேர் நாளிலே லுத்தேரானிகள் திரண்டு மொய்த்தவிட்டில்களாக ஒருங்குடன் கூடி, தங்களையாளா நின்ற இராயனையும் எண்ணாமல், பெரும் படையாக யுத்தஞ் செய்யக் கூடி வந்தவிடத்தில், அவர்கள் பாவமே அவர்களுக்கு விலகப்படாத பகை வினை செய்ய இராயர் படையால் வெட்டுண்டு, ஒரு பகல் எல்லையினால் பதினாயிரம் உயிர்பட்டிறந்தார்கள். அப்படி நமது நாளிலே தரங்கம்பாடி லுத்தேரானிகள் தேவ கோயில் பெயரைச் சாட்டி, நாட்டில் நுழைந்து, கோட்டை வளைத்து, பீரங்கிகளை

ஏற்றி, யுத்தத்துக்கு ஆயத்தப்பட்ட குதிரைப் படையோ டொப்ப நின்றார்கள். அதை அறிந்து இராசா படை விட்டு அகற்றினது அறிவோம். உரோமான் சபையார் இங்கே நெடுநாள் திரிந்து பல நூறுயிரஞ் சனங்களைச் சத்திய வே தத்தில் சேர்த்தபடியே லுத்தேர் மதத்தார் நாலு நாள் உள் நுழைந்திருந்து கூட்டஞ் சேர்க்கில். அரசு செங்கோல், அசைந்து போகவும், நாட்டுச் செல்வமறக் கெட்டு அழிய வும் பகையும் போரும் விளையாதிருக்குமோ?

தேரொலி.

19. — இதுவுமன்றியே

போர்முகத்துயிர்கெடப் புகைந்தெதிர்திருதருந்
தேர்முகத்தொலியொடு சிறகர்புடைப்பன

என்பது.—புரவிப் படையொப்ப யுத்தத்துக்கு நின்ற விட்டில் வெம்போர்க்களத்தில் பெருந் தேர்ப்படைகள் விசைபடத் திரிகையில் எழுந்து அதிரோசையாகச் சிறகு களைப் புடைத்தடிப்ப அர்ச். அருளப்பர் கண்டார். பறவை கள் சிறகைப் புடைப்பது மனக் களிப்பாகையில் கண்ட விட்டில் பறவைகள் விரியிறகடியா நின்றது லுத்தேராணி கள் தம்முட் கொள்ளும் மகிழ்ச்சியைக் காட்டினதாமே. இவர்கள் மகிழ்ந்த காரணங் காட்டுவதற்கோவென்னில், கொடும் போர்க்களத்தில் ஓடுந் தேர்ப்படை ஓசைபோல ஒலியெழச் சிறகைப் புடைப்பனவென்றார். அதெப்படி யென்னில், மகிழ்ச்சி மிகுதியைக் காட்டப் பேரொலி எழும்பச் சிறகை அடித்ததாகச் சொல்லவேண்டுமாகில், இடி ஒலி கடலொலி உவமையாக எடுத்தாலல்லோ பேரொ லிக்குரியதாகும்.

ஆயினும் இவற்றை விட்டு வெம்போர் முகத்துத் திரிதருந் தேர் ஒலியொத்த ஓசை எழும்பிற்றென்பதேச தென்று ஆராயக்கடவோம். இடித்த மேகம் உலகெலாங்

குளிர்ப்பப் பெய்தமையாலும், முழங்கின கடற்றினா கனை மேல் புரளா துயிர்க்கெலாம் பல நன்மை செய்தமையாலும் உலகிற்கு ஆக்கினையாக வந்த லுத்தோனிகள் மகிழ்ச்சிக்கு இடி ஒலி கடலொலி உரியதல்ல. பழியிற் பிறந்து, பகைவிடாது உயிர் கெட வேத நிறை கெடக் கண்டு மகிழ்ந்த களிப்பில், சிறகைப் புடைத்த நரக விட்டில்களாகிய லுத்தோனிகள் மனக்களிப்பாக விடும் ஒலி கொடும் போர் முகத்தில் பகைமிக, உடலற, உயிர் கெட, இரத்தமோட ஓடுங் கொடுந் தேர்ப்படை ஒலிக்கொத்ததென்றது நியாயந்தானே. அப்படி 1523-ம் ஆண்டில் சில லுத்தோனிகள் கள்ளராக இரவிற் போய் அருந் தவஞ் செய்திருந்த ஏழு கன்னிகளைக் கட்டாயமாகக் கற்பழித்த செய்தியை லுத்தேர் அறிந்து, தவமுமொழிய, நீதியும் வழுவ, கன்னியுமழியப் பல உயிர் கெட்டோர் இரவில் அளவிலா விளைந்த பாவத் திரளைக் கண்டதனால், அவன் கொண்ட மகிழ்ச்சி உள்ளடக்கமாட்டாமல், போர்முகத்து உயிர்கள் கெடுகையில் முழங்கித் திரியுந் தேரோலியாகச் சிறகைப் புடைத்துப் பொதுப் பிரசங்கத்திலே மிக்கெழும் ஓசையோடு அச்சண்டாளனை மிகவும் புகழ்ந்து துதித்தான்.

அப்படி ஆங்கிலேய தீவரசன், தன் ஸ்திரீயை மறுத்து, மற்றொரு வைப்பாட்டியைக் கைக்கொண்டான் என்றதற்கு அர்ச். பாப்புப் பல வழி அன்போடு சொன்ன நியாயங்களைக் கேளாமையால், அவனைச் சபித்தார். சபிக்கப்பட்ட அரசனுங் கீழ்ப்படியாமல், பகைகொண்டு ஆங்காரித்தான். இதோ பல உயிர்க்கேடாகக் கொடும் போர் தொடங்கினதென்று லுத்தோனிகள் கண்டு உள்ளடங்கா மனக்களிப்பாக ஓங்கித் தங்கள் தேர்ப்படை ஓட்டச் சமயம் இதுவென, அங்கே நுழைந்து படைத் தேரோலியெழச் சிறகைப் புடைத்து அலறி, அர்ச். பாப்புக்கள் மேலும், உரோமான் திருச்சபை மேலும் விகற்பமாகப் பலவையுஞ் சொல்லி, அத்தீவெல்லாங் கெட்டதறிவோம்.

படைக்கரசன்.

20. — கடைசியில்

வெப்படைசிதைத்தோன் வெந்திசையரச
னிப்படைமிசையாங் கிறைவனென்றெழுமென

என்பது. — சொன்ன விட்டில் படைமேலெழுந்து சங்கரித்தோன் என்னப்பட்ட நரகின் அரசனாகிய பசாசே அப்படை நடத்தியாளும் மன்னனாக நின்றதென்றார். அதேதெனில், காணப்பட்ட இராசா தங்கள் மதத்துக்கு ஆகாதென்ற லுத்தேராணிகள் வேண்டாமெனினும், காணப்படாத இராசாவாகத் தங்களை நடத்தியாளும் பசாசு உண்டென்பது நிச்சயந்தானே. ஆர்ச். யோபென்பவர் எழுதினபடியே ஆங்காரிகளுக்கெல்லாம் பசாசே இராசா வாகையில் முன் சொன்ன தன்மையோடு ஆங்கார மிக மதிகெட்டு, சலஞ் சாதித்த பதிதராகிய லுத்தேராணிகட்கே சொந்தவுரிய இராசாவாகப் பசாசு நிற்பதென்பது நியாயமே. மீளவும் லுத்தேர் எழுதினபடியே தான் தனக்கு ஒரு குருவாகப் பசாசை எண்ணி, அது வந்து உரைத்த நரக போதகமுறைகள் பிறழாது உண்டுபண்ணின தன் மத இனத்தார்க்கு அரசனாகப் பசாசாகிய தன் குருவை வைத்துப் போனானென்றால் நியாயமல்லோ.

சங்கரித்தோன்.

21. — ஆகிலும் வேதத்தில் பசாசுக்குரிய பல பெயர் சொல்லியிருக்க, மற்றெல்லாவற்றையும் விட்டு இங்கே அதைச் சங்கரித்தோனென்பதென்ன? சொன்ன விட்டில்கள் லுத்தேராணிகளை உவமையாகக் காட்டினதனால், அவற்றை ஆளா நின்ற பசாசைச் சங்கரித்தோனென்றார். அதேதெனில் இந்நாள்வரைக்குந் திருச்சபை அழிக்க முளைத்த மற்றப் பதிதர் வகுப்பெல்லாம் ஒவ்வொன்று ஒவ்வோர் இரு நன் முறைகளைக் கெடுக்கப் பகை செய்ததொழிய, வேரோடு எல்லாவற்றையும் பிடுங்கி, அழிக்கத் துணிந்த

வரில்லை. லுத்தேர் இனத்தாரோவெனில், ஒருப்பட எல்லா அறமும், எல்லா முறையும், எல்லாத் தேவவாக்கியமும் பெயர்த்து அறுத்தொழிப்ப, திருச்சபையில் சர்வசங்கார நினைத்த பெரும் பகைக் கொடிய உணர்வினராக நரகப் புகைப் பிறப்பென்று சூழாங்கொடு மொய்த்தவராகையில், சங்கரித்தோனென்று பசாசு இராசாவாக அவர்களை நடத்தி ஆளா நிற்கும் என்றதாமே. லுத்தேர் மதத்தில் பிறந்து பிரிந்த பலவகைப் பதிதரைக்கொண்டு திருச்சபைக்குள்ள நலமெல்லாஞ் சங்கரித்தழிப்பப் பசாசு வருந்திற்றல்லோ. ஏக கடவுளுக்கு அற்புதத் திரித்துவ மறுக்கவும், சேசுகிறீஸ்துவுக்குத் தேவத்துவம் பறிக்கவும், அர்ச்சியசிஷ்டர்களுக்குப் பேரின்பம் ஒழிக்கவும், வானோர்க்கெல்லாம் வணக்கம் அழிக்கவும் வருந்தினதொழியப் பூவுலகுள்ள திருச்சபையிலே லுத்தோரணிகள் கெடுக்கத் துணியாமல் விட்ட நல்லதொன்றுண்டோ?

நொந்தார்க்கு ஆறுதல், மெலிந்தார்க்கு உறுதி, இறப்பார்க்கு உரித் துணையாக நிற்குஞ் சிலுவைமரத்து அறையுண்ட கர்த்தர் உருவமும், பரம தேவதாயின் அடைக்கல உதவியும், மற்ற வானோர் துணை ஆதரவும், எழுதப்பட்ட தேவ வாக்கிய உரிமையும் எழுதப்படாத தேவ வாக்கியப் பரம்பர வழக்கமும், தேவத்திரவிய அநுமானங்களும், காரணக் குருக்கள் ஒழுங்கும், தேவ பூசை உதவியும், நெறியில் நிறுத்தியாளுந் தலைமையும், சந்நியாசத் துறவும், கன்னிமை விளக்கமும், நீதி முறை கற்பனைகளும், பூரண பலன்களும், வேண்டுதல் நேர்ச்சியும், மந்திரத் தொகுதியும், புதுமை நிலைமையும், தவம், ஒருசந்தி, தயை, பொறை, தானம், நிறை, நிலை, கற்பு நிழல், மனுவாண்மை, திவசம், விரதங் கலையன்பமலந் தருமங்களும், உருமை பெருமை, கருணையுறுதி, தகுதி, உதவி ஒடுக்கம், ஒழுக்கம், அடக்கம், பரிவாசுர முற அறிவற மதி, விதி துதி கதி, நயன் பயன், மற்றைப் பல பல நலமெலாம் ஒருங்குடன் வேரோடு பிடுங்கி, அறுத்தெறிந்தாற்போலச் சொன்னதெல்லாந் திருச்சபையில் இல்லாதாகப் பிரயாசைப்பட்டுத்

திரிபவர் லுத்தேர் இனத்தாரல்லோ? ஆகையால் நீதி நியாயத்தின்படியே லுத்தேரானிகளை உவமையாகக் காட்டின விட்டிற்படைமேல் அரசனுகச் சங்கரித்தோனென்னும் பசாசு நின்றதென்று அர்ச். அருளப்பர் கண்டார்.

இறைப்பணி.

22. — இவையெல்லாம் உலகிற்கு ஐந்தாம் ஆக்கினையாகக் குன்றுச் சத்திய வேதமொழியோடு அர்ச். அருளப்பர் எழுதினபடியே பசாசும் லுத்தேரானிகளைக்கொண்டு சொன்னத் தன்மையால் செலுத்திக்கொண்டு வருகையில், இனிக் கெடாது உயிர் பிழைத்து ஒருவருந் தப்புவது அரிதாமல்லோ. ஆகிலும்

தந்நுதலணியெனத் தற்பரன் குறியிலார்
துன்னுதலொழியச் சூழ்பசும் புன்முதற்
றீண்டாதெனப்பணி செய்த திறையோன்
றூண்டாநீதித் தகுதியிதுவென

என்பது. — உலகெலாங் கெடுக்கப் படை யணியாக நின்று, பகைத்த விட்டில்கள் ஆண்டவர் குறியை நுதலேணியாக வைத்திராத மனிதரைக் கெடுப்பதொழியப் பசும் புல் முதலாய்த் தீண்டாதபடிக்கு நீதி முறையின்படியே ஆண்டவர் கற்பித்தருளினர் என்றார். கோடை வெப்பழன் முகத்தில் ஈரமின்றிக் காய்ந்த புல்லும், பசுமையின்றி உணங்கின மரமும் போல நல் வினை ஒழுக்கமிலாது சுடு நெஞ்சுடையார் மாத்திரம் லுத்தேர் மதத்தில் உட்புகுவாரொழிய, விசுவாசக் குளுமையும், நம்பிக்கைப் பசுமையும் விடாது, பத்தி முதல் எல்லா வரத்தின் மணமெழப் பூத்த மாட்சியில் சிறந்த யாவரும் பார்க்கில், அதில் உட்பட்டுக் கெடுவர் ஒருவருமில்லை. இதற்கு நான் புற நாட்டுச் செய்திகளை எழுதுவதென்ன?

தான் கண்டவற்றைப் பார்க்கில், இந்நாள் இந்நாட்டில் நின்று தரங்கம்பாடியில் சேர்ந்து, லுத்தேரினத்திற்

புகுந்த யாவருந் தம் ஸ்திரீயை மறுத்து, வெள்ளாட்டி களைக் கைக்கொண்டவரும், பரர் தாரத்தைப் பறித்தவ ரும், பிறர் கைப்பொருளைக் கவர்ந்தவரும், தாய் தகப்பனை நிந்தித்து அடித்தவரும், கள்ளுச் சாராய நிறைய உண்ப வரும், நாணமழிந்து குல உறவு இழந்தவரும், தீய ஒழுக் கத்தால் நெடு நாள் கோயிலுங் குருவும் இழந்து கிடந்த வரும் இத்தொகைத் தாழ்ந்த உணர்வு மனிதர் லுத்தோரா னிகளானதல்லாதே, அற நன்னெறியில் வழுவாதொழுகி நின்ற ஒருவனையினும் உரோமான் திருச்சபையை விட்டு, லுத் தேர் மதத்தில் உட்பட்டதாக ஒருவருங் காட்டமாட்டார் கள். அப்படியே அறநெறியும், மேற்கதி ஆசையும் விடா தவன் உரோமான் திருச்சபையையும் விடான். பகை, சினம், காமம், களவு, கொலை, உலோபம் மற்றப் பாவமே லுத்தேர் மதத்தில் சேர்க்கும் வழித் துணையாமே,

இதனாலல்லோ பசுமையும், பூமலர்க் குளிர்ச்சியும் விடாததெல்லாவற்றையும் அவ்விட்டில் தீண்டாதிருக்கக் கற்பனையாயிற்றென்க. ஆகையால் உயிர் கெட லுத்தேர் உமிழ்ந்த விஷத்திற்கு உத்தம நன் மருந்தாகு நல்லொழுக் கந் தானே. நல்வினை ஆசையும், தீவினை அச்சமும் விடா தவன் லுத்தேரினத்தார் ஒளித்து விரித்த தந்திரப் பலவ கை வலைகளில் அகப்பட்டு உயிர் கெட மயங்குவானென்று அஞ்சவுந் தேவையில்லை. மீளவும் இந்த ஆக்கினையில் அகப் படத்தகுவர் யாவரும் நெற்றி யணியாய் ஆண்டவர் குறி யில்லாதாரொன்றபோதே லுத்தோரானிகள் அறிக்கைப்பட் டார்கள் என்பதற்கு ஒரு சந்தேகமில்லை. ஆண்டவர் முத்தி ரையாகிய சிலுவையடையாளம் நெற்றியில் வரைவது அக்கி யானமென்று அதை விலக்கித் தேவ குறியணி இழந்த நெற்றி நிறுவித் திரிபவராவரல்லோ.

சொன்னதற்கடைமானம்.

23. — அர்ச். அருளப்பர் இப்படித் தேவ இரகசிய மாக உவமைப் போர்வையால் மூடிச் சொன்னதற்கு அவ

ரே நினைத்த பயன் இதுவென்று வேத சத்தியமாகச் சொல்லமாட்டேனாயினும், பல அறை கடந்த கல்வி நல்லோர் பலரும் அதற்கு இதுவே பயனென்று எழுதினதொழிய, நானே இங்கே சொன்னதெல்லாஞ் சலஞ்சாதியாமல், பார்த்த யாவர்க்கும் நியாயத்திற்கு ஒத்ததாகத் தோன்றுமென்பதற்கையமில்லை. மற்றப்படி நான் இங்கே லுத்தேரானிகள் சொன்னதாகவுஞ் செய்ததாகவும் எழுதினதெல்லாம் மெய்யோ பொய்யோவெனத் தனக்கு ஐயந்தோன்றி, அவர்கள் எழுதி அச்சுப் பதித்த புத்தகச் சாட்சியோடு எல்லாவற்றையும் ஒப்பிக்க விருக்கிறோம்.

மீளவும் உச்சிப் பகலொளியொப்பத் தெளிந்த இந்த நியாயமெல்லாம் இருக்க, லுத்தேரானிகள் அவற்றைக் காணுமல் மதிகெட்ட பித்தனும் அஞ்சிச் சொல்லமாட்டாத அபத்தங்களைக் கூசாதே அநுசரிப்பதென்னவென்று ஐயமுந்தோன்றி, அவர்கள் நரகப் புகைப் பிறப்பாக முளைத்தவொன்று முன்சொன்னதை நினைத்தாலல்லோ ஐயமும் அதிசயமுமெல்லாந் தனக்குத் தீரும். இருட் புகை நிறைந்த அறையுள் நின்றவர் உள்ளிருக்குந் தின்மையும் புறத்திருக்கு நன்மையுங் காணுன்றதுபோல, புகையில் பிறந்த லுத்தேரானிகளுந் தங்கள் மதத்தின் அக்கிரமமும் உரோமான் திருச்சபை ஒழுக்கமும் அறிவதரிதாம். அவர்களும புகை நீங்கி வெளியே வந்தால் அநுசரித்த மதத்தின் அபத்தத்தைக் கண்டு நாணி, அதனை மறுத்துச் சத்தியத்தைக் கைக்கொள்ளக் காமகஞ் செய்பார்கள். ஆகையால் இரு கண் மறைய, மொய்த்தடர்ந்த இருட் புகை கடந்துவிட்டவர்களும், வெளி வந்து, ஆண்டவர் திருவுளக் கோயில் தெளிந்து, பொய்மத மயக்கம் நீக்கி, கதி சேர் நன்னெறி வரவே, தானும் இரங்கி, அவர்களுக்கு வேண்டி, சுவாமியை மன்றாடச் செய்வான்.

கெடாததற்கெச்சரிக்கை.

24. — இற்றைவரைக்குஞ் சொன்னதைக் கொண்டு தான் எனக்கு எழுதிக் கேட்டதெல்லாம் வெளியாய் லுத்

வேத. **24.**

தேர் யாரோ என்றும், லுத்தேராணிகள் யாவொன்றும், எப்பிறப்பு எவ்வியல்புடையவொன்றுந் தானே தோன்றுமல்லோ? இந்நிலையில் நிறை மனிதராக்குந் தன்னைப் பொற்பொறி அழகினால் ஏய்த்த புத்தகத்தை அச்சுப் பதித்துத் தந்தவர். இனிப் பூவுலகிற்கு ஆக்கினை விளைவிப்பதற்குப் புகைப் பிறப்பாக முளைத்த இவ்வகை விட்டிற்பறவை வந்து, தன் பயிரை மேயாததற்குப் பூமலர் மாறிக் காய்ந்த யாவையும் வெட்டிக்கெடுக்கும் விட்டில் அதென்று தன் பயிரெல்லாம் விசுவாசப் பசுமையும் மற்ற அறமலர்ச்சியும் விடாததற்கு ஐயா மிக எச்சரிக்கை வேண்டுமென்று அறிக.

லுத்தேரினத்தியல்பு முற்றிற்று.

I. — வேதவிளக்கம்.

பொருள் அட்டவணை.

அதிகாரம்.	பொருள்	பக்கம்
	பாயிரம்.	9
1	புறச்சமயம் மூளைத்த வகை. ...	13
2	புறச்சமய விபரீதம்.	22
3	மோக்ஷவாசிகள் வணக்க விளக்கம். ...	30
4	தேவமாதா ஆராதனை விளக்கம். ...	40
5	சொன்ன வணக்கப் பழமை.	50
6	சுரூப வணக்க விளக்கம்.	58
7	சுரூப வணக்கப் பழமை.	69
8	திருச்சபை கற்பனை விளக்கம். ...	78
9	திருச்சபை வழுவாமை.	84
10	உரோமான் திருச்சபை விளக்கம். ...	87
11	உத்தரிக்கிற ஸ்தல விளக்கம். ...	98
12	தேவத்திரவிய அநுமானங்கள் பொது விளக்கம்.	116
13	தேவத்திரவிய அநுமானங்கள் தனி விளக்கம்.	129
14	தேவநற்கருணை விளக்கம்.	152
15	பூசை விளக்கம்.	175
16	தேவ வாக்கிய விளக்கம்.	198
17	வேத முத்திரையாகிய புதுமை விளக்கம். ...	218
	வேதசாட்சி அருளானந்த சுவாமியால் விளங்கின புதுமைகள்.	222
18	வேத விளக்க நிலைமை.	232

பொருள் அட்டவணை.

பேதகமறுத்தல்.	பொருள்.	பக்கம்.
	பாயிரம். பொய் நிறைந்த பேதகமென்னும் பதிதர் சுவடியை மறுக்கிற இப்பிரபந்தத்துக்குப் பேதகமறுத்தலென்கிற பெயரே தகுதியாம்.	245
1	வேதாகமங்கள் தேவ வாக்கியமென்று நிச்சயிக்கிறதற்காகத் திருச்சபையின் அத்தாட்சி தேவையில்லை என்பதையும், விசுவசிக்கத்தகுஞ் சத்தியமெல்லாம் அதுகளில் அடங்கி இருக்கின்றதென்பதையும் மறுத்தல்.	251
2	வேதப் புஸ்தகங்களை வாசிக்கிறதை அறியாமை வளரும்பொருட்டு உரோமான் திருச்சபை விலக்குகின்றதென்பதை மறுத்தல். ...	255
3	தேவ வாக்கியத்தின் மெய் அர்த்தத்தை நிச்சயிக்கவும், வேத தர்க்கங்களைத் தீர்க்கவும், அர்ச். பாப்பு முதலிய நடுவர் தேவையில்லை யென்பதை மறுத்தல்.	260
4	அர்ச்சியசிஷ்டவர்களுடைய வணக்கத்துக்கு விரோதமாய்ச் சொன்னதை மறுத்தல்.	263
5	திருச்சபையின் முறைமைச் சடங்கு கற்பனைகளுக்கும், அர்ச். பாப்பானவருடைய அதிகாரக் கட்டளைகளுக்கும் விரோதமாய்ச் சொன்னதை மறுத்தல்.	265

பேதகமறுத்தல்.	பொருள்.	பக்கம்.
6	திருச் சுரூபங்கள் வேதத்துக்கு ஒவ்வாதென்பதை மறுத்தல்.	268
7	அர்ச்சியசிஷ்டவர்களை வேண்டிக்கொள்ளலாகாதென்பதை மறுத்தல்.	272
8	சேசுநாதர் எல்லா மனிதர் பாவத்துக்காகப் பூரணமாய் உத்தரித்ததைப்பற்றி நம்மிடத்தில் தவமொறுத்தல் முதலிய புண்ணியக் கிரிகைகளால் உத்தரிப்புத் தேவையில்லையென்பதை மறுத்தல்.	281
9	சேசுநாதர் ஏக மத்தியஸ்தராய் இருக்கிறதைப் பற்றித் தேவமாதா முதலிய அர்ச்சியசிஷ்டர்களுடைய மன்றாட்டின் உதவியைத் தேடலாகாதென்பதை மறுத்தல்.	283
10	திவ்விய பூசைக்கு விரோதமாய்ச் சொன்னதை மறுத்தல்.	288
11	விசுவாசமல்லாமல் நற்கிரியை ஈடேற்றத்துக்கு உதவாதென்பதை மறுத்தல். ...	290
12	எவனானாலுந் தான் மோட்சத்தை அடைவேனென்கிறதின்மேல் ஐயப்படலாகாதென்பதை மறுத்தல்.	295
13	மனிதருடைய தருமமெல்லாம் எப்போதும் பாவமுள்ளதென்பதையும், கடமைக்கு மிஞ்சின உத்தம நல்வினையும், நற்கிரியைகளுக்குப் பேறுபலனும் இல்லையென்பதையும் மறுத்தல்.	299

பேதகமறுத்தல்.	பொருள்.	பக்கம்.
14	அர்ச். பாப்பு பெற்ற தலைமைப் பட்டத்திற்கும், மோட்சத் திறவுகோல்களால் அடைந்த வல்லமைக்கும் விரோதமாய்ச் சொன்னதை மறுத்தல்.	304
15	பூசை லத்தின் பாஷையில் வழங்குதற்கும், திருச்சபைத் தலைவர்களின் கட்டளைகளுக்கும் விரோதமாய்ச் சொன்னதை மறுத்தல்.	309
16	தேவாராதனை லத்தீன் பாஷையில் வழங்கலாகாதென்பதை மறுத்தல்.	313
17	தேவத்திரவிய அநுமானங்கள் பத்தி விசுவாச முதலிய ஆயத்தமின்றிப் பலிக்குமென்று உரோமான் சபை படிப்பிக்கிறதென்பதை மறுத்தல்.	318
18	யாவரும் இருவகையில் தேவநற்கருணை வாங்கவேண்டுமென்பதை மறுத்தல். ...	320
19	குருக்களுக்கு விவாகத்தை விலக்கலாகாதென்பதை மறுத்தல்.	321
20	ஒருசந்தி சுத்தபோசன நாட்களுக்கு விரோதமாய்ச் சொன்னதை மறுத்தல். ...	325
21	பதிதருக்கு வார்த்தைப்பாட்டைச் செலுத்தத் தேவையில்லையென்று உரோமான் திருச்சபை படிப்பிக்கிறதென்பதை மறுத்தல் ...	327
22	குருக்களும், சந்நியாசிகளும் இராசாக்களுக்குக் கீழ்ப்படியத் தேவையில்லையென்று உரோ	

பேதகமறுததல். பொருள். பக்கம்.

மான் திருச்சபை போதிக்கிறதென்பதை மறுத்தல். 330

23 அர்ச். பாப்பானவரை அந்திக்கிறீஸ்து என்பதை மறுத்தல். 331

24 நரகமும் மோட்சமுமன்றி உத்தரிக்கிற ஸ்தல முதலிய ஸ்தலங்கள் இல்லையென்பதை மறுத்தல். 337

பேதகமறுத்தலின் கடைப் புணர்ச்சி பதிதர் எழுதிய பதின்மூவேட்டுச் சுவடியில் 78 பொய் விளங்குவதால், அவர்கள் சமயம் பொய் மதம் அல்லாதே ஈடேற்றத்துக்குரிய நெறி அல்லவென்று அறிக. 341

III. — லுத்தேரினத்தியல்பு.

பக்கம் 3 — 370.

இதில் 23 சிறு பிரிவுகளுண்டு.